ஸ்ரீ வால்மீகி

ராமாயணம்

பாலகாண்டம்

KOVILOOR ANDAVAR
A. No. 26960
LIBRARY, KOVILOOR

27-3

ஜ்ஞாநாங்கங்களான சம தமாதி ஸகல ஸத்குணங்களோடுங் கூடினவராயுள்ள வால்மீகிமஹர்ஷியானவர்,

பரி பப்ரச்ச.—சாஸ்த்ரோக்தங்களான ஸகல பரிசர்யைகளையும் பண்ணி, தெண்டன் ஸமர்ப்பித்து ஒரு ப்ரச்நம்பண்ணினர். அல்லது, ப்ரஹ்மமெதென் பதைப்பற்றி தாத்பர்யகர்ப்பமாயிருக்கும்படி ஒரு ப்ரச்நம்பண்ணினர். அல்லது, எவம்ப்ரகாரமாக ப்ரச்நம்பண்ணினர்.

ஆக விந்த ச்லோகத்தினல், ஆசார்ய சிஷ்யலக்ஷணத்தைப் ப்ரதிபாதிக்கிற "பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாந் நாஸ்த்யக்ருத: க்ருதேந தத் விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத் ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் தஸ்மை ஸ வித்வாநுபஸந்நாய ஸம்யக் ப்ரசாந்த சித்தாய சமாந்விதாய யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்த்வதோ ப்ரஹ்ம வித்யாம்" என்கிற அதர்வண ச்ருதியானது உபப்ரும்ஹிக்கப்படுகிறது.

இப்படியே இந்த ஸ்ரீராமாயணம் முழுதும் வேதோபப்ரும்ஹணமாக யிருக்கும்.

இந்த க்ரந்தத்திற்கு வக்தா, ச்ரோதா, ப்ரதிபாத்யம் ஆகிய இம்மூன்றும் அத்யந்தவிலக்ஷணமாயிருக்கிறபடியால், இது ஸகலமநவர்களுக்கும் அத்யந்தோபாதேயமென்பதும், இதுவே ஸகல வேத வேதாந்தங்களின் ஸாரமென்பதும், இதுவே உத்தமகாவ்யமென்பதும் சொல்லப்பட்டதாயிற்று.

இதில் நாரதவிசேஷணங்களான பதங்களினல், ஆசார்யனானவன் நாரதனைப்போல் ஸத்குலப்ரஸூதனும் ஸத்குணவிசிஷ்டனுமாயிருந்தால்மாத்ரமே ஒருவனுக்கு பகவச்சாஸ்த்ரத்தையுபதேசிக்க அதிகாரியென்கிற விஷயமும், வால்மீகிக்கு விசேஷணமான பதங்களினல், சிஷ்யனானவன் வால்மீகியைப் போல் சம தமாதி ஸகலஸத்குணங்களையுமுடையனாயிருந்தால்மாத்ரமே பகவச்சாஸ்த்ரத்தைக்கேட்க அதிகாரியென்கிற விஷயமும், இப்படிப்பட்ட குணமில்லாத சிஷ்யனுக்கு ஆசார்யனுபதேசிக்கக்கூடாதென்கிற விஷயமும், சிஷ்யனிப்படிப்பட்ட குணமில்லாத வாசார்யனை ஆச்ரயிக்கக்கூடாதென்கிற விஷயமும் சொல்லப்பட்டதாயிற்று.

இந்த ச்லோகத்திற்கு,

"கோவிந்தராஜீயம், மஹேச்வரதீர்த்தீயம், மஹேச்வரதீ[illegible] நுஜீயம், தநிச்லோகீ" என்கிற இவ்வைந்து வ்யாக்யாநங்[illegible] ஒன்றிலுள்ளதுபோலவே எல்லாவற்றிலும் தாத்பர்யம் எ[illegible]

"திலகம்" என்கிற வ்யாக்யாநத்தில், "தப: ஸ்வா[illegible] பதத்திற்குத் தாத்பர்யம், "எல்லா நியமங்களோடுங்கூடி[illegible] யயநஞ்செய்வதில் எப்பொழுதுமிழிந்தவரும்" என்று எ[illegible]

"சதுரர்த்தீ" என்கிற வ்யாக்யாநத்தில், "தபஸ்வீவா[illegible] கிறவிடத்தில் "தபஸ்வீ, ஈவாக்விதாம்வரம்" என்று பதவி[illegible] கொண்டு அதற்குத் தாத்பர்யம், "விஷ்ணுதத்வத்தை [illegible] ச்ரேஷ்டரும்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

KOVILOOR ... 26960

கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே *குணவாந்கஶ்ச வீர்யவாந்।
தர்மஜ்ஞஶ்ச க்ருதஜ்ஞஶ்ச ஸத்யவாக்யோ த்ருடவ்ரத:॥ உ.
†சாரித்ரேண ச கோ யுக்த: ஸர்வபூதேஷு கோ ஹித:।
வித்வாந்க: க: ஸமர்த்தஶ்ச ‡கஶ்சைகப்ரியதர்ஶந:। ௩.
ஆத்மவாந்கோ ஜிதக்ரோதோ த்யுதிமாந்கோ(அ)நஸூயக:।
கஸ்ய பிப்யதி தேவாஶ்ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே॥ ச.
§ஏததிச்சாம்யஹம் ஶ்ரோதும் பரம் கௌதூஹலம் ஹி மே।
மஹர்ஷே! த்வம் ஸமர்த்தோ(அ)ஸி ஜ்ஞாதுமேவம்விதம் நரம்॥ ரு.
ஶ்ருத்வா சைதத்த்ரிலோகஜ்ஞோ வால்மீகேர்நாரதோ வச:।
ஶ்ரூயதாமிதி சாமந்த்ர்ய ப்ரஹ்ருஷ்டோ வாக்யமப்ரவீத்॥ சு.
பஹவோ துர்லபாஶ்சைவ யே த்வயா கீர்த்திதா குணா:।
முநே! வக்ஷ்யாம்யஹம் புத்த்வா ||தைர்யுக்த: ஶ்ரூயதாம் நர:॥ எ
இக்ஷ்வாகுவம்ஶப்ரபவோ ராமோ நாம ஜநை: ஶ்ருத:।
நியதாத்மா மஹாவீர்யோ த்யுதிமாந்த்ருதிமாந்வஶீ। அ.
புத்திமாந்நீதிமாந் ¶வாக்மீ ஶ்ரீமாஞ்சத்ருநிபர்ஹண:।
விபுலாம்ஸோ மஹாபாஹு: கம்புக்ரீவோ மஹாஹநு:॥ கூ.
மஹோரஸ்கோ மஹேஷ்வாஸோ கூடஜத்ருரரிந்தம:।
ஆஜாநுபாஹு: ஸுஶிரா: ஸுலலாட: ஸுவிக்ரம:॥ க0.
...: ஸமவிபக்தாங்க: ஸ்நிக்தவர்ண: ப்ரதாபவாந்।
... விஶாலாக்ஷோ லக்ஷ்மீவாஞ்சுபலக்ஷண:। கக.
...ஸந்தஶ்ச ப்ரஜாநாம் ச ஹிதே ரத:।
...ந: ஶுசிர்வஶ்ய: ஸமாதிமாந்॥ கஉ.

...ஸ்தாநாநி ச — * குணவாந் । ததஸ்யாஸ்தீதி ...வி। மாதுபதாயாஶ்சேத்யாதிநா வ:. † "சாரி... ‡ "கஶ்சைக ப்ரியதர்ஶந:." § "ஏததிச்சாம்யஹம்." ...த்தோ ஶ்ரூயதாம் நர:." ¶ வாக்மீ । வாசோ க்மிநி ...ஹநவசந ஜத்வம்.

“இவ்வுலகத்தில் இக்காலத்தில் சிறந்த குணங்களையுடையவர் யாவர்? மிகுந்த வல்லமையையுடையவர் யாவர்? தர்மங்களையுணர்ந்தவர் யாவர்? நன்றியையுணர்ந்தவர் யாவர்? உண்மையையுரைக்கின்றவர் யாவர்? வ்ரதங்களைத் தவறாது அநுஷ்டிக்கின்றவர் (அல்லது ஸ்திரசித்தமுடையவர்) யாவர்? உ.

நல்லொழுக்கத்தோடு கூடியவர் யாவர்? எல்லா ப்ராணிகளுக்கும் நன்மையைச்செய்கின்றவர் யாவர்? (எல்லாவற்றையும்) அறிந்தவர் யாவர்? (எல்லாவற்றையும் செய்ய) வல்லவர் யாவர்? எல்லோர்க்கும் ப்ரியமான தர்சநமுடையவர் யாவர்? ங.

மிக்க தைர்யமுடையவர் யாவர்? கோபத்தை வென்றவர் யாவர்? மிக்க வொளியுடையவர் யாவர்? பொறாமையற்றவர் யாவர்? யுத்தத்தில் எவர் கோபங்கொண்டால் தேவர்களும் பயப்படுவார்கள்? ச.

மஹர்ஷியே! இதை யான் கேட்க விரும்புகிறேன்; இதைக்கேட்க எனக்குக் குதூஹலமதிகமாயிருக்கிறதன்றோ! இப்படிப்பட்ட புருஷரை அறிய நீர் வல்லவராயிருக்கிறீர்; (ஆதலால் இதை எனக்குச் சொல்லியருளவேண்டும்)” ரு.

மூவுலகங்களையுமறிந்த நாரதர், வால்மீகியின் மொழி கேட்டுக் களித்து, கேளுமென்றழைத்து (மேல்வரும்) வாக்யத்தை யுரைத்தார். சு.

முநிவரே! பலவும் கிடைக்கவரியவையுமாகிய எக்குணங்களை நீர் கேட்டீரோ அக்குணங்களோடுகூடியபுருஷனை யான் அறிந்துரைக்கப்போகின்றேன்; கேளும். எ.

இக்ஷ்வாகுவம்சத்தில் அவதரித்தவரும், “ராமர்” என்று ப்ரஸித்தரும், ஜநங்களாலறியப்பட்டவரும், உள்ளத்தை ஓடினபடி விடாமல் தம்வசமாகச் செய்தவரும், (அல்லது எப்பொழுதும் அழிவில்லாத திவ்யமங்களவிக்ரஹமுடையவரும்) மஹாவீர்யமுடையவரும், மிகுந்த காந்தியுடையவரும், மிகுந்த தைர்யமுடையவரும், (அல்லது பரமாநந்தமுடையவரும்) ஐம்புலன்களையும் வென்றவரும், (அல்லது ஸர்வேச்வரரும்,) அ.

சிறந்த புத்தியையுடையவரும், சிறந்த நீதியையுடையவரும், சிறந்த வாக்கையுடையவரும், நிறைந்த செல்வமுடையவரும், பகைவர்களைக் கொல்லுகின்றவரும், விசாலமான தோள்களையுடையவரும், பருத்த கைகளையுடையவரும், சங்கம்போன்ற கழுத்தையுடையவரும், பருத்த கன்னங்களையுடையவரும், கூ.

விசாலமான மார்பையுடையவரும், சிறந்த வில்லையுடையவரும், மறைந்த தோளெலும்புகளையுடையவரும், பகையோர்களையடக்குகின்றவரும், முழங்கால்வரையில் தொங்குகின்ற கைகளையுடையவரும், அழகான சிரஸ்ஸையுடையவரும், அழகான நெற்றியையுடையவரும், அழகான நடையையுடையவரும், க0.

ஸாமுத்ரிக சாஸ்த்ரத்திற்சொல்லியபடி உயரம் பருமன் முதலியவைகள் பொருந்தியிருக்கின்றவரும், ஸமமாகப்பிரிக்கப்பட்ட அங்கங்களையுடையவரும், மழமழப்பான வர்ணத்தையுடையவரும், (அதாவது நீலமேகச்யாமரும்.) மிகுந்த பராக்ரமமுடையவரும், தசைபிடித்து அழகியதான பருத்த மார்பையுடையவரும், விசாலமான கண்களையுடையவரும், லக்ஷ்மியையுடையவரும், ஸகல சுபலக்ஷணங்களையுமுடையவரும், கக.

தர்மங்களையுணர்ந்தவரும், சொன்னசொற்றவறாதவரும், ஜநங்களுக்கு நன்மையைச்செய்வதில் விருப்பமுள்ளவரும், பெரும்புகழ்பெற்றவரும், நிறைந்த ஜ்ஞாநமுற்றவரும், தோஷமற்றவரும், தம்மை ஆச்ரித்தவர்கட்கு ஆட்பட்டிருக்கின்றவரும், தம்மை ஆச்ரித்தவர்களை ரக்ஷிக்குஞ்சிந்தையுடையவரும், கஉ.

ப்ரஜாபதிஸம: ஸ்ரீமாந் தாதா ரிபுநிஷூதந:।
ரக்ஷிதா ஜீவலோகஸ்ய தர்மஸ்ய பரிரக்ஷிதா। ௧௩.

ரக்ஷிதா ஸ்வஸ்ய தர்மஸ்ய ஸ்வஜநஸ்ய ச ரக்ஷிதா।
வேதவேதாங்கதத்த்வஜ்ஞோ தநுர்வேதே ச நிஷ்டித:। ௧௪.

ஸர்வஶாஸ்த்ரார்த்ததத்த்வஜ்ஞ: ஸ்ம்ருதிமாந் ப்ரதிபாநவாந்।
ஸர்வலோகப்ரிய: ஸாதுரதீநாத்மா விசக்ஷண:। ௧௫.

ஸர்வதாபிகத: ஸத்பி: ஸமுத்ர இவ ஸிந்துபி:।
ஆர்ய: ஸர்வஸமஶ்சைவ *ஸதைகப்ரியதர்ஶந:। ௧௬.

ஸ ச ஸர்வகுணோபேத: கௌஸல்யாநந்தவர்தந:।
ஸமுத்ர இவ காம்பீர்யே தைர்யேண ஹிமவாநிவ॥ ௧௭.

விஷ்ணுநா ஸத்ருஶோ வீர்யே ஸோமவத்ப்ரியதர்ஶந:।
காலாக்நிஸத்ருஶ: க்ரோதே க்ஷமயா ப்ருதிவீஸம:। ௧௮.

தநதேந ஸமஸ்த்யாகே ஸத்யே தர்ம இவாபர:। ௧௯.

தமேவங்குணஸம்பந்நம் ராமம் ஸத்யபராக்ரமம்॥
ஜ்யேஷ்டம் ஶ்ரேஷ்டகுணைர்யுக்தம் ப்ரியம் தஶரதஸ்ஸுதம்।
ப்ரக்ருதீநாம் ஹிதைர்யுக்தம் ப்ரக்ருதிப்ரியகாம்யயா।
யௌவராஜ்யேந ஸம்யோக்துமைச்சத்ப்ரீத்யா மஹீபதி:। ௨௦.

தஸ்யாபிஷேகஸம்பாராந் த்ருஷ்ட்வா பார்யாத கைகயீ॥
பூர்வம் தத்தவரா தேவீ வரமேநமயாசத।
விவாஸநம் ச ராமஸ்ய பரதஸ்யாபிஷேசநம்। ௨௧.

ஸ †ஸத்யவசநாத்ராஜா தர்மபாஶேந ஸம்யத:।
‡விவாஸயாமாஸ ஸுதம் ராமம் தஶரத: ப்ரியம்। ௨௨.

பா.—* "ஸதைவ ப்ரியதர்ஶந:." † "ஸத்யவசநோ ராஜா."
‡ "விவாஸ்யயாமாஸ."

ப்ரஹ்மாவை யொத்தவரும், ஸ்ரீமானும், (எல்லாவற்றையும்)தரிக்கிறவரும், அல்லது போஷிக்கிறவரும், சத்ருக்களைக்கொல்லுகிறவரும், எல்லாப்ராணிகளையும் ரக்ஷிக்கிறவரும், தர்மத்தை நன்றாய் ரக்ஷிக்கிறவரும், கஙு.

தமது தர்மத்தைக் காக்கின்றவரும், தமது ஜநத்தையும் காக்கின்றவரும், வேதங்கள் வேதாங்கங்கள் என்னுமிவைகளின் தத்வங்களையுணர்ந்தவரும், தநுர்வேதத்தில் தேர்ந்தவரும். கச.

எல்லா சாஸ்த்ரார்த்தங்களையும் உள்ளபடியுணர்ந்தவரும், மிகுந்த ஜ்ஞாபக சக்தியுடையவரும், ஸமயத்திற்குத்தக்கபடி மேன்மேலும் தோற்றும் புத்தியுடையவரும், எல்லாவுலகங்கட்கும் ப்ரியமானவரும், ஸாதுவும், பெருந்தன்மையுடையவரும், வல்லவரும், கரு.

ஸமுத்ரமானது நதிகளால் அடையப்படுவதுபோல் எப்பொழுதும் ஸத்புருஷர்களால் அடையப்பட்டவரும், பூஜ்யரும், எல்லோரிடத்திலும் ஸமமாயிருக்கின்றவரும், எப்பொழுதுமெல்லோர்க்கும் ப்ரியமான தர்சநமுடையவரும்.

கௌஸல்யையின் ஆநந்தத்தைப் பெருகச்செய்கின்றவரும், (அதாவது கௌஸல்யைக்குப் புத்த்ரராயவதரித்தவரும்) ஆகிய அவரே எல்லா குணங்களோடுங் கூடியவர்; (அவர்,) பெருந்தன்மையில் ஸமுத்ரம்போன்றவர்; தைர்யத்தில் ஹிமவத்பர்வதம்போன்றவர்; கஎ.

வீர்யத்தில் விஷ்ணுவை நிகர்த்தவர்; சந்த்ரன்போற் பார்க்கப் பார்க்கப் பரமாநந்தந் தரும் தமது தர்சநத்தையுடையவர்; கோபத்தில் காலாக்நியை யொத்தவர்; பொறுமையில் பூமியை யொத்தவர். கஅ.

த்யாகத்தில் குபேரனையொத்தவர். ஸத்யத்தில் சிறந்த (அல்லது இரண்டாவது) தர்மதேவதைபோன்றவர். ௧௯.

இத்தகைய குணங்கள்நிறைந்து, உண்மையான வல்லமைபெற்று, மற்றுமுள்ள சிறந்த குணங்கள் யாவும்பொருந்தி, ஜநங்களுக்கு நன்மைசெய்துகொண்டு விளங்கும் தமது அன்புள்ள ஜ்யேஷ்டபுத்த்ரரான அந்தராமனை, தசரத மன்னவர் ஜநங்களுக்கு நன்மைசெய்யக்கருதி அவரிடமன்புகூர்ந்து இளவரசராகச்செய்ய நினைத்தார். உ0.

பிறகு அத்தசரதருக்கு அன்புள்ள மனைவியாய் முன் தசரதரிடத்தில் வரம் பெற்றவளாய் இருக்கும் கைகேயியென்பவள், அந்த ராமருடைய அபிஷேக ஸாமக்ரிகளைக்கண்டு, ராமருக்கு வநவாஸம் செய்விக்கவேண்டுமென்றும், பரதருக்கு முடிசூட்டுவிக்கவேண்டுமென்றும் அத்தசரதரிடத்து வரங்கோரினாள்.

அத்தசரதவேந்தர், சொன்னசொற்றவறுதவராயிருந்தபடியால் தருமமென்னும் பாசங்கொண்டு கட்டுண்டு தமது அன்புள்ள புத்த்ரராகிய ராமனை வநவாஸம் செய்வித்தார். உக.

𑌸 𑌜𑌗𑌾𑌮 𑌵𑌨𑌂 𑌵𑍀𑌰𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌮𑌨𑍁𑌪𑌾𑌲𑌯𑌨𑍍।
𑌪𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌚𑌨𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌾𑌤𑍍𑌕𑍈𑌕𑍇𑌯𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍। ௨௪.

𑌤𑌂 𑌵𑍍𑌰𑌜𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍋 𑌅𑌨𑍁𑌜𑌗𑌾𑌮 𑌹।
𑌸𑍍𑌨𑍇𑌹𑌾𑌦𑍍𑌵𑌿𑌨𑌯𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌃 𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌰𑍍𑌧𑌨𑌃।
𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑌂 𑌦𑌯𑌿𑌤𑍋 𑌭𑍍𑌰𑌾𑌤𑍁𑌃 *𑌸𑍌𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑌨𑍁𑌦𑌰𑍍𑌶𑌯𑌨𑍍। ௨௫௨.

𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌦𑌯𑌿𑌤𑌾 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑌮𑌾 𑌹𑌿𑌤𑌾।
𑌜𑌨𑌕𑌸𑍍𑌯 𑌕𑍁𑌲𑍇 𑌜𑌾𑌤𑌾 𑌦𑍇𑌵𑌮𑌾𑌯𑍇𑌵 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌾।
𑌸𑌰𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌾 𑌨𑌾𑌰𑍀𑌣𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌾 𑌵𑌧𑍂𑌃।
𑌸𑍀𑌤𑌾𑌪𑍍𑌯𑌨𑍁𑌗𑌤𑌾 𑌰𑌾𑌮𑌂 𑌶𑌶𑌿𑌨𑌂 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀 𑌯𑌥𑌾। ௨௭௨.

𑌪𑍌𑌰𑍈𑌰𑌨𑍁𑌗𑌤𑍋 𑌦𑍂𑌰𑌂 𑌪𑌿𑌤𑍍𑌰𑌾 𑌦𑌶𑌰𑌥𑍇𑌨 𑌚। ௨௮.

𑌶𑍃𑌙𑍍𑌗𑌿𑌬𑍇𑌰𑌪𑍁𑌰𑍇 𑌸𑍂𑌤𑌂 𑌗𑌙𑍍𑌗𑌾𑌕𑍂𑌲𑍇 𑌵𑍍𑌯𑌸𑌰𑍍𑌜𑌯𑌤𑍍।
𑌗𑍁𑌹𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨𑌿𑌷𑌾𑌦𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍। ௨௯.

𑌗𑍁𑌹𑍇𑌨 𑌸𑌹𑌿𑌤𑍋 𑌰𑌾𑌮𑍋 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍇𑌨 𑌚 𑌸𑍀𑌤𑌯𑌾। ௨௯௨

†𑌤𑍇 𑌵𑌨𑍇𑌨 𑌵𑌨𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌨𑌦𑍀𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌤𑍍𑌵𑌾 𑌬𑌹𑍂𑌦𑌕𑌾𑌃।
𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑍂𑌟𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌸𑍍𑌯 𑌶𑌾𑌸𑌨𑌾𑌤𑍍।
𑌰𑌮𑍍𑌯𑌮𑌾𑌵𑌸𑌥𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌰𑌮𑌮𑌾𑌣𑌾 𑌵𑌨𑍇 𑌤𑍍𑌰𑌯𑌃।
𑌦𑍇𑌵𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌤𑍇 𑌨𑍍𑌯𑌵𑌸𑌨𑍍𑌸𑍁𑌖𑌮𑍍। ௩௧௨.

𑌟𑌿𑌪𑍍𑌪𑌣𑍀.

* 𑌸𑍌𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍍। 𑌸𑍁𑌭𑍍𑌰𑌾𑌤𑍁𑌰𑍍𑌭𑌾𑌵𑌃 𑌸𑍌𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍍। 𑌹𑌾𑌯𑌨𑍇 𑌅𑌣𑌿, 𑌣𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌨𑍁𑌶𑌤𑌿𑌕𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌚𑍇𑌤𑍍𑌯𑍁𑌭𑌯𑌪𑌦𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌃। 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌸𑍁𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌶𑌬𑍍𑌦𑍋 𑌅𑌨𑍁𑌶𑌤𑌿𑌕𑌾𑌦𑌿𑌷𑍁 𑌨 𑌪𑌠𑌿𑌤𑌃। 𑌤𑌥𑌾𑌪𑍍𑌯𑌨𑍁𑌶𑌤𑌿𑌕𑌾𑌦𑍇𑌰𑌾𑌕𑍃𑌤𑌿𑌗𑌣𑌤𑍍𑌵𑌾𑌦𑌸𑍍𑌯 𑌸𑌾𑌧𑍁𑌤𑍍𑌵𑌂 𑌬𑍋𑌧𑍍𑌯𑌮𑍍.

† "𑌤𑍇 𑌵𑌨𑍇𑌨 𑌵𑌨𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾" 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰, "𑌤𑍇 = 𑌰𑌾𑌮𑌾𑌦𑌯𑌃, 𑌵𑌨𑍇𑌨 𑌵𑌨𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 = 𑌵𑌨𑌾𑌦𑍍𑌵𑌨𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾" 𑌇𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌮𑍇𑌵 𑌸𑌾𑌹𑌸𑌤𑌯𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌤𑌿. 𑌵𑌨𑍇𑌨 𑌵𑌨𑌂 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌪𑌞𑍍𑌚𑌮𑍍𑌯𑌰𑍍𑌥𑍇 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾, 𑌹𑍇𑌤𑍌 𑌵𑍇𑌤𑌿 𑌬𑍋𑌧𑍍𑌯𑌮𑍍.

வீரராகிய அந்த ராமர், கைகேயிக்குக் களிப்பை விளைக்கும் தந்தை வாக்களித்தலாற் ப்ரதிஜ்ஞையைப் பரிபாலநம்பண்ணிக்கொண்டு வநஞ்சென்றார். ௨௪.

அவ்வாறு வநஞ்செல்லும் ப்ராதாவாகிய அந்த ராமனை, (ராமருக்கு) அன்புள்ள ப்ராதாவாய்,ஸுமித்ரையின் ஆநந்தத்தைப்பெருகச்செய்பவராய், விநயத்தால் நிறைந்தவராய் இருக்கும் "லக்ஷ்மணர்" என்பவர், ப்ராதாவுக்கு நல்ல ப்ராதாவாயிருக்கும் தன்மையைக்காட்டிக்கொண்டு (அதாவது லோகத்தில் தமையன் தம்பிகளிவ்விதமாக இருக்கவேண்டுமென்னும் தர்மத்தைக்காட்டிக்கொண்டு) ராமரிடத்தில் ஸ்நேஹத்தாற் பின்றொடர்ந்தார். ௨௫½.

ராமருக்கு அன்புள்ள பார்யையாய்,நித்யம் ப்ராணனையொத்தவளாய்,நன்மையைச்செய்பவளாய், ஜநகனுடைய குலத்திலவதரித்தவளாய், ரூபங்கொண்ட தேவமாயையைபோன்றவளாய், (ஸாமுத்ரிக சாஸ்த்ரத்திற்சொல்லப்பட்ட)ஸகல(சுப)லக்ஷணங்களால்நிறைந்தவளாய்,பெண்களிற்சிறந்தவளாய், (தசரதருக்கு) மருமகளாய் இருக்கும் "ஸீதை" என்பவளும், ரோஹிணீதேவி சந்த்ரனைப் (பின்றொடர்வது) போல் ராமனைப்பின்றொடர்ந்தாள். ௨௭½.

பட்டணத்திலுள்ளோரும், தந்தையாகிய தசரதரும், வெகுதூரம் வரையிற் பின்றொடர்ந்தனர். ௨௮.

தர்மாத்மாவாகிய ராமர், கங்கையின் கரையில் (இருக்கும்) ச்ருங்கிபேரபட்டணத்தில் வேடர்கட்கு மன்னராகிய "குஹர்" என்பவரை அன்பராகவடைந்து, ஸாரதியாகிய ஸுமந்த்ரரை விட்டுவிட்டார். ௨௯.

அந்த ராமர், லக்ஷ்மணரோடும் ஸீதையோடும் கூடிக்குஹருடன் அன்புற்றிருந்தனர். * ௨௯½.

† தேவகந்தர்வரையொத்த அந்த ராமர் லக்ஷ்மணர் ஸீதை என்னும் இம்மூவரும் ஒரு வநத்தினின்று (மற்றொரு) வநஞ்சென்று, நீர் நிறைந்த நதிகளைத்தாண்டிக்கொண்டு, பரத்வாஜருடைய (ஆச்ரமஞ்சென்று ஆதித்யம் பெற்றுஅங்கிருந்து அவருடைய)கட்டளையாற் சித்ரகூடஞ்சென்று, அழகாய (பர்ணசாலையென்னும்) க்ருஹத்தைச்செய்துகொண்டு, அங்கு ஸுகமாக வாஸஞ் செய்துகொண்டிருந்தனர். ௩௧½.

---

* இதற்கு மற்றுமோரர்த்தமுண்டு;அதாவது :—"குஹர்,ராமனை லக்ஷ்மணரோடும் ஸீதையோடுங் கூட்டிக்கங்கையைத்தாண்டுவித்தார்" என்று. இப்பாதி ச்லோகத்தை இருபத்தொன்பதாவது ச்லோகத்தோடு சேர்த்து ஒரேவாக்யமாகத் தாத்பர்யங்கொள்ளுகிறார், "திலக" வ்யாக்யாதாரர்.

† கோவிந்தராஜர், "தேவகந்தர்வரையொத்த" என்பதற்கு, "லக்ஷ்மி, ஸ்ரீமந்நாராயணன்,ஸர்வதா ஸாமகாநஞ்செய்யும் முக்தர், ஆகிய இவர்களுக்கு ஸமாநரான" என்றும் ஸரஸதமமாக ஒரு தாத்பர்யம் எழுதுகிறார்.

𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑍂𑌟𑌂 𑌗𑌤𑍇 𑌰𑌾𑌮𑍇 𑌪𑍁𑌤𑍍𑌰𑌶𑍋𑌕𑌾𑌤𑍁𑌰𑌸𑍍𑌤𑌦𑌾 ॥
𑌰𑌾𑌜𑌾 𑌦𑌶𑌰𑌥𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌜𑌗𑌾𑌮 𑌵𑌿𑌲𑌪𑌨𑍍𑌸𑍁𑌤𑌮𑍍 । ௩௨½.

𑌗𑌤𑍇 𑌤𑍁 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌭𑌰𑌤𑍋 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑍈𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑍈𑌃 ॥
𑌨𑌿𑌯𑍁𑌜𑍍𑌯𑌮𑌾𑌨𑍋 𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌯 𑌨𑍈𑌚𑍍𑌛𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌮𑌹𑌾𑌬𑌲𑌃 । ௩௩½.
𑌸 𑌜𑌗𑌾𑌮 𑌵𑌨𑌂 𑌵𑍀𑌰𑍋 𑌰𑌾𑌮𑌪𑌾𑌦𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌕𑌃 ॥ ௩௪.

𑌗𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌸𑍁𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌅𑌯𑌾𑌚𑌦𑍍𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑌂 𑌰𑌾𑌮𑌮𑌾𑌰𑍍𑌯𑌭𑌾𑌵𑌪𑍁𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑌃 ॥ ௩௫.

𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌰𑌾𑌜𑌾 𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞 𑌇𑌤𑌿 𑌰𑌾𑌮𑌂 𑌵𑌚𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 । ௩௫½.

𑌰𑌾𑌮𑍋𑌽𑌪𑌿 𑌪𑌰𑌮𑍋𑌦𑌾𑌰𑌃 𑌸𑍁𑌮𑍁𑌖𑌃 𑌸𑍁𑌮𑌹𑌾𑌯𑌶𑌾𑌃 ॥
𑌨 𑌚𑍈𑌚𑍍𑌛𑌤𑍍𑌪𑌿𑌤𑍁𑌰𑌾𑌦𑍇𑌶𑌾𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌰𑌾𑌮𑍋 𑌮𑌹𑌾𑌬𑌲𑌃 । ௩௬½.

𑌪𑌾𑌦𑍁𑌕𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌯 𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃 ॥
𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌯𑌾𑌮𑌾𑌸 𑌤𑌤𑍋 𑌭𑌰𑌤𑌂 𑌭𑌰𑌤𑌾𑌗𑍍𑌰𑌜𑌃 । ௩௭½.

𑌸 𑌕𑌾𑌮𑌮𑌨𑌵𑌾𑌪𑍍𑌯𑍈𑌵 𑌰𑌾𑌮𑌪𑌾𑌦𑌾𑌵𑍁𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑌨𑍍 ॥
𑌨𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌰𑌾𑌮𑍇𑌽𑌕𑌰𑍋𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌰𑌾𑌮𑌾𑌗𑌮𑌨𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌯𑌾 । ௩௮½.
𑌗𑌤𑍇 𑌤𑍁 𑌭𑌰𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍𑌸𑌤𑍍𑌯𑌸𑌨𑍍𑌧𑍋 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 ॥
𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑍁 𑌪𑍁𑌨𑌰𑌾𑌲𑌕𑍍𑌷𑍍𑌯 𑌨𑌾𑌗𑌰𑌸𑍍𑌯 𑌜𑌨𑌸𑍍𑌯 𑌚 ।
𑌤𑌤𑍍𑌰𑌾𑌗𑌮𑌨𑌮𑍇𑌕𑌾𑌗𑍍𑌰𑍋 𑌦𑌣𑍍𑌡𑌕𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌵𑌿𑌵𑍇𑌶 𑌹 ॥ ௪௦.

𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌤𑍁 𑌮𑌹𑌾𑌰𑌣𑍍𑌯𑌂 𑌰𑌾𑌮𑍋 𑌰𑌾𑌜𑍀𑌵𑌲𑍋𑌚𑌨𑌃 ।
𑌵𑌿𑌰𑌾𑌧𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌂 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌶𑌰𑌭𑌙𑍍𑌗𑌂 𑌦𑌦𑌰𑍍𑌶 𑌹 ॥
𑌸𑍁𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌂 𑌚𑌾𑌪𑍍𑌯𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌂 𑌚 * 𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑌂 𑌤𑌥𑌾 । ௪௧½.
𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌵𑌚𑌨𑌾𑌚𑍍𑌚𑍈𑌵 𑌜𑌗𑍍𑌰𑌾𑌹𑍈𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌶𑌰𑌾𑌸𑌨𑌮𑍍 ॥
𑌖𑌡𑍍𑌗𑌂 𑌚 𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑍀𑌤𑌸𑍍𑌤𑍂𑌣𑍀 𑌚𑌾𑌕𑍍𑌷𑌯𑌸𑌾𑌯𑌕𑍌 । ௪௨½.

---

* "𑌚 𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌭𑌾𑌵𑌃, "𑌵𑌾𑌕𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌸𑌾 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌾𑌮𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍇" 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌕𑍍𑌯𑍇 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾 𑌵𑍈𑌕𑌲𑍍𑌪𑌿𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌆𑌰𑍍𑌷𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌸𑌾𑌧𑍁𑌰𑌿𑌤𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌃.

ராமர், சித்ரகூடத்திலிருக்க, அப்பொழுது தசரதராஜர், புத்ரசோகத்தால் வருந்தி, புத்ரனை நோக்கி (ஹா ராமராமா! என்னைச்செய்யென்னை விட்டுப்பிரிந்தாயே) என்று கதறிக்கொண்டு ஸ்வர்க்கஞ்சென்றார். ௩௨.

அந்த தசரதராஜர் (இவ்வாறு) காலஞ்சென்றவளவில், வஸிஷ்டர் முதலான ப்ராஹ்மணர்கள் மஹாபலமுடைய பரதனை அரசாளக் கட்டளையிட்டும் (அப்பரதர்) அரசாள விரும்பிலர். ௩௩.

வீரராகிய வப்பரதர், பூஜ்யரான ராமருடையவனுக்ரஹம் பெறுவதற்காக (அல்லது ராமருடைய பாதத்தைப் பெறுவதற்காக) வனஞ் சென்றார். ௩௪.

சென்ற பிறகு (பரதர் ராமரால்) ஸல்காரமுறைகளால் பூஜிக்கப்பட்டு, மிகவும் மஹாத்மாவாய், ஸத்யமான பராக்ரமத்தையுடையவராய் இருக்கும் ப்ராதாவாகிய ராமனை ப்ரார்த்தித்தார். ௩௫.

"நீரே தர்மங்களையறிந்த ராஜா" என்கிற வார்த்தையை ராமனைச் சொன்னார். (என்றால், "நீர் தர்மங்களையறிந்த ராஜாவானபடியால் நீரே அயோத்யைக்கு வந்து அரசாளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தாரென்று தாத்பர்யம். ௩௬.

ராமர், (ஆச்ரிதர்களை) ஸந்தோஷிப்பிப்பவரும், பரம - உதாரரும், ஸுமுகரும், (அதாவது தன்னையொருவர் அடுத்து யாசிக்கையிற் கொஞ்சமேனும் கெஞ்ச கோணாமற் கொஞ்சுந் திருமுக மண்டலமுடையவரும்) சிறப்புற்ற பெருங்கீர்த்தியுடையவரும், மஹாபலமுடையவருமான போதிலும் தந்தையின் கட்டளையால் (அதாவது முன்னம் வனவாஸஞ் செய்யும்படி தசரதர் நியமித்தபடியால்) அரசாள விரும்பிலர். (அதாவது பரதருடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்யவில்லையென்று தாத்பர்யம்.) ௩௭.

பரதருக்கு அண்ணனாகிய ராமர், இந்த பரதருக்கு அரசாளுவதற்காக (தமது) பாதுகைகளை (தமக்குப்) பதிலாகக் கொடுத்து பரதனை அச்சித்ரகூடத்திலிருந்துத் திரும்பும்படிப் பலவாறுசொல்லுவித்தார். ௩௮.

அந்த பரதர் (தமது) கோரிக்கையையடையாமலே ராமருடைய பாதுகைகளை ஸேவித்துக் கொண்டு ராமரது வரவை யெதிர் பார்த்துக் கொண்டு நந்திக்ராமத்தில் அரசாண்டு கொண்டிருந்தார். ௩௯.

பரதர் (திரும்பிப்) போன பிறகு, ஸ்ரீமானாய், ஸத்யஸந்தராய், ஜிதேந்த்ரியராயிருக்கும் ராமர், நகரத்து ஜநங்கள் அச்சித்ரகூடத்திற்கு வருவதைக்கண்டு, (பித்ருவசநபரிபாலநம்) ஒன்றிற்றானே சென்ற சித்தமுடையவராய் தண்டகாவநம் புகுந்தாரன்றோ! ௪0.

கமலத்தைப்போன்ற கண்களைப்பெற்ற ராமர், (தண்டகையென்னும்) பெருங் காட்டிற்புகுந்து "விராதன்" என்னும் ராக்ஷஸனை ஹதஞ்செய்து, சரபங்கரையும், ஸுதீக்ஷ்ணரையும், அகஸ்த்யரையும், ("ஸுதர்சநர்" என்னும் பெயரையுடைய) அகஸ்த்ய ப்ராதாவையுங் கண்டார். ௪௧.

அகஸ்த்யருடைய வாக்யத்தால் இந்த்ரனது வில்லையும், கத்தியையும், குறைவற்ற பாணங்களுள்ளவம்பறாத் தூணியையும் மிகவும் ஸந்தோஷத்துடன் எடுத்துக் கொண்டார். ௪௨.

[illegible]
[illegible] ௪௩.

[illegible] ௪௪.

[illegible]
[illegible] ௪௫.

[illegible]
[illegible] ௪௬.

[illegible]
[illegible]
[illegible] ௪௭.

[illegible]
[illegible] ௪௮.

[illegible]
[illegible] ௪௯.

[illegible]
[illegible] ௫௰.

[illegible]
[illegible] ௫௧.

[illegible]
[illegible] ௫௨.

[illegible]
[illegible] ௫௩.

[illegible]
[illegible]
[illegible] ௫௫.

அந்த ராமர், வநத்தில் வநசரர்களோடு வாஸஞ் செய்துக் கொண்டிருக்கை யில், அஸுரர்களையும் ராக்ஷஸர்களையும் வதஞ் செய்ய வேண்டி ருஷிக ளெல்லோரும் எதிர்கொண்டு வந்தனர். சங.

அந்த ராமர், ராக்ஷஸர்களின் வநத்தில் (அதாவது தண்டகாவநத்தில்) அந்த ருஷிகளுக்கு அப்படியே ப்ரதிஜ்ஞை பண்ணிக் கொடுத்தார். சச.

அக்நியையொத்தத் தண்டகாரண்யத்திற் குடிபெற்றிருக்கும் ருஷிக ளுக்கு ராமர் ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொடுத்த விஷயமென்னவென்றால், "யுத்தத்தில் ராக்ஷஸர்களை வதஞ் செய்கிறேன்" என்பது. சரு.

அந்த ராமர், அத்தண்டகாரண்யத்திற்றானே இருந்துகொண்டு, நினைத்தபடி ரூபங்கொள்ளவல்லமைபெற்று ஜநஸ்தாநத்திற் குடியிருக்கும் "சூர்ப்பணகை" என்னும் ராக்ஷஸியை விகாரரூபமுடையவளாகச்செய்தார் (அதாவது "காதை யும் மூக்கையும் அறுத்துத் துரத்திவிட்டார்" என்று தாத்பர்யம்.) சசு.

ராமர், (இவ்வாறு சூர்ப்பணகையின் காது மூக்குகளை அறுத்துத் துரத்தி விட்ட) பிறகு சூர்ப்பணகையின் சொற்கேட்டு (போர்புரிய) எழுந்த ராக்ஷ ஸர்களெல்லோரையும், கரனையும், த்ரிசிரஸ்ஸையும், தூஷணனென்னும் ராக்ஷஸனையும், அவர்களுடைய வழியைப் பின்றொடர்ந்து வந்தவர்களையும் ஒன்றுகூடவிடாமல் யுத்தத்தில் ஹதஞ்செய்து விட்டார். சஎ உ.

(ராமர்) அவ்வநத்தில் வாஸஞ்செய்து கொண்டிருக்கையில் ஜநஸ்தா நத்திற் குடியிருக்கும் பதினாலாயிரம் ராக்ஷஸர்களையும் மிகுதியன்றி அடித்து முடித்து விட்டார். சஅ உ.

பிறகு ராவணன், ஜ்ஞாதிகளின் வதத்தைக் கேட்டுக் கோபத்தால் மோஹங்கொண்டு, "மாரீசன்" என்னும் ராக்ஷஸனை (ஸீதாபஹாரத்திற்காக) ஸஹாயமாகக் கோரினான். சகூ உ.

"ஓ ராவணா! மிகுந்த பலமுடைய அந்த ராமரோடுமக்குப்பகைக்தகாது" என்று அந்த ராவணனை மாரீசன் பலவாறாகத் தகைத்தான். ருo உ.

அப்பொழுது ராவணன், காலனாற் கட்டளையிடலுற்று அவ்வாக்யத் தையநாதரித்து மாரீசனுடன் கூடி அந்த ராமருடைய ஆச்ரமநிலைக்குச் சென்றான். ருக உ.

மாயாவியாகிய வம்மாரீசனைக்கொண்டு, ராஜபுத்ரரான ராமலக்ஷ்மணரை வஞ்சித்து, "ஜடாயுஸ்" என்னும் க்ருத்ரத்தை ஹிம்ஸித்து, ராமபார்யை யாகிய ஸீதையைக் கொண்டுபோய் விட்டான். ருஉ உ.

ராகவனார், (நெடுவழியில் ராவணனால்) அடித்துத் தள்ளப்பட்ட "ஜடாயுஸ்" என்னும் க்ருத்ரத்தைக்கண்டு, ஸீதையை (ராவணன்) கொண்டுபோனதைக் கேட்டு வருத்தத்தால் மிகத்தபித்து இந்த்ரியங்கட்கலங்கலுற்றார் ருங உ.

அவ்வருத்தத்துடனே ஜடாயுஸ் என்னுங்க்ருத்ரத்தைத்தஹநஞ்செய்துவநத் தில் ஸீதையைத்தேடிக்கொண்டிருக்கையில், விகாரமான ரூபம்பெற்றுப் பயங்கரமான தர்சநமுடைய "கபந்தன்" என்னும் ராக்ஷஸனைக்கண்டார். ருச.

[illegible] ௫௪.
[illegible]
[illegible] ௫௫.
[illegible]
[illegible] ௫௬.
[illegible] ௫௭.
[illegible] ௫௮.
[illegible]
[illegible] ௫௯.
[illegible]
[illegible] ௬௰.
[illegible]
[illegible] ௬௧.
[illegible]
[illegible] ௬௨.
[illegible] ௬௩.
[illegible]
[illegible] ௬௪.
[illegible]
[illegible] ௬௫.
[illegible]
[illegible] ௬௬.
[illegible]
[illegible] ௬௭.

* [illegible]

மஹாபராக்ரமனான ராமர், அக்கபந்தனை வதித்துத் தஹநஞ் செய்தார், அவனும் ஸ்வர்க்கமடைந்தான். ௫௫½.

"ஓ ராகவா! தர்மங்களைச் செய்துகொண்டு தர்மசீலையாய் ஸந்யாஸாச்ரமத்திலிருக்கும் சபரியினிடம்போம்" என்று அக்கபந்தன் ஸ்ரீராமருக்குச்சொன்னான். ௫௬½.

மஹாதேஜஸ்ஸையும்பெற்றுப்பகைவரைச்கொல்லுவருமாகிய அந்த ராமர், சபரியினிடஞ் சென்றார்; தசரதபுத்ரராகிய ராமரை சபரி நன்றாகப் பூஜித்தாள். ௫௭½.

ராமர், பம்பாநதியின் கரையில், "ஹநுமார்" என்னும் வாநரரோடு ஸங்கதித்தாரன்றோ. ௫௮.

ஹநுமாருடைய வசநத்தால் ஸுக்ரீவரோடுஞ் சேர்ந்தார். ௫௮½.

மஹாபலமுடைய ராமர், அந்த ஸமாசாரத்தை யெல்லாம் ஸுக்ரீவருக்குச் சொன்னார், ஸீதையின் அந்த ஸமாசாரத்தையும் முதலிலிருந்து நடந்தபடி விசேஷமாகச் சொன்னார். ௫௯½.

வாநரராகிய ஸுக்ரீவரும் ராமருடைய அந்த ஸமாசாரத்தையெல்லாங் கேட்டுக்களித்து அக்நிஸாக்ஷியாக ராமரோடு ஸக்யஞ்செய்து கொண்டார். ௬௦½.

பிறகு, (ஸ்ரீராமருடைய ஸமாசாரத்தைக் கேட்டதால்) வருந்தின ஸுக்ரீவர், வாலியோடு தமக்குப் பகையுண்டானதைப் பற்றின கதையை யெல்லாம் ஸ்நேஹத்தால் ராமரிடத்தில் அறிவித்தார். ௬௧½.

அப்பொழுது வாலிவதத்தைப் பற்றி ராமர் ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொடுத்தார்; வாநரராகிய ஸுக்ரீவர் வாலியின் பலத்தையும் அந்த ராகவனார்-ஸந்நிதியிற் சொன்னார். ௬௨½.

ஸுக்ரீவர், ராகவர் விஷயத்திலும், (இவர்வாலிவதஞ்செய்யவல்லரோ அல்லரோவென்று) வீர்யத்தைப்பற்றி நித்யம்ஸந்தேஹித்துக்கொண்டிருந்தார். ௬௩.

ஸுக்ரீவர், ராகவரிடத்தில் நம்பிக்கையுண்டாவதற்காக. (அதாவது ராகவருடைய பலத்தை அறிவதற்காக) பெரியமலைபோலுயர்ந்திருக்கும் துந்துபியின் சரீரத்தை (எடுத்துப்போடுமென்று) காட்டினார். ௬௪.

பெரிய கைகளைப்பெற்று மிகுந்த பலமுடைய ராகவனார், (இது நமக்கெவ்வளவென்று) கொஞ்சஞ்சிரித்து (அத்துந்துபியின்) அஸ்தியைக்கண்டு, கால்கட்டை விரலால் (எடுத்துப், பத்துயோஜனை தூரத்தில உயரவெறிந்தார். ௬௫.

அப்பொழுது (ராமர்) (ஸுக்ரீவருக்குத் தம்மிடத்தில்) நம்பிக்கையுண்டாகவேண்டி மீளவும் ஒரு சிறந்தவில்லினால் ஸப்த ஸால வ்ருக்ஷங்களையும், (அதன் ஸமீபத்திலிருந்த) பர்வதத்தையும், ரஸாதலத்தையும் பிளந்து விட்டார். ௬௬.

பிறகு. சிறந்த வாநரராகிய அந்த ஸுக்ரீவர், அதனால் மநஸ்ஸில் த்ருப்திகொண்டு நம்பி, ராமரோடு கூடி, "கிஷ்கிந்தை" என்னும் குஹைக்குச் சென்றார். ௬௭.

ததோ'கர்ஜத்தரிவரஸ் ஸுக்ரீவோ ஹேமபிங்கல꞉। ௬௭½
தேந நாதேந மஹதா நிர்ஜகாம ஹரீஶ்வர꞉॥ ௬௮
அநுமாந்ய ததா தாராம் ஸுக்ரீவேண ஸமாகத꞉। ௬௮½
நிஜகாந ச தம் தத்ர ஶரேணைகேந ராகவ꞉॥ ௬௯
ததஸ் ஸுக்ரீவவசநாத்தத்வா வாலிநமாஹவே।
ஸுக்ரீவமேவ தத்ராஜ்யே ராகவ꞉ ப்ரத்யபாதயத்॥ ௭௦
ஸ ச ஸர்வாந் ஸமாநீய வாநராந் வாநரர்ஷப꞉।
திஶ꞉ ப்ரஸ்தாபயாமாஸ தித்ருக்ஷுர்ஜநகாத்மஜாம்॥ ௭௧
ததோ க்ருத்ரஸ்ய வசநாத் ஸம்பாதேர்ஹநுமாந் பலீ।
ஶதயோஜநவிஸ்தீர்ணம் புப்லுவே லவணார்ணவம்॥ ௭௨
தத்ர லங்காம் ஸமாஸாத்ய புரீம் ராவணபாலிதாம்।
ததர்ஶ ஸீதாம் த்யாயந்தீமஶோகவநிகாம் கதாம்॥ ௭௩
நிவேதயித்வாऽபிஜ்ஞாநம் ப்ரவ்ருத்திம் ச நிவேத்ய ச।
ஸமாஶ்வாஸ்ய ச வைதேஹீம் மர்தயாமாஸ தோரணம்॥ ௭௪
பஞ்ச ஸேநாக்ரகாந் ஹத்வா ஸப்த மந்த்ரிஸுதாநபி।
ஶூரமக்ஷம் ச நிஷ்பிஷ்ய க்ரஹணம் ஸமுபாகமத்॥ ௭௫
அஸ்த்ரேணோந்முக்தமாத்மாநம் ஜ்ஞாத்வா பைதாமஹாத்வராத்।
மர்ஷயந் ராக்ஷஸாந் வீரோ யந்த்ரிணஸ்தாந் யத்ருச்சயா॥
ததோ தக்த்வா புரீம் லங்காம்*ருதே ஸீதாம் ச மைதிலீம்।
ராமாய ப்ரியமாக்யாதும் புநராயாந்மஹாகபி꞉॥ ௭௭
ஸோ'பிகம்ய மஹாத்மாநம் க்ருத்வா ராமம் ப்ரதக்ஷிணம்।
ந்யவேதயதமேயாத்மா த்ருஷ்டா ஸீதேதி தத்த்வத꞉॥ ௭௮
ததஸ் ஸுக்ரீவஸஹிதோ கத்வா தீரம் மஹோததே꞉।
ஸமுத்ரம் க்ஷோபயாமாஸ ஶரைராதித்யஸந்நிபை꞉॥ ௭௯

---

*"லங்காம்ருதே" இத்யத்ர, "லங்காம் ருதே" இதி பதவிபாக꞉। லங்காம் விநேத்யர்த்த꞉.

பிறகு வாநரரிற் சிறந்தவராய், ஸ்வர்ணம்போற் பிங்களவர்ணமுடையவ ராய் இருக்கும் ஸுக்ரீவர் (யுத்தத்திற்காகக்) கூச்சலிட்டார். சுஎ.

வாநரர்களுக்கு ராஜாவாகிய வாலி அக்கூச்சலால் வெளியிற்புறப்பட் டான். சுஅ.

அப்பொழுது தாரைக்கு நன்மொழிகளைச் சொல்லிவிட்டு, ஸுக்ரீவ ரோடு (யுத்தஞ்செய்ய) ஸங்கதித்தான். சுகூ.

அப்பொழுது ராகவர் இவ்வாலியை ஒரு பாணத்தாற்றானே அடித்தார். சுகூ.

பிறகு ராகவனார், ஸுக்ரீவரது வாக்யத்தால் யுத்தத்தில்வாலியைஹநநஞ் செய்து அந்த ராஜ்யத்தில் ஸுக்ரீவனையே (அரசராக) ஸ்தாபித்தனர். எ0.

வாநரர்கட்கு அரசரான அந்த ஸுக்ரீவர், ஜாநகியைப் பார்க்கவேண்டி (அதாவது தேடவேண்டி) வாநரர்களெல்லோரையும் அழைத்துத் திக்குகளை நோக்கிப் புறப்படச்செய்தார். எக.

பிறகுமிகுந்தபலமுடைய ஹநுமார், "ஸம்பாதி" என்னும் க்ருத்ரத்தின்சொற்கேட்டு, சதயோஜந விஸ்தீர்ணமான லவணஸமுத்ரத்தைத்தாண்டினார். எஉ.

லங்காபுரியையடைந்து, அங்கு அசோகவநஞ்சென்று த்யாநஞ்செய்து கொண்டிருக்கிற ஸீதையைக்கண்டார். எங.

(ராகவனார்கொடுத்த) அடையாளத்தையு மறிவித்து, ஸமாசாரத்தையுந் தெரிவித்து, வைதேஹிக்குத் தேறுதலையுஞ் சொல்லி, தோரணவாயிலை இடித்துப் பொடித்தார். எச.

படை மன்னரைவரையும், மந்த்ரிபுத்ரரெழுவரையும், சூரனாகிய அக்ஷகுமாரனையும் (அடித்துப்) பிசைந்து விட்டு, (இந்த்ரஜித்தின்) அஸ்த்ரத்தாற் கட்டுண்டார். எரு.

பிறகு வாநரரிற்சிறந்த வீரரான ஹநுமார், ப்ரஹ்மாவின் வரத்தால் தன்னை (இந்த்ரஜித்தின்) அஸ்த்ரத்தினின்று விடுபட்டவராகவறிந்து, சிறந்த வாயுதங்களையுடையவர்களாகி (முன்னே நிற்கும்) அந்த ராக்ஷஸர்களை (ச்சினங்கொள்ளாமற்) பொறுத்து, மைதிலியாகிய ஸீதையன்றி லங்காபுரியை (எல்லாந்) தஹித்து, ராமருக்கு நன்மையைச்சொல்ல மீளவும் வந்தார். எஎ.

அளவிடமுடியாத தைர்யமுடைய (அல்லது புத்தியுடைய) அம்மாருதி, * மஹாத்மாவான ராமனை அடைந்து ப்ரதக்ஷிணஞ்செய்து, "(யான்) ஸீதையைக் கண்டேன்" என்றுண்மையை யறிவித்தார். எஅ.

பிறகு (ராகவனார்,) ஸுக்ரீவருடன் கூடிக் கடற்கரைக்குச் சென்று, ஸூர்யனையொத்த பாணங்களாற் கடலைக்கலக்கலுற்றார். எகூ.

---

* இங்கு "மஹாத்மாவான" என்பதற்குத் தாத்பர்யம், "ஸீதையாற் பிரிந்தும் மிகுந்த தைர்யமுடையரான" என்று கோவிந்தராஜர் எழுதுகிறார்; "பரமாத்மாவான" என்று மஹேச்வர தீர்த்தர் எழுதுகிறார்.

தர்ஶயாமாஸ சாத்மாநம் ஸமுத்ர: ஸரிதாம் பதி:|
ஸமுத்ரவசநாச்சைவ நலம் ஸேதுமகாரயத்॥ ௮௦.
தேந கத்வா புரீம் லங்காம் ஹத்வா ராவணமாஹவே|
ராம: ஸீதாமநுப்ராப்ய பராம் வ்ரீடாமுபாகமத்॥ ௮௧.
தாமுவாச ததோ ராம: பருஷம் ஜநஸம்ஸதி|
அம்ருஷ்யமாணா ஸா ஸீதா விவேஶ ஜ்வலநம் ஸதீ॥ ௮௨.
ததோऽக்நிவசநாத் ஸீதாம் ஜ்ஞாத்வா விகதகல்மஷாம்|
பபௌ ராம: ஸம்ப்ரஹ்ருஷ்ட: பூஜித: ஸர்வதைவதை:॥ ௮௩.
கர்மணா தேந மஹதா த்ரைலோக்யம் ஸசராசரம்|
ஸதேவர்ஷிகணம் துஷ்டம் ராகவஸ்ய மஹாத்மந:॥ ௮௪.
அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம்|
க்ருதக்ருத்யஸ்ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ॥ ௮௫.
தேவதாப்யோ வரம் ப்ராப்ய ஸமுத்தாப்ய ச வாநராந்|
அயோத்யாம் ப்ரஸ்திதோ ராம: புஷ்பகேண ஸுஹ்ருத்வ்ருத:॥
பரத்வாஜாஶ்ரமம் கத்வா * ராம: ஸத்யபராக்ரம:|
பரதஸ்யாந்திகம் ராமோ ஹநூமந்தம் வ்யஸர்ஜயத்॥ ௮௭.
புநராக்யாயிகாம் ஜல்பந் ஸுக்ரீவஸஹிதஸ்ததா|
புஷ்பகம் தத் ஸமாருஹ்ய நந்திக்ராமம் யயௌ ததா॥ ௮௮.
நந்திக்ராமே ஜடாம் ஹித்வா ப்ராத்ருபி: ஸஹிதோऽநக:|
ராம: ஸீதாமநுப்ராப்ய ராஜ்யம் புநரவாப்தவாந்॥ ௮௯.
ப்ரஹ்ருஷ்டமுதிதோ லோகஸ்துஷ்ட: புஷ்ட: ஸுதார்மிக:|
நிராமயோ ஹ்யரோகஶ்ச துர்பிக்ஷபயவர்ஜித:॥ ௯௦.
ந புத்ரமரணம் கிஞ்சித் த்ரக்ஷ்யந்தி புருஷா: க்வசித்|
நார்யஶ்சாவிதவா நித்யம் பவிஷ்யந்தி பதிவ்ரதா:॥ ௯௧.
ந சாக்நிஜம் பயம் கிஞ்சிந்நாப்ஸு மஜ்ஜந்தி ஜந்தவ:|
ந வாதஜம் பயம் கிஞ்சிந்நாபி ஜ்வரக்ருதம் ததா॥
ந சாபி க்ஷுத்பயம் தத்ர ந தஸ்கரபயம் ததா| ௯௨.

---

* அத்ர, [illegible] ராமஸ்ய [illegible] பராக்ரமஸ்ய [illegible] ஸ்யாத்.

நதிகளுக்குப் பதியாகிய ஸமுத்ரராஜன் தன்னை (ராகவருக்கு) க்காண்பித்தான்;(ரூபங்கொண்டு நேராகவந்தான். அதாவது) (ராகவனார்,) ஸமுத்ரராஜனது சொற்கேட்டு நலனைக்கொண்டு ஸேதுவைச் செய்வித்தார். ௮௰.

ராமர் அந்த ஸேதுவினால் லங்காபுரியை யடைந்து யுத்தத்தில் ராவணனைஹதஞ்செய்து ஸீதையை யடைந்து, லோகாபவாதத்திற்குப் பயந்து,மிகுந்த வெட்கமடைந்தார். ௮௧.

பிறகு ராமர், ஜநங்களின் ஸபையில் அந்த ஸீதையை (ப்பார்த்து) கடுமொழிகளைச் சொன்னார். பதிவ்ரதையான அந்த ஸீதை (அதை) ப்பொறுக்க முடியாமல் அக்நிப்ரவேசஞ்செய்தாள். ௮௨.

பிறகு ராமர், அக்நியின் வாக்யத்தால் ஸீதையைப் பாபமற்றவளாகவறிந்து, தேவர்களெல்லோராலும் பூஜிக்கப்பட்டு, மிகக்களித்து ஒளிபெற்றார். ௮௩.

மஹாத்மாவாகிய அந்த ராகவனுருடைய வப்பெருஞ் செய்கையால் மூன்று லோகமும் ஜங்கமஸ்தாவரத்துடன் கூடியும்,தேவர்ஷிகணத்தோடு கூடியுங் களித்தது. ௮௪.

ராமர், அப்பொழுது விபீஷணனை லங்கையிலும் ராக்ஷஸேந்த்ரராக வபிஷேகஞ் செய்வித்து, (தாம் நினைத்தபடி) கார்யத்தை முடித்து, வருத்தந்தொலைத்து ஸந்தோஷமடைந்தார். ௮௫.

ராமர், தேவதைகளிடத்தினின்று வரம்பெற்று, (யுத்தத்தில் வீழ்ந்துகிடக்கும்) வாநரர்களை எழுப்பி, அன்பர்களாற் சூழப்பட்டு புஷ்பகவிமானமேறி அயோத்யைக்குப் புறப்பட்டார். ௮௬.

ஸத்யமான பராக்ரமமுடைய ராமர், பரத்வாஜாச்ரமஞ்சென்று, பரதருடைய ஸமீபத்திற்கு ஹநுமானை அனுப்பினார். ௮௭.

அப்பொழுது அந்த ராகவனார், ஸுக்ரீவரோடுகூடிமீளவும் புஷ்பகவிமானமேறி முன்நடந்த கதையைச்சொல்லிக்கொண்டுநந்திக்ராமஞ்சென்றார். ௮௮.

பாபமற்ற ராமர், ப்ராதாக்களோடு கூடி நந்திக்ராமத்தில் ஜடையை விடுத்து, ஸீதையையடைந்து, மறுபடியும் ராஜ்யம்பெற்றார். ௮௯.

(ராகவனார் அரசாண்டு கொண்டிருக்கையில்) லோகம், மயிர்க்கூச்சக் களித்து, தோஷித்து, போஷித்து, சிறந்ததர்மங்களைச்செய்து, (மனோ) வ்யாதியற்று,(சரீர)வ்யாதியுமற்று,கருப்புப்பயம் நீங்கப்பெற்று இருந்தது. ௯௰.

புருஷர்கள், எங்குங் கொஞ்சமேனும் புத்ரமரணத்தைப் பார்க்கப்போகின்றிலர்; ஸ்த்ரீகளும் ஸுமங்கலிகளாய் நித்யம் பதிவ்ரதைகளாகப்போகிறார்கள். ௯௧.

அந்த ராமராஜ்யத்தில் அக்நியாலுண்டாம் பயமுங் கொஞ்சமேனும் (இருக்கப்போகிறது) இல்லை; ஜந்துக்கள், ஜலத்தில் மூழ்கப்போகிறதில்லை; (அதாவது ஜலத்தில் விழுந்து இறக்கப்போகிறதில்லை.) காற்றினாலுண்டாகும் பயமுங் கொஞ்சமேனும் (இருக்கப்போகிறது) இல்லை; அப்படியே ஜ்வரத்தாலுண்டாகும் பயமும் (இருக்கப்போகிறது) இல்லை; பசியின் பயமுங் கொஞ்சமேனும் (இருக்கப்போகிறது) இல்லை; அங்ஙனுந்திருடர்களின் பயமும் (இருக்கப்போகிறது) இல்லை. ௯௨,௩.

𑌨𑌗𑌰𑌾𑌣𑌿 𑌚 𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌣𑌿 𑌧𑌨𑌧𑌾𑌨𑍍𑌯𑌯𑍁𑌤𑌾𑌨𑌿 𑌚 ॥
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌮𑍁𑌦𑌿𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌯𑌥𑌾 𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑍇 𑌤𑌥𑌾 । ௯௪
𑌅𑌶𑍍𑌵𑌮𑍇𑌧𑌶𑌤𑍈𑌰𑌿𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑌥𑌾 𑌬𑌹𑍁𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌕𑍈𑌃 ॥
𑌗𑌵𑌾𑌂 𑌕𑍋𑌟𑍍𑌯𑌯𑍁𑌤𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌪𑍍𑌰𑌯𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 ।
𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯𑌂 𑌧𑌨𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑌹𑌾𑌯𑌶𑌾𑌃 ॥ ௯௫
𑌰𑌾𑌜𑌵𑌂𑌶𑌾𑌞𑍍𑌛𑌤𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌰𑌾𑌘𑌵𑌃 ।
𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌂 𑌚 𑌲𑍋𑌕𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑍍𑌵𑍇 𑌸𑍍𑌵𑍇 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌿𑌯𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 ॥ ௯௬
𑌦𑌶𑌵𑌰𑍍𑌷𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌦𑌶𑌵𑌰𑍍𑌷𑌶𑌤𑌾𑌨𑌿 𑌚 ।
𑌰𑌾𑌮𑍋 𑌰𑌾𑌜𑍍𑌯𑌮𑍁𑌪𑌾𑌸𑌿𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥ ௯௭
𑌇𑌦𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑌾𑌪𑌘𑍍𑌨𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌵𑍇𑌦𑍈𑌶𑍍𑌚 𑌸𑌂𑌮𑌿𑌤𑌮𑍍 ।
𑌯𑌃 𑌪𑌠𑍇𑌦𑍍𑌰𑌾𑌮𑌚𑌰𑌿𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍈𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௯௮
𑌏𑌤𑌦𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌮𑌾𑌯𑍁𑌷𑍍𑌯𑌂 𑌪𑌠𑌨𑍍𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌂 𑌨𑌰𑌃 ।
𑌸𑌪𑍁𑌤𑍍𑌰𑌪𑍌𑌤𑍍𑌰𑌃 𑌸𑌗𑌣𑌃 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍇 𑌮𑌹𑍀𑌯𑌤𑍇 ॥ ௯௯

𑌪𑌠𑌨𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌵𑌾𑌗𑍃𑌷𑌭𑌤𑍍𑌵𑌮𑍀𑌯𑌾𑌤𑍍 *𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑍂𑌮𑌿𑌪𑌤𑌿𑌤𑍍𑌵𑌮𑍀𑌯𑌾𑌤𑍍 । 𑌵𑌣𑌿𑌗𑍍𑌜𑌨𑌃 𑌪𑌣𑍍𑌯𑌫𑌲𑌤𑍍𑌵𑌮𑍀𑌯𑌾𑌤𑍍 𑌜𑌨𑌶𑍍𑌚 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋𑌽𑌪𑌿 𑌮𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍀𑌯𑌾𑌤𑍍 ॥
௧௦௦

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇 𑌬𑌾𑌲𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 𑌸𑌰𑍍𑌗𑌃 ॥

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃 𑌸𑌰𑍍𑌗𑌃 ।

𑌨𑌾𑌰𑌦𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌤𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑌾𑌕𑍍𑌯𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑌃 ।
𑌪𑍂𑌜𑌯𑌾𑌮𑌾𑌸 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌹𑌶𑌿𑌷𑍍𑌯𑍋 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌃 ॥ ௧
𑌯𑌥𑌾𑌵𑌤𑍍𑌪𑍂𑌜𑌿𑌤𑌸𑍍𑌤𑍇𑌨 𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌰𑍍𑌨𑌾𑌰𑌦𑌸𑍍𑌤𑌦𑌾 ।
𑌆𑌪𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑍈𑌵𑌾𑌭𑍍𑌯𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌤𑌃 𑌸 𑌜𑌗𑌾𑌮 𑌵𑌿𑌹𑌾𑌯𑌸𑌮𑍍 ॥ ௨
𑌸 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌂 𑌗𑌤𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍇𑌵𑌲𑍋𑌕𑌂 𑌮𑍁𑌨𑌿𑌸𑍍𑌤𑌦𑌾 ।
𑌜𑌗𑌾𑌮 𑌤𑌮𑌸𑌾𑌤𑍀𑌰𑌂 𑌜𑌾𑌹𑍍𑌨𑌵𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌦𑍂𑌰𑌤𑌃 ॥ ௩
𑌸 𑌤𑍁 𑌤𑍀𑌰𑌂 𑌸𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌤𑌮𑌸𑌾𑌯𑌾 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌃 ।
𑌶𑌿𑌷𑍍𑌯𑌮𑌾𑌹 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑌕𑌰𑍍𑌦𑌮𑌮𑍍 ॥ ௪

---

* 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 = 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌃 । 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌾𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 । "𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑍇" 𑌇𑌤𑌿 𑌲𑌕𑍍𑌷𑌣𑌕𑌾𑌰𑌾𑌃.

நகரங்களும் தேசங்களும் தநதாந்யங்களுடன் கூடி, (இருக்கப்போகின்றன ;) எல்லோரும் க்ருதயுகத்திற்போல் ஸந்தோஷமடைந்தவர்களாய் (இருக்கப்போகிறார்கள்.) ௯௪.

பெருங்கீர்த்தியுடைய ராகவனார், நூறு அச்வமேதயாகங்களாலும் அப்படியே பஹுஸுவர்ணயாகங்களையுஞ் செய்து ப்ராஹ்மணர்களுக்குப் பதினாயிரங்கோடி கோதாநஞ்செய்து, கணக்கிட முடியாத தநத்தைக்கொடுத்து ப்ரஹ்மலோகம் போகப்போகிறார். ௯௫.

ராகவர் இந்தலோகத்தில் ராஜவம்சங்களை நூறு பங்கதிகமாக ஸ்தாபிக்கப்போகின்றார் ; (ப்ராஹ்ம-க்ஷத்ரிய-வைச்ய-சூத்ரர்" என்னும்) நான்கு வர்ணங்களையும் தத்தந்தர்மத்தில் (இருக்கும்படி) கட்டளையிடப்போகின்றார். ௯௬.

ராமர், பதினோராயிரம் வர்ஷம் ராஜ்யபரிபாலநஞ்செய்து, ப்ரஹ்மலோகம் போகப்போகிறார். ௯௭.

பரிசுத்தமாகச்செய்வதும் பாபத்தைப் போக்குவதும் புண்யமும் வேதங்களோடு ஸமாநமும் ஆகிய இந்த ராமசரித்ரத்தைப் படிக்கிறவன் ஸகலபாபங்களினின்றும் விடப்படுகிறான். ௯௮.

வாழ்நாளை வளர்க்கும் "ராமாயணம்" என்னு மிவ்விதிஹாஸத்தைப் படிக்கிற புருஷன் புத்ர பௌத்ரர்களோடு கூடினவனும் கூட்டத்தோடு கூடினவனுமாய், சரீரத்தைவிட்ட பிறகு ஸ்வர்க்கத்திற் பூஜிக்கப்படுகிறான். ௯௯.

ஸ்ரீராமாயணமென்னு மித்திவ்ய ப்ரபந்தத்தை ப்ராஹ்மணன் படித்தால் வாக்கிற் சிறந்தவனாவான் ; (அதாவது சிறந்த பண்டிதனாவான்.) க்ஷத்ரியன் (படித்தால்)(சிறந்த) பூபதியாவான் ; வர்த்தகன் (படித்தால்) வ்யாபாரலாபம் பெறுவான் ; சூத்ரஜநமும் மேன்மையடையும். (௧௦௦)

முதல் ஸர்க்கம் முற்றிற்று.

இரண்டாவது ஸர்க்கம்.

வாக்ய (விஷய) த்திற் பண்டிதரும் தர்மாத்மாவுமாகிய (வால்மீகி) மஹாமுநிவர், நாரதருடையவவ்வாக்யத்தைக் கேட்டு, சிஷ்யர்களுடன் கூடிப் பூஜித்தார். ௧.

தேவர்ஷியாகிய வந்நாரதர், அப்பொழுதவ் வால்மீகியினிடத்திற் றக்க பூஜைபெற்று, (போய்வருகிறேனென்று) கேட்டு விடைபெற்றுக்கொண்டு ஆகாசத்தை நோக்கிச்சென்றார். ௨.

அந்நாரதர் தேவலோகத்திற்குப்போய் முஹூர்த்தமாகையில், அப்பொழுதவ்வால்மீகிமுநிவர், கங்கையின் ஸமீபத்தில் (இருக்கும்) தமஸாநதியின் கரைக்கு, (மாத்யாஹ்நிகஞ்செய்ய) ப்போனார். ௩.

அவ்வால்மீகி மஹாமுநிவர் தமஸாநதியின் கரைக்குப்போய், தீர்த்தஞ்சேறில்லாமலிருப்பதைக்கண்டு, பக்கத்தில் நிற்கும் சிஷ்யராகிய பரத்வாஜரைப் பார்த்து (மேல்வருமாறு) சொன்னார். ௪.

𑌅𑌕𑌰𑍍𑌦𑌮𑌮𑌿𑌦𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜 𑌨𑌿𑌶𑌾𑌮𑌯।
𑌰𑌮𑌣𑍀𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌾𑌮𑍍𑌬𑍁 𑌸𑌨𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌮𑌨𑍋 𑌯𑌥𑌾॥ ௫
𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌤𑌾𑌂 𑌕𑌲𑌶𑌸𑍍𑌤𑌾𑌤 𑌦𑍀𑌯𑌤𑌾𑌂 𑌵𑌲𑍍𑌕𑌲𑌂 𑌮𑌮।
𑌇𑌦𑌮𑍇𑌵𑌾𑌵𑌗𑌾𑌹𑌿𑌷𑍍𑌯𑍇 𑌤𑌮𑌸𑌾𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍॥ ௬
𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑍋 𑌵𑌾𑌲𑍍𑌮𑍀𑌕𑍇𑌨 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾।
𑌪𑍍𑌰𑌾𑌯𑌚𑍍𑌛𑌤 𑌮𑍁𑌨𑍇𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑌲𑍍𑌕𑌲𑌂 𑌨𑌿𑌯𑌤𑍋 𑌗𑍁𑌰𑍋𑌃॥ ௭
𑌸 𑌶𑌿𑌷𑍍𑌯𑌹𑌸𑍍𑌤𑌾𑌦𑌾𑌦𑌾𑌯 𑌵𑌲𑍍𑌕𑌲𑌂 𑌨𑌿𑌯𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃।
𑌵𑌿𑌚𑌚𑌾𑌰 𑌹 𑌪𑌶𑍍𑌯𑌂𑌸𑍍𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌤𑍋 𑌵𑌿𑌪𑍁𑌲𑌂 𑌵𑌨𑌮𑍍॥ ௮
𑌤𑌸𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌶𑍇 𑌤𑍁 𑌮𑌿𑌥𑍁𑌨𑌂 * 𑌚𑌰𑌨𑍍𑌤𑌮𑌨𑌪𑌾𑌯𑌿𑌨𑌮𑍍।
𑌦𑌦𑌰𑍍𑌶 𑌭𑌗𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚𑌯𑍋𑌶𑍍𑌚𑌾𑌰𑍁𑌨𑌿𑌃𑌸𑍍𑌵𑌨𑌮𑍍॥ ௯
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁 𑌮𑌿𑌥𑍁𑌨𑌾𑌦𑍇𑌕𑌂 𑌪𑍁𑌮𑌾𑌂𑌸𑌂 𑌪𑌾𑌪𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃।
𑌜𑌘𑌾𑌨 𑌵𑍈𑌰𑌨𑌿𑌲𑌯𑍋 𑌨𑌿𑌷𑌾𑌦𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑌶𑍍𑌯𑌤𑌃॥ ௧௦
𑌤𑌂 𑌶𑍋𑌣𑌿𑌤𑌪𑌰𑍀𑌤𑌾𑌙𑍍𑌗𑌂 𑌵𑍇𑌷𑍍𑌟𑌮𑌾𑌨𑌂 𑌮𑌹𑍀𑌤𑌲𑍇।
𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌤𑍁 𑌨𑌿𑌹𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌰𑍁𑌰𑌾𑌵 𑌕𑌰𑍁𑌣𑌾𑌂 𑌗𑌿𑌰𑌮𑍍॥
𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌪𑌤𑌿𑌨𑌾 𑌤𑍇𑌨 𑌦𑍍𑌵𑌿𑌜𑍇𑌨 𑌸𑌹𑌚𑌾𑌰𑌿𑌣𑌾।
𑌤𑌾𑌮𑍍𑌰𑌶𑍀𑌰𑍍𑌷𑍇𑌣 𑌮𑌤𑍍𑌤𑍇𑌨 𑌪𑌤𑍍𑌰𑌿𑌣𑌾 𑌸𑌹𑌿𑌤𑍇𑌨 𑌵𑍈॥ ௧௧
𑌤𑌥𑌾 𑌤𑍁 𑌤𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌨𑌿𑌷𑌾𑌦𑍇𑌨 𑌨𑌿𑌪𑌾𑌤𑌿𑌤𑌮𑍍।
𑌋𑌷𑍇𑌰𑍍𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌂 𑌸𑌮𑌪𑌦𑍍𑌯𑌤॥ ௧௨
𑌤𑌤𑌃 𑌕𑌰𑍁𑌣𑌵𑍇𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌯𑌮𑌿𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃।
𑌨𑌿𑌶𑌾𑌮𑍍𑌯 𑌰𑍁𑌦𑌤𑍀𑌂 𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚𑍀𑌮𑌿𑌦𑌂 𑌵𑌚𑌨𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥ ௧௩
† 𑌮𑌾 𑌨𑌿𑌷𑌾𑌦 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌤𑍍𑌵𑌮𑌗𑌮𑌃 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀𑌃 𑌸𑌮𑌾𑌃।
𑌯𑌤𑍍𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚𑌮𑌿𑌥𑍁𑌨𑌾𑌦𑍇𑌕𑌮𑌵𑌧𑍀𑌃 𑌕𑌾𑌮𑌮𑍋𑌹𑌿𑌤𑌮𑍍॥ ௧௪
𑌤𑌸𑍍𑌯𑍈𑌵𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌤𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌾 𑌬𑌭𑍂𑌵 𑌹𑍃𑌦𑌿 𑌵𑍀𑌕𑍍𑌷𑌤𑌃।
𑌶𑍋𑌕𑌾𑌰𑍍𑌤𑍇𑌨𑌾𑌸𑍍𑌯 𑌶𑌕𑍁𑌨𑍇𑌃 𑌕𑌿𑌮𑌿𑌦𑌂 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌂 𑌮𑌯𑌾॥ ௧௫

---

* 𑌚𑌰𑌨𑍍𑌤𑌮𑌪𑌾𑌯𑌿𑌨𑌮𑌿𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍.

† 𑌅𑌤𑍍𑌰 '𑌮𑌾' 𑌇𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑌾𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌾 [illegible] 𑌉𑌕𑍍𑌤𑌨𑌿𑌷𑍇𑌧𑍋 𑌨 𑌭𑌵𑌤𑌿.

ஓ பரத்வாஜரே! ஸத்புருஷர்களின் சித்தம்போற்சேறற்றுத்தெளிந்த நீருற்று அழகுபொருந்திய விதநீர்த்தத்தைப் பார்ப்பீராக. ௫.

ஐயா! என்னுடைய கமண்டலுவை (கீழே) வைத்துவிட்டு மரவுரியைத்தருவீர்; உத்தமமான விதமஸாநதியின் தீர்த்தத்திலிழிந்து ஸ்நாநஞ்செய்யப்போகின்றேன். ௬.

ஐம்புலன்களையுமடக்கின பரத்வாஜர், மஹாத்மாவான வால்மீகியிவ்வாறு சொல்கையில், குருவாகிய அவ்வால்மீகிமுநிவருக்கு மரவுரியைத்தந்தார். ௭.

ஜிதேந்த்ரியரான அவ்வால்மீகிமுநிவர், சிஷ்யருடைய கையிலிருந்து மரவுரியை வாங்கிக்கொண்டு, விசாலமானவவ்வநத்திற்கு நாற்புறத்திலும் (ஸ்நாநஞ்செய்ய, தக்க துறையைத் தேட) பார்த்துக்கொண்டு திரிந்தார். ௮.

அபாயமற்று, அழகான ஸ்வரமுடையதாகி, அதனருகிற்றிரிந்து கொண்டிருக்கும் க்ரௌஞ்சபக்ஷிகளின் சேர்க்கையை ஆங்கு (வால்மீகி) பகவான் கண்டார். ௯.

பொல்லாவெண்ணமுடையவனும் பகைக்கிருப்பிடமான (ஒரு) வேடன் அந்த க்ரௌஞ்சபக்ஷிகளின் சேர்க்கையில், புருஷனாகியவொன்றை அவ்வால்மீகிமுநிவர் பார்த்துக்கொண்டிருப்பதையும் லக்ஷ்யஞ்செய்யாமல் அடித்துவிட்டான். ௧௦.

சிறந்த இறகுகளையுடையதும் மதித்ததும் சிவந்த சிரஸ்ஸோடு கூடினதும் கூடித் திரிவதுமாகியிருந்த பர்த்தாவான வப்பக்ஷியைவிட்டுப்பிரிந்த பார்யையானது, (வேடனால்) அடிக்கப்பட்டு ரக்தம் (வெளியிற்புறப்பட்டு) சூழ்ந்த சரீரமுடையதாகி பூமியிற்புரளுமப்புருஷபக்ஷியைக் கண்டு, கேட்போர்க்கு ஐயோவென்று மனங்கலங்கும்படி அழுதது. ௧௨.

வேடனால் அடிக்கப்பட்ட வப்பக்ஷியைக்கண்டு, தர்மாத்மாவான அவ்வால்மீகி ருஷிக்கு அப்பொழுது தயையுண்டாயிற்று. ௧௩.

பிறகு ப்ராஹ்மணரான அவ்வால்மீகிமுநிவர், க்ரௌஞ்சபக்ஷி அழுவதைக் கண்டு கருணையுள்ளவராகையால், "இது அதர்மம்" என்று (எண்ணி) இவ்வாக்யத்தை வ்யக்தமாகச்சொன்னார். ௧௪.

ஓ வேடனே! க்ரௌஞ்சபக்ஷிகளிரண்டில், காமத்தால் மோஹங்கொண்டவொன்றை நீ அடித்ததனால் நெடுநாள் வாழமாட்டாய்.

(இந்த ச்லோகத்தில் மற்றுமோரர்த்தந் தோன்றியதாம்; அதாவது:—) ஹே ஸ்ரீநிவாஸ (=ஸீதாபதே!) துஷ்டனான ராவணனை தேவரீர் ஸம்ஹரித்ததனால் தேவரீருக்கு மங்களாசாஸநஞ் செய்கிறேன். (என்பது.) ௧௫.

(அப்பக்ஷியைக்) கண்டிவ்வாறு சொல்லுமவ் வால்மீகிமுநிவர், "இப்பக்ஷியைப்பற்றி துக்கத்தால் வருந்தி யானுரைத்ததென்" என்று நெஞ்சத்திற் சிந்தித்தார், ௧௬.

சிந்தயந் ஸ மஹாப்ராஜ்ஞஶ்சகார மதிமாந்மதிம்।
ஶிஷ்யம் சைவாப்ரவீத்வாக்யமிதம் ஸ முநிபுங்கவ:॥

பாதபத்தோக்ஷரஸமஸ்தந்த்ரீலயஸமந்வித:।
ஶோகார்த்தஸ்ய ப்ரவ்ருத்தோ மே ஶ்லோகோ பவது நாந்யதா॥

ஶிஷ்யஸ்து தஸ்ய ப்ருவதோ முநேர்வாக்யமநுத்தமம்।
ப்ரதிஜக்ராஹ ஸம்ஹ்ருஷ்டஸ்தஸ்ய துஷ்டோ(அ)பவத்குரு:॥ ௧௯.

ஸோ(அ)பிஷேகம் தத: க்ருத்வா தீர்த்தே தஸ்மிந்யதாவிதி।
தமேவ சிந்தயந்நர்த்தமுபாவர்த்தத வை முநி:॥ ௨௦.

பரத்வாஜஸ்தத: ஶிஷ்யோ விநீத: ஶ்ருதவாந்குரோ:।
கலஶம் பூர்ணமாதாய ப்ருஷ்டதோ(அ)நுஜகாம ஹ॥ ௨௧.

ஸ ப்ரவிஶ்யாஶ்ரமபதம் ஶிஷ்யேண ஸஹ தர்மவித்।
உபவிஷ்ட: கதாஶ்சாந்யாஶ்சகார த்யாநமாஸ்தித:॥ ௨௨.

ஆஜகாம ததோ ப்ரஹ்மா லோககர்த்தா ஸ்வயம் ப்ரபு:।
சதுர்முகோ மஹாதேஜா த்ரஷ்டும் தம் முநிபுங்கவம்॥ ௨௩.

வால்மீகிரத தம் த்ருஷ்ட்வா ஸஹஸோத்தாய வாக்யத:।
ப்ராஞ்ஜலி: ப்ரயதோ பூத்வா தஸ்தௌ பரமவிஸ்மித:॥ ௨௪.

பூஜயாமாஸ தம் தேவம் பாத்யார்க்யாஸநவந்தநை:।
ப்ரணம்ய விதிவச்சைநம் ப்ருஷ்ட்வா சைவ நிராமயம்। ௨௫.

அதோபவிஶ்ய பகவாநாஸநே பரமார்ச்சிதே।
வால்மீகயே ச ருஷயே ஸந்திதேஶாஸநம் தத:॥
ப்ரஹ்மணா ஸமநுஜ்ஞாத: ஸோ(அ)ப்யுபாவிஶதாஸநே। ௨௬,௭.

உபவிஷ்டே ததா தஸ்மிந்ஸாக்ஷால்லோகபிதாமஹே।
தத்கதேநைவ மநஸா வால்மீகிர்த்யாநமாஸ்தித:
பாபாத்மநா க்ருதம் கஷ்டம் வைரக்ரஹணபுத்திநா॥
யஸ்தாத்ருஶம் சாருரவம் க்ரௌஞ்சம் ஹந்யாதகாரணாத்। ௨௮,௯.

சிறந்தவறிவுபெற்று, விசேஷங்களையறிந்தவர்களிற் சிறந்த அவ் வால்மீகி மஹாமுநிவர் (இவ்வாறு) சிந்தித்துக்கொண்டு, சிஷ்யராகிய பரத்வாஜரையும் (பார்த்து), "(இப்பக்ஷிகளைக்கண்டு) சோகாக்ராந்தனாய் யான் சொன்னது, (நான்கு) பாதங்களுடையதும் (நான்கு பாதங்களிலும் ஒன்றுபோல்) ஸமாக்ஷரங்களுடையதும் வீணையில் வாத்யங்களோடு பாடக்கூடியதுமான (ஒரு) ச்லோகமாகவே இருக்கவேண்டும் மற்றப்படியில்லை" என்கிற இவ்வாக்யத்தைச் சொன்னார். கஅ.

(இவ்வாறு)சொல்லும் அவ்வால்மீகிமுநிவருடைய எல்லாவற்றிலுஞ்சிறந்த வாக்யத்தை, சிஷ்யரான பரத்வாஜர் (ஆம் இது ச்லோகந்தானென்று) வாங்கிக்கொள்கையில், குருவான வால்மீகிமுநிவர் அப் பரத்வாஜர் விஷயத்தில் ஸந்தோஷமடைந்தார். கக.

பிறகு அவ் வால்மீகிமுநிவர் (தமஸாநதியின்) தீர்த்தத்தில் சாஸ்த்ரப்படி ஸ்நாநஞ்செய்துவிட்டு, அந்த ("மாநிஷாத—காமமோஹிதம்" என்கிற ச்லோகத்தின்) அர்த்தத்தையே சிந்தித்துக்கொண்டு (ஆச்ரமத்திற்குத்) திரும்பிவந்தார். உ0.

பிறகு, சாஸ்த்ரங்களை நன்றாகக்கேட்ட சிஷ்யரான பரத்வாஜர், (வால்மீகி) முநிவருடைய பூர்ணகலசத்தையெடுத்துக்கொண்டு வணக்கத்துடன் பின்றொடர்ந்து போனார். உக.

தர்மங்களையறிந்த அவ் வால்மீகிமுநிவர், சிஷ்யராகிய பரத்வாஜரோடு கூடி, ஆச்ரமஸ்தாநம் புகுந்து உட்கார்ந்து த்யாநநிஷ்டராய் இதரமான (ஸத்) கதைகளையும் (பாராயணஞ்) செய்தார். உஉ.

பிறகு, மஹா தேஜஸ்ஸைப்பெற்று, ஸ்வயம் ப்ரபுவாகி, லோக (ஸ்ருஷ்டி) கர்த்தாவான சதுர்முகப்ரஹ்மாவானவர் அவ் வால்மீகி மஹாமுநிவரைக் காண வந்தார். உங.

பிறகு வால்மீகி (முநிவர்) அந்த ப்ரஹ்மாவைக் கண்டு மிகவுமாச்சர்யங்கொண்டு துண்ணனவெழுந்து, (அதிகமாகப் பேசாமல்) வாக்கடக்கத்துடன் கைகளைக் கூப்பிக்கொண்டு வணங்கி நின்றார். உச.

அந்த (ப்ரஹ்ம)தேவரை ஸேவித்து, பாத்ய - அர்க்ய - ஆஸந - வந்தநங்களால் பூஜித்தார்; இந்த ப்ரஹ்மாவை க்ஷேமஸமாசாரத்தையுங் கேட்டுப் பூஜித்தார். உரு.

பிறகு, பூஜ்யரான ப்ரஹ்மா (வால்மீகியால்) நன்றாகப் பூஜிக்கப்பட்ட ஆஸநத்திலுட்கார்ந்து, பிறகு வால்மீகி மஹர்ஷிக்கு ஆஸநங்கொடுத்தார்; அவ் வால்மீகியும் ப்ரஹ்மாவின் அநுஜ்ஞையினால் ஆஸநத்திலுட்கார்ந்தார். உசு௵.

லோகங்களுக்கு பிதாமஹராகிய அந்த ப்ரஹ்மா நேரில் உட்கார்ந்துகொண்டிருக்க, அப்பொழுது வால்மீகி (முநிவர்), "பாபாத்மாவாகி த்வேஷங்கொள்ளும் புத்தியுடைய அந்த வேடன் அழகான சப்தமுடைய அப்படிப்பட்ட க்ரௌஞ்சபக்ஷியை நிஷ்காரணமாக அடித்தது க்ரூரமான கார்யம்" என்று (மாநிஷாத) என்னும் அந்த ச்லோகத்தைப்பற்றியே நெஞ்சத்திற் சிந்தித்துக்கொண்டிருந்தார். உஅ௵.

A ச

ஶோசந்நேவ முஹு: க்ரௌஞ்ச்யா: ஶ்லோகமிமம் புந:॥
ஜகாவந்தர்கதமநா பூத்வா ஶோகபராயண:। ௨௯.
தமுவாச ததோ ப்ரஹ்மா ப்ரஹஸந்முநிபுங்கவம்।
ஶ்லோக ஏவ த்வயா பத்தோ நாத்ர கார்யா விசாரணா।
மச்சந்தாதேவ தே ப்ரஹ்மந் ப்ரவ்ருத்தேயம் ஸரஸ்வதீ।
ராமஸ்ய சரிதம் க்ருத்ஸ்நம் குரு த்வம்ருஷிஸத்தம।
தர்மாத்மநோ குணவதோ லோகே ராமஸ்ய தீமத:।
வ்ருத்தம் கதய வீரஸ்ய யதா தே நாரதாச்ச்ருதம்।
ரஹஸ்யம் ச ப்ரகாஶம் ச யத்வ்ருத்தம் தஸ்ய தீமத:।
ராமஸ்ய ஸஹ ஸௌமித்ரே ராக்ஷஸாநாம் ச ஸர்வஶ:।
வைதேஹ்யாஶ்சாபி யத்வ்ருத்தம் ப்ரகாஶம் யதி வா ரஹ:।
தச்சாப்யவிதிதம் ஸர்வம் விதிதம் தே பவிஷ்யதி।
ந தே வாகந்ருதா காவ்யே காசிதத்ர பவிஷ்யதி।
குரு ராமகதாம் புண்யாம் ஶ்லோகபத்தாம் மநோரமாம்।
யாவத்ஸ்தாஸ்யந்தி கிரய: ஸரிதஶ்ச மஹீதலே।
தாவத்ராமாயணகதா லோகேஷு ப்ரசரிஷ்யதி।
யாவத்ராமாயணகதா த்வத்க்ருதா ப்ரசரிஷ்யதி।
தாவதூர்த்வமதஶ்ச த்வம் மல்லோகேஷு நிவத்ஸ்யஸி। ௩௭.
இத்யுக்த்வா பகவாந்ப்ரஹ்மா தத்ரைவாந்தரதீயத।
தத: ஸஶிஷ்யோ பகவாந்முநிர்விஸ்மயமாயயௌ। ௩௮.
தஸ்ய ஶிஷ்யாஸ்தத: ஸர்வே ஜகு: ஶ்லோகமிமம் புந:।
முஹுர்முஹு: ப்ரீயமாணா: ப்ராஹுஶ்ச ப்ருஶவிஸ்மிதா:। ௩௯.
ஸமாக்ஷரைஶ்சதுர்பிர்ய: பாதைர்கீதோ மஹர்ஷிணா।
ஸோऽநுவ்யாஹரணாத்பூய: ஶோக: ஶ்லோகத்வமாகத:। ௪௦.
தஸ்ய புத்திரியம் ஜாதா வால்மீகேர்பாவிதாத்மந:।
க்ருத்ஸ்நம் ராமாயணம் காவ்யமீத்ருஶை: கரவாண்யஹம்। ௪௧.

வருத்தங்குடிகொண்ட (அவ்) வால்மீகிமுநிவர் (அந்த) பெண் க்ரௌஞ்ச பக்ஷியைப்பற்றி அடிக்கடி வருந்திக்கொண்டே இந்த ச்லோகத்திற்றனே நெஞ்சைச்செலுத்தி மீளவும் ("மாநிஷாத" என்னும்) இந்த ச்லோகத்தை (ப்ரஹ்மாவின்) அருகிற் பாடினர். உகூ.

பிறகு ப்ரஹ்மா சிரித்துக்கொண்டு அவ்வால்மீகிமஹாமுநிவனைப்பார்த்து, "ருஷிகளெல்லோரிலுஞ் சிறந்த ப்ராஹ்மணரான ஓ வால்மீகி முநிவரே! நீர் (க்ரௌஞ்சபக்ஷியைக்கண்டு) சொன்னது ச்லோகந்தான்; இவ்விஷயத்தில் விசாரஞ் செய்யத்தகாது; ("மாநிஷாத" என்னும்) இவ்வாக்கு, நமது ஸங்கல்பத்தாற்றன் உமக்குண்டாயிற்று; (ஆதலால்) ராமசரித்ரத்தை யெல்லாம் நீர் (ஒரு திவ்ய ப்ரபந்தமாகச்) செய்யவேண்டும்; தர்மஸ்வபாவமுடையவரும் சிறந்த குணங்களையுடையவரும் சிறந்த புத்தியுடையவரும் தைர்யசாலியுமாகிய ராமருடைய (திவ்ய) சரித்ரத்தை நீர் நாரதரிடத்தில் கேட்டபடி லோகத்தில் சொல்லும்; மிகுந்த புத்தியுடைய அந்த ராமருடையவும், லக்ஷ்மணருடையவும், ராக்ஷஸர்களுடையவும், விதேஹராஜபுத்ரியாகிய ஸீதையினுடையவும், ரஹஸ்யம் ப்ரகாசம் என்றிருவகைப்பட்ட கதை யெல்லாவற்றையும் நீர் அறியப்போகிறீர்; இந்த காவ்யத்தில் உம்முடைய வாக்கு ஒன்றேனும் பொய்யாக மாட்டாது; (லோகங்களை) பரிசுத்தமாகச் செய்வதும், (நவரஸங்களும் பொருந்தி இருப்பதால் கேட்கக்கேட்க) மனதையுருக்குவதுமான ராமகதையை ச்லோகங்களால் செய்யக்கடவீர்; பூதலத்தில் பர்வதங்களும் நதிகளுமிருக்கிற வரையில் ராமாயணகதை லோகங்களில் ப்ரஸித்தமாயிருக்கப்போகிறது; நீர் செய்த ராமாயணகதை ப்ரஸித்தமா யிருக்கிறவரையில் எமது அதோ லோகங்களிலும் ஊர்த்வ லோகங்களிலும் வாஸஞ்செய்யப்போகிறீர்" என்று சொன்னர். ௩எ௨.

பகவானகிய ப்ரஹ்மா இவ்வாறு சொல்லிவிட்டு அங்கேயே அந்தர்த்தானஞ் செய்தார்; பிறகு (வால்மீகி)பகவான், சிஷ்யர்களுடன்கூடி ஆச்சர்யமடைந்தார். ௩அ௨.

பிறகு அவ்வால்மீகியின் சிஷ்யர்களெல்லோரும் ("மாநிஷாத" என்னும்) இந்த ச்லோகத்தை மறுபடியும் பாடினர்கள்; அடிக்கடி ஆச்சர்யமடைந்து களித்து, இதென்ன அத்புதமென்றுஞ் சொல்லிக்கொண்டார்கள். ௩கூ௨.

(ஒன்றிலுள்ளதுபோல் எல்லாவற்றிலும்) ஸமமான அக்ஷரங்களையுடைய நான்குபாதங்களிருக்குமாறு (வால்மீகி) மஹர்ஷியினல் கானஞ்செய்யப்பட்ட ச்லோகத்தை (அவரது சிஷ்யர்கள்) மறுபடியுஞ் சொன்னதனல் அது ச்லோகமென்று பெயர்பெற்றது. ச0௨.

(பரம-) ஆத்மத்யானஞ்செய்யும் வால்மீகிக்கு, "ராமாயணகாவ்யம் முற்றும் இவ்விதமான ச்லோகங்களினல் யான் செய்யவேண்டும்" என்கிற புத்தியுண்டாயிற்று. சக௨.

உதாரவ்ருத்தார்த்தபதைர்மநோரமை:
ததாஸ்ய ராமஸ்ய சகார கீர்த்திமாந்।
ஸமாக்ஷரை: ஶ்லோகஶதைர்யஶஸ்விநோ
யஶஸ்கரம் காவ்யமுதாரதீர்முநி:। ௪௨.
ததுபகதஸமாஸஸந்தியோகம்
* ஸமமதுரோபநதார்த்தவாக்யபத்தம்।
ரகுவரசரிதம் முநிப்ரணீதம்
தஶஶிரஸஶ்ச வதம் நிஶாமயத்வம்। ௪௩.

இதி ஶ்ரீராமாயணே பாலகாண்டே த்விதீய: ஸர்க்க:.

அத த்ருதீய: ஸர்க்க:.

ஶ்ருத்வா வஸ்து ஸமக்ரம் தத்தர்மாத்மா தர்மஸம்ஹிதம்।
வ்யக்தமந்வேஷதே பூயோ யத்வ்ருத்தம் தஸ்ய தீமத:। ௧.
உபஸ்ப்ருஶ்யோதகம் ஸம்யங்முநி: ஸ்தித்வா க்ருதாஞ்ஜலி:।
ப்ராசீநாக்ரேஷு தர்பேஷு தர்மேணாந்வேஷதே கதிம்॥ ௨.
ராமலக்ஷ்மணஸீதாபீ ராஜ்ஞா தஶரதேந ச।
ஸபார்யேண ஸராஷ்ட்ரேண யத்ப்ராப்தம் தத்ர தத்த்வத:॥
ஹஸிதம் பாஷிதம் சைவ கதிர்யா யச்ச சேஷ்டிதம்।
தத்ஸர்வம் தர்மவீர்யேண யதாவத்ஸம்ப்ரபஶ்யதி॥ ௩.
ஸ்த்ரீத்ருதீயேந ச ததா யத்ப்ராப்தம் சரதா வநே।
ஸத்யஸந்தேந ராமேண தத்ஸர்வம் சாந்வவேக்ஷிதம்। ௫.
தத: பஶ்யதி தர்மாத்மா தத்ஸர்வம் யோகமாஸ்தித:।
† பூர்வம் யத்தத்ர நிர்வ்ருத்தம் பாணாவாமலகம் யதா। ௬.

---

* வாக்யவ்யஸ்தாநாம் பந்தாநாமவிஷமத்வம்। தது க்தம் தண்டிநா, ஸமம் பந்தேஷ்வவிஷமமிதி.
† "புரா" இதி பாடாந்தரம்.

மஹா புத்தியுடையவரும் மஹா கீர்த்தியுடையவருமான (வால்மீகி) முனிவர் பொங்கும் புகழ்பெற்ற ராமருக்கும் கீர்த்தியை விளக்கும் (ராமாயண மென்னும்) காவ்யத்தை, கம்பீரமான வ்ருத்தங்களும் அர்த்தங்களும் பதங்களும் பொருந்தி, (நான்கு பாதங்களிலும்) ஸமமான அக்ஷரங்களையுடையவைகளாகி, (கேட்போர்களின்) நெஞ்சத்தைக் களிக்கச்செய்பவைகளாகிய அநேக ச்லோகங்களினால் செய்தார். சஉ௭.

சாஸ்த்ரஸம்மதமாயுள்ள ஸமாஸங்கள் ஸந்திகள் பதவ்யுத்பத்திகள் என்னுமிவைகள் பொருந்தினவைகளும், தட்டுத்தடங்கலன்றி ஸுகமாகப் படிக்கக்கூடினவைகளாய் மிகுந்த ரஸமுடையவைகளாய் எளிதில் அறியக்கூடினவைகளான அர்த்தங்களையுடையவைகளாயுள்ள வாக்யங்கள் பொருந்தினவைகளுமாகி யிருக்கும்படி, ரகுக்களிற்சிறந்த (ஸ்ரீ) ராமருடைய (திவ்ய) சரித்ரத்தைப்பற்றியும் ராவணனுடைய (துஷ்ட) சரித்ரத்தைப்பற்றியும் (வால்மீகி) முனிவர் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தத்தை (அதாவது ஸ்ரீராமாயணத்தை) க்கேளுங்கள். சஉ௮.

இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

மூன்றாவது ஸர்க்கம்.

தர்மஸ்வபாவமுடைய வால்மீகிமுனிவர், தர்மத்தோடுகூடின, ஸங்க்ஷேபமாக நாரதர் சொன்ன அக்கதையை யெல்லாங் கேட்டு, சிறந்த புத்தியுடைய அந்த ராகவனுடைய (திவ்ய) சரித்ரத்தை மறுபடியும் வ்யக்தமாக ஆலோசனை செய்யத்தொடங்கினர். க.

(வால்மீகி) முனிவர், ஆசமநஞ்செய்துவிட்டு, கிழக்கு நுனியாகத் தர்ப்பங்களைச்சேர்த்து அதன்மீது நன்றாக நின்றுகொண்டு (=உட்கார்ந்துகொண்டு.) தர்மத்தினால் (=ப்ரஹ்மாவின்அநுக்ரஹத்தினால்.) கதியை (=ஸ்ரீராமர் முதலானோர்களின் சரித்ரத்தை.) ஆலோசனை செய்யத்தொடங்கினர். உ.

அப்பொழுது, ராமர் லக்ஷ்மணர் ஸீதை தசரத (மஹா) ராஜா அவரது பார்யைகள் தேசங்களிலுள்ளோர் ஆகிய இவர்கள் சிரித்தது பேசினது நடந்தது செய்தது முதலியவெல்லாவற்றையும் தர்மமென்னும் வலிவுகொண்டு, (அதாவது ப்ரஹ்மாவின் வரத்தால்) நடந்தபடி உண்மையாகக் கண்டார். ந.

ஸத்யஸந்தராகிய ராமர், லக்ஷ்மணரோடும் ஸீதையோடுங் கூடி வநத்திலிருக்கும்பொழுது அநுபவித்ததெல்லாவற்றையும் அப்பொழுது (வால்மீகி முனிவர்) கண்டார். ௪.

பிறகு தர்மாத்மாவான வால்மீகிமுனிவர் யோகநிஷ்டராகி, அந்த ராமர்முதலியவர்களைப்பற்றி முன் நடந்ததெல்லாவற்றையுங் கையிலங்கு நெல்லிக்கனியெனக் கண்டார். ரு.

𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑍋 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌸 𑌮𑌹𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 ।
𑌅𑌭𑌿𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌚𑌰𑌿𑌤𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌃 ।

𑌕𑌾𑌮𑌾𑌰𑍍𑌥𑌗𑍁𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌗𑍁𑌣𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌮𑌿𑌵 𑌰𑌤𑍍𑌨𑌾𑌢𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌮𑌨𑍋𑌹𑌰𑌮𑍍 ॥ ௮.

𑌸 𑌯𑌥𑌾 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌨𑌾𑌰𑌦𑍇𑌨 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌣𑌾 ।
𑌰𑌘𑍁𑌵𑌂𑌶𑌸𑍍𑌯 𑌚𑌰𑌿𑌤𑌂 𑌚𑌕𑌾𑌰 𑌭𑌗𑌵𑌾𑌨𑍃𑌷𑌿𑌃 । ௯.

𑌜𑌨𑍍𑌮 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌸𑍁𑌮𑌹𑌦𑍍𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑌤𑌾𑌮𑍍 ।
𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌾𑌂 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌂 𑌸𑍌𑌮𑍍𑌯𑌤𑌾𑌂 𑌸𑌤𑍍𑌯𑌶𑍀𑌲𑌤𑌾𑌮𑍍 ॥ ௧௦.

𑌨𑌾𑌨𑌾𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑌥𑌾𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌸𑌹𑌾𑌯𑌨𑍇 ।
𑌜𑌾𑌨𑌕𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌵𑌿𑌵𑌾𑌹𑌂 𑌚 𑌧𑌨𑍁𑌷𑌶𑍍𑌚 𑌵𑌿𑌭𑍇𑌦𑌨𑌮𑍍 ॥ ௧௧.

𑌰𑌾𑌮𑌰𑌾𑌮𑌵𑌿𑌵𑌾𑌦𑌂 𑌚 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌦𑌾𑌶𑌰𑌥𑍇𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌤𑌥𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑌂 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌕𑍈𑌕𑍇𑌯𑍍𑌯𑌾 𑌦𑍁𑌷𑍍𑌟𑌭𑌾𑌵𑌤𑌾𑌮𑍍 । ௧௨.

𑌵𑌿𑌘𑌾𑌤𑌂 𑌚𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑌸𑍍𑌯 𑌰𑌾𑌘𑌵𑌸𑍍𑌯 𑌵𑌿𑌵𑌾𑌸𑌨𑌮𑍍 ।
𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌶𑍋𑌕𑌵𑌿𑌲𑌾𑌪𑌂 𑌚 𑌪𑌰𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌚𑌾𑌶𑍍𑌰𑌯𑌮𑍍 । ௧௩.

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌷𑌾𑌦𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌨𑌮𑍍 ।
𑌨𑌿𑌷𑌾𑌦𑌾𑌧𑌿𑌪𑌸𑌂𑌵𑌾𑌦𑌂 𑌸𑍂𑌤𑍋𑌪𑌾𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌤𑌥𑌾 ॥ ௧௪.

𑌗𑌙𑍍𑌗𑌾𑌯𑌾𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌸𑌨𑍍𑌤𑌾𑌰𑌂 𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ।
𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌾𑌭𑍍𑌯𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑍂𑌟𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥ ௧௫.

𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌵𑍇𑌶𑌂 𑌚 𑌭𑌰𑌤𑌾𑌗𑌮𑌨𑌂 𑌤𑌥𑌾 ।
𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌨𑌂 𑌚 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌪𑌿𑌤𑍁𑌶𑍍𑌚 𑌸𑌲𑌿𑌲𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑍍 । ௧௬.

𑌪𑌾𑌦𑍁𑌕𑌾𑌗𑍍𑌰𑍍𑌯𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑌂 𑌚 𑌨𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌰𑌾𑌮𑌨𑌿𑌵𑌾𑌸𑌨𑌮𑍍 ।
𑌦𑌣𑍍𑌡𑌕𑌾𑌰𑌣𑍍𑌯𑌗𑌮𑌨𑌂 𑌵𑌿𑌰𑌾𑌧𑌸𑍍𑌯 𑌵𑌧𑌂 𑌤𑌥𑌾 ॥ ௧௭.

𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌶𑌰𑌭𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌸𑍁𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑍇𑌨 𑌸𑌮𑌾𑌗𑌮𑌮𑍍 ।
𑌅𑌨𑌸𑍂𑌯𑌾𑌸𑌮𑌾𑌸𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌅𑌙𑍍𑌗𑌰𑌾𑌗𑌸𑍍𑌯 𑌚𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 । ௧௮.

𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌜𑌟𑌾𑌯𑍋𑌰𑌭𑌿𑌸𑌙𑍍𑌗𑌮𑌮𑍍 ।
𑌪𑌞𑍍𑌚𑌵𑌟𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌗𑌮𑌨𑌂 𑌶𑍂𑌰𑍍𑌪𑌣𑌖𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥ ௧௯.

(ஸ்ரீராகவனுடைய த்யானத்தால்) மிக வொளிபெற்ற அவ் வால்மீகிமுனிவர், தர்மமென்னும் வலிவுகொண்டு (அதாவது ப்ரஹ்மாவின் அனுக்ரஹத்தால்) அந்த ராமசரித்ரத்தையெல்லாம் உள்ளபடி அறிந்து, (சிலவிடங்களில்) அர்த்தம் காமம் என்னும் புருஷார்த்தங்களை ப்ரதிபாதிப்பதும், தர்மம் மோக்ஷம் என்னும் புருஷார்த்தங்களை விஸ்தரமாக ப்ரதிபாதிப்பதும், ஸமுத்ரம்போல் ரத்னங்களால் நிறைந்ததும், அனைவர்க்கும் செவிக்கினிப்பானதும் (அல்லது ஸகல வேதங்களும் நிறைந்திருப்பதால் நெஞ்சத்தைக் கவரச்செய்வதும்) ஆகிய, எல்லோரையுங் களிக்கச்செய்யும் (ஸ்ரீ) ராமருடைய (திவ்ய) சரித்ரத்தை (ப்ரபந்தமாக) ச் செய்யத்தொடங்கினர். அ.

ருஷியாகிய அவ்வால்மீகிபகவான், ரகுகுலத்திலவதரித்த ஸ்ரீராமருடைய சரித்ரத்தை நாரதமஹர்ஷி சொன்னபடி (ஒரு ப்ரபந்தமாகச்) செய்தார். ௯.

(இப் ப்ரபந்தத்திற் சொல்லப்படுங் கதைகளெவையென்ருல் அவைகளைச் சுருக்கமாகவருளிச்செய்கிருர்:—)

மிகவும் சிறந்ததான ஸ்ரீராமருடைய அவதாரம், (அவரது) வீர்யம், (அவர்) எல்லோர்க்கும் அநுகூலராயிருந்தது, லோகத்திற்கு இஷ்டராயிருந்தது, (அவரது) பொறுமை, (அவர்) எல்லோர்க்கும் சந்த்ரன்போல் ஆநந்தத்தை விளைத்தது, ஸத்யசீலராயிருந்தது, ௧௦.

(அவர்) விச்வாமித்ரரோடு கூடியிருக்கையில் (நடந்த) மற்றுமுள்ள (வி) சித்ரகதைகள், ஜநகராஜன் திருமகளாகிய ஸீதையை விவாஹஞ்செய்துகொண்டது, (ருத்ர) தநுஸ்ஸைப் பிளந்தது, ௧௧.

(ஸ்ரீ) ராமருக்கும் (பரசு) ராமருக்கும் நடந்தவிவாதம், தசரதபுத்ரரான ஸ்ரீராமருடைய (கல்யாண) குணங்கள், ராமருடைய அபிஷேக (யத்ந)ம், கைகேயியின் பொல்லாவொழுக்கம், ௧௨.

அபிஷேகத்தின் விக்நம், ராகவனுக்கு வநவாஸஞ்செய்வித்தது, (தசரத மஹா) ராஜா (ராம) சோகத்தால் அழுதது, பரலோகஞ்சென்றது, ௧௩.

ஜநங்கள் வருந்தினது, (ஸ்ரீராமர்)ஜநங்களைவிட்டது, வேடர்களுக்குராஜாவான குஹரோடு ஸம்பாஷணஞ்செய்தது, ஸாரதியாகிய ஸுமந்த்ரர் திரும்பிவிட்டது, ௧௪.

கங்கையைத் தாண்டினது, பரத்வாஜரைக் கண்டது, பரத்வாஜருடைய அநுஜ்ஞையினுல் சித்ரகூடத்தைக்கண்டது (= அடைந்தது.) ௧௫.

(அங்கு) பர்ணசாலைக் கட்டிக்கொண்டிருந்தது, பரதர்வந்தது, ராமரைப் ப்ரார்த்தித்தது, பிதாவுக்குத் தர்ப்பணஞ்செய்தது, ௧௬.

(பரதர்,) (ராம) பாதுகைகளுக்கு முதலில் அபிஷேகஞ்செய்தது, நந்திக்ராமத்திற் குடியிருந்தது, (ராமர்) தண்டகாரண்யஞ் சென்றது, விராதவதஞ் செய்தது, ௧௭.

சரபங்கரைக்கண்டது, ஸுதீக்ஷ்ணரோடு ஸந்தித்தது (அதாவது கண்டு பேசினது.) (ஸீதை) அநஸூயையோடு கூடவுட்கார்ந்தது, (ஸீதைக்கு அவள்) சந்தநங்கொடுத்தது, ௧௮.

அகஸ்த்யரைக் கண்டது, ஜடாயுஸ்ஸோடு சேர்ந்தது, பஞ்சவடிக்குப்போனது, சூர்ப்பணகியைக் கண்டது, ௧௯.

ஶூர்ப்பணக்யாஶ்ச ஸம்வாதம் விரூபகரணம் ததா ।
வதம் கரத்ரிஶிரஸோருத்தானம் ராவணஸ்ய ச ॥ ௨௦.
மாரீசஸ்ய வதம் சைவ வைதேஹ்யா ஹரணம் ததா ।
ராகவஸ்ய விலாபம் ச க்ருத்ரராஜநிபர்ஹணம் ॥ ௨௧.
கபந்ததர்ஶனம் சைவ பம்பாயாஶ்சாபி தர்ஶனம் ।
ஶபர்யா தர்ஶனம் சைவ ஹனூமத்தர்ஶனம் ததா ॥ ௨௨.
ருஶ்யமூகஸ்ய கமனம் ஸுக்ரீவேண ஸமாகமம் ।
ப்ரத்யயோத்பாதனம் ஸக்யம் வாலிஸுக்ரீவவிக்ரஹம் ॥ ௨௩.
வாலிப்ரமதனம் சைவ ஸுக்ரீவப்ரதிபாதனம் ।
தாராவிலாபம் ஸமயம் வர்ஷராத்ரநிவாஸனம் ॥ ௨௪.
கோபம் ராகவஸிம்ஹஸ்ய பலானாமுபஸங்க்ரஹம் ।
திஶ: ப்ரஸ்தாபனம் சைவ ப்ருதிவ்யாஶ்ச நிவேதனம் ॥ ௨௫.
அங்குலீயகதானம் ச ருக்ஷஸ்ய பிலதர்ஶனம் ।
ப்ராயோபவேஶனம் சாபி ஸம்பாதேஶ்சாபி தர்ஶனம் ॥ ௨௬.
பர்வதாரோஹணம் சாபி ஸாகரஸ்ய ச லங்கனம் ।
ஸமுத்ரவசனாச்சைவ மைநாகஸ்ய ச தர்ஶனம் ॥ ௨௭.
ஸிம்ஹிகாயாஶ்ச நிதனம் லங்காமலயதர்ஶனம் ।
ராத்ரௌ லங்காப்ரவேஶம் ச ஏகஸ்யாபி விசிந்தனம் ॥ ௨௮.
தர்ஶனம் ராவணஸ்யாபி புஷ்பகஸ்ய ச தர்ஶனம் ।
ஆபானபூமிகமனமவரோதஸ்ய தர்ஶனம் ॥ ௨௯.
அஶோகவனிகாயானம் ஸீதாயாஶ்சாபி தர்ஶனம் ।
அபிஜ்ஞானப்ரதானம் ச ராவணஸ்ய ச தர்ஶனம் ॥ ௩௦.
ராக்ஷஸீதர்ஜனம் சைவ த்ரிஜடாஸ்வப்னதர்ஶனம் ।
மணிப்ரதானம் ஸீதாயா வ்ருக்ஷபங்கம் ததைவ ச ॥ ௩௧.
ராக்ஷஸீவித்ரவம் சைவ கிங்கராணாம் நிபர்ஹணம் ।
க்ரஹணம் வாயுஸூனோஶ்ச லங்காதாஹாபிகர்ஜனம் ॥ ௩௨.
ப்ரதிப்லவனமேவாத மதூனாம் ஹரணம் ததா ।
ராகவாஶ்வாஸனம் சாபி மணிநிர்யாதனம் ததா ॥ ௩௩.

சூர்ப்பணகியோடு ஸம்வாதஞ் செய்தது, (அவளை) விரூபமுடையவளாகச் செய்தது, கரன் த்ரிசிரஸ் என்றுமிவர்களை வதஞ்செய்தது, ராவணன் (கோபங்கொண்டு) கிளம்பிவிட்டது, ௨௦.

மாரீசனை வதஞ்செய்தது, வைதேஹியை (=ஸீதையை) அபஹரித்தது, ராகவனுர் அழுதது, (ராவணன்) ஜடாயுஸ்ஸைக் கொன்றது, ௨௧.

கபந்தனைக் கண்டது, பம்பாநதியைக் கண்டது, சபரியைக்கண்டது, ஹநுமானைக் கண்டது, ௨௨.

ருச்யமூக பர்வதம் போனது, ஸுக்ரீவரோடு சேர்ந்தது, (அவருக்கு) நம்பிக்கையுண்டாக்கினது, ஸ்நேஹஞ்செய்துகொண்டது, வாலியோடு ஸுக்ரீவர் யுத்தஞ் செய்தது, ௨௩.

வாலியை வதஞ்செய்தது, ஸுக்ரீவருக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்தது, தாரை அழுதது, (ஸீதையைத்தேடுவதைப்பற்றி ஸுக்ரீவரோடு ராமர்) ஸங்கேதஞ்செய்தது, வர்ஷகால ராத்ரிகளில் (ராமர் ருச்யமூகபர்வதத்தில்) வாஸஞ் செய்து கொண்டிருந்தது, ௨௪.

ரகுகுலத்திற் பிறந்தவர்களிற் சிறந்தவரான ஸ்ரீராமர் (ஸுக்ரீவரிடத்தில்) கோபங்கொண்டது, (ஸீதையைத்தேடவேண்டி ஸுக்ரீவர்) படைகளைக் கும்பற்கூட்டினது, (அப்படைகளை) திக்குக்களிற்புறப்படச்செய்தது, (ஸுக்ரீவர், வாநரர்களுக்கு (அந்தந்த) பூமி (நிலை) யைத் தெரிவித்தது, ௨௫.

(ராகவனுர் ஹநுமாரிடத்தில்) திருவாழியைக் கொடுத்தது, (வாநரர்கள்) ஸ்வயம்ப்ரபையின் குஹையுட்புகுந்தது, ப்ராயோபவேசஞ்செய்தது, ஸம்பாதியைக் கண்டது, ௨௬.

(ஹநுமார் மஹேந்த்ர) பர்வதத்தின்மீதேறினது, ஸமுத்ரத்தைத் தாண்டினது, ஸமுத்ர ராஜன் வாக்யத்தால் மைநாக பர்வதத்தைக் கண்டது, ௨௭.

ஸிம்ஹிகையைக் கொன்றது, லங்கையின் (பக்கத்திலிருக்கும்) மலய பர்வதத்தைக் கண்டது, ராத்ரியில் லங்கையில் ப்ரவேசித்தது, (அங்கு) ஒருவராய்ச் சிந்தித்தது, ௨௮.

ராவணனைக் கண்டது, புஷ்பக விமாநத்தைக் கண்டது, (ஸீதையைத் தேடவேண்டி) மத்யசாலைக்குப் போனது, அந்தஃபுரத்தைக்கண்டது, ௨௯.

அசோகவநத்திற்குப்போனது, ஸீதையைக் கண்டது, அடையாளத்தைக் கொடுத்தது, ராவணனைக் கண்டது, ௩௦.

ராக்ஷஸிகள் மிரட்டினது, த்ரிஜடை ஸ்வப்நங்கண்டது, ஸீதை (ஹநுமாரிடத்தில் சூடா) மணியைக் கொடுத்தது, (ஹநுமார்) வ்ருக்ஷங்களை முறித்தது, ௩௧.

ராக்ஷஸிகள் ஓடினது, கிங்கரர்களைக் கொன்றது, ஹநுமார் கட்டுண்டது, (அவர்) லங்கையைக் கொளுத்தி ஸிம்ஹநாதம் பண்ணினது, ௩௨.

மறுபடியும் (ஸமுத்ரத்தை) தாண்டினது, மதுவநத்தை அழித்தது, ராகவனுருக்குத் தேறுதற் சொன்னது, (அவரிடத்தில்) சூடாமணியைக் கொடுத்தது, ௩௩.

ஸங்கமம் ச ஸமுத்ரேண நளஸேதோஶ்ச பந்தநம் ।
ப்ரதாரம் ச ஸமுத்ரஸ்ய ராத்ரௌ லங்காவரோதநம் ॥ ௩௪.

விபீஷணேந ஸம்ஸர்க்கம் வதோபாயநிவேதநம் ।
கும்பகர்ணஸ்ய நிதநம் மேகநாதநிபர்ஹணம் ॥ ௩௫.

ராவணஸ்ய விநாஶம் ச ஸீதாவாப்திமரே: புரே ।
விபீஷணாபிஷேகம் ச புஷ்பகஸ்ய ச தர்ஶநம் ॥ ௩௬.

அயோத்யாயாஶ்ச கமநம் பரத்வாஜஸமாகமம் ।
ராமாபிஷேகாப்யுதயம் ஸர்வஸைந்யவிஸர்ஜநம் ॥ ௩௭.

[ஸ்வராஷ்ட்ரரஞ்ஜநம் சைவ வைதேஹ்யாஶ்ச விஸர்ஜநம்]
அநாகதம் ச யத்கிஞ்சித்ராமஸ்ய வஸுதாதலே ।
தச்சகாரோத்தரே காவ்யே வால்மீகிர்பகவாந்ருஷி: ॥ ௩௮.

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே த்ருதீய: ஸர்க்க:.

அத சதுர்த்த: ஸர்க்க:.

ப்ராப்தராஜ்யஸ்ய ராமஸ்ய வால்மீகிர்பகவாந்ருஷி: ।
சகார சரிதம் க்ருத்ஸ்நம் *விசித்ரபதமாத்மவாந் ॥ ௧.

சதுர்விம்ஶத்ஸஹஸ்ராணி ஶ்லோகாநாமுக்தவாந்ருஷி: ।
ததா ஸர்க்கஶதாந் பஞ்ச ஷட்காண்டாநி ததோத்தரம் ॥ ௨.

க்ருத்வாபி தந்மஹாப்ராஜ்ஞ: ஸபவிஷ்யம் ஸஹோத்தரம் ।
சிந்தயாமாஸ கோ ந்வேதத் ப்ரயுஞ்ஜீயாதிதி ப்ரபு: ॥ ௩.

தஸ்ய சிந்தயமாநஸ்ய மஹர்ஷேர்பாவிதாத்மந: ।
அக்ருஹ்ணீதாம் தத: பாதௌ முநிவேஷௌ குஶீலவௌ ॥ ௪.

---

* "விசித்ரபதமர்த்தவத்" இதி பாடாந்தரம்.

(ராகவனூர்) ஸமுத்ரராஜனுடனே ஸந்தித்தது, நலன்மூலமாக ஸேதுவைக் கட்டுவித்தது, (அதுவழியாக) ஸமுத்ரத்தைத்தாண்டினது, ராத்ரியில் லங்கையை முற்றுகையிட்டது, ௩௪.

விபீஷணனோடு சேர்ந்தது, (ராவணனுடைய) வதஞ்செய்ய உபாயத்தை (அவர் மூலமாக)த் தெரிந்துகொண்டது, கும்பகர்ணனை வதஞ்செய்தது, இந்த்ரஜித்தை வதஞ் செய்தது, ௩௫.

ராவணனை விநாசம்பண்ணினது, சத்ருவின் பட்டணத்தில் (அதாவது லங்கையில்) ஸீதையை (ராகவனூர்) அடைந்தது, வீபீஷணருக்கு(ப்பட்ட-) அபிஷேகஞ்செய்தது, புஷ்பக விமானத்தைக் கண்டது, ௩௬.

அயோத்யைக்கு(த்திரும்பி)ப்போனது, பரதரோடுகூடினது, ராமருக்கு (ப்பட்ட-) அபிஷேக-உத்ஸவம் நடந்தது, (பட்டாபிஷேகத்திற்குவந்த) ஸகல ஸைந்யங்களையும் (அவரவர்கள் இஷ்டப்படி போய்வரலாம் என்று) விட்டு விட்டது, ௩௭.

[ராமர் தமது ராஜ்யத்தை நன்றாய்ப் பரிபாலநஞ்செய்தது, விதேஹராஜன் திருமகளாகிய ஸீதையை (அவர்) விட்டுவிட்டது,] என்று மிவைகளாகிய ஸ்ரீராமசரித்ரத்தை வால்மீகிமுநிவர் அருளிச் செய்தார். (என்று.)

பூஜ்யராகிய வால்மீகிருஷியானவர் பூமியில் இனி நடக்கப்போகிற ராம சரித்ரத்தை உத்தரகாண்டத்தில் (அருளிச்)செய்தார். ௩௮.

மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

நான்காவது ஸர்க்கம்.

ருஷியாகிய வால்மீகிபகவான், ராமர் ராஜ்யபரிபாலநம் பண்ணிக்கொண்டிருக்கையில், அத்யத்புதமான பதங்களையுடையதும் நிறைந்த அர்த்தங்களையுடையதுமான (ஸ்ரீராம) சரித்ரத்தையெல்லாம் (ஒரு திவ்யப்ரபந்தமாக அருளிச்) செய்தார். ௧.

(வால்மீகி) ருஷியானவர், (இதில்) இருபத்திநாலாயிரம் ச்லோகங்களையும் ஐந்நூறு ஸர்க்கங்களையும் ஆறு காண்டங்களையும் (ஏழாவதான) உத்தர காண்டத்தையுஞ் சொன்னூர். ௨.

விசேஷங்களை யறிந்தவர்களிற் சிறந்தவராய் வல்லவராயுள்ள வால்மீகி முநிவர் அதை, (=ஸ்ரீராமாயணமென்னுந் திவ்யப்ரபந்தத்தை.) ராமாபிஷேகத்திற்குப்பின் வரப்போகிற கதைகளோடும் ஸ்ரீராமர் அச்வமேதத்திற்குப் பின் வரப்போகிற கதைகளோடுங்கூட செய்துவிட்டு, இதை யார் வெளியிடுவார்கள் என்று சிந்தித்தார். ௩.

(பரம-) ஆத்ம த்யாநஞ்செய்யும் அவ்வால்மீகி மஹர்ஷி (இவ்வாறு) சிந்தித்துக்கொண்டிருக்கையில், முநிவேஷந்தரித்த குசலவர்கள் (இதை அடியோங்களுக்கு அருளிச்செய்யவேண்டுமென்று அவரது) பாதங்களைப் பிடித்தார்கள் (அதாவது தெண்டனிட்டார்கள்). ௪.

குசீலவௌ து தர்மஜ்ஞௌ ராஜபுத்ரௌ யசஸ்விநௌ।
ப்ராதரௌ ஸ்வரஸம்பந்நௌ ததர்சாச்ரமவாஸிநௌ। ௫.
ஸ து மேதாவிநௌ த்ருஷ்ட்வா வேதேஷு பரிநிஷ்டிதௌ।
வேதோபப்ரும்ஹணார்தாய தாவக்ராஹயத ப்ரபு:। ௬.
காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாச்சரிதம் மஹத்।
பௌலஸ்த்யவதமித்யேவ சகார சரிதவ்ரத:। ௭.
*பாட்யே கேயே ச மதுரம் ப்ரமாணைஸ்த்ரிபிரந்விதம்।
†ஜாதிபிஸ்ஸப்தபிர்யுக்தம் தந்த்ரீலயஸமந்விதம்।
ரஸை: ச்ருங்காரகாருண்யஹாஸ்யவீரபயாநகை:।
ரௌத்ராதிபிச்ச ஸம்யுக்தம் காவ்யமேதததாயதாம்। ௯.
தௌ து காந்தர்வதத்த்வஜ்ஞௌ ஸ்தாநமூர்ச்சநகோவிதௌ।
ப்ராதரௌ ஸ்வரஸம்பந்நௌ கந்தர்வாவிவ ரூபிணௌ।
ரூபலக்ஷணஸம்பந்நௌ மதுரஸ்வரபாஷிணௌ।
பிம்பாதிவோத்திதௌ பிம்பௌ ராமதேஹாத்ததாபரௌ। ௧௧.
தௌ ராஜபுத்ரௌ கார்த்ஸ்ந்யேந தர்ம்யமாக்யாநமுத்தமம்।
வாசோவிதேயம் தத்ஸர்வம் க்ருத்வா காவ்யமநிந்திதௌ।
ருஷீணாம் ச த்விஜாதீநாம் ஸாதூநாம் ச ஸமாகமே।
யதோபதேசம் தத்த்வஜ்ஞௌ ஜகதுஸ்தௌ ஸமாஹிதௌ।
மஹாத்மாநௌ மஹாபாகௌ ஸர்வலக்ஷணலக்ஷிதௌ। ௧௩.
தௌ கதாசித்ஸமேதாநாம் ருஷீணாம் பாவிதாத்மநாம்।
ஆஸீநாநாம் ஸமீபஸ்தாவிதம் காவ்யமகாயதாம்। ௧௪.
தச்ச்ருத்வா முநய: ஸர்வே பாஷ்பபர்யாகுலேக்ஷணா:।
ஸாது ஸாத்விதி தாவூசு: பரம் விஸ்மயமாகதா:। ௧௫.

---

*பாட்யம் [illegible] ஸ்வரவிசேஷோச்சாரண விசேஷ: । ததுக்தம் । “ஷட்ஜாதிஸ்வரஸம்யுக்தம் [illegible] ” இதி.

† [illegible]

தர்மங்களை யறிந்தவர்களாகி, ராஜபுத்ரர்களாகி, பெருங்கீர்த்தியுடைய வர்களாகி, நல்ல சாரீரமுடையவர்களாகி, (சமது) ஆச்ரமத்தில் வஸிக்கும் ப்ராதாக்களாகிய குசலவர்களைக்கண்டார். ௫.

ஸமர்த்தரான வால்மீகிமுனிவர், கேட்ட விஷயங்களை மறவாமல் தரிப்ப தில் விசேஷபுத்தியுடையவர்களும் வேதங்களில் நல்ல தேர்ச்சியுடையவர்களு மான அந்த குசலவர்களை, வேதார்த்தங்களைவெளியிடவேண்டி(சிஷ்யர்களாக) க்ரஹித்தார். ௬.

ஸீதையின் சரித்ரத்தையெல்லாம் ப்ரதிபாதிக்கும் ராமாயணமென்னும் மஹாகாவ்யத்தை ராவணவதகாவ்யமென்றே செய்தார். (என்றால் "இத்திவ்ய ப்ரபந்தத்திற்கு ராவணவதகாவ்யமென்று பெயர்மாத்ரம் அமைக்கப்பட்டது; இது விசேஷமாய்ப் ப்ரதிபாதிக்கும் விஷயமோ ஸீதையின்ஸமஸ்த திவ்யசரித் த்ரத்தைப்பற்றினது" என்று தாத்பர்யம்.) ௭.

படிப்பதற்கும் பாடுவதற்கும் இனியதான இக்காவ்யத்தை, த்ருத-மத்ய-விலம்பிதங்களென்னும் காலங்களோடு கூடினதும், (ஸ-ரி-க-ம-ப-த-நி என் னும்) ஸப்தஸ்வரங்களோடு கூடினதும், வீணை தாளம் என்னும் இவைகளோடு கூடினதும், ச்ருங்கார-காருண்ய-ஹாஸ்ய-வீர-பயாநக-ரௌத்ராதிகளான ரஸங்களோடு கூடினதுமாகி யிருக்குமாறு (குசலவர்கள்) பாடினார்கள். ௯.

ப்ராதாக்களாகிய அந்தகுசலவர்களோ ஸங்கீதசாஸ்த்ரத்தின் தத்த்வங்களை யுணர்ந்தவர்கள்; வீணைமுதலான வாத்யங்கள், மந்த்ர-மத்ய-தாரங்களென் னும் ஸ்வரங்களின் உத்பத்திஸ்த்தாநம் ஆகிய இவைகளையறிந்தவர்கள்; (அல் லது ஷட்ஜம் முதலான ஸகல ஸ்வரங்களும் நிறைந்திருக்கும்படியான ஸ்த்தா நங்களை யறிவதில் பண்டிதர்கள்;) நல்ல சாரீரமுடையவர்கள்; கந்தர்வர்போல் மிகுந்த அழகுள்ளவர்கள்; நாடகலக்ஷணங்களை நன்றாக அறிந்தவர்கள்; மதுர மான ஸ்வரத்தோடு பேசும் ஸ்வபாவமுடையவர்கள்; ராமருடைய தேஹமென் னும் பிம்பத்தினின்று எடுத்த சிறந்த ப்ரதிபிம்பங்களைப் போன்றவர்கள். கக.

கொண்டாடத்தக்கவர்களும், தத்த்வங்களையுணர்ந்தவர்களும், மஹாத்மாக் களும், மஹாபாக்யமுள்ளவர்களும், ஸகல லக்ஷணங்களோடுங்கூடினவர்களும், ராஜபுத்ரர்களுமான வத்தகைய வக்குசலவர்கள், தர்மங்களோடு கூடினதான அவ்வுத்தமகாவ்யத்தையெல்லாம்(வால்மீகிமுனிவர்) உபதேசித்தபடி வாய்ப்பாட மாகச் செய்துகொண்டு, ருஷிகளுடையவும், ப்ராஹ்மணர்களுடையவும், ஸாதுக்களுடையவும் ஸபையில் ஊக்கத்துடன் பாடினார்கள். கஉ.

ஒருக்கால் (பரம-) ஆத்மத்யாநஞ்செய்து உட்கார்ந்துகொண்டிருக்கும் ருஷிகளின் ஸமீபத்தில் நின்றுகொண்டு அக்குசலவர்கள் இக்காவ்யத்தைப்பாடி னார்கள். கசஉ.

அதைக்கேட்டு முனிவரெல்லோரும் கண்ணில் (ஆநந்த) பாஷ்பந்ததும்பி பரமாச்சர்யமடைந்து, "நல்லது நல்லது (பலேபலே)" என்று அந்த குசலவர் களைச் சொல்லினார்கள். கடுஉ.

[illegible] ௧௭

[illegible] ௧௮

[illegible] ௧௯

[illegible] ௨௦

[illegible] ௨௩

[illegible] ௨௪

[illegible] ௨௭

புகழத்தக்கவர்களான (அந்த) குசலவர்கள் (அவ்வாறு) கானஞ்செய்கையில் அம்முனிவரெல்லோரும் மனங்களித்து, "பாட்டின் இனிமையோ அத்புதமாயிருக்கின்றது; ச்லோகங்களின் இனிமையோ அதைவிட அத்புதமாயிருக்கின்றது; இது பஹுகாலத்திற்குமுன் நடந்திருந்தும் ப்ரத்யக்ஷம்போல் தோற்றுகிறது" என்று கொண்டாடினார்கள். கஎ.

அக்குசலவரிருவரும் ஒன்றுசேர்ந்து, நல்ல அபிநயம்பிடித்து, ஸ்வரங்களெல்லாம் நிறைந்திருக்கும்வண்ணம் இனியராகத்துடன் பாடினார்கள். கஅ.

பெருந்தவம்புரிந்த மஹாத்மாக்களான ருஷிகளினால் இவ்வாறு புகழப்பெற்ற வத்தகைய வக்குசலவர்கள் மிக்க நல்ல ராகத்துடன் பாடினார்கள். ககூ.

(அதைக்கேட்டு) ஒரு முனிவர்களித்து அவர்களுக்குக் கலசத்தைக் கொடுத்தார்; பெரும்புகழ்ப்பெற்ற ஒரு முனிவர் காட்சிகொண்டு அவர்களுக்கு மரவுரியை யீந்தார்;

[மற்றொருவர் க்ருஷ்ணாஜிநத்தைத் தந்தார்; வேறொரு மஹாமுனிவர் முஞ்சியைக் கொடுத்தார்; ஒருவர் கமண்டலுவைக் கொடுத்தார்; மற்றொருவர் யஜ்ஞோபவீதத்தைக் கொடுத்தார்; மற்றொருவர் அத்திப்பலகையினாற் செய்யப்பட்ட (தமது) ஆஸநத்தைக் கொடுத்தார்; மற்றொருவர் ஜபமாலையைக் கொடுத்தார்; மற்றுமுள்ள மஹர்ஷிகளும் அந்த ஸமயத்தில் ஆசிர்வாதஞ் செய்தார்கள்.] உ0.

(வால்மீகி)முனிவரால் செய்யப்பட்டதும், கவிகளுக்குப்பெரிய ஆதாரமும், புகழும்படி பாடி க்ரமமாக முடிக்கப்பட்டதும், ஆயுளைத்தருவதும், புஷ்டியைத்தருவதும், எல்லோர்க்குங் கேட்க இனிப்பானதும், (அல்லது எல்லா வேதங்களும் நிறைந்திருப்பதால் உள்ளத்தை யுருகச்செய்வதும்,) ஆச்சர்யகரமுமான இப்படிப்பட்ட இந்த இதிஹாஸத்தை, ஸகல கீதங்களிலும் பண்டிதர்களாய்க் கொண்டாடத்தக்கவர்களான வக்குசலவர்கள் வீதிகள் ராஜமார்க்கங்கள் எங்கும் பாடிக்கொண்டிருக்கையில், பரதருக்கண்ணாவாகிய ஸ்ரீராமர் அந்த யாகசாலையிலிருந்து கண்டார். உக.

சத்ருக்களைக்கொல்லும் அந்த ராமரானவர், பூஜிக்கத்தக்கவர்களும் (ஒருவர்க்கொருவர்) ப்ராதாக்களுமான (அந்த) குசலவர்களைத் தமது மாளிகைக்கு அழைத்துவந்து பூஜித்தார். உச.

சத்ருக்களைத் தபிக்கச்செய்யும் அந்த ராமப்ரபுவானவர் ஸ்வர்ணமயமான திவ்ய ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருந்தவரும், மந்த்ரிகளாலும் ப்ராதாக்களாலும் சூழப்பட்டவருமாகி, மிகுந்த அழகுடைய அக்குசலவரிருவரையும் பார்த்து, "தேவர்களது வொளியை நிகர்த்த வொளியுற்ற இக்குசலவர்கள் பாடும் இவ்விதிஹாஸத்தைக் கேளுங்கள்" என்று சத்ருக்நரையும் பரதரையுஞ் சொல்லி, நன்றாகப்பாடும் அந்தகுசலவர்களை(ப்பாடும்படி) நியமித்தார். உஎ.

[illegible]
[illegible] உ௮.
[illegible]
[illegible] உ௯.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௩௰.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௩௧.

[illegible]

[illegible]

[illegible]
[illegible] க.
[illegible]
[illegible] உ.
[illegible]
[illegible] ௩.
[illegible]
[illegible] ௪.
[illegible]
[illegible] ௫.

※ [illegible]

அவர்களும், மதுரமாயும், ராகத்தோடு கூடினதாயும், புகழ்தக்க நீர்க்கமான ஆலாபநம் பொருந்தினதாயும், வீணாலயங்களோடு கூடினதாயும், மிகவும் ஸ்பஷ்டமாக விளங்கும் அர்த்தங்கள் பொருந்தினதாயு மிருக்குமாறு பாடினார்கள். ௨௮.

அந்த பாட்டானது ஜநங்களின் ஸபையில் எல்லோருடைய உடலையும் உள்ளத்தையும் ஹ்ருதயத்தையும் களிக்கச்செய்து, செவிக்கு மிக்க ஸுகமாக விளங்கிற்று. ௨௯.

"இக்குசலவர்கள் முநிவேஷந் தரித்தவர்களாயிருந்தும் ராஜலக்ஷணங்களோடு கூடியிருக்கிறார்கள்; பெருந்தவமுடையவர்கள்; (இவர்கள் பாடும்) அந்த பாட்டானது எனக்கும் நன்மைதான்; மஹாநுபாவ விஷயமான (இந்த) சரித்ரத்தைக்கேளுங்கள்" (என்று ஸபையிலுள்ளவர்களைப் பார்த்து ஸ்ரீராமர் சொன்னார்). ௩௰.

பிறகு அக்குசலவர்கள் ராமர் சொல்லினால் நியமிக்கப்பட்டவர்களாகி, (ஸங்கீத சாஸ்த்ரத்தின்) வழியின் எற்பாடு பொருந்துமாறு பாடினார்கள்; (ஸிம்ஹாஸநத்திலிருந்த) அந்த ராமரும் (அந்தகாநஸுகத்தை எல்லோரோடும் சேர்ந்து) அநுபவிக்கத் திருவுள்ளங்கொண்டு மெள்ள ஸபைக்கு வந்துவிட்டார். ௩௧.

நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஐந்தாவது ஸர்க்கம்.

வெற்றி கொண்டு விளங்கும் எவ்வரசர்கட்கு (மநு) ப்ரஜாபதிமுதற்கொண்டு, எல்லோர்க்கும் முன்னதாய் இப்பார் முழுதும் (தங்களதாய்) இருந்ததோ. ௧.

எவர் (திக்விஜயஞ்செய்யப்) போகையில் அறுபதினாயிரம் பிள்ளைகள் நாற்புறத்திலுஞ் சூழ்ந்துகொண்டனரோ, (ஸாகரமென்று தமது பெயரினால் விளங்கும்) ஸமுத்ரமானது எவரால் வெட்டுவிக்கப்பட்டதோ அப்படிப்பட்ட ஸகரசக்ரவர்த்தி எவ்வரசர்களின் நடுவில் ஜநித்தனரோ, ௨.

மஹாத்மாக்களான அப்படிப்பட்ட ராஜாக்களின் வம்சத்தில் அவதரித்த ஸ்ரீராமர் விஷயத்தைப்பற்றினது, ராமாயணமென்று ப்ரஸித்தமாய் விளங்குமிச்சிறந்த இதிஹாஸம். ௩.

தர்மம் காமம் அர்த்தம் என்னும் புருஷார்த்தங்களோடுகூடிய வத்தகைய விவ்விதிஹாஸத்தையெல்லாம் ஒன்றுகூடவிடாமல் முதலிலிருந்து இருக்கும்படி செய்யப்போகிறேன்; (அதாவது வெளியிடப்போகிறேன்.) பொறுமையின்றி (எல்லோரும்) கேட்கவேண்டும். ௪.

ஜநங்கள் களித்து நிறைந்து, தநதாந்யங்கள் நிரம்பியதாயுள்ள கோஸலமென்னும் (ஒரு) பெரிய தேசம் ஸரயூநதிதீரத்தில் இருக்கின்றது. ௫.

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible] ௮.

[illegible]
[illegible] ௯.

[illegible]
[illegible] ௧௦.

[illegible]
[illegible] ௧௧.

[illegible]
[illegible] ௧௨.

[illegible]
[illegible] ௧௩.

[illegible]
[illegible] ௧௪.

[illegible]
[illegible] ௧௫.

[illegible]
[illegible] ௧௬.

[illegible]
[illegible] ௧௭.

அத்தேசத்தில், லோகப்ரஸித்தமாய், மாநவர்களுக்குப் ப்ரபுவாயிருந்த மநு
வினால் மனதினால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதாய், பன்னிரண்டுயோஜனை நீளமுள்ள
தாய், மூன்றுயோஜனை அகலமுள்ளதாய், மிகுந்த செல்வமுடையதாய், ராஜா
இருப்பதற்கு ப்ரதாநபட்டணமாய், அழகாகப் பிரிக்கப்பட்டு விசாலமாயுள்ள
வழிகளையுடையதாய், அழகாகப் பிரிக்கப்பட்ட விசாலமான ராஜமார்க்கங்
களால் ஒளிபெற்றதாய், நித்யமும் ஜலந்தெளித்து புஷ்பங்கள்நிறைந்து அழகிய
தாயுள்ள அயோத்யையென்னும் நகரம் இருந்தது. ௮.

அந் நகரத்தில், தேசங்களைச் செழிக்கச்செய்வோர்களில் தலைவராயுள்ள
(அதாவது சக்ரவர்த்தியாயுள்ள) தசரதரென்னும் அரசர், தேவேந்த்ரன் ஸ்வர்க்
கத்தில் (வாஸஞ்செய்வது)போல் வாஸஞ்செய்துகொண்டிருந்தார். ௯.

சிறந்த கதவுகளையுந் தோரணங்களையுமுடையதாய், அழகாகப் பிரிக்கப்
பட்ட நெடுங்கடைத்தெருக்களை யுடையதாய், சிறந்தவைகளான எல்லா யந்த்ர
ங்களையும் ஆயுதங்களையுமுடையதாய், எல்லாசில்பிகளோடுங் கூடினதாய், ௧௰.

ஸூதர் மாகதர் என்னுங் கட்டியஞ்சொல்வோர்களால்நிறைந்ததாய், செல்
வம்நிறைந்ததாய், (அல்லது ஸ்ரீமஹாலக்ஷ்மிவஸிக்குமிடமாய்) ஒப்பற்ற வொளி
பெற்றதாய், (கோட்டைகளில்) மிக்கவுயரமாகக்கட்டப்பட்ட மேல்மெத்தை
களின்மீது பறக்குங்கொடிகளை யுடையதாய், அநேக ஆயிரம்பீரங்கிகளால்
நிறைந்ததாய், ௧௧.

ஸ்த்ரீகளுக்கு நர்த்தநங் கற்பிக்கும் நட்டுவர்களின் கூட்டங்களோடு கூடி
னதாய், உத்யாநவநங்கள் மாந்தோட்டங்கள் என்னுமிவைகளோடுகூடினதாய்,
மிக்க பெரியதாய், சுற்றிலும் ப்ராகாரம் போடப்பட்டதாய், ௧௨.

விசாலமும் ஆழமுமான அகழிகளையுடையதாய், இதரர்களால் வருந்தியும்
ஆக்ரமிக்கக் கூடாததாய், குதிரைகளாலும் யானைகளாலும் கோக்களாலும்
ஒட்டகங்களாலும் கழுதைகளாலும் நிறைந்ததாய், ௧௩.

கப்பங்கொடுத்து ஸந்திபண்ணிக்கொண்டு ராஜ்யத்தை மீட்டுக்கொள்வத
ற்காக வந்திருக்கும் அரசர்களின் கூட்டங்களாற் சூழப்பெற்றதாய், (வ்யாபா
ரத்திற்காக) நாநாதேசங்களினின்று வந்து குடியிருக்கும் வர்த்தகர்களால்
விளங்குவதாய், ௧௪.

ரத்நங்களாலிழைக்கப்பட்ட ராஜக்ருஹங்களாலும் (அல்லது தேவாலயங்
களாலும்) (ராஜாக்கள் விளையாடுவதற்காக யேற்படுத்தின சிறிய) மலைகளாலும்
ப்ரகாசிப்பதாய், இந்த்ரனுடைய அமராவதிபட்டணத்தைப்போல் மெத்தை
களின்மீது குவிந்துசெல்லுங் கூரைகளிட்டமைக்கப்பட்டிருக்குங் க்ருஹங்க
ளால் நிறைந்ததாய், ௧௫.

நாநாவிதமாய், தங்கப்பூசுபூசப்பெற்றதாய், உத்தமஸ்த்ரீகளின் கூட்டங்க
ளோடு கூடினதாய், ஸகல ரத்நங்களாலும் நிறைந்ததாய், விமாநம்போன்ற
க்ருஹங்களால் அழகியதாய், ௧௬.

வீடுகள் நெருங்கினதாய், விகாரமான முடுக்குத்தெருக்களில்லாததாய்,
ஸமமானபூமியில் நிர்மிக்கப்பட்டதாய், சம்பா அரிசிகள் நிரம்பினதாய், கன்னல்
கொம்பின் ரஸத்தை நிகர்த்த தீர்த்தங்களையுடையதாய். ௧௭.

துந்துபீபிர்ம்ருதங்கைஶ்ச வீணாபி: பணவைஸ்ததா।
நாதிதாம் ப்ருஶமத்யர்த்தம் ப்ருதிவ்யாம் தாமநுத்தமாம்॥
விமாநமிவ ஸித்தாநாம் தபஸாதிகதம் திவி।
ஸுநிவேஶிதவேஶ்மாந்தாம் நரோத்தமஸமாவ்ருதாம்॥ ௧௮.
யே ச பாணைர்ந வித்யந்தி விவிக்தமபராபரம்।
ஶப்தவேத்யம் ச விததம் லகுஹஸ்தா விஶாரதா:।
ஸிம்ஹவ்யாக்ரவராஹாணாம் மத்தாநாம் நததாம் வநே।
ஹந்தாரோ நிஶிதை: ஶஸ்த்ரைர்பலாத்பாஹுபலைரபி।
தாத்ருஶாநாம் ஸஹஸ்ரைஸ்தாமபிபூர்ணாம் *மஹாரதை:।
புரீமாவாஸயாமாஸ ராஜா தஶரதஸ்ததா।

தாமக்நிமத்பிர்குணவத்பிராவ்ருதாம்
த்விஜோத்தமைர்வேதஷடங்கபாரகை:।
ஸஹஸ்ரதை: ஸத்யரதைர்மஹாத்மபிர்
மஹர்ஷிகல்பைர்ருஷிபிஶ்ச கேவலை:। ௨௩.

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே பஞ்சம: ஸர்க்க:.

அத ஷஷ்ட: ஸர்க்க:.

தஸ்யாம் புர்யாமயோத்யாயாம் வேதவித்ஸர்வஸங்க்ரஹ:।
தீர்க்கதர்ஶீ மஹாதேஜா: பௌரஜாநபதப்ரிய:।
இக்ஷ்வாகூணாம் †அதிரதோ யஜ்வா தர்மபரோ வஶீ।
மஹர்ஷிகல்போ ராஜர்ஷிஸ்த்ரிஷு லோகேஷு விஶ்ருத:।
பலவாந்நிஹதாமித்ரோ மித்ரவாந்விஜிதேந்த்ரிய:।
தநைஶ்ச ஸஞ்சயைஶ்சாந்யை: ஶக்ரவைஶ்ரவணோபம:।
யதா மநுர்மஹாதேஜா லோகஸ்ய பரிரக்ஷிதா।
ததா தஶரதோ ராஜா வஸஞ்ஜகதபாலயத்। ௪.

---

* மஹாரதா: = "ஆத்மாநம் ஸாரதிம் சாஶ்வாந்ரக்ஷந் யுத்யேத யோ நர:, ஸ மஹாரதஸம்ஜ்ஞ: ஸ்யாத்" இத்யுக்தலக்ஷணயுக்தா:, வீரா:.

† அதிரத: = மஹாரதேப்யோऽதிக: ஸஹஸ்ரமிதயோதா ரதீ நர:.

பேரி-ம்ருதங்க-வீணு-பணவவாத்யங்களால் கண கணவென முழங்கப்பெற்றதாய், பூமியில் எல்லா நகரங்களுக்கும் மிகவுஞ் சிறந்ததாய், ஸ்வர்க்கத்தில் தவம்புரிந்து பெற்ற ஸித்தர்களது விமானம்போல் அழகாய்க்கட்டப்பட்ட வீடுகளையுடையதாய், உத்தமபுருஷர்களால் சூழப்பட்டதாய் விளங்கும் அவ்வயோத்யாபுரியில் "தசரதரென்றும் அரசர்வாஸஞ்செய்துகொண்டிருந்தார்" (என்று ஒன்பதாவது ஸ்லோகத்தோடு சேர்த்து படிக்கவும்.) ௧௨.

அஸ்த்ரவித்யைகளைக் கற்ற வல்லவர்களாகிய எவ்வரசர்களானவர்கள் ஸஹாயமில்லாத ஜநத்தையும் முன்னோர் பின்னோரில்லாத ஜாத்தையும் மறைவிலிருக்குஞ் ஜநத்தையும் ஓடுகிற ஜநத்தையும் பாணங்களால் அடிக்கமாட்டார்களோ; எவ்வரசர்கள், வநத்தில் மதித்துக்கூச்சலிட்டுக்கொண்டு திரியும் ஸிம்ஹம் புலி பன்றி என்னுமிவைகளை தீக்ஷணமான ஆயுதங்களைக்கொண்டும் படைகளைக் கொண்டும் (தமது) புஜபலத்தைக் கொண்டும் அடிக்குந்தன்மையுடையவர்களோ, போர்தனிற்றமக்கும் தம்மவர்க்கும் யாதொரு தீங்கும் வாராதுகாத்து வெற்றிபெற்ற வத்தகைய பலவரசர்களாலெங்கும்நிறைந்ததும், ஆஹிதாக்நிகளாய்க் குணவான்களாய் வேதங்களினுடையவும் ஷடங்கங்களினுடையவும் கரைகண்டவர்களாய் பஹுதாநஞ்செய்பவர்களாய் ஸத்யத்தில் விருப்பங்கொண்டவர்களாய் மஹாத்மாக்களாய் மஹர்ஷிகளுக்கொப்பானவர்களாயுள்ள (க்ருஹஸ்தர்களான) ப்ராஹ்மணோத்தமர்களாலும் கேவலருஷிகளாலுஞ் சூழப்பெற்றதுமான அவ்வயோத்யாபுரியில் தசரதரென்னும் அரசர் வாஸஞ் செய்துகொண்டிருந்தார். ௨௩.

ஐந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஆருவது ஸர்க்கம்.

வேதங்களையறிந்தவரும், ஸகல ஸாமக்ரிகளுமுடையவரும், தீர்க்காலோசனையுள்ளவரும், மிகுந்தபராக்ரமமுடையவரும், நாடுநகரங்களிலுள்ளவர்களெல்லோர்க்கும் இஷ்டமானவரும்; இக்ஷ்வாகுவம்சத்து அரசர்களுக்குள் * அதிரதரும், சாஸ்த்ரப்படி யாகஞ்செய்தவரும், தர்மங்களில் அதிக பற்றுள்ளவரும், எல்லோரையும் ஸ்வாதீநமாகச் செய்தவரும், மஹர்ஷிகளுக்கொப்பானவரும், ராஜர்ஷியும், மூவுலகங்களிலும் ப்ரஸித்தமானவரும், அளவற்ற படைகளையுடையவரும், பகைவரை வென்றவரும், சிறந்த நண்பர்களையுடையவரும், ஐம்புலங்களையும் அடக்கினவரும், தநங்களாலும் இதரஸாமக்ரிகளாலும் இந்த்ரனையும் குபேரனையும் நிகர்த்தவருமான தசரதவரசர், உலகத்தை நன்ருய்க்காத்து மிகவொளிபெற்ற மநுப்ரஜாபதிபோல், அவ்வயோத்யாபுரியில் வாஸஞ் செய்துகொண்டு ஜநத்தை ரக்ஷித்துவந்தார். ௫.

---

* "அதிரதர்" என்ருல், தமக்கும் தமது படைகளுக்கும் யாதொரு தீங்கும் வராது போர்புரியும் பலவீரரோடு ஒருவராய்ப் போர்புரிந்து வெற்றிபெறுமென்றவர்.

[illegible]
[illegible] ௫.

[illegible]
[illegible] ௬.

[illegible]
[illegible] ௭.

[illegible]
[illegible] ௮.

[illegible]
[illegible] ௯.

[illegible]
[illegible] ௧௦.

[illegible]
[illegible] ௧௧.

[illegible]
[illegible] ௧௨.

[illegible]
[illegible] ௧௩.

[illegible]
[illegible] ௧௪.

[illegible]
[illegible] ௧௫.

---

* [illegible]

ஸத்யஸந்தராய், (தர்ம - அர்த்த - காமங்களென்னும்) முப்புருஷார்த்தங்களை அநுஷ்டிக்கும் அத்தசாதவாசர், இந்த்ரன் அமராவதியை(க்காத்து வரு வது,போல் அவ் வயோத்யாபுரியைக் காத்துவந்தார். ரு.

அவ்வுத்தமபுரியில் புருஷர்கள் தங்கள்தங்களுக்குரிய தநங்களைக்கொண்டு த்ருப்தியடைந்து (அதனுலேயே) லோபமற்றவர்களாய்க் களித்துத் தர்மபுத்தியுடையவர்களாகி அநேகசாஸ்த்ரங்களைக்கேட்டு ஸத்யவாதிகளா யிருந்தார்கள். சு.

உத்தமமான அவ்வயோத்யாபுரியில் குடும்பியாயிருப்பவனொருவனாவது, பயன் கைகூடாதவனும், கோக்கள் அச்வங்கள் தநம் தாந்யம் என்னுமிவைக ளில்லாதவனும், பொக்கசங்குறைந்தவனுமாயிருக்கவில்லை. எ.

அயோத்யாபுரியில், காமியாயிருக்கும் புருஷனாவது, † கதர்யனுயிருக்கும் புருஷனாவது, பாபியாயிருக்கும் புருஷனாவது ஓரிடத்தேனுங் காணப்படமாட் டான்; வித்வானுயிராத புருஷனுங்கிடையாது; நாஸ்திகனுயிருக்கும் புருஷனும் கிடையாது. அ.

எல்லாபுருஷர்களும் எல்லாஸ்த்ரீகளும் பிறக்கும்பொழுதே நல்லஸ்வபா வம் நல்ல நடவடிக்கைகளோடு கூடினவர்களாய், (அதனுலேயே எப்பொழுதும்) தர்மசீலர்களாய், நன்ருக சாஸ்த்ரத்திற்குக் கட்டுப்பட்டவர்களாய், மாசற்ற நெஞ்சம்பெற்ற மஹர்ஷிகளை நிகர்த்திருந்தார்கள். கூ.

(அங்கு) குண்டலந்தரியாதவனுமில்லை; கிரீடந்தரியாதவனுமில்லை; மாலை தரியாதவனுமில்லை; அல்பஸுகமுடையவனுமில்லை; அசுத்தனுயிருப்பவனுமி ல்லை; தேஹத்தில் (சந்தநம் முதலிய) பூசு பூசிக்கொள்ளாதவனுமில்லை; நல்ல வாஸனைத் தரியாதவனுமில்லை; கo.

பஞ்சபக்ஷ்யபரமாந்நம் புஜியாதவனுங் காணப்படமாட்டான்; தாநஞ்செய் யாதவனுங் காணப்படமாட்டான்; தோள்வளை ஹாரம் என்னு மிவைகளைத் தரியாதவனுங் காணப்படமாட்டான்; கக.

அயோத்யையில் ஒருவனாவது அக்நிஹோத்ரஞ் செய்யாமலிருக்கவில்லை; சாஸ்த்ரப்படி யாகஞ்செய்யாமலிருக்கவில்லை; அல்பபுத்தியுடையவனுயிருக்க வில்லை; திருடனுயிருக்கவில்லை; பரமாதர்களைப்புணர்ந்து ப்ரஜைகளையுண்டு பண்ணி ஜாதிகளை கலக்கச் செய்பவனுயிருக்கவில்லை; கஉ.

ப்ராஹ்மணர்கள் எப்பொழுதும் தங்கள் கர்மங்களைச் செய்துகொண்டு, ஜிதேந்த்ரியர்களாகி, தாநம் அத்த்யயநம் என்னுமிவைகளைச்செய்யும் ஸ்வபாவ முடையவர்களாகி, தாநம் வாங்குவதில் கூச்சங்கொண்டவர்களாகி இருந்தார்கள்; கங.

ஒருவனாவது நாஸ்திகனுயிருக்கவில்லை; பொய் பேசுபவனுயிருக்கவில்லை; அநேக சாஸ்த்ரங்களைக் கேளாதவனுயிருக்கவில்லை; பொருமையுடையவனுயி ருக்கவில்லை; சக்தியற்றவனுயிருக்கவில்லை; படியாதவனுயிருக்கவில்லை; கச.

இவ்வயோத்யையில் ஒருவனாவது ஷடங்கங்களையறியாதவனுயில்லை; வ்ரதஞ்செய்யாதவனுயில்லை; பஹு தாநஞ் செய்யாதவனுயில்லை; இரப்பவனு யில்லை; உள்ளங்குலைந்தவனுயில்லை; நோயினுல் துன்பப்பட்டவனுயில்லை; கரு.

† "கதர்யன்" என்ருல், தன்னையும் தனது தர்மகார்யங்களையும் புத்ர- காலத்ரங்களையும் தாய் தந்தையர்களையும் உடன் பிறந்தோர்களையும் பேராசைகொண்டு வருத்துகின்றவன்.

கஶ்சிந்நரோ வா நாரீ வா நாஶ்ரீமாந்நாப்யரூபவாந்।
த்ரஷ்டும் ஶக்யமயோத்யாயாம் நாபி ராஜந்யபக்திமாந்। ௧௬.
வர்ணேஷ்வக்ர்யசதுர்த்தேஷு தேவதாதிதிபூஜகா:।
க்ருதஜ்ஞாஶ்ச வதாந்யாஶ்ச ஶூரா விக்ரமஸம்யுதா:। ௧௭.
தீர்காயுஷோ நரா: ஸர்வே தர்மம் ஸத்யம் ச ஸம்ஶ்ரிதா:।
ஸஹிதா: புத்ரபௌத்ரைஶ்ச நித்யம் ஸ்த்ரீபி: புரோத்தமே।
க்ஷத்ரம் ப்ரஹ்மமுகம் சாஸீத்வைஶ்யா: க்ஷத்ரமநுவ்ரதா:।
ஶூத்ரா: ஸ்வகர்மநிரதாஸ்த்ரீந்வர்ணாநுபசாரிண:। ௧௮.
ஸா தேநேக்ஷ்வாகுநாதேந புரீ ஸுபரிரக்ஷிதா।
யதா புரஸ்தாந்மநுநா மாநவேந்த்ரேண தீமதா। ௨௦.
யோதாநாமக்நிகல்பாநாம் பேஶலாநாமமர்ஷிணாம்।
ஸம்பூர்ணா க்ருதவித்யாநாம் குஹா கேஸரிணாமிவ। ௨௧.
காம்போஜவிஷயே ஜாதைர்பாஹ்லீகைஶ்ச ஹயோத்தமை:।
வநாயுஜைர்நதீஜைஶ்ச பூர்ணா ஹரிஹயோத்தமை:॥ ௨௨.
விந்த்யபர்வதஜைர்மத்தை: பூர்ணா ஹைமவதைரபி।
மதாந்விதைரதிபலைர்மாதங்கை: பர்வதோபமை:।
ஐராவதகுலீநைஶ்ச மஹாபத்மகுலைஸ்ததா।
அஞ்ஜநாதபி நிஷ்க்ராந்தைர்வாமநாதபி ச த்விபை:। ௨௪.
பத்ரைர்மந்த்ரைர்ம்ருகைஶ்சைவ பத்ரமந்த்ரம்ருகைஸ்ததா।
பத்ரமந்த்ரைர்பத்ரம்ருகைர்ம்ருகமந்த்ரைஶ்ச ஸா புரீ।
நித்யமத்தைஸ்ஸதா பூர்ணா நாகைரசலஸந்நிபை:। ௨௫.
ஸா யோஜநே ச த்வே பூய: ஸத்யநாமா ப்ரகாஶதே।
யஸ்யாம் தஶரதோ ராஜா வஸந் ஜகதபாலயத்। ௨௬.
தாம் புரீம் ஸ மஹாதேஜா ராஜா தஶரதோ மஹாந்॥
ஶஶாஸ ஶமிதாமித்ரோ நக்ஷத்ராணீவ சந்த்ரமா:। ௨௭.

தாம் ஸத்யநாமாம் த்ருடதோரணார்களாம்
க்ருஹைர்விசித்ரைருபஶோபிதாம் ஶிவாம்॥
புரீமயோத்யாம் ந்ருஸஹஸ்ரஸங்குலாம்
ஶஶாஸ வை ஶக்ரஸமோ மஹீபதி:। ௨௮.

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே ஷஷ்ட: ஸர்க:.

அயோத்யையில் ஒரு புருஷனையாவது ஸ்த்ரீயையாவது செல்வமில்லாமலும் அழகில்லாமலும் ராஜபக்தியில்லாமலுங் காணுவது அரிது; ௧௬.

ப்ராஹ்மண - க்ஷத்ரிய - வைச்ய - சூத்ரரென்னும் நான்குவர்ணஸ்தர்களும் தேவதைகளையும் அதிதிகளையும் அர்ச்சித்து நன்றியறிந்து தானஞ்செய்து வீரர்களாய்ப் பராக்ரமத்தோடு கூடியிருந்தார்கள்; ௧௭.

(அந்த) உத்தமபுரியில் புருஷர்கள் ஸ்த்ரீகள் எல்லோரும் ஆயுள் நிறைந்து, தர்மத்தையும் ஸத்யத்தையுந் தவருது புத்ரபௌத்ரர்களோடு கூடியிருந்தார்கள்; ௧௮.

க்ஷத்ரியர்கள் ப்ராஹ்மணர்கள்சொற்படி நடந்தார்கள்; வைச்யர்கள் க்ஷத்ரியர் சொற்படி நடந்தார்கள்; சூத்ரர்கள் தமது தர்மந்தவருது (மேல்) மூன்று வர்ணங்களுக்கும் உபசாரஞ் செய்துவந்தார்கள். ௧௯.

இக்ஷ்வாகுவம்சத்திலுதித்த வத்தசரத ப்ரபுவானவர் அவ்வயோத்யா புரியை, மநுஜேந்த்ரராகிய மநுப்ரஜாபதி முன் ரக்ஷித்துவந்ததுபோல் வெகு அழகாய் ரக்ஷித்துவந்தார். ௨௦.

(அவ்வயோத்யாபுரியானது,) அஸ்த்ரவித்யைகளை யெல்லாமுணர்ந்து, மிக்க பராக்ரமம்பெற்று, அக்நியைநிகர்த்து, குஹைகளிலிருக்கும் ஸிம்ஹங்களை யொத்து அழகாய் விளங்கும் படைகளால் நிறைந்தது. ௨௧.

காம்போஜம் பாஹ்லிகம் வநாயு ஸிந்து என்றுமித்தேசங்களிலுண்டாய், இந்த்ரனது குதிரைபோலுத்தமமாய்ச் சிறந்தகுதிரைகளாலும் நிறைந்தது. ௨௨.

மதித்து விந்த்யபர்வதத்திலுண்டானவைகளும், மதத்துடன்கூடி ஹிமவத் பர்வதத்திலுண்டானவைகளும், மஹாபலமுடையவைகளும், ஐராவதம் மஹா பத்மம் அஞ்சநம் வாமநம் என்னுந் திக்கஜங்களின் குலத்திலுண்டானவைகளுமாய்ப் பர்வதத்தையொத்து விளங்கும் யானைகளாலும் நிறைந்தது. ௨௩.

பத்ரம் மந்த்ரம் ம்ருகம் பத்ரமந்த்ரம்ருகம் பத்ரமந்த்ரம் பத்ரம்ருகம் ம்ருக மந்த்ரம் என்னுஞ் ஜாதிகளிலுண்டாய், எப்பொழுதும் மதித்து, பர்வதத்தை யொத்து விளங்கும் யானைகளாலும் நிறைந்தது அவ்வயோத்யாபுரி. ௨௪.

ஜகத்பரிபாலநம் பண்ணிக்கொண்டு தசரதவரசரிருந்த அவ்வயோத்யா புரியானது வெளியிலும் இரண்டு யோஜனை விஸ்தாரமுள்ளது; அதற்கு, சத்ருக்கள் உள்ளேபுகுந்து யுத்தஞ்செய்ய முடியாமலிருப்பதால் அயோத்யை யென்னும் பெயர் உண்மையாய் விளங்குகிறது. ௨௫.

சந்த்ரன் நக்ஷத்ரங்களை யெல்லாம் அடக்கி விளங்குவதுபோல் அத்தசரத வரசர், சத்ருக்களையெல்லாம் அடக்கி மிக வொளிபெற்று அவ்வயோத்யா புரியைப் பாதுகாத்துவந்தார். ௨௬.

த்ருடமான தோரணவாயில் உழற் றடிகளையுடையதாய், விசித்ரமான க்ருஹங்களால் ஜ்வலிப்பதாய், அநேக ஆயிரம் (உத்தம) புருஷர்களால் நிறைந்ததாய், உண்மையான பெயர்பெற்று விளங்கும் அவ்வயோத்யாபுரியைத் தசரதவரசர், தேவேந்த்ரனை நிகர்த்துப் பாதுகாத்து வந்தார். ௨௭.

ஆறுவது ஸர்க்கம் முற்றிற்று.

[illegible]

[illegible]
[illegible] க.
[illegible]
[illegible] உ.
[illegible]
[illegible] ௩.
[illegible]
[illegible] ௩-௪.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௫.
[illegible] ௬உ.
[illegible]
[illegible] எஉ.
[illegible]
[illegible] அஉ.
[illegible]
[illegible] கூஉ.
[illegible]
[illegible] க0உ.
[illegible]
[illegible] ககஉ.

ஏ ழா வ து ஸ ர் க் க ம்.

இக்ஷ்வாகுவம்சத்திலுதித்த மஹாத்மாவான தசரதரது மந்த்ரிகள், ஆலோசனைகளை நன்றாய் அறிந்தவர்களும், பிறர்களுடைய அபிப்ராயங்களை நன்றாய் அறிந்தவர்களும், எப்பொழுதும் நன்மையைச் செய்வதில் விருப்பங் கொண்டவர்களும், நல்ல குணங்களோடு கூடினவர்களுமாகி யிருந்தார்கள். க.

வல்லவரானதசரதருக்கு, பெரும்புகழ் பெற்றவர்களாய், பரிசுத்தர் களாய், எப்பொழுதும் மன்னவரது வுள்ளமறிந்து மன்னவர் கார்யங்களைச் செய்வதில் விருப்பங்கொண்டவர்களாயுள்ள மந்த்ரிகள் எண்மர் இருந்தனர். உ.

அவர்களின் பெயர்கள் :—"த்ருஷ்டி, ஜயந்தர், விஜயர், ஸித்தார்த்தர், அர்த்தஸாதகர், அசோகர், மந்த்ரபாலர், ஸுமந்த்ரர்" என்பனவாம் ௩.

அத்தசரதருக்கு, வஸிஷ்டர் வாமதேவர் என்னும் பெயருடைய இரண்டு சிறந்த ருஷிகள் ப்ரதான புரோஹிதர்களாயிருந்தார்கள். ௪.

வித்யையினால் விநயமுள்ளவர்களும், (தகாச்செய்கைகளில்) கூச்சமுள்ள வர்களும், சமர்த்தர்களும், ஜிதேந்த்ரியர்களும், செல்வம் நிறைந்தவர்களும், நல்லதைர்யமுள்ளவர்களும், சாஸ்த்ரங்களை யறிந்தவர்களும், நிலை நிற்கும் பராக்ரமமுடையவர்களும், பெரும்புகழ் பெற்றவர்களும், ஊக்கமுள்ளவர்க ளும், சொன்ன சொற்றவறாது செய்யவல்லவர்களும், நல்ல அழகு பொறுமை புகழ் என்னுமிவைகளை யுடையவர்களும், எப்பொழுதும் புன்னகையே அழகாய்ப் பேசுகின்றவர்களுமான இன்னுஞ் சில மந்த்ரிகளுமிருந்தார்கள். ௫.

(அவர்கள்) கோபத்தினாலாவது, காமத்தினாலாவது, கார்யம் கைகூடுவதைப்பற்றியாவது பொய்ப்பேச்சு பேசார். ௬.

அவர்களுக்குத் தங்களைப்பற்றியாவது இதரர்களைப்பற்றியாவது நடந்து போனது நடந்துகொண்டிருக்கிறது நடக்கப்போகிறது என்னும் இந்த ஸமாசாரங்களில் ஒன்றாவது சாரர்கள் மூலமாகத்தெரியாததில்லை. ௭.

அவர்கள், வ்யவஹாரங்களில் வெகு ஸமர்த்தர்கள்; ஸ்நேஹஞ் செய்யும் விஷயத்தைப்பற்றி ராஜாவினால் நன்றாய்ப்பரீக்ஷித்து யேற்படுத்தப்பட்டவர் கள்; குற்றவாளிகள் புத்த்ரர்களாயிருந்தாலும் காலவசத்தினால் வந்த தண்டனையை நன்றாய்ச்செய்தே விடுவார்கள்; ௮.

பொக்கசங்களைச் சேர்ப்பதிலும் படைகளைச் சேர்ப்பதிலும் ஊக்கங் கொண்டவர்கள்; பகையாயிருக்கும் புருஷனைக்கூட குற்றமன்றி வருத்த மாட்டார்கள்; ௯.

நல்ல வீரர்கள்; எப்பொழுதும் உத்ஸாஹமுள்ளவர்கள்; நீதி நூற்றவறாது நடப்பவர்கள்; தேசங்களிலுள்ள பெரியோர்களைக்காக்கும் ஸ்வபாவமுள்ளவர்கள்; ௧0.

அவர்கள் அந்தணர்களையும் அரசர்களையும் வருத்தாது, (குற்றமுற்ற) புருஷனது பலாபலமறிந்து தண்டனைகளை அழகாய் உக்ரமாய்ச்செய்து பொக்கசத்தை நன்றாய் நிரப்பினார்கள். ௧௧.

[illegible]।
[illegible]। ௧௨½.
[illegible]।
[illegible]। ௧௩½.
[illegible]।
[illegible]।
[illegible]।
[illegible]।
[illegible]।
[illegible] *[illegible]।
[illegible]। ௧௭.
[illegible]।
[illegible]। ௧௮.
[illegible]।
[illegible]।
[illegible]।
[illegible]। ௨௦.
[illegible]।
[illegible]। ௨௧.
ஸ புரீமாவாஸயாமாஸ திவம் தேவபதிர்யதா। ௨௧½.

தாமக்நிமத்பிர்குணவத்பிராவ்ருதாம்
த்விஜோத்தமைர்வேதஷடங்கபாரகை:।
ஸஹஸ்ரதை: ஸத்யரதைர்மஹாத்மபி:
மஹர்ஷிகல்பைர்ருஷிபிஶ்ச கேவலை:॥ ௨௨½.

இதி ஶ்ரீராமாயணே பாலகாண்டே பஞ்சம: ஸர்க:.

* "[illegible]" இதி பாடாந்தரம்.

(அம்மந்த்ரிகள்) எல்லோரும் பரிசுத்தர்களாய் ஒரேபுத்திகொண்டு ராஜ்யதந்த்ரம் நடத்திவருகையில் பட்டணம் தேசம் என்றுமிவ்விடங்களிலொரிடத்திலாவது பொய்ப் பேசுகிறவனிருக்கவில்லை. ௧௫௬.

அம்மந்த்ரிகள் (ராஜரோடுகூடி) அரசு புரியுங்காலத்தில் ஒருவனாவது துஷ்டனாய்ப் பரமாதரிடத்தில் விருப்பங்கொண்டிருக்கவில்லை; அச்சிறந்த பட்டணம் தேசம் எல்லாம் நல்ல அடக்கத்துடன் கூடியிருந்தது. ௧௬௬.

அம்மந்த்ரிகளெல்லோரும் நல்ல வாஸனையுடையவர்கள்; நல்ல அலங்காரமுடையவர்கள்; நல்ல ஸ்வபாவமுடையவர்கள்; மன்னவருக்கு நன்மையைச் செய்வதைப்பற்றி நீதியென்னுங் கண்கொண்டு விழித்திருப்பவர்கள்; பெரியோரிடத்தில் குணத்தை மாத்த்ரம் க்ரஹிப்பவர்கள்; பராக்ரமத்தில் ப்ரஸித்தமானவர்கள்; த்ரிகால ஜ்ஞானமுள்ளவர்களாயிருந்ததனால் இதரதேசங்களிலுங்கூட எங்கும் ப்ரஸித்தமானவர்கள்; ஸந்தி, யுத்தம் என்றுமிவைகளின் தத்த்வங்களையுணர்ந்தவர்கள்; பிறக்கும்பொழுதே செல்வத்தோடு கூடினவர்கள்; ரஹஸ்யங்களை வெளியிடாது மறைத்துவைக்க வல்லவர்கள்; ஸூக்ஷ்மமான புத்தியில் வல்லவர்கள்; நீதிநூல்களின் விசேஷங்களையுணர்ந்தவர்கள்; எப்பொழுதும் நன்மையையே யுரைப்பவர்கள். ௧௭.

இத்தகை பகுணங்களுற்ற மந்த்ரிகள் பெற்று, பாவங்களற்றுப் பார்த்தலைப் பாதுகாத்து வந்தார் தசரதமன்னவர். ௧௮.

அத்தசரதமன்னவர், ஒற்றரைக்கொண்டெல்லாவற்றையுங் கண் முன்னிருப்பது போலறிந்து, ஜனங்களைத்தர்மங்கொண்டு களிப்பித்து, அதர்மம் நீக்கி, கொடையாளியாய், சொன்ன சொற்றவறாது ஜனங்களைப்பாது காத்து, மூவுலகங்களிலும் ப்ரஸித்தராய் அய்வயோத்யாபுரியில் வாஸஞ்செய்துகொண்டு இப்பூமியைப்பாது காத்துவந்தார். ௨௦.

தமக்கு அதிகமாயிருப்பவனையாவது, ஸமானமாயிருப்பவனையாவது (அத்தசரதர்) ஸந்திக்கவில்லை; பராக்ரமங்கொண்டு பகைவரை வென்று பல நண்பர்களையுடையவராகி யிருந்தார். ௨௧.

ஸ்வர்க்கத்தை தேவேந்த்ரன் ஆள்வதுபோல் அம்மன்னவர், பூமியை ஆண்டுவந்தார். ௨௧௬.

அத்தசரதமன்னவர், தமது வுள்ளமறிந்து தம்மிடமன்பு கூர்ந்து நல்ல ஆலோசனை யுரைப்பதிலிழிந்து அறிவுடையோர்களாகி சமத்தர்களான மந்த்ரிகளாற் சூழப்பெற்று, தேஜோமயமான கிரணங்களோடு கூடிவுதித்த ஞாயிறெனவொளி பெற்றார். ௨௨௬.

ஏழாவது ஸர்க்கம் முற்றிற்று.

[illegible]

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible] ௨
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible]
[illegible] *[illegible]
[illegible] ௧௨
[illegible]
[illegible] ௧௫

* “[illegible]” இதி பாடாந்தரம்.

எட்டாவது ஸர்க்கம்.

இவ்விதமான ப்ரபாவமுடையவரும் தர்மங்களை யறிந்தவரும் மஹாத்மாவு மான அத்தசரதர் தமக்குப்புத்ரருண்டாகவேண்டி தவஞ்செய்தும், வம்சத்தை (வ்ருத்தி) செய்யும் புத்ரர் உண்டாகவில்லை. க.

மஹாத்மாவான அந்தத்தசரதர் இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருக்கையில், "புத்ரருண்டாகவேண்டி யான் ஏன் அச்வமேதயாகஞ் செய்யலாகாது" என்கிற புத்தியுண்டாயிற்று. உ.

புத்திமானும் தர்மாத்மாவாயுள்ள அத்தசரதமன்னவர் "யாகஞ்செய்யவே ண்டும்" என்று, நிறைந்த புத்தியுடைய (தமது) மந்த்ரிகளோடு கூடி புத்தியில் நிச்சயித்துக்கொண்டு, பிறகு மந்த்ரிகளிற் றலைவராகிய ஸுமந்த்ரரை (ப்பார்த்து), "எனது அந்தகுருக்களெல்லோரையும் அழைத்துவாரும்" என்றுமிவ்வாக்யத்தைச் சொன்னார். ௩.

பின்பு ஸுமந்த்ரரானவர் தக்ஷணமே சீக்ரமாகப்போய், வேதங்களின் கரை கண்டவர்களான ஸுயஜ்ஞர் வாமதேவர் ஜாபாலி காச்யபர் புரோஹித ரான வஸிஷ்டர் மற்றுமுள்ள ப்ராஹ்மணோத்தமர்கள் ஆகிய அவர்களெல்லோ ரையுங் கூட்டங்கூட்டி அழைத்து வந்தார். ௪.

தர்மாத்மாவான தசரதமன்னவர் அப்பொழுது அவர்களைப் பூஜித்து (அவர்களைப்பார்த்து), "புத்ரநிமித்தமாக மிகவும் வருந்துகின்றமையால் எனக்கு ஸுகமேயில்லை; அதைப்பற்றி அச்வமேதயாகஞ்செய்யவேண்டுமென்று எனக்கு புத்தியுண்டாயிருக்கின்றது; ஆதலால் யான் சாஸ்த்ரப்படி யாகஞ் செய்யவிருப்பங்கொண்டிருக்கின்றேன்; யான் எப்படிசெய்தால் இஷ்டத்தைப் பெறலாம்; இது விஷயத்தில் யுக்தி சொல்லவேண்டும்" என்கிற தர்ம- அர்த்தங்களோடு கூடிய இவ்வாக்யத்தை மதுரமாய் விளக்கமாய்ச்சொற்றார். க.

பின்பு மன்னவரது முகத்திலிருந்து வந்த அம்மொழியை வஸிஷ்டர் முதலிய வந்தணர்களனைவரும் கௌரவித்தனர். கO.

அந்த ப்ராஹ்மணர்களெல்லோரும் பரமப்ரீதியுடையவர்களாய்த் தசரத ரைப்பார்த்து, "யாகத்திற்கு வேண்டிய ஸாமக்ரிகளைச்சேரும்; (யாக) குதிரை யைவிட்டுவிடும்; புத்ர நிமித்தமாக இந்த தர்மபுத்தி உமக்குண்டானதால், எல்லா விதத்தாலும் இஷ்டமான புத்ரர்களைப்பெறப் போகின்றீர்" என்று மிவ்வாக்யத்தை அழகாய்ச் சொற்றனர். கஉ.

அநந்தரம் (அனைவரையும்) அன்பு கூரச்செய்யும் அம்மன்னவர் அவ்வந்த ணர்களின் மொழிகேட்டு மகிழ்ச்சி கொண்டார்; அம்மகிழ்ச்சியினால் கண்களை விழித்துப்பார்த்து மந்த்ரிகளையும் நோக்கி சொன்னதாவது :— கஉ.

[illegible]
[illegible] ௧௪.

[illegible]
[illegible] ௧௫.

[illegible]
[illegible] ௧௬.

[illegible]
[illegible] ௧௭.

[illegible]
[illegible] ௧௮.

[illegible]
[illegible] ௧௯.

[illegible]
[illegible] ௨௦.

[illegible]
[illegible]
[[illegible]] ௨௧.

[illegible]
[illegible] ௨௨.

[illegible]
[illegible] ௨௩.

[illegible]
[illegible] ௨௪.

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே [illegible] ஸர்க்க:.

"என்று குருக்களின் சொற்படி சாக்குகளைச் சேருங்கள்; சமர்த்தர்கள் சாக்க, உபாத்தியாயர்கள்கூட, (யாகஞ்செய்யவேண்டி) அச்வத்தை விடுங்கள்; கச.

ஸரயூநதிக்கு வடகரையில் யாகசாலையையை யேற்படுத்துங்கள்; க்ரமந்தவறாது சாஸ்த்ரந்தவறாது (யாகம் தடங்கலன்றி முடிவதைப்பற்றிய) சாந்திகளையுஞ் செய்யுங்கள்; கரு.

இவ்வுத்தமயாகத்தில் மிக்கவருத்தமான அபசாரங்கள் (ஒன்றும்) இல்லாத பக்ஷத்தில் இந்த யாகத்தை யெல்லாவரசர்களுஞ் செய்வார்கள்; கசு.

கற்றவர்களான ப்ரஹ்மராக்ஷஸர்கள் இந்த யாகத்தில் கெடுதலையன்றோ தேடிக்கொண்டிருக்கிறார்கள்; யாகங்கெட்டால் உடனேகர்த்தாநாசமாவான்; கஎ.

ஆகையால், என்னுடைய இந்த யாகமானது எவ்விதமாகச் செய்தால் சாஸ்த்ரந் தவறாமல் முடியுமோ அவ்விதமாகச்செய்ய வேண்டும்; இந்த யாககார்யங்களில் (நீங்கள்) ஸமர்த்தர்கள்" என்பது. கஅ.

அம்மந்த்ரிகளெல்லோரும் மஹாராஜாவினுடைய அவ்வாக்யத்தைக் கேட்டு, "(மஹாப்ரபோ! தமது) கட்டளையின்படி அப்படியே (செய்கிறோம்)" என்று சொல்லினர்; உறுதிமொழி பண்ணிக்கொடுத்து கௌரவிக்கவுங் கௌரவித்தனர். ககூ.

அறமுணர்ந்த அவ்வந்தணரனைவரும் அவ்வாறு மஹாராஜாவை உத்ஸாஹப் படுத்திவிட்டு, பிறகு விடைபெற்று, வந்தபடி திரும்பிப் போயினர். உ0.

(தசரதர்) அந்தப் ப்ராஹ்மணர்களை அனுப்பிவிட்டு மந்த்ரிகளைப் பார்த்து, "(ஓ மந்த்ரிகளே!) புரோஹிதர் சொற்படி இந்த யாகத்தை சாஸ்த்ரந் தவறாது முடிக்கவேண்டும். [இந்த கார்யங்களில் நீங்களோ ஸமர்த்தர்களாய் இருக்கிறீர்கள்]" என்னுமிவ்வாக்யத்தை யுரைத்தார். உக.

மஹாராஜாவானவர் ஸமீபத்தில் நிற்கும் மந்த்ரிகளை இவ்வாறு சொல்லி யனுப்பிவிட்டு, மகிழ்ச்சி கொண்டு தமது மாளிகைக்குப் போகலுற்றார். உஉ.

பின்பு அம்மன்னவரானவர் உள்ளங் கொண்டன்பு கூர்ந்த அம்மனைவி களிடம்போய், "புத்ரருண்டாகவேண்டி யான் யாகஞ்செய்யப் போகின்றேன்; நீங்கள் வ்ரதங்கொள்ள வேண்டும்" என்றுரைத்தார். உங.

மிகவினியதான வம்மொழிகேட்டு மிகவொளி பெற்ற வம்மனைவிகளது அழகாய முகங்கள், ஹேமந்த ருதுவிலுண்டாங் கமலங்களென வொளிபெற்றன. உச.

எட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

𑌅𑌥 𑌨𑌵𑌮𑌃 𑌸𑌰𑍍𑌗𑌃.

𑌏𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌰𑌹𑌸𑍍𑌸𑍂𑌤𑍋 𑌰𑌾𑌜𑌾𑌨𑌮𑌿𑌦𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍। ௧.
𑌋𑌤𑍍𑌵𑌿𑌗𑍍𑌭𑌿𑌰𑍁𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑍋𑌽𑌯𑌂 𑌪𑍁𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑍋 𑌮𑌯𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑌃।
𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌕𑌥𑌿𑌤𑌵𑌾𑌨𑍍 𑌕𑌥𑌾𑌮𑍍।
𑌋𑌷𑍀𑌣𑌾𑌂 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌤𑌵 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌗𑌮𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿। ௨.
𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌪𑍁𑌤𑍍𑌰𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌵𑌿𑌭𑌣𑍍𑌡𑌕 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌃।
𑌋𑌷𑍍𑌯𑌶𑍃𑌙𑍍𑌗 𑌇𑌤𑌿 𑌖𑍍𑌯𑌾𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥ ௩.
𑌸 𑌵𑌨𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌂𑌵𑍃𑌦𑍍𑌧𑍋 𑌮𑍁𑌨𑌿𑌰𑍍𑌵𑌨𑌚𑌰𑌸𑍍𑌸𑌦𑌾।
𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌵𑌿𑌪𑍍𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑌿𑌤𑍍𑌰𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑌾𑌤𑍍। ௪.
𑌦𑍍𑌵𑍈𑌵𑌿𑌧𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌂 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌵𑌿𑌪𑍍𑌰𑍈𑌶𑍍𑌚 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌸𑌦𑌾॥ ௫.
𑌤𑌸𑍍𑌯𑍈𑌵𑌂 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌕𑌾𑌲𑌸𑍍𑌸𑌮𑌭𑌿𑌵𑌰𑍍𑌤𑌤।
𑌅𑌗𑍍𑌨𑌿𑌂 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌮𑌾𑌣𑌸𑍍𑌯 𑌪𑌿𑌤𑌰𑌂 𑌚 𑌯𑌶𑌸𑍍𑌵𑌿𑌨𑌮𑍍। ௬.
𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌕𑌾𑌲𑍇 𑌤𑍁 𑌰𑍋𑌮𑌪𑌾𑌦𑌃 𑌪𑍍𑌰𑌤𑌾𑌪𑌵𑌾𑌨𑍍।
𑌅𑌙𑍍𑌗𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌮𑌹𑌾𑌬𑌲𑌃। ௭.
𑌤𑌸𑍍𑌯 𑌵𑍍𑌯𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌾𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌸𑍁𑌦𑌾𑌰𑍁𑌣𑌾।
𑌅𑌨𑌾𑌵𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑍍𑌸𑍁𑌘𑍋𑌰𑌾 𑌵𑍈 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌭𑌯𑌾𑌵𑌹𑌾। ௮.
𑌅𑌨𑌾𑌵𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌯𑌾𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌦𑍁𑌃𑌖𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌞𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑌸𑌂𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌨𑍍 𑌸𑌮𑌾𑌨𑍀𑌯 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿।
𑌭𑌵𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍋 𑌲𑍋𑌕𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌵𑍇𑌦𑌿𑌨𑌃।
𑌸𑌮𑌾𑌦𑌿𑌶𑌨𑍍𑌤𑍁 𑌨𑌿𑌯𑌮𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌯𑌥𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍। ௧௦.
𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌮𑌹𑍀𑌪𑌾𑌲𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑍇𑌦𑌪𑌾𑌰𑌗𑌾𑌃।
𑌵𑌿𑌭𑌣𑍍𑌡𑌕𑌸𑍁𑌤𑌂 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌾𑌯𑍈𑌰𑌿𑌹𑌾𑌨𑌯।
𑌆𑌨𑌾𑌯𑍍𑌯 𑌚 𑌮𑌹𑍀𑌪𑌾𑌲! 𑌋𑌷𑍍𑌯𑌶𑍃𑌙𑍍𑌗𑌂 𑌸𑍁𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑌮𑍍।
𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛 𑌕𑌨𑍍𑌯𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑍈 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌸𑍁𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃। ௧௨.
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍁 𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌜𑌾 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌤𑍍𑌸𑍍𑌯𑌤𑍇।
𑌕𑍇𑌨𑍋𑌪𑌾𑌯𑍇𑌨 𑌵𑍈 𑌶𑌕𑍍𑌯 𑌇𑌹𑌾𑌨𑍇𑌤𑍁𑌂 𑌸 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍।

ஒன்பதாவது ஸர்க்கம்.

ஸாரதியாகிய ஸுமந்த்ரர் இதைக் கேட்டு, ராஜாவைப் பார்த்து ஏகாந்தத்தில் இவ்வாக்யத்தைச் சொன்னார்:— க.

"அச்வமேதயாகத்தைப்பற்றிப் ப்ராஹ்மணர்கள்சொன்ன இவ்விஷயத்தை யான் முன்னொரு கதையாய்க் கேட்டிருக்கின்றேன்; ஓ ராஜாவே! த்ரிகால ஜ்ஞானமுடைய ஸநத்குமாரர், உமக்குப் புத்ரருண்டாகவேண்டி ருஷிகளிடத்தில் முன்னொருகதை சொல்லியிருக்கிறார்:— உ.

"காச்யபருக்கு, விபண்டகரென்று ப்ரஸித்தராய் ஒருபுத்ரரிருக்கிறார்; அவருக்கு, ருச்யச்ருங்கரென்று ப்ரஸித்தராய் ஒருபுத்ரருண்டாகப் போகிறார். ௩.

ப்ராஹ்மணோத்தமரான அந்த ருச்யச்ருங்கமுனிவர், நித்யமும் வநத்தில் வளர்ந்து எப்பொழுதும் வநத்திலிருந்துகொண்டு பிதாவுக்கு உபசாரஞ் செய்வதன்றி மற்றொன்றை அறியார். ச.

மஹாத்மாவான ருச்யச்ருங்கருடைய ப்ரஹ்மசர்யம் இரண்டுவிதமாக ஆகப்போகிறது; எப்பொழுதும் ப்ரஹ்மசர்யம் இரண்டுவிதமென்று ப்ராஹ்மணர்களாலும் (அதாவது ஸ்ம்ருதிகர்த்தாக்களாலும்) லோகப்ரஸித்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ரு.

அந்த ருச்யச்ருங்கர், (தமது) பிதாவுக்கும் அக்நிக்கும் உபசாரஞ் செய்துகொண்டு ப்ரஹ்மசாரியாய்க் கொஞ்சகாலம் இருக்கப் போகிறார். சா.

இதற்குள், ரோமபாதரென்னும் ராஜா மஹாபராக்ரமமுடையவராய் மஹாபலமுடையவராய்ப் ப்ரஸித்தராய் அங்கதேசங்களிலுண்டாகப்போகிறார். எ.

அம்மன்னவர் நீதிதவறுதலால் வெகுதாருணமாய் வெகுபயங்கரமாய் ஸகலபூதங்களுக்கும் பயத்தைவிளைப்பதாய்க் கருப்புண்டாகப்போகிறது. அ.

கருப்புண்டானால் மன்னவரும் வருத்தங்கொண்டு, சாஸ்த்ரங்களைக் கேட்ட பெரியோர்களாகிய ப்ராஹ்மணர்களை அழைத்து, "நீங்கள் தர்மங்களைக் கேட்டவர்கள்; லோகஸமாசாரங்களையறிந்தவர்கள்; (ஆதலால்) கருப்பு நீங்குவதைப்பற்றிய சாந்திகளைச் செய்யவேண்டிய நியமத்தைச் சொல்லவேண்டும்" என்றுசொல்லப்போகிறார். கO.

வேதங்களின் கரைகண்டவர்களான அவ்வந்தணர்கள் மன்னவரைப்பார்த்து, "பார்தனைப் பாதுகாக்கும் ஓ மன்னரே! விபண்டகரது மைந்தராகிய ருச்யச்ருங்கரை எவ்விதத்தேனும் இங்கழைத்துவந்து நல்ல ஸத்காரஞ்செய்து பக்திகொண்டு, (உமது) கந்யகையாகிய சாந்தையென்பவளை சாஸ்த்ரப்படி (விவாஹஞ்செய்து) கொடும்" என்று சொல்லப்போகிறார். கஉ.

அவ்வந்தணர்களது மொழிகேட்டு, "ஐம்புலன்களையும் வென்ற அந்த ருச்யச்ருங்கரை எவ்வுபாயங் கொண்டால் அழைத்துவர முடியும்" என்று சிந்திக்கப்போகிறார் (ரோமபாத) மன்னவர். கங

[illegible]
[illegible] ௧௪.
[illegible]
[illegible] ௧௫.
[illegible]
[illegible] ௧௬.
[illegible]
[illegible] ௧௭.
[illegible]
[illegible] ௧௮.
[illegible]
[illegible] ௧௯.

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே நவம: ஸர்க்க:

அத தசம: ஸர்க்க:

[illegible] ௨.
[illegible]
[illegible] ௩.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௫.

அநந்தரம் (ரோமபாத) ராஜாவானவர் மந்த்ரிகளோடுகூடி ஆலோசித்து தைர்யங்கொண்டு, பின்பு (ருச்யச்ருங்கரை அழைத்துவரும்படி) புரோஹிதர்களையும் ஸத்கரித்து அனுப்பப்போகிறார். ௧௪.

அவர்கள் மன்னவரின் சொற்கேட்டு வருந்தி முகம்வணங்கி (விபண்டக) ருஷிக்குப்பயந்து, "யாங்கள் போகமாட்டோம் (யோசித்துச்சொல்லுகிறோம்) தயைசெய்யவேண்டும்" என்று அந்தரோமபாதவரசரை நன்மொழி கேட்டுக் கொள்ளப்போகிறார்கள். ௧௫.

அவர்கள் அந்த ருச்யச்ருங்கரை அழைத்து வருவதற்குத் தக்க வுபாயங்களை ஆலோசித்துக்கொண்டு, "ருச்யச்ருங்கரை யாங்கள் அழைத்து வரப்போகின்றோம்; கருப்பு நீங்கிவிடப்போகிறது" என்று ராஜாவோடு சொல்லப்போகிறார்கள்" என்று. ௧௬.

இவ்வாறு அங்கதேசத்தரசராகிய ரோமபாதரே (விபண்டக) ருஷிபுத்ரரான ருச்யச்ருங்கரைத் தாஸிகளைக் கொண்டழைத்து வந்து சாந்தையென்பவளை (விவாஹஞ் செய்து) கொடுக்க, அப்பொழுது மழை பொழிந்தது ௧௭.

மருமகனாராகிய ருச்யச்ருங்கரை அழைத்துவர்தால் உமக்குப் புத்ரருண்டாவார். யான் சொன்னதிவ்வளவும் ஸநத்குமாரர் சொன்னகதை." என்று. ௧௮.

பின்பு தசரதரானவர் ஸந்தோஷப்பட்டு ஸுமந்த்ரரைப் பார்த்து, "ருச்யச்ருங்கரை அழைத்துவந்த விதத்தை விரிவாய்ச்சொல்லும்" என்று சொன்னார். ௧௯.

ஒன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

பத்தாவது ஸர்க்கம்.

ஸுமந்த்ரர் அவ்வாறு ராஜாவினால் தூண்டப்பட்டு இவ்வாக்யத்தை உத்தரமாகச் சொன்னார்:— ௧.

"ருச்யச்ருங்கரை அழைத்து வந்த விதத்தை மந்த்ரிகளோடுகூடி என்னிடமிருந்து கேளும் [அதையெல்லாம் யான் விரிவாய்ச் சொல்லுகிறேன் கேளும்]: ௨.

ரோமபாதரது புரோஹிதரானவர் மந்த்ரிகளோடுகூடி ரோமபாதரைப்பார்த்து, "ருச்யச்ருங்கரானவர் தவஞ்செய்வதிலும் வேதமோதுவதிலும் விருப்பங்கொண்டு வநத்திலிருந்து கொண்டிருக்கிறார்; அவர், மாதர் ஸுகத்தையும் நல்ல சப்தம் ஸ்பர்சம் ரூபம் ரஸம் கந்தம் என்னுமிவைகளின் ஸுகத்தையும் அறியாதவர்; மாந்தர் மனதைக் கவரச்செய்யும் இனிய பெற்றின்பங்களைக்கொண்டு (அவரை நமது) பட்டணத்திற்கு அழைத்து வரவேண்டும்; சீக்ரமாய் நிச்சயஞ் செய்துகொள்ளும்; நல்ல அழகுள்ள தாஸிகள் நல்ல அலங்காரங்களைச்செய்து கொண்டு அந்த ருச்யச்ருங்கரிருக்குமிடம்போகவேண்டும்; பலவிதவுபாயங்களைக்கொண்டு (அவரை) அன்பு கூரச்செய்து ஸத்கரித்து இவ்விடம் அழைத்து வரவேண்டும்" என்றுமிவ்வாக்யத்தைச் சொன்னார். ௩.

𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌤𑌥𑍇𑌤𑌿 𑌰𑌾𑌜𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌵𑌾𑌚 𑌪𑍁𑌰𑍋𑌹𑌿𑌤𑌮𑍍 ।
[illegible]
[illegible] ௬.
𑌋𑌷𑍍𑌯𑌶𑍃𑌙𑍍𑌗𑌪𑍁𑌰𑍋𑌗𑌾𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌚𑍁𑌰𑍍𑌨𑍃𑌪𑌤𑌿𑌂 𑌤𑌦𑌾 ॥
[illegible] ௭.
[illegible]
[illegible]
[illegible] ௯.
[illegible]
[illegible] ௧௦.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௨.
[illegible]
[illegible] ௧௩.
[illegible]
[illegible] ௧௪.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௫.
[illegible]
[illegible] ௧௭.
[illegible]
[illegible] ௧௮.

(அதைக்) கேட்டு ராஜாவும், அப்படியே செய்யவேண்டியதென்று புரோஹிதருக்கு வநிலுரைத்தார்; அப்பொழுது மந்த்ரிகளும் புரோஹிதரும் அவ்வாறே செய்தார்கள்; தலைவர்களான தாஸிகளும் அதைக்கேட்டு (ருச்யச்ருங்கரிருக்கும்) மஹாவநத்திற்குப் போனார்கள். எ.

வித்வானாய் ருஷிபுத்ரராய் எப்பொழுதும் ஆச்ரமத்திலேயே வஸிக்கும் (அந்த) ருச்யச்ருங்கருடைய ஆச்ரமத்தின் ஸமீபத்தில் (இருந்துகொண்டு) அந்த ருச்யச்ருங்கரைப் பார்க்க யத்நஞ்செய்தார்கள். அ.

அந்த ருச்யச்ருங்கரோ எப்பொழுதும் பிதாவுக்கு சுச்ரூஷை செய்து அதனாலேயே த்ருப்தி கொண்டவராதலால் ஆச்ரமத்தை விட்டு வெளிப் புறப்படவில்லை. ஸ்த்ரீயையாவது புருஷனையாவது பட்டணங்களிலும் தேசங்களிலுமுள்ள மற்றவைகளையாவது தபஸ்வியாகிய அந்த ருச்யச்ருங்கர் பிறந்த நாள் முதல் இதுவரையில் பார்த்ததில்லை. கூ.

விபண்டகபுத்ரரான ருச்யச்ருங்கர் பின்பொருக்கால் தைவவசத்தால் அந்த தாஸிகளிருந்த விடத்திற்கு வந்தார்; அழகான அந்த ஸ்த்ரீகளும் அப்பொழுது (அவரைப்) பார்த்தார்கள். க0.

பலவித வணிகளணிந்த வம்மடவியரனைவரும் இனியவிசைபொருந்துமாறு பாடிக்கொண்டு, ருஷிபுத்ரரருகில் வந்து, "ஓ அந்தணரே! நீர் யார்? (இங்கு) எதற்காக இருக்கின்றீர்? ஜனங்களில்லாமல் பயங்கரமான (இந்த) காட்டில் நீர் ஒருவராய் என் திரிகின்றீர்? (இதை) அறிய யாங்கள் விருப்பங் கொண்டிருக்கின்றோம்; எங்களுக்குச் சொல்லவேண்டும்" என்று அழகாய்ப் பேசினர். கஉ.

அம்மாதர்கள், அந்த ருச்யச்ருங்கரால் (இதுவரையில்) வநத்தில் காணப் படாத வடிவமுடையவர்களாய் (அவர்) ஆசைப்படும்படியான அழகுடையவர்களாயிருந்ததைப்பற்றிய வன்புகொண்டு, தமது பிதாவை (அவர்களுக்கு) ச்சொல்ல வேண்டுமென்று அவருக்கு புத்தியுண்டாயிற்று. கங.

(அவர் சொன்னதாவது:—") எங்களுக்குப் பிதா விபண்டகர்; அவருக்கு யான் ஒளரஸ புத்ரன்; என்னுடைய பெயர் ருச்யச்ருங்கரென்று உலகத்தில் ப்ரஸித்தமாயிருக்கும்; என்னுடைய செய்கையும் ப்ரஸித்தமாயிருக்கும்; கச.

ஓ சுபதர்சநமுள்ளவர்களே! இதோ நமது ஆச்ரமமிருக்கின்றது; இங்கு (வரவேண்டும்) உங்களெல்லோர்க்கும் சாஸ்த்ரப்படி பூஜை செய்யப் போகின்றேன் (" என்பது). கரு.

ருஷிபுத்ரரது வாக்யங் கேட்டு எல்லோர்க்கும் அந்த ருச்யச்ருங்கரது ஆச்ரமத்தைப்பார்க்க புத்தியுண்டாயிற்று; அவர்களெல்லோரும் அவரோடு கூடி போகவும் போனார்கள். கசு.

பிறகு ருஷிகுமாரரான ருச்யச்ருங்கரானவர், "இதோ அர்க்யம்; இதோ பாத்யம்; இதோஎங்களுக்குள்ளகிழங்கு; இதோபழம்" என்று, வந்தவர்களுக்குப் பூஜை செய்தார். கஎ.

அப்பூஜையை அம்மடந்தையரனைவரும் மனங்களித்துப் பெற்றுக்கொண்டு (விபண்டக) ருஷிக்குப் பயந்தவர்களாகி சீக்ரமாகப் போகவெண்ணினர். கஅ.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] உ0.

[illegible]
[illegible] உக.

[illegible]
[illegible] உஉ.

[illegible]
[illegible] உங.

[illegible]
[illegible] உச.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] உரு.

[illegible]
[illegible] உஎ.

[illegible]
[illegible] உஅ.

[illegible]
[illegible] உகூ.

[illegible]
[illegible] ௩0.

* [illegible]

அநந்தரம் அவர்களெல்லோரும் அந்த ருச்யச்ருங்கரைப்பார்த்து, "ஓ ப்ராஹ்மணரே! நல்லது இந்தப் பழங்கள் எங்களுக்கும் முக்யமானவைகளே; (ஆதலால் நாங்களும் சாப்பிடுகிறோம்) நீரும் வாங்கிக் கொள்ளும்; சாப்பிடும்; தாமதஞ் செய்யவேண்டாம்." என்று சொல்லி ஸந்தோஷத்துடன் கூடி (அவரை) நன்றாய் ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு, கொழுக்கட்டைகளையும் விதம்விதங்களான பக்ஷ்யங்களையும் அவருக்குக் கொடுத்தார்கள். ௨௦.

ஸ்ரீதேஜஸ்வியான ருச்யச்ருங்கரும் அவைகளைச் சாப்பிட்டு, "வனத்தில் நித்யமாய் வஸிப்பவர்கள் (இதற்கு) முன் சாப்பிடாத பழங்கள் இவைகள்" என்று எண்ணினாரன்றோ! ௨௧.

அப்பொழுது அந்த ஸ்த்ரீகள், "யாங்கள வ்ரதஞ்செய்யப் போகவேண்டும்" என்று வ்யாஜஞ் சொல்லி, அந்த ருச்யச்ருங்கருடைய பிதாவுக்குப் பயந்து, ருச்யச்ருங்கரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார்கள். ௨௨.

அவர்களெல்லோரும் போகையில் (அந்த) துக்கத்தால் மனங்கலங்கி நிலைகொள்ளாமல் திரிந்து கொண்டிருந்தாரன்றோ! காச்யபபுத்ரரான விபண்டகருடைய குமாரரான (ருச்யச்ருங்கரென்னும் அந்த) ப்ராஹ்மணரும். ௨௩.

வீர்யவானான அந்த ருச்யச்ருங்கரானவர் மறுநாள் ஆச்ரமத்தினின்று புறப்பட்டு, நல்ல அலங்காரந்தரித்தவர்களாய் அழகிகளாயுள்ள அவ்வுத்தம தாஸிகளிருந்தவிடத்திற்கு வந்துவிட்டார். ௨௪.

ப்ராஹ்மணரான ருச்யச்ருங்கர் (அவ்வாறு) வருகையில் அத்தாஸிகளெல்லோரும் பார்த்தமாத்ரத்தாலே மனங்களித்து, அப்பொழுது அவ்விடமிருந்து ஸமீபத்தில்வந்து அழகாய் உலாவிக்கொண்டு, அவரைப்பார்த்து, "ஓ அழகுள்ளவரே! எங்களுடைய ஆச்ரமத்திற்கு வரவேண்டும்" என்று இவ்வாக்யத்தைச் சொன்னார்கள்; "நிறைந்ததான இந்த ஸத்காரமானது அங்கும் இதைவிட அதிகமாய் நடக்கும்" என்கிற இந்தவாக்யத்தையும் விளக்கமாய்ச்சொன்னார்கள். ௨௫.

நெஞ்சத்திற் புகும் அவர்களெல்லோருடையவும் மொழிகேட்டுப்போக வொப்புக்கொண்டார்; ஸ்த்ரீகளும் அப்பொழுது அவரை அழைத்துக்கொண்டு போனார்கள். ௨௬.

மஹாத்மாவான ப்ராஹ்மணராகிய அந்த ருச்யச்ருங்கரை அங்கதேசத்திற்கு அழைத்துக்கொண்டு போனவுடனே தேவர் (அதாவது மழைக்கபிமானதேவதையாய்க் களித்தவராயுள்ள பர்ஜந்ய தேவர்.), ஜகங்களிக்க மழைபொழிந்தார். ௨௭.

மன்னவரும் தமது தேசத்திற்கு மழையோடுகூடவே வந்த அந்தணராகிய (ருச்யச்ருங்க) முனிவருக்கு எதிர் கொண்டுபோய் வணங்கி ஸாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தார். ௨௮.

சாஸ்த்ரந்தவறாது மிக்கவூக்கத்தோடு அந்த ருச்யச்ருங்கருக்கு அர்க்யத்தையுந்தந்தார்; "(யான் தாஸிகளைக்கொண்டு தம்மை அழைத்து வந்ததனால்) தாங்கள் கோபங்கொள்ளலாகாது" என்று, ப்ராஹ்மணோத்தமராகிய ருச்யச்ருங்கரிடத்து அநுக்ரஹங் கோரினார். ௩௦.

[illegible]
[illegible] ௩௪.

[illegible]
[illegible] ௩௫.

இதி ஶ்ரீமத்ராமாயணே பாலகாண்டே தஶம: ஸர்க:

அத ஏகாதஶ: ஸர்க:

[illegible]
[illegible] ௧.

[illegible]
[illegible] ௨.

[illegible]
[illegible]
[illegible] ௩.

[illegible]

[illegible]
[illegible] ௪.

[illegible]
[illegible] ௫.

[illegible]
[illegible] ௬.

[illegible]
[illegible]

* [illegible] † [illegible]

அந்த ரோமபாதமன்னவர் அந்த ருச்யச்ருங்கரை அந்தப்புரத்திற்குப் போகச் செய்து, (தமது) கன்யகையாகிய சாந்தை யென்பவளை மனதில் திருப்தியோடு சாஸ்த்ரப்படி (விவாஹஞ் செய்து) கொடுத்து ஸந்தோஷத்தை யடைந்தார். ௨௧.

இவ்வாறு [பார்யையாகிய சாந்தையென்பவளோடு கூடி நல்ல சாந்தி பெற்ற ருச்யச்ருங்கரென்னும்] அந்த ப்ராஹ்மணர் அந்த ரோமபாதவரசரின் அந்தப்புரத்தில் ஸகல இஷ்டங்களாலும் பூஜிக்கப்பட்டவராகி ஸுகமாக வாஸஞ் செய்துகொண்டிருந்தார். ௨௨.

பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

பதினோராவது ஸர்க்கம்.

ராஜராஜராகிய தசரதரே! சிறந்த வந்தணரான அந்த ஸநத்குமாரர் கதை சொல்லி முடிக்கும்போது உமது நன்மையைப்பற்றி அவர் சொன்ன வாக்யத்தைச் சொல்லுகிறேன் இன்னுங்கேளும்: ௧.

"இக்ஷ்வாகுவம்சத்தில், பரமதார்மிஷ்டராய் நிறைந்த செல்வமுடையவராய் ஸத்யஸந்தராய் தசரதரென்று பெயர் பெற்றுப் ப்ரஸித்தராய் ஒரரசர் உண்டாகப்போகிறார். ௨.

அம்மன்னவருக்கு அங்கதேசத்தரசரோடு ஸ்நேஹமுண்டாகப் போகிறது. அங்கதேசத்தரசர்க்கு ரோமபாதரென்று ப்ரஸித்தராய்ப் புத்ரருண்டாகப் போகிறார். இந்த ரோமபாதருக்கு மஹாபாக்ய முடையவளாய் சாந்தை யென்று ப்ரஸித்தையாய் ஒரு பெண் உண்டாகப் போகிறாள். ௩.

பெரும்புகழ் பெற்ற வந்தசரதமன்னவர் அந்த ரோமபாதரிடம் போய், "ஓ தர்மபத்தியுடையவரே! யான் பிள்ளையில்லாதவனாயிருக்கின்றேன்; எனது குலத்திற்கு ஸந்தானமுண்டாகும்பொருட்டு யான் செய்யப் போகிற யாகத்திற்கு (உமது பெண்) சாந்தையின் கணவர் ருச்யச்ருங்கர் வந்து யாகம் முடியவேண்டியதா யிருக்கிறது; நீர் அவருக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொள்ளப்போகிறார். ௪.

பின்பு, எல்லாமுசுமுள்ள அந்த ரோமபாதர் (தசரத) மன்னவரின் மொழி கேட்டு, (இத்தசரதர் சொல்லுவது மிகவும் நல்லவிஷயமென்று) மனதில் விசேஷமாகவெண்ணிக்கொண்டு, (மந்த்ரபலத்தால்)புத்ரருண்டாகச் செய்யவல்லவராகிய சாந்தையின் பர்த்தாவான ருச்யச்ருங்கரை அனுப்பப்போகிறார். ௫.

அத்தசரத ராஜரும் கவலைதொலைந்து, அந்தருச்யச்ருங்கரென்னும் வேதியரை அழைத்துக் கொண்டுபோய், உள்ளங்களிக்க அந்த யாகத்தைப் பூர்த்தி செய்துகொள்ளப்போகிறார். ௬.

தர்மங்களையறிந்தவராகி யாகஞ்செய்யவிருப்பங்கொண்ட தசரதராஜர், (தமது) யாகந்தடையின்றி முடிவதற்காகவும், (அதனால்) ஸந்தானமுண்டாவதற்காகவும் (அதனால்) ஸ்வர்க்கமுண்டாவதற்காகவும், ருச்யச்ருங்கரென்னும்

[illegible]
[illegible] ௯
[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible] ௧௧
[illegible]
[illegible] ௧௨
[illegible]
[illegible]
[illegible] ௧௩
[illegible]
[illegible] ௧௪
[illegible]
[illegible] ௧௫
[illegible]
[illegible] ௧௬
[illegible]
[illegible] ௧௭
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௯
[illegible]
[illegible] ௨௦

* [illegible] இதி பா. † [illegible] இதி பா.
‡ [illegible] இதி பாடாந்தரம்.

அச்சிறந்தவந்தணரை (அந்த யாகத்தில் ருத்விக்காயிருக்கும்படி) அஞ்ஜலிபந்தராய்க் கேட்டுக் கொள்ளப்போகிறார்; அச்சிறந்த வேதியரிடத்திலிருந்து அத்தசரதர் அக்கோரிக்கையை அடையவும் போகிறார். ௯.

அளவிடமுடியாத வல்லமையுடையவர்களும் தமது குலத்திற்கு மேன்மையை விளைப்பவர்களும் எல்லாவுலகங்களிலும் ப்ரஸித்தர்களுமாய் இத்தசரதருக்கு நான்கு புத்ரர்களுண்டாகப் போகிறார்கள்.” ௧௦.

முப்பொழுதுமுணர்ந்து வந்தணர்களிற் சிறந்து வல்லவராகிய அந்த ஸநத்குமாரர் முன் க்ருதயுகத்தில் இவ்வாறு (கீழ்ச் சொல்லியபடி) கதை சொன்னார். ௧௧.

“நரோத்தமா! மஹாப்ரபோ! (தசரதரே!) நீர் புத்ரருண்டாகக் கோரினவராகையால், படைகளையும் வாஹனங்களையுங் கூட்டிக்கொண்டுபோய் நல்ல ஸத்காரஞ் செய்து அந்த ருச்யச்ருங்கரை நேரே அழைத்து வரவேண்டும்” என்று. ௧௨.

ஸாரதியாகிய ஸுமந்த்ரருடைய வாக்யத்தையுங் கேட்டு வஸிஷ்டரையும் அநுமதிகேட்டு, [தசரதமன்னவரானவர் நாம் நினைத்தகார்யம் முடிந்ததென்று) நெஞ்சம் நிறைந்து, வஸிஷ்டரிடம் விடைபெற்று,] அந்த புரஸ்த்ரீ ஜநங்களையும் மந்த்ரிகளையுங் கூட்டிக்கொண்டு, ருச்யச்ருங்கரென்னும் அவ்வந்தணரிருக்குமிடம் புறப்பட்டார். ௧௩.

காடுகளையும் ஆறுகளையும் மெல்ல மெல்லத் தாண்டிக்கொண்டு, (அந்த ருச்ய ச்ருங்க) மஹாமுனிவர் எவ்விடமிருந்தனரோ அவ்விடமே போய்ச் சேர்ந்தார். ௧௪.

அவ்விடஞ்சென்று, வேதியர்களிற் சிறந்தவராகி, ருஷிபுத்ரராகி, கொழுந்து விட்டெரியும் அக்நிபோன்றவராகி, ரோமபாதருகிலிருக்கும் ருச்யச்ருங்கரை முதலில் கண்டார். ௧௫.

பிறகு (ரோமபாத) மன்னவரும் அத்தசரதருக்குத் தோழராதலால் தக்கபடி மேலான பூஜைகள் செய்தார். ௧௬.

ரோமபாதரும் (தசரதரோடு தமக்குண்டான) தோழமையையும் உறவையும், ருஷிபுத்ரராய் அறிஞராயுள்ள ருச்யச்ருங்கருக்குச் சொற்றார்; அப்பொழுது அத்தசரதரை (ருச்யச்ருங்கர்) பூஜித்தார். ௧௭.

இவ்வாறு அந்தரோமபாதரால் பூஜிக்கப்பெற்ற வாண்சிங்கமாகியவத்தசரதவரசர் அந்த ரோமபாதரோடுகூடி 7-8-நாள் இருந்துவிட்டு இந்தரோமபாத மன்னவரைநோக்கி, “ஓ மஹாராஜரே! (யான்) பெரியகார்யத்தை (அதாவது யாகத்தை) ச்செய்யத்தொடங்கியிருப்பதால் உமதுபெண் சாந்தையென்பவள் கணவரோடுகூடி எனது நகரத்திற்கு வரவேண்டும்” என்று சொன்னார். ௧௮.

(ரோமபாத) ராஜாவும் அறிவுடையராகிய வத்தசரதருக்கு, “ஓதசரதரே! அப்படியே ஆகட்டும்போய்வாரும்” என்றுசொல்லிவிட்டு, “ஓ ருச்யச்ருங்கரே! நீர் (உமது) மனைவியோடுகூடி (அயோத்யைக்கு) ப்போகவேண்டும்” என்று ருச்யச்ருங்கருக்குச் சொன்னார். ௨௦.

[illegible]

12, 13, 14- [illegible]

[illegible]

ருஷிபுத்ரனை அந்தருசியர்களும் (அதைக்) கேட்டு, அப்படியே ஆகட்டுமென்று (ரோமபாத) மன்னவருக்குச் சொல்லி, அப்பொழுது (அந்த ரோமபாத) மன்னனிடத்தில் விடைபெற்று மனைவியோடு கூடி புறப்பட்டார். ௨௧.

வல்லவராகிய அந்த ரோமபாதரும் தசரதரும் ஒருவர்க்கொருவர் மனமகிழ்ந்து கைகூப்பி மார்புகொண்டு நன்றாய்க் கட்டிக்கொண்டு பேரின்பமடைந்தனர். ௨௨.

பின்பு ரகுகுலத்திலுதித்தவராகிய தசரதர் (தமது) நண்பரான ரோமபாதரிடத்தில் விடைபெற்றுப் புறப்பட்டு, விரைவில் செல்லவல்லவர்களான தூதர்களை, தமது நகரமெங்கும் நன்றாய்விளக்கி சிறப்பித்து மணங்கொண்ட புகைகளிட்டு அழகாய் தோரணங்கள் நாட்டி நல்ல அலங்காரஞ்செய்து வைக்கும்படி பட்டணத்திலுள்ளவர்களுக்குத் தெரிவிக்க அனுப்பினார். ௨௩.

பிறகு அப்பட்டணத்திலுள்ளோரெல்லோரும் மன்னவர் வருவதைக் கேட்டு மிகமகிழ்ந்து அப்பொழுது, மன்னவர் சொல்லியனுப்பியபடி அதை யெல்லாம் அவ்வாறே செய்தனர். ௨௫.

பின்பு, அலங்காரங்கள் செய்து அழகாய் விளங்க, சங்க-துந்துபி-வாத்யகோஷங்கள் முழங்க, ருச்யச்ருங்கரென்னும் அந்தணரை முன்னிட்டுக்கொண்டு அயோத்யாநகரியுட்புகுந்தார் (தசரத) மன்னவர் ௨௬.

பிற்பாடு, இந்த்ரனது செய்கைபோன்ற செய்கையுடைய (அத்தசரத) ராஜா பூஜைசெய்து அழைத்துவரும் ருச்யச்ருங்கரென்னும் அந்தணரை அந்நகரத்திலுள்ளோரெல்லோருங் கண்டு மிகக் களித்தனர் ௨௭.

(தசரதரும்) இந்த ருச்யச்ருங்கரை அந்தப்புரத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் சாஸ்த்ரப்படி பூஜைசெய்து அப்பொழுது அந்தருச்யச்ருங்கரை அழைத்துவந்ததினாலேயே தமது கார்யமெல்லாம் பூர்த்தியாய்விட்டதாக வெண்ணிக்கொண்டார். ௨௮.

அவ்வாறு, கணவராகிய ருச்யச்ருங்கரோடுகூடி வந்த கண்ணழகியான சாந்தையென்பவளை அரசரது அரண்மனைப் பெண்டிரெல்லோருங் கண்டன்புகொண்டு பேரின்பங்கொண்டனர். ௨௯.

அந்நகரத்து அரண்மனைப்பெண்டிர் பணிவிடைசெய்ய, அத்தசரதரும் அதற்கும் மேலாய்ப்பணிவிடைசெய்ய, அவ்வரண்மனையில் தனது கணவராகிய ருச்யச்ருங்கரோடின்பங்கொண்டு சிறிது காலமிருந்து கொண்டிருந்தனள் அச் சாந்தையென்பவள். ௩௦.

பதினோராவது ஸர்க்கம் முற்றிற்று.

நாலைந்து புருஷர்களோடு பின்தொடர்ப்பித்துவிடவேண்டும். அக்குதிரைப்போகும் வழியெல்லாம் ப்ராம்மணர்கள் மந்த்ரத்தால் ஹோமஞ்செய்துகொண்டு போகவேண்டும். அக்குதிரையை யாராவது பிடித்துக்கட்டினால் அவர்களைப் போர்செய்து வென்று குதிரையை மீட்டுக்கொண்டு வரவேண்டும். அவ்வாறு செய்யாவிடின் யாகஞ்செய்பவன் ப்ரஷ்டனாவான். அவ்வாறு குதிரையானது தேசமெங்கும் ஒருவருஷந்திரிந்து வந்துசேரும். இதற்குள்ளாகவே எல்லா ஸாமக்ரிகளையும் ஸித்தமாகச் செய்துகொண்டு பின்பு அக்குதிரையை யாகத்திற்குப் ப்ரதாநபசுவாக வைத்துக்கொண்டு இரண்டாவது வருஷம் வஸந்த ருதுவில் சைத்ரமாஸம் யாகத்தைத் தொடங்கி நடத்தவேண்டும் இதுவே அச்வமேதயாகத்தின் சுருக்கமானகதை. இனி 12, 13, 14 ஆவது ஸர்க்கங்களில் அச்வமேதயாகஞ் சொல்லப்படும். இச்சுருக்கமானகதையை மனதில்கொண்டு அங்கங்கு கதையின் வரலாற்றை விரிவாய்த் தெரிந்துகொள்க.

[illegible]

[illegible] ௨.
[illegible] ௩.
[illegible] ௫.
[illegible] ௬.
[illegible] ௯.
[illegible] ௧௦.
[illegible] ௧௨.
[illegible] ௧௩.

பன்னிரண்டாவது ஸர்க்கம்.

பின்பு சிலகாலஞ் சென்றபிறகு சித்திரை மாதம் பௌர்ணமிகூடிய அழகான வஸந்த ருது வருகையில், யாகந்தொடங்க வெண்ணமுண்டாயிற்று (தசரத) ராஜருக்கு. ௧.

அப்புறம் (தசரதராஜனவர் தமது) குலத்திற்கு ஸந்தானமுண்டாகும் பொருட்டு, இவ்வகாரியத்திலுள்ள அந்த ருச்யச்ருங்கரைத்தெண்டனிட்டு, யாகத்திற்கு (ப்ரதானமாயிருக்கும்படி) வரித்தார். ௨.

அந்த ருச்யச்ருங்கரும் நல்ல ஸத்காரம் பெற்று, "அப்படியே ஆகட்டும்; யாகத்திற்கு வேண்டிய சாக்குகளையெல்லாஞ் சேர்க்கலாம்; குதிரையையும் விடலாம்" என்று ராஜாவுக்குச் சொன்னார். ௩.

பிறகு ராஜாவானவர் மந்த்ரிகளில் தலைவரான ஸுமந்த்ரரைப்பார்த்து, "ஓ ஸுமந்த்ரரே! ஸுயஜ்ஞர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர், புரோஹிதரான வஸிஷ்டர், வேதம் படிக்கும் மற்றுமுள்ள ப்ராஹ்மணோத்தமர்கள் ஆகிய ருத்விக்குகளை (எல்லாம்) அழைத்து வாரும்" என்றும் வாக்யத்தைச் சொன்னார். ௫.

பின்னை, வேலைகளைச் சுருசுருப்பாய்ச் செய்ய வல்லவராகிய அந்த ஸுமந்த்ரரானவர் விரைவில் போய், வேதங்களின் கரைகண்டவரான அவ்வந்தணரனைவரையும் குறித்து அழைத்து வந்துவிட்டார். ௭.

தர்மாத்மாவாகிய அத்தசரதமன்னவர் அவ்வேதியர்களைப் பணிந்து (அவர்களைநோக்கி), "யான் புதல்வரில்லாது வருந்துகின்றமையால் (என்றனக்கு) இன்பமேயில்லை; அது பற்றி அச்வமேதயாகஞ் செய்யவேண்டுமென்று எனக்கு எண்ணமுண்டாயிருக்கின்றது; ஆதலால் நூற்களிட்ட வழுங்கற்றவாறு யான்யாகஞ்செய்ய நினைவுகொண்டிருக்கின்றேன்; அறிஞரது புதல்வராய ருச்யச்ருங்கரது மேலானசெய்கைகொண்டு, கோரினவைகளையும் யான் பெறப்போகின்றேன்" என்றும் அறம்பயன்களோடு கூடித்தக்கதாயுள்ள இவ்வின் சொல்லைச்சொற்றார். ௯.

பின்பு, வஸிஷ்டர்முதலிய வேதியரனைவரும், மன்னவரது முகத்தினின்று வெளியான அம்மொழியை, "நல்லது அங்ஙனமே செய்யும் யாங்கள் செய்து வைக்கின்றோம்" என்று கொண்டாடினர். ௧௦.

அப்பொழுது ருச்யச்ருங்கர் முதலியோரும், "யாகத்திற்கு வேண்டிய ஸாமக்ரிகளைச்சேரும்; அச்வத்தையும் விடும்; புத்ரநிமித்தமாய் உமக்கு இந்தத் தர்மபுத்தியுண்டானதால், அளவிடமுடியாத பராக்ரமமுடைய நான்கு புத்ரர்களை நீர் எல்லா விதத்தாலும் அடையப்போகிறீர்" என்று மன்னவருக்குச் சொற்றனர். ௧௨.

பிறகு, எல்லோரையுந் தம்மிடமன்பு கூரச்செய்யும் (அத்தசரத) ராஜரும் அவ்வேதியர் மொழிகேட்டுக்களித்து, மந்த்ரிகளையும்நோக்கி, மகிழ்வுகொண்டு இவ்வின் சொல்லைச் சொன்னார்:— ௧௩.

குரூணாம் வசநாச்சீக்ரம் ஸம்பாரா: ஸம்ப்ரியந்து மே|
ஸமர்த்தாதிஷ்டிதஶ்சாஶ்வ: ஸோபாத்யாயோ விமுச்யதாம்| ௧௪.
ஸரய்வாஶ்சோத்தரே தீரே யஜ்ஞபூமிர்விதீயதாம்|
ஶாந்தயஶ்சாபிவர்த்தந்தாம் யதாகல்பம் யதாவிதி| ௧௫.
ஶக்ய: கர்த்துமயம் யஜ்ஞ: ஸர்வேணாபி மஹீக்ஷிதா|
நாபராதோ பவேத் கஷ்டோ யத்யஸ்மிந் க்ரதுஸத்தமே| ௧௬.
சித்ரம் ஹி ம்ருகயந்தே ஹி வித்வாம்ஸோ ப்ரஹ்மராக்ஷஸா:|
நிஹதஸ்ய ச யஜ்ஞஸ்ய ஸத்ய: கர்த்தா விநஶ்யதி| ௧௭.
தத்யதா விதிபூர்வம் மே க்ரதுரேஷ ஸமாப்யதே|
ததா விதாநம் க்ரியதாம் ஸமர்த்தா: கரணேஷ்விஹ| ௧௮.
ததேதி ச தத: ஸர்வே மந்த்ரிண: ப்ரத்யபூஜயந்|
பார்த்திவேந்த்ரஸ்ய தத்வாக்யம் யதாஜ்ஞப்தம் நிஶம்ய தே| ௧௯.
ததா த்விஜாஸ்தே தர்மஜ்ஞா வர்த்தயந்தோ ந்ருபோத்தமம்|
அநுஜ்ஞாதாஸ்தத: ஸர்வே புநர்ஜக்முர்யதாகதம்| ௨௦.
கதாநாம் து த்விஜாதீநாம் மந்த்ரிணஸ்தாந் நராதிப:|
விஸர்ஜயித்வா ஸ்வம் வேஶ்ம ப்ரவிவேஶ மஹாத்யுதி:| ௨௧.

இதி ஸ்ரீமத்ராமாயணே பாலகாண்டே த்வாதஶஸ் ஸர்க்க:.

அத த்ரயோதஶஸ் ஸர்க்க:.

புந: ப்ராப்தே வஸந்தே து பூர்ண: ஸம்வத்ஸரோ(அ)பவத்|
ப்ரஸவார்த்தம் கதோ யஷ்டும் ஹயமேதேந வீர்யவாந்: ௧.
அபிவாத்ய வஸிஷ்டம் ச ந்யாயத: ப்ரதிபூஜ்ய ச|
அப்ரவீத் ப்ரஶ்ரிதம் வாக்யம் ப்ரஸவார்த்தம் த்விஜோத்தமம்|
யஜ்ஞோ மே க்ரியதாம் ப்ரஹ்மந் யதோக்தம் முநிபுங்கவ|
யதா ந விக்ந: க்ரியதே யஜ்ஞாங்கேஷு விதீயதாம்|
பவாந் ஸ்நிக்த: ஸுஹ்ருந் மஹ்யம் குருஶ்ச பரமோ மஹாந்|
வோடவ்யோ பவதா சைவ பாரோ யஜ்ஞஸ்ய சோத்யத: ௪.

''உமது பெரியோர்களின் சொற்படி சாக்ருகளை விரைவிற்சேருங்கள்; குதிரையையும் வல்லவர்களைக்கொண்டு காக்கச்செய்து உபாத்யாயர்களையும் பின்றொடர்ப்பித்து விடுங்கள்; கச.

ஸரயூநதியின் வடகரையில் யாகசாலையை ஏற்படுத்துங்கள்; [illegible] முறைதவறாது சாந்திகளையுஞ் செய்யுங்கள்; கரு.

இவ்வச்வமேதயாகத்தில் மிகத்துன்பம் விளைக்குங்குற்றமொன்றுமில்லாதாயின் இந்த யாகத்தை யெல்லாவரசர்களுஞ் செய்வார்கள்; கசு.

கற்றவர்களான ப்ரஹ்மராக்ஷஸர்கள் இந்த யாகத்தில் கெடுதலையேயெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்; யாகங்கெட்டால் உடனேகர்த்தா அடியோடு நாசமாவான்; கஎ.

ஆதலால் எந்த யேற்பாடு செய்தால் இந்த யாகமானது சாஸ்த்ரப்படி முடியுமோ அப்படிப்பட்டயேற்பாடு செய்யுங்கள்; நீங்கள் இச்செய்கையில் வல்லவர்கள்.'' கஅ.

பின்பு, மந்த்ரிகளனைவரும், அவ்வாறே செய்கிறோமென்றுவ[illegible]ரைத்துக் கௌரவித்து, மஹாராஜரின் அம்மொழியைக் கட்டளைப்படிசெய்தனர். க௯.

பிறகு அந்த ப்ராஹ்மணர்களெல்லோரும், தர்மங்களையறிந்தவரான மஹாராஜாவை ஸ்தோத்ரஞ்செய்தார்கள்; பின்பு விடைபெற்றுக் கொண்டு, வந்தபடி திரும்பிப்போனார்கள். உ0.

பின்னை அந்த ப்ராஹ்மணர்கள் போனபிறகு மஹாராஜாவானவர் அம்மந்த்ரிகளெல்லோரையும் அனுப்பிவிட்டு முகவொளி பெற்றுத் தமது மாளிகைக்குப் போய்விட்டார். உக.

பன்னிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

பதின்மூன்றாவது ஸர்க்கம்.

மறுபடியும் வஸந்தருது வருகையில் பூர்ணமாக ஒருவர்ஷமாயிற்று; (அப்பொழுது,) வல்லவரான தசரதரானவர் தமக்கு ஸந்தானமுண்டாவதைப் பற்றி அச்வமேத யாகஞ் செய்யவேண்டி (வஸிஷ்டரிடம்) போனார். க.

மறையவர்களனைவரிலுஞ் சிறந்தவரான வஸிஷ்டரை நோக்கித் தெண்டனிட்டு தக்க பூஜை செய்து, தமக்குப் புதல்வருண்டாகக் கருதி, ''ஓ அறிஞர்களுள் சிறந்தவர்களாய வஸிஷ்டரே! யான் றொடங்கும் இந்த யாகத்தை முறைவழுவாது நடத்திவைக்கவேண்டும்; யஜ்ஞாங்கங்களில் தடையொன்றும் வாராதிருக்குமாறு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்; என்றனக்கு, எல்லா நண்பர்களிலுஞ்சிறந்த என்னிடம் நன் கருத்து வைத்த அன்பரும் குருவும் நீரேயாதலால், யான் றொடங்கும் இந்த யாகத்தின் பாரத்தை நீரே வஹிக்கவேண்டும்'' என்று வணக்கத்துடன் சொன்னார். உ

[illegible]

சிறந்தவர் தலைமையான அவ்வஸிஷ்டரும், அவ்வாறே நீர் கேட்டுக்கொண்டவை யெல்லாஞ் செய்விக்கிறேன்” என்று மன்னவருக்குச் சொன்னார். கக.

பின்னை, யாகங்களைச் செய்துவைப்பதில் நன்கு பயின்றவர்களாய் யாககார்யங்களில் அந்தந்த சரக்குகளைக்கொண்டு வருவதற்குத் தலைவராக வேற்படுத்தப்பட்டவர்களாய் அறஞ்செயற் செய்வோர்களிற் சிறந்தவர்களாய் படிப்பினாலும் பருவத்தினாலும் பெரியோர்களாய் இருக்கும் ப்ராஹ்மணர்கள், தொழிலாளிகள், சில்பிகள், தச்சர்கள், (நிலமுதலியவைகளை) வெட்டுவோர்கள், கணக்கர்கள், சித்ரமெழுதுகிறவர்கள், கூத்து கற்பிப்பவர்கள், கூத்தாடுபவர்கள், மாசறப் பலபேரிடத்து நூற்களைக்கேட்டு நன்குணர்ந்த (மற்றமுள்ள) புருஷர்கள் ஆகிய இவர்களையும் நோக்கி வஸிஷ்டர் சொன்னார்:— கஉ.

“மன்னவரின் கட்டளைப்படி யாககார்யங்களை நீங்கள் விரைவிற் றொடங்கவேண்டும; (புதிதாய்க்கட்டடங்கள் கட்டுவதற்காக) அநேகமாயிரஞ் செங்கற்களைக் கொண்டுவரவேண்டும்; (வெளியிலிருந்து வருகிற) அரசர்களுக்காக, அழகாய் உயர்ந்து நீண்டகன்றிருக்குமாறு மாளிகைகளை யேற்படுத்தவேண்டும்; ப்ராஹ்மணர்களுக்கும், வெகு அழகாய் உறுதியாய் இருக்கும்படி க்ருஹங்களைக்கட்டி, (அதில்) அநேக பக்ஷ்யங்களையும் அந்நங்களையும் பாநகங்களையும் சேர்த்துவைக்கவேண்டும்; அங்ஙனமே பட்டணத்து ஜநத்திற்கும் மிகவிசாலமான விடங்களையேற்படுத்திக்கொடுத்து அங்கு பலவகைப்பணியாரங்களும் (மற்றும் அவரவர்களுக்கு) வேண்டிய ஸகல பதார்த்தங்களு மிருக்குமாறு செய்து வைக்கவேண்டும்; அவ்வாறே நாட்டுப்புறத்து ஜநத்திற்கும் மரியாதைசெய்து சாஸ்த்ரந்தவறாது வெகு அழகாய் (அதாவது எல்லோர்க்கும் மேலாய்) அந்நங் கொடுக்கவேண்டும்; (அவர்களை நாட்டுப்புறத்தாரென்றெண்ணி) விளையாட்டாக (அதாவதுபரிஹாஸமாக) அந்நங் கொடுக்கவேண்டாம்; எவ்வாறு செய்தால் எல்லா வர்ணத்தாருங் கௌரவமடைவார்களோ அவ்வாறு பூஜிக்கவேண்டியது; ஆசைகொண்டாவது கோபங்கொண்டாவது (ஒருவரையும்) அவமதித்தலாகாது; யாககார்யங்களிலேயே கருத்தைச்செலுத்தி வேலைசெய்யும் புருஷர்களையும் அவ்வாறே முறை தவறாது மேலாகப் பூஜிக்கவேண்டியது; அவர்களெல்லோர்க்கும் போஜநத்தையும் தநத்தையும் (த்ருப்தியினால்) போதும் போதுமென் றுரைக்குமாறு கொடுக்கவேண்டும்; நீங்கள் (நமது மன்னவர் நம்மிடம் வைத்திருக்கும்) ப்ரீதியினாலேயே மனதில் அன்பு கொண்டவர்களாகி, எவ்வாறு செய்தால் (ஒருவருக்கும் மனங்கோணாமல் எல்லோர்க்கும்) இஷ்டமாய் நன்றாய் விசேஷமாய் ஒரு குறைவுமில்லாததாய் (யாககார்யம்) எல்லாம் முடியுமோ அவ்வாறு செய்யவேண்டும்.” கரு.

பின்பு எல்லாருமொன்றுகூடி வஸிஷ்டரிடம் வந்து, “நீர் சொன்னவையெல்லாம் உமது சொற்படி செய்துவிட்டோம்; ஒன்றுங் குறையில்லை; இன்னுமேதேனுஞ் சொல்லினும் அதையனைத்தும் ஒன்றுஞ் சிந்தாது செய்யக் காத்துக்கொண்டிருக்கின்றோம்” என்று சொல்லினர். கசா.

[illegible] ௧௭.

[illegible] ௧௯

[illegible] ௨௧

[illegible] ௨௨.

[illegible] ௨௩.

[illegible] ௨௪.

[illegible] ௨௫.

[illegible] ௨௬.

[illegible] ௨௭.

[illegible] ௨௮.

[illegible] ௨௯.

[illegible] ௩௰.

பிறகு வஸிஷ்டரானவர் ஸுமந்த்ரனையும் அழைத்து (இவ்வாறு) சொன்னார்:— ௧௯.

“பூமியிலுள்ள தார்மிகர்களான ராஜாக்களை (எல்லாம்) அழைப்பியும்; ஆயிரக்கணக்காகப் பூமியிலிருக்கும் ப்ராம்மண க்ஷத்ரிய-வைச்ய-சூத்ரர்களெல்லாரையும் நன்கு வரவழைத்து மனிதர்களையும் கௌரவித்து எல்லா தேசங்களிலிருந்தும் வரவழைப்பியும்; ௨௰.

வல்லவரும், உண்மையான பராக்ரமமுடையவரும், எல்லா சாஸ்த்ரங்களையும் ஆராய்ந்தவரும், வேதங்களையுமறிந்தவரும், பாபமற்றவரும், மிதிலா ராஜ்யத்தை வகிப்பவருமான ஜநகரென்பவரை நீர் கௌரவத்துடன் நல்ல ஸத்காரஞ் செய்து அழைத்துவாரும்; அவரை முன் ஸம்பந்தியென்று அறிந்து அதனால் முன்னே (அழைத்து வரும்படி) உமக்குச் சொல்லுகிறேன்; ௨௧.

எப்பொழுதும் (நம்மிடம்) ப்ரேமங்கொண்டவராய், நன்மையையே சொல்பவராய், (நமது) மஹாராஜாவுக்குத் தோழராயிருக்கும் காசிராஜாவையும் அவ்வாறே நீர் நேராகப்போய் அழைத்து வரவேண்டும்; ௨௨.

பரமதார்மிகராய், (நமது) மஹாராஜாவுக்கு மாமனாராய், பெரியவராயுள்ள கேகயராஜாவையும், (அவரது) புத்ரர்களுடன் கூட்டி அவ்வாறே நீர் இங்கு அழைத்து வரவேண்டும்; ௨௩.

மஹாராஜருக்கு நண்பராய், செல்வம் நிறைந்தவராய், பெரும்புகழ்பெற்றவராய், அங்கதேசத்தரசராயுள்ள ரோமபாதரையும் நல்லபூஜை செய்து கௌரவித்து அழைத்துவாரும்; ௨௪.

கிழக்குத்தேசம், ஸிந்துதேசம், ஸௌவீரதேசம், ஸௌராஷ்ட்ரதேசம், தென்தேசம் என்று இவ்விடங்களிலிருக்கும் எல்லாவரசர்களையும் அழைப்பிக்க வேண்டும்; ௨௫.

இன்னும், பூமியில் நேசர்களாயுள்ள அரசர்களெவர்களுண்டோ அவர்களையும் அவர்களோடு கூடவருகிறவர்களையும் அவர்களது பந்துக்களையுங் கூட்டி சீக்ரமாக அழைத்துவாரும்.” ௨௬.

வஸிஷ்டரது சொற்கேட்டு ஸுமந்த்ரர் அப்பொழுதே சீக்ரமாகப் போய், நல்லவர்களாயுள்ள அங்கிருந்த புருஷர்களை அழைத்து ராஜாக்களை அழைத்து வரும்படி கட்டளையிட்டார். ௨௭.

தர்மாத்மாவான ஸுமந்த்ரரானவர் முனிவரது நியமனப்படி அரசர்களை அழைத்துவருவதற்கு உடனே ப்ரயாணஞ் செய்தார். ௨௮.

முன்பு வஸிஷ்டர்கட்டளையிட்ட அந்தத் தொழிலாளிகளெல்லோரும் புத்திமானான வஸிஷ்டரிடம் வந்து, (“உமது கட்டளையின்படி எல்லாம் ஸித்தமாய்விட்டது” என்று) யாகத்தைப்பற்றி செய்தவேலைகளை யெல்லாந் தெரிவித்தனர். ௨௯.

பிறகு, ப்ராஹ்மணோத்தமரான வஸிஷ்டரானவர் ஸந்தோஷமடைந்து அவர்களெல்லோரையும்பார்த்து, “அலக்ஷ்யத்தினாலாவது விளையாட்டினாலாவது ஒருவருக்கும் தானங்கொடுக்கவேண்டாம்; அலக்ஷ்யஞ்செய்து கொடுக்குந்தானம், தானங்கொடுப்பவனைக் கெடுத்துவிடும்; இவ்விஷயத்தில் ஸந்தேஹமில்லை” என்னும் வாக்யத்தைச் சொன்னார். ௩௰.

[illegible]

—

[illegible]

—

[illegible]

பின்பு கொஞ்ச நாள்களுக்குள்ளாவே அரசர்கள், தசரதருக்கென்றே அநேக ரத்நங்களை யெடுத்துக் கொண்டு, வந்துவிட்டார்கள். க௧,௦.

பிற்பாடு வஸிஷ்டரானவர் மிகவும் ஸந்தோஷமடைந்து ராஜாவைப் பார்த்து இவ்வார்த்தைச் சொன்னர்:— க௨.

“ஓ உத்தமபுருஷரே! உமது கட்டளையின்படி அரசர்களெல்லோரும் வந்துவிட்டார்கள்; யானும் அச்சிறந்தமன்னவரனைவர்க்கும் தக்கபடி மரியாதை செய்து விட்டேன்; க௩.

ஓ ராஜாவே! (யாககார்யங்களில்) நல்லஊக்கமுள்ள புருஷர்களைக் கொண்டு, வேண்டியவையெல்லாம் விசித்தமாகச் செய்துவிட்டேன்; இதோ யாகசாலையானது ஸமீபத்தில் இருக்கிறது; நீரும், யாகஞ் செய்யப் புறப்படவேண்டியதே; க௪.

ஓ ராஜோத்தம! (யாகத்திற்கு) வேண்டியவை யெல்லாம் ஆங்காங்கு கொண்டு வைத்து, மனதினுல் ஸ்ருஷ்டிக்கப்பட்டதுபோல் அழகாய் விளங்கும் அந்த யாகசாலையைத் தாம் வந்து பார்க்கவேண்டும்.” க௫.

அவ்வாறே, வஸிஷ்டர் ருச்யச்ருங்கர் என்னுமிவர்கள் (இருவரும் ஒன்று சேர்ந்து சொல்ல,) இருவருடையவுஞ் சொற்கேட்டு, நல்ல நாள் நக்ஷத்ரங்கள் பார்த்து (தமது மாளிகையினின்று யாகசாலைக்குப்) புறப்பட்டார் (தசரத) பூபதி. க௬.

பின்பு வஸிஷ்டர் முதலியவச்சிறந்த வந்தணரனைவருமொன்று கூடி, ருச்ய ச்ருங்கரை முன்னிட்டுக் கொண்டு, அப்பொழுது யாகசாலைக்கு வந்து, சாஸ்த்ரந்தவருது முறைதவருது யாககார்யத்தைத் தொடங்கினர் க௭.

பதின் மூன்றவது ஸர்க்கம் முற்றிற்று.

பதினன்காவது ஸர்க்கம்.

இவ்வாறு, யாகஞ் செய்யவேண்டி குதிரையைவிட்டு ஓராண்டு நிரம்ப, அக்குதிரையும் வந்து சேர, ஸரயூநதியின் வடகரையில் மன்னவரது யாகந் தொடங்கப் பட்டது. க.

மிகவும் மஹாத்மாவான இத்தசரதமன்னரது அச்வமேதமென்னுஞ் சிறந்த யாகத்தில் ப்ராஹ்மணோத்தமர்களானவர்கள் ருச்யச்ருங்கரை முன்னிட்டுக் கொண்டு கார்யத்தை நடத்தினர்கள். உ.

வேதப்பொருளை நன்குயுணர்ந்து யாகஞ் செய்துவிக்கும் அந்தணர் களானவர்கள் சாஸ்த்ரந்தவருது (அந்த யாகத்தில்) கார்யத்தைச் செய்தார்கள். கட்டளை தவருது நீதிதவருது நூற்றவருது நாற்புறத்தும் நடந்தார்கள். ௩.

[illegible] ௩.

[illegible] ௫.

[illegible] ௬.

[illegible] ௭.

[illegible] ௮.

[illegible] ௯.

[illegible]

[illegible] ௧௨.

[illegible] ௧௩.

[illegible] ௧௪.

* ‹‹ [illegible] ›› [illegible]

வேதியர்கள், அந்த யாகத்தில் செய்யவேண்டிய ப்ரவர்க்யமென்னுங் காரியத்தையும் உபஸதமென்னுங் காரியத்தையும் சாஸ்த்ரப்படியாகவும் பட்டப்படியும் மற்றும் செய்யவேண்டிய நடவடிக்கைகளையும் எல்லாவற்றையும் நடத்தினார்கள். ௪.

பின்பு மனமகிழ்ச்சியுள்ளவரெல்லோரும் களித்தவர்களாகி, (அவ்வளவு ப்ரகாரம் கேட்டு) அந்தப் புருஷ முறைப்படி, காலையில் நடத்தவேண்டிய யாகம்முதலிய நடவடிக்கைகளை நடத்தினார்கள். ௫.

(அந்த யாகத்தில்) இந்திரனுக்குக் கொடுக்கவேண்டிய ஹவிர்பாகமும் சாஸ்த்ரப்படி கொடுக்கப்பட்டது. ஸோமமென்னுங் கொடி நன்றாய்ச் செழுத்திருந்ததால் அந்தணர்கள் அதைப் புகழ்ந்துகொண்டார்கள்*. மத்யாஹ்நத்தில் செய்யவேண்டிய யாகமும் முறைதவறாது நடத்தப்பட்டது. ௬.

மேலும் மஹாத்மாவான இந்தசரதராஜரைப்பற்றிய, மூன்றாவதான (அதாவது ஸாயங்காலத்தில் செய்யவேண்டிய) யாகத்தையும் அச்சிறந்த அந்தணர்கள் அவ்வாறே தவறாது நடத்தினார்கள். ௭.

அந்த யாகத்தில் மந்த்ர தந்த்ரலோபமாவது நன்றாய் அக்நியில் ஹோமஞ்செய்யாமலிருந்ததாவது சிறிதுங் கிடையாது; அவர்கள் நன்மையைக் கோரி செய்ததனால் யாவும் நிறைவுற்று நடந்தன. ௮.

அந்த யாகம் நடக்கும் நாட்களில் ஐயோவென்று கதறினவனாவது, பசியினால் வருந்தினவனாவது, கல்வியில்லாத வேதியனாவது, நூறுபேர்களாற் பின்தொடரப்படாத வேதியனாவது காணப்படவில்லை. ௯.

நாடோறும் (அந்தயாகத்தில்) அந்தணர்களும், சூத்ரர்களும், ருஷிகளும், தபஸ்விகளும், (அல்லது ஸந்யாஸிகளும்) முதியவர்களும், நோயாளிகளும், பெண்களும், சிறியவர்களும் புசித்தார்கள். ௧௦.

“எப்பொழுதும் புசித்துக்கொண்டிருப்பவர்களுக்கும் (பணியாரம் முதலியவைகளிலுண்டான ருசியினால்) த்ருப்தியுண்டாகவில்லை; அன்னத்தையும் பலவகையாடைகளையுங் கொடுங்கள் கொடுங்கள்” என்று அந்த யாகத்தில் (இருக்கும் அதிகாரிகளானவர்கள் மன்னவரால்) ஏவப்பட்டவர்களாகி அவ்வாறே செய்தார்கள். ௧௧.

அப்பொழுது அந்த யாகத்தில், (பாகசாஸ்த்ரத்திற் சொல்லிய) நல்ல ஏற்பாடுபடி செய்யப்பட்டவைகளாய், மலைக்கொப்பானவைகளாயுள்ள அநேக அன்னகூடங்கள் நாள்தோறும் ஸித்தமாயிருந்தன. ௧௨.

அநேகதேசங்களிலிருந்து வந்த புருஷர்களும், ஸ்த்ரீகளின் கூட்டங்களும், மஹாத்மாவான தசரதருடைய அந்த யாகத்தில் அன்னங்களாலும் பானங்களாலும் மிகவும் த்ருப்தியடைந்தவர்களாகியிருந்தார்கள். ௧௩.

---

* இந்த வாக்யத்திற்கு, “யாகத்திற்கு நாற்புறத்திலும் வேதியர்கள் உட்கார்ந்துகொண்டு, ஸோமமென்னுங் கொடியைக் கல்லெடுத்து நெருக்கி, யாகஞ்செய்யவேண்டி அதிலிருந்து ரஸத்தை நன்றாய்ப் பிழிந்தெடுத்தார்கள்” என்றும் கோவிந்தராஜர் தாத்பர்யம் எழுதுகிறார்.

[illegible]
[illegible]

[illegible]
[illegible] கசு.

[illegible]
[illegible] கஎ.

[illegible]
[illegible] கஅ.

[illegible]
[illegible] ககூ.

[illegible]
[illegible]

[illegible]
[illegible] உக.

[illegible]
[illegible] உஉ.

[illegible]
[illegible] உங.

[illegible]
[illegible] உச.

[illegible]
[illegible] உரு.

* "[illegible]" இதி பாடாந்தரம்.

"ஐயா! தாங்களிட்ட அன்னமானது நல்லயேர்பாடு பொருந்தி வெகுருசியாயிருப்பதால் எங்களுக்குத் திருப்தியாயிருக்கிறது; உங்களுக்கு க்ஷேமமுண்டாகவேண்டும்" என்று ப்ராஹ்மஶ்ரேஷ்டர்கள் கொண்டாடினார்கள்; ரகுகுலத்துப்பிள்ளையாகிய தசரதரும் (அதைச்) செவியுற்றார். ௧௫.

புருஷர்களானவர்கள் நல்ல ஆடையாபரணந் தரித்தவர்களாய்ப் ப்ராஹ்மணர்களுக்குப் பரிமாறினார்கள்; மற்றுஞ் சில புருஷர்களானவர்கள் அழகாய் நிர்மலமாயுள்ள ரத்னங்களாலிழைக்கப்பட்டவைகளான குண்டலங்களைத் தரித்தவர்களாகி அவ்வந்தணர்கட்கு (அப்பொழுதைக்கப்போது உபசாரஞ் செய்வதைப்பற்றி) அருகில் இருந்தார்கள். ௧௬.

கல்விகளைக்கற்று நன்றாய்ப் பேசவல்லமைபெற்ற வேதியர்களானவர்கள் ஒருவர்க்கொருவர் வெல்ல வெண்ணங் கொண்டவர்களாகி, அந்த யாக கார்யம் நடந்துகொண்டிருக்கையில் பலநூல்களைப்பற்றிய வாதங்களைப் பேசினார்கள். ௧௭.

வல்லவர்களான வேதியர்கள், அந்த யாகத்தில் நாடோறும் அழைப்பிக்கப் பட்டவர்களாய்எல்லா நடவடிக்கைகளையும்சாஸ்த்ரந்தவறாது நடத்தினார்கள். ௧௮.

இந்தயாகத்தில், ஷடங்கங்களையறியாதவனும் வ்ரதாநுஷ்டானமில்லாதவனும் பல நூல்களைக் கேளாதவனும் இல்லை; அத்தசரதவேந்தரது ஸபையிலுள்ளவர்களில் (சாஸ்த்ர) வாதஞ்செய்ய வல்லமையில்லா வேதியர்கள் இடையவே இடையார். ௧௯.

அந்த யாகத்தில் யூபஸ்தம்பம் நாட்டவேண்டிய ஸமயம் வருகையில், வில்வ மரத்தால் செய்யப்பட்ட ஆறுஸ்தம்பங்களும், அந்த வில்வஸ்தம்பங்களுக்கு ஸமீபத்தில் கருங்காலிமரத்தால் செய்யப்பட்ட ஆறு ஸ்தம்பங்களும், பலாச மரத்தால் செய்யப்பட்ட ஆறுஸ்தம்பங்களும், நறுவிலி மரத்தால் செய்யப்பட்டவொரு ஸ்தம்பமும், தேவதாருமரத்தால்செய்யப்பட்ட இரண்டு ஸ்தம்பங்களும் நாட்டப்பட்டன. அவ்விருபத்தொரு ஸ்தம்பங்கட்கும், ஒவ்வொன்றுக்கும் நடுவில் ஒரு மார்பளவு இடம் விடப்பட்டிருந்தது. ௨௧.

சாஸ்த்ரங்களையுணர்ந்து யாகஞ் செய்விக்கும் பண்டிதர்களால் நாட்டுவிக்கப்பட்ட இந்த ஸ்தம்பங்கள் யாவும், யாகசாலையின் அலங்காரார்த்தமாக ஸ்வர்ணமயமான வஸ்த்ரங்களால் அலங்கரிக்கப்பட்டன. ௨௨.

இவ்வாறு நாட்டுவிக்கப்பட்ட அந்த யூபஸ்தம்பங்கள் இருபத்தொன்று; அவைகள் ஒவ்வொன்றும் இருபத்தோர் *அரத்நியுயரமுள்ளவைகள்; அவைகள ஒவ்வொன்றும் ஒவ்வொரு வஸ்த்ரத்தால் அலங்கரிக்கப்பட்டன. ௨௩.

சில்பிகளைக் கொண்டு கெட்டியாய் எட்டு பட்டைகள் வைத்து மழமழப்பாக இழைத்து அழகாகச் செய்த எல்லா ஸ்தம்பங்களும் சாஸ்த்ரப்படி நாட்டப்பட்டன. ௨௪.

அந்த ஸ்தம்பங்களானவைகள் ஆடைகளாற் சுற்றப்பட்டவைகளும், பூக்களாலும், மணம்பொருந்திய பொருட்களாலும் அலங்கரிக்கப்பட்டவைகளுமாகி, ஆகாசத்தில் ஸப்தர்ஷிகள் மிகவொளிபெற்று விளங்குவதுபோல் விளங்கின. ௨௫.

* "அரத்நி" என்றால் இருபத்து நான்கு அங்குலமுயரமுடைய ஓர் அளவு.

[illegible]

யாகசாஸ்த்ரத்தில் வல்லவர்களான சிற்பிகளால், எண்கோணமாக வழுவழுப்பான ஸ்தம்பங்கள் செய்யப்பட்டுக்கொண்டு யாகமேடையின் கட்டப்பட்டவை அதிசயமாக அலங்கரித்துச் சேர்க்கப்பட்டது. ௨௬.

மஹாராஜாவின் அந்த யாகசாலையில் இட்டிய சயனமென்னும் அக்நிகுண்டமானது பொன்னால் செய்யப்பட்ட இஷ்டகைகளால் கருடாகாரமாய்ப் பதினெட்டு வரிசையாய்க் கட்டப்பட்டது. ௨௭.

அந்த யூபஸ்தம்பங்களில், அவ்வத் தேவதைகளை உத்தேசித்துப் பசுக்களும் பாம்புகளும் பறவைகளும் சாஸ்த்ரவிதிப்படி கொண்டுவந்து கட்டப்பட்டன. ௨௮.

அச்வமேதமென்னும் அக்நிசயனயாகத்தில் விதிப்படி பசுஹிம்ஸை செய்ய வேண்டியவைகளையும் வருணனுக்குக் குதிரையும் ஆமை முதலிய ஜலஜந்துக்களும் மற்றும் யாகத்திற்கு வேண்டிய பசுக்களும் ஆகிய இவையெல்லாம் விதிப்படி ருத்விக்குகளாற் கொண்டுவந்து கட்டப்பட்டன. ௨௯.

தசரத மன்னவனின் அந்த யாகத்தில் யூபஸ்தம்பங்களில் முந்நூறு பசுக்களும் சிறந்த வொரு குதிரையும் கட்டப்பட்டிருந்தன. ௩௦.

கௌஸல்யையானவள் அப்பொழுது அந்தக் குதிரையைச் சுற்றிவந்து அதைப் பூஜைசெய்து ஸந்தோஷித்தவளாகி, அக்குதிரையை மூன்று கத்திகளால் கொன்றாள். ௩௧.

அப்பொழுது, கௌஸல்யையானவள் தர்மவிருப்பம் கொண்டவளாதலால், ஸ்திரசித்தமுடையவளாகி இரவு முழுவதும் அந்தக் குதிரையோடு கூடியிருந்தாள். ௩௨.

ப்ரம்மா ஹோதா அத்வர்யு உத்காதா என்னும் ருத்விக்குகள் நால்வரும், மஹிஷீ பரிவ்ருத்தி வாவாதை பாலாகலீ என்னும் ராஜஸ்த்ரீகள் நால்வரையும் மன்னவர் தக்ஷிணையாகக் கொடுக்கத்தாற் கைப்பற்றினர். ௩௩.

ஜிதேந்த்ரியரும் யாககார்யங்களில் நல்லவல்லவருமான அத்வர்யுவானவர் அந்தக் குதிரையின் வபையையெடுத்து சாஸ்த்ரப்படி அக்நியில் பாகம் பண்ணினர். ௩௪.

மன்னவருந் தமது பாபத்தைப் போக்கும் பொருட்டு, வபையை அக்நியில் ஹோமஞ்செய்யும்போது காலந்தவறாது சாஸ்த்ரந்தவறாது அதன் வாஸனையை முகர்ந்தார். ௩௫.

ருத்விக்குகளென்னும் பதினாறு ப்ராம்மணர்களும், அச்வத்தின் அங்கங்களை யெல்லாம் எடுத்து, மந்த்ரங்களைச் சொல்லிக்கொண்டு, சாஸ்த்ரப்படி அக்நியில் ஹோமஞ் செய்தார்கள். ௩௬.

மற்ற யாகங்களில் ஹவிர்பாகமானது இரலிச்செடிகளாற் செய்யப்பட்ட தட்டிலிட்டு சுத்தஞ் செய்யப்படுகிறது; அச்வமேதயாகத்தின் ஹவிர்பாகத்தை, வஞ்சிக்கொடியினாற் செய்யப்பட்ட தட்டிலிட்டு சுத்தஞ் செய்வது சரி. ௩௭.

அச்வமேதயாகமானது கல்பஸூத்ரத்திற் சொல்லியபடி ப்ராம்மணர்களால் மூன்று தினஞ் செய்யப்பட்டது. அதில், முதல்நாள் சதுஷ்டோமமென்னும் யாகமும், இரண்டாவது நாள் உக்த்யமென்னும் யாகமும், மூன்றாவது நாள் அதிராத்ரமென்னும் யாகமுமாகச் செய்யப்பட்டது. அந்த யாகத்தில் இன்னும் அநேகயாகங்கள், சாஸ்த்ரத்திற் சொல்லியபடி நடத்திவைக்கப்பட்டன. ௩௮.

[illegible]
[illegible] ௪௦.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௪௨.
[illegible]
[illegible] ௪௩
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௪௬.
[illegible]
[illegible]
[illegible] ௪௮
[illegible]
[illegible] ௪௯.
[illegible]
[illegible] ௫௦.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௫௨.

[illegible]

ஜ்யோதிஷ்டோமம், ஆயுஷ்டோமம், அதிராத்ரம், அபிஜித், விச்வஜித், அப்தோர்யாமம் என்னும் சிறந்த யாகங்களும் சாஸ்த்ரப்படி அங்கு நடத்தப் பட்டன. சO.

தமது குலத்திற்கு மேன்மை யுண்டாகச் செய்யும் அத்தசாதமன்னவர், முன் ப்ரஹ்மாவினால் செய்யப்பட்டதாகிய அச்வமேதமென்னும் இச்சிறந்த யாகத்தில், தமது ராஜ்யத்தில் கீழ்த்திசையை ஹோதாவுக்கும், மேற்றிசையை அத்வர்யுவுக்கும், தென்றிசையை ப்ரஹ்மாவுக்கும், வடதிசையை உத்காதாவுக்கும் ஆகவிப்படி தக்ஷிணை கொடுத்தார். ...

யாகத்தை மேன்மேல் வளரச் செய்யும் ஆண்சிங்கமாகிய அத்தசாத வேந்தர், நூற்றவருது யாகத்தைமுடித்து, அப்பொழுது ருத்விக்குகளென்னும் அந்தணர்கட்கு அப்பூமியை யன்றோ! தானங் கொடுத்தார். ...

ருத்விக்குகளென்னும் அந்தணர்களனைவரும், இவ்வாறு பாவந்தொலைத்த மன்னவரை நோக்கி, "மனிதர்களிற் சிறந்தவராய்ப் பூமியைக் காக்கும் வேந்தே! பாரெல்லாம் பாது காக்க நீரொருவரேவல்லவர்; யாங்கள் பூமியைப் பாதுகாக்க வல்லமையில்லாதிருப்பதால் எங்களுக்குப்பூமிவேண்டாம்; யாங்கள் எப்பொழுதும் வேதமோதுவதிலேயேயன்றோ! விருப்பங் கொண்டவர்கள்; ஆதலால் சிறந்த ரத்நத்தையாவது பொன்னையாவது பசுக்களையாவது மற்றும் உம்மிடத்திலிருக்குமெதையாவது, நீர் தானங் கொடுத்த இந்தப் பூமிக்குப் பதிலாகக் கொடுத்துவிட்டீராயின் மிக்க நன்மையாம்; பூமியினால் எங்களுக்குப் ப்ரயோஜநமில்லை; இதைப்பற்றி யாங்கள் உம்மை வேண்டிக்கொள்கிறோம்" என்று சொன்னார்கள். சகூ.

வேதப் பொருள்களை நன்றாயுணர்ந்தவர்களான அந்தணர்கள் இவ்வாறு மன்னவரைக் கேட்டுக் கொள்ள, மன்னவரும் அவர்களுக்குப் பத்துலக்ஷம் பசுக்களையும் பத்துகோடி பொன்வராகன்களையும் நாற்பது கோடி வெள்ளி வராகன்களையுங் கொடுத்தார். சஅ.

பின்பு ருத்விக்குகளெல்லோருமொன்றுகூடி தநத்தை ருச்யச்ருங்கமுனிவருக்கும், புத்திமானான வஸிஷ்டருக்குங் கொடுத்தார்கள். சசு.

பிறகு அவ்வுத்தமவேதியர்களனைவரும் ந்யாயப்படி பங்கிட்டுக்கொண்டு மிகவும் மனங்களித்தவர்களாகி மன்னவரைநோக்கி, "எங்களுக்குத் த்ருப்தியாய் விட்டது; போதும்; இனி எங்களுக்கு ஒன்றும் வேண்டாம்" என்று பதிற் சொல்லினர். ருO.

பின்பு அத்தசாதவரசரானவர் யாகத்தைப்பார்க்க வந்திருந்த வேதியர்களுக்குக் கோடிகணக்கான பொன்வராகன்களை நல்லவூக்கமுடையவராய்க் கொடுத்தார். ருக.

பின்னை, பேதையாய ஓரந்தணர் நல்ல கைவளை வேண்டுமென்று தசாதரைக் கேட்கத் தசாதரும் அங்ஙனமே யீந்தார். ருஉ.

[illegible]
[illegible] ௫௬.
[illegible]
[illegible] ௫௭.
[illegible]
[illegible] ௫௮.
[illegible]
[illegible] ௫௯.
[illegible]
[illegible] ௬0

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] உ.
[illegible]
[illegible] ௩.
[illegible]
[illegible] ௪.
[illegible]
[illegible] ௫.
[illegible]
[illegible] ௬.

---

* [illegible]

இவ்வாறு தக்ஷிணையளிக்க, அந்தணர் களிக்க, அந்தணரிடமன்பு வைத்துக் கண்ணீர் துளிக்கக் களிக்க, மன்னவர் அவ்வந்தணர்க்குத் தெண்டனிட்டார். ௫௨.

பிறகு பெருந்தன்மையுடையவராய் மனிதர்களிற் சிறந்தவராயுள்ள அத்தசரதவரசர் இவ்வாறு ஸாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்கையில், அந்தணர்கள் அவருக்குத் தக்க ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். ௫௩.

பாவத்தைப் போக்குவதாய், விண்ணுலகையளிப்பதாய், மற்றவரசர்களாற் செய்யமுடியாததாய், எல்லாவற்றிலுஞ் சிறந்ததாயுள்ள இந்த அச்வமேத யாகத்தைச் செய்து மன்னவர் உள்ளத்திற் களிகொண்டார். ௫௪.

இவ்வாறு அச்வமேதயாகஞ் செய்து பாவங்களெல்லாந் தொலைய, அப்பொழுது தசரதவரசரானவர் ருச்யச்ருங்கரை நோக்கி, "ஓ நல்லொழுக்க முள்ளவரே! எனக்கு ஸந்தானமுண்டாகும் பொருட்டு புத்ரகாமேஷ்டியை நீர் செய்விக்கவேண்டும்" என்று சொன்னார். ௫௫.

ருச்யச்ருங்கரென்னும் அவ்வுத்தமவேதியரும் ராஜாவை நோக்கி, "ஓவேந்தே! அவ்வாறே ஆகட்டும்; உமது வம்சத்திற்குப் பெருமையுண்டாகச் செய்யும் நான்கு புத்ரர்கள் உமக்கு உண்டாவார்கள்" என்றுசொன்னார். ௫௬.

[அத்தசரதவரசர், அந்த ருச்யச்ருங்கமுனிவர் சொல்லும் இன் சொல்லைக்கேட்டு அவரை நமஸ்கரித்து மனங்களித்தார்; ருச்யச்ருங்கரென்னும் அம் மஹாத்மாவும் அத்தசரதவேந்தனை நோக்கி மீளவுஞ் சொன்னார்.]

பதினான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

பதினைந்தாவது ஸர்க்கம்.

பின்பு வேதங்களையுணர்ந்து பேரறிவுபெற்ற அந்த ருச்யச்ருங்கரானவர் சற்றுத் த்யானித்து, அதனால் (தசரதருக்குப் புதல்வருண்டாவதைப்பற்றி செய்யவேண்டிய) நினைவுகொண்டு, அத்தசரதவரசரை நோக்கி, "அதர்வ வேதத்திற்சொல்லப்பட்ட மந்த்ரங்களைக்கொண்டு, உமக்குப்புத்ரருண்டாகும் பொருட்டு சாஸ்த்ரப்படி புத்ரகாமேஷ்டியைச் செய்யப்போகிறேன்" என்று மிவ்வுத்தரத்தையுரைத்தார். ௨.

பிறகு மிகுந்த தேஜஸ்ஸையுடைய ருச்யச்ருங்கரானவர் (தசரதருக்குப்) புதல்வருண்டாகும்பொருட்டு அப் புத்ரகாமேஷ்டியைத் தொடங்கினார். ௩.

பின்பு தேவர்களும் ஸித்தர்களும் மஹர்ஷிகளும் கந்தர்வர்களோடு கூடி (அந்தயாகத்தில்) விதிப்படி ஹவிர்பாகத்தை வாங்கிக்கொள்ளக் கும்பற்கூடி வந்தார்கள். ௪.

அத்தேவர்கள் அந்தயாகஸபையில் ந்யாயப்படி கும்புகூடி, லோகஸ்ருஷ்டி கர்த்தாவான ப்ரஹ்மாவை நோக்கி இச்சிறந்த வாக்யத்தைச் சொற்றனர்:— ௫.

"ஓ பகவானே! ராவணனென்னும் ராக்ஷஸன் உமது அருள்பெற்று எங்களெல்லோரையும் வருத்துகிறான்; அவனை யாங்கள் வல்லமையால் வெல்ல வல்லமையில்லாதிருக்கிறோம்; ௬.

[illegible] ௭.

[illegible] ௮.

[illegible] ௯.

[illegible] ௧௦.

[illegible] ௧௧.

[illegible] ௧௨.

[illegible] ௧௩.

[illegible] ௧௪.

[illegible] ௧௫.

[illegible] ௧௬.

[illegible] ௧௭.

[illegible] ௧௮.

[illegible] ௧௯.

ஓ பகவானே! நீர் அருள்கொண்டு அவனுக்கு முன்பு வரங்கொடுத்ததைப் பற்றி அவனிடத்து மேன்மையைந்து, அவன் செய்யுங் குற்றங்களெல்லாவற்றையும் யாங்கள் பொறுத்துக்கொள்கிறோம்; ௭.

அறிவுகெட்டு மூவுலகங்களையும் வருத்துகிறான்; பெரியோர்களைப் பகைக்கிறான்; விண்ணவர்கட்கு மன்னவனான இந்த்ரனைத் திரஸ்கரிக்க நினைக்கிறான்; ௮.

நீர் வரங்கொடுத்ததனால் மதி மயங்கிக் கொழுத்து, ருஷிகளையும் கந்தர்வர்களையும் யக்ஷர்களையும் அஸுரர்களையும் அந்தணர்களையும் அலட்டியஞ் செய்கிறான்; ௯.

ஸூர்யன் இவனைத் தபிக்கின்றிலன்; இவன் பக்கத்தில் காற்று வீசுகின்றிலது; எப்பொழுதும் அசையும் அலைக்கூட்டங்களையுடைய கடலும் இவனைக் கண்டால் அசைகின்றிலது; ௧௦.

ஓ பகவானே! ஆதலால் பார்ப்பதற்குப் பயங்கரனான அந்தராக்ஷஸனிடத்தினின்று எங்களுக்கு மிகுந்த பயமுண்டாயிருக்கிறது; அவனுடைய வதத்தைப் பற்றி நீர் தக்கவுபாயத்தைச் செய்யவேண்டும்." ௧௧.

ப்ரஹ்மாவானவர், வானவர்களனைவராலும் இவ்வாறு சொல்லப்பட்டவராய்ச் சற்று நேரஞ் சிந்தித்துச் சொன்னார்:— ௧௧½.

"ஸந்தோஷம், அக்கெடுநெஞ்சமுள்ள ராவணனைக் கொல்ல வேண்டிய உபாயமின்னதென்பதைத் தெரிந்துகொண்டேன்: ௧௨.

அவன், கந்தர்வர்களாலும் யக்ஷர்களாலும் தேவர்களாலும் அஸுரர்களாலும் எனக்கு இறப்புக்கூடாதென்று வரங்கேட்டான்; அப்படியே ஆகட்டுமென்று யானுஞ் சொல்லிவிட்டேன்; ௧௩.

ராவணனென்னும் அவ்வரக்கன் அவ்வாறு வரங்கேட்கும்போது மானிடர்களைச் சொல்லவில்லை; ஆதலால் மானிடர்களைக் கொண்டே அவனை வதஞ் செய்யவேண்டும்; இவனுக்கு வேறு ம்ருத்யு இல்லை". ௧௪.

ப்ரஹ்மாவினால் நன்குஉரைக்கப்பட்ட இவ்வின்சொல்லை அவ்வானவர்கள் மஹர்ஷிகள் அனைவருங் கேட்டு மிகக்களித்தனர். ௧௫.

இந்த ஸமயத்தில், ஜகந் நாதராகிய ஸ்ரீவிஷ்ணுவானவர் திவ்ய காந்தியுடையவராய், பீதாம்பரந்தரித்தவராய், சங்க-சக்ர-கதாபாணியாய் அங்கு எழுந்தருளினார். ௧௬.

அங்கு ப்ரஹ்மாவோடு கூடி, தமது திருவுள்ளத்தை ஒரேவிஷயத்தில் நிலைநிறுத்தி நின்றார். வானவர்களனைவரும் எதிர்நின்று நன்றாய் ஸ்துதிசெய்து மிக்க வணக்கத்துடன் அவரை நோக்கிச் சொல்லினர்:— ௧௭.

"எங்கும் நிறைந்தவராகிய ஓ விஷ்ணுவே! உலகங்கட்கு நன்மையுண்டாகக்கோரி தேவரீரை யாங்கள் ப்ரார்த்திக்கிறோம்: ௧௭½.

ஓ விஷ்ணுவே! தம்மை தேவரீர் நான்கு பாகங்களாகச் செய்துகொண்டு, வல்லமைபெற்று தர்மங்களையுணர்ந்து கொடையாளியாகி மஹர்ஷிகட்கு ஒப்பான வொளிபெற்று அயோத்யாதிபதியாகிய தசரதரென்னும் அம்மன்னவருக்கு, நாணம் செல்வம் புகழ் என்பவைகளே வுருவங்கொண்டு பிறந்தாப் போல் விளங்குபவர்களாயுள்ள அத்தசரதரது மனைவிகள் மூவரிடத்திலும் புத்ரராய்த் தேவரீர் அவதரிக்கவேண்டும்; ௧௮½.

[illegible]

ஓ விஷ்ணுவே! அங்கு தேவரீர் மானவவுருவங் கொண்டவதரித்தவராகி, மிகக் கொழுத்தவனும், உலகங்கட்குப் பகைவனும், வானவர்களால் வதஞ் செய்யமுடியாதவனுமான ராவணனை யுத்தத்தில் தேவரீர் வதிக்கவேண்டும்; ௨௨.

மூர்க்கனுகிய ராவணனென்னும் அவ்வரக்கன், மிகவலிவுகொண்டு தேவர்களையும் கந்தர்வர்களையும் ஸித்தர்களையும் மஹர்ஷிகளையும்வருத்துகிறான்; ௨௩.

நந்தனவனத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் ருஷிகளும், கந்தர்வர்களும், அப்ஸரஸ் ஸ்த்ரீகளும், அந்த ராவணனால் அவ்வலிவுகொண்டு வருத்தப்படுகிறுர்கள். ௨௪.

அவனை வதஞ்செய்வதைப்பற்றி, யாங்களும் ஸித்தர்களும் கந்தர்வர்களும் யக்ஷர்களும் ருஷிகளோடுகூடிவந்து தேவரீரையே சரணமடைந்தோம்; ௨௫.

ஓ ஸ்வாமி! பகைவரைத்தவிக்கச் செய்கின்றவரே! மிகவொளிபெற்றவரே! எங்களெல்லோருக்கும் மேலான கதி தேவரீரே; வானவர்ப் பகைவரை வதிக்கவேண்டி பாருலகில் தேவரீர் அவதரிக்கத் திருவுள்ளங் கொள்ள வேண்டும்.” ௨௬.

தேவர்களிற் சிறந்தவராய்த் தேவாதிதேவராய் எல்லாவுலகங்களாலும் ஸ்துதிக்கப்பட்டவராயுள்ள விஷ்ணுவானவர் இவ்வாறு விண்ணவர்களாற் சொல்லப்பட்டவராகி, அறஞ் செயற்செய்பக்கோலி கும்பற்கூடிய அயன் முதலிய அவ்வானவரெல்லோரையும் நோக்கிச் சொன்னார்:— ௨௭.

“(ஓ வானவர்களே!) நல்லது, பயத்தைவிட்டுவிடுங்கள்; கெடுமினைவு கொண்டு தேவர்கட்கும் ருஷிகட்கும் பயத்தை விளைக்குங் கொடியவனான ராவணனை, பிள்ளைகளோடும் பேரன்மார்களோடும் மந்த்ரிகளோடும் அன்பர்களோடும் ஜ்ஞாதிகளோடும் பந்துக்களோடுங்கூட, உங்கள் நன்மையைப் பற்றி யுத்தத்தில் வதஞ்செய்து, பதினோராயிரம் ஆண்டுகள் இப்பூமியைப் பரிபாலித்துக்கொண்டு மண்ணுலகில் வாஸஞ் செய்யப்போகிறேன்.” ௨௮.

எல்லோர்க்கும் ஸ்வாமியாகிய விஷ்ணுவானவர் இவ்வாறு வானவர்கட்கு வரங்கொடுத்துவிட்டு, பின்பு பாருலகில் தமக்குத்தக்க அவதார ஸ்தலத்தைச் சிந்தித்தார். ௨௯.

பிறகு பத்மபத்ரம்போன்ற திருக்கண்களையுடைய விஷ்ணுவானவர் தம்மை நான்கு விதமாகச்செய்துகொண்டு, அத்தருணந் தசரதவரசரைத் தந்தையாக விரும்பினார். ௩௰.

பிறகு தேவர்கள், மதுவென்னும் அஸுரனைக்கொன்றவரான ஸ்ரீமந் நாராயணனைக் கந்தர்வரோடும் ருத்ரரோடும் அப்ஸரஸ் ஸ்த்ரீகளின் கூட்டங்களோடுங் கூடி அத்யத்புதமான தோத்திரங்களாற் றுதிசெய்தனர். ௩௧.

“இயல்பினாற்றானேகொழுத்தவனும், வரம்பெற்றதனால் மிகவும்மேலிட்ட கொழுப்புள்ளவனும், எல்லோரும் நடுங்கும்படியான பராக்ரமம் பெற்றவனும், வானோரரசர்க்கும் பகைவனும், எல்லாவுலகங்களையும் ஓயோவென்று அழும்படி செய்கிறவனும், நல்லோர்களையும் தவஞ்செய்வோர்களையும் வருத்துகின்றவனும், பயங்கரனுமாகிய அந்த ராவணனை வேருடன் தேவரீர் நாசஞ்செய்து விடவேண்டும். ௩௨.

[illegible]
[illegible]
* [illegible]
[illegible] ௯௩.

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே பஞ்சநவதி: ஸர்க்க:.

அத ஷண்ணவதி: ஸர்க்க:

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨.
[illegible] ௩.
[illegible]
[illegible]
[illegible] ௪.
[illegible]
[illegible]
[illegible] † [illegible]
[illegible] ௫.
[illegible]
[illegible] ௭.
[illegible]
[illegible] ௮.
[illegible]
[illegible] ௯.

* " [illegible] " இதி பாடாந்தரம்.
† " [illegible] " இதி பாடாந்தரம்.

தேவதேவா! (ஸ்ரீமந் நாராயணா!) மிக்க விக்ரமங்கொண்டு உலகங்களை யெல்லாந் துன்பப்படுத்தும் ராவணனென்னும் அவ்வரக்கனைப் படைகளோடுஞ் சுற்றத்தாரோடும் ஸம்ஹாரஞ்செய்து, துக்கத்தையொழித்து, தேவரிஷிகளாகிய நம்மால் காக்கப்பட்டு எப்பொழுதுந் திறிதும் கோபமில்லாது விளங்குந் தமது திவ்யலோகத்திற்குத் தாம் எழுந்தருளவேண்டும்." ("என்றுங் கேட்டுக் கொண்டார்கள்" என்பதைச் சேர்த்துப்படிக்கவும்.) ௩௨.

பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

பதினாறுவது ஸர்க்கம்.

பிறகு, எங்கும் நிறைந்தவரும் திவ்யகாந்தியுடையவருமான ஸ்ரீமந் நாராயணன் இவ்வாறு தேவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டவராகி, தாம் தெரிந்தவராயிருந்தும் தெரியாதவர்போல் வானவர்களை நோக்கி, "ருஷிகளைத் துன்பப்படுத்தும் ராவணனென்னும் அக்கொடியவனை யான் எவ்வுபாயங் கொண்டால் வேருடன் வதஞ்செய்யலாமோ அவ்வுபாயம்-இன்னதென்பதைச் சொல்லுங்கள்" என்றும் இவ்வின் சொல்லைத் தெளிவாய்ச் சொன்னார். ௨.

எங்கும் நிறைந்து எப்பொழுதும் அழிவில்லாது விளங்கும் ஸ்ரீமந் நாராயணன் இவ்வாறு சொல்லுகையில், வானவரெல்லோரும் உத்தரஞ் சொல்லினர் :— ௩.

"நன்றோரை நலிவிக்கும் ஓ நாராயணா! தேவரீர், மானிடவுருவங் கொண்டு யுத்தத்தில் ராவணனை வதஞ்செய்யவேண்டும்; அந்த ராவணன், உலகங்கட்கு முன்னேயுண்டாய் உலகங்களைப் படைக்கும் அயனார் கண்டு களிக்கும்படியான தவத்தைப் பொறிபறக்க நெடுநாள் செய்தான்; ௪.

வல்லவரான அயனார் கண்டு களித்து அவ்வரக்கனுக்கு வரங்கொடுத்து விட்டார்; மானிடர் தவிர்த்து மற்றையவெல்லா பூதங்களிடத்தும் அவனுக்குப் பயமில்லை; ௫.

அவன் முன்னே வரம்பெறுந்தருணத்தில் மானவர்களை மதியாது (அதாவது மானிடரிடத்தும் எனக்கு இறப்புக்கூடாதென்று வரங்கேளாது.) விட்டுவிட்டானன்றோ? அவன் இவ்வாறு அவ்வயனாரிடத்து வரம்பெற்றுக் கொழுத்துவிட்டான்; ௬.

மூவுலகங்களையும் வருத்துகின்றான்; முறைகடந்து மாதர்களையும் இழுக்கின்றான்; நன்றோரைத் துவள்விக்கும் ஓ நாராயணா! ஆதலால் மானிடரிடத்தினின்றே அவனுக்கு வதம் உண்டாகவேண்டுமென்று தோற்றுகிறது." ௭.

எங்கும் நிறைந்தவராய் எல்லோர்க்கும் ஸ்வாமியாயுள்ள ஸ்ரீமந்நாராயணனானவர் இவ்வாறு வானவரது இம்மொழி கேட்டு, அத்தருணமே தசரத மன்னவனைத் தந்தையாக விரும்பினார். ௮.

பகைவனைக்கொன்று புகழ்பெற்ற அத்தசரதவரசரும் அத்தருணம் புத்ரரில்லாது, புதல்வருண்டாகக்கருதி புத்ரகாமேஷ்டியைச் செய்தார். ௯.

[illegible] ௧௪.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௫.
[illegible]
[illegible] ௧௬.
[illegible]
[illegible] ௧௭.
[illegible]
[illegible] ௧௮.
[illegible]
[illegible] ௧௯.
[illegible]
[illegible] ௨௦.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨௨.
[illegible]
[illegible] ௨௩.

பாடாந்தரம்:— * [illegible] † [illegible] ‡ [illegible] § [illegible] ¶ [illegible]

அந்த விஷ்ணுவானவர் (மநுஷ்யராகவே அவதரிக்க வேண்டுமென்று) நிச்சயஞ் செய்துகொண்டு, தேவர்களாலும் மஹர்ஷிகளாலும் பூஜிக்கப் பட்டவராகி, ப்ரஹ்மாவை அழைத்து (=நல்லது அவ்வாறே செய்யலாம் யான் போய் வருகிறேனென்று சொல்லி) மறைந்து விட்டார். ௧௦.

பிறகு, யாகஞ் செய்துகொண்டிருக்கும் தசரதரது யாகாக்நி குண்டத்தி னின்று பெரியவொரு பூதமானது, ஒப்பற்ற வொளிபெற்று, மிகுந்த வல்லமை பெற்று, மிக்க வலிவுபெற்று, கறுத்து, சிவந்த வஸ்த்ரந்தரித்து, சிவந்தமுக முடையதாய், துந்துபிவாத்யத்தின் கோஷத்தை நிகர்த்து கோஷித்து, ஸிங்கம் போல் மீசை உடம்பு தலை என்னுமிவ்விடங்களிலுள்ள மயிர்களை அடர்த்தி யாய்த்தரித்து, சுபலக்ஷணங்களையுடையதாகி, திவ்யாபரணங்களால்அலங்கரிக் கப்பட்டதாகி, பர்வதசிகரம்போல் உயர்ந்ததாய், கொழுத்தபுலிபோல் பராக்ரம முடையதாய், ஸூர்யனை யொத்தவுருவம்பெற்று, கொழுந்து விட்டெரியும் அக்நிஜ்வாலையை யொத்து, புடமிட்ட தங்கத்தின் ரூபமுடையதும் தேவ லோகத்திலுண்டான பாயஸத்தினால் நிறைக்கப்பட்டதும் வெள்ளியினால் செய்யப்பட்ட மூடியிடப்பட்டதுமான பருத்தவொரு பாத்ரத்தை, மாயை யென்னும் உருவங்கொண்ட அன்புள்ள பார்யையைப்போல் இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு வெளிக்கிளம்பிற்று. ௧௫.

இப்பூதமானது தசரதவரசரை நோக்கி, "ஓ மன்னவரே! என்னை ப்ரஹ்மாவினிடத்தினின்று வந்த புருஷனாகத் தெரிந்துகொள்ளும்" என்னும் வாக்யத்தைத் தெளிவாய்ச் சொல்லிற்று. ௧௬.

அதற்குப் பின், மன்னவரானவர் கைகளைக் கூப்பிக்கொண்டு (அதைப் பார்த்து), "ஓ பகவானே! உமக்கு மங்களமுண்டாகவேண்டும்; யான் உமக்கு என்ன செய்யவேண்டும்?" என்று வணக்கத்துடன் சொன்னார். ௧௭.

பிறகு, ப்ரஹ்மாவினிடத்தினின்று வந்த மநுஷ்யாக்ருதியான அந்தப் பூதமானது மறுபடியும் இவ்வாக்யத்தைச் சொல்லிற்று:— ௧௭½.

"ஓ வேந்தே! தேவர்களை நீர் அர்ச்சித்ததனால் இப்பொழுது இப் பாயஸம் உமக்குக் கிடைத்தது; ௧௮.

ஓ மன்னவரேறே! தேவர்களால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதாய், ஸந்ததியைக் கொடுப்பதாய், தநத்தைக் கொடுப்பதாய், ஆரோக்யத்தை மேன்மேலும் பெருகச்செய்வதாயுள்ள இப் பாயஸத்தை நீர் வாங்கிக்கொள்ளும்; ௧௯.

அரசே! தக்கவர்களான உமது மனைவிகளுக்கு இப்பாயஸத்தை "உண்ணுங்கள்" என்று கொடும்; நீர், எந்தப் பிள்ளைகளுண்டாவதைப்பற்றி யாகஞ் செய்கிறீரோ அந்தப் பிள்ளைகளை ஸந்தேஹமின்றி அம்மனைவிக ளிடத்தில் அடைவீர்." ௨௦.

ராஜாவானவர் த்ருப்தியடைந்து, அவ்வாறே செய்கிறேனென்று, தேவாந்நம் நிறைந்ததாய் தேவரால் கொடுக்கப்பட்டதாயுள்ள அந்த ஸ்வர்ண பாத்ரத்தை சிரஸினால் வாங்கிக்கொண்டு, அதிஸுந்தரமாய் அத்புதமாயுள்ள அப்பூதத்தை ஸேவித்து, பரமாநந்தபரிதராய்ப் பூஜித்துப் ப்ரதக்ஷிணஞ் செய்தார். ௨௨.

பின்பு, தசரதரானவர் தேவநிர்மிதமான பாயஸத்தைப் பெற்று, தநமில்லாதவன் தநத்தையடைந்து ஸந்தோஷப்படுவதுபோல் மிகவும் ஸந்தோஷமடைந்தார். ௨௩.

[illegible]
[illegible] ௨௪.

[illegible]
[illegible] ௨௫.

[illegible]
[illegible] ௨௬.

[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible] ௨௮.

[illegible] ௨௯.
[illegible]
[illegible] ௩௦.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௩௧.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௩௨.

இதி ஸ்ரீமத்ராமாயணே பாலகாண்டே ஷோடசஸ்ஸர்க:.

---

* [illegible]

பிறகு, அத்புதமான ரூபமுடையதாய்ப் பாயஸமென்னும் ஜ்வலிக்கும் அப்புருஷனானவன் அந்த கார்யத்தை முடித்துக்கொண்டு அந்த அக்னியிலேயே மறைந்துவிட்டது. ௨௪.

அந்தத் தசரதருடைய ஸந்தோஷத்தாலுண்டான காந்தியால் அவருடைய அந்தப்புரமானது, சரத்காலத்திலுண்டாகும் அழகாய சந்த்ரனுடைய கிரணங்களால் ஆகாசம் ப்ரகாசிப்பது போல் ப்ரகாசித்தது. ௨௫.

அத்தசரதமன்னர் மனைவியின் அந்தப்புரமனையுட் புகுந்து கௌஸல்யையை நோக்கி, "உனக்குப் புத்ரருண்டாகும் பொருட்டு இப்பாயஸத்தைப் பெற்றுக்கொள்" என்றுஞ் சொல்லைச் சொற்றார். ௨௬.

அப்பொழுது தசரதப்ரியானவர் புத்ரருண்டாகும் பொருட்டு, பாயஸத்தில் பாதியை கௌஸல்யைக்குக் கொடுத்தார்; ராஜாவானவர் பாதியிலும் பாதியை ஸுமித்ரைக்குக் கொடுத்தார்; *மிகுந்த பாதியில் பாதியை கைகேயிக்குக் கொடுத்தார்; மன்னவர் மறுபடியுஞ் சிந்தித்து, அம்ருத ஸமானமான பாயஸத்தின் மிஞ்சின பாதியை ஸுமித்ரைக்குக் கொடுத்தார். ௨௭-௮.

வேந்தர், மனைவிகளுக்கு இவ்விதமாகப் பாயஸத்தை வெவ்வேறாகக் கொடுத்தார். ௨௯.

மன்னவரின் அவ்வுத்தம மனைவிமாரனைவரும் அப்பாயஸத்தைப் பெற்று, உள்ளங்களித்துத் த்ருப்தி கொண்டனர். ௩0.

பிறகு அரசரது அச்சிறந்த பெண்டுகள், அப்பாயஸத்தைத் தனித்தனியாக உண்டு, அக்னி-ஸூர்யர்களை நிகர்த்த வொளியுற்ற கர்ப்பங்களைச் சிலகாலத் திற்குப்பின் தரித்தனர். ௩௧.

அனந்தரம் ராஜாவானவர் அந்த ஸ்த்ரீகளுக்குக் கர்ப்பம் மேன்மேலும் வ்ருத்தியாவதைக்கண்டு ஸந்தோஷித்தவராய், ஸ்வர்க்கத்தில் தேவேந்த்ர - ஸித்த - ருஷி ஸமூஹங்களால் நன்றாகப் பூஜிக்கப்பட்ட ஹரிபோல் ஸந்தோஷமடைந்தார். ௩௨.

பதினாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

---

* ஐந்நூறு வர்ஷங்கட்கு முற்பட்ட ஒரு ஓலைபுஸ்தகத்தில், இருபத் தெட்டாவது ச்லோகத்திலுள்ள "தமிதா புத்ரார்த்தகாரணாத், ப்ரதமௌ சாவசிஷ்டார்த்தம்" என்கிற இரண்டுபாதங்களுங் காணப்படவில்லை.

[illegible]

[illegible]
[illegible] க.
[illegible]
[illegible] உ
[illegible]
*[illegible]
[illegible] †[illegible]
[illegible]
[illegible]
[[illegible]
[illegible]]
[illegible] ௩.
[illegible]
[illegible] ௪.
[illegible]
[illegible] எ.
[illegible]
[illegible] அ.
[illegible]
[illegible] கூ.
[illegible]
[illegible] கo.
[illegible]
[illegible] கக.
[illegible]
[illegible] கஉ.

பாடாந்தர:— * "[illegible]" † "[illegible]"

பதினேழாவது ஸர்க்கம்.

மஹாத்மாவான அத்தசாதமன்னவருக்கு விஷ்ணுவானவர் இருவனையில் உலகத்திலில்லாதபடி அத்யந்தவிலக்ஷணமாகப் புத்ரராயிருக்குந் தன்மையை யடைகையில், பூஜ்யரான ப்ரஹ்மாவானவர் வானவர்களெல்லோரையும் நோக்கி இவ் வாக்யத்தைச் சொன்னார்:— க.

"ஸத்யஸந்தராய், வீரராய், நமக்கெல்லோர்க்கும் நன்மையைச் செய்வதிலேயே மிக்க விருப்பங்கொண்டவராய், எங்கும் நிறைந்தவராயுள்ள ஸ்ரீமந் நாராயணனுக்கு கைங்கர்யஞ் செய்யவேண்டி, நினைத்தபடி ரூபங்கொள்ள வல்லவர்களும் மஹா பலமுள்ளவர்களுமா யிருப்பவர்களை நீங்கள் ஸ்ருஷ்டிக்க வேண்டும்; உ.

மாயையை அறிந்தவர்களும், சூரர்களும், வேகத்தில் வாயுவேகத்திற்கு ஒப்பானவர்களும், நீதிகளை அறிந்தவர்களும், மஹா புத்தியுடையவர்களும், விஷ்ணுவுக்கு ஸமமான பராக்ரமமுடையவர்களும், ஸம்ஹரிக்கக்கூடாதவர்களும், உபாயங்களை அறிந்தவர்களும், ஸிம்ஹத்திற்கு ஸமாநமான சரீரத்தோடு கூடினவர்களும், அஸ்த்ரசக்திகளெல்லாவற்றாலும் நிறைந்தவர்களும், அம்ருதபாநம் பண்ணுவோர்போலிருப்பவர்களும், ஸமாநமான பராக்ரமமுள்ளவர்களுமான புத்ரர்களை அழகான அப்ஸரஸ் ஸ்த்ரீகளிடத்திலும் கந்தர்வஸ்த்ரீகளின் சரீரங்களிலும் [யக்ஷ-பந்நக-ருக்ஷ-வித்யாதர-கிந்நர-வாநர ஸ்த்ரீகளிடத்திலும்] வாநரரூபத்தினால் நீங்கள் ஸ்ருஷ்டிக்கவேண்டும்; ௩.

முன்னமே, கொட்டாவியிட்ட எனது வாயிலிருந்து, ஜாம்பவானென்னும் கரடிராஜர் பிறந்தார்." ௪.

பூஜ்யராகிய ப்ரஹ்மாவினால் அவ்வாறு சொல்லப்பட்ட அத்தகைய அவ்வானவர்கள், அக்கட்டளையை ஒப்புக்கொண்டு, மாட்சிமை பொருந்திய வாநரவுருவம்பெற்ற புத்ரர்களை இவ்விதமாக (மேல்வருமாறு) படைத்தனர். ௫.

மஹாத்மாக்களான ருஷிகளும், ஸித்த - வித்யாதர - உரகர்களும், சாரணர்களும், காடுகளிற்றிரியுந் தன்மையுள்ள வல்லவர்களான பிள்ளைகளைப் படைத்தார்கள். ௬.

மஹேந்த்ரகிரியையொத்து மிக்க வலிவுபெற்ற வாலியென்னுஞ் சிறந்த வாநரனை இந்த்ரன் படைத்தான்; மிகவொளியுடையவனான ஸூர்யன், ஸுக்ரீவரை யுண்டுபண்ணினன்; ௯.

எல்லா வாநரமன்னர்களுள்ளும் மேலான அறிவுடையவனாய் எல்லோரிலுஞ் சிறந்தவனாயுள்ள தாரனென்னும் பெரியவாநரனை ப்ருஹஸ்பதி படைத்தார்; க0.

மிகவும் அழகுள்ளவனான கந்தமாதநனென்னும் வாநரன், குபேரனுக்குப் புத்ரனாய்ப் பிறந்தான்; விச்வகர்மாவும் நலனென்னுஞ் சிறந்த வாநரனை யுண்டுபண்ணினார்; கக.

அக்நியை நிகர்த்த வொளி பெற்றவனும் மிக்க அழகுடையவனுமான நீலனென்பவன், அக்நிபகவானுக்குப் புத்ரனாயமைந்து, அழகினாலும் புகழினாலும் மிடுக்கினாலும் எல்லா வாநரர்களிலும் மேலானவனாயிருந்தான்; கஉ.

[illegible]

அழகென்றும் பொருள் நிறைந்தவர்களும் அழகில் புகழ் பெற்றவர்களுமான அச்விநீதேவதைகள், மைந்தனென்பவனையும் த்விவிதனென்பவனையும் தாங்களே படைத்தார்கள் ; ௧௩.

ஸுஷேணனென்னும் வாநரோத்தமனை வருணன் படைத்தான்; பர்ஜந்யனென்பவனும், பெருமிடுக்குள்ள சரபனென்பவனைப் படைத்தான் ; ௧௪.

நிம்பகாந்தியுடையவரும், வஜ்ரம்போன்ற திருமேனியோடு கூடினவரும், வேகத்தில் கருடனை நிகர்த்தவரும் [வாநரவீரர்களெல்லோரிலும் மேலான புத்தியுடையவரும் மஹா பலமுடையவரும்] ஆகிய "ஹநுமான்" என்னும் வாநரர், வாயுவுக்குப் புத்ரராய் அவதரித்தார். ௧௫.

அவ் வாநர வீரர்கள், ராவணவதத்தில் விருப்பங் கொண்டவர்களும், அளவிடமுடியாத பலமுடையவர்களும், நினைத்தபடி வுருவங்கொள்ளும் வல்லவர்களுமாய் அநேக ஆயிரக்கணக்காய்ப் படைக்கப்பட்டனர். ௧௬.

*ருக்ஷர் †வாநரர் ‡கோபுச்சர் என்னு மிவர்கள், மேரு-மந்தரபர்வதங்களை நிகர்த்துப்பருத்து ஓங்கிய திவ்யசரீரமுடையவர்களாய், மஹாபலமுடையவர்களாய், சீக்ரமாகவே ஆங்காங்கு அவதரித்தனர். ௧௭.

எந்தத்தேவதைக்கு எந்த ரூபமோ எந்த வேஷமோ எந்த பராக்ரமமோ, அந்தத் தேவதையின் புத்ரர், அந்தத் தேவதையின் அந்த ரூபம் முதலியவற்றால் அந்தேவதையை நிகர்த்துப் பலவிதமாய்ப் பிறந்தார். ௧௮

வாநரர்கள், சிலர் கோலாங்கூலிகளிடத்திலும், சிலர் ருக்ஷிகளிடத்திலும், மற்றுஞ்சிலர் கிந்நரிகளிடத்திலும், ப்ரஸித்தமான பராக்ரமமுடையவர்களாய்ப் பிறந்தார்கள். ௧௯.

மஹா கீர்த்தியுடைய தேவர்களும் மஹர்ஷிகளும் கந்தர்வர்களும் தார்க்ஷ்யர்களும் யக்ஷர்களும் நாகர்களும் கிம்புருஷர்களும் ஸித்தர்களும் வித்யாதரர்களும் உரகர்களுமாகிய பலர், அழகான அப்ஸரஸ் ஸ்த்ரீகளிடத்திலும் வித்யாதர ஸ்த்ரீகளிடத்திலும் நாககந்யகைகளிடத்திலும் கந்தர்வ ஸ்த்ரீகளிடத்திலுமாக விப்படி, அழகாய்ப் பருத்த சரீரமுடையவர்களும் வநத்தில் ஸஞ்சரிப்பவர்களுமான வாநரர்களெல்லோரையும் அந்த பகவதாரகாலத்தில் அநேகவிதமாய் ஸந்தோஷப்பட்டு உண்டாக்கினார்கள். ௨௦.

அவர்களெல்லோரும் நினைத்தபடிவுருவங் கொள்ள வல்லமையுள்ளவர்கள்; (ஒரு தடங்கலன்றி) நினைத்தபடி திரியுந்தன்மையுள்ளவர்கள்; செருக்கினாலும் பலத்தினாலும் சிங்கங்களையும் புலிகளையும் நிகர்த்தவர்கள் ; எல்லோருங் கல்லாயுதமுடையவர்கள் ; எல்லோரும் மரங்கொண்டு போர் செய்பவர்கள்; எல்லோரும் நகங்களையும் பற்களையும் ஆயுதமாகக் கொண்டவர்கள் ; எல்லோரும் எல்லா அஸ்த்ரங்களிலும் வல்லவர்கள் ; பெரிய மலைகளையும் ஆட்டிவிடுவோர்கள் ; உறுதியாய் நிற்கும் வ்ருக்ஷங்களையும் பிளந்துவிடுவோர்கள் ; தமது வேகங்கொண்டு கடலையுங் கலக்கிவிடுவோர்கள்; பார்தலையும் பாதத்தாற் பிளந்தெறிவோர்கள்; பெருங்கடலையும் (ஒருவாய்க்காலைப்போல்) தாண்டிவிடுவோர்கள்; ஆகாசத்திலேயிலும் புகுவார்கள் ; மேகங்களையும் பிடித்துக்கொண்டு

* ருக்ஷர் = கரடிரூபந் தரித்தவர். † வாநரர் = குரங்குரூபந் தரித்தவர்.
‡ கோபுச்சர் = கொண்டைமுயல் ரூபந் தரித்தவர்.

[illegible]
[illegible] ௨௭.
[illegible]
[illegible] ௨௮.
[illegible]
[illegible] ௨௯.
[illegible]
[illegible] ௩0.
[illegible]
[illegible] ௩௧.
[illegible]
[illegible] ௩௨.
[illegible]
[illegible] ௩௩.
[illegible]
[illegible] ௩௪.
[illegible]
[illegible] ௩௫.
[illegible]

[illegible]

[illegible]
[illegible] ௧.
[illegible]
[illegible] ௨.

* [illegible] இதி பாடாந்தரம்.

வருவார்கள்; வாநத்தில் திரியும் மத்தகஜங்களையுங் கைப்பிடியாய்ப் பிடித்து வருவார்கள்; ஆகாசத்திற்பறக்கும் பக்ஷிகளையும் தமது கூச்சலினாற் கூச்சலிட்டுக்கீழ் விழச் செய்வார்கள். ௨௭.

இவ்விதத்தபடி ரூபத்தரிக்க ஸமர்த்தர்களாய் மஹாத்மாக்களாயுள்ள இப்படிப்பட்ட வாநரஸேநாபதிகள் பலநூறாயிரக்கணக்காய் அவதரித்தார்கள். ௨௮.

அவ்வாநரப்படைமன்னர், வாநரர்களது முதன்மையான படைகளில் படைமன்னர்களிற் சிறந்தவராயிருந்தனர்; வல்லவர்களான பலவாநரர்களையும் பிறப்பித்தனர். ௨௯.

மற்றவர், ருக்ஷவானென்னும் மலையின் தாழ்வரைகளின் அருகில் ஆயிரக்கணக்காய்க் குடியிருந்தனர்; மற்றுஞ்சிலர், நாநாவிதமான மலைகளையுங் காடுகளையும் நோக்கிச் சென்றனர். ௩௰.

அச்சிறந்த வாநரரனைவரும், ஸூர்யபுத்ரராகிய ஸுக்ரீவர் இந்த்ர புத்ரனான வாலி என்னும் ப்ராதாக்களாகிய இவ்விருவர்க்கும், நலனுக்கும், நீலனுக்கும், ஹநுமானுக்கும், மற்றுமுள்ள வாநரஸேநாபதிகட்கும் பணிவிடை செய்துகொண்டிருந்தனர். ௩௧.

கருடனையொத்த வலிவுபெற்றவர்களும் போர்செய்வதில் நல்லவல்லமை பெற்றவர்களுமான அவ்வாநரரனைவரும், சிங்கங்களையும் புலிகளை மலைப்பாம்புகளையும் (கொசுக்களைப்போல்) நசுக்கிக்கொண்டு திரிந்து கொண்டிருந்தனர். ௩௨.

கரடிகளும் கொண்டைமுயல்களும் வாநரங்களுமான அவர்களெல்லோரையும், மிக்க விக்ரமமுடைய வாலியானவன் தனது புஜபலங்கொண்டு பாதுகாத்துவந்தான். ௩௩.

பலவித வுருவமுடையவர்களும், பலவித செய்கைகளையும் அடையாளங்களையுமுடையவர்களுமாகிய அவ்வீரர்களால், இப்பாரிலுள்ள மலைகளுங் காடுகளுங் கடல்களும் எங்கும் நிறைந்துவிட்டன. ௩௪.

கூட்டங்கூட்டமாய்ச் செல்லும் மேகங்களையும், பர்வதசிகரங்களையும், நிகர்த்து, மிக்க வலிவுபெற்றுப், பகையோர்க்குப் பயமுறுத்துஞ் சரீரங்களையும் ரூபங்களையுமுடைய அவ் வாநரப்படை மன்னவர்களால் இப் பாரெங்கும் நிரம்பிவிட்டது. ௩௫.

பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

பதினெட்டாவது ஸர்க்கம்.

மஹாத்மாவாகிய தசரதருடைய அந்த யாகம் முடிந்தவுடனே, தேவர்கள் அவரவர்கட்குண்டான பாகங்களை வாங்கிக் கொண்டு, வந்தபடி திரும்பிப் போனார்கள். ௧.

மன்னவர் தமது தீக்ஷாநியமங்களை முடித்து, மனைவிகளின் கூட்டங்களோடு கூடினவரும், சேவகர்கள் படைகள் வாஹநங்கள் என்றுமிவைகளோடு கூடினவருமாய்த் தமது நகரத்திற்குப் புறப்படத்தொடங்கினர். ௨.

[illegible]
[illegible] ௩.
[illegible]
[illegible] ௪.
[illegible]
[illegible] ௫.
[illegible]
[illegible] ௬.
[illegible]
[illegible] ௭.

ஸ்ரீராமாவதாரஸர்க:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௦௨.
[illegible]
[illegible] ௧௧௨.
[illegible]
[illegible] ௧௨௨
[illegible]
[illegible] ௧௩௨.
[illegible]
[illegible] ௧௪௨

பாடாந்தரம்:— * "[illegible]" "[illegible]" இதி கேசித். † "[illegible]" ‡ "[illegible]"

அருளேல்
அரசர்கள், அந்தச ரால் தக்கபடி பூஜிக்கப்பட்டவர்களா(ஈ)தி ... (ஹ்ரு)
ருக்க அல்லது வடிவிட்ட) மஹாமுனிவரைத் தெண்டனிட் ...அவர்களுமாய்,
அவ்வவர்கள் தேசங்கட்குப் ப்ரயாணஞ் செய்தார்கள். தார்கள். ...

செல்வம் நிறைந்த அயயோத்யாபுரியினின்று ...ப்ஸரஸ் ஸ்த்ரீகளுங்
அவ்வரசர்களின் படைகள், (இ)ஸ்வமேதயாகத்தைத் ...த்ருபி வாத்யங்களைக்
மிகக் களித்து ஒளிபெற்றன. ...
...ின்றும் புஷ்ப வர்ஷம்

அவ்வாறு அரசர்கள் போனபின்பு, தசரதேந்த்ரரும் பராபரக்கப் பெரிய
வராய்ச் சிறந்தவேதியர்களை முன்னிட்டுக்கொ... கள்.
புகுந்தார்.
... மேலானபாட்டுகளும்

பிறகு ருச்யச்ருங்கரும் தக்கபூஜை பெற்று, ப்ருத்யர்களெங்கும் ஜநங்கள்
ளுடனும் புத்திமானான (ரோமபாத) மன்னவரோடும், தமது ... ...ய
சாந்தையோடுங் கூடிப் ப்ரயாணஞ் செய்தார். சு.

மன்னவர் இவ்விதமாக அவர்களெல்லோரையும் அனுப்பிவிட்டு,
புத்ரருண்டாவதைச் சிந்தித்துக்கொண்டு, நெஞ்சம்நிறைந்து அவ்
வயோத்யாபுரியில் ஸுகமாக வாஸஞ் செய்துகொண்டிருந்தார். எ.

ஸ்ரீராமாவதார கட்டம்

அநந்தரம், யாகம் ஸமாப்தமானது முதல் ஒருஸம்வத்ஸரம் ஆயிற்று;
உடனே, பன்னிரண்டாவது மாஸமான சித்திரைமாஸத்தில், நவமீதிதியில்,
புநர்வஸுநக்ஷத்த்ரத்தில், கடகலக்நத்தில், (ஸூர்யன், குரு, சுக்ரன், அங்கா
ரகன், சநி என்னும்) ஐந்து க்ருஹங்கள் உச்சத்திலிருக்க, சந்த்ரனோடு கூடி
ப்ருஹஸ்பதி உதிக்க, ஜகந் நாதராய், ஸகலலோகங்களாலும் நமஸ்கரிக்கப்
பட்டவராய், ஸகல சுப லக்ஷணங்களோடுங் கூடினவராய், விஷ்ணுவின்
அர்தாம்சராய், மஹாபாக்யமுள்ளவராய், இக்ஷ்வாகுவம்சத்தின் பெருமையைப்
பெருகச் செய்பவராயுள்ள "ஸ்ரீராமர்" என்னும் புத்ரரைக் கௌஸல்யை
பெற்றாள். கo.

அதிதியென்பவள் வஜ்ரபாணியாகிய தேவேந்த்ரனைப் பெற்று
ஒளிபெற்றதுபோல், கௌஸல்யை அப்பரஞ் சோதியாகிய புத்ரரைப் பெற்று
ஒளிபெற்றாள். கக.

ஸத்யமான பராக்ரமமுடையவராய், ஸாக்ஷாத் விஷ்ணுவின் அம்சத்தில்
நாலிலொரு பாகமானவராய், ஸகலகல்யாணகுணங்களும் ஒன்றுகூடி நிறைந்த
வராயுள்ள "பரதர்" என்பவர், கைகேயியினிடத்தில் அவதரித்தார். கஉ.

அநந்தரம், விஷ்ணுவின் அம்சங்களோடு கூடினவர்களாய், ஸமஸ்த
அஸ்த்ரவித்யைகளிலும் ஸமர்த்தர்களாய், வீரர்களாய் இருக்கும் "லக்ஷ்மணர்,
சத்ருக்நர்" என்னும் புத்ரர்களை ஸுமித்ரை பெற்றாள். கங.

நிர்மலசித்தரான பரதர், புஷ்யநக்ஷத்ரங்கூடிய தினத்தில் அவதரித்தார்;
ஸுமித்ரையின் புத்ரர்கள் இருவர்களும், ஆச்லேஷா நக்ஷத்ரத்தில்,
மத்யாஹ்நத்தில், கடகலக்நத்தில், அவதரித்தார்கள். கச.

[illegible]

[illegible] கஎ.

[illegible] கஅ.

[illegible]

[illegible] உக.

[illegible] உஉ.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

மஹாத்மாக்களான ராஜ புத்ரர்கள் நால்வர்களும், ஸகலகல்யாண குணங்களாலும் நிறைந்தவர்களும், ராஜாவுக்குத் தக்கவர்களும், பூரட்டாதி உத்திரட்டாதி என்னும் நக்ஷத்ரங்களுக்கு ஸமானமான காந்தியுள்ளவர்களுமாய், வேறாக (அதாவது ஸகலலோகவிலக்ஷணர்களாய்) அவதரித்தார்கள். ௧௬.

கந்தர்வர்களும் ஸுந்தரமாய்ப் பாடினார்கள். அப்ஸரஸ் ஸ்த்ரீகளும் கூட்டங்கூடி ஆட்டமாடினார்கள். தேவர்களுந் துந்துபி வாத்யங்களைக் கணகணவென்று கொட்டினார்கள். ஆகாசத்தினின்றும் புஷ்ப வர்ஷம் வர்ஷிக்கப்பட்டது. அயோத்யையிலும் ஸகலஜநங்களும் பரபரக்கப் பெரிய உத்ஸவம் உண்டாயிற்று. ௧௭.

நடர்களும் நர்த்தகர்களும் பரபரத்தோடிப்பாட, மேலானபாட்டுகளும் வாத்யகோஷங்களும் எங்குங்கோஷிக்க, ராஜமார்க்கங்களெங்கும் ஜநங்கள் நெருங்கப் பெற்றன. ௧௮.

மன்னவரும், ஸூதர் மாகதர் வந்திகள் என்னுங்கட்டியஞ் சொல்வோர்க்குங் கொடுக்கவேண்டியவைகளைக் கொடுத்தார். அந்தணர்க்கும் பசுக்களையும் பொருட்களையும் ஆயிரக் கணக்காய்க் கொடுத்தார். ௧௯.

பதினொருநாள் சென்றபின்பு நாமகரணஞ் செய்துவித்தார். அப்பொழுது வஸிஷ்டரானவர் மஹாத்மாவான ஜ்யேஷ்டபுத்ரருக்கு "ராமர்" என்றும், கைகேயியின் புத்ரருக்கு "பரதர்" என்றும், ஸுமித்ரையின் புத்ரரொருவருக்கு "லக்ஷ்மணர்" என்றும், மற்றொருவருக்கு "சத்ருக்நர்" என்றும், பரமப்ரீதராய்த் திரு நாமங்களைச் சாற்றினர். ௨௧.

தமது நகரத்திலுள்ள ப்ராஹ்மணர்களுக்கும், தேசங்களிலுள்ள ப்ராஹ்மணர்களுக்கும், அபரிமிதமாய்ப் போஜநமிடுவித்து, அவர்களுக்கு அநேகவித ரத்நஸமூஹங்களையுந் தாநங் கொடுத்தார். ௨௨.

அந்தப் பிள்ளைகளுக்கு நாமகரணம் முதலிய நடவடிக்கைகளெல்லாவற்றையும் நடத்துவித்தார். ௨௩.

அவர்களில் ஜ்யேஷ்ட புத்ரரும், கொடிமரம் போன்றவரும், தமது தந்தைக்குக் களிப்பை விளைப்பவருமான ராமரென்பவர், ப்ரஹ்மா போல் ஸகல ஜகத்திற்கும் மிகவும் வேண்டியவராய் விளங்கினர். ௨௪.

அந்தப் பிள்ளைகளெல்லோரும் வேதமுணர்ந்தவர்கள்; எல்லோரும் உலகங்கட்கு நன்மையைச்செய்வதில் விருப்பங்கொண்டவர்கள்; எல்லோரும் ஜ்ஞாநமென்னும் பொருள் நிறைந்தவர்கள், எல்லோரும் எல்லா நல்லகுணங்களுமுள்ளவர்கள். ௨௫.

அவர்களில் ராமரென்பர், திவ்யகாந்தியுடையவரும், ஸத்யமான பராக்ரமமுடையவரும், நிர்மலனாயுள்ள பௌர்ணமீ சந்த்ரன்போல் ஸகலஜகதாஹ்லாதகரும், கஜத்தின் மீதும் அச்வத்தின் மீதும் ரதத்தின் மீதும் எழுந்தருளி ஆங்காங்குச் செல்வதில் திருவுள்ளமுள்ளவரும், தநுர்வேதத்திலும் அத்யந்தாஸக்திபெற்றவரும், தமது பிதாவுக்கு சுச்ரூஷை செய்வதில் திருவுள்ளமுள்ளவருமாயிருந்தார். ௨௬.

[illegible]
[illegible] ௨௭.
[illegible]
[illegible] ௨௮.
[illegible]
[illegible] ௨௯.
[illegible]
[illegible] ௩௦.
[illegible]
[illegible] ௩௧.
[illegible]
[illegible] ௩௨.
[illegible]
[illegible] ௩௩.
[illegible]
[illegible] ௩௪.
[illegible]
[illegible] ௩௫.
[illegible]
[illegible] ௩௬.
[illegible]
[illegible] ௩௭.
[illegible]
[illegible] ௩௮.

பாடாந்தரம்:— * "[illegible]" † "[illegible]" ‡ "[illegible]" § "[illegible]" ¶ "[illegible]" $ "[illegible]"

(ஸ்ரீராமகைங்கர்யமென்னும்) லக்ஷ்மியை மேன்மேலும் பெருகச்செய்யும் லக்ஷ்மணனென்பவர், ஸகல லோகாநந்தகரரும் தமக்கு ஜ்யேஷ்டப்ராதாவுமான ஸ்ரீராமரிடத்தில், பால்யமாரப்ய ஸர்வகாலத்திலும் பரமஸ்நேஹமுள்ளவரா யிருந்தார். ௨௭.

(ஸ்ரீராமகைங்கர்ய) லக்ஷ்மியால் நிறைந்தவராயுள்ள லக்ஷ்மணனென்பவர் அந்த ராமருடைய சரீரத்திற்கும் வெளியில் ஸஞ்சரிக்கும் இரண்டாவது ப்ராணன் போன்றவராய் அவருக்கு ஸகலாபீஷ்டங்களையும் (=ஸகலகைங்கர்யங்களையும்.) பண்ணிக்கொண்டிருந்தார். ௨௮.

புருஷோத்தமரும் அவரில்லாமல் நித்திரை செய்யார்; தம்மிடத்திற்கு வரும் ம்ருஷ்டாந்நத்தை (அதாவது அதிரஸம் அப்பம் முதலியவற்றை,) அவரில்லாமல் புஜியார். ௨௯.

ராகவரெப்பொழுது குதிரையேறி வேட்டையாடச்செல்வாரோ, அப்பொழுது (லக்ஷ்மணரும்) வில்பிடித்துப் பாதுகாத்து இவரைப் பின்செல்வார். ௩௰.

லக்ஷ்மணருக்குத் தம்பியாகிய சத்ருக்நரும், அவ்வாறே பரதருக்குப் ப்ராணங்கட்கும் மேலாய் இஷ்டராயிருந்தார்; பரதரும் அந்த சத்ருக்நருக்கு அப்படியே இஷ்டராயிருந்தார். ௩௧.

தேவர்களால் (=திக்பாலகர் நால்வரால்.) ப்ரஹ்மதேவர் பரமாநந்தங் கொள்வதுபோல், அந்தசரதரானவர் மஹாபாக்யம்பெற்ற அன்புள்ளபுத்ரர் நால்வரால் பரமாநந்தங் கொண்டார். ௩௨.

அந்தப் பிள்ளைகள், உள்ளதை உள்ளபடி அறியும் அறிவுள்ளவர்கள்; எல்லா நற்குணங்களும் ஒன்றுகூடி நிறைந்தவர்கள்; நல்ல அழகுள்ளவர்கள்; பெரும்புகழ் பெற்றவர்கள்; எல்லாவற்றையும் அறிந்தவர்கள்; வரப்போகிற வரலாற்றையுங் கண்டு அதற்கேற்ப நடப்பவர்கள். ௩௩.

இவ்விதமான ப்ரபாவமுடையவர்களாய் அத்யந்த ஸௌந்தர்யமுடையவர்களாயுள்ள அந்தப் புத்ரர்களெல்லோரையுந் தந்தையாகிய தசரதர் கண்டு, ஜகத்ப்ரபுவாகிய ப்ரஹ்மதேவர் போல் ஸந்தோஷமடைந்தார். ௩௪.

அந்தப் புருஷோத்தமர்கள், வேதஸம்பந்தமான வித்யைகளை அத்யயநம் பண்ணிக் கொண்டும், தமது பிதாவுக்கு சுச்ரூஷை பண்ணிக் கொண்டும், தநுர் வேதத்தையும் நன்றாய் அப்யஸித்துக்கொண்டுமிருந்தார்கள். ௩௫.

பிறகு, தர்மசிந்தையுடைய தசரதமன்னர், அந்தப் பிள்ளைகளுக்கு விவாஹஞ் செய்வதைப்பற்றி புரோஹிதர்களோடும் பந்துக்களோடுங்கூடி ஆலோசித்துக் கொண்டிருந்தார். ௩௬.

மஹாத்மாவான அத்தசரதவேந்தர் மந்த்ரிகளின் நடுவில் இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருக்கையில், மஹாப்ரபாவமுள்ள விச்வாமித்ரமஹாமுநிவர் வந்துவிட்டார். ௩௭.

அவ் விச்வாமித்ர மஹாமுநிவரானவர் மன்னவரைக் காணவெண்ணங் கொண்டவராய், "குசிக கோத்ரத்திலுண்டான காதி புத்ரராகிய யான் வந்திருப்பதை சீக்கிரமாக (ராஜாவுக்கு)ச் சொல்லுங்கள்" என்று, வாயிற் காப்பவர்களை நோக்கிச் சொன்னார். ௩௮.

[illegible]

அம்மொழி கேட்டு அனைவரும் மனநிறைவுடன் பரபரத்துக்கொண்டு மன்னவனது மாளிகைக்கு ஓட்டமாய் ஓடினர். ௩௯. அவ்விச்வாமித்ரவாக்யத்தால் அவ்வாறு தூண்டப்பட்ட அவ்வாயிற்காப்பவர்கள் அத்தருணமே மன்னவர் மாளிகை சென்று, விச்வாமித்ர ருஷி வந்திருப்பதை இக்ஷ்வாகு குலத்துப் பிள்ளையாகிய தசரத மஹாராஜருக்குத் தெரிவித்தனர். ௪௦.

அச்சக்ரவர்த்தியும், அந்தத் த்வாரபாலகர்களின் அவ்வாக்யத்தைக்கேட்டு களித்து புரோஹிதர்களோடுகூடி, இந்த்ரன் ப்ரஹ்மாவுக்கு எதிர்கொண்டு செல்வதுபோல் அவ்விச்வாமித்ராருக்கு எதிர்கொண்டுசென்றார். ௪௧.

பிறகு, எங்கும் பொறிபறக்க வ்ரதங்களை அநுஷ்டித்துத் திவ்யகாந்தி கொண்டு ஜ்வலிக்கும் அவ்விச்வாமித்ர முநிவரை மன்னவர்கண்டு களித்துச் சிரித்த முகமுடையவராய் அர்க்யங் கொடுப்பித்தார். ௪௨.

அவ்விச்வாமித்ர முநிவரானவர் மன்னவர் கொடுப்பித்த அர்க்யத்தை சாஸ்த்ரப்படி பெற்றுக்கொண்டு, மன்னவரை க்ஷேமலாபங்களை நன்றாய் விசாரித்தார். ௪௩.

பரம தார்மிகரான விச்வாமித்ரரானவர் ராஜாவின் நாடு நகரம் என்னுமிவைகளைப்பற்றியதும், பந்துக்கள் நண்பர்கள் என்னுமிவர்களைப்பற்றியதுமான க்ஷேமத்தையுங் கேட்டார். ௪௪.

உமது தேசத்திற்குச் சுற்றிலுள்ள அரசர்களெல்லாரும் உமக்கு நன்றாய் அடங்கியிருக்கிறார்களா? பகையோர்களையெல்லாம் வென்றுவிட்டீரா? தேவர்களைப்பற்றிச் செய்யவேண்டிய கார்யத்தையும் மானிடர்களைப்பற்றிச் செய்யவேண்டிய கார்யத்தையும் நன்றாய்ச்செய்துவருகிறீரா? (என்றுங் கேட்டார்). ௪௫.

முநிவர்களிற் சிறந்தவராகிய விச்வாமித்ரரானவர் வஸிஷ்டரிடமும், மஹாபாக்யமுடைய மற்றுமுள்ள ருஷிகளிடமும் வந்து, அவரவர்கட்குத் தக்கபடி க்ஷேம ஸமாசாரங் கேட்டார். ௪௬.

அம்மஹர்ஷிகளனைவரும் (அவ்விச்வாமித்ரரிடத்து) தக்கபூஜைபெற்று, அச்சக்ரவர்த்தியது ஸபைக்குச்சென்றனர்; அங்கு அவரவர்கட்குத்தக்கபடி உட்காரவும் உட்கார்ந்தனர். ௪௭.

பின்பு, மிகவும் பெருந்தன்மையுள்ள மன்னவரானவர் விச்வாமித்ரமஹாமுநிவருக்கு நன்றாய்ப்பூஜைசெய்து மனங்களித்து மயிர்க்கூசி அவரைநோக்கிச் சொன்னார்:— ௪௮.

"ஓ மஹாமுநிவரே! யான் கோராமலே எனது பாக்யத்தாற் றானாகவே நேரிட்ட உமது வருகையானது எனக்கு அம்ருதம் பெறுவதுபோலும், நீரில்லாவிடத்தில் மழைபொழிவதுபோலும், பிள்ளையில்லாதவனுக்குத் தக்கவர்களான மனைவிகளிடத்திற் பிள்ளையுண்டாவதுபோலும், மிகவும் கஷ்டமடைந்தவனுக்கு லாபமுண்டாவதுபோலும், பெரியஉத்ஸவத்திலுண்டாம் ஸந்தோஷம்போலும் இருக்கின்றது; ௪௯.

ஓ ப்ராஹ்மணரே! உமக்கு மேலான இஷ்டம் யான் என்னசெய்யவேண்டும்? யான் தானங்கொடுப்பதற்கு நீர் தகுந்தபாத்ரமாயிருக்கின்றீர்; நீர் இங்கு வந்தது எனது பாக்யமேயன்றி வேறில்லை; இப்பொழுது தான், யான் பிறவி பெற்றதற்குப் பயன் கைகூடிற்று; யான் பிழைத்திருப்பதற்கும் நன்மையுண்டாயிற்று; ௫௦.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௫௪.
[illegible]
[illegible] ௫௫.
[illegible]
[illegible] ௫௬.
[illegible]
[illegible] ௫௭.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௫௮.
[illegible]

[illegible]

[illegible]
[illegible] ௧.
[illegible]
[illegible] ௨.
[illegible]
[illegible] ௩.
[illegible]
[illegible] ௪.
[illegible]
[illegible]
[illegible] ௫.

[illegible]

முதலில் ராஜர்ஷியென்றும் பட்டம்பெற்று, அதற்குப்பின், தவம்புரிந்து மஹாதேஜஸ்ஸையுடையவராய் ப்ரஹ்மர்ஷியென்றும் பட்டம் பெற்றீர்; யான் உம்மை எல்லா விதத்தாலும் பூஜிக்கவேண்டும்; க௩.

யல்லவா யுள்ள அந்தணரே! எனது பாபந்தொலைந்து யான் பரிசுத்தனானதற்கு, ஆச்சர்யகரமான அப்படிப்பட்ட உமது இவ்வருகையன்றி மேலாய தொன்றுமில்லை; உமது தர்சநத்தால் இந்த க்ஷேத்ரமும் பரிசுத்தமாய் விட்டது; கச.

நீர் கோரிவந்த கார்யமின்னதென்பதைத் தயைசெய்துசொல்லவேண்டும்; உமது அருள்பெற்று உமதுகார்யங்களைப்பற்றி யான் முயற்சிசெய்ய விருப்பங்கொண்டிருக்கின்றேன்; கரு.

ஓ விச்வாமித்ரரே! யான் உமது கார்யத்தைச்செய்யும் விஷயத்தில் நீர் சிறிதும் ஸந்தேஹப்படவேண்டாம்; யானோ உமக்கு எல்லாவிதத்தாலும் தாஸனாயிருப்பவன்; நீரோ எனக்கு எல்லாவிதத்தாலும் தைவமாயிருப்பவர்;

ஓ ப்ராஹ்மணரே! உமது இவ்வருகையானது எனக்குப் பெரிய பாக்ய மாயிருக்கிறது; நீர் வந்ததனாலேயே எனக்கு எல்லாவற்றிலும் மேலாய தர்மங்களெல்லாம் உண்டாய் விட்டன." கஎ.

உண்மையாகவே குணங்களோடுகூடி ப்ரஸித்தமான குணமுங் கீர்த்தியும் பெற்று எல்லா குணங்களிலும் மேன்மை பெற்றவரான விச்வாமித்ரர், நெஞ்சுக்கினிதாய்ச் செவிக்கும் இனியதாயிருக்குமாறு பேரறிவு பெற்ற தசரதமன்னவர் வணக்கத்துடன் சொன்ன சொற்கேட்டு, (நமது கார்யங் கைகூடிவிட்டது; ராமனை அழைத்துக் கொண்டுபோய் விடலாம் என்று) பேரானந்தம் பெருகப்பெற்றார். கஅ.

பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

பத்தொன்பதாவது ஸர்க்கம்.

மஹாப்ரபாவமுள்ள விச்வாமித்ரர், ஆச்சர்யகரமாயும் விஸ்தாரமாயுமிருக்கிற மஹாராஜரின் அவ்வாக்யத்தைக்கேட்டு மயிர்க்கூசி, அம்மஹாராஜரின் முன் சொன்னார்:— க.

"ஓ மன்னவரே! உத்தவர்கட்கு இவ்வாறு உபசாரஞ்செய்வது, உயர்ந்த குலத்திற் பிறந்து வஸிஷ்டரிடம் உபதேசம்பெற்ற உமக்கேயன்றி, பாரினில் மற்றொரு மன்னவர்க்கு ஒவ்வாது; உ.

ஓ ராஜோத்தம! இப்பொழுது என்து நெஞ்சத்திலிருக்கும் இனி யான் சொல்லப்போகிற கார்யத்தைச்செய்ய நிச்சயஞ் செய்துகொண்டு, சொன்ன சொற்றவறாது நீர் நடந்து கொள்ளவேண்டும்; ௩.

ஓ நரோத்தம! யான் யாகஞ்செய்வதற்கு தீக்ஷைசெய்து கொண்டேன்; அதற்கு விக்நஞ் செய்ய, நினைத்தபடி ரூபங்கொள்ள வல்லவர்களான ராக்ஷஸர் களிருவர்கள் ஏற்பட்டார்கள்; ச.

எனது தம் பெரும்பாலும் நடந்து முடியுந் தருணமறிந்து, (கொடிய செய்கைகளில்) நன்றாய்ப் பயின்று வல்லமை பெற்றவர்களான ஸுபாஹு மாரீசன் என்றும் இவ்விருவர்களிருவர்களும் மாம்ஸங்கள் நிரம்பிய ரத்த வெள்ளங்களைக் கொண்டு அந்த யாகவேதிக்கு நாற்புறத்தும் பொழிந்தார்கள்; ரு.

[illegible]

பெரும்பாலும் முடிந்த எனது அந்த யாகத்திற்கு அவ்வாறு விக்னம் செய்தவரயில், யான் வருத்தங்கொண்டு உற்ஸாஹமொழிந்து அவ்விடமிருந்து வந்துவிட்டேன்; ௬.

ஓ அரசே! அவர்களைக் கொல்ல என் மனம் ஒப்பவில்லை; யாகஞ்செய்யும் அக்காலத்தில் கோபங் கொள்ளாததுதானென்பது உமக்குந் தெரியுமல்லவா? ஆதலால்தான் அவர்களை யான் சபியாது விட்டுவிட்டேன். ௭.

ஓ மன்னவர் மணியே! உமது ஸத்யபராக்ரமனான புத்ரனான ராமனென்பவன் சிறு குடுமி தரித்த சிறு பிள்ளையாயினும், உண்மையான பராக்ரமமுடையவனும் சூரனுமாயிருக்கிறபடியால், (எனது யாக ஸம்ரக்ஷணார்த்தமாக) அவனை எனக்கு நீர் கட்டாயமாகக் கொடுக்கவேண்டும்; ௮.

இந்த ராமன் தனது திவ்யதேஜஸ்ஸைக்கொண்டு என்னால் பாதுகாக்கப் பட்டவனாய், மாரீச ஸுபாஹுக்களைக் கொல்லுவதுமன்றி, யாகவிக்னஞ்செய்யும் மற்றுமுள்ள ராக்ஷஸர்களையும் வேரறுத்து நாசஞ்செய்ய வல்லவனென்பதை யெல்லோரும் அறிவார்; ௯.

யானும், இவனுக்கு மூவுலகங்களிலும் ப்ரஸித்தி யுண்டாகும்படியான பலவகை நன்மைகளையும் செய்வேன்; இவ்விஷயத்தில் ஸந்தேஹமில்லை; க௦.

அந்த ஸுபாஹு மாரீசர்களோ, ராமன் முன் நின்று போர்செய்ய சிறிதும் வல்லவரல்லர்; அவர்களைக் கொல்லுவதற்கோ, ராகவனன்றி மற்றொரு புருஷனால் முடியாது; கக.

ஓ ராஜோத்தம! வலிவு கொண்டு கொழுத்து முன்னமே காலனது பாசத்திற்கு இரையான அத்துராத்மாக்கள், மஹாத்மாவான ராமனுக்கு (எவ்வளவு? போதவே) போதார்; கஉ.

ஓ அரசே! அந்த ராமனிடத்தில் நீர் புத்ரனென்று அன்பு வைப்பது தகாது; யான் உமக்கு உறுதியாய்ச் சொல்லுகிறேன்; அந்த ராக்ஷஸர்களிருவர் களும் மாண்டார்களென்று எண்ணிக் கொள்ளும்; க௩.

மஹாத்மாவாய், ஸத்யமான பராக்ரம முடையவனுமுள்ள ராமனை யானறிவேன்; மஹாதேஜஸ்ஸையுடைய வஸிஷ்டரும் அறிவார்; மற்றும் தவத்தில் நிற்கும் இம்மஹர்ஷிகளும் அறிவார்கள்; க௪.

ஓ ராஜேந்த்ர! மேலான தர்மலாபத்தையும் கீர்த்தியையும் ஸ்திரமாகப் பூமியில் அடையவேண்டுமென்று உமக்கு எண்ண மிருக்குமாயின், ராமனை எனக்குக் கட்டாயமாகக் கொடுத்து விடவேண்டும்; கரு.

வஸிஷ்டர் முதலிய உமது மந்த்ரிகளெல்லோரும் ஸம்மதித்தார்களாயின், பின்பு ராமனை அனுப்பும்; க௬.

தாமரைக்கண்ணனாய், அன்பனாய், உமது புத்ரனுமுள்ள ராமனை, எனது யாகஸம்ரக்ஷணார்த்தமாகப் பத்து நாளைக்குக் கொடுக்கவேண்டும்; நீர் வீணான விசாரஞ் செய்யவேண்டாம்; கஎ.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] கஅ.
[illegible]
[illegible] உ0.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] உக.
[illegible]

அத விம்ஶ: ஸர்க்க:.

[illegible]
[illegible] க.
[illegible]
[illegible] உ.
[illegible]
[illegible] ங.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ரு.
[illegible]
[illegible] ள.
[illegible]
[illegible]
[illegible] எ.

பா:—* [illegible] † [illegible]

எனது இந்த யாகத்திற்குக் காலங்கடவாதிருக்குமாறு யோசிப்பாய் செய்யும்; உமக்கு நல்லையுண்டாம்; (வீணாக) நீர் வருத்தத்தில் நெஞ்சைச் செலுத்த வேண்டாம்." ௰அ.

தர்மாத்மாவாய், மஹாதேஜஸ்ஸை யுடையவராயுள்ள விச்வாமித்ர மஹாமுனிவர், தர்மார்த்தங்களோடு கூடிய இவ்வாக்யத்தை இவ்வாறு சொல்லி முடித்துப் பேசாதிருந்துவிட்டார். ௰கூ.

விச்வாமித்திருரைத்த அந்நன்மொழியை அந்த ராஜ மன்னவர் கேட்டு, ("நமது ராமனை விட்டு நாம் எப்படி பிரிவோம்" என்று) மிகவும் வருந்தி பயந்து வாடியமுகமுடையவராக ஆயினர். உ௰.

மஹாராஜர், இவ்வாறு செவியும் ஹ்ருதயத்தையும் மனதையும் துளைப்பதாகிய அம்முனிவரது மொழி கேட்டு அத்தருணமே மனம் வருந்தி, தமது ஸிம்ஹாஸனத்தினின்று அசைந்து விட்டார். உ௰க.

பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

இருபதாவது ஸர்க்கம்.

மஹாராஜர், அவ்விச்வாமித்ரர் மொழி கேட்டு, முஹூர்த்தகாலம் மூர்ச்சை அடைந்து, பின்பு தெளிந்து இவ்வாக்யத்தைச் சொன்னார்:— க.

"தாமரைக்கண்ணனான எனது ராமனுக்கு இன்னும் பதினாறு பிராயம் நிரம்பவில்லை; ஆதலால், அரக்கர்களோடு போர் செய்ய இவன் வல்லவனென்று எனக்குத் தோற்றவில்லை; உ.

இதோ எனது கட்டளையில் அடக்கி யான் பாதுகாத்துவரும் படைகள் அக்ஷௌஹிணி கணக்காக இருக்கின்றன; இவைகளைக் கூட்டிக்கொண்டு வந்து அந் நிசாசரர்களோடு யான் யுத்தஞ் செய்கிறேன்; ங.

இதோ எனது ப்ருத்யர்கள், அஸ்த்ரவித்யைகளில் தேர்ந்து சூரர்களென்று எங்கும் ப்ரஸித்தி பெற்று அரக்கர்களின் கூட்டங்களோடு போர் புரிய வல்லவர்களாய்க் காத்துக்கொண்டிருக்கிறார்கள்; ராமனை அழைத்துக்கொண்டு போகவேண்டாம்; இதைப்பற்றி யான் உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்; ச.

யானே வில்லுங் கையுமாய்ப்போர்க்களத்தில் நின்று பாதுகாக்கின்றேன்; எனது உயிர் இருக்கிறவரையில் அரக்கர்களோடு போரிடுகிறேன்; ரு.

விக்நமொன்றும் வாராதிருக்குமாறு அந்த யாகாநுஷ்டானத்தை யான் நன்றாய்ப் பாதுகாத்து நடத்துவிக்கின்றேன்; அவ்விடம் யான் வருகிறேன்; ராமனை அழைத்துக்கொண்டு போகவேண்டாம்; சு.

மேலும் இந்த ராமன் பாலன்; இன்னும் தநுர்வித்யைகளை நன்றாய்க் கற்கவில்லை; (பகையோர்களின்) பலாபலங்களையும் அறியவில்லை; அஸ்த்ர பலங்களும் நிரம்பப் பெறவில்லை; யுத்தங்களையும் நன்றாய்க் கண்டறியவில்லை; அரக்கர்களோடு போர்செய்ய பொருத்தமும் பெற வில்லை; அவ்வரக்கர்களோ வஞ்சனை கொண்டுப் போர் செய்வார்கள்; இவ்வளவும் உண்மை; எ.

[illegible]

ஓ மஹாமுநிவரே ! யானோ ராமனை விட்டுப் பிரிந்து பிழைத்திருக்க முஹூர்த்தகாலமும் பொறுக்கமாட்டேன்; ஆதலால் ராமனை அழைத்துக் கொண்டு போகவேண்டாம்; (படைகளைக் கூட்டிக்கொண்டு யான் வருகிறேன்;) ஓ கஷ்டமான விரதாநுஷ்டானங்களைச் செய்து அந்தணரான ஓ விச்வாமித்ரரே ! அவ்வாறு ஸம்மதியாமல் ராமனை அழைத்துக் கொண்டு போகவேண்டுமென்று உமக்கு எண்ணமிருக்குமாயின, சதுரங்க ஸைந்யங்களையும் என்னையுங் கூட்டி அழைத்துக் கொண்டு போம்; ௯.

ஓ விச்வாமித்ரமுநிவரே ! யான் பிறந்து அறுபதினாயிரம் ஆண்டுகள் சென்று, இந்த ராமனை அருமையாகப் பெற்றேன்; ஆதலால், ராமனை அழைத்துக் கொண்டு போக வேண்டாம்; ௧௦.

எனது புத்ரர்கள் நால்வர்களுள்ளும் இந்த ராமனிடத்தில் எனக்குப் பேராசை பெருகிவிட்டது; ஆதலால், எனது ஜ்யேஷ்ட புத்ரனான தர்ம மூர்த்தியாகிய ராமனை அழைத்துக் கொண்டு போக வேண்டாம்; இதைப் பற்றி யான் உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன்; ௧௧.

ஓ மஹாமுநிவரே ! அவ்வரக்கர்களின் வல்லமை எப்படிப்பட்டது ? அவர்கள் யாருடைய பிள்ளைகள் ? அவர்கள் பெயர்கள் எவை ? அவர்கள் ரூபமெப்படியிருக்கும் ? அவர்களைப் பாதுகாப்பவன் யாவன் ? ௧௨.

ஓ அந்தணரே ! வஞ்சனை கொண்டுப் போர் செய்யுந் தன்மையுள்ள அவ்வரக்கர்கள் விஷயத்தில், ராமனாவது, எனது படைகளாவது, யானாவது எந்த யேற்பாடு செய்து எதிர்த்துப் போகவேண்டும் ? ௧௩.

ஓ ஸ்வாமி ! ராக்ஷஸர்களோ மிகுந்த கொழுப்புள்ளவர்கள்; அத்துராத்மாக்களோடு யான் போரிடுகையில் எவ்வாறு நிற்கவேண்டும்? எல்லாவற்றையும் எனக்குச் சொல்லி அருளவேண்டும்?" ௧௪.

அத் தசரதரது மொழி கேட்டு, அவர் முன்பு விச்வாமித்ரர் சொன்னார்:— ௧௫.

"புலஸ்த்யவம்சத்தில் ராவணனென்னும் ஒரு ராக்ஷஸன் பிறந்திருக்கிறான்; அவன், ப்ரஹ்மாவினிடத்து வரம் பெற்று மஹாபலமுடையவனும் மஹா வீர்யமுடையவனுமாய், அநேக ராக்ஷஸர்களையுங் கூட்டிக்கொண்டு மூவுலகங் களையும் மிகவும் வருத்துகிறான்; ௧௬.

மஹா பராக்ரமமுடையவனாய், ஸாக்ஷாத் குபேரனுக்குப் ப்ராதாவாய், விச்ரவஸ் என்னும் முநிவருக்குப் புத்ரனாய், ராவணனென்னும் ராக்ஷஸராஜ னொருவன் இருக்கிறானென்பது எல்லோர்க்குந் தெரியும்; ௧௭.

அப் பெருமிடுக்கன் தான் நேராக வந்து யாகத்திற்கு விக்நஞ் செய்யாத ஸமயத்தில், மிகக் கொழுத்தவர்களாகிய " மாரீசன், ஸுபாஹு" என்னும் ராக்ஷஸர்களிருவர்களைத் தூண்டிவிடுகிறான்; அவர்கள் வந்து யாகத்திற்கு விக்நஞ் செய்கிறார்கள்." ௧௮.

மன்னவர், அவ்விச்வாமித்ர முநிவரால் இவ்வாறு சொல்லப்பட்ட வராய், அப்பொழுது முநிவரை நோக்கிச் சொன்னார்:— ௧௯.

"கொடியவனாகிய அந்த ராவணன் முன் நின்று போர் செய்ய யான் வல்லவனல்லேன்; (புத்ர)பாக்யங் குறைந்த எனக்குத் தெய்வமும் குருவும் நீரேயன்றி மற்றொருவரில்லை; ௨௧.

[illegible]
[illegible] ௨௨.
[illegible]
[illegible]
[illegible] ௨௩.
[illegible]
[illegible] ௨௪.
[illegible]
[illegible] ௨௫.
[illegible]
[illegible] ௨௬.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨௭.

[illegible] விம்ஶ: ஸர்க:.

அத ஏகவிம்ஶ: ஸர்க:.

[illegible]
[illegible] ௧.
[illegible]
[illegible] ௨.
[illegible]
[illegible] ௩.
[illegible]
[illegible] ௪.
[illegible]
[illegible] ௫.

தேவர்கள், தானவர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், பதகர்கள், பந்நகர்கள் என்பவர்களே ராவணனோடு போர் செய்ய வல்லமை யில்லாதிருக்க, மானிடர்கள் எவ்வளவு? ௨௨.

ஓ முனிவரே! அவ்வரக்கனோ மிக்க வல்லமை பெற்றவர்களின் வல்லமையையும் போர்தன்னில் அடக்கி விடுகிறான்; அவனோடாவது அவனது படைகளோடாவது போர் செய்ய என்றால் முடியாது; யான் எனது படைகளைக் கூட்டி வந்தாலும் முடியாது; எனது புத்ரர்களோடு கூடி வந்தாலும் முடியாது; ௨௩.

ப்ராஹ்மணரே! தேவர்களை நிகர்த்தவனும், யுத்ததர்மங்களையறியாதவனும், பாலனும், எனது புத்ரனுமுள்ள சிறு குழந்தையை நீர் என்ன பாடு பட்டாலும் கொடுக்கவே மாட்டேன்; ௨௪.

மேலும், உமது யாகத்திற்கு விக்நஞ் செய்யும் அந்த ஸுபாஹு மாரீசர்கள், ஸுந்தன் உபஸுந்தன் என்பவர்களின் பிள்ளைகள்; யுத்தத்தில் யமனுக்கு ஸமானமானவர்கள்; ஆதலால், குழந்தையை உமக்குக் கொடுக்கவே மாட்டேன்;

மாரீசன் ஸுபாஹு என்னும் இருவர்களும் (யுத்தத்தில்) நன்றாய்ப் பயின்று மிக்கவல்லமைபெற்றவர்கள்; ஆதலால், எனது நண்பர்களின் கூட்டங்களையுங் கூட்டிவந்து, அவர்களிருவர்களில் ஒருவனோடு போர் செய்ய யான் காத்துக் கொண்டிருக்கின்றேன்; நீர் தயை செய்யவேண்டும்." ௨௫.

ப்ராஹ்மணோத்தமராகிய விச்வாமித்ரரை இவ்வாறு மன்னவர் சொன்னதனாற் கோபம் பெருகிக் குடிகொண்டது; மஹர்ஷியின் அக் கோபாக்நியானது, நெய்யைச் சேர்த்து நன்றாய் ஹோமஞ் செய்த யாகாக்நிபோல் கொழுந்துவிட்டெரிந்தது. ௨௬.

இருபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

இருபத்தோராவது ஸர்க்கம்.

தமது புத்ரரிடத்து அன்பினால், எழுத்துகள் நன்றாய்த் தெரியாமற் குளறிக்கொண்டு அத்தசரதர் சொன்ன சொல்லை விச்வாமித்ரர் கேட்டுக் கோபங்கொண்டு மன்னவரை நோக்கி உத்தரஞ் சொன்னார்:— ௧.

"அரசே! யான் கோரின கார்யத்தைச் செய்வதைப்பற்றி முன்பு நீர் உறுதிமொழி பண்ணிக் கொடுத்து, அதை நிறைவேற்றாது விட்டு விட நினைக்கிறீர்; இவ்வாறு சொன்ன சொற்றவறுவது, ரகு குலத்துப் பிள்ளைகட்குத் தகாது; இது இக் குலத்திற்கு நன்மையன்று; ௨.

வேந்தே! இது உமக்குத் தகுமாயின், யான் வந்தபடிப் போய்விடுகிறேன், வந்தவர்கட்கெல்லாம் இவ்வாறு ப்ரதிஜ்ஞை செய்துப் பொய் பேசிக்கொண்டு; பந்துக்களோடு கூடி ஸுகமாக இரும்." ௩.

பேரறிவு பெற்றவராகிய விச்வாமித்ரரை அவ்வாறு கோபங்குடி கொள்கையில், பூமியெல்லாங் கிடுகிடென்று நடுங்கி விட்டது; தேவர்களையும் பயங் குடிகொண்டு விட்டது. ௪.

நன்றாய் வ்ரதங்களைச் செய்தவறிஞராகிய வஸிஷ்டமஹர்ஷி இவ்வாறு எல்லாவுலகமும் நடுங்குவதைத் தமது யோகத்ருஷ்டியினால் அறிந்து, மன்னவரை நோக்கி இம் மொழியை யுரைத்தார்:— ௫.

[illegible] ௬.

[illegible] ௭.

[illegible] ௮.

[illegible] ௯.

[illegible] ௧௦.

[illegible] ௧௧.

[illegible] ௧௨.

[illegible] ௧௩.

[illegible] ௧௪.

[illegible] ௧௫.

[illegible] ௧௬.

[illegible] ௧௭.

[illegible] ௧௮.

[illegible]

"இவ்வுலகில் தர்மதேவதை யென்றும்படி இக்குலத்திற் பிறந்து சிறந்த ஐச்வர்யம் பெற்று நன்றாய் வ்ரதங்களைச் செய்து செல்வம் நிரம்பப்பெற்ற நீர், தர்மத்தைத் துறப்பது (அதாவது சொன்ன சொல்லை நிறைவேற்றாமல் விடுவது.) தகாது; ௬.

இக்ஷ்வாகு குலத்திற் பிறந்தவரே! தர்மாத்மாவென்று மூவுலகங்களிலும் ப்ரஸித்தி பெற்ற நீர் அதர்மத்திற்கு இடங்கொடுக்க வேண்டாம்; உமது தர்மத்தைக் கொள்ளும்; (அதாவது சொன்ன சொல்லை நிறைவேற்றும்.) ௭.

ரகுகுலத்திற் பிறந்தவரே! இவ்வாறு செய்கிறேனென்று ப்ரதிஜ்ஞை செய்து அவ்வாறு செய்யாது மறுத்தீராயின், நீர் அச்வமேதம் முதலிய யாகங்களைச் செய்தது, குளம் முதலியவைகளை வெட்டுவித்தது ஸத்த்ரம் முதலியவைகளைக் கட்டுவித்தது முதலிய தர்மங்கள் யாவும் பயனற்றவைகளாம்; ஆதலால் ராமனை அனுப்பிவிடும்; ௮.

அம்ருதத்தை அனல் சூழ்ந்து காப்பதுபோல், இந்த ராமனை விச்வாமித்திரர் காக்கும்போது, இந்த ராமன் அஸ்த்ரவித்யைகளிற் பயின்றவனாயினும் பயிலாதவனாயினும் இவனை அரக்கர்கள் வெல்ல வல்லரல்லர்; ௯.

மூவுலகங்களிலும் * இவரே சரீரந்தரித்த தர்மதேவதை; இவரே வீர்யவான்களுள் சிறந்தவர்; இவரே பேரறிவு பெற்றவர்; இவரே தவங்கட்கெல்லாம் இருப்பிடமாயிருப்பவர்; ௧௦.

இவர், ஜங்கமஸ்தாவரங்களோடு கூடிய மூவுலகங்களிலுமுள்ள நாநாவித அஸ்த்ரங்களையும் அறிவார்; இவரை இதுவரையில் வேறு புருஷன் அறியான்; இனியும் ஒருவரும் அறியப்போகின்றிலர்; ௧௧.

தேவர்கள், ருஷிகள், அஸுரர்கள், ராக்ஷஸர்கள், கந்தர்வர்கள், மேலான யக்ஷர்கள், கின்னரர்கள், மேலான நாகர்கள் என்றுமிவர்களிலுங் கூட ஒருவரும் அறியார்; ௧௨.

எல்லா அஸ்த்ரங்களும் பரமதார்மிகர்களான ப்ருசாச்வனென்பவரின் புத்ரர்கள்; முன்பு விச்வாமித்ரர் அரசுபுரியுங்காலத்தில் விச்வாமித்ரருக்கு அவர்கள் கொடுக்கப்பட்டார்கள்; ௧௩.

அந்த ப்ருசாச்வருடைய புத்ரர்கள், (தக்ஷ) ப்ரஜாபதியின் பெண்களிடத்தில் பிறந்தவர்கள்; அவர்கள், அநேக ரூபமுடையவர்கள்; மஹாவீர்யமுடையவர்கள்; மஹாதேஜஸ்ஸை யுடையவர்கள்; ௧௪.

தக்ஷருக்கு, ஜயை ஸுப்ரபையென்ற அழகான இரண்டு பெண்களிருந்தார்கள்; அவர்கள், மிக ஒளிபெற்ற நூறு அஸ்த்ரசஸ்த்ரங்களைப்பெற்றார்கள்;

அவர்களில் ஜயை யென்பவள், அஸுரஸைன்யங்களை வதஞ் செய்யும்பொருட்டு, அளவிடமுடியாத பராக்ரமமுடையவர்களாய் நினைத்தபடி ரூபந்தரிக்க ஸமர்த்தர்களாய் மேன்மை பெற்றவர்களாயுள்ள ஐம்பது பிள்ளைகளைப் பெற்றாள்; ௧௬.

ஸுப்ரபையென்பவளும், பகைவர்களால் வருந்தியும் வெல்ல முடியாதவர்களாய் எங்கும் வெற்றிபெறுகின்றவர்களாய் மிக்க வலிவு பெற்றவர்களாயுள்ள ஸம்ஹாரர்களென்றும் ஐம்பது பிள்ளைகளைப் பெற்றாள்; ௧௭.

தர்மங்களை யுணர்ந்த அந்தணரைப் புகழ் பெற்ற இவ் விச்வாமித்ரர், அந்த அஸ்த்ரங்களெல்லாவற்றையும் அறிவார்; மற்றும், புதியவைகளான அஸ்த்ரங்களையும் உண்டுபண்ண வல்லமையுள்ளவர்; ௧௮.

---

* இங்கு, 10, 11, 12 ஆவது ச்லோகங்களிலுள்ள "இவர்" என்கிற பதத்திற்கு, "விச்வாமித்ரர்" என்று கோவிந்தராஜர் தாத்பர்யம் எழுதுகிறார்; "ராமர்" என்று திலககாரர் எழுதுகிறார்.

[illegible]
[illegible] ௧௯.
[illegible]
[illegible] ௨௦.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨௧.
[illegible]

[illegible] ஸர்க:

[illegible]
[illegible] ௧.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௩.
[illegible]
[illegible] ௪.
[illegible]
[illegible] ௫.
[illegible]
[illegible] ௬.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அநகே! விச்வாமித்ரர் இவ்விதமான ப்ரபாவமுள்ளவர்; மஹா தேஜஸ்ஸையுடையவர்; மஹாகீர்த்தியையுடையவர்; ஆதலால் ராமனை அனுப்ப நீர் ஸந்தேஹப்படவேண்டாம்; ௧௯.

விச்வாமித்ரர், அவ்வஸ்த்ரங்களைத் தாமே அடக்க வல்லமையுள்ளவர்; ஆயினும், உமது பிள்ளைக்கு நன்மையுண்டாகும் பொருட்டு, இவ்வாறு உம்மிடம் வந்து கேட்டுக் கொள்ளுகிறார்." ௨௰.

அரசர்களிற் சிறந்தவரும் பெரிய புகழ்பெற்றவராகிய தசரதர், இவ்வாறு (வஸிஷ்ட) முனிவர் சொன்னதனால் வருத்தந்தொலைந்து உள்ளந் தெளிந்த முகமலர்ந்தவராய், விச்வாமித்ரரோடு ராமன் போகலாமென்று மனதில் எண்ணிக்கொண்டார். ௨௧.

இருபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

இருபத்திரண்டாவது ஸர்க்கம்.

அவ்வாறு வஸிஷ்டர் சொல்லுகையில் தசரத ராஜர், சிரித்த முகமுடையவராய்த் தமது புத்ரராகிய ராமரை லக்ஷ்மணரோடு கூட அழைப்பித்தார். ௧.

அத்தசரதவேந்தர், தமது அன்புள்ள பிள்ளையாகிய ராமனைத் தாமும் தமது மனைவியும் ஆசீர்வதித்து, புரோஹிதரான வஸிஷ்டரையுங் கொண்டு மங்களவாக்யங்களால் மந்த்ரிக்கச் செய்து, உச்சி முகர்ந்து, உள்ளூற நல்ல ப்ரீதிகொண்டு விச்வாமித்ரருக்குக் கொடுத்தார். ௨.

பிறகு காற்றானது, தாமரைக்கண்ணரான ராமர் விச்வாமித்ரரைப் பின்றொடர்வதைக்கண்டு, அந்தருணந் தூசற்று, ஸுகமாயிருக்குமாறு மெல்ல மெல்ல வீசிற்று. ௩.

மஹாத்மா (=ஸ்ரீராமர்.) புறப்படும்போது (ஆகாசத்தினின்று) தேவர்களது துந்துபிவாத்யங்களின் மிகுந்த கோஷத்தோடுகூடிய அபரிமிதமான புஷ்பவர்ஷமும், (அயோத்த்யையிலும்) சங்கம் துந்துபி என்னும் வாத்யங்களின் கோஷமும் உண்டாயின. ௪.

முன்னே விச்வாமித்ரர் புறப்பட்டார்; அதற்குப்பின், பக்கக்குடுமி தரித்தவராகிய ஸ்ரீராமரானவர் தநுர்த்தரராய் அவ்விச்வாமித்ரரைத் தொடர்ந்தார்; லக்ஷ்மணரும், விற்பிடித்து அந்த ராமரைத் தொடர்ந்தார். ௫.

ஸ்மிதப்ரஹாஸ: ஸ புத்ரௌ தௌ ஆஹூயாய ராஜா தஶரத: ஸ்வயம் | ததஸ் கௌஸல்யாபுத்ராய ஸம்ப்ரேஷணார்த்தம் | ததா ஸஹாயோ வஸிஷ்டேந ஆஜுஹாவ ஸலக்ஷ்மணம் | தத: யியாஸோர் ஜ்யேஷ்டா உத்திஷ்ட தஶரதா விஜ்ஞாபவத் | ததோ வாயு: ஸுகஸ்பர்ஸோ நீரஜஸ்கோ வவௌ ததா " இதி ஶ்லோகத்வயம் அதிகம். † "ப்ரயயௌ." ‡ "ராகவம்."

A ௧௭

[illegible]
[illegible]
[illegible] ௯.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௦.
[illegible]
[illegible] ௧௧.
[illegible]
[illegible] ௧௨.
[illegible]
[illegible] ௧௩.
[illegible]
[illegible] ௧௪.
[illegible]
[illegible] ௧௫.
[illegible]
[illegible] ௧௬.
[illegible]
[illegible] ௧௭.
[illegible]
[illegible] ௧௮.
[illegible]
[illegible]
[illegible] ௧௯.
[illegible]
[illegible] ௨௦.

பா.—* “[illegible]” † “[illegible]” ‡ “வா.”
§ “யாஸ்திகம்.”

மஹாத்மாக்களான ராமலக்ஷ்மணர்களிருவர்களும், அம்புறாத்தூணியுடையவர்களும், கையில் வில்தரித்தவர்களும், பத்துத் திக்குக்களையும் பராக்ரமத்தினால் வெளிப்படச் செய்கின்றவர்களும், மூன்று தலைகளுள்ள இரண்டு ஸர்ப்பங்கள் போன்றவர்களுமாய், ப்ரஹ்மாவை அச்வினீதேவதைகள் பின்தொடர்வதுபோல் மஹாத்மாவான விச்வாமித்ரரைப் பின்தொடர்ந்தார்கள். ௯.

தூணீபாணிகளாய், திவ்யாபரணபூஷிதர்களாய், உடும்புத்தோலினால் செய்யப்பட்ட கவசத்தை விரல்களுக்குத் தரித்தவர்களாய், திவ்யமான காந்தியுடையவர்களாய், திவ்யமான காந்தியுடையவர்களாய், ஸுந்தரமான திருமேனியுடையவர்களாய், (சிவபெருமானது) ஸ்கந்தர் விசாகர் என்னும் இரண்டு குமாரர்கள் போன்றவர்களாய், மஹாத்மாக்களாய், (ஒருவர்க்கொருவர்) ப்ராதாக்களாயுள்ள ராமலக்ஷ்மணர்களானவர்கள் மஹாப்ரபாவமுள்ள சிவபெருமான்போல விளங்கும் விச்வாமித்ரரைப் பின் சென்று (ஜய) லக்ஷ்மியினுடைய ஒளி பெற்றவர்களாய் விளங்கினர். ௧௦.

விச்வாமித்ரர், ஸரயூநதியின் தென்கரையில் ஒன்றரையோஜனைத்தூரஞ் சென்று, ராம என்றழைத்து, இம்மதுரமான வாக்யத்தைச் சொன்னார்:—௧௧.

"குழந்தாய்! சீக்ரமாக ஆசமநஞ் செய்; எல்லா மந்த்ரங்களாலும் நிறைந்தவைகளாயுள்ள பலை அதிபலை என்னும் இரண்டு வித்யைகளை (யான் உனக்கு உபதேசிக்கின்றேன்) நீ பெற்றுக்கொள்; ௧௨.

(இதைப் பெற்றுக் கொண்டாயாயின்,) உனக்கு ஒருச்ரமமாவது, வ்யாதியாவது, ரூபம் மாறுதலாவது உண்டாகாமலிருக்கும்; நீ அசைந்துவிட்டாலும் தூங்கிவிட்டாலும், ராக்ஷஸர்களால் உன்னை ஒன்றுஞ் செய்ய முடியாது; ௧௩.

ராம! உனது புஜபலவிஷயத்தில் இப்பாரினில் உனக்கு ஒப்பானவன் ஒருவனும் இரான்; (மற்ற எல்லா விஷயங்களிலும்) மூவுலகங்களிலும் உனக்கு நிகரானவன் இரான்; ௧௪.

பாபமற்றவனே! (=ராம!) ஸௌந்தர்யத்திலும், ஸாமர்த்யத்திலும், ஜ்ஞாநத்திலும், புத்தியினால் நிச்சயிக்க வேண்டிய விஷயத்திலும், ப்ரச்நம் பண்ணுவதிலும், ப்ரத்யுத்தரஞ் சொல்லுவதிலும் உனக்கு ஸமாநமானவன் ஜகத்தில் ஒருவனும் இரான்; ௧௫.

எல்லா அறிவுக்குந் தாய் போன்றவைகளான பலை அதிபலை என்னும் இவ்விரண்டு வித்யைகளையுங் கற்றுக்கொண்டால் ஒருவனும் உனக்கு ஒப்பாகமாட்டான்; ௧௬.

புருஷோத்தம! ராம! ராகவ! பலை அதிபலை என்னும் வித்யைகளைப் படித்துக் கொண்டுபோனால், வழியில் உனக்குப் பசி தாஹங்கள் உண்டாகா; ௧௭.

இரண்டு வித்யைகளையும் நீ கற்றுக்கொண்டாயாயின், ஒப்பில்லாப் புகழும் உண்டாகும்; மஹாப்ரபாவமுடைய இவ்வித்யைகள், ப்ரஹ்மாவினிடத்தினின்று உண்டானவைகள்; ௧௮.

தார்மிக! காகுத்ஸ்த! என்னிடமிருந்து இவ்வித்யைகளைப் பெறுவதற்கு நீயே தக்கவன்; இக்குணங்கள் யாவும் அநேகமடங்கு அதிகங்களாய் அளவற்றவைகளாய் உன்னிடத்தில் இருக்கின்றன; இதில் ஐயமில்லை; (ஆயினும் பெற்றுக்கொள்;) யான் தவஞ்செய்து ஸம்பாதித்த இவ்வித்யைகள் உன்னிடத்தில் அநேக ரூபங்களாக (அதாவது உன் மூலமாக உலகமெங்கும் பரவினவைகளாக) ஆகுக." ௧௯.

பின்பு ராமனானவர் ஆசமநஞ் செய்து சுத்தராய், பரமாத்மத்யாநஞ் செய்யும் (விச்வாமித்ர)மஹர்ஷியினிடத்தினின்று அவ் வித்யைகளை ஸந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டார். ௨௦.

[illegible]

குருவுக்குச் செய்யவேண்டிய கார்யங்களையெல்லாம் விச்வாமித்ரருக்குச் செய்து அவ்வித்யைகளையடைந்து மிக்க விக்ரமம் பெற்ற ராமன், ஆயிரங் கிரணங்களையுடைய ஸூர்ய பகவான் சரத்ருதுவில் ப்ரகாசிப்பது போல் ப்ரகாசித்தார். ௨௨.

அந்த ஸரயூநதியின் கரையில் மூவரும் அந்த ராத்ரி முழுதும் மிகவும் ஸுகமாக வாஸஞ்செய்தனர். ௨௩.

தமக்குத் தகாத புற்படுக்கையில் இருவருமொன்றாய்ப் படுத்து, விச்வாமித்ரர் சொல்லுங் கதையைக்கேட்டு களிக்கும் தசரதராஜனது உத்தம புத்ரர்களிருவர்க்கும் அவ்விரவு ஸுகமாக விளங்கிற்று. ௨௪.

(இருபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.)

இருபத்து மூன்ருவது ஸர்க்கம்.

இரவு சென்று பொழுது விடியும்போது விச்வாமித்ர மஹாமுனிவரானவர், (புற்கள் கலந்த) சிறகுகளாற் செய்யப்பட்ட படுக்கையிற் படுத்துக்கொண்டிருக்கும் காகுத்ஸ்தர்கள் (=ராமலக்ஷ்மணர்கள்.) இருவர்களையும்நோக்கி, "கௌஸல்யையினது ஸத்புத்ர! புருஷோத்தம! ராம! காலை ஸந்த்யாகாலம் உண்டாகிறது; தேவரைப்பற்றிச் செய்யவேண்டிய நித்யகடமையை (அதாவது ஸந்த்யாவந்தநம் முதலியவற்றை) ச்செய்யவேண்டும்; எழுந்திரு" என்று, அழகாய்க் கம்பீரமாய்ச் சொன்னுர். ௨.

அவ் விச்வாமித்ர ருஷியின் மிகவுங் கம்பீரமான சொல்லைக்கேட்டு, வீரர்களான ராஜபுத்ரர்களிருவர்களும் (எழுந்திருந்து) ஸ்நாநஞ்செய்துவிட்டு, அர்க்யப்ரதாநம் முதலியவற்றைச்செய்து, எல்லாமந்த்ரங்களிலுஞ் சிறந்ததாகிய ஜபத்தை (அதாவது காயத்ரியை) ஜபஞ்செய்தார்கள். ௩.

மஹாவீரரான ராமலக்ஷ்மணரிருவரும் நித்யிற்செய்யவேண்டிய கடமையாவுஞ் செய்து முடித்து, விச்வாமித்ரமுனிவரைத் தெண்டனிட்டு மிகக்களித்து (அவ்விடமிருந்து விச்வாமித்ரர்) புறப்படுவதை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தனர். ௪.

அம்மஹாவீரரிருவரும் அவ்விடமிருந்து புறப்பட்டு, அங்கு புண்யமான ஸரயூநதி வந்துசேருமிடத்தில் கங்காநதியைக் கண்டனர். ௫.

அங்கு, அநேக ஆயிரவர்ஷங்களாகப் பெருந்தவஞ் செய்து கொண்டிருக்கும் மஹாப்ரபாவமுள்ள ருஷிகளின் புண்யமான ஆச்ரமத்தைக் கண்டனர். ௬.

ரகு குலத்துப்பிள்ளைகளிருவர்களும் பரிசுத்தமான அவ்வாச்ரமத்தைக்கண்டு மிகக்களித்து, மஹாத்மாவாகிய அவ்விச்வாமித்ரரை நோக்கி, "ஸ்வாமி! புண்யமான இவ்வாச்ரமம் யாருடையது? இவ்வாச்ரமத்திலிருக்கும் மநுஷ்யர் யாவர்? எங்களுக்குக் குதூஹலம் அதிகமாயிருக்கின்றமையால் யாங்கள் இதைக் கேட்க விரும்புகின்றேம்" என்றும் இவ்வாக்யத்தைச் சொன்னுர்கள். ௭.

[illegible]
[illegible] ௧௦.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௧.
[illegible]
[illegible] ௧௨.
[illegible]
[illegible] ௧௩.
[illegible]
[illegible] ௧௪.
[illegible]
[illegible] ௧௫.
[illegible]
[illegible] ௧௬.
[illegible]
[illegible] ௧௭.
[illegible]
[illegible] ௧௮.
[illegible]
[illegible] ௧௯.
[illegible]
[illegible] ௨௦.
[illegible]
[illegible] ௨௧.

பா.—* [illegible]
[illegible]

அந்த ராமலக்ஷ்மணர்களின் அம்மொழியை (விச்வாமித்ரர்) மஹாமுனிவர் கேட்டுச் சிரித்து, "ராம! முன்பு இந்த ஆச்ரமத்திலிருந்தவனைச் சொல்லுகிறேன் கேள்" என்றழைத்துச் சொல்லத்தொடங்கினார்:— கூ.

"காமனென்று கற்றவர்கள் சொல்லுகிற மந்மதன், முன்புருவமுடையவனாயிருந்தான்; ஒருகால் சிவபெருமான் தமக்கு விவாஹமாவதற்குமுன், மருத்துக்களின் கூட்டங்களோடு கூடி இவ்விடம் வந்து நியமத்துடன்கூடி தவம் புரிகையில், மந்மதன் அறிவு கெட்டு அச்சிவபெருமானுக்குக் காமத்தை விளைக்கத் தொடங்கினான்; மஹாத்மாவாகிய சிவபெருமானும் ஹூம் என்றார்; * (அதாவது நெற்றிக்கண்ணால் கொளுத்திவிட்டார்.) கக.

ரகுநந்தந! பின்பு சிவபெருமானது (நெற்றிக்) கண்ணால் கொளுத்தப்பட்டவனான அறிவுகெட்ட மந்மதனுடைய சரீரத்தினின்று அவயவங்கள் யாவும் சிதறிவிட்டன; கஉ.

மஹாத்மாவாகிய சிவபிரான் சினந்ததனாற் பற்றியெரிந்த அம்மந்மதனது உருவந்தொலைந்துவிட்டது; ஆதலாற்றான் மந்மதன் உருவமற்றவனாயினன். கங.

ராகவ! அம்மந்மதன் அது முதற்றான் அநங்கன் (=சரீரமற்றவன்) என்று பெயர்பெற்றான்; அம்மந்மதன் எவ்விடத்தில் தனது அங்கத்தை இழந்தானோ, அவ்விடத்திற்கு அங்கதேசமென்று பெயர்; கச.

இவ்வாச்ரமம் அச்சிவ பெருமானுடையது; தர்ம விருப்பங்கொண்ட இம்முனிவர்கள் அவரது சிஷ்யர்கள்; அவர்களுக்குப் பாவங்கிடையாது; கரு

அழகுள்ளவனே! ராம! பாவத்தைப் போக்குகின்றவைகளான (கங்கை ஸரயூ என்னும்) இவ்விரண்டு நதிகட்கும் நடுவிலுள்ள இவ்விடத்தில் இன்றிரவு இருப்போம்; நாளையதினம் நாம் (கங்கையைத் தாண்டிப்) போவோம்; கசு.

புருஷோத்தம! நாம் எல்லோரும் ஸ்நாநஞ்செய்துவிட்டு ஜபங்களையும் ஹோமங்களையுஞ் செய்து முடித்து சுத்தர்களாய், (ருஷிகளின்) புண்யமான ஆச்ரமத்திற்குப் போவோம்." கஎ.

அங்கு அவ்விச்வாமித்ரர் ராமர் லக்ஷ்மணர் என்னும் மூவரும் பேசிக்கொண்டிருப்பதை, முனிவர்களானவர்கள் தூரத்திலிருப்பதையுங் கண்டறியும்படியான தவமென்னுங் கண்கொண்டு அறிந்து, (அவர்களிடம்) மிக்க அன்புகொண்டு களிப்படைந்தார்கள். கஅ.

அர்க்யம் பாத்யம் முதலிய அதிதிபூஜையெல்லாம் முன்பு விச்வாமித்ரருக்குச்செய்து, பிறகு ராம லக்ஷ்மணர்களுக்குச் செய்தார்கள். ககூ.

அந்த ருஷிகள் (அவ்விச்வாமித்ரருக்குத்) தக்கபடி பூஜைசெய்து நன்றாய் விசாரித்துவிட்டு, (ஸாயங்காலம்) ஸந்த்யாவந்தநஞ் செய்தார்கள். உ0.

அங்கு வஸிக்கும் நல்லொழுக்கமுள்ள முனிவர்களால் அவ்விச்வாமித்ரர் ராமர் லக்ஷ்மணர்என்னும் மூவரும் அழைத்துக்கொண்டு போகப்பட்டு, அச்சிவபெருமானது ஆச்ரமத்தில் ஸுகமாக வாஸஞ் செய்துகொண்டிருந்தனர். உக.

* இந்த-கக-ச்லோகத்திற்கும், முநிபாவப்ரகாசிகை என்னும் வ்யாக்யாநத்தில், "ப்ராண - அபாந - ஸமாந - உதாந - வ்யாநங்களென்னும் பஞ்ச ப்ராணங்களையும் பந்தாநஞ்செய்து த்யாநநிஷ்டராய்த் தவஞ்செய்துகொண்டிருந்த தேவநாதராகிய சிவபெருமான் மனதை மந்மதன் கலக்கினான்" என்று தாத்பர்யம் எழுதப்பட்டிருக்கிறது.

[illegible]
[illegible] ௨௨.

இதி ஶ்ரீமத்3ராமாயணே பா3லகாண்டே3 த்3வாத்ரிம்ஶ: ஸர்க3:.

அத2 த்ரயஸ்த்ரிம்ஶ: ஸர்க3:.

[illegible]
[illegible] ௧.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௩.
[illegible]
[illegible] ௪.
[illegible]
[illegible] ௫.
[illegible]
[illegible] ௬.
[illegible]
[illegible] ௭.
[illegible]
[illegible] ௮.
[illegible]
[illegible] ௯.
[illegible]
[illegible] ௧௦.
[illegible]
[illegible] ௧௧.

பா.—* [illegible] † [illegible] ‡ [illegible]
§ [illegible]

தர்மாத்மாவான விச்வாமித்த்ர மஹாமுனிவர், அதிஸௌந்தர்யமுள்ள ராஜபுத்த்ரர்கள் இருவர்களையும் அழகான கதைகளைக்கொண்டு ஸந்தோஷப் படுத்தியிருந்தார். உ௪.

இருபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

இருபத்து நான்காவது ஸர்க்கம்.

பிறகு, பகைவர்களை அடக்குவிக்கும் ராமலக்ஷ்மணரிருவரும், இருட்டொழிந்து பொழுது விடிந்த உடனே நித்யகடமைகளைச் செய்து முடித்து, விச்வாமித்த்ரரை முன்னிட்டுக்கொண்டு, (கங்கா) நதியின் கரைக்கு வந்து சேர்ந்தனர். க.

பின்பு, மிக்க உக்ரமாய் வ்ரதங்களைச் செய்த மஹாத்மாக்களாகிய அம்முனிவர்களும், நல்ல ஒரு ஓடத்தை அருகிற்கொண்டு நிறுத்தி, விச்வாமித்த்ரரை நோக்கி, "தேவரீர் ராஜபுத்த்ரர்களையுங்கூட அழைத்துக் கொண்டு, காலவிலம்பஞ் செய்யாமல் ஓடமேறி, ஸுகமாக வழியைச் சென்று போகவேண்டும்" என்று சொல்லினர். உ.

விச்வாமித்த்ரரும், அவ்வாறே ஆகட்டுமென்று சொல்லி, அந்த ருஷிகளெல்லோர்கட்கும் மரியாதை செய்துவிட்டு, அந்த ராமலக்ஷ்மணர்களோடு கூடி, (அந்த ஓடத்தில் ஏறிக்கொண்டு,) ஸமுத்ரத்தை நோக்கிச் செல்லும் (கங்கா) நதியைத் தாண்டத்தொடங்கினர். ௩.

பிறகு, ராமர் தமது தம்பியோடு கூடி (ஓடமேறி) ஜலத்தின் நடுவில் வந்துகொண்டிருக்கும்போது, அலைகள் ஒன்றோடொன்று அடித்துக் கொள்வதனால் மேன்மேலும் அதிகப்படும் ஓரொலியைக்கேட்டார். ௫.

"ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் ஜலத்தின் இப்பெரிய கோஷம் எங்கிருந்து உண்டாகின்றது" என்று, நதியின் நடுவில் ராமர் விச்வாமித்த்ரரைக் கேட்டார். ௬.

தர்மாத்மாவாகிய விச்வாமித்த்ரர், ராகவனுடைய மொழிகேட்டு களித்து, அவ்வொலியின் உண்மையைச் சொல்லினர்:— எ.

"புருஷோத்தம! ராம! கைலாஸபர்வதத்தில் ப்ரஹ்மா தமது மனதினால் ஒரு ஸரஸ்ஸை (=குளத்தை.) ஸ்ருஷ்டித்தார்; அதைப்பற்றி இதற்கு "மாநஸ ஸரஸ்" என்று பெயர்; அ.

பாவத்தைப்போக்கும் ஸரயூநதி, அதிலிருந்து உண்டாகிறது; ப்ரஹ்மாவினால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஸரஸ்ஸிலிருந்துண்டாகும் அந்த ஸரயூநதி, அயோத்த்யையைச் சுற்றிவருகிறது; அது ஸரஸ்ஸிலிருந்துண்டானதால் "ஸரயூ" என்று சொல்லப்படுகிறது; ௯.

அந்த ஸரயூநதி, கங்கையில் வந்து விழுகிறது; அதன் ஜலம் மிக்கவேகமாய் வந்து கங்கையின் ஜலத்தோடு மோதிக்கொள்வதனால் இம்மிகுந்த கோஷம் உண்டாகிறது; நல்ல ஆக்கத்துடன் (இவ்விரண்டு நதிகட்கும்) நமஸ்காரஞ் செய்." ௧௦.

மிக்க தார்மிகர்களான அந்த ராமலக்ஷ்மணர்களிருவர்களும், அவ்விரண்டு நதிகட்கும் நமஸ்காரஞ்செய்து, கங்கையின் தென்கரை சென்று, மெல்ல மெல்ல நடந்து போனார்கள். ௧௧

இக்ஷ்வாகு குலத்திற் பிறந்த மஹாத்மாவும் புத்திமானுமான அந்த ராமர், அந்த ஜனஸஞ்சாரமில்லாமல் பயங்கரமாயிருக்கும் ஒரு வனத்தைக் கண்டு, (விச்வாமித்ர) மஹா முனிவரைக் கேட்டார்:— ௧௨.

“ஸ்வாமி! இவ்வனமானது, வருத்தியும் உள்ளே புக முடியாததாய், சில்லீவண்டுகளின் கூட்டங்களால் (எங்கும்) ஒலிக்கப்பெற்றதாய், பயங்கரங்களான கொடிய மிருகங்களாலும் பயங்கரமாய்க் கூச்சலிடும் கழுகுக்காக்கைகளாலும் நிறைந்ததாய், ௧௩.

பயங்கரமாயும் விகாரமாயுங் கூச்சலிடும் பலவகைப் பறவைகளாலும் ஸிம்ஹங்களாலும் புலிகளாலும் பன்றிகளாலும் யானைகளாலும் எங்கும் நிரம்பப் பெற்றதாய், ௧௪.

வெள்வேல், ஆச்சா, மருது, வில்வம், பாதிரி, இலந்தை என்னும் மரங்களாலும் நிரம்பினதாயிருக்கின்றதே! இவ்வனம், யாது காரணத்தால் இவ்வாறு பயங்கரமாயிருக்கிறது?” ௧௫.

மஹா ப்ரபாவமுள்ள விச்வாமித்ர மஹாமுநிவர், அந்த ராமனை நோக்கி, “குழந்தாய்! காகுத்ஸ்த! இவ்வனம் இவ்வாறு பயங்கரமாயிருத்தலுக்குக் காரணம் இன்னதென்பதைச் சொல்லுகிறேன் கேள்” என்று அழைத்துச் சொன்னார்:— ௧௬.

“புருஷோத்தம! (இங்கு,) மலதம் கரூசம் என்னுமிவ்விரண்டு தேசங்கள், முன்பொருகால் தேவலோகம் போல் அழகாய் ஸ்ருஷ்டிக்கப்பட்டவைகளாய், தநதாந்யங்களால் நிரம்பினவைகளாய் இருந்தன; ௧௭.

ராம! முன்பு, இந்திரன் வ்ருத்ராஸுரனை வதஞ்செய்யும் போது அவனுக்கு ப்ரஹ்மஹத்தியுண்டாய், பாவமும் பசியும் உண்டாயின; ௧௮.

தேவர்களும், தபோதநர்களான ருஷிகளும், அந்த இந்திரனை அநேக புண்ய தீர்த்தங்களில் ஸ்நாநஞ்செய்வித்து, மந்த்ரங்களால் பரிசுத்தங்களான கலச தீர்த்தங்களால் மறுபடியும் ஸ்நாநஞ்செய்வித்து, அவனைப் பாவத்தினின்று நீக்குவித்தார்கள்; ௧௯.

பிறகு, இந்திரனுடைய சரீரத்திலுண்டான பாவத்தையும் பசியையும் இப்பூமியில் ஒழியும்படி செய்து ஸந்தோஷமடைந்தார்கள்; ௨௦.

ப்ரபுவாகிய இந்திரன் அவ்வாறு தனது பாவமும் பசியுந்தொலைந்து சுத்தனாகும்போது மிகக்களித்தவனாய், “இந்தத்தேசங்கள் எனது பாவத்தை ஒழித்ததனால், இவைகள் தநதாந்யங்களால் நிறைந்து, “மலதம், கரூசம்” என்று உலகத்தில் ப்ரஸித்தி பெறவேண்டும்” என்று, இத்தேசங்கட்கு வரங்கொடுத்தான்; ௨௨.

புத்திமானான இந்திரன் அவ்வாறு இத்தேசங்கட்கு வரங்கொடுப்பதைத் தேவர்கள் கண்டு, “நல்லது அப்படியே ஆகவேண்டும்” என்று, அந்த இந்திரனை நோக்கிச்சொல்லினர்; ௨௩.

பகைவர்களை யடக்கும் ராம! அதனால், வெகு காலமாய் இத்தேசங்கள், ஜனங்கள் களித்து தநதாந்யங்கள் நிரம்பி செழிக்கப் பெற்றிருந்தன; ௨௪.

பிறகு சிறிது காலத்திற்குப்பின், தாடகையென்னும் ஒரு யக்ஷப்பெண், நினைத்தபடி ரூபங்கொள்ள வல்லவளும், ஆயிரம் யானை பலமுள்ளவளுமாய்ப் பிறந்தாள்; அவள், புத்திமானான ஸுந்தனுக்கு மனைவியானாள்: ௨௫.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ൨൮
[illegible]
[illegible] ൨൯.
[illegible]
[illegible] ൩൦.
[illegible]
[illegible] ൩൧.
[illegible]
[illegible] ൩൨.

ഇതി ശ്രീരാമായണേ ബാലകാണ്ഡേ ചതുസ്ത്രിംശഃ സർഗ്ഗഃ

അഥ പഞ്ചത്രിംശഃ സർഗ്ഗഃ.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ൨.
[illegible] ൩.
[illegible]
[illegible]
[illegible] ൪.
[illegible]
[illegible] ൫.
[illegible]
[illegible] ൬.

പാ.— * [illegible] † [illegible] ‡ [illegible] § [illegible] ¶ [illegible] [illegible] || [illegible] [illegible]

அவருக்கு, இந்த மிகச் சிறந்த பராக்ரமம் பெற்ற மாரீசனென்னும் ஒரு ராக்ஷஸப்பிள்ளை பிறந்தான்; ௨௬.

பருத்த கைகளையுடையவனாய், பருத்த முகத்தையுஞ் சரீரத்தையுமுடையவனாய், மஹாவீர்யமுடையவனாய், பயங்கரமானவுருவமுடையவனாயுள்ள அந்தப் பெரிய ராக்ஷஸன், எப்பொழுதும் ஜனங்களைப் பயப்படுத்துகிறான்; ௨௭.

ராகவ! கொடிய செய்கையுள்ள தாடகை, மலதம் கரூசம் என்னும் இந்த தேசங்களை எப்பொழுதும் பாழ் பண்ணுகிறாள்; ௨௮.

அவள் தான், இவ்விடமிருந்து ஒன்றரை யோஜனைத் தூரத்தில் வழியைத் தகைந்து கொண்டு வாஸஞ்செய்கிறாள்; ஆதலால், தாடகையிருக்கும் வநத்தின் வழியாகவே நாம் போகவேண்டும்; ௨௯.

கொடிய செய்கையுள்ள இத்தாடகையை, எனது சொற்படி நீ உனது புஜபலங்கொண்டு ஒழித்து, முன்போலவே இந்தத் தேசத்திற்கு ஒர் உபத்ரவமும் இல்லாதிருக்கும்படி செய்யவேண்டும்; ௩0.

ராம! இவ்விடமானது, கோரரூபமுடையவளாய் வெல்ல முடியாத வல்லமையுடையவளாயுள்ள யக்ஷப்பெண்ணான தாடகையால் பீடிக்கப்பட்டு இவ்வாறு பெருங்காடாய் விட்டதனால், ஒருவரும் இங்கு வரமுடியவில்லை; ௩௧.

இவ்விடம் இவ்வாறு கோரவநமானதைப்பற்றிய கதையையெல்லாம் உனக்குச் சொல்லிவிட்டேன்; யக்ஷப்பெண்ணான தாடகையின் உபத்ரவம் சிறிதும் குறையாமல் இன்னும் அப்படியே நடந்துகொண்டிருக்கிறது" ௩௨.

இருபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

இருபத்தைந்தாவது ஸர்க்கம்.

பிறகு, ஆண்சிங்கமான ஸ்ரீராகவனார், மஹாப்ரபாவமுள்ள அவ்விச்வாமித்ரமுனிவருடைய உத்தம வாக்யத்தைக்கேட்டு, அம்முனிவரை நோக்கி, "மஹாமுனிவரே! யக்ஷர்களுக்கு அதிக பலமில்லையென்று எல்லோருஞ் சொல்லுகிறார்களே! யக்ஷர்களிலும் பெண்ணான தாடகை, யாது காரணத்தால் ஆயிரயானை பலத்தைத் தரிக்கின்றாள்?" என்றுமிவ்வின் சொல்லைச் சொன்னார். ௨.

"(இத்தாடகை,) மிக்க பலமுடையவளாக ஆனதற்குக் காரணம் இன்னதென்பதைச் சொல்லுகிறேன் கேள்" என்று ஸ்ரீராமனை அழைத்து விச்வாமித்ரர் இம்மொழியையுரைத்தார்:— ௩.

"(இத்தாடகை,) ஸ்த்ரீயாயிருந்தாலும், வரம் பெற்றதனால் இப்படிப்பட்ட பலபராக்ரமங்களைத்தரிக்கின்றாள்; முன்பொருக்கால், மிக்க பராக்ரமமுடையவனாய் ஸுகேதுவென்னும் ஒரு பெரிய யக்ஷன் இருந்தான்; நல்லொழுக்கமுள்ள அந்த யக்ஷன், பிள்ளையில்லாமற் பெருந்தவம் புரிந்தான்; ௪.

ப்ரஹ்மா வந்து மிக்க ஸந்தோஷமடைந்து, அந்த யக்ஷராஜனுக்குத் தாடகையென்னும் ஒரு பெண்மணியை (வரம்) கொடுத்தார்; ௫.

பெரும்புகழ் பெற்றவராய், எல்லாவுலகங்கட்கும் பாட்டனாயுள்ள ப்ரஹ்மாவானவர், இந்தத் தாடகைக்கு ஆயிரயானை வலிமையுங் கொடுத்தார்; யக்ஷனான அந்த ஸுகேதுவுக்குப் பிள்ளையை மாத்ரங் கொடாமலே போய்விட்டார்; ௬.

[illegible]
[illegible] எ
[illegible]
[illegible] அ
[illegible]
[illegible]
[illegible] கூ
[illegible]
[illegible] க0
[illegible]
[illegible]
[illegible] கக
[illegible]
[illegible] கஉ
[illegible]
[illegible] கந
[illegible]
[illegible] கச
[illegible]
[illegible] கரு
[illegible]
[illegible] கசு
[illegible]
[illegible] கஎ
[illegible]
[illegible]
[illegible] கஅ

[illegible]

அந்தத்தாடகை பிறந்து மிக்க புகழ்பெற்று நாளுக்கு நாள் வளர்ந்து நல்ல அழகோடும் யௌவன ப்ராயத்தோடுங்கூடி விளங்குகையில், (அவளது தந்தையாகிய ஸுகேது,) ஜர்ஜனென்பவனுடைய பிள்ளையாகிய ஸுந்தனென்பவனுக்கு அந்தத்தாடகையை விவாஹஞ் செய்து கொடுத்தான்; ௭.

பிறகு சிறிது காலஞ்சென்றபின்பு, யக்ஷப்பெண்ணான தாடகையானவள் மாரீசனென்னும் வல்லவனான ஒரு பிள்ளையைப் பெற்றாள்; அவன், சாபத்தால் ராக்ஷஸனாய்விட்டான்; ௮.

ராம! ஸுந்தன் (அகஸ்த்யரால்) ஹதனாய்விழுகையில், அந்தத்தாடகை அந்த பிள்ளையுங் கூட்டிக்கொண்டு, அகஸ்த்யமஹர்ஷியைப் பிடிக்க விரைந்து, பெரிய பரபரப்புடன்கூடி கர்ஜித்துக்கொண்டு, அந்த அகஸ்த்யரை விழுங்கிவிட எதிர்த்தோடினாள்; ௯.

அவள் ஓடிவருவதை அவ்வகஸ்த்யமஹர்ஷி கண்டு மிக்கசினந்து, "நீ ராக்ஷஸனாய்ப் போய்விடவேண்டும்" என்று மாரீசனைச் சபித்தார்; ௧௦.

மிக்க கோபங்கொண்ட அகஸ்த்யரானவர், "நீ மனிதனைத் தின்பவளும், விகாரமான ரூபமுடையவளும், விகாரமான முகமுடையவளுமாக ஆய்விட வேண்டும்; இனி, உனக்கு இந்த ரூபம் ஒழிந்து கோரமான ரூபம் உண்டாக வேண்டும்" என்று தாடகையையும் சபித்துவிட்டார்; ௧௧.

அவர் சாபம் பலித்ததனால் அந்தத்தாடகை மிக்க கோபங்கொண்டு, அகஸ்த்யரிருந்த இந்த நல்லவிடத்தைப் பாழ் பண்ணினாள்; ௧௨.

ராகவ! கொடியசெய்கையுடையவளாய், மிக்க கோரமான ரூபமுடையவளாய், பொல்லா வல்லமையுடையவளாயுள்ள யக்ஷப்பெண்ணான இந்தத் தாடகையை, கோக்களுக்கும் ப்ராஹ்மணர்களுக்கும் நன்மையுண்டாகும் பொருட்டு நீ வதஞ்செய்யவேண்டும்; ௧௩.

ரகுநந்த! சாபம் பெற்ற இந்தத்தாடகையை வதஞ்செய்யவல்லவனான புருஷன், மூவுலகங்களிலும் உன்னைத்தவிர வேறொருவனுமில்லை; ௧௪.

புருஷோத்தம! ஸ்த்ரீயை வதஞ்செய்யவேண்டுமேயென்று நீ அருவருப்பு கொள்ளவேண்டாம்; ராஜபுத்ரனாயிருப்பவன், நான்கு ஜாதிகளுக்கும் நன்மையை விளைக்குங் கார்யத்தை அவச்யஞ் செய்யவேண்டும்; ௧௫.

ஒரு கார்யமானது கெட்டதாயிருந்தாலும், நல்லதாயிருந்தாலும், அபவாதத்தோடு கூடினதாயிருந்தாலும், அபவாதமற்றதாயிருந்தாலும், ஜநங்களைப் பாதுகாக்கும் ஸத்புருஷனானவன் ஜநங்களைப் பாதுகாக்கும்பொருட்டு அந்தக் கார்யத்தைக் கட்டாயமாகச் செய்யவேண்டும்; ௧௬.

காகுத்ஸ்த! ஆசாரம் இழிந்தவர்களுக்கு, இது எப்பொழுதுஞ் செய்ய வேண்டிய ஒரு தர்மம்; அதர்மத்தோடு கூடிய தாடகையை அவச்யம் நீ வதஞ் செய்யவேண்டும்; தர்மமோ இவளிடத்தில் கிடையாது; ௧௭.

அரசே! (ராம!) முன்பொருக்கால், விரோசநனென்பவனுடைய பெண்ணாகிய மந்தரையென்பவள் பூமியை நாசஞ்செய்ய எண்ணங் கொண்டதனால், அவளை இந்த்ரன் வதைத்தானென்றுங் கதையையுங் கேட்டிருக்கிறேன்; ௧௮.

விஷ்ணுநா ச புரா ராம! ப்ருகுபத்நீ *த்ருடவ்ரதா।
அநிந்த்ரம் லோகமிச்சந்தீ காவ்யமாதா நிஷூதிதா॥ உ0.
ஏதைஶ்சாந்யைஶ்ச பஹுபீ ராஜபுத்ர! மஹாத்மபி:।
அதர்மஸஹிதா நார்யோ †ஹதா: புருஷஸத்தமை:। உக.

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே பஞ்சவிம்ஶ: ஸர்க்க:.

அத ஷட்விம்ஶ: ஸர்க்க:.

முநேர்வசநமக்லீபம் ஶ்ருத்வா ‡நரவராத்மஜ:
ராகவ: ப்ராஞ்ஜலிர்பூத்வா ப்ரத்யுவாச §த்ருடவ்ரத:॥ க
பிதுர்வசநநிர்தேஶாத் பிதுர்வசநகௌரவாத்।
வசநம் கௌஶிகஸ்யேதி கர்தவ்யமவிஶங்கயா।
அநுஶிஷ்டோऽஸ்ம்யயோத்யாயாம் குருமத்யே மஹாத்மநா।
பித்ரா தஶரதேநாஹம் நாவஜ்ஞேயம் ஹி தத்வச:। ௩.
¶ஸோऽஹம் பிதுர்வச: ஶ்ருத்வா ஶாஸநாத் ப்ரஹ்மவாதிந:।
கரிஷ்யாமி ந ஸந்தேஹஸ் தாடகாவதமுத்தமம்। ௪.
கோப்ராஹ்மணஹிதார்தாய தேஶஸ்யாஸ்ய ஸுகாய ச।
தவ சைவாப்ரமேயஸ்ய வசநம் கர்துமுத்யத:। ௫.
ஏவமுக்த்வா தநுர்மத்யே பத்த்வா முஷ்டிமரிந்தம:।
ஜ்யாஶப்தமகரோத்தீவ்ரம் திஶ: ஶப்தேந நாதயந்। ௬
தேந ஶப்தேந வித்ரஸ்தாஸ் தாடகாவநவாஸிந:।
தாடகா ச ஸுஸங்க்ருத்தா தேந ஶப்தேந மோஹிதா। ௭.
தம் ஶப்தமபிநித்யாய ராக்ஷஸீ க்ரோதமூர்ச்சிதா।
ஶ்ருத்வா ≑வாஸ்த்ரம்வத் [illegible] யதோ ஶப்தோ விநி:ஸ்ருத:। ௮.
தாம் த்ருஷ்ட்வா ராகவ: க்ருத்தாம் விக்ருதாம் விக்ருதாநநாம்।
ப்ரமாணேநாதிவ்ருத்தாம் ச லக்ஷ்மணம் ஸோऽப்யபாஷத॥ ௯.

பா.—*"புகீர்த்திதா." †கலிதே த்ருஶ்யதே:—"ஏதாஶ்சாந்யாஶ்ச [illegible] நிஹதா: [illegible]" ‡"நரவராத்மஜ:." §"கௌஶிகம்." ¶"அஸ்மாத்." [illegible]"கௌஶிகஸ்ய." ≑"வாஸ்த்ரம்வத்." [illegible]"க்ரோதத:."

ராம! முன்பு, ப்ருகுவின் பத்னியும் சுக்ராசார்யருக்கு மாதாவுமான ஒரு ஸ்த்ரீ, ஒப்பிடமுடியாத லோகத்தில் இந்த்ரனே இல்லாமல் செய்துவிடவேண்டுமென்றெண்ணினதனால், விஷ்ணுவும் அவளைக் கொன்றார். ௨௧.

ராஜபுத்ர! இன்னும், மஹாத்மாக்களான இப்படிப்பட்ட ஸத்புருஷர்கள் அநேகர்கள், அதர்மத்திலிருக்கும் கொடிய ஸ்த்ரீகளை வதஞ்செய்திருக்கிறார்கள். (ஆகையால், இந்த தாடகையை நீ கட்டாயமாக வதஞ்செய்யவேண்டும்)" ௨௨.

இருபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

இருபத்தாறுவது ஸர்க்கம்.

மஹாராஜபுத்ரராய், ஸத்யஸங்கல்பரான ராகவர், தைர்யமாய் (விச்வாமித்ர) முனிவர் உரைத்த மொழி கேட்டு, அஞ்ஜலிபத்தராய் முனிவரை நோக்கிச் சொன்னார்:— ௧.

"தந்தை சொல்லுக்கு மேன்மையுண்டாகும்பொருட்டு, தந்தைசொற் கட்டளைப்படி, விச்வாமித்ரர் சொல்லுஞ் சொல்லை நீ ஸந்தேஹமின்றி செய்யவேண்டும் என்று, அயோத்யையில் குருக்களின்நடுவில், எனது பிதாவாகிய மஹாத்மாவான தசரதரால் யான் கட்டளையிடப்பட்டேன்; அவர்சொல்லை யான் தள்ளக்கூடாது; ௩.

யான் எனது தந்தை சொற்படி உமது கட்டளையைக்கேட்டவனாய், மிக்க நன்மையான தாடகையின் வதத்தை ஸந்தேஹமின்றி செய்கிறேன்; ௪.

கோக்களுக்கும் ப்ராஹ்மணர்களுக்கும் நன்மையுண்டாகும்பொருட்டும், அளவிடமுடியாத ப்ரபாவமுடைய உமக்கும் இந்தத்தேசத்திற்கும் ஸுக முண்டாகும்பொருட்டும் உமது சொற்படிசெய்ய யான் ஸித்தனாயிருக்கிறேன்."

சத்ருக்களைத்தபிக்கச்செய்யும் ஸ்ரீராகவர் இவ்வாறு சொல்லி, வில்லின் நடுவை உறுதியாய்ப்பிடித்து, திக்குகளிலெங்கும் பெரிய கோஷமுண்டாகும் படி நாணேற்றினார். ௬.

தாடகையின் வநத்திலிருப்பவர்கள், அந்த சப்தத்தைக்கேட்டு மிகவும் நடுங்கிவிட்டார்கள்; தாடகையும், அவ்வொலியினால் ப்ரமித்து மிகவுங் கோபங் கொண்டாள். ௭.

அவ்வரக்கியானவள் அவ்வொலியையுற்றுக்கேட்டு மிக்ககோபங்கொண்டு, அவ்வொலியுண்டானவிடத்திற்கு வேகமாய் ஓடினாள். ௮.

மிகவும் பருத்துயர்ந்து விகாரமான ரூபமும் முகமுமுடையவளான அவ்வரக்கி கோபங்கொண்டு ஓடிவருவதை அந்த ராகவர்கண்டு, லக்ஷ்மணனை நோக்கிச்சொன்னார்:— ௯.

[illegible]
[illegible] ௧௦.
[illegible]
[illegible] ௧௧.
[illegible]
[illegible] ௧௨.
[illegible]
[illegible] ௧௩
[illegible]
[illegible] ௧௪
[illegible]
[illegible] (௧௬).
[illegible]
[illegible] ௧௫.
[illegible]
[illegible] ௧௭.
[illegible]
[illegible] ௧௮.
[illegible]
[illegible]
[illegible] ௧௯.
[illegible]
[illegible] ௨௦.
[illegible]
[illegible] ௨௧.
[illegible]
[illegible] ௨௨.

பா.—* "[illegible]" † "[illegible]"
‡ "[illegible]" § "[illegible] காத்."

"லக்ஷ்மண! பயங்கரமாயும் விகாரமாயுமுள்ள இந்த யக்ஷப்பெண்ணின் சரீரத்தைப்பார்; இவளைக்கண்டதனால் தைர்யசாலிகளின் ஹ்ருதயங்களுங் கலங்கிவிடும்; ௧௦.

மாயையென்னும் வலிவுகொண்டவளாய், வெல்லமுடியாதவளாயுமுள்ள இத்தாடகையை இப்பொழுது காதையும் நுனி மூக்கையும் அறுத்துத் துரத்தி விடுகிறேன்; பார்; ௧௧.

இவள் ஸ்த்ரீயாயிருப்பதால் இவளைக்கொல்ல எனக்கு இஷ்டமில்லை; ஆதலால், இவளைக் கைகால்களை முறித்து வலிவில்லாமற் செய்து விட்டு விடலாமென்று நினைக்கிறேன்." ௧௨.

இவ்வாறு ராமர் சொல்லிக்கொண்டிருப்பதற்குள், தாடகை மிக்க கோபங் கொண்டு இரண்டு கைகளையும் உயரவெடுத்துக் கர்ஜித்துக்கொண்டு ராமரை நோக்கியே எதிர்த்தோடினள். ௧௩.

ப்ரஹ்மர்ஷியாகிய விச்வாமித்ரரும், அவளை ஹூம் என்று மிரட்டிவிட்டு, "ரகுகுலத்துப் பிள்ளைகளிருவர்களுக்கும் மங்கலமும் ஜயமும் உண்டாக வேண்டும்" என்று சொன்னார். ௧௪.

அத்தாடகையானவள், புழுதியை வாரி எங்கும் இறைத்து, முஹூர்த்த காலம் ராகவர்களிருவர்களையும் அப்புழுதி யென்னும் மிகுந்த இருட்டினால் ஒன்றுந்தெரியாமற் செய்துவிட்டாள். ௧௫.

பிறகு, மாயாரூபமுடையவளாய், அளவிடமுடியாத கற்களைக் கொண்டு ராகவர்களிருவர்கள்மீதும் எறிந்தாள்; பின்பு, ராகவருங்கோபங்கொண்டார். ௧௬.

அத்தாடகை கொண்டெறியுங் கற்களையெல்லாம், ராகவனார் தமது சரவர்ஷத்தால் ஆங்காங்குத் தடுத்துப் பொடிபொடியாயடித்து, அவள் ஓடிக்கொண்டிருக்கும்போது அவள் கைகளை அறுத்துத்தள்ளிவிட்டார். ௧௭.

பிறகு, கைகள் அறுந்து இளைத்து அருகில் மிக்க கர்ஜனஞ்செய்துகொண்டிருக்கும் அந்தத்தாடகையை, ஸுமித்ரையின் புத்ரரான லக்ஷ்மணர் கண்டு சினந்து, அவளது காதுகளையும் மூக்கு நுனியையும் அறுத்துவிட்டார். ௧௮.

தத்க்ஷணமே யக்ஷியானவள் நினைத்தரூபங்கொள்ள வல்லவளாயிருந்ததைப்பற்றி மாயையினால் ரூபங்களை அநேகவிதங்களாகச்செய்து மறைந்து, அந்த ராமலக்ஷ்மணர்களை மனங்கலங்கச்செய்கிறவள்போல், பயங்கரமாய் மழை பொழிவதுபோல கற்களைக்கொண்டெறிந்து திரிந்துகொண்டிருந்தனள். ௧௯.

பிறகு, அந்தராமலக்ஷ்மணர்களின்மீது, கற்களென்னும் மழை நாற்புறத்தும் பொழிவதை மிக்க வொளிபெற்ற விச்வாமித்ரர் கண்டு, அவர்களை நோக்கி இம்மொழியை யுரைத்தார்:— ௨௦.

"ராம! (இவள்விஷயத்தில் இதுவரையில்) நீ தயைசெய்தது போதும்; மாயாரூபங்கொண்டு யாகங்களுக்கு விக்நஞ்செய்யும் இக்கொடியபாபியானவள் இனி மாயையினால் கொழுத்துவிடுவள்; ௨௧.

ஸந்த்யாகாலம் உண்டாகப்போகிறது; அதற்குள்ளேவே இவளைவதஞ்செய்; ராக்ஷஸர்களை ஸந்த்யாகாலத்தில் வெல்லமுடியாது." ௨௨.

[illegible]

இவ்வாறு (விச்வாமித்ரரால்) சொல்லப்பட்ட அந்த ராகவர், கற்களைச் சொரிந்து சஞ்சரித்துக்கொண்டிருக்கும் மாயாவியென்றுமான அந்தத் தாடகையை மறைவிலிருப்பவளாயினும் சப்தத்தினால் பிடித்துக்கொள்ளும்படியான "சப்தவேதம்" என்னும் பாணத்தைப் ப்ரயோகித்துப் பிடித்து இருக்கும்படி செய்து, அவளை எங்கும் போகவொட்டாமல் பாணங்களால் தடுத்துவிட்டார். ௨௩.

மாயையினால் மறைந்திருந்த அந்தத் தாடகையானவள் (ராகவனுடைய) பாணங்களின் கூட்டங்களால் தடைபட்டவளாய் மிக்க கர்ஜனஞ்செய்துகொண்டு ராமனையும் லக்ஷ்மணனையும் நோக்கி எதிர்த்தோடிவந்தாள். ௨௪.

இடியிடிப்பதுபோல் இரைந்துகொண்டு ஓடிவரும் மிக்க வல்லமையுடைய அந்தத் தாடகையின் மார்பில் (ராகவனுர்) ஒரு பாணத்தைப்போட்டடித்தார்: அவள், (கீழே) விழுந்து மாண்டாள். ௨௫.

கோரரூபமுடைய அந்தத் தாடகை மாண்டதைத் தேவேந்த்ரனும் தேவர்களுங்கண்டு, "நன்று செய்தீர், நன்று செய்தீர்" என்று காகுத்ஸ்தனைப் புகழ்ந்துகொண்டார்கள். ௨௬.

பின்பு, ஆயிரங்கண்ணனை இந்த்ரனும் வானவர்களும் மிக்க மகிழ்ச்சிகொண்டு, விச்வாமித்ரரை நோக்கிச்சொல்லினர்:— ௨௭.

"விச்வாமித்ரமுநிவரே! உமக்கு க்ஷேமமுண்டாகவேண்டும்; இந்தக் கார்யத்தால் இந்த்ரனுடன் தேவர்களின் கூட்டங்கள் யாங்களெல்லோரும் ஸந்தோஷமடைந்தோம்: ராகவனிடத்தில் உமக்கு உண்டான ஸ்நேஹத்தை நீர் வெளியிடவேண்டும்; ௨௮.

ஸத்யமான பராக்ரமமுடையவைகளாய், (உமது) தபோபலத்தால் ஸம்பாதிக்கப்பட்டவைகளாயுள்ள ப்ருசாச்வருடைய பிள்ளைகளாகிய அஸ்த்ரங்களை ராகவருக்குக் கற்பியும்; ௨௯.

ப்ராஹ்மணரே! நீர் அழைத்துவந்திருக்கிற இந்த ராமர், உம்மிடமிருந்து இந்த அஸ்த்ரங்களையெல்லாம் பெறுதற்குத் தக்கவராயிருக்கிறார்; தேவர்களின் பெரிய கார்யத்தை ராஜபுத்ரர் செய்யவேண்டியதாயிருக்கிறது; ஆதலால் ராமருக்கு இந்த அஸ்த்ரங்களையெல்லாம் சீக்ரமாகக் கற்பியும்." ௩௰.

தேவர்களெல்லோர்களும் இவ்வாறு சொல்லி விச்வாமித்ரரைக் கொண்டாடிக் களித்து, வந்தபடித் திரும்பிப்போனார்கள்; பிறகு (ஸாயம்) ஸந்த்யாகாலம் உண்டாயிற்று. ௩௧.

பிறகு, தாடகையை வதஞ்செய்ததனால் களிக்கும் (விச்வாமித்ர) மஹாமுநியானவர் ப்ரீதியடைந்து, ராமனை உச்சிமோந்து, "அழகுடையவனே! ராம! இன்றிரவு இங்கு இருப்போம்: நாளையதினங்காலையில் எனது அந்த ஆச்ரமத்திற்குப் போவோம்" என்று ஸந்தோஷத்துடன் சொன்னார். ௩௨.

தாசரதியானவர் விச்வாமித்ரர் மொழிகேட்டு, அந்தத் தாடகையின் வனத்தில் ராத்ரிமுழுதும் ஸுகமாக வாஸஞ்செய்தார். ௩௩.

[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]

[illegible]
[illegible] க.
[illegible]
[illegible] உ.
[illegible]
[illegible]
[illegible] ங.
[illegible]
[illegible]
[illegible] ச.
[illegible]
[illegible]
[illegible] ரு.
[illegible]
[illegible] சா.
[illegible]
[illegible] எ.
[illegible]
[illegible] அ.

[illegible]

அவ்வாச்ரமும் அன்றையதினமே உபத்ரவங்களெல்லாமொழிந்து, குபேரனுடைய உத்யானமாம் சைத்ரரதம்போல் அழகாய் விளங்கிற்று. ௨௫.

அந்த ராமராகவர் யக்ஷப்பெண்ணான அத்தாடகையை வதஞ்செய்து, தேவர்களின்கூட்டங்களினாலும் ஸித்தர்களின் கூட்டங்களினாலும் புகழப் பட்டவராய், அவ்வனத்தில் (விச்வாமித்ர) முனிவரோடுகூட (ஸுகமாக) வாஸஞ்செய்தார்; ப்ராதஃகாலமானவுடனே விச்வாமித்ரர் அவரை யெழுப்பினர். ௨௬.

இருபத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.

இருபத்தேழாவது ஸர்க்கம்·

பிறகு, விச்வாமித்ர மஹாமுனிவர் அன்றிரவுமுழுதும் ஸுகமாக இருந்து விட்டு, (மறுநாள்,) சிரித்துக்கொண்டு ராகவரை நோக்கி இவ்வின் மொழியை யுரைத்தார்:— க.

"பெரும்புகழ்பெற்றவனே! ராஜபுத்ர! யான் மிக்கஸந்தோஷமடைந்தேன்; நல்ல ப்ரீதியோடுகூடி உனக்கு எல்லா அஸ்த்ரங்களையும் கொடுக்கிறேன்; உ.

யுத்தத்தில் தேவர்களின் கூட்டங்களையும் அஸுரர்களின் கூட்டங்களையும் கந்தர்வர்களையும் உரகர்களையும் உனது வசமாக்கி உனக்கு ஜயத்தைக் கொடுக்கும்படியான திவ்யாஸ்த்ரங்களையெல்லாம் உனக்குக் கொடுக்கிறேன்; உனக்கு மங்களமுண்டாகவேண்டும்; ௩.

ராகவ! வீர! சிறந்ததாயுள்ள திவ்ய தண்டசக்ரம், தர்மசக்ரம், காலசக்ரம், மிகவும் உக்ரமான விஷ்ணுசக்ரம், இந்த்ராஸ்த்ரம், என்னுமிவைகளை யான் உனக்குக் கொடுக்கிறேன்; ௪.

புருஷோத்தம! ராகவ! மஹாபாஹோ! வஜ்ராஸ்த்ரம், சூலங்களிற் சிறந்ததான சைவசூலம், ப்ரஹ்மசிரஸ் என்னும் அஸ்த்ரம், ஐஷீகமென்னும் அஸ்த்ரம், சிறந்த ப்ரஹ்மாஸ்த்ரம் ஆகிய இவைகளை உனக்குக் கொடுக்கிறேன். ௫.

காகுத்ஸ்த! புருஷோத்தம! ராஜபுத்ர! மிக்க காந்தியுள்ள "மோதகி, சிகரி" என்னும் இரண்டு கதைகளையுங் கொடுக்கிறேன்; ௬.

ராம! தர்மபாசம், காலபாசம், எல்லாவற்றிலும் மேலான வருணபாசம், வருணாஸ்த்ரம் என்பவைகளையும் யான் தருகிறேன்; ௭.

[illegible]

மருகந்த ! ஸம்ஹாசம், அர்த்தாசம், பைநாகாஸ்த்ரம், நாராயணாஸ்த்ரம், என்பவைகளையுந் தருகிறேன்; ௯.

பாபமற்றவனே ! ப்ரியமான ஆக்னேயம், சிகரம், ப்ரதமிதிர்யுள்ளதாக்குவதான வாயவ்யம் என்னும் அஸ்த்ரங்களையுந் தருகிறேன்; க0.

காகுத்ஸ்த ! ராகவ ! "ஹயசிரஸ், க்ரௌஞ்சம்" என்னும் அஸ்த்ரங்களையும், (விஷ்ணுசக்தி, சிவசக்தி என்னும்) இரண்டு சக்திகளையும் உனக்குக் கொடுக்கிறேன்; கக.

அஸுரர்கள் தரிக்கும் கங்காலம், கோரமுஸலம், காபாலம், கங்கணம் என்பவை முதலிய அஸ்த்ரங்களெல்லாவற்றையுந் தருகிறேன் ; கஉ.

பருத்தகைகளையுடையவனே ! ராஜபுத்ர ! வித்யாதரர்களைத் தேவதையாகவுடையதாய், அஸ்த்ரங்களிற் சிறந்ததாயுள்ள நந்தனமென்றும் நல்ல வாளையுங் கொடுக்கிறேன் ; கங.

ராகவ ! ப்ரியமான காந்தர்வம், மாநவம், ப்ரஸ்வாபநம், ப்ரசமநம், ஸௌரம் என்னும் அஸ்த்ரங்களையுங் கொடுக்கிறேன்; கச.

பெரும்புகழ் பெற்றவனே ? புருஷோத்தம ! ராஜபுத்ர ! தர்ப்பணம், சோஷணம், ஸந்தாபநம், விலாபநம், மதநம், மிக்க வலியதான கந்தர்ப்பதயிதம், பைசாசம், மோஹநம் என்னும் அஸ்த்ரங்களையும் (கொடுக்கிறேன்;) பெற்றுக்கொள்; கரு.

ஆண்சிங்கமே ! மஹாபலமுடையவனே ! மஹாராஜபுத்ர ! தாமஸம், ஸௌமநம், ஸம்வர்த்தம், துர்தர்ஷ மௌஸலம் என்பவைகளையும் பெற்றுக்கொள்; கசா.

மஹாபாஹுவே ! ஸத்யம், சிறந்த மாயாதரம், சத்ருக்களின் பலத்தை இழுத்துவரும் பயங்கரமான தேஜப்ரபம் என்னும் அஸ்த்ரங்களையும் பெற்றுக்கொள்; கஎ.

சிசிரமென்னும் ஸௌம்யாஸ்த்ரம், ஸுதாமநம் என்னும் த்வஷ்டாவின் அஸ்த்ரம், பயங்கரமாயுள்ள சிதேஷுவென்னும் மாநவாஸ்த்ரம் ஆகிய இவைகளையும் பெற்றுக்கொள் ; கஅ.

ராம! மஹாபாஹோ! ராஜபுத்ர ! நினைத்தபடி ரூபங்கொள்ள வல்லவைகளாய், மஹாபலமுடையவைகளாய், பரமகம்பீரங்களாயுள்ள ப்ருசாச்வபுத்ரர்களான இந்த அஸ்த்ரங்களை சீக்ரமாகப் பெற்றுக்கொள்." ககூ.

(விச்வாமித்ர) மஹாமுனிவரானவர் சுத்தராய்க் கிழக்குமுகமாக நின்றுகொண்டு, அப்பொழுது, சிறந்த மந்த்ரங்களையெல்லாம் நல்ல ப்ரீதியோடு ராமருக்கு உபதேசித்தார். உ0.

ஸர்வஸ்த்ராணாம் யேஷாம் தேவைரபி ஸுதுர்லபம்।
காமரூபாணி ததா ஸர்வாணி ராகவாய ந்யவேதயத்। ௨௨.
ஜபதஸ்து முநேஸ்தஸ்ய விஶ்வாமித்ரஸ்ய தீமத:।
உபதஸ்து: மஹார்ஹாணி ஸர்வாண்யஸ்த்ராணி ராகவம்। ௨௩.
ஊசுஶ்ச முதிதா ராமம் ஸர்வே ப்ராஞ்ஜலயஸ்ததா।
இமே ச பரமோதாரா: கிங்கராஸ்தவ ராகவ॥ ௨௪.
ப்ரதிக்ருஹ்ய ச காகுத்ஸ்த: ஸமாலப்ய ச பாணிநா।
மாநஸா மே பவிஷ்யத்வமிதி தாந்யப்யசோதயத்। ௨௫.
தத: ப்ரீதமநா ராமோ விஶ்வாமித்ரம் மஹாமுநிம்।
அபிவாத்ய மஹாதேஜா கமநாயோபசக்ரமே। ௨௬.

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே ஸப்தவிம்ஶ: ஸர்க:.

அத அஷ்டாவிம்ஶ: ஸர்க:.

ப்ரதிக்ருஹ்ய ததோ அஸ்த்ராணி *ப்ரஹ்ருஷ்டவதந: ஶுசி:।
கச்சந்நேவ †ச காகுத்ஸ்தோ விஶ்வாமித்ரமதாப்ரவீத்॥
க்ருஹீதாஸ்த்ரோஸ்மி பகவந் துராதர்ஷ: ‡ஸுராஸுரை:।
அஸ்த்ராணாம் த்வஹமிச்சாமி ஸம்ஹாரம் முநிபுங்கவ॥ ௨.
ஏவம் ப்ருவதி காகுத்ஸ்தே விஶ்வாமித்ரோ மஹாமுநி:।
ஸம்ஹாரம் வ்யாஜஹாராத த்ருதிமாந் ஸுவ்ரதஶ்ஶுசி:।
ஸத்யவந்தம் ஸத்யகீர்திம் த்ருஷ்டம் ரபஸமேவ ச।
ப்ரதிஹாரதரம் நாம பராங்முகமவாங்முகம்।
லக்ஷ்யாலக்ஷ்ய-விஷமௌ த்ருடநாப-ஸுநாபகௌ।
தஶாக்ஷ-ஶதவக்த்ரௌ ச தஶஶீர்ஷ-ஶதோதரௌ।
பத்மநாப-மஹாநாபௌ துந்துநாப-ஸுநாபகௌ।
ஜ்யோதிஷம் க்ருஶநம் சைவ நைராஶ்ய-விமலாவுபௌ।

பா.—*"ப்ரஹ்ருஷ்டாஸ்ய: பாஷதே வாக்யம்."
† "ஸ காகுத்ஸ்த:." ‡ "ஸுராஸுரைரபி."

ப்ராஹ்மணரான விச்வாமித்ரர், தேவர்களுக்கும் கிடையாத அஸ்த்ரங்களையெல்லாம் அப்பொழுது ராகவருக்குக்கற்பித்தார். உஉ.

புத்திமானுன அவ்விச்வாமித்ரமுனிவர் அவைகளையெல்லாம் ராமருக்குக் கொடுத்து மந்த்ரங்களை ஜபிக்கும்போது அச்சிறந்த அஸ்த்ரங்கள் யாவும் ரூபந்தரித்து ராகவனர் அருகில் வந்து நின்றன. உங.

(ப்ருசாச்வபுத்த்ரர்களான) அந்த *அஸ்த்ரங்கள் யாவும் களித்து கைகளைக் கூப்பிக்கொண்டு ராமனைநோக்கி, "ராகவ! இதோ யாங்கள், நீர் கேட்டவை யெல்லாங்கொடுத்து உமது சொற்படி நடக்க, ப்ருத்யர்களாய்க் காத்துக் கொண்டிருக்கிறேம்" என்று சொல்லின. உச.

காகுத்ஸ்தரும், அப்படியே ஆகட்டுமென்று அவைகளைக் கையினல் தடைத்துக்கொடுத்து, "யான் மனதில் நினைக்கும்போது நீங்கள் வந்து சேரவேண்டும்" என்று அவைகளுக்குக் கட்டளையிட்டார். உரு.

பிறகு ராமரானவர் மஹாதேஜஸ்ஸைப்பெற்று, மனதில் த்ருப்தியடைந்து, விச்வாமித்ரமஹாமுனிவரை ஸேவித்து, புறப்படத்தொடங்கினர். உசா.

இருபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

இருபத்தெட்டாவது ஸர்க்கம்.

பின்பு, ககுத்ஸ்தவம்சத்துப் பிள்ளையாகிய ஸ்ரீராமர், சுத்தராய் அவ்விச்வா மித்ரரிடமிருந்து அஸ்த்ரங்களைப்பெற்று மிக்க ஸந்தோஷமடைந்து, விச்வா மித்ரரை நோக்கி, "ஸ்வாமி! மஹாமுனிவரே! (தேவரீரிடமிருந்து) யான் அஸ்த்ரங்களைப்பெற்று, தேவர்களாலும் வெல்ல முடியாதவனுயினேன்; (இப் பொழுது தேவரீர் கற்பித்துக்கொடுத்த) அஸ்த்ரங்களின் உபஸம்ஹார மந்த்ரத்தைப் பெற விருப்பங்கொண்டிருக்கிறேன்" என்று சொன்னர். உ.

பிறகு, நல்லொழுக்கமுள்ள விச்வாமித்ர மஹாமுனிவர், இவ்வாறு காகுத்ஸ்தர் சொன்னதைக்கேட்டு மிக்க ஸந்தோஷமடைந்து, சுத்தராய், "ராம! ராகவ! ஸத்யவத், ஸத்யகீர்த்தி, த்ருஷ்ட, ரபஸ, ப்ரதிஹாரதர, பராங்முக, அவாங்முக, லக்ஷாக்ஷ, விஷம, த்ருடநாப, ஸுநாப, தசாக்ஷ, சதவக்த்ர, தசசீர்ஷ, சதோதர, பத்மநாப, மஹாநாப, துந்துநாப, ஸுநாப, ஜ்யோதிஷ, க்ருசந, நைராச்ய, விமல, யோகந்தர, ஹரித்ர, தைத்யப்ரசமந,

* இங்கு "அஸ்த்ரங்கள் வந்து ராமனைநோக்கிச் சொல்லின" என்பதற்குத் தாத்பர்யம், "அஸ்த்ராபிமாநிகளான தேவதைகள் வந்து பேசினர்கள்" என்பது.

[சுசிர்பாஹும, மஹாபாஹும, நிஷ்குலி, விருசி,] ஸார்சிர்மாலிக், த்ருதிர்மாலிக், வ்ருத்திமத், ருசிர, பித்ர்ய, ஸௌமநஸ, விதூத, மக , கரவீகர, தந, தாந்ய, காமரூப, காமருசி, மோஹமாவரண, ஜ்ரும்பக, ஸர்வநாப, ஸந்தாந, வரணங்க ளென்றும் பெயர்பெற்றவைகளும், நினைத்த ரூபந் தரிக்க ஸமர்த்தங்களும், க்ருசாச்வருடைய புத்ரர்களுமான ஸகலமந்த்ரங்களையும் என்னிடமிருந்து பெற்றுக்கொள்; உனக்கு மங்களமுண்டாகும்; இவைகளைப்பெறுவதற்கு நீ தக்கவன்." என்று சொல்லி உபஸம்ஹார மந்த்ரங்களை உபதேசித்தார். ௧௦.

ககுத்ஸ்த குலத்துப் பிள்ளையாகிய ஸ்ரீராமர் "ஸ்வாமி! அப்படியே பெற்றுக்கொள்ளுகிறேன்" என்று சொல்லி, அதிக ஸந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டார். [மந்த்ரங்களையெல்லாம் அவர்பெற்றுக் கொள்கையில், அம்மந்த்ரங்கள் ராகவர் ஸமீபத்தில் வந்து நின்றன.] ௧௧.

அவைகள்யாவும் பளபளவென்று ஜ்வலிக்கும் த்ருடதிவ்யசரீரமுடையவை களாய்க் களிப்பை விளைப்பவைகளாய்; சில, அனலை நிகர்த்தவைகளாய்; சில புகையைநிகர்த்தவைகளாய்; சில, சந்த்ரஸூர்யர்களை நிகர்த்தவைகளாய்க் கைக ளைக் கூப்பிக்கொண்டு ராமனை நோக்கி, "புருஷோத்தம! இதோ யாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம்; யாங்கள் உமக்கு என்ன செய்யவேண்டும்? தயை செய்து அதைக் கட்டளையிடவேண்டும்" என்று மதுரமாய்ச் சொல்லின. ௧௨.

"ஸமயத்தில், யான் மனதில் நினைத்தமாத்ரத்தில் நீங்கள் வந்து எனக்கு ஸாஹாய்யஞ் செய்யவேண்டும்; இப்பொழுது நீங்கள் இஷ்டப்படி போய்வர லாம்" என்று அவைகளை நோக்கி ரகுநந்தனர் சொன்னார். ௧௩.

பிறகு, அவைகள், "அப்படியே ஆகட்டும்" என்று ராமனை அழைத்துச் சொல்லி, அவரை ப்ரதக்ஷிணஞ் செய்து, வந்தபடிப்போய்விட்டன. ௧௪.

அந்த ராகவர் அம்மந்த்ரங்களையெல்லாம் நன்றாய்க்கற்றறிந்து, வழியில் போய்க்கொண்டிருக்கும்போது, விச்வாமித்ர மஹாமுனிவனை நோக்கி, வணக்க மாய் இவ்வின்சொல்லைச் சொன்னார்:— ௧௫.

"இதோ பர்வதத்தின் ஸமீபத்தில் எங்கே பார்த்தாலும் மேகங்களை நிகர்த்து மரங்கள்கறுத்து, அழகாய்க்கூவும் நாநாவித பக்ஷிகளும் ம்ருகங்களும் நிறைந்து, வெகு அழகாய்க்காணப்படுகிறதே! இதென்ன? இதைக்கேட்க எனக்குக் குதூஹல மதிகமாயிருக்கிறது! ௧௬.

[illegible] ௧௮.
[illegible]
[illegible] ௧௯.
[illegible]
[illegible] ௨௦.
[illegible]
[illegible]
[illegible] ௨௨.

[illegible] அஷ்டாவிம்ஶ: ஸர்க:.

அத ஏகோநத்ரிம்ஶ: ஸர்க:.

[illegible]
[illegible] ௧.
[illegible]
[illegible]
[illegible] ௨.
[illegible]
[illegible] ௩.
[illegible]
[illegible]
[illegible] ௫.
[illegible]
[illegible] ௬.

[illegible]

ஸ்வாமி! முநிபுங்கவரே! பார்க்கும்போதே பயத்தை விளைக்கும் பெருங்காட்டைத்தாண்டி வந்துவிட்டோம்; ௧௮.

இவ்விடம் இவ்வாறு ஸுகமாயிருப்பதால் இது ஓர் ஆச்ரமமாகவே இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்; இது யாருடைய ஆச்ரமம்? எல்லாவற்றை யும் எனக்குச்சொல்லவேண்டும்? ௧௯.

மஹாமுநிவரே! கொடிய செய்கைகொண்டு அந்தணர்களை வருத்துந் துராத்மாக்களான அந்த ராக்ஷஸப்பாவிகள் உமது யாகத்தை விக்நஞ் செய்ய வந்த இடம் எது? ௨௰.

ஸ்வாமி! உமது அந்த யஜ்ஞம் நடக்கும் இடம் எது? பேரறிவுபெற்ற வரே! உமது அந்த யாக கார்யத்தை யான் ரக்ஷிக்கவேண்டிய இடம் எது? ராக்ஷஸர்களை யான் வதஞ்செய்யவேண்டிய இடம் எது? ப்ரபுவே! முநிச்ரேஷ் டரே! இதை யெல்லாம் யான் கேட்க விரும்புகிறேன்." ௨௨.

இருபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

இருபத்தொன்பதாவது ஸர்க்கம்.

மஹாப்ரபாவமுடைய அந்த ராமர் அவ்வநத்தைப்பற்றிய வரலாற்றைச் சொல்லும்படி கேட்கையில், மஹாப்ரபாவமுடைய விச்வாமித்ரர் அதைச் சொல்லத் தொடங்கினர்:— ௧.

"மஹாபலமுடையவனே! ராம! தேவர்களிற் சிறந்தவராய்ப் ப்ரபுவாயுள்ள விஷ்ணுவானவர், தவஞ்செய்பவர்களுக்கு யோகங் கைகூடும்பொருட்டு அநேக வர்ஷங்களாய் அநேக யுகங்களாய்ப் பெருந்தவம்புரிந்து வாஸஞ்செய்துகொண் டிருந்தார்; ௨.

ராம! இது, மஹாத்மாவான வாமநருடைய ஆச்ரமம், பெருந்தவமுடைய காச்யபர் இங்கு (தவத்தின்) ஸித்தியைப் பெற்றதனால், இது "ஸித்தாச்ரமம்" என்று ப்ரஸித்தமாய்ப் பெயர் பெற்றது; ௩.

விஷ்ணு இவ்வாறு தவஞ்செய்துகொண்டிருப்பதற்குள்ளாகவே, விரோசந னுடைய பிள்ளையான பலியென்னும் ராஜன், தேவர்களின் கூட்டங்களை யெல்லாம் இந்த்ரனோடும் மருத்துக்களோடுங்கூட ஜயித்து மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்று அந்த ராஜ்யத்தைத் தான்ஆண்டுவந்தான்; ௪.

பலிசக்ரவர்த்தி யாகஞ்செய்யும்போது தேவர்களும் அக்நியைமுன்னிட்டுக் கொண்டு இவ்வாச்ரமத்திற்குவந்து, விஷ்ணுவைநோக்கிச் சொல்லினர்:— ௫.

[illegible]
[illegible] ௭.
[illegible]
[illegible] ௮.
[illegible]
[illegible] ௯.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] [illegible]
[illegible]
[illegible] [illegible]
[illegible]
[illegible] [illegible]
[illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible]
[illegible] [illegible]
[illegible]
[illegible]
[illegible] [illegible]
[illegible]
[illegible] [illegible]

[illegible]

"ஓ விஷ்ணுவே! விரோசநனுடைய பிள்ளையான பலிசக்ரவர்த்தி, ஒரு பெரிய யாகஞ்செய்கிறான்; அந்த யாகம் முடிவதற்குள்ளாகவே தேவர் காரியத்தை முடித்துக்கொள்ளவேண்டும்; ௮.

இப்பொழுது அவ்வரசன், தன்னிடம் வந்து யாசிக்கிறவர்களுக்கெல்லாம், அவரவர் கேட்டதை கேட்டபடி தானஞ்கொடுக்கிறான்; ௯.

ஓ விஷ்ணுவே! ஆதலால் தேவரீர், வானவர்களுக்கு நன்மையுண்டாகும் பொருட்டு மாயையினால் வாமனரூபங்கொண்டு, மேலான நன்மையைச் செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றோம்." ௰.

ராம! வல்லவனே! இதற்குள், அக்நியையொத்த ஒளிபெற்றவரும், தமது தேஜஸ்ஸால் ஜ்வலிக்கின்றவரும், முக்காலங்களையுமுணர்ந்தவரும், அதிதியின் பர்த்தாவுமான அந்தக் காச்யபர், தமது தேவியோடுகூடி ஆயிரந்தேவவர்ஷம் (விஷ்ணுஸம்பந்தமான) வ்ரதத்தைச்செய்து முடித்து, தமக்கு வரங்கொடுக்க வந்த விஷ்ணுவை ஸ்துதிசெய்தார்:— ௧௧.

"தவத்தால் ஆராதிக்கக்கூடியவராய், பரஞ்சோதியாய், தவத்தையே சரீரமாகவுடையவராய், தவத்தையே குணமாகவுடையவராயுள்ள புருஷோத்தமர் தேவரீரே என்று, நான் நன்றாய்த் தவஞ்செய்ததனால் அறிகிறேன்; ௧௨.

ப்ரபுவே! தேவரீருடைய சரீரத்தில் இந்த ஜகத்தையெல்லாம் காண்கிறேன்; ஆதியில்லாதவரும் அளவிடமுடியாதவருமாய் இருக்கிறவர் தேவரீரே; ஆதலால் தேவரீரையே யான் சரணமடைந்தேன்." ௧௩.

ஸ்ரீஹரியானவர் ப்ரீதியடைந்து, பாபமற்ற அக்காச்யபரை நோக்கி, "உமக்கு க்ஷேமமுண்டாகவேண்டும்; என்னிடமிருந்து வரம்பெறுவதற்கு நீர் தக்கவராயிருக்கிறீர்; உமக்கு என்ன வரம் வேண்டும் கேளும்" என்று சொன்னார்; ௧௪.

மரீசிபுத்ரரான காச்யபர், அம்மொழிகேட்டு அவ்விஷ்ணுவைநோக்கிச் சொன்னார்:— ௧௫.

"ஸத்ய ஸங்கல்பமுடையவரே! வரங்கொடுக்கின்றவரே! தேவர்களினுடையவும், அதிதியினுடையவும், என்னுடையவும் ப்ரார்த்தனையின்படி நல்ல ப்ரீதியுடன் தேவரீர் வரங் கொடுக்கவேண்டும்; ௧௬.

பகவானே! தோஷமற்றவரே! அஸுரர்களைக்கொல்லுகின்றவரே! அதிதிக்கும் எனக்கும் தேவரீர், பிள்ளையாகவேண்டும்; இந்த்ரனுக்குத்தம்பியாக வேண்டும்; சோகத்தால் துன்பப்படும் தேவர்களுக்குத் தேவரீர், ஸாஹாய்யஞ் செய்யவேண்டும்; ௧௭.

தேவர்களுக்கெல்லாம் ஈசராயிருக்கின்றவரே! பகவானே! தேவரீருடைய அனுக்ரஹத்தால் இக்காரியம் ஸித்தித்தால் இவ்விடமும் ஸித்தாச்ரமமென்று ப்ரஸித்தமாய்ப்பெயர்பெறும்; ஆதலால் தேவரீர், இக்கார்யத்தைச்செய்யத் தொடங்கவேண்டும்." ௧௮.

[illegible]
[illegible] உக.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] உஉ.
[illegible]
[illegible] உ௩.
[illegible]
[illegible] உ௪.
[illegible]
[illegible]
[illegible] உ௫.
[illegible]
[illegible] உ௬.
[illegible]
[illegible] உ௭.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] உ௯.
[illegible]
[illegible] ௩௰.

பா.— [illegible]

பிறகு, பராக்ரமமுடையவராகிய ஸ்ரீ விஷ்ணுவானவர், வாமநரூபந்தரித்து அதிதியினிடத்தில் அவதரித்து, பலிசக்ரவர்த்தியினிடம் போனார்; ௨௰.

ஸர்வசரீரியாய்ப் பராக்ரமசாலியாயுள்ள அம்மஹாவிஷ்ணுவானவர், எல்லாவுலகங்களுக்கும் நன்மையுண்டாகக்கருதி, மாயத்தைவிட்டு, மூவடி பூமியைப் பெற்றுக்கொண்டு, எல்லாவுலகங்களையும் வ்யாபித்து, தமது தேஜஸ்ஸால் பலிசக்ரவர்த்தியை அடக்கி, மூவுலகங்களையும் இந்த்ரனுக்குக் கொடுத்து, முன்போலவே இந்த்ரனுடைய வசத்திலிருக்கும்படி செய்தார்; ௨௧.

வருத்தத்தைப்போக்கும் இவ்வாச்ரமத்தில், முன்பு அவ்வாமநர் வாஸஞ்செய்துகொண்டிருந்தார்; யானும், அவ்வாமநரிடத்து பக்திகொண்டு இவ்வாச்ரமத்திற்றான் இருக்கின்றேன்; ௨௨.

புருஷோத்தம! யாகத்திற்கு விக்நஞ்செய்யும் ராக்ஷஸர்கள் இவ்வாச்ரமத்திற்குத்தான் வருகிறார்கள்; கொடியசெய்கையுள்ள அந்த ராக்ஷஸர்களை இவ்விடத்தில்தான் கொல்லவேண்டும்; ௨௩.

அப்ப! ராம! இப்பொழுது, எல்லா ஆச்ரமங்களிலும் சிறந்ததாகிய அந்த ஸித்தாச்ரமத்திற்குத்தான் நாம் போகிறோம்; எனது இந்த ஆச்ரமம் எனக்கு எப்படியோ உனக்கும் அப்படியே.” ௨௪.

[இவ்வாறு சொல்லி, மிக்க ஸந்தோஷத்துடன் ராமனை லக்ஷ்மணனோடு கூட அழைத்துக்கொண்டு] (விச்வாமித்ர) மஹாமுனிவர் தமது ஆச்ரமத்தில் புகும்போது, பனிநீங்கிய சந்த்ரன் புநர்வஸுநக்ஷத்ரங்களோடு கூடி ஒளி பெறுவதுபோல் மிக்கவொளிபெற்றார். ௨௫.

ஸித்தாச்ரமத்தில் வஸிக்கும் எல்லாமுனிவர்களும் அவ்விச்வாமித்ரமுனிவரைக்கண்டு, கூட்டங்கூட்டமாய்க் கூடி சீக்ரமாகவந்து பூஜைசெய்தார்கள். ௨௬.

பேரறிவுபெற்றவரான விச்வாமித்ரருக்குத்தக்கபடி பூஜை செய்தார்கள்; அவ்வாறே ராஜபுத்ரர்களிருவர்களுக்கும் அதிதிபூஜைசெய்தார்கள். ௨௭.

பிறகு, ராஜபுத்ரர்களான ரகுநந்தநர்களிருவர்களும் முஹூர்த்தகாலம் இளைப்பாறி, பிறகு, சத்ருக்களை நாசஞ்செய்யக்கருதி, அஞ்சலி ஹஸ்தர்களாய் (விச்வாமித்ர) மஹாமுனிவரை நோக்கி, “மஹாமுனிவரே! தேவரீர் இப்பொழுதே யாகஞ்செய்யத் தீக்ஷைகொள்ளவேண்டும்; உமக்கு க்ஷேமமுண்டாகும்; இங்குதொடங்குங்கார்யம் ஸித்திபெறுவதால் இந்த ஸித்தாச்ரமம் ஸித்தாச்ரமமென்று உண்மையாகப்பெயர்பெறும்; உமதுசொல் உண்மையாய் நடக்கும்.”

ஐம்புலன்களையும் வென்றவரான விச்வாமித்ர மஹர்ஷியானவர் இவ்வாறு சொல்லப்பட்டு மிக்க வொளிபெற்று, ஊக்கத்துடன் அப்பொழுதே யாகஞ்செய்யத் தீக்ஷைசெய்துகொண்டார். ௩௰.

[illegible]

[illegible]

[illegible]

அவர்களிருவர்களும் அன்றிரவு முழுவதும் ஸுகமாக வாஸஞ்செய்து, ப்ராதஃகாலமானவுடனே எழுந்திருந்து, ஸ்நானஞ்செய்து, [illegible] அர்க்யம் [illegible] ஜபஞ்செய்து [illegible] முடித்து [illegible] இருக்கும் விச்வாமித்ரரைக் கண்டுவிட்டார்கள். [illegible]

இருபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

முப்பதாவது ஸர்க்கம்.

பிறகு, தேசகாலங்களையுணர்ந்து தேசத்திற்குங் காலத்திற்குந் தக்கபடி பேசவல்லமை பெற்றுப் பகைவர்களையடக்கி விளங்கும் ராஜபுத்ரர்களான அந்த ராமலக்ஷ்மணர்களிருவர்களும் விச்வாமித்ரரை நோக்கி, "ஸ்வாமி! அந்தணரே! மாரீசஸுபாஹுக்களென்னும் ராக்ஷஸர்களிருவர்களையுந் தடுத்து, [illegible] யாகத்தை யாங்கள் எப்பொழுது ரக்ஷிக்கவேண்டும்? அந்தக்காலம் தவறா திருக்கவேண்டும்; யாங்கள் இதைக்கேட்க விரும்புகின்றோம்" என்று சொல் லினர். ௨.

இவ்வாறு சொல்லி, அரக்கர்களுடன் போரிடப்பரபரக்கும் ராஜபுத்ரர்களான காகுத்ஸ்தர்களிருவர்களையுங் கண்டுகளித்து, அம்முனிவர்களெல் லோரும், "ரகுகுலத்துப்பிள்ளைகளே! நீங்களிருவர்களும் இன்றுமுதல் ஆறுநாள்வரையில் (யாகத்தைப்) பாதுகாக்கவேண்டும்; இவ்விச்வாமித்ர முனிவர் தீக்ஷைகொண்டிருக்கிறபடியால் இனிபேசமாட்டார்" என்றுசொல்லிப் புகழ்ந்து கொண்டார்கள். ௪.

பெரும்புகழ்பெற்ற அம்மன்னவர்புதல்வரிருவரும் நித்திரையில்லாமல், பகலுமிரவுமாய் ஆறுநாள்வரையில், (விச்வாமித்ரரது) யாகம்நடக்கும் ஆச்ரமத் தைப் பாதுகாத்துவந்தனர். ௫.

வல்லமைபெற்றுப் பகைவர்களையடக்கும் அந்த ராமலக்ஷ்மணர்களிரு வர்களும் [illegible] விற்களைத்தரித்து, விச்வாமித்ர மஹாமுனியருகில் நின்றுகொண்டு, அவரது யாகத்தைப் பாதுகாத்து வந்தார்கள். ௬.

இவ்வாறு அந்த ராமலக்ஷ்மணர்கள் ரக்ஷிக்கும் அவ்விச்வாமித்ரரது யாகந்தொடங்கி ஐந்துநாள்சென்று, ஆறாவதுநாள் வந்தவுடனே ஸ்ரீராமர் லக்ஷ்மணனைநோக்கி, "(லக்ஷ்மணா!) [illegible] நன்றாய் நான்கு பக்கங்களிலும் பார்த்துக்கொண்டு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்" என்றுரைத் தார். ௭.

பிறகு, போர்புரியப்பரபரக்கும் ஸ்ரீராமர் இவ்வாறு சொல்லிக்கொண்டி ருக்கையில், உபாத்யாயரும் புரோஹிதரும் வந்துசேர்ந்து யாகத்தை நடத்த, யாகவேதிகையானது கொழுந்து விட்டெரிந்தது. ௮.

தர்ப்பம், சமஸம், ஸ்ருக்கை, ஸமித், புஷ்பம், முதலிய யாகஸாமக்ரி களெல்லாம் ஆங்காங்கு [illegible] ருத்விக்குகளும்வந்து சேர்ந்தவுடனே விச்வாமித்ரர் யாகஞ்செய்ய, யாகவேதிகையானது கொழுந்து விட்டெ ரிந்தது. ௯.

இவ்விச்வாமித்ரரது யாகமும் மந்த்ரங்களைப்பொருத்தி சாஸ்த்ரத்தின்முறைப்படி தொடங்கப்பட்டது; ஆகாசத்தில் பயங்கரமாய் ஒரு பெரிய கோஷமும் உண்டாயிற்று. ௧௦.

[illegible]

[illegible] ௨௦.

[illegible] ௨௧.

[illegible] ௨௨.

[illegible]

இதற்குள், ஸுபாஹுவும் மாரீசனுமென்னும் ராக்ஷஸர்களிருவரும், மழைக் காலத்து மேகங்கள்போல் ஆகாசத்தையெங்கும் மறைத்துக்கொண்டு, மாயா ரூபமான கார்யத்தைச்செய்துகொண்டு அந்த யாகவேதியின் பக்கமாய் ஓடிவந்தார்கள். ௧௧.

மாரீசன், ஸுபாஹு, இவர்களிருவர்களையுந்தொடர்ந்து வந்தவர்கள். ஆகிய அவர்களெல்லோரும் பயங்கரமான ரூபமுடையவர்களாய் (அந்த யாக வேதிகையில்) ரக்தவெள்ளத்தைச் சொரிந்தார்கள். ௧௨.

பிறகு, அந்த யாகவேதியானது அந்த ரக்தவெள்ளத்தால் நிறைந்து ஜ்வலித்தது. ஸ்ரீராமரும் வேகமாய் எதிர்த்தோடி, அவ்வரக்கர்களை ஆகாசத்திற் கண்டார். ௧௪.

தாமரைக்கண்ணரான ஸ்ரீராமரானவர், அந்த ஸுபாஹு மாரீசர்களிருவர்களும் வேகமாய் ஓடிவருவதைக்கண்டு, லக்ஷ்மணனை நோக்கி, "லக்ஷ்மணா! இதோ பார், மாம்ஸங்களைத் தின்றுகொண்டு கொடியசெய்கைகளைச்செய்யும் இவ்வரக்கர்களை, காற்றானது மேகங்களைப் பறக்கடிப்பதுபோல், இருக்குமிடந் தெரியாமல் நமது மாநவாஸ்த்ரம் பறக்கடிக்கப்போகிறது" என்றுஞ்சொல்லிச் சொன்னார். ௧௫.

ராகவனார் மிக்க கோபங்கொண்டவராய், மிக்கவொளிபெற்று மிக்கசம்பீரமாயுள்ள தமது மாநவாஸ்த்ரத்தையெடுத்துத்தொடுத்து, மாரீசனது மார்பில் விடுத்தார். ௧௬.

அச்சிறந்த மாநவாஸ்த்ரமானது அம்மாரீசனை அடித்து, நூறு யோஜனைதூரத்திற்குக் குறைவின்றி ஸமுத்ரத்தின் ஜலத்திற் கொண்டு தள்ளிவிட்டது. ௧௭.

ஸ்ரீராமர், தமது மாநவாஸ்த்ரம் மாரீசனை அடித்து, சுழலச் செய்து அவனைப் ப்ரஜ்ஞையில்லாமற் செய்து வெகுதூரத்திற் கொண்டுதள்ளி விட்டதைக்கண்டு கொண்டு, லக்ஷ்மணனைநோக்கி, "லக்ஷ்மணா! கருணையற்றுக் கொடியசெய்கை செய்யுந் தன்மைபெற்று, பாவகார்யங்களிலேயே இழிந்து, யாகங்கட்கு இடையூறு செய்து, ரக்தத்தைக்குடித்துக்கொண்டு திரியும் இவ்வரக்கர்களையும் கொன்று விடுகிறேன் பார்" என்று சொன்னார். ௧௯.

பிறகு, ஸ்ரீராமர் தமது திவ்யமான ஆக்நேயாஸ்த்ரத்தை எடுத்து அத்புதமாய்த்தொடுத்து, ஸுபாஹுவின் மார்பில்புகட்டார்; அவன் அவ்வாறு அடிக்கப்பட்டு பூமியில்விழுந்து மாண்டான். ௨௦.

பெரும்புகழ்பெற்று மிக்கபெருந்தன்மையுற்ற ஸ்ரீராகவனார், முனிவர்களுக்கு மகிழ்ச்சியைவிளைத்து, தமது வாயவ்யாஸ்த்ரத்தையெடுத்துத்தொடுத்து, மற்றவரக்கர்களெல்லோரையும் அடித்துத்துரத்திவிட்டார். ௨௧.

யாகத்திற்கு விக்நஞ்செய்ய வந்த அரக்கர்களாகிய அவர்களையும் அந்த ரகுநந்தனர் ஹதஞ்செய்து, முன்பு அஸுரவிஜயகாலத்தில் இந்த்ரன் பூஜைபெற்றது போல், அவ்விச்வாமித்ரரது ஆச்ரமத்தில் ருஷிகளிடத்திற் பூஜைபெற்றார். ௨௨.

[illegible] ௨௰.

[illegible]

[illegible]

[illegible] ௧.

[illegible] ௨.

[illegible] ௩.

[illegible] ௪.

[illegible] ௫.

[illegible] ௬.

[illegible] ௭.

[illegible] ௮.

[illegible] ௯.

[illegible] ௰.

[illegible]

பிறகு தமது யாகம் யாதோர் இடையூறும் இல்லாமல் வெகு அழகாய்ப் பூர்த்தியடைகையில், திசைகளெங்கும் ஒருபத்ரவமுமில்லாது விளங்குவதை விச்வாமித்ரமஹாமுனிவர் கண்டு, ககுத்ஸ்தகுலத்துப்பிள்ளையாகிய ஸ்ரீராமனை நோக்கி, "பேர்புகழ்பெற்றவனே! பெருந்தோளுற்றவனே! (மஹாடலமுடையவனே!) ராம! யான் க்ருதார்த்தனுமானேன்; (பயன் கைகூடப் பெற்றேன்) பெரியோர்களது சொல் உன்னால் நிறைவேற்றப்பட்டது; (பயன் கைகூடினதனால்) இந்த ஸித்தாச்ரமமானது ஸித்தாச்ரமமென்று உண்மையாய்ப் பெயர்பெற்றது" என்றும் இம்மொழியை யுரைத்தார். ௨௬.

முப்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

முப்பத்தோராவது ஸர்க்கம்.

பிறகு, வல்லவர்களாயுள்ள ராமலக்ஷ்மணரிருவரும் களித்து, (விச்வாமித்ரரது யாக)கார்யத்தைச் செய்து முடித்து, பெருமகிழ்ச்சிகொண்ட நெஞ்சத்துடன் (கூடினவர்களாய்) அன்றிரவுமுழுதும் அங்கு (விச்வாமித்ரரது யாகசாலையில்) வாஸஞ்செய்தனர். ௧.

பொழுதுவிடிந்தவுடனே, காலையிற் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து முடித்து, விச்வாமித்ரரையும், மற்றுமுள்ள ருஷிகளையும் இருவருமொன்றுகூடித் தெண்டனிட்டனர். ௨.

இனிமையாய்ப் பேசுந்தன்மையுள்ள ராமலக்ஷ்மணரிருவரும், கொழுந்துவிட்டெரியும் அக்நிபோல் விளங்கும் (விச்வாமித்ர) மஹாமுனிவரைத் தெண்டனிட்டு, மதுரமாயும் கம்பீரமாயுமுள்ள (இவ்)வாக்யத்தைச் சொற்றனர்:— ௩.

"மஹாமுனிவரே இதோ யாங்கள் (தேவரீருக்கு) கைங்கர்யஞ் செய்வதற்காக அருகில் காத்துக்கொண்டிருக்கின்றோம்; (தேவரீரது) இஷ்டப்படி கட்டளையிடவேண்டும்; (தேவரீரது) எந்தக் கட்டளையை யாங்கள் செய்யவேண்டும்?" ௪.

பிறகு அந்த ராமலக்ஷ்மணர்களால் மஹர்ஷிகளெல்லோரும் இவ்வாறு சொல்லப்பட்டவர்களாய் விச்வாமித்ரரை முன்னிட்டுக்கொண்டு ராமனை நோக்கி (இந்த) வாக்யத்தைச் சொல்லினர்:— ௫.

"புருஷோத்தம! (ராம!) மிதிலாநகரத்தரசராகிய ஜநகரது யாகமானது மிகவும் தர்மத்துடன் கூடினதாய் நடக்கப்போகிறது; யாங்கள் அதற்குப் போகப்போகிறோம்; ௬.

நரோத்தம! நீயும் எங்களோடுகூட வரவேண்டும்; ஆச்சர்யகரமாயுள்ள அந்த (ஜநகரிடமிருக்கும்) சிறந்த வில்லையும் அந்த யாகசாலையில் நீ பார்க்கவேண்டும்; ௭.

மாநவரேறே! அளவற்ற வலியுற்றதாய், (பகையோர்க்குப்) பயமுறுத்துவதாய், பேரொளி பெற்றதாயுள்ள அந்த வில்லானது முன்பு யாகஸபையில் தேவர்களாற் கொடுக்கப்பட்டது; ௮.

இந்த வில்லை எடுத்து நாணேற்றுவதற்கு வானவரும் வல்லரல்லர்; கந்தர்வரும் வல்லரல்லர்; அஸுரரும் வல்லரல்லர்; ராக்ஷஸரும் வல்லரல்லர்; மனிதர்கள் வருந்தியும் வல்லரல்லர்; ௯.

மிகவலிவுற்று மண்ணுலகாளும் மன்னவர் புதல்வர் அவ்வில்லின் வலிவை அறிய விரும்புகிறார்கள்; (அதை எடுத்து) நாணேற்றவல்லராயிலர்; ௧௦.

[illegible]

காகுத்ஸ்தகுலத்தில் அவதரித்தவனே! புருஷோத்தம! (ராம!) மஹாத்மாவாயுள்ள மிதிலாநகரத்தரசராகிய ஜநகருடைய அவ்வில்லையும், பார்ப்பதற்கு ஆச்சர்யகரமாயுள்ள யாகத்தையும் நீ பார்க்கவேண்டும்; ௧௧.

மநுஜ ச்ரேஷ்டனே! அழகாய் விளங்கும் பிடிப்பிடமுடைய அச்சிறந்த வில்லானது, அம்மிதிலாநகரத்து மன்னவராகிய ஜநகரால் வானவர்களினிடத்தும் கோரப்பட்டு, அவர் செய்த யாகத்திற்குப் பயனைப் பெறப்பட்டது; ௧௨.

ராகவ! அவ்வேந்தரது க்ருஹத்தில் முக்ய தேவஸ்தானமாயிருக்கும் அவ்வில்லானது நாநாவிதமான வாஸனை த்ரவ்யங்களாலும், அகருக்கட்டை முதலான தூபத்ரவ்யங்களாலும் பூஜிக்கப்பட்டுவருகிறது.” ௧௩.

விச்வாமித்ர மஹாமுனிவரானவர் இவ்வாறு சொல்லி அப்பொழுது வநதேவதைகளை அழைத்து “உங்களுக்கு மங்களமுண்டாகவேண்டும்; நான் ஸித்தாச்ரமத்திலிருந்ததனால் பயன்பெற்றேன்; கங்கையின் வடகரையிலிருக்கும் ஹிமவத்பர்வதத்திற்குப் போகப்போகிறேன்” என்று சொல்லிவிட்டு, ருஷிகளின் கூட்டங்களோடும், ராமலக்ஷ்மணரோடும் கூடினவராய்ப் ப்ரயாணஞ் செய்தார். ௧௫.

பிறகு, எல்லாவாச்ரமங்களிலும் சிறந்ததாயுள்ள ஸித்தாச்ரமத்தைப் ப்ரதக்ஷிணஞ்செய்து, வடதிசையை நோக்கிப் புறப்படத் தொடங்கினர். ௧௬.

அவ்விச்வாமித்ர மஹாமுனிவர் உத்தரதிக்கை நோக்கிப் புறப்படும்போது, அநேக வண்டிகளைக்காய் அறிஞர்களின் கூட்டம் அவரைத் தொடர்ந்து சென்றது. ௧௭.

ஸித்தாச்ரமத்திலிருக்கும் ம்ருகங்கள் பக்ஷிகள் என்னுமிவைகளின் கூட்டங்களும், மஹாத்மாவாகிய விச்வாமித்ர முனிவரைத் தொடர்ந்து சென்றன. ௧௮.

பிறகு, (விச்வாமித்ரரானவர்) பறவைக் கூட்டங்களையும், ம்ருகங்களையும் திரும்பச் செய்தார். ௧௯.

அம்மஹாமுனிவர்கள் வெகுதூரஞ் சென்ற பின்பு ஸூர்யாஸ்தமநமாகையில் சோணநதி கரையில் எல்லோரும் ஒன்றுகூடி வாஸஞ் செய்தார்கள். ௨௰.

மிக்க வொளிபெற்ற அம்மஹர்ஷிகளானவர்கள் ஸூர்யாஸ்தமநமாகையில் ஸ்நாநஞ்செய்து ஹோமங்களைச்செய்து முடித்துவிட்டு விச்வாமித்ரரை முன்னிட்டுக்கொண்டு உட்கார்ந்தார்கள். ௨௧.

பின்பு ராமரும் லக்ஷ்மணரோடு கூடி அம்முனிவர்களைத் தெண்டனிட்டு, பேரறிவு பெற்றவராகிய விச்வாமித்ரருக்கு எதிரில் உட்கார்ந்தார். ௨௨.

பிறகு, பரஞ்சோதியாய்ப் பரமபுருஷராயுள்ள ராமரானவர் குதூஹலத்தோடு கூடினவராய் விச்வாமித்ர மஹாமுனிவரை நோக்கி, “ஸ்வாமி! செழித்த (உத்யாந) வனங்களால் அழகாய் விளங்கும் இத்தேசம் யாருடையது? (இதை)

[illegible]
[illegible] ௨௯
[illegible]
[illegible] ௩௰

இதி ஶ்ரீமத்ராமாயணே [illegible] ஸப்தத்ரிம்ஶ: ஸர்க்க:.

அத அஷ்டத்ரிம்ஶ: ஸர்க்க:.

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible]
[illegible] ௨
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௭
[illegible]
[illegible] ௮
[illegible]
[illegible]

* [illegible]

யான் கேட்கவிரும்புகிறேன் ; (இதன்) உண்மையைத் தேவரீர் சொல்ல வேண்டும் ; உமக்கு மங்களமுண்டாகுக" என்று கேட்டார். உ௰.

பெருந்தவம்புரிந்து நன்றாய் வ்ரதங்களைச் செய்யும் விச்வாமித்ரரானவர் ராமர் சொற்கேட்டு அத்தேசத்தின் வரலாற்றையெல்லாம் ருஷிகளின் நடுவில் சொல்லத் தொடங்கினர்:— உ௧.

முப்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

முப்பத்திரண்டாவது ஸர்க்கம்.

"அயனுடைய புதல்வராகிய "குசர்" என்றுமொருவர், பெருந்தவம்புரிந்து, நோன்புகளைத் தவறாதுசெய்து, தர்மங்களையுணர்ந்து, பெரியோர்களைப்பூஜித்துப் பெருமைபெற்றிருந்தார். க.

அம்மஹாத்மாவானவர், நற்குலத்திலுதித்து நற்செய்கையுற்று விளங்கும் (தமது பார்யையாகிய) "வைதர்பி" என்பவளிடத்தில் நற்குணங்களால் நிறைந்து தம்மை நிகர்த்து விளங்கும் "குசாம்பன், குசநாபன், ஆஸூர்த்தரஜஸ், வஸு" என்னும் நான்கு புத்ரர்களைப்பெற்றார். உ.

குசரானவர் க்ஷத்ரிய தர்மத்தைச் செய்யக்கோரினவராய், மிக்க வுத்ஸாஹமுடையவர்களும், அழகோடு கூடியவர்களும், தர்மத்தில் நிலைநின்றவர்களும், ஸத்யத்தையே பேசுகின்றவர்களுமாகிய அந்தப் பிள்ளைகளைப்பார்த்து, "பிள்ளைகாள்! (ப்ரஜைகளைப்) பாதுகாத்தலைச்செய்யுங்கள்; தர்மம் நிரம்பப் பெறுவீர்கள்" என்றுரைத்தார். ௩.

உலகங்களனைத்தும் விரும்பப்பெற்ற வப்பிள்ளைகள் நால்வரும் (குச) ருஷியின் சொற்கேட்டு, பட்டணங்களைக் கட்டினார்கள். ௪.

ராம! மிக்க விக்ரமமுற்ற குசாம்பரென்பவர் "கௌசாம்பி" என்னும் பட்டணத்தை ஏற்படுத்தினர் ; தர்மசிந்தையுடையவராகிய குசநாபரென்பவர் "மஹோதயம்" என்னும் பட்டணத்தை ஏற்படுத்தினர் ; ஆஸூர்த்தரஜஸ் என்னும் மன்னவர் "தர்மாரண்யம்" என்னும் சிறந்த பட்டணத்தை ஏற்படுத்தினர் ; வஸு என்னும் வேந்தர் "கிரிவ்ரஜம்" என்னும் உத்தம பட்டணத்தை ஏற்படுத்தினர். எ.

ராம! இந்தப் பூமியானது மஹாத்மாவான அந்த வஸுவினுடையது ; இச்சிறந்த மலைகளைந்தும் நாற்புறத்தும் அழகாய்ப் ப்ரகாசிக்கின்றன. அ.

ப்ரஸித்தமாய், அழகாய் விளங்கும் சோணநதியானது மகததேசத்தை நோக்கிவருகிறது. ஐந்துமலைகளுக்கும்நடுவில் மாலைபோல் ப்ரகாசிக்கிறது. க.

[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible] ௧௧
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௩
[illegible]
[illegible] ௧௪
[illegible]
[illegible] ௧௫
[illegible]
[illegible] ௧௬
[illegible]
[illegible] ௧௭
[illegible]
[illegible] ௧௮
[illegible]
[illegible] ௧௯
[illegible]
[illegible] ௨௦
[illegible]
[illegible] ௨௧
[illegible]
[illegible] ௨௨
[illegible]
[illegible] ௨௩
[illegible]

* " [illegible] "

ராம! ராம! மலைகளிற் சுழன்றோடும் ஐந்துவித தெற்பயிர்களாலும் அழகாய், கிழக்கிலிருந்து மேற்றிசையை நோக்கிச் செல்லுகின்றதாய், ப்ரஸித்தமாய் விளங்கும் இந்தச் சோணையென்கிற மாகதியென்னும் நதி வஸுவென்னும் மன்னவருடையது. ௧௦.

ரகுநந்தன! ராஜர்ஷியாய், நற்குணமுடையவராயுள்ள குசநாபனென்பவர், "க்ருதாசீ" என்பவளிடத்தில் நூறு பெண்மணிகளைப் பிறப்பித்தார். ௧௧.

மிக்க அழகுடையவர்களாய், யௌவனம் வாய்க்கப்பெற்றவர்களாய் மழைகால மின்னற்போல் விளங்கும் அந்தப் பெண்மணிகளானவர்கள் சிறந்த ஆடை ஆபரணங்களையணிந்து, வாய்ப்பாட்டாலும் வாத்யங்களாலும் உரக்கப் பாடியாடிப் பரமாநந்தம் பெற்றனர். ௧௨.

பிறகு, உலகத்தில் அழகில் சிறந்தவர்களாய், அங்கமெங்கும் அழகாய் விளங்கப்பெற்ற அந்தப் பெண்களானவர்கள் சோலைசென்று, சரத்காலத்து நக்ஷத்ரங்கள்போல் ப்ரகாசித்தனர். ௧௩.

எல்லா குணங்களும் பொருந்தி, ஸௌந்தர்யமும் யௌவனமும் கூடி விளங்கும் அந்தப் பெண்களை, எங்கும் நிறைந்து நிற்கும் வாயுபகவான் கண்டு இம்மொழியைச் சொன்னார்:— ௧௪.

"நான் உங்களெல்லோரிடத்தும் விருப்பங்கொண்டிருக்கிறேன்; நீங்கள் எனக்குப் பத்நிகளாக ஆகவேண்டும்; மானிடர்பக்கல் விருப்பத்தை விட்டு விடுங்கள்; ஆயுள் நிரம்பப்பெறுவீர்கள்; ௧௫.

மானிடர்கட்கு யௌவனம் என்றும் நிலையில்லையன்றோ? (என்னை விரும்பினீர்களாயின்) நிலைநிற்கும் யௌவனப்பருவம்பெற்று தேவப்பெண்களாக ஆகுவீர்கள்." ௧௬.

பிறகு, ஒருவராலும் தடுக்கமுடியாத செய்கையுடையராகிய அந்த வாயுபகவானுடைய அம்மொழியைக்கேட்டுச் சிரித்து, பின்பு சொன்னதாவது:— ௧௭.

"தேவர்களிற் சிறந்தவரே! நீர் எல்லா ப்ராணிகளுள்ளும் ஸஞ்சரிக்கின்றீர்; எல்லோரும் உமது ப்ரபாவத்தை யுணர்ந்தோம்; எங்களை ஏன் அவமானப்படுத்துகிறீர்; ௧௮.

தேவர்களிற் சிறந்தவராகிய வாயுபகவானே! நாங்களெல்லோரும் குசநாபருடைய பெண்கள்; உம்மை உமது அதிகாரத்திலிருந்து நீக்குவிக்க நாங்கள் வல்லவர்கள்; ஆயினும் தவத்தைக் காக்கின்றோம்; (அதாவது உம்மை அவ்வாறு செய்யாதிருக்கின்றோம்.) ௧௯.

புத்திகெட்டவரே! எங்கள் தகப்பனார் உமக்கு ம்ருத்யுவாக வேண்டாம்; ஸத்யவாதியாயுள்ள எங்கள் தகப்பனாரை அவமதியாதேயும்; தர்மமாக நாங்களே விவாஹஞ் செய்துகொள்ளுகின்றோம்; ௨௦.

(இப்போது) எங்களுக்கு நாதன் தகப்பனாரன்றோ? அவரே எங்களுக்கு மேலான தெய்வம்; அவர் எவனுக்கு எங்களைக் கொடுப்பாரோ அவனே எங்களுக்கு பர்த்தாவாவான்." ௨௧.

வல்லமையுள்ள வாயுபகவானானவர் அந்தப் பெண்களின் அம்மொழி கேட்டு மிகச்சினந்து (அவர்களது) சரீரமெங்கும் புகுந்து முறித்து (முடமாக்கி) விட்டார். ௨௨.

[illegible]
[illegible] ௨௪
[illegible]
[illegible] ௨௫
[illegible]
[illegible] ௨௬
[illegible]

[illegible] ஸர்க:.

அத த்ரயஸ்த்ரிம்ஶ: ஸர்க:.

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible] ௨
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible] ௬
[illegible]
[illegible]
[illegible] ௭

---

* [illegible]

அந்தப் பெண்கள் வாயுபகவானால் முடமாக்கப்பட்டு மன்னவரது க்ருஹஞ் சென்றனர்; வெட்கத்தோடு கூடினவர்களும் கண்ணீரோடு கூடினவர்களுமாய் மதிமயங்கி பூமியில் விழுந்தார்கள். ௨௩.

மிக்க அழகுள்ள அவ்வருமைப்பெண்கள் அவ்வாறு முடமாய் வருந்துவதை அந்தக் குசநாபவேந்தர் கண்டு திடுக்கிட்டு இம்மொழி மொழியலுற்றார்:— ௨௪.

"பெண்களே இதென்ன சொல்லுங்கள்? எவன் தர்மந்தவறி நடந்தான்? எல்லோரும் எவனால் (இப்படி) கூனிகளாகச் செய்யப்பட்டீர்கள்? பூமியில் விழுந்து பேசமுடியாமலிருக்கிறீர்களே!" ௨௫.

(குசநாப) வேந்தர், இவ்வாறு பெருமூச்சுவிட்டு (வருந்தி), பின்பு அவர்கள் சொல்லுவதை உற்றுக் கேட்கத் தொடங்கினர். ௨௬.

முப்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

முப்பத்து மூன்றாவது ஸர்க்கம்.

அறிஞராகிய அந்தக் குசநாபருடைய அம்மொழியை நூறு பெண்களும் கேட்டு (அவரைத்) தெண்டனிட்டுரைத்ததாவது:— ௧.

"அரசே! எங்கும் நிரம்பியவராகிய வாயுபகவானானவர் தர்மமொழிந்து தீயவழிகொண்டு (எங்களை) அவமதிக்க நினைத்தார்; ௨.

(வாயுபகவானே!) யாங்கள் தந்தைசொற்படி நடப்பவர்களேயல்லது ஸ்வதந்த்ரர்களாயிருக்கின்றிலோம்; நீர் எங்கள் தந்தையைக்கேளும்; எங்களை உமக்குக் கொடுத்தாராயின் உம்மை விரும்புகிறோம்." ௩.

இவ்வாறு யாங்களுரைக்கையில் அந்த வாயுபகவான் எங்கள் சொல்லேற்றுக்கொள்ளாது தீயவழி தொடர்ந்து சென்று எங்களை மிகவும் குலைத்துவிட்டார். ௪.

மிக்க தர்மிஷ்டரும், மிக்க வல்லவருமாகிய (குசநாப) மன்னவர், அந்தப் பெண்களின் அம்மொழியைக்கேட்டு, நூறு பெண்மணிகளையும் நோக்கி வதிலுரைத்ததாவது:— ௫.

"குழந்தைகளே! பொறுமையுடையோர் செய்யவேண்டிய பெரிய பொறுமையை நீங்கள் கொண்டீர்கள்; எல்லோரும் ஒரே புத்தியுடையவர்களாயிருந்து எனது குலத்தையும் பெருமைப்படுத்தினீர்கள்; ௬.

பெண்களுக்காயினும், புருஷர்களுக்காயினும் பொறுமையன்றோ அலங்காரம், அந்தப் பொறுமை கொள்வதுதான் அரிது; அதிலும் (மிக்க அழகுள்ள) தேவர்கள்விஷயத்தில் (விருப்பங்கொள்ளாது) பொறுத்திருப்பது அரிது பெண்களே அதிலும் உங்களெல்லோர்க்கும் ஒரே ரீதியாய் எப்படிப்பட்ட பொறுமையிருந்ததோ அப்படிப்பட்ட பொறுமையிருப்பது அரிது; ௭.

[illegible]
[illegible] ௯
[illegible]
[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible] ௧௧
[illegible]
[illegible] ௧௨
[illegible]
[illegible] ௧௩
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௫
[illegible]
[illegible] ௧௬
[illegible]
[illegible] ௧௭
[illegible]
[illegible] ௧௮
[illegible]
[illegible] ௧௯

* "[illegible]"

குழந்தைகளே ! பொறுமையிருக்குமாயின் தானஞ்செய்தல், யாகஞ்செய்தல், ஸத்யந்தவறுதிருத்தல் என்றுமிவைகளின் பயன் உண்டாகிறது; கீர்த்தியுண்டாகிறது; (குளம் வெட்டுவித்தல் முதலிய) தர்மஞ் செய்த பயன் உண்டாகிறது; பொறுமையால்தான் உலகம் நிலைநிற்கிறது." அ.

காகுத்ஸத ! வானவர்களுக்கொப்பான வலிவுபெற்றவராய், ஆலோசனை வகையறிந்தவராயுள்ள (குசநாப) ராஜர், பெண்களுக்கு இவ்வாறு சொல்லியனுப்பிவிட்டு, அந்தப்பெண்களை விவாஹஞ் செய்துகொடுப்பதற்குத் தக்க தேசம் காலம் புருஷன் என்றுமிவைகளைத் தேடவேண்டியதைப்பற்றி மந்த்ரிகளோடு கூடி ஆலோசனை செய்யத்தொடங்கினர். கo.

இதற்குள்ளவே "சூலி" என்னும் மஹாமுனிவர், ப்ரஹ்மசாரியாய், நல்ல ஆசாரமுடையவராயிருந்துகொண்டு ப்ரஹ்மத்தை நோக்கித் தவஞ்செய்யத் தொடங்கினர். கக.

"சூலி" என்னும் அந்தருஷி அவ்விடத்தில் தவஞ்செய்ய, அப்பொழுது "ஊர்மிலை" என்பவளின் பெண்ணான "ஸோமதை" என்னும் கந்தர்வப்பெண் அவருக்குப் பணிவிடைசெய்துகொண்டிருந்தனள். கஉ.

தர்மிஷ்டையாயுள்ள அந்த ஸோமதையானவள் மிக்க வணக்கத்தோடு கூடினவளாய் அந்த சூலி மஹரிஷிக்குப் பணிவிடை செய்துவந்தாள். அதனால் அவர் அவளிடத்து களிக்கலுற்றார். கங.

ராகவ ! சிலநாள் சென்றபின்னர் அந்த சூலி மஹாமுனிவரானவர், "(ஸோமதே !) நான் மிக்க ஸந்தோஷமடைந்தேன்; உனக்கு நன்மையுண்டாகுக; உனக்கு நான் என்ன நன்மை செய்யவேண்டும்" என்று அந்த ஸோமதையைப்பார்த்து சொன்னர். கச.

பேசுவதிற் சமர்த்தியாகிய கந்தர்வப்பெண்ணான ஸோமதையானவள் பேசுவதிற் சமர்த்தரான சூலிமஹாமுனிவர் மிக்கமகிழ்ச்சிகொண்டிருப்பதை அறிந்து மிகவும் களித்து இவ்வின்மொழியைச்சொற்றனள்:— கரு.

"ஸ்வாமி, தர்மிஷ்டரே ! நீர் பெருந்தவம்புரிந்து, ப்ரஹ்மாவை நிகர்த்து, பேரொளிபெற்று விளங்குகின்றீர்; ப்ரஹ்மஸம்பந்தமான தவத்தோடுகூடிய பிள்ளை வேண்டுமென்று நான் விரும்புகிறேன்; கசு.

இப்போது நான் பர்த்தாவில்லாதவளாயிருந்துகொண்டிருக்கிறேன்; இதுவரையில் ஒருவனுக்குப் பார்யையாயிருக்கவில்லை; உம்மிடமிருக்கும் தவத்தின் மஹிமையைப்பற்றி உம்மை நான் சரணமடைந்தபடியால் நீர் எனக்குப் புத்ரனை அளிக்கவேண்டும்." கஎ.

ப்ரஹ்மர்ஷியாயுள்ள சூலிமஹர்ஷியானவர் அந்தஸோமதையிடத்து அருள்கொண்டு, மனதில்நினைத்தமாத்ரத்தாலேயே "ப்ரஹ்மதத்தர்" என்னும் ஒரு உத்தமபுத்ரனை அவளுக்குக்கொடுத்தார். கஅ.

ஸோமதையின் புத்ரரான ப்ரஹ்மதத்தரென்னும் அம்மன்னவரும் மிகுந்த செல்வத்தோடுகூடினவராய் வானுலகை வானோரரசனுள்வதுபோல் "காம்பில்யை" என்னும் நகரத்தை யாண்டுவந்தார். ககூ.

[illegible]
[illegible] உ0
[illegible]
[illegible] உக
[illegible]
[illegible] உஉ
[illegible]
[illegible] உங
[illegible]
[illegible] உச
[illegible]
[illegible] உ௫
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]

[illegible]
[illegible] க
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

---

* [illegible]

காகுத்ஸ்த! அப்பொழுது தர்மவிருப்பங்கொண்டவராயுள்ள குசநாபனென்னும் அம்மன்னவரும் அவரது நூறுபெண்களையும் ப்ரஹ்மதத்தருக்கு (விவாஹஞ்செய்து) கொடுக்க வெண்ணங்கொண்டார். உ௦.

மஹாப்ரபாவமுடைய குசநாபராஜர், அந்தப் ப்ரஹ்மதத்தமன்னவரை அழைத்துவந்து நெஞ்சம் மிகக்களித்து தமது நூறுபெண்களையும் கொடுத்தார். உக.

ரகுநந்த! பின்பு விண்ணரசனென விளங்கும் ப்ரஹ்மதத்தவேந்தர் அந்தப்பெண்களை சாஸ்த்ரப்படி கைப்பற்றினர். உஉ.

பின்பு, அந்தப் ப்ரஹ்மதத்தர் கைப்பற்றினமாத்ரத்தில் நூறுபெண்களும் கூனற்று நோயற்று மிக்கவொளியுற்று அழகாய்விளங்கினர். உங.

அந்தக் குசநாபவேந்தரானவர் வாயுவினால்நேர்ந்த வருத்தத்தினின்று விடுபட்ட அந்தப்பெண்களைக்கண்டு பெருமகிழ்ச்சிகொண்டு அடிக்கடி ஆநந்தம் பெறலுற்றார். உச.

வெகு அழகாய் விவாஹம் நடந்தேறப்பெற்ற ப்ரஹ்மதத்தமன்னவனைக் குசநாபவேந்தரானவர் பத்நிகள், உபாத்யாயர்கள், மற்றுமுள்ளகூட்டங்கள் என்னுமிவைகளோடுகூட (காம்பில்யைக்கு) அனுப்பிவிட்டார். உரு

கந்தர்வஸ்த்ரீயாகிய ஸோமதையும், தனதுபிள்ளைக்குத் தக்க கந்யகைகள் கிடைத்து சாஸ்த்ரந்தவறாது விவாஹம் நடந்தேறியதைப்பற்றி மிகவும்ஸந்தோஷமடைந்து அந்தக்கந்யகைகளைக் கையினாற்றடைத்துக்கொடுத்து, குசநாபனையும்புகழ்ந்து அந்தமருமெயர்களைக்கண்டானந்தங்கொண்டனள். உசு.

முப்பத்து மூன்றவது ஸர்க்கம் முற்றிற்று.

முப்பத்து நான்காவது ஸர்க்கம்.

ராகவ! அவ்வாறு ப்ரஹ்மதத்தர் நூறுபெண்களையும் விவாஹஞ்செய்துக் கொண்டுபோனபின்பு, பிள்ளையில்லாமலிருந்த குசநாபமன்னர் பிள்ளையுண்டாகக்கருதி "புத்ரகாமேஷ்டி" என்னும் யாகத்தைச் செய்யத்தொடங்கினார். க.

அவ்வாறு யாகந்தொடங்குகையில், மிக்க கம்பீரமான ஸ்வபாவமுடையராய்ப் ப்ரஹ்மாவின்புத்ரராயுள்ள "குசர்" என்பவர், குசநாபமன்னவரைநோக்கி "பிள்ளாய்! உனக்குத்தக்கவனும் மிக்கதர்மிஷ்டனுமாயுள்ள "காதி" என்னும் பிள்ளை உனக்கு உண்டாகப்போகிறான்; அவனால் நீ உலகத்தில் எந்நாளும் கீர்த்திபெறப்போகின்றாய்" என்றுரைத்தார். உ.

[illegible] ௪
[illegible] ௫
[illegible] ௬
[illegible] ௭
[illegible] ௮
[illegible] ௯
[illegible] ௧௦
[illegible] ௧௧
[illegible] ௧௨
[illegible] ௧௩
[illegible] ௧௪
[illegible] ௧௫
[illegible] ௧௬
[illegible] ௧௭

[illegible]

ராம! குசராஜரென்பவர் குசநாபராஜாவுக்கு இவ்வாறு சொல்லிவிட்டு, திவ்யமாயுள்ள ப்ரம்மலோகத்தை நோக்கி ஆகாசமார்க்கத்தில் சென்று போகலுற்றார். ௪.

பின்னர், சிலகாலஞ் சென்றபிறகு, புத்திமானுயுள்ள குசநாபருக்குக் குசர் சொன்னபடி மிகச்ச்ரேஷ்டராய்க் காதியென்கிற ஒருபுத்திரருண்டானார். ௫.

காகுத்ஸ்த! மிக்க தார்மிகரான அந்தக்காதியென்பவர் என்னுடைய தந்தை. ரகுநந்தன! நான் குசவம்சத்திற்பிறந்தவனானதால் எனக்குக் கௌசிகனென்று பெயர். ௬.

ராகவ! நல்ல ஆசாரமுடையவளாய், ஸத்யவதி என்னும் பெயருடையவளாய் எனக்கு முன்பிறந்தவளொருத்தியிருந்தாள். அவள் "ருசீகர்" என்னும் ருஷிக்கு விவாஹஞ்செய்துகொடுக்கப்பட்டாள். ௭.

அவள், மிக்கபெருந்தன்மைகொண்டு தன் கணவனுக்குப் பணிவிடைசெய்துகொண்டிருந்ததனால் சரீரத்துடன் ஸ்வர்க்கஞ்சென்றாள். அன்றியும், "கௌசிகி" என்றொரு சிறந்த நதியாயினள். ௮.

என்னுடன்பிறந்தவளான அந்தஸத்யவதியானவள் உலகத்திற்கு "ஐஹிகம் ஆமுஷ்மிகம்" என்னும் இருவகைநன்மையுமுண்டாக்கும்நதி, புண்யமானதீர்த்தமுடையதாய் அழகாய்விளங்கும் ஒருநதியாகி, தேவலோகத்தினின்று ஹிமவத்பர்வதத்தின் அருகிற்சென்றனள். ௯.

ரகுநந்தன! ஆதலால் யான், உடன்பிறந்தவளிடத் தன்புகொண்டு ஹிமவத்பர்வதத்தின் பக்கத்திலிருக்கும் கௌசிகிநதியின்கரையில் எப்பொழுதும் ஸுகமாக வாஸஞ்செய்துகொண்டிருக்கின்றேன். ௰.

இப்போது கௌசிகி என்னுஞ் சிறந்தநதியாயிருக்கும் அந்தஸத்யவதி, பாபத்தைப்போக்குபவள்; ஸத்யத்திலும்தர்மத்திலும்நிலைநிற்பவள்; கணவனைக் கைவிடாதிருப்பவள்; மஹாபாக்யமுடையவள். ௧௧.

ராம! யான் யாகஞ்செய்யவேண்டி அந்தக் கௌசிகிநதியை விட்டு ஸித்தாச்ரமத்திற்குவந்தேன். ஸித்தாச்ரமஞ்சென்று உனது ப்ரபாவத்தால் ஸித்தி (பயன்) பெற்றேன். ௧௨.

திண்டோளா! ராம! இதுதான் என்னுடையவும் என்வம்சத்தினுடையவும் இந்தத்தேசத்தினுடையவும் உத்பத்தியின் வரலாறு. நீ என்னைக்கேட்டபடியால் நான் உனக்குச்சொல்லினேன். ௧௩.

காகுத்ஸ்த! நான் கதைசொல்லிக்கொண்டேயிருந்தேன். பாதிராத்ரியாய்விட்டது. காலையில் வழிநடப்பதற்கு யாதொரு தடங்கலும் வாராதிருக்கவேணும். நல்லது, நீ நித்ரை செய். ௧௪.

ரகுநந்தன! மரங்கள்யாவும் அசைவற்று, ம்ருகங்கள் பக்ஷிகள் யாவும் உறக்கமுற்று, திசைகள் யாவும் இரவிலுண்டாமிருள்நிரம்பப்பெற்றிருக்கின்றன. ஸாயங்காலம் மெல்ல மெல்ல சென்றுவிட்டது. ஆகாசமானது, க்ரஹங்கள் நக்ஷத்ரங்கள் என்னுமிவைகளால் நிறைந்திருக்கிறபடியால் தேஜோரூபமான அநேகக்கண்களால் நிரம்பியதுபோற் பிரகாசிக்கின்றது. ௧௫.

ப்ரபுவே! சந்த்ரன் தன்னொளியால் உலகத்திருளையொழித்து உலகத்தில் ப்ராணிகளின் உள்ளத்தைக்களிக்கச்செய்து கிரணங்கள் குளிர்ந்துதிக்கின்றான்.

[illegible]
[illegible] க௭
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] உக
[illegible]
[illegible] உஉ
[illegible]
[illegible] உ௩
[illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] உ
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible] ௫

* [illegible] † [illegible]

கொடியவர்களைப் பாம்புகளைப் போலிருக்கும் யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் என்னும் இவர்களும், மற்றும் இரவில் திரியும் ப்ராணிகளனைத்தும் ஆங்காங்கு நடமாடுகின்றன." சஅ

மஹாப்ரபாவமுள்ள (விச்வாமித்ர)மஹாமுனிவர் இவ்வாறு கதை சொல்லி நிறுத்திவிட்டார். முனிவரெல்லோரும், "நல்லது நல்லது (நீர் சொன்ன கதை மிகவும் இனியதாயிருக்கிறது)" என்றுசொல்லி அவ்விச்வாமித்ரரை, "(விச்வாமித்ர ரே!) இக்குசிகவம்சமானது எப்பொழுதும் தர்மத்திலேயே பற்றுள்ளது; மஹாத்மாக்களாய் உத்தமபுருஷர்களாயுள்ள குசவம்சத்துதித்தவர்கள், ப்ரஹ்மாவைநிகர்த்தவர்கள்; அவர்களில் நீர்தாம் பெருங்கீர்த்திபெற்றவர்; நதிகளிற் சிறந்தவளாகிய கௌசிகியும் உமது குலத்திற்குப்பெருமையை விளைப்பவர்" என்று புகழ்ந்துகொண்டார்கள். உக.

இவ்வாறு விச்வாமித்ரரானவர் அம்மஹாமுனிவர்களாற் புகழப்பட்டவராய், அஸ்தமிக்கும் ஸூர்யன் போலொளிகொண்டு நித்ரைசெய்தார். உஉ.

ராமரும் கொஞ்சம் ஆச்சர்யப்பட்டு, (விச்வாமித்ர) மஹாமுனிவரைப் புகழ்ந்து லக்ஷ்மணரோடு கூடி நன்றாய் நித்ரை செய்தார். உங.

முப்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

முப்பந்தைந்தாவது ஸர்க்கம்.

விச்வாமித்ரரானவர், மிஞ்சின ராத்ரிமுழுதும் மஹர்ஷிகளோடுகூடி சோணநதியின் கரையில் இருந்துவிட்டு, பொழுதுவிடிந்தவுடனே, "ராம! பொழுது விடிந்துவிட்டது; ஸந்த்யாகாலம் உண்டாகிறது; எழுந்திரு எழுந்திரு; ப்ரயாணஞ்செய்யவேண்டும்; உனக்கு மங்கலமுண்டாகுக" என்று சொன்னார். க

(ஸ்ரீராகவர்) அவ்விச்வாமித்ரரது அம்மொழியைக்கேட்டு, காலையிற்செய்ய வேண்டியசெய்கையைச்செய்துமுடித்து, ப்ரயாணஞ்செய்ய விருப்பங்கொண்டார்; "ஸ்வாமி! (விச்வாமித்ரரே!) (சிலவிடங்களில்) மணற்குன்றுகளால் அழகியதாய், அழகான ஜலமுடையதாய் விளங்கும் இந்தச் சோணநதியானது ஆழமாய்க் காணப்படுகின்றதே! நாம் எந்த வழியாகத்தாண்டுவோம்" என்னும் சொல்லையும் புகன்றார். உ

விச்வாமித்ரரானவர் இவ்வாறு ராமரால் கேட்கப்பட்டவராய் "மஹர்ஷிகள் போகும் இவ்வழியாகவே யான் போக நிச்சயித்திருக்கிறேன்" என்னும் இம்மொழியையுரைத்தார். ங

அறிஞராகிய விச்வாமித்ரரால் இவ்வாறுரைக்கப்பெற்ற அம்மஹர்ஷிகளனைவர்கள், நானாவிதவனங்களையும் மற்றுமுள்ள நதி முதலியவைகளையும் பார்த்துக்கொண்டே ப்ரயாணஞ்செய்தார்கள். ச

[illegible]

அம்மஹர்ஷிகள் வெகுதூரம் வழிநடந்து மத்யாஹ்நகாலத்தில், கங்கைக்கரையை அடைந்து முனிவர்களால் ஸேவிக்கப்பெற்ற அந்த நதியைக் கண்டார்கள். ௭

பாபங்களைப் போக்குவதாய் ஹம்ஸஸாரஸப்பக்ஷிகளால் ஸேவிக்கப்பெற்றதாய் விளங்கும் அந்நதியைக் கண்டு முனிவர்களெல்லாரும் ராமலக்ஷ்மணர்களோடுகூட மகிழ்ந்தவர்களாயினர். ௮

பின்பு அம்முனிவர்கள், அந்தக் கங்கையின்கரையில் தங்குவதற்கு வேதியிடத்தை ஏற்பாடுசெய்துகொண்டார்கள்; பிறகு சாஸ்த்ரப்படி ஸ்நாநஞ்செய்துவிட்டு, பித்ருக்களையும் தேவதைகளையும் தர்ப்பணம்பண்ணி, அக்நிஹோத்ரங்களைச் செய்து, அம்ருதம்போன்ற ஹவிஸ்ஸைப்புஜித்து, ஸந்தோஷமடைந்தவர்களாய், மஹாத்மாவான விச்வாமித்ரரைச்சூழ்ந்துகொண்டு கங்கையின்கரையில் சுத்தமான வேதியிடத்தில் உட்கார்ந்தார்கள். ௧0

பிறகு ராமனானவர் அந்தக்கங்காநதியின் கரையில் அப்பொழுதே விச்வாமித்ரரைப்பார்த்து, “ஸ்வாமி! மூவழியாகச்செல்லுகின்ற கங்கையின் வரலாற்றை யான் கேட்க விருப்பங்கொண்டிருக்கின்றேன்; கங்கை எப்படி மூவுலகங்களையும் வ்யாபித்து கடற்சென்றனள்” என்று கேட்கலானார். ௧௧

விச்வாமித்ரமஹாமுநிவரானவர் ராமர்சொற்கேட்டு, கங்கையின் உத்பத்தி வ்ருத்தி முதலியவைகளைப்பற்றிய வரலாற்றையெல்லாஞ்சொல்லத் தொடங்கினார்:— ௧௨

“லோகங்களுக்கு (எல்லாம்) இருப்பிடமாயுள்ள ஹிமவானென்னுமொரு பெரிய பர்வதராஜனிருக்கிறான். அவனுக்கு, உலகத்தில் அழகில் நிகரற்ற இரண்டு பெண்களிருக்கிறார்கள். ௧௩

அழகுடையவளாகிய அப்பெண்களின் தாய், மேருபர்வதத்தின்பெண்ணும் ஹிமவத்பர்வதத்தின் அன்புள்ள பார்யையுமாகிய மனோரமையென்பவள். ௧௪

ராகவ! இந்தக் கங்கையானவள் அந்த மனோரமையினிடத்தில் ஹிமவானுக்கு முதற்பெண்ணாய்ப்பிறந்தாள்; உமையென்பவள், இரண்டாவது பெண்ணாய்ப்பிறந்தாள். ௧௬

பிறகு தேவர்களெல்லோரும் தமக்கு மேன்மையுண்டாகக்கோரி மலைகளுக்கு மன்னனாகிய ஹிமவானையடைந்து, “உமது மூத்தபெண்ணான கங்கை, (ஸ்வர்க்கம் பூமி பாதாலம் என்னும்) மூவுலகங்களிலும் ப்ரவஹிக்கும் நதியாக ஆகவேண்டும்” என்று ப்ரார்த்தித்தார்கள். ௧௭

உலகத்தைப் பரிசுத்தமாகச்செய்பவளாய், எல்லாவழிகளிலும் தன்னிஷ்டப்படி செல்லவல்லவளாய், தனது பெண்ணாயுள்ள கங்கையை மூவுலகங்கட்கும் நன்மையுண்டாகவேண்டுமென்று தர்மவிருப்பங்கொண்டு ஹிமவானும் அவ்வாறே கொடுத்தான். ௧௮

பிறகு அத்தேவர்களானவர்கள் உலகங்கட்கு நன்மையுண்டாகக்கோரிக் கங்கையை இட்டுக்கொண்டு இஷ்டத்தைப் பூர்த்திசெய்துகொண்டு சென்றார்கள். ௧௯

[illegible]
[illegible] ௨௦
[illegible]
[illegible] ௨௧
[illegible]
[illegible] ௨௨
[illegible]
[illegible] ௨௩
[illegible]
[illegible] ௨௪

[illegible]

அத² ஷட்த்ரிம்ஶ: ஸர்க³:

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible] ௬

[illegible]

ரகுநந்தந! ஹிமவத்பர்வதத்தின் மற்றொரு பெண்ணான தூய்மையுடைய உமையென்பவள், தபத்தையே பொருளாக நினைத்து உக்ரமாக விரதங்கொண்டு தவஞ்செய்துகொண்டிருந்தாள் ௨௰.

உக்ரமான தபஸ்ஸோடு கூடிய உலகெல்லாரானும் வணங்கப்பெற்ற தமதுபெண்ணான உமையை சைலராஜனாகிய ஹிமவான், அநுகூலராயிருக்கும் சிவபெருமானுக்கு விவாஹஞ்செய்யக்கொடுத்தான். ௨௧

ராகவ! நதிகளிற் சிறந்தவளாகிய கங்கை, உமாதேவி என்னும் அத்தகைய சைலராஜனாகிய ஹிமவானுடைய இரண்டுபெண்களும் உலகங்களால் வணங்கப்பட்டவர்கள். ௨௨

நடையுடையவர்களுள் முதல்வனே! (ராம!) கங்காநதி முதலில் ஆகாசமார்க்கஞ் சென்றதை பற்றிய வரலாற்றையெல்லாம் இவ்வாறு உனக்குச் சொன்னேன். ௨௩

பாவத்தைப்போக்குகின்றவளாய் ஹிமவானுடைய பெண்ணாய் அப்படிப்பட்ட ப்ரபாவம்பெற்றவளாயுள்ள இந்தக்கங்கை ஜலத்தைப்பெருக்கிக்கொண்டு தேவலோகஞ்சென்றதனால் 'ஸுரநதி' என்று சொல்லப்படுகிறாள்." ௨௪

முப்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

முப்பத்தாறுவது ஸர்க்கம்.

வல்லவர்களாகிய ராமலக்ஷ்மணரிருவரும் அவ்விச்வாமித்ரர் சொன்ன சொல்லைக்கேட்டுக் களித்து (விச்வாமித்ர) மஹாமுநிவரைப்பார்த்து சொல்லினர்:— ௧

"ஸ்வாமி! கேட்பதினால் தர்மஞ்செய்தபயனை யளிப்பதாயுள்ள மலைமன்னனாகிய ஹிமவானது மூத்தபெண்ணான கங்கையின் சிறந்த கதை உம்மால் சொல்லப்பட்டது; அந்தக் கங்கை விஷயமாகத் தேவலோகத்திலும் பூலோகத்திலும் நடந்த கதையின் வரலாற்றை நீர் விரிவாய் அறிந்தவராதலால் அதை விரிவாய்ச்சொல்லவேண்டும்; உலகத்தைப்பரிசுத்தமாகச்செய்யும் கங்கை, யாது காரணத்தால் மூவழிகளிற் சென்றனள்? ௩

தர்மங்களையுணர்ந்தவரே! மூவழிகளிற் செல்லும் கங்கை, யாதுகாரணத்தால் ப்ரஸித்தி பெற்றனள். எந்தக்கார்யத்தைச் செய்ததனால் மூவுலகங்களிலும் நதிகளிற் சிறந்தவளாயினள், ௪

ஸ்ரீராமர் அவ்வாறு கேட்கவே விச்வாமித்ரமஹாமுநிவரானவர் கதையெல்லாம் ருஷிகளின் நடுவில் (ராமருக்கு) விரிவாய்ச்சொல்லத்தொடங்கினார்:— ௫

"ராம முன்பு பெருந்தவம்புரிந்த சிவபெருமான், விவாஹஞ் செய்து கொண்டு, தமது பார்யையாகிய பார்வதியைக்கண்டாவலோடு ஸம்போகிக்கத் தொடங்கினார். ௬

[illegible]

பகைவரைத் தவிக்கச்செய்கின்றவனே! ராம! சிவபெருமான் இவ்வாறு தேவர்களைச் ஸம்போதித்தும் அவருக்கு அந்தப் பார்வதியினிடத்தில் பிள்ளையுண்டாகவில்லை. ௭

பிறகு ப்ரஹ்மா முதலான தேவர்கள், "இந்தப்பார்வதியினிடத்தில் ஒரு பிள்ளை பிறந்தால் அந்தப்பிள்ளையை எவன் பொறுப்பான்" என்று பயந்துவிட்டார்கள். ௮

வானவரெல்லோரும் (அந்தச் சிவபெருமானுக்கு) எதிரில் வந்து தெண்டனிட்டு, "வானவர்கோவே! மஹாதேவா! இவ்வுலகத்தின் நன்மையில் விருப்பங்கொண்டவரே! தேவர்கள் உம்மைச் சரணமடைகிறபடியால் நீர் அனுக்ரஹஞ் செய்யவேண்டும்; வானவரேறே! உமது வீர்யத்தாலுண்டாம் பிள்ளையை உலகங்கள் தரிக்கமாட்டா: (ஆதலால்) இந்தக்கார்யத்தைவிட்டு வேதத்திற்சொல்லிய யோகப்படி உமது பத்னியாகிய பார்வதியோடுகூடி நீர் தவஞ்செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்; மூவுலகங்கட்கும் நன்மையுண்டாகவேண்டி நீர் உமது வீர்யத்தை உமது தேஜோமயமான சரீரத்திலேயே தரிக்கவேண்டும்" என்னுமிம்மொழியை புகலத்தனர். ௧௧

எல்லாவுலகங்களுள்ளும் பெரிய வல்லவராகிய சிவபெருமான், வானோர் சொற்கேட்டு, "அப்படியே ஆகட்டும்" என்றுரைத்தார்; மீளவும் எல்லா (தேவ) ரையும்பார்த்து இம்மொழி மொழிந்தார்:— ௧௨

"(இனி) நானும் பார்வதியும் எங்கள் வீர்யத்தைச் சரீரத்திலேயே தரிக்கின்றோம்; தேவர்களும் பூமியும் நன்மையையடைக. ௧௩

தேவர்களே! இப்போது எனது சரீரத்தினின்று வெளியான வலியவீர்யத்தை எவன்தரிப்பான்? இதைச்சொல்லவேண்டும்?" ௧௪

சிவபெருமான் இவ்வாறுசொல்லவே தேவர்களெல்லாரும் சிவபெருமானைப்பார்த்து, "இப்போது உமது சரீரத்தினின்று வெளியான வீர்யத்தைப் பூமிதான் தரிப்பாள்" என்று உத்தரஞ்சொற்றனர். ௧௫

இவ்வாறு தேவர்கள்சொல்லவே சிவபெருமான் தமது வீர்யத்தைப் பூமியில் விட்டுவிட்டார்; அந்த வீர்யத்தால் மலைகளுங் காடுகளுமாகிய பூமியெல்லாம் நிரப்பிவிட்டது. ௧௬

பிறகு அதைக்கண்டு தேவர்கள், அக்நிபகவானைப்பார்த்து, "நீர் வாயுபகவானோடுகூடி சிவபெருமானது வலியவீர்யத்திலுட் புகுதல்வேண்டும் (அதாவது வீர்யத்தைப்பெற்றுக் கொள்ளவேண்டும்)" என்று சொல்லினர் ௧௭

அந்த வீர்யமானது அக்நியினால் வ்யாபிக்கப்பட்டு வெள்ளிமலையாய்விட்டது; அக்நியையும் ஆதித்யனையும் நிகர்த்த வொளிபெற்ற நாணற்காடாகவும் ஆயிற்று; அந்த நாணற்காட்டிற்றான் அக்நிக்கும் ருத்திராதேவிகட்கும் புத்ரனாய் மிக்கவொளிபெற்று ஆறுமுககடவுள் அவதரித்தார். ௧௮

பிறகு தேவர்கள் ருஷிகணங்களோடு கூடி மனதில மிக்க மகிழ்ச்சிகொண்டு சிவபெருமானையும் பார்வதிதேவியையும் அப்பொழுதே பூஜித்தார்கள். ௧௯

[illegible]

[illegible] ௨௪

[illegible] ௨௫

[illegible] ௨௬

[illegible] ௨௭

[illegible] ௨௮

[illegible]

[illegible]

[illegible] ௧

[illegible] ௩

[illegible]

ராம! பின்பு, பார்வதிதேவியானவள் தேவர்களைப்பார்த்து "பிள்ளை யுண்டாகக்கோரி நான் செய்துகொண்டிருந்த ஸம்போகத்திற்கு நீங்கள் இடையூறுசெய்ததனால் உங்கள் பத்நிகளிடத்தில் பிள்ளையைப் பெறமாட்டீர் கள்; இது முதல் உங்கள் மனைவிகள் பிள்ளையில்லாமலிருக்கவேண்டும்" என் றும் இந்தச் சாபவாக்யத்தைச்சொன்னாள். உ௨

இவ்வாறு தேவர்களெல்லாரையுஞ் சொல்லிவிட்டு, பூமியையும் நோக்கி, "புத்திகெட்ட பூமியே! எனக்குப்பிள்ளையுண்டாவதைக் கோராததனாலும் கோபத்தை விளைத்ததனாலும் நீ அநேகரூபமுடையவளும் பலர்க்குப் பத்நியு மாய் இருக்குக; பிள்ளையுண்டாவதினால் வரும் மகிழ்ச்சியையும் நீ அடையா திருக்குக" என்று சபித்துவிட்டாள். உ௩

வானவர் வேந்தராகிய சிவபெருமானனவர், அவ்வாறு பார்வதியினிடத்து சாபம்பெற்று வெட்கங்கொண்டிருக்கும் தேவர்களைக்கண்டு (வருந்தி), வரு ணன் பாதுகாக்கும் மேற்றிசையை நோக்கிப்புறப்படத் தொடங்கினார். உ௪

மஹாதேவராகிய அந்தச்சிவபெருமான் தமது தேவியாகிய பார்வதி யோடுகூடி ஹிமவத்பர்வதத்தின் சிகரஞ்சென்று அந்த ஹிமவத்பர்வதத்தின் வடபக்கத்தில் தவஞ்செய்துகொண்டிருந்தார். உ௫

ராம! பார்வதிதேவியின் வரலாற்றையெல்லாம் இவ்வாறு உனக்குச் சொல்லிவிட்டேன்; கங்கையின் வரலாற்றையும் சொல்லுகிறேன்; லக்ஷ்மண னோடுகூடி கேள். உ௬

முப்பத்தாறவது ஸர்க்கம் முற்றிற்று.

முப்பத்தேழாவது ஸர்க்கம்.

முன்பு சிவபெருமான் அவ்வாறு தவஞ்செய்துகொண்டிருக்கையில், வான வர்கள் தமக்கொருபடைமன்னருண்டாகக்கருதி ருஷிகணங்களோடுகூடி ப்ரஹ்மதேவரிடம் வந்துசேர்ந்தார்கள். ௧

ராம! பின்பு, மேன்மைபெற்றவராகிய ப்ரஹ்மாவை அக்நிமுதலாகிய வத்தேவர்களெல்லோரும் இந்த்ரனோடுகூடித் தெண்டனிட்டுரைத்த மொழி யாவது:— ௨

"ஸ்வாமி! முன்பு எங்களுக்கு நீர் கொடுத்த படைமன்னவர், உமையோடு கூடி பெருந்தவஞ் செய்துகொண்டிருக்கிறார் : ௩

[illegible]

உலகங்கட்கு நன்மையுண்டாகவேண்டி இவ்விஷயத்தில் இனி செய்யவேண்டியதை நீர் செய்யவேண்டும்; செய்யவேண்டியதின்னதென்பதை நீர் அறிந்தவராதலால் நீர்தாம் எங்களுக்குச் சிறந்தகதி.'' ரு

எல்லாவுலகங்கட்கும் பாட்டனாராகிய ப்ரஹ்மாவானவர், தேவர்களின் மொழிகேட்டு அவர்கட்கு நேயமுறச்சொல்லி இவ்வுத்தரமுரைத்தார்:— ௬

"தேவர்கட்குப் பத்னிகளிடத்துப் பிள்ளைகளுண்டாகக்கூடாதென்று அந்தப்பார்வதி சொன்னசொல் வீணாகமாட்டாது; இது உண்மையே; ஐயமில்லை.

அக்நிபகவானானவர் உங்கள் பகைவனைக்கொல்லும் படைமன்னனொருவனை இந்தக் கங்கையினிடத்திலுண்டுபண்ணுவார்; எ

ஹிமவானுடைய மூத்தபெண்ணான கங்கையானவள் அவ்வாறு பிள்ளையுண்டாவதை ஸம்மதிப்பாள்; அது பார்வதிக்கும் ஸம்மதமாயிருக்கும்; ஸந்தேஹமில்லை.'' அ

ரகுநந்தந! வானவரனைவரும் அவ்வயனார்மொழிகேட்டு தமது கோரிக்கை முடிந்ததென்றெண்ணி, அவரைத் தெண்டனிட்டு மேன்மைபடுத்தினர். கூ

ராம! பிள்ளை (= ஸேநாபதி) உண்டாகக்கருதி அத்தேவர்களனைவரும், லோகங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள கைலாஸ பர்வதஞ்சென்று அக்நிபகவானைப்பார்த்து "ஸ்வாமி! அக்நியே! மிக்க வலிவுள்ளவரே! (முன்னே நீர் தரித்துக்கொண்டிருக்கும் சிவபிரானது) வீர்யத்தை ஹிமவானுடைய மகளாகிய கங்கையினிடத்தில் விடவேண்டும்; வானவர்களது இக்கார்யத்தை நீர் முடித்துக்கொடுக்கவேண்டும்'' என்று தாண்டினார்கள். கக

அக்நிபகவானானவர், "அப்படியே ஆகட்டும்" என்று தேவர்கட்கு உறுதியாய்ச்சொல்லிவிட்டு கங்கையினிடம் வந்து, "(கங்கா)தேவி! (சிவபெருமானது இவ்வீர்யத்தை வாங்கிக்கொண்டு) நீ கர்ப்பந்தரிக்கவேண்டும்; இப்படி நீ கர்ப்பந்தரிப்பது தேவர்கட்கு நன்மையை விளைப்பதாயிருக்கிறது'' என்றுரைத்தார். கஉ

கங்கையானவள், அவ்வக்நிபகவானுடைய அம்மொழியைக்கேட்டு தேவப்பெண்ணுருவந்தரித்தாள். அக்நிபகவானும் அவள் மஹிமையைப்பார்த்து தமது எல்லா சரீரத்தினின்றும் (சிவபெருமானது வீர்யத்தை) அவளிடத்தில் சொரிந்தார். கங

ரகுநந்தந! பின்பு அக்நிபகவானானவர் (பரமசிவனது வீர்யத்தை) கங்காதேவியினிடத்து நிரம்பப்பொழிந்தார்; அப்பொழுதே கங்கையின் வெள்ளம் யாவும் நிறைந்துவிட்டன. கச

கங்கையானவள் அவ்வக்நியினால் தபிக்கப்பட்டு மனதில் மிக்க வருத்தங்கொண்டு, எல்லா தேவர்கட்கும் புரோஹிதரான அவ்வக்நிபகவானைக்கண்டு "ஸ்வாமி! மேன்மேலும் அதிகமாய்ப் பெருகும் உமது தேஜஸ்ஸை (அதாவது, நீர்விடும் சிவபிரான் வீர்யத்தை) நான் தரிக்க வல்லவளல்லேன்'' என்று சொன்னாள். கரு

பிறகு அக்நியானவர் கங்கையைப்பார்த்து "கங்கே! இந்தக் கர்ப்பத்தை ஹிமவத்பர்வதத்தின் இந்தச் சிறிய குன்றில் விட்டுவிடு'' என்னும் இவ்வாக்யத்தைச்சொன்னார். க௬

பேரொளி பெற்றவனே! பாவமற்றவனே! (ராம!) அப்பொழுது கங்கையானவள் அக்நிசொன்னதைக் கேட்டு, மிகவும் ப்ரகாசிக்கும் அந்தக்கர்ப்பத்தை வெள்ளத்தினின்று (எடுத்து வெளியில்) விட்டு விட்டாள். கஎ

[illegible] ௧௯
[illegible] ௨௰
[illegible] ௨௧
[illegible] ௨௨
[illegible] ௨௩
[illegible] ௨௪
[illegible] ௨௫
[illegible] ௨௬
[illegible] ௨௭
[illegible] ௨௮
[illegible] ௨௯
[illegible] ௩௰
[illegible] ௩௧

* [illegible]

இந்த கங்கையினின்று வெளியாய்ப் பூமியைச்சேர்ந்த வீர்யத்தினின்று, புடமிட்ட தங்கத்தின் ஒளியுடைய பொன்னும், நிர்மலமாய்ப் ப்ரகாசிக்கின்ற வெள்ளியும் உண்டாயின. ௧௯

அந்தக் கங்கையினின்று வெளியான வீர்யத்தின் தீக்ஷ்ணபாகத்தினின்றே தாம்ரம் இரும்பு என்னும் லோஹங்களுமுண்டாயின; அதன் மலபாகமானது எப்பொழுதும் தகரமும் ஸீஸமுமாக ஆயிற்று; அவ்வீர்யமானது இக்கங்கையினின்று பூமியில் விழுந்து பலவித லோஹங்களாக ஆயிற்று. ௨௦

கங்கை கர்ப்பத்தை விட்டவுடனே அதனொளியினால் (ஸமீபத்திலிருந்த) மலையோடுகூட (நாணல்) காடெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து ஸ்வர்ணமயமாய் விட்டது. ௨௧

புருஷோத்தம! ராகவ, பொன்னானது அதுமுதற்றான் அக்நியை நிகர்த்து (அதற்கொரு அழகுண்டானதால்) ஜாதரூபமென்று ப்ரஸித்தி பெற்றது. புல், மரம், கொடி, புதர் ஆகிய எல்லாம் பொன்னாய்விட்டது. ௨௨

பிறகு, அப்படி கங்கையின் கர்ப்பத்தினின்று குமாரர் (ஸுப்ரஹ்மண்யர்.) உண்டாகவே இந்த்ரனுடன் எல்லாதேவர்களுமொன்றுகூடி, பால்கொடுத்து அந்தக்குழந்தையை வளர்க்கும்படி க்ருத்திகாதேவதைகளுக்குக் கட்டளையிட்டார்கள். ௨௩

அந்தக் க்ருத்திகாதேவதைகளானவர்கள், அந்தக்குழந்தையுண்டானவுடனே, "நமக்கெல்லோர்க்கும் இந்தக்குழந்தைதான் பிள்ளை" என்று தீர்மானித்து நல்லேற்பாடு செய்துகொண்டு பால்கொடுத்து (வளர்த்து) வந்தார்கள். ௨௪

பிறகு, "க்ருத்திகாதேவிகளின் பிள்ளையாகிய இக்குழந்தை ஸம்சயமின்றி மூவுலகத்திலும் ப்ரக்யாதிபெறப்போகிறது" என்று சொன்னார்கள். ௨௫

(க்ருத்திகாதேவிகள்,) அத்தேவர்களின் அம்மொழியைக்கேட்டு, நழுவிய கர்ப்பத்தினின்றுண்டாய் மிக்கவொளியோடுகூடி, கொழுந்துவிட்டெரியும் அக்நிபோல் விளங்கும் அந்தக்குழந்தைக்கு ஸ்நானஞ்செய்துவைத்தார்கள். ௨௬

காகுத்ஸ்த! பெருஞ்செல்வம்பெற்று அக்நியை நிகர்த்து விளங்கும் அந்தக் குழந்தையை, நழுவிய கர்ப்பத்தினின்றுண்டானதால் "ஸ்கந்தர்" என்றும் க்ருத்திகைகள் பால்கொடுத்து வளர்த்ததனால் "கார்த்திகேயர்" என்றும், தேவதைகள் அழைத்தார்கள். ௨௭

பிறகு க்ருத்திகா தேவிகளுக்குப் பால் அதிகமாயுண்டாயிற்று; க்ருத்திகா தேவிகளாறுபேர்களின் முலைப்பாலையும் ஆறுமுகமுடையவராய்ப் பானஞ்செய்தார். ௨௮

வல்லவராகிய ஆறுமுகப்பெருமான், வேண்டியவளவில் ஒரேதினத்திலேயே பால்குடித்து, மிருதுவான திருமேனியுடையவராயிருந்தும் தமது பராக்ரமங்கொண்டு அஸுரப்படைக்கூட்டங்களை வென்றுவிட்டார். ௨௯

பிறகு அக்நிமுதலான தேவர்களெல்லோரும் ஒன்றுகூடி (ஆலோசித்து,) ஒப்பற்ற ஒளிபெற்ற அந்த ஆறுமுகப் பெருமானை தேவர்களது படைகளுக்கெல்லாம் ராஜாவாயிருக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். ௩௦

ராம! இப்படியாக நான் உனக்கு கங்கையின் வரலாற்றையெல்லாம் சொன்னேன்; பாபத்தைப்போக்கிச் செல்வத்தைத் தருவதான ஆறுமுகஸ்வாமியின் உத்பத்தியினது வரலாற்றையுஞ் சொல்லிவிட்டேன். ௩௧

[illegible]
[illegible]
இதி ஸ்ரீ[illegible] ஸர்க்க:

[illegible] ஸர்க்க:

[illegible]
[illegible] க
[illegible]
[illegible] உ
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] அ
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௰
[illegible]
[illegible]
[illegible]
[illegible] கஉ

'காகுத்ஸ்த! கங்காவதரணவிவரத்தில் பக்தியுள்ள மனிதன் இவ்வுலகத்தில் ஆயுள் கீர்த்தியைப்பெற்று பிள்ளைபேரன்மார்களோடுகூடி செல்வத்துடன் ஸுகமாகவாழ்ந்து கடைசியில் கங்காவாஸியினால் ஸ்வர்க்கம் சேருவான்." ௪௫

முப்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

முப்பத்தெட்டாவது ஸர்க்கம்.

காகுத்ஸ்தகுலத்துப்பிள்ளையாகிய ஸ்ரீராமருக்கு (இவ்வாறு) விச்வாமித்ரர் அக்கங்கையின் கதையைச்சொல்லி, மீளவும் இவ்வின்மொழியை மெல்லன வுரைத்தார்:— க

"(ராம) முன்பொருக்கால், ஸகரரென்னும் மன்னவர், தர்மவிருப்பங்கொண்டு வல்லமைபெற்று, அயோத்யாநகரிக்கரசராயிருந்தார்; அவர், புதல்வரில்லாமையினால் தமக்குப் புதல்வருண்டாகக் கோரினர் உ

ராம! தர்மத்தில் நிலைநின்றவளாய், ஸத்யத்தையே பேசுகின்றவளாய் விதர்ப்பதேசத்து ராஜாவுக்கு கேசினீ என்றொரு பெண்ணிருந்தாள்; அவள், ஸகரராஜருக்கு முதற்பத்னியானாள். ௩

உலகத்தில் ஒப்பில்லா அழகுடையவளாய்க் காச்யபருக்கு ஸுமதியென்றொரு பெண்ணிருந்தாள்; அவள், ஸகரமன்னவருக்கு இரண்டாவது பத்னியானாள். ௪

(ஸகரமஹாராஜர்) ராஜர், அந்தப்பத்னிகளிருவரோடுங்கூடி ஹிமவத்பர்வதஞ்சென்று, ப்ருகுப்ரஸ்ரவணமென்னும் மலையில் தவஞ்செய்யத்தொடங்கினர். ரு

பின்பு நூறுவர்ஷஞ்சென்றபின்னர், ஸத்யவான்களிற்சிறந்தவராகிய ப்ருகுமுனிவராமவர் (அந்த ஸகரசக்ரவர்த்திசெய்த) தவத்தால் த்ருப்தியடைந்தெதிரிலுதித்து, 'பாவமற்றவனே! ஸகர! உனக்குவேண்டியவரையிற் புத்ரர்களுண்டாவார்கள்; ஆண்சிங்கமே! நீ, ஒப்பில்லாப்புகழையும் உலகத்திற் பெறுவாய்; அப்ப! உனது ஒருமனைவி, உனது வம்சத்தை வ்ருத்திபண்ணும்படியான ஒரு பிள்ளையைப் பெறுவாள்; மற்றொருவள், அறுபதினாயிரம் பிள்ளைகளைப்பெறுவாள்" என்று ஸகரருக்கு வரமளித்தார். அ

மஹாத்மாவாகிய ப்ருகுமுனிவர் இவ்வாறு வரமளிக்கவே. அரசர்பெண்களான கேசினீ ஸுமதி என்னும் இருவரும் பெருமகிழ்ச்சியடைந்து அவரை மேன்மைப்படுத்தி அஞ்சலிஹஸ்தர்களாய் "ஸ்வாமி! நீர் சொன்னது சொன்னபடியே ஆகட்டும்; (எங்களுள்) யாருக்கு ஒரு பிள்ளையுண்டாகும்? யாருக்கு அநேகபிள்ளைகளுண்டாகும்? இதை யாங்கள்கேட்க விரும்புகிறோம்" என்று சொன்னார்கள். க0

மிக்க தர்மிஷ்டரான ப்ருகுவானவர், கேசினீ ஸுமதி என்னும் அவ்விருவர்களுடையவும் அந்தச்சொல்லைக்கேட்டு, "உங்களிருவருக்குள் ஒருத்திக்கு, வம்சத்தை விருத்திபண்ணும்படியான ஒரு பிள்ளையுண்டாவான், மற்றொருத்திக்கு, மிகுந்த பலமுடையவர்களும் மிகுந்த கீர்த்தியுடையவர்களும் மிகுந்த உத்ஸாஹமுடையவர்களுமான பல பிள்ளைகளுண்டாவார்கள்; எவளுக்கு எந்தவரம் வேண்டும்? இதுவிஷயத்தில் உங்களுடைய அபிப்ராயத்தை நீங்களே சொல்லுங்கள்" என்று மிம்மென்மொழியை யுரைத்தார். கஉ

[illegible]

ரகுகுலத்துப்பிள்ளாய்! கேசிநியானவள் முனிவரது மொழிகேட்டு தனது குலத்திற்கு மேன்மையை விளைவிக்கும் பிள்ளைவேண்டுமென்று மன்னவர் முன்னிலையிற் கோரினள். கந

அப்பொழுது, கருடனுடைய தங்கையாகிய ஸுமதியானவள், மிக்க உத்ஸாஹமுடையவர்களும் மிக்க கீர்த்தியுடையவர்களுமான அறுபதினாயிரம் பிள்ளைகள் வேண்டுமென்று கோரினள். கச

ரகுநந்த! (ஸகர) மன்னவரும் தமது மனைவிகளோடுகூடி (ப்ருகு) ருஷியைப் ப்ரதக்ஷிணஞ்செய்து தெண்டனிட்டு தமது பட்டணஞ்சென்றார். கரு

பின்பு சில்காலஞ்சென்ற பிறகு, மூதற்பத்நியாகிய கேசிநியானவள் ஸகரரிடத்து "அஸமஞ்சஸ்" என்னும் பிள்ளையைப்பெற்றாள். கசு

புருஷோத்தம! (ராம!) இரண்டாம் பத்நியாகிய ஸுமதியானவள், ஒரு கர்ப்பபிண்டத்தைப்பெற்றாள்; அந்தக்கர்ப்பபிண்டம் வெடித்து அதினின்று அறுபதினாயிரம் பிள்ளைகள் வெளியாயினர். கள

மாற்றான் தாய்கள், அந்தப்பிள்ளைகளை நெய்க்குடத்திலிட்டு வளர்த்து வந்தார்கள்; வெகுகாலஞ்சென்றபின்னர் எல்லாப்பிள்ளைகளும் யௌவனப் பருவமடைந்தார்கள். கஅ

பிறகு வெகுகாலங் கழிந்தபின் அப்பொழுது ஸகரரது அறுபதினாயிரம் பிள்ளைகளும் யௌவநப்பருவங்கூடி அழகாய்விளங்கினா. கக

மாநவரேறே! ராகவ! ஸகரரது மூத்தமகனான அஸமஞ்சன், ஸரயூநதியின் நீரில் நாடோறும் பிள்ளைகளைக்கொண்டுபோய்ப்புகட்டு, நீரில் மூழ்கித்தயிக்கும் அப்பிள்ளைகளைப்பார்த்து சிரித்துக்கொண்டிருந்தனன். உ0

இவ்வாறு கொடியசெய்கைகொண்டு பெரியோர்களைவருத்தி பட்டணத்திலுள்ளோர்க்கு தீமையைவிளைத்துக்கொண்டிருந்ததனால் அந்தப்பிள்ளை பட்டணத்தினின்று வெளியில் துரத்தப்பட்டான். உக

மிக்கவல்லவனும், எல்லாவுலகமும் விரும்பப்பெற்றவனும், எல்லார்க்கும் நன்மையையேபுரைகின்றவனுமாய் அஸமஞ்சனுக்கு "அம்சுமான்" என்கிற ஒரு புத்ரனுண்டாயினன். உஉ

அண்கிஸமே! (ராம!) பிறகு, வெகுகாலத்திற்குப்பின்னே, யாகஞ்செய்யவேண்டுமென்று ஸகரருக்கு எண்ணமுண்டாயிற்று. உங

ராம! வேதங்களையுணர்ந்தவராகிய அந்த ஸகரசக்ரவர்த்தி யாகஞ்செய்ய வேண்டுமென்று உபாத்யாயர்களோடுகூடி நிச்சயித்துக்கொண்டு யாகஞ் செய்யத்தொடங்கினர்." உச

முப்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

[illegible] ௨

[illegible] ௩

[illegible] ௪

[illegible] ௫

[illegible] ௬

[illegible] ௭

[illegible] ௮

[illegible] ௯

[illegible] ௧௦

[illegible] ௧௧

[illegible] ௧௨

[illegible] ௧௩

முப்பத்தொன்பதாவது ஸர்க்கம்.

இவ்வாறு விச்வாமித்ரர் சொன்ன கதையை ஸ்ரீராகவனுர் கேட்டு மிக்க ஸந்தோஷமடைந்து, கொழுந்துவிட்டெரியும் அக்நிபோல் விளங்கும் விச்வாமித்ரமுனிவரைநோக்கி, "ஸ்வாமி! உமக்கு மங்களமுண்டாகுக; என்குலத்து முன்னேராகிய ஸகரர் எவ்வாறு யாகஞ்செய்தார்? இக்கதையை யான் உம்மிடத்தில் விரிவாய்க்கேட்க விரும்புகின்றேன்" என்று சொற்னூர். ௧

விச்வாமித்ரரும் புன்சிரிப்போடுகூடி காகுத்ஸ்தருக்குரைத்தார்:— ௨

"ராம! மஹாத்மாவாகிய ஸகரருடைய யாகத்தைப்பற்றிய கதையை யான் விரிவாய்ச்சொல்லுகிறேன், கேள்: சிவபெருமானுக்கு மாமனுரான ஹிமவத்பர்வதம், விந்த்யபர்வதம் என்னும் இவ்விரண்டு மலைகளும் மிகவும் உயர்ந்திருக்கிறபடியால் அருகில் வந்து ஒன்றையொன்று பார்த்துக்கொள்ளுகின்றனவென்னும்படி இருக்கின்றன. ௩

நரச்ரேஷ்டரே! அந்த ஸகரரது யாகமானது அவ்விரண்டு மலைகளுக்கும் நடுவில் நடத்தப்பட்டது. ஆண்சிங்கமே! அவ்விடத்தில் யாகஞ்செய்தால் அதிக பயனுண்டாகுமன்றோ? ௪

அப்ப! காகுத்ஸ்த! வலியவில்லாளியாய் மிக்க வல்லவராயுள்ள அம்சுமானவர் அந்த ஸகரரதுசொற்படிநடந்து அந்தயாகக்குதிரையைப் பாதுகாத்துத் தொடர்ந்துசென்றூர். ௫

அவ்வாறு யாகஞ்செய்யும் அந்த ஸகரருடைய யாகக்குதிரையைப் பர்வத்தன்று இந்த்ரனுயவன் மாயாரூபந்தரித்து ஹரித்துக்கொண்டுபோய்விட்டான்.

காகுத்ஸ்த! மஹாத்மாவாகிய ஸகரரது அந்த யாகக்குதிரை போய்விடவே உபாத்யாயர்களெல்லோருமொன்றுகூடி யாகத்திற்குக் கர்த்தாவான ஸகரரைப்பார்த்து பின்னர் சொன்னதாவது:— ௮

"ககுத்ஸ்த வம்சத்துப் பிள்ளையாகிய ஸகரரே! இந்த யாகக் குதிரையை (எவனே) பர்வத்தன்று விரைவிற்கொண்டுபோய்விட்டான்; கொண்டுபோனவனை வென்று குதிரையைப் பிடித்துவரவேண்டும்; ௯

அரசே! இப்படி யாகத்திற்குக் கெடுதல் சேர்ந்தால் நமக்கெல்லார்க்கும் தீங்குண்டாம்; ஆதலால், யாகத்திற்குக் கெடுதலுண்டாகாதபடி செய்ய வேண்டும்." ௧௦

ஸகர மன்னவர் அந்த யாகஸபையில் உபாத்யாயர்களின் மொழிகேட்டு அறுபதினுயிரம் பிள்ளைகளையும் பார்த்து சொன்னுர்:— ௧௧

"பிள்ளைகாள்! வல்லர்காள்! மந்த்ரத்தால் பரிசுத்தர்களாய் மஹாபாக்யமுடையவர்களாயுள்ள மஹர்ஷிகளால் இச்சிறந்த யாகஞ் செய்விக்கப்படுகிறபடியால் குதிரையைக்கொண்டுபோக ராக்ஷஸர்கள் வந்திருப்பார்களென்று நான் எண்ணவில்லை; ௧௨

பிள்ளைகளே! ஆதலால் நீங்கள் புறப்பட்டுபோய் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருயோஜனை விஸ்தாரமுள்ள பூமிவீதம் பங்குபோட்டுக்கொண்டு கடற்சூழ்ந்த இப்பாரெங்குந் திரிந்து அக்குதிரையைத்தேடுங்கள்; ௧௩

[illegible]
[illegible] ௧௪
[illegible]
[illegible] ௧௫
[illegible]
[illegible] ௧௬
[illegible]
[illegible] ௧௭
[illegible]
[illegible] ௧௮
[illegible]
[illegible] ௧௯
[illegible]
[illegible] ௨௦
[illegible]
[illegible] ௨௧
[illegible]
[illegible] ௨௨
[illegible]
[illegible] ௨௩
[illegible]
[illegible] ௨௪
[illegible]
[illegible] ௨௫

[illegible]

[illegible]

குதிரையைப்பிடித்தவரையிற் பூமியைக்கொத்திக் குளமாக்கிவிடுங்கள்; அந்தக் குதிரையைக் கொண்டுபோனவனையும் எனது கட்டளைப்படியே தேடிப் பிடித்துக்கொண்டு வாருங்கள்; கச

யாகஞ்செய்வதற்கு யான் தீக்ஷைகொண்டுவிட்டபடியால், உபாத்யாயர்களோடும் பௌத்ரர்களோடுங்கூடி, குதிரையைக்காண்கிறவரை இவ்விடத்திலேயே நிற்பேன்; உங்களுக்கு நன்மையுண்டாகுக.” கரு

ராம! மிக்க வலியர்களாகிய (ஸகர) மன்னவனது பிள்ளைகள் இவ்வாறு (ஸகரரால்) சொல்லப்பட்டு நெஞ்சத்து மகிழ்ச்சிகொண்டு, தந்தை சொற்படி பூதலஞ்சென்றார்கள். கசு

புருஷோத்தம! ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோஜனைத்தூரமுள்ள பூமிவிதம் பங்கிட்டுக்கொண்டு, வஜ்ராயுதத்தை நிகர்த்த தமது நகங்களாற் பூமியைப் பிளந்தெறிந்தார்கள் கஎ

ரகுநந்தன! வஜ்ராயுதத்திற்கொப்பான சூலங்களாலும், மிக்க பயங்கரங்களான கலப்பைகளாலும் பூமியானது பிளக்கப்பட்டு சப்தித்தது. கஅ

ராகவ! (அதனால்) நாகர்கள் அஸுரர்கள் ராக்ஷஸர்கள் மற்றுமுள்ள ஜந்துக்கள் ஆகிய எல்லாம் ஹிம்ஸிக்கப்படவே பெரியகோஷமுண்டாய் விட்டது. கக

ரகுநந்தன! வீரர்களாகிய ஸகரபுத்ரர்கள், அறுபதினாயிரம் யோஜனைத்தூரம் பூமியைப்பாதாளலோகம்வரை பிளந்தெறிந்தார்கள். உ0

நரசிங்கமே! (ஸகர) ராஜாது புத்ரர்கள், பர்வதங்கள் நெருங்கிய ஜம்பூத்வீபம் முழுவதையும் இவ்வாறு தோண்டிக்கொண்டு எங்கும் திரிந்து வந்தார்கள். உக

பிறகு, கந்தர்வர்கள் அஸுரர்கள் உரகர்கள் என்பவர்களோடுகூடித் தேவர்களெல்லோரும் மனதில் மிகவும் பயங்கொண்டு ப்ரஹ்மாவினிடம்வந்து சேர்ந்தார்கள். உஉ

மிக்க பயங்கொண்டு வாடிய முகமுடையவத்தேவர்கள், மஹாத்மாவாகிய ப்ரஹ்மாவைப்பார்த்து இம்மொழியைச்சொற்றனர்:— உங

“ஸ்வாமி! பார்முழுதும் ஸகரபுத்ரர்களாற் பிளக்கப்படுகிறது; பாதாளலோகத்தில் வஸிக்கும் அநேக மஹாத்மாக்களும் (அதனால்) ஹிம்ஸிக்கப்படுகிறார்கள். உச

அந்த ஸகரபுத்ரர்கள் யாரைக்கண்டாலும் “இவன்றான் நமது யாகத்தைக்கெடுத்தவன்; நமது யாகக்குதிரை இவனாற்றான் கொண்டுபோகப்பட்டது” என்று சொல்லி எல்லாப்ராணிகளையும் ஹிம்ஸிக்கிறார்கள்.” உரு

முப்பத்தோன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

[illegible]

[illegible]
[illegible] க
[illegible]
[illegible]
[illegible] உ
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible] ௬
[illegible]
[illegible] ௭
[illegible]
[illegible] ௮
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible] ௧௧
[illegible]
[illegible] ௧௨

[illegible]

நாற்பதாவது ஸர்க்கம்.

பூஜ்யராகிய ப்ரஹ்மதேவர் தேவர்களின் மொழிகேட்டு, ஸகரபுத்ரர்களின் வல்லமைகண்டு மதிமயங்கி மிக்கபயங்கொண்டிருக்கும் அவ்வமரர்களைநோக்கி பதில்சொன்னார்:— க

“இப்பார்முழுவதுக்கும் பர்த்தாவாய்ப் பேரறிவுடையவராய்க் கபிலரூபங்கொண்டு எப்பொழுதும் பூமியைத்தரிக்கும் வாஸுதேவருடைய கோபமென்னும் அக்கியினால் (ஸகர) மன்னவருடைய புதல்வர் (தாமே) கொளுத்தப்படுவார்கள். உ

(இவ்வாறு) பூமிபிளக்கப்படுமென்பதையும், ஸகரப்புதல்வர் வாணாள் குறைந்துநாசமடைவார்களென்பதையும் முன்னமே நான்தெரிந்துகொண்டே இருக்கிறேன்.” ௩

பகைவரைத் தவிக்கச்செய்யும் ராம! (வஸுக்கள் எண்மர், ருத்ரர்கள்பதினொருவர், ஆதித்யர்கள் பன்னிருவர், அச்விநீ தேவதைகள் இருவர் ஆகிய) தேவர்கள் முப்பத்துமூவரும் அயனுடைய மொழிகேட்டு மிக்கமகிழ்ச்சிகொண்டு, வந்தபடியே திரும்பிப்போயினர். ௪

மஹாத்மாக்களாகிய ஸகரபுத்ரர்கள் பூமியைப்பிளந்து கொண்டுபோகும்போது இடியிடிப்பதுபோல் ஒரு பெரியசப்தமுண்டாயிற்று. ரு

பிறகு ஸகரபுத்ரர்களெல்லோரும் பார்முழுவதையும் பிளந்துவிட்டு, எல்லோருங் கும்பலாகவந்து தமது தந்தையாகிய ஸகரனைத்தெண்டனிட்டு மொழிந்தமொழியாவது:— சு

“பூமிமுழுவதுஞ் சுற்றிவந்தோம்; மிக்கபலமுள்ளவர்களான தேவர்கள், தானவர்கள், ராக்ஷஸர்கள், பிசாசர்கள், நாகர்கள், கின்னரர்கள் என்பவர்களையும் கொன்றோம்; எ

அந்தக்குதிரையாவது, அக்குதிரையைக் கொண்டுபோனவனாவது அகப்படவில்லை; நாங்கள் என்னசெய்யலாம்? இந்தவிஷயத்தில் செய்யவேண்டிய உபாயமின்னதென்பதை ஆலோசியும் உமக்கு நன்மையுண்டாகுக” அ

அரசர்களிற்சிறந்தவ! ரகுநந்தன! ஸகரர் அப்புதல்வருடைய அம்மொழி கேட்டு சினங்கொண்டு, “(பிள்ளைகாள்)! உங்களுக்கு நன்மையுண்டாகும்; மறுபடியும் நீங்கள் பூமியைவெட்டவேண்டும்; பூதலத்தைப்பிளந்து, குதிரையைக்கொண்டுபோனவனைக் கண்டுபிடித்து, கார்யத்தை முடித்துக்கொண்டு நீங்கள்திரும்பவேண்டும்’ என்கிறமொழியையுரைத்தார் க0உ

மஹாத்மாவாகிய தமது தந்தையான ஸகரரது சொற்கேட்டு அறுபதினாயிரம்பிள்ளைகளும் பாதாளலோகத்தை நோக்கி ஓட்டமாய் ஓடினார்கள். கக

அங்கு பர்வதத்தைநிகர்த்து, பூமியைத்தாங்கிக்கொண்டிருக்கும் விரூபாக்ஷமென்னும் திக்கஜத்தைக்கண்டார்கள். கஉ

[illegible]
[illegible] கங
[illegible]
[illegible] கச
[illegible]
[illegible] கரு
[illegible]
[illegible] கசா
[illegible]
[illegible] கஎ
[illegible]
[illegible] கஅ
[illegible]
[illegible] கக
[illegible]
[illegible] உ0
[illegible]
[illegible] உக
[illegible]
[illegible] உஉ
[illegible]
[illegible] உங
[illegible]
[illegible] உச
[illegible]
[illegible] உரு
[illegible]
[illegible]
[illegible] உஎ

---

* [illegible]

ரகுநந்தன! மலைகளோடும் காடுகளோடும் கூடிய பூமிமுழுவதையும் விருபாக்ஷமென்னும் (அந்தப்) பெரிய யானை, தலையினால் தரித்துக்கொண்டிருந்தது. ௧௩

காகுத்ஸ்த! (அந்தப்) பெரியயானை எப்பொழுது இளப்பாறுவதற்காகத் தலையை அசைக்குமோ அப்பொழுது பூகம்பமுண்டாகும். ௧௪

ராம! திக்கைக்காத்துக்கொண்டிருக்கும் அப்பெரிய யானையை அந்த ஸகரபுத்ரர்கள் ப்ரதக்ஷிணஞ்செய்து மேன்மைபடுத்தி, பாதாளலோகத்தைப் பிளந்துகொண்டுபோனார்கள். ௧௫

பின்பு அந்த ஸகரப்புதல்வர், கீழ்த்திசையைப்பிளந்து மறுபடியும் தென்றிசையைப்பிளந்தனர். தென்றிக்கிலும் ஒருபெரியயானையைக்கண்டனர். ௧௬

மிக்கதைர்யமுடையதாய் மிக்கபெரியதாய் மலைக்கொப்பானதாய் சிரஸ்ஸினால் பூமியைத்தரித்துக்கொண்டுநிற்கும் மஹாபத்மமென்னும் அந்தயானையை அந்த ஸகரபுத்ரர்கள் கண்டு மிக்க வியப்படைந்தார்கள். ௧௭

பிறகு மஹாத்மாவாகிய ஸகரரது அறுபதினாயிரம் பிள்ளைகளும் (அந்த யானையை) ப்ரதக்ஷிணஞ்செய்துவிட்டு, மேற்றிசையைப்பிளந்தார்கள். ௧௮

மிக்கவலியராகிய அந்த ஸகரப்புதல்வர், மேற்றிசையிலும் மலைக்கொப்பாய்நிற்கும் ஒரு பெரிய திக்கஜத்தைக்கண்டனர். ௧௯

பிறகு அவர்கள், அந்த யானையை வலம்வந்து, க்ஷேமமா என்று கேட்டுவிட்டு, வடதிசையைப் பிளந்துகொண்டுபோனார்கள். ௨௰

ரகுக்களில்சிறந்தவ! பனிபோல் வெளுத்து அழகாய சரீரத்தினால் இப்பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கும் பத்ரமென்னும் கஜத்தை வடதிசையிற் கண்டார்கள். ௨௧

பிறகு அறுபதினாயிரம் பிள்ளைகளும் இந்தப் பத்ரமென்னும் யானையைத் தொடைத்துப்ப்ரதக்ஷிணஞ்செய்துவிட்டு, பூதலத்தைப் பிளந்தார்கள். ௨௨

பிறகு ஸகரபுத்ரர்களெல்லோரும், (சிவபிரான்வசிக்கிறபடியால்) சிறந்ததாகிய வடகிழக்குத்திசைக்குப்போய் ரோஷத்துடன்கூடி பூமியையெல்லாம் பிளக்தெறிந்தார்கள். ௨௩

பெரியசரீரம்பெற்று மிக்கவலிவுகொண்டு பயங்கரமாய் ஓடும் அந்த ஸகரபுத்ரரெல்லோரும், அங்கு கபிலரூபந்தரித்திருக்கும் நித்யராயுள்ள வாஸுதேவரைக்கண்டனர். ௨௪

ரகுநந்தன! அந்த ஸகரபுத்ரர்களெல்லோரும் ஒப்பில்லாக்களிப்படைந்து, அந்த வாஸுதேவருகிற் புல்மேய்ந்துகொண்டிருக்கும் குதிரையையுங் கண்டார்கள். ௨௫

அவர்கள், அந்தக்கபிலமுனிவரைக் குதிரைகொண்டுபோனவராகநினைத்து கோபத்தால் கண்விழித்து, மண்வெட்டியையும் கலப்பையையும் நாநாவித வ்ருக்ஷங்களையும் கல்களையும் எடுத்துக்கொண்டு அவரை அடிக்க எதிர்த்தோடினார்கள்; "அறிவுகெட்டவனே! நீ எங்கள் யாகக்குதிரையைத் திருடிக்கொண்டு

ஶக்ராக்ஷா ஸா ஹி ஸம்பூர்ணா யஸ்யா ஸுரவரஸ்ய ச।
த்ரிபதா ஹி ஸம்ப்ராப்தா தா: ஸமாநா: ஸுதாஸ்ததா। உ௯
ஶ்ருத்வா தத் வசநம் தேஷாம் கதிம் ராகவநந்தந॥
ஶைலேந்த்ர தேவதாஸ்ஸர்வா: ஸம்ப்ராப்தாஸ்ஸுரா: ததா। ௩௰
ததஸ்ஸர்வாணி ஸர்வேஷாம் கதிஞ்ச தேவதா:।
ஸர்வபாபக்ஷயம் ஸர்வம் காகுத்ஸ்த! ஸஹராகவ:॥ ௩௦

இதி ஶ்ரீமத்ராமாயணே பாலகாண்டே பஞ்சத்ரிம்ஶ: ஸர்க:.

அத ஷட்த்ரிம்ஶ: ஸர்க:.

ப்ருச்சாமஸ்த்வாம் மஹாபாகா ஸமிதோ ரகுநந்தந!।
நக்ஷத்ரபதிஸங்காஶம் ஶிதிகண்டம் மஹாதேஜஸா॥ ௧
பர்வதஸ்ய க்ருதவிஸ்தாரம் பஶ்சிமம் ஹிமவதோ கிரி தேஜஸா।
விஸ்தாரம் மஹீதலே யேந வாஸ்யா உபஸ்தாபித:। ௨
கந்யாஸ்தஸ்ய ஸுதா வீர்யவந்தோ மஹாந்தஶ்ச।
தேஷாம் ஸா ஶ்ரீமதாம் ஸா ஸம் ஹ்ருஷ்டி காருண்யகம்॥ ௩
பர்வதாத் ப்ரஸ்ருதாத் ஸம் ஸஹஸா யஜ்ஞகாலவி।
ஹிமவாந் ஶைலராஜஸ்ய யஜ்ஞஸ்ய பார்ஹ:।
ஸம்பந்நம் ஸ்ருஷ்டா ரூபேணாப்ரதிமேண மஹாதநா।
யதாஸ்ராய வஸ்து ச ஜமாம் ஸுமத்யமா:। ௫
ஸ வாதம் விஸ்ருஜ்யாஸ்து ஶைலேஶம் மஹாத்யுதி:।
ப்ராவஹ்ருதி நரஶ்ரேஷ்ட! தேந ராஜ்ஞா விஶோதித:। ௬
தேவத்ருஷ்டாந்வரேஷாம் விஶாலவக்ஷோமஹாத்ம:।
பத்நீம் மஹாதேஜா நிஶாமஜவஶ்யக। ௭
ஸ தம் ப்ரதக்ஷிணம் க்ருத்வா பஶ்யா சாபி நிராமயம்।
விஸ்ருஜ்ய பரிவவ்ரு வாஜிஸஹஸ்ராமேவ ச। ௮
நிஶாமஶ்சந்த்ர த்யக்த்வா ப்ரத்யாக்ஷமாம்ஶுமதோ வச:।
ஶ்ருத்வாஸ்ய! க்ருதாஞ்ஜலீ ஸஹாஸ்ய: ஶ்ருத்வேஷ்யஸி। ௯
தஸ்ய தத்வசநம் ஶ்ருத்வா ஸ்ருஷ்டிதேவ நிஶாமஜா:।
யதாக்ரமம் யதாந்யாயம் ப்ருஷ்டம் ஸம்ப்ரவக்ஷ்யத:। ௧௦

வந்திருக்கிறாய்; யாங்கள் யார் தெரியுமா உனக்கு? ஸகர சக்ரவர்த்தியின் பிள்ளைகள்; இதற்காகவே வந்திருக்கிறோம்; இரு இரு (விடுகிறதில்லை உன்னை)" என்றுஞ் சொல்லினார்கள். உரு

ரகுநந்த! கபிலமுனிவரானவர், அந்த ஸகரபுத்ரர்கள் சொன்னதைக் கேட்டு, அப்பொழுது மிக்கசினங்கொண்டு ஹூம் என்றார். உகூ

காகுத்ஸ்த! மிக்க நல்லஸ்வபாவமுடையராய், மஹாப்ரபாவமுடையரா யுள்ள கபிலமுனிவரால் அவரதுகோபாக்நிகொண்டு ஸகரபுத்ரரெல்லோரும் சாம்பற்குவியலாகச் செய்யப்பட்டார்கள். ௩0

நாற்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

நாற்பத்தோராவது ஸர்க்கம்.

ரகுநந்த! ஸகரமன்னவர், (தமது) பிள்ளைகள் (குதிரையைத்தேடப்)போய் வெகுகாலமானதைத்தெரிந்துகொண்டு, தன்னொளியினால் ப்ரகாசிக்கின்ற (தம்) பேரனை அம்சுமானை (நோக்கி)ச் சொன்னார்:— க

"(நீ) வல்லவனும் வித்யைகளைக்கற்றுணர்ந்தவனுமாயிருத்தலால்(உனது) பராக்ரமத்தினால் பெரியோருக்கு ஸமானனாயிருக்கிறாய்; (உனது சிறிய) தந்தைகள்போனவழியையும், குதிரையைத்திருடினவன் போனவழியையும் தேடிவர வேண்டும். உ

மிக்கவலியவைகளாய்ப் பூமிக்குள்ளிருக்கும் பெரிய ஜந்துக்களைக் கொல்வதற்காக நீ வாளோடுகூட வில்லை யெடுத்துக்கொள் (புறப்படு); ௩

நீ, மேன்மைவைக்கவேண்டியவர்களை மேன்மைபடுத்தி, இடையூறு செய்கின்றவர்களை வதைத்துக் கார்யத்தை முடித்துக்கொண்டு, எனது யாகத்தை நிறைவேற்றுகின்றவனாய்த் திரும்பிவரவேண்டும்." ச

மிக்கதைர்யமுள்ள ஸகரரால் இவ்வாறு நன்றாய்ச்சொல்லப்பட்ட அம்சுமான், வில்லையும்வாளையும் எடுத்துக்கொண்டு வெகுவேகமாய்ப் புறப்பட்டார். ரு

புருஷோத்தம! (ராம!) அந்த ஸகரவேந்தரால் தூண்டப்பட்ட அவ்வம்சுமான்(தமது)சிறியதந்தைகளாற் பூமிக்குள்வெட்டப்பட்டவழியைத் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தார். சு

மிக்க விக்ரமமுடையரான அம்சுமான், தைத்யர்கள் தாநவர்கள் ராக்ஷஸர்கள் என்பவர்களாலும், பிசாசர்கள் கருடர்கள் நாகர்கள் என்பவர்களாலும் பூஜிக்கப்பட்டதாயுள்ள திக்கஜத்தைக்கண்டார். எ

அவ்வம்சுமான், அந்தத்திசையானையை வலம்வந்து (அதன்) க்ஷேமஸமாசாரத்தைக்கேட்டுவிட்டு "எனது (சிறிய) தந்தைகளையும், குதிரையைத்திருடிக்கொண்டுபோனவனையும் நீ (பார்த்தாயா என்று) வினவினார். அ

திக்கஜமும் அவ்வம்சுமான்மொழிகேட்டு "அஸமஞ்சனது பிள்ளையாகிய அம்சுமானே! நீர் சீக்ரமாய்க்கார்யத்தைப்பூர்த்திசெய்துகொண்டுகுதிரையோடு கூடிவருவீர்" என்றுவிடையில் மொழிந்தது. கூ

அத்திசையானையின் அம்மொழிகேட்டு, எல்லாத் திக்குயானைகளையும் க்ரமந்தவறாது சாஸ்த்ரந்தவறாது கேட்கத்துவங்கினார். க0

[illegible]
[illegible] கக
தேஷாம் தத்வசநம் ச்ருத்வா ஜநாஸ் ஸர்வே [illegible]
[illegible] யத்ர [illegible] கஉ
ஸ [illegible]
[illegible] கங
[illegible]
[illegible] கச
ஸ தேஷாம் ராஜபுத்ராணாம் [illegible] ஜலக்ரியாம்
[illegible] கரு
[illegible]
[illegible]! *[illegible] கசு
ஸ [illegible] கஎ
[illegible]! [illegible] லோக [illegible]
[illegible]
[illegible]! [illegible] கஅ
[illegible]!
[illegible]! பித்ருணாம் [illegible] ஜலக்ரியாம்
[illegible]
[illegible] லோககாந்தயா
ஷஷ்டிம் வர்ஷஸஹஸ்ராணி ஸ்வர்கலோகம் நயிஷ்யதி உ௦
[illegible]! [illegible]!
யஜ்ஞம் பைதாமஹம் வீர! [illegible] உக
[illegible]
[illegible] உஉ
[illegible]!
[illegible] உங
[illegible] வாக்யம் [illegible]
யஜ்ஞம் [illegible] யதாகல்பம் யதாவிதி உச

*"[illegible]"

(பிறர் சொல்லுகிற) சொல்லையறிந்து பேசுவதில் வல்லமையுள்ளவர்களாகிய அத்திசையானைகளெல்லாவற்றாலும் மேன்மைபடுத்தப்பெற்று, "(நீர்) கார்யத்தைப் பூர்த்திசெய்துகொண்டு குதிரையோடுகூடி (உமது நகரம்) போய்ச்சேருவீர்" என்று சொல்லப்பட்டார். ௧௧

அந்தத் திக்கஜங்களின் அம்மொழியைக் கேட்டு வேகமாய்நடந்து, ஸகர புத்ரர்களாகிய தம் (சிறிய) தந்தைகள் சாம்பற் குவியலாய்க் கிடந்தவிடம் போய்ச்சேர்ந்தார். ௧௨

அப்பொழுதே (அதாவது குதிரைபோன உடனே) துக்கித்துக்கொண்டிருந்த அஸமஞ்ச புத்ரரான அவ்வம்சுமான், அந்தச் சிறியதந்தைகளின் வதத்தைக்கண்டதனால் மிகவும் வருந்திப் பரிதபித்துக் கதறினார். ௧௩

துக்கத்தோடு அழுதுகொண்டிருக்கும் ஆண்சிங்கமாகிய அம்சுமான், அங்கு கொஞ்சந்தூரத்திற் புல் மேய்ந்துகொண்டிருக்கும் யாகக்குதிரையையுங் கண்டார். ௧௪

மிக்க பராக்ரமமுடைய அவ்வம்சுமான், அவரது சிறிய தகப்பன்மார்களான ஸகரபுத்ரருக்குத் தர்ப்பணஞ்செய்ய தீர்த்தம் வேண்டி குளத்தைத் தேடினார்; ஒரு குளமும் அகப்படவில்லை. ௧௫

ராம! பிறகு, வெகுதூரம் வரையில் உற்றுப்பார்க்கையில், பறவைமன்னராய், வாயுவை நிகர்த்தவராய், (தமது சிறிய) தகப்பனார்களின் மாமாவாயுள்ள கருடனைக்கண்டார். ௧௬

மஹாபலமுடைய அந்தக்கருடன், இந்த அம்சுமானைப்பார்த்தொரு வாக்யஞ்சொன்னார்:— ௧௭

"ஆண்சிங்கமாகிய அம்சுமானே! நீ வ்யஸநப்படவேண்டாம்; (உனது சிறிய தந்தைகளின்) இவ்வதம், உலகத்தின் நன்மைக்காக ஏற்பட்டது; விசேஷங்களையுணர்ந்த அம்சுமானே! மிக்கவலியவர்களான உனது இச்சிறிய தந்தையர், அளவிட முடியாத ப்ரபாவமுள்ள கபிலரால் பஸ்மமாகச்செய்யப்பட்டார்கள்; உலகத்திற் செய்கிறபடி இவர்களுக்கு நீ தர்ப்பணஞ் செய்யக்கூடாது; ௧௮

மாநவரேறே! ஹிமவானுக்கு மூத்தபெண் கங்கையென்றொருவளிருக்கிறாள்; மஹாபலமுடையவனே! அந்தக் கங்கையின் தீர்த்தத்தில் (உன் சிறிய) தந்தையர்க்குத் தர்ப்பணஞ் செய்யவேண்டும்; ௧௯

சாம்பற்குவியலாகச் செய்யப்பட்ட இவ்வீரர்களை உலகத்தைப் பரிசுத்தமாகச்செய்யும் கங்கை (தனது தீர்த்தத்தால்) நனைப்பாள்; இந்தச் சாம்பற்குவியலானது உலகங்கள் விரும்பப்பெற்ற அந்தக் கங்கையின் தீர்த்தத்தால் நனைக்கப்பட்டு அறுபதினாயிரம் பிள்ளைகளையும் வானுலகமடைவிக்கும்; ௨0

புருஷர்களிற் சிறந்து மஹா பாக்யம் பெற்ற அம்சுமானே! அந்தக் குதிரையை (மாத்ரம்) ஓட்டிக்கொண்டு போவாய்; வல்லவனே! (உனது) பாட்டனாரான ஸகரருடைய யாகத்தைப் பூர்த்தி செய்விப்பாய்." ௨௧

மிக்கவல்லவரும் மிக்கபுகழ் பெற்றவருமாகிய அவ்வம்சுமான் கருடபகவானுடைய சொல்லைக்கேட்டு குதிரையை பிடித்துக்கொண்டு விரைவில் (தமது நகரத்திற்கு) வந்துசேர்ந்துவிட்டார். ௨௨

ரகுநந்தந! பிறகு யாகத்தில் நியமத்தோடுகூடியிருக்கும் (ஸகர)ராஜரிடம் வந்து, தம்சிறியதந்தைகள்விஷயமாக நடந்தஸமாசாரத்தையும், கருடபகவான் சொன்னசொல்லையும் நடந்ததுநடந்தபடி தெரிவித்தார். ௨௩

(ஸகர)ராஜரும், பயங்கரமாய் அம்சுமான்சொன்ன வம்மொழியைக்கேட்டு க்ரமந்தவறாது சாஸ்த்ரந்தவறாது யாகத்தைச்செய்து முடித்தார். ௨௪

[illegible]
[illegible] ௨௫
[illegible]
[illegible] ௨௬

[illegible]

[illegible] ஸர்க:

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible] ௨
[illegible]
[illegible] ௩
*[illegible]
[illegible] ௪
†[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible] ௬
[illegible]
[illegible] ௭
[illegible]
[illegible] ௮
[illegible]
[illegible] ௯
[illegible]
[illegible] ௧௦

* " [illegible] " † " [illegible] "

பெருஞ்செல்வமுடைய (ஸகர) வேந்தர், யாகத்தைச்செய்து முடித்து தமது பட்டணம்போய்ச் சேர்ந்தார்; கங்கையைக்கொண்டு வருவதற்கு உபாய மென்னவென்று வெகுவிதமாய் ஆலோசித்தும் அறியவில்லை. ௨௫

(ஸகர)மஹாராஜர், வெகுகாலம்வரையில் ஆலோசித்தும் (அதற்கு) உபாய மொன்றும் புலப்படாது, முப்பதினாயிரம்வர்ஷம் ராஜ்யபரிபாலனம்பண்ணி ஸ்வர்க்கஞ்சென்றார். ௨௬

நாற்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

நாற்பத்திரண்டாவது ஸர்க்கம்.

ராம! ஸகரர் காலஞ்செல்கையில் மந்த்ரிஜனங்கள், மிக்கதர்மிஷ்டரான அம்சுமானை ராஜாவாகச்செய்யவெண்ணினார்கள். ௧

ரகுநந்தந! அவ்வம்சுமான், பெரியராஜாவாக ஆனார். அவ்வம்சுமானுக்கு திலீபரென்ற சிறந்த ஒரு பிள்ளையுண்டானார். ௨

ரகுநந்த! (அம்சுமான்,) அந்தத்திலீபரிடத்தில் ராஜ்யத்தை ஒப்பிவித்து விட்டு, (சாம்பலாய்க்கிடக்கும் தம் சிறியதந்தையர்களைக் கங்கையைக்கொண்டு வந்து நற்கதியடைவிப்பதற்காக) பாவத்தைப் போக்கும் ஹிமவத்பர்வதத்தின் சிகரத்தில் வெகுபயங்கரமாய்த் தவஞ்செய்தார். ௩

ராம! அந்த அம்சுமான், தவத்தையே பொருளாகநினைத்து வானஞ்சென்று முப்பத்திரண்டாயிரவர்ஷம் தவஞ்செய்து மிக்கபுகழ்பெற்று ஸ்வர்க்க மடைந்தனர். ௪

திலீபமஹாராஜரும் (தமது சிறிய) பாட்டன்மார்க்குநேர்ந்த அபம்ருத்யுவைக்கேட்டு, மனம்வருந்தி, இன்னது செய்யவேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளவில்லை. ௫

"எவ்வாறு கங்கையை (பூமியில்) இறங்கச்செய்வேன்! அவர்கட்கு எவ்வாறு தர்ப்பணஞ்செய்வேன்! இவர்களை எவ்வாறு நற்கதியடைவிப்பேன்" என்று எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டிருந்தார். ௬

ஆத்மதத்வத்தையுணர்ந்த அந்தத் திலீபமஹாராஜர், அவ்வாறு நாடோறும் சிந்தித்துக்கொண்டிருக்கையில், மிக்க தர்மிஷ்டராய்ப் பகீரதரென்ற ஒருபிள்ளை அவருக்கு உண்டானார். ௭

மிக்க பராக்ரமமுடைய திலீபமன்னவரும் அநேக யாகங்களைச்செய்தார். முப்பதினாயிரவர்ஷம் அரசாண்டார். ௮

ஆண்சிங்கமே! (ராம!) (திலீப) வேந்தர், அந்த ஸகரபுத்ரர்களின் கடைத்தேறுதலைப்பற்றிய உபாயமின்னதென்பதைத் தெரிந்துகொள்ள முடியாமல் அந்த வருத்தத்தாலேயே காலஞ்சென்றார் ௯

புருஷச்ரேஷ்டராகிய (திலீப)ராஜர் (அவரது) புத்ரரான பகீரதருக்கு ராஜ்யத்தைக்கொடுத்து பட்டங்கட்டிவிட்டு, தாம்செய்த (புண்ய)கர்மத்தைக் கொண்டே இந்த்ரலோகஞ்சென்றார். ௰

[illegible]
[illegible]
[illegible] கங
[illegible]
[illegible] கச
[illegible]
[illegible]
[illegible] கரு
[illegible]
[illegible]
[illegible]
[illegible] கசு
[illegible]
[illegible] கஎ
[illegible]
[illegible] கஅ
[illegible]
[illegible] ககூ
[illegible]
[illegible] உ௦
[illegible]
[illegible] உக
[illegible]
[illegible] உஉ
[illegible]
[illegible] உங
[illegible]
[illegible] உச
[illegible]
[illegible] உரு
[illegible]

ரகுநந்தன! மிக்கவல்லவராய்த் தர்மத்திலேயே நிலைநின்றவராய ராஜர்ஷி யாயிருக்கும் பகீரதரும் பிள்ளையில்லாதிருந்ததனால் பிள்ளையுண்டாகக்கோரி னார். அவ்வாறு புதல்வரில்லாதிருந்த அப்பகீரதர், அந்த ராஜ்யத்தை மந்த்ரி களிடத்தில் ஒப்புவித்துவிட்டு, கங்கையைக்கொண்டுவரவேண்டுமென்றெண் ணினார். கங

ரகுநந்தன! அந்தப் பகீரதர், ஐம்புலன்களையும் வென்று, கைகளை உயர வெடுத்து, பஞ்சாக்நிமத்யத்தில் நின்று, மாஸத்திற்கொருமுறை புசித்துக் கொண்டு, கோகர்ணமென்கிற ஹிமவத்பர்வதத்தின் சிறியகுன்றில் கொடிதான தவஞ்செய்துகொண்டிருந்தார். கச

மஹாபலமுடைய ராம! அந்தப்பகீரதர் உக்ரமாய்த் தவஞ்செய்கையில் ஆயிரவர்ஷங்கள் சென்றன. எல்லாவற்றையுமுணர்ந்த, வல்லமைபெற்று, எல்லாஜநங்களுக்கும் பர்த்தாவாகிய ப்ரஹ்மதேவர், மிக்கதைர்யமுடைய அந் தப் பகீரதமன்னவரைக்கண்டு மிகவும் ஸந்தோஷமடைந்தார். கரு

பின்னர் ப்ரஹ்மதேவர், வானவர்கூட்டங்களோடுகூடி அருகில்வந்து, பிறகு, மிக்க தைர்யத்தோடு தவஞ்செய்துகொண்டிருக்கும் பகீரதரைக்கண்டு "பகீரதமன்னவ! மஹாபாக்யமுடையவ! நீ செய்த பெருந்தவத்தால் யான் உன்னிடத்து ஸந்தோஷமடைந்தேன்; (வேண்டிய) வரத்தைக் கேள்; (கொடு க்கிறேன்)" என்று சொன்னார். கசு

மஹாதேஜஸ்ஸையுடையவராய், மஹாபாக்யமுடையவராயுள்ள பகீரதர், அஞ்சலிஹஸ்தராய் அருகில்வந்துநின்றுகொண்டு அந்தப் ப்ரஹ்மாவைப் பார்த்துச் சொன்னார்:— கஎ

"ஸ்வாமி! என்னிடத்து உமது ப்ரீதியும், யான் செய்த தவத்திற்குப் பயனும் இருக்குமாயின் ஸகரபுத்ரர்களெல்லோரும் என்னிடத்துத் தர்ப்ப ணம் பெறவேண்டும்; கஅ

மஹாத்மாக்களான என் (தந்தையின்) பிதாமஹர்களான ஸகரபுத் ரர்கள் மாண்டசாம்பலாகிய கங்கையின் தீர்த்தம் வந்து நனைத்தவுடனே அவர்களெல்லோரும், நித்யமாயுள்ள ஸ்வர்க்கஞ்சேரவேண்டும்; ககூ

ஸ்வாமி! எங்களுக்கு ஸந்ததியையுங் கொடுக்கவேண்டும்; இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்தவர்களின் குலம் மேன்மேலும் விருத்தியடையவேண்டும்; எனக்குவேண்டியது இந்தச்சிறந்த வரந்தான்." உ0

எல்லாவுலகங்கட்கும் பாட்டனான ப்ரஹ்மதேவர், இவ்வாறுசொன்ன (பகீரத)மன்னவரைப்பார்த்து, அக்ஷரங்கள் இனியவையாயிருப்பதால் மதுரமா யிருக்கும் ஒருசுபமான வாக்யத்தை உத்தரமாகவுரைத்தார்:— உக

"பகீரத! மஹாரத! இக்ஷ்வாகுகுலத்தை விருத்திசெய்கின்றவ! உனது இந்தக்கோரிக்கை, நீ கோரினபடியே உண்டாகும்; உனக்குமங்களமுண்டாகுக;

இதோ ஹிமவானது அருகில் ஹிமவானுடைய மூத்தபெண்ணான கங்கை, உனது இஷ்டப்படி நடக்க ஸித்தமாயிருக்கிறாள்; அந்தக்கங்கையைத் தரிப்ப தற்கு சிவபிரான்வல்லவர்; அதுபற்றி அவரைக்கேட்டுக்கொள்; உஉ

வல்லவனும்வெற்றிபெற்றவேந்த! கங்கையின் விழுதலைப் பூமி பொறுக்க மாட்டாது; அந்தக்கங்கையைச் சிவபிரான்தவிர மற்றொருவரும் தரிக்கவல்ல ரல்லரென்று நான் நினைக்கிறேன்." உங

ப்ரஹ்மதேவர், அந்தப்பகீரதருக்கு இவ்வாறு சொல்லி, ("கங்கே! நீ பகீர தனிஷ்டப்படி நடக்கவேண்டும்" என்று) கங்கைக்கும் சொல்லிவிட்டு, தேவர்க ளின் கூட்டங்களோடுகூட ஸ்வர்க்கலோகம் போய்ச்சேர்ந்தார். உச

நாற்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

[illegible]

நாற்பத்துமூன்றாவது ஸர்க்கம்.

ராம! தேவர்கட்கெல்லாம் நாதராகிய அந்தப் ப்ரஹ்மதேவர் புறப்பட்டுப் போனபின்பு அந்தப் பகீரதவேந்தர், தம் கட்டைவிரலால் பூமியில் நின்றுகொண்டு, (கங்கையைச் சிவபிரான் தரிக்கும்பொருட்டு) ஓராண்டு தவம்புரிந்தார்.

பின்னர் ஓராண்டு நிரம்பவே, எல்லாவுலகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட உமாப்பதி பார்வதிநாதராய்ப் பசுபதியாயிருக்குஞ் சிவபெருமானானவர் (பகீரத) னுளைப்பார்த்து, "வேந்தே! உன்னைக்கண்டு நான் களிப்படைந்தவனாயினேன்; உனக்கு நன்மையைச் செய்யவேண்டும்; கங்கையை நான் சிரஸினால் தரிக்கிறேன்" என்ற இம்மொழியைக் கூறினார். ௩

ராம! பிறகு, எல்லாவுலகங்களாலும் வணங்கப்பெற்றவளாயுள்ள ஹிமவானது மூத்தமகளாகிய கங்கை தனதுவுருவத்தை (அதாவது வெள்ளத்தை) மிகவும் அதிகமாகச்செய்துகொண்டு ஆகாசத்தினின்று சிவபிரான் சிரஸில் இறங்கினாள். ௪

அந்தக்கங்காதேவி, மிகவுங் கர்வமடைந்து "(நமது) வெள்ளத்தினால் (இந்த) சங்கரனை இழுத்துக்கொண்டு (பகீரதனிஷ்டம்படி) பாதாளலோகம் போய்ச்சேரவேண்டும்" என்று கருதினள். ௫

முக்காலங்களையுமுணர்ந்து முக்கண்ணராகி விளங்கும் சிவபெருமானும், அந்தக்கங்கை கர்வங்கொண்டிருக்கிற ஸங்கதியை அத்தருணமே தெரிந்துகொண்டு, (அவளைத்தமது சிரஸிலேயே) அடக்கிவிடக் கருதினார். ௬

ராம! அந்தக்கங்கையானவள், ஜடையென்னுங் குகையையுடையதாய், ஹிமவத்பர்வதத்திற்கொப்பானதாய், பரிசுத்தமாயுள்ள சிவபிரான் சிரஸில் வந்துவிழுந்தாள். ௭

அக்கங்கை (அச்சிவபிரான்சிரஸினின்று)பூமியில்வர பலவாறாகமுயன்றும் வல்லவளாயிலள். (சிவபிரானது)ஜடைக்குள் அகப்பட்டுக்கொண்டதனால், வெளியிற்புறப்படவேயில்லை. ௮

(கங்கா)தேவி, அச்சிவபெருமானது சிரஸிலேயே அநேகவர்ஷஞ் சுழன்றுகொண்டிருந்தாள். அந்தக்கங்கை காணாமற்போகவே (பகீரதானவர்) மறுபடியும் (சிவபிரானைநோக்கி) பெருந்தவம்புரிந்தார். ௯

ரகுநந்தந! இந்தப்பகீரதர்செய்ததவத்தால் பரமசிவன் மிகவுங்களித்து கங்கையைச் சடையினின்று பிந்துஸரஸில்விட்டார். ௧௦

அவ்வாறு பிந்துஸரஸில் விடப்பட்டகங்கை, (அந்தப் பிந்துஸரஸினின்று) ஏழுநதிகளாக ஆனாள். ௧௧

(அவைகளில்)புண்யமானதீர்த்தத்தையுடையவைகளாகி அழகாய்விளங்கும் 'ஹ்லாதிநீ, பாவநீ, நளிநீ" என்னும் மூன்றுநதிகள் கிழக்குமுகமாய்ச்சென்றன.

அழகான தீர்த்தத்தையுடையவைகளாயுள்ள "ஸுசக்ஷுஸ், ஸீதா, மஹாநதியாகிய ஸிந்து" என்னுமிம்மூன்றுநதிகளும் மேற்குமுகமாய்ச்சென்றன. ௧௨

[illegible]
[illegible]
[illegible] கச
[illegible]
[illegible] கரு
[illegible]
[illegible] க௬
[illegible]
[illegible] கஎ
[illegible]
[illegible] கஅ
[illegible]
[illegible] க௯
[illegible]
[illegible] உ0
[illegible]
[illegible] உக
[illegible]
[illegible] உஉ
[illegible]
[illegible] உ௩
[illegible]
[illegible] உச
[illegible]
[illegible] உரு
[illegible]
[illegible] உ௬

---

* " [illegible] "

பிறகு, வேகத்தில் குறைவதாகிய அந்தக்கங்கை, பகீரதராஜனைத்தொடர்ந்துபோனாள். ராஜர்ஷியாகிய மஹாப்ரபாவம்பெற்ற பகீரதர், திவ்யமான ரதத்தின்மீதேறிக்கொண்டு முன்னேபோனார். அவருக்குப்பின், கங்கை தொடர்ந்து போனாள். கச

(கங்கை) ஆகாசத்திலிருந்து சிவபிரான்திருமுடிசென்று அங்கிருந்து பூமியைச்சென்றடைந்ததும் அந்தக்கங்கையின் ஜலமானது பெரியகோஷத்தோடு கூடி வேகமாய் ஓடிற்று. கரு

அப்பொழுது மீன்களும் ஆமைகளும் முதலைகளும் மற்றுமுள்ள ஜலஜந்துக்களும் அந்த ஜலத்தோடுகூட வந்துகொண்டிருந்ததனால் பூமியானது வெகு அழகாய் விளங்கிற்று. கசு

பிறகு தேவர்களும், ருஷிகளும், கந்தர்வர்களும், ஸித்தர்களும், ஆகாசத்தினின்று பூமியிற்சென்று அப்பகீரதனைத்தொடர்ந்துவரும் கங்கையை வேடிக்கையாய்ப் பார்த்தார்கள். கஎ

அந்தக்கங்கை பகீரதனைத்தொடர்ந்துசெல்லும்போது, பெரியபட்டணங்களுக்கொப்பான விமானங்களின்மீதும், குதிரைகளின்மீதும், பெரியயானைகளின்மீதுமேறிக்கொண்டு, (வேடிக்கைபார்ப்பதற்காக) பலதேவதைகள் வந்திருந்தார்கள். கஅ

உலகத்தில் அதியாச்சர்யகரமாய்க் கங்காஜலம் விழுவதைப்பார்ப்பதற்காகப் பெரிய தேவதைகளெல்லாம் கூட்டங்கூடினார்கள். ககூ

அவ்வாறு கூட்டங்கூடியவரும் அந்தத்தேவர்களாலும் அவர்களின் ஆபரணகாந்தியினாலும், ஆகாசமானது மேகங்களற்று, அநேகஸூர்யர்கள்கூடி உதிக்கப்பெற்றதுபோல ப்ரகாசித்தது. உ0

அப்போது, முதலைகள் பாம்புகள் என்பவைகளின் கூட்டங்களாலும், துள்ளுகின்ற மீன்களாலும் ஆகாசமானது மின்னற்கொடிகளால் நிரம்பியது போலும். உக

ஜலம் வேகமாய்ப்பெருகுதலால் பலவாறுகத்தெறித்து வெளுத்து விழும் நுரைகளால் ஆகாசமானது ஹம்ஸங்கள்கூடி சரத்காலத்து மேகங்கள் உதிக்கப்பெற்றதுபோலும். உஉ

(கங்கையின் ஜலமானது) சிலவிடங்களில் வெகுவேகமாய், சிலவிடங்களில் கோணலாய், சிலவிடங்களில் நேராய், சிலவிடங்களில் மேலாக்கிளம்பியதாய், சிலவிடங்களில் மெதுவாய்ப்போயிற்று. உங

சிலவிடங்களில் ஜலத்தின்மீது ஜலம்மோதிக்கொள்ளுகிறதால் அடிக்கடி உயரவெழும்பிப் பூமியில்விழுந்துசென்றது. உச

அப்போது அந்தக்கங்கையின் ஜலமானது முதலில் சிவபெருமானது திருமுடியில் விழுந்து அங்கிருந்து பூமியில்விழுந்ததனால், அழுக்கெல்லாம்போய் நிர்மலமாய்ப் ப்ரகாசித்தது. உரு

அப்போது தேவர்களும், ருஷிகளும், கந்தர்வர்களும், மற்றும் பூமியிலுள்ளவர்களும், சிவபிரானது திருமுடியினின்றுவிழுந்த கங்காதீர்த்தத்தைப் பாவத்தைப்போக்குவதாக நினைத்து ஸ்பர்சித்தார்கள். உசு

[illegible]
[illegible] உஎ
[illegible]
[illegible] உஅ
[illegible]
[illegible] உகூ
[illegible]
[illegible] ௩௦
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௩௧
[illegible]
[illegible] ௩௨
[illegible]
[illegible] ௩௩
[illegible]
[illegible] ௩௪
[illegible]
[illegible]
[illegible] ௩௫
[illegible]
[illegible] ௩௬
[illegible]
[illegible]
[illegible] ௩௭
[illegible]
[illegible] ௩௮
[illegible]
[illegible] ௩௯
[illegible]
[illegible] ௪௦
[illegible]

[illegible]

சாபத்தினால் ஆகாசத்தினின்று பூமியில் விழுந்து கெட்டவர்களும், அந்தக் கங்கா தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்ததனால் பாவமற்றவர்களாயினர். ௨௭

பிறகு, நிர்மலமாயுள்ள அந்தத் தீர்த்தத்தால் தமது பாவத்தையொழித்து, மீளவும் ஆகாசமார்க்கஞ்சென்று, தம்முலகங்களுக்குப்போய்ச்சேர்ந்தனர். ௨௮

எல்லாஜநங்களும், நிர்மலமாயுள்ள அந்தக் கங்கையின் தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்து ச்ரமத்தைப்போக்கிக்கொண்டு மிகவுங்களித்தனர். ௨௯

ராஜர்ஷியாகிய பகீரதரும் திவ்ய ஸ்யந்தநமுடையவராய் முன்னே போனார். அவருக்குப்பின், கங்கையும் தொடர்ந்துபோனாள். ௩௰

ராம! தேவர்கள், ருஷிகணங்கள், தைத்யர்கள், தாநவர்கள், ராக்ஷஸர்கள், கந்தர்வர்கள், பெரியபெரியயக்ஷர்கள், கிந்நரர்கள், நாகர்கள், அப்ஸரஸ்ஸ்த்ரீகள் ஆகிய எல்லோரும், பகீரதருடன்போகும் கங்கைக்குப்பின் வேடிக்கை பார்த்துக்கொண்டுபோனார்கள்; ஜலஜந்துக்களும் அப்படியேபோய்க்கொண்டிருந்தன. ௩௨

பாபத்தைப்போக்கி நதிகளிற்சிறந்து பெரும்புகழ்பெறும் கங்கை,பகீரதர் போனவழியிலேயே போனாள். ௩௩

பிறகு, ஆச்சர்யகரமான செய்கைகொண்டு மஹாப்ரபாவம்பெற்ற ஜஹ்நுமஹர்ஷி தவஞ்செய்துகொண்டிருக்கையில், கங்கை(தனது ஜலத்தால்) அவரது யாகசாலையை முழுகச்செய்துவிட்டாள். ௩௪

ராகவ! தவஞ்செய்துகொண்டிருந்த அந்த ஜஹ்நுமஹர்ஷி, அந்தக்கங்கை கர்வங்கொண்டிருத்தலை அறிந்து சினங்கொண்டவராகி, மிக்கவியப்புறத்தும் கங்கையின் ஜலத்தையெல்லாம் குடித்துவிட்டார். ௩௫

பிறகு தேவர்களும் கந்தர்வர்களும் ருஷிகளும் மிகவும் ஆச்சர்யப்பட்டு, மஹாப்ரபாவமுடையராய்ப் புருஷர்களிற்சிறந்தவராயுள்ள ஜஹ்நுமஹர்ஷியினிடம்வந்து ("ஸ்வாமி! தயைசெய்துகங்கையை உமது பெண்ணாகவெண்ணிவெளியிடவேண்டும்" என்றுசொல்லி) மேன்மைபடுத்தி, மஹாத்மாவாகிய அவருக்குக் கங்கையைப் பெண்ணாகயேற்படுத்தினார்கள். ௩௭

பிறகு! மஹாப்ரபாவமுள்ள ஜஹ்நுமஹர்ஷியானவர் மனமிறங்கி, (தமது) காதுவழியாய் (அந்தக்கங்கையை) வெளியில்விட்டார். ஆதலாற்றான், அக்கங்கையானவள் ஜஹ்நுமஹர்ஷியின்பெண்ணாய் "ஜாஹ்நவீ" (ஜஹ்நுவின்பெண்) என்று சொல்லப்படுகிறாள். ௩௮

பிறகு, சிறந்தநதியாகிய கங்கையானவள் பகீரதரதம்போகும் வழியிலேயேபோய், ஸமுத்திரஞ்சென்று, அந்தப் பகீரதமுயற்சி நிறைவேறுதற்காக பாதாளலோகம் போய்ச்சேர்ந்தாள். ௩௯

ராஜர்ஷியாகியபகீரதரும் பஹுப்ரயத்நப்பட்டு கங்கையைக்கொண்டுவந்து, சாம்பலாய்க்கிடக்கும் பாட்டன்மாரை மனவருத்தத்தோடு காணலானார். ௪௰

ரகுவம்சத்தாரிற்சிறந்த ராம! பிறகு கங்கையின் அந்தச்சிறந்த தீர்த்தம் வந்து அந்தச்சாம்பற்குவியலை நனைக்கவே ஸகரபுத்ரர் அறுபதினாயிரம் பேரும் பாவமற்று ஸ்வர்க்கத்தையடைந்துவிட்டார்கள். ௪௧

நாற்பத்துமூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

[illegible]

[illegible]
[illegible] க
[illegible]
[illegible] உ
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible] ௬
[illegible]
[illegible] ௭
[illegible]
[illegible] ௮
[illegible]
[illegible] ௯
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௧
[illegible]
[illegible] ௧௨

* "[illegible]."

நாற்பத்து நான்காவது ஸர்க்கம்.

அப்போது அந்தப்பகீரதமன்னவர், கங்கையை அழைத்துக்கொண்டு ஸமுத்ரவழியாய்ப் பாதாளலோகத்தையடைந்து, அங்கு ஸகரபுத்ரர்கள் சாம்பலாய்க்கிடக்குமிடத்திற்குப் போய்ச்சேர்ந்தார். க

பிறகு, (ஸகரபுத்ரர்கள்மாண்டுகிடக்கும்) சாம்பலைக் கங்கையின் ஜலத்தைக்கொண்டு (பகீரதர்) நனைக்கும்போது, எல்லாவுலகங்களுக்கும் ப்ரபுவாகிய ப்ரஹ்மதேவர் வந்து (பகீரத)மன்னவரைப்பார்த்து இம்மொழியைக் கூறினார்:— உ

ஆண்சிங்கமான பகீரத! மஹாத்மாவாகியஸகரனது அறுபதினாயிரம்பிள்ளைகளும் கடைத்தேறி, தேவர்கள்போலாய்த் தேவலோகத்தை யடைந்தார்கள்; ௩

மன்னவ! கடல்நீர் உலகத்தின்கண் இருக்கிறவரையில் ஸகரனது புதல்வர் வானவர்களை நிகர்த்து வானுலகில் வாழ்வார்கள்; ௪

அவ்வளவுமாத்ரமேயல்லாமல் இந்தக் கங்கையும் உனக்கு மூத்த பெண்ணென்று ப்ரஸித்திபெற்று, உனது பெயரினால் ப்ரக்யாதியடைந்து விளங்குவாள்; ௫

வேந்தே! மூவழிகளிற் சென்று மேன்மை பெறுகின்ற கங்கையானவள் (ப்ரீதியுடன் கூடி உன்னைத்தொடர்ந்து வந்ததனால்) *"பாகீரதீ" என்றும், (ஸ்வர்க்கம், பூமி, பாதாளம் என்னும்) மூவழிகளிற்சென்றதனால் † "த்ரிபதகா" என்றும் சொல்லப்படுவாள்; ௬

பகீரத வேந்தே! இங்கு உன் பாட்டன்மாரெல்லோர்க்கும் தர்ப்பணஞ்செய்; நீ செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றிக்கொள்; ௭

ராஜ! தர்மிஷ்டர்களிற் சிறந்து பெரும்புகழ் பெற்றவனாகிய அந்த ஸகரனாலும் இவ்வெண்ணம் அடையப்பெறவில்லை; ௮

அப்ப! உலகத்தில் ஒப்பில்லா வல்லமையுடைய அம்சுமானும் கங்கையைக்கொண்டுவர கருதியும் செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றிக்கொள்ளவில்லை;

பாவமற்று மஹாபாக்யம்பெற்ற பகீரத! ராஜர்ஷியாய், சிறந்த குணங்களையுடையவனாய், மஹர்ஷிகளுக்கொப்பான ப்ரபாவமுடையவனாய், எனது தவத்தைநிகர்த்ததவமுடையவனாய், க்ஷத்ரியதர்மந்தவறாதவனாய், மிக்கபராக்ரமமுடையவனாகியுள்ள உன் தந்தையான திலீபனாலும் கங்கையைக்கொண்டுவர முடியாமற்போய்விட்டது; கக

மானவரேறே! அந்தப் ப்ரதிஜ்ஞையை நீதான் நிறைவேற்றினாய்; (அதனால்) உலகத்திற் பெரியோர்களெல்லாம் ஒப்புக்கொள்ளும்படியான சிறந்த கீர்த்தியை நீ அடைந்துவிட்டாய்; கஉ

---

* "பாகீரதி" என்பதற்குத் தாத்பர்யம், "பகீரதனது பெண்" என்பது.

† "த்ரிபதகா" என்பதற்குத் தாத்பர்யம் "மூன்று வழிகளிற் செல்லுகிறவள்" என்பது.

𑌯𑌚𑍍𑌚 𑌗𑌙𑍍𑌗𑌾𑌵𑌤𑌰𑌣𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌕𑍃𑌤𑌮𑌰𑌿𑌨𑍍𑌦𑌮 ।
𑌅𑌨𑍇𑌨 𑌚 𑌭𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯𑌾𑌯𑌤𑌨𑌂 𑌮𑌹𑌤𑍍 । ௧௩
𑌪𑍍𑌲𑌾𑌵𑌯𑌸𑍍𑌵 𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌨𑌰𑍋𑌤𑍍𑌤𑌮 𑌸𑌦𑍋𑌚𑌿𑌤𑍇 ।
𑌸𑌲𑌿𑌲𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰 𑌶𑍁𑌚𑌿𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌫𑌲𑍋 𑌭𑌵 । ௧௪
𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌸𑌲𑌿𑌲𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑍍 ।
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑍍𑌵𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌗𑌮𑍍𑌯𑌤𑌾𑌂 𑌨𑍃𑌪 । ௧௫
𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌵𑍇𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃 ।
𑌯𑌥𑌾𑌗𑌤𑌂 𑌤𑌥𑌾𑌗𑌚𑍍𑌛𑌦𑍍𑌦𑍇𑌵𑌲𑍋𑌕𑌂 𑌮𑌹𑌾𑌯𑌶𑌾𑌃 । ௧௬
𑌭𑌗𑍀𑌰𑌥𑌸𑍍𑌤𑍁 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌿𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑌲𑌿𑌲𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌂 𑌯𑌥𑌾𑌨𑍍𑌯𑌾𑌯𑌂 𑌸𑌾𑌗𑌰𑌾𑌣𑌾𑌂 𑌮𑌹𑌾𑌯𑌶𑌾𑌃 ।
𑌕𑍃𑌤𑍋𑌦𑌕𑌃 𑌶𑍁𑌚𑍀 𑌰𑌾𑌜𑌾 𑌸𑍍𑌵𑌪𑍁𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌵𑍇𑌶 𑌹 ।
𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑍋 𑌨𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌸𑍍𑌵𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌶𑌶𑌾𑌸 𑌹 । ௧௭
𑌪𑍍𑌰𑌮𑍁𑌮𑍋𑌦 𑌚 𑌲𑍋𑌕𑍋𑌽𑌪𑌿 𑌨𑍃𑌪𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌰𑌾𑌘𑌵 ।
𑌨𑌷𑍍𑌟𑌶𑍋𑌕𑌃 𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑍋 𑌬𑌭𑍂𑌵 𑌵𑌿𑌗𑌤𑌜𑍍𑌵𑌰𑌃 । ௧௮
𑌏𑌷 𑌤𑍇 𑌰𑌾𑌮 𑌗𑌙𑍍𑌗𑌾𑌯𑌾 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍋𑌽𑌭𑌿𑌹𑌿𑌤𑍋 𑌮𑌯𑌾 ।
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌹𑌿 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌤𑍇 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌕𑌾𑌲𑍋𑌽𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । ௨௦
𑌧𑌨𑍍𑌯𑌂 𑌯𑌶𑌸𑍍𑌯𑌮𑌾𑌯𑍁𑌷𑍍𑌯𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍍𑌯𑌮𑌥𑌾𑌪𑌿 𑌚 ।
𑌯𑌃 𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑌤𑌿 𑌵𑌿𑌪𑍍𑌰𑍇𑌷𑍁 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍇𑌷𑍍𑌵𑌿𑌤𑌰𑍇𑌷𑍁 𑌚 ।
𑌪𑍍𑌰𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌪𑌿𑌤𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌦𑍈𑌵𑌤𑌾𑌨𑌿 𑌚 ।
𑌇𑌦𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌮𑌵𑍍𑌯𑌗𑍍𑌰𑍋 𑌗𑌙𑍍𑌗𑌾𑌵𑌤𑌰𑌣𑌂 𑌶𑍁𑌭𑌮𑍍 । ௨௨
𑌯𑌃 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿 𑌚 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌕𑌾𑌮𑌾𑌨𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑌾𑌪𑌾𑌃 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌆𑌯𑍁𑌃 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌵𑌰𑍍𑌧𑌤𑍇 । ௨௩

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇 𑌬𑌾𑌲𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌚𑌤𑍁𑌶𑍍𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌃 𑌸𑌰𑍍𑌗𑌃.

௪௫ 𑌪𑌞𑍍𑌚𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌃 𑌸𑌰𑍍𑌗𑌃.

𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌵𑌚𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌘𑌵𑌃 𑌸𑌹𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌃 ।
𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌮𑌥𑌾𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ।
𑌅𑌤𑍍𑌯𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾 ।
𑌗𑌙𑍍𑌗𑌾𑌵𑌤𑌰𑌣𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌸𑌾𑌗𑌰𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑍂𑌰𑌣𑌮𑍍 । ௨
𑌤𑌸𑍍𑌯 𑌸𑌾 𑌶𑌰𑍍𑌵𑌰𑍀 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌮𑌮 𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑌿𑌣𑌾 𑌸𑌹 ।
𑌜𑌗𑌾𑌮 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌨𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌕𑌥𑌾𑌂 𑌶𑍁𑌭𑌾𑌮𑍍 । ௩

பகைவர்களை வெல்லுகின்றவ! நீ கங்கையை இறக்கிக்கொண்டு வந்ததனால் எக்காலும் சிறந்த தர்மத்தை அடைந்தவனாக ஆய்விட்டாய்; ௧௩
மனிதர்களிற் சிறந்தவ! (பகீரத!) எப்போதும் ஸ்நாநஞ்செய்யத்தக்கதான (இந்தக்கங்கையின்) தீர்த்தத்தில் நீ ஸ்நாநஞ்செய்; பரிசுத்தனாய்ப் புண்யமான பலன்களையடைவாய்; ௧௪
மன்னவ! பாட்டன்மாரெல்லோர்க்கும் தர்ப்பணஞ்செய்; நான் போய்வருகிறேன்; உனக்கு நன்மையுண்டாகுக; உனது பட்டணம்போய்ச்சேர்." ௧௫
தேவர்களுக்கெல்லாம் ஈசராய் எல்லா வுலகங்கட்கும் பாட்டனாராய்ப் பெரும்புகழ் பெற்றவராயுள்ள ப்ரஹ்மதேவர் இவ்வாறு சொல்லிவிட்டு வந்தபடி தேவலோகம்போய்ச்சேர்ந்தார். ௧௬
ரகுச்ரேஷ்ட! (ராம!) ராஜர்ஷியாய்ப் பெரும்புகழ்பெற்றவராயுள்ள பகீரத ராஜரும், க்ரமந்தவராமலும் சாஸ்த்ரந்தவராமலும் ஸகரபுத்ரர்களுக்கு உத்தமமான தர்ப்பணத்தைச்செய்து, (மற்றுமுள்ள தம்பெரியோர்கட்கும்) தர்ப்பணஞ்செய்து சுத்தராகி, தாம் கோரிவந்த கார்யத்தை நிறைவேற்றிக்கொண்டு தமது பட்டணம்போய்ச்சேர்ந்து தமது ராஜ்யத்தை வெகு அழகாய்ப் பரிபாலனம் பண்ணிவந்தார். ௧௮
ராகவ! ஜனங்கள், அந்தப் பகீரதரை ராஜாவாகப்பெற்று மிக்க ஸந்தோஷமடைந்தன. துக்கமற்று, பொருள்நிரம்பி, நோயற்று விளங்கின. ௧௯
ராம! கங்கையின் வரலாற்றை யெல்லாம் இவ்வாறு உனக்கு நான் விரிவாய்ச் சொல்லிவிட்டேன்; உனக்கு நன்மையுண்டாகுக; ஸாயங்காலமாய்விடுகிறது; (இனி கதை கேட்கவேண்டாம்.) ௨௦
பொருள், புகழ், ஆயுள், ஸந்ததி, ஸ்வர்க்கம் என்பவைகளைத்தருவதான கங்கை பூமிக்கு இறங்கிவந்ததைப்பற்றிய அழகான இந்தக்கதையை ப்ராஹ்மணருக்கும் க்ஷத்ரியருக்கும் எவன் சொல்லுகிறானோ அவனது தந்தைகளும் தேவதைகளுங் களிக்கின்றனர். ௨௨
காகுத்ஸ்த! (இதை) கேட்கிறவனும், எல்லாக்கோரிக்கைகளையும் அடைவான்; எல்லா பாவங்களும் ஒழிந்துவிடும்; ஆயுளும் புகழும் பெருகும்." ௨௩

நாற்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

நாற்பத்தைந்தாவது ஸர்க்கம்.

பிறகு, விச்வாமித்ரர் சொன்ன கதையை ராகவர் லக்ஷ்மணரோடுகூடிக் கேட்டு, மிக்க ஆச்சர்யமடைந்து விச்வாமித்ரரைப்பார்த்து, "கங்கை(பூமியில்) இறங்கி வந்ததைப்பற்றியதும், (அவள் தனது வெள்ளத்தால்) கடலை நிரப்பியதைப்பற்றியதுமான நீர் சொல்லிய இச்சிறந்த கதையானது பாவத்தைப்போக்குவதும் அதி ஆச்சர்யகரமாயுமிருக்கிறது" என்று சொல்லினர். ௨
விச்வாமித்ரர்சொன்ன அழகான கதையை நினைத்துப்பார்த்ததனால் அந்த ராமலக்ஷ்மணர்களுக்கு அன்றிரவுமுழுதும் (க்ஷணம்போல்) போய்விட்டது. ௩

[illegible]

பிறகு, விடியற்காலத்தில் எழுந்திருந்து, செய்யவேண்டிய நித்யகடமைகளைச்செய்து முடித்திருக்கும் விச்வாமித்ரமஹாமுநிவரைப் பார்த்து, பகைவர்களை யடக்கின்றவராகிய ராகவர், (மேல்வரும்) வாக்யத்தைச் சொன்னார்:— ௪

"மஹர்ஷியே! ஆச்சர்யகரமாயுள்ள சிறந்தகதையைக்கேட்டதனால் இரவு முழுதும் நல்லபொழுதாய்ப் போயிற்று; நீர்சொல்லிய இந்தக்கதையை நினைத்துப்பார்த்ததனால் எங்களுக் கின்றிரவுமுழுதும் க்ஷணம்போலாய்விட்டது. ௫

நதிகளிற்சிறந்து பாபத்தைப்போக்கும் கங்காநதியைத் தாண்டுவோம்; தேவரீர் இங்குவந்திருக்கிற ஸங்கதியைத் தெரிந்துகொண்டு, புண்யாத்மாக்களான ருஷிகள் ஸுகத்வதைத்தரும்படியான ஆஸநத்தைப்போட்டு சீக்ரமாய் அனுப்பிய ஓடமானது இதோவந்து ஸித்தமாயிருக்கிறது." ௭

அவ்விச்வாமித்ரர், மஹாத்மாவான ராகவர் சொன்ன அம்மொழியைக் கேட்டு, ராமலக்ஷ்மணர்களையும் அழைத்துக்கொண்டு அந்தப்படகின்மீதேறிக்கொண்டு அக்கங்கையைத்தாண்டினார். ௮

அவர்கள் (கங்கையின்)வடகரைசென்று,(அங்கிருக்கும்) ருஷிகணங்களைப் பூஜித்து, அப்போது கங்கையின்கரையில் உட்கார்ந்து, விசாலை என்னும் பட்டணத்தைப்பார்த்தார்கள். ௯

பிறகு, (விச்வாமித்ர)மஹாமுநிவர், ஸ்வர்க்கத்தை நிகர்த்து அழகாய்விளங்கும் பெருமைபெற்ற (அந்த)விசாலாநகரத்திற்கு ராகவரோடுகூடி சீக்ரமாய்ப்போனார். ௰

பிறகு, விசேஷங்களை அறிந்தவர்களுள் மேன்மைபெற்றவராகிய ராமர் அஞ்சலிஹஸ்தராகி விச்வாமித்ரமுநிவரைப்பார்த்து, "மஹாமுநிவரே! இந்த விசாலாநகரத்தில் எந்தராஜாவின்வம்சத்தார் வாஸஞ்செய்கிறார்?(இதை)கேட்க விரும்புகிறேன்; உமக்குமங்களமுண்டாகுக;(இதைக்கேட்பதில்)எனக்கு மிகுந்த குதூஹலமுண்டாயிருக்கிறது" என்று, விசாலை என்கிற உத்தமபட்டணத்தின் மஹாத்ம்யத்தை (சொல்லும்படி)கேட்டார். ௧௨

அந்தராமர்சொன்ன அம்மொழியை (விச்வாமித்ர)மஹாமுநிவர் கேட்டு அந்த விசாலாநகரத்தைப்பற்றிய பழையவரலாற்றை (எல்லாம்) சொல்லத் தொடங்கினார்:— ௧௩

"ராம! இந்த்ரன்விஷயமாக நடந்த அழகானகதையை நான் சொல்லுகிறேன்கேள்; ராகவ! இந்தத்தேசத்தில்நடந்தகதையையெல்லாம் நடந்தபடியே சொல்லுகிறேன், கேள்: ௧௪

ராம! மஹாபாக்யமுடையவ! முன்பு க்ருதயுகத்தில், திதி என்பவளுக்கு மிக்கபலமுடைய பிள்ளைகள் (அஸுரர்கள்) பிறந்தார்கள். அதிதி என்பவளுக்கு மிக்கவல்லமைசாலிகளும் மிக்கதார்மிஷ்டர்களுமான பிள்ளைகள் (தேவர்கள்) பிறந்தார்கள். ௧௫

நரச்ரேஷ்ட! பின்பு, மிக்கதைர்யமுடைய அவ்வஸுரர்கட்கும், தேவர்கட்கும் "நாம் என்னசெய்தால், சாவில்லாதவர்களும் கிழத்தனமில்லாதவர்களும் நோயில்லாதவர்களுமாயிருப்போம்" என்கிறவெண்ணமுண்டாயிற்று. ௧௬

தேஷாம் சிந்தயதாம் ராம! புத்திராஸீந்மஹாத்மநாம்।
க்ஷீரோதம் மதநம் க்ருத்வா ரஸம் ப்ராப்ஸ்யாம தத்ர வை॥ ௧௭
ததோ நிஸ்சித்ய மதநம் யோக்த்ரம் க்ருத்வா ச வாஸுகிம்।
மந்தாநம் மந்தரம் க்ருத்வா மமந்துரமிதௌஜஸ:। ௧௮

[[illegible]

ராம! மிக்கவுதார்யமுடைய அஸுரர்களும் தேவர்களும் அவ்வாறு ஆலோசித்துக்கொண்டிருக்கையில், "நாம் க்ஷீரஸமுத்ரத்தைக்கடைந்து, அதினின்று வெளியாகும் ரஸமான அம்ருதத்தைப்பெறவேண்டும்; (அதனால் நமது கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ளவேண்டும்)" என்று அவர்களுக்குப் புலப்பட்டது. ௧௭

பிறகு, மிக்க பராக்ரமமுடைய அஸுரர்களும் தேவர்களும், (பாற்கடலை) கடையவேண்டுமென்று நிச்சயித்து, வாஸுகியைக்கயிறாகவும் மந்த்ரபர்வதத்தை மத்தாகவுஞ் செய்துகொண்டு கடையத்தொடங்கினார்கள். ௧௮

பாலயாத்மாநமாத்மநா! திவிஜைஸ்ஸ்ருஜேத் ஸ்ருஷ்டி|
ஜதி ப்ரோக்தா ஸ்ரேஷ்டிகேஶ: காலேம ருத்ரோபதேஶத:|
பூர்வம் ப்ரஷ்டத் ஸ்ரஷ்டா ஸம்ஹேஶ்ய தேந்த்ராதயோ ஸுரா:|
பூர்ணாஶும் ச லோகாநாம் ஹஸ்தேநாக்ரம்ய கேஶவ:||
தேவாநாம் அம்ருதம் தத்வா தத்ர ...]
அத வர்ஷஸஹஸ்ரேண ஸதண்டஸ் ஸகமண்டலு:|
பூர்வம் தந்வந்தரிர்நாம அப்ஸராஶ்ச ஸுவர்சஸ:|| ௧௯
அப்ஸு நிர்மதநாதேவ ரஸாத்தஸ்மாத் வரஸ்த்ரிய:|
உத்பேதுர்மநுஜஶ்ரேஷ்ட! தஸ்மாதப்ஸரஸோ(அ)பவந்| உ௦
ஷஷ்டி: கோட்யோ(அ)பவம்ஸ்தாஸாமப்ஸரஸாம் ஸுவர்சஸாம்|
அஸங்க்யேயாஸ்து காகுத்ஸ்த! யாஸ்தாஸாம் பரிசாரிகா:| உ௧
ந தா: ஸ்ம ப்ரதிக்ருஹ்ணந்தி ஸர்வே தே தேவதாநவா:|
அப்ரதிக்ரஹணாத்தாஶ்ச ஸர்வா: ஸாதாரணா: ஸ்ம்ருதா:| உ௨
வருணஸ்ய தத: கந்யா வாருணீ ரகுநந்தந!|
உத்பபாத மஹாபாகா! மார்கமாணா பரிக்ரஹம்|| உ௩
திதே: புத்ரா ந தாம் ராம! ஜக்ருஹுர்வருணாத்மஜாம்|
அதிதேஸ்து ஸுதா வீர! ஜக்ருஹுஸ்தாமநிந்திதாம்|| உ௪

பிறகு ஆயிரவருஷமானபின்பு தண்டத்தையும் கமண்டலுவையும் தரித்து "தந்வந்தரி" என்றவர் முதலில் வெளியானர். மிக்க அழகுடைய "அப்ஸரஸ்" என்ற ஸ்த்ரீகளும் வெளியாயினர். ௧௯

மாநவரேறே! ஜலரூபமாயிருக்கும் பாலைக்கடைந்ததனால் வெளியான ஸாரத்திலிருந்துண்டானதால் அவர்களுக்கு "அப்ஸரஸ் ஸ்த்ரீகள்" என்றுபெயர். உ௦

காகுத்ஸ்த! இவ்வாறு மஹா ஸௌந்தர்யமுள்ளவர்களாய் அறுபதுகோடி அப்ஸரஸ் ஸ்த்ரீகள் உண்டானார்கள். அவர்களுக்குப் பணிசெய்தற்காக உண்டான ஸ்த்ரீகளைக் கணக்கிடமுடியாது. உ௧

அந்தப் பணிப்பெண்களை தேவர்கள் அஸுரர்கள் என்பவர்களில் ஒருவராவது பரிக்ரஹஞ் செய்யவில்லை. அப்படி ஒருவரும் பரிக்ரஹஞ்செய்யாததனால் அவர்கள் ஸாதாரண ஸ்த்ரீகளாய்விட்டார்கள். உ௨

ரகுநந்த! பிறகு, மஹாபாக்யமுடையளாகிய வருணனுடைய பெண்ணான "வாருணி" என்பவள், "யாராவது என்னைக் கைப்பற்றுங்கள்" என்று சொல்லிக்கொண்டு வெளியானள். உ௩

ராம! திதியின் புத்ரர்கள், அந்த வாருணியைக் கைப்பற்றவில்லை; வீர! மிக்க அழகுடைய அவ்வாருணியை அதிதியின் புத்ரர்கள், கைப்பற்றினார்கள். உ௪

[illegible]
[illegible] உ௫
[illegible]
[illegible] உ௬
[illegible]
[illegible] உ௭
[illegible]
[illegible] உ௮
[illegible]
[illegible] உ௯
[illegible]
[illegible] ௩௦
[illegible]
[illegible] ௩௧
[illegible]
[illegible] ௩௨

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே த்வாத்ரிம்ஶ: ஸர்க:.

---

௩௩ த்ரயஸ்த்ரிம்ஶ: ஸர்க:.

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible] ௨
[illegible]
[[illegible]]
[illegible] ௩

---

* "[illegible]."

ஆதலால்தான், திதியின் பிள்ளைகளை "அஸுரர்கள்" என்றும், அதிதியின் பிள்ளைகளை (தேவர்களை) "ஸுரர்கள்" என்றும் சொல்லுவது வழக்கம். வாருணியைக் கைப்பற்றினதனால் தேவர்கள், மகிழ்ச்சியடைந்து ஸந்தோஷமுடையவர்களாயினர். ௨௫

புருஷோத்தம! (ராம!) பின்பு, "உச்சைச்ச்ரவஸ்" என்னுஞ் சிறந்த குதிரையும், "கௌஸ்துபம்" என்னுஞ் சிறந்த ரத்னமும், உண்டாயின; அதன்பிறகு ஸுரர்களுக்கு ஸௌரியப்ரதமான அம்ருதமும் உண்டாய்விட்டது. ௨௬

ராம! பிறகு, அந்த அம்ருதத்தை எடுத்துக்கொள்ளுவதைப்பற்றி, தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் பெரிய சண்டை யுண்டாய்விட்டது; பின்பு, தேவர்கள், அஸுரர்களை அதிகமாய்க் கொன்றார்கள். ௨௭

வீர! (ராம!) அஸுரர்களெல்லோரும் ராக்ஷஸர்களையும் ஸஹாயமாக வைத்துக்கொண்டார்கள்; மூவுலகங்களும் கிடுகிடென்று நடுங்கும்படி பயத்தை விளைக்கும் பெரிய சண்டை யுண்டாய்விட்டது. ௨௮

அந்த யுத்தத்தில் அநேகம்பேர் மாண்டுவிடவே, மஹாபலமுடைய விஷ்ணுவானவர், மோஹத்தை விளைக்கும்படியான மாயாரூபத்தைத் தரித்து, அம்ருதத்தைக் கொண்டுபோய்விட்டார். ௨௯

அழிவில்லாதவராய், புருஷோத்தமராய், மிக்க வல்லவராயுள்ள விஷ்ணுவானவர், தம்மை எதிர்த்துவந்தவர்களையெல்லாம் பலமற்றவர்களாகச்செய்துவிட்டார். (அல்லது சரணாகதி செய்தவர்களையெல்லாம் ரக்ஷித்தார்.) ௩௦

அஸுரர்களுக்கும் தேவர்களுக்கும் நடந்த பயங்கரமான அந்தப் பெரிய சண்டையில், வல்லவர்களாகிய தேவர்கள், அஸுரர்களை அதிகமாய்க் கொன்றார்கள். ௩௧

இந்த்ரனானவன், (அம்ருதத்தையும் வாங்கிக்கொண்டு) அஸுரர்களையும் கொன்று, ராஜ்யத்தையடைந்து களித்து, ருஷிகணங்கள் சாரணர்கள் முதலியவர்களால் நிரம்பிய உலகங்களைப் பாதுகாத்துவந்தான். ௩௨

நாற்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

நாற்பத்தாறுவது ஸர்க்கம்

ராம! அந்தப்பிள்ளைகள் (அஸுரர்கள்) மாண்டுவிடவே திதியானவள் மிகவும் துக்கித்தவளாய், மரீசருடைய புத்ரரும் தனது பர்த்தாவுமாகிய காச்யபரைப் பார்த்து இவ்வாக்யத்தைச் சொன்னாள்:— ௧

"ஸ்வாமி! மிக்கபலமுடைய உமது பிள்ளைகள் (தேவர்கள்) என்பிள்ளைகளை (அஸுரர்களை) க்கொன்றுவிட்டார்கள்; (ஆதலால்) இந்த்ரனைக்கொல்லுவதற்காக, மிகுந்த தவத்தையே வலிவாகப்பெற்ற ஒரு குழந்தையை (உம்மிடத்தினின்றுபெற்று) நான் விரும்பிக்கொண்டிருக்கிறேன். ௨

அதைப்பற்றி நான் தவஞ்செய்யப்போகிறேன்; இந்த்ரனைக்கொல்லும் வல்லமைபொருந்திய ஒரு குழந்தையை எனக்கு நீர் கொடுக்கவேண்டும்; நான் தவஞ்செய்யப்போவதற்காக நீர் உத்தரவுகொடுக்க வேண்டும்." ௩

[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible] ௬
[illegible]
[illegible] ௭
[illegible]
[illegible] ௮
[illegible]
[illegible] ௯
[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible] ௧௧
[illegible]
[illegible] ௧௨
[illegible]
[illegible] ௧௩
[illegible]
[illegible] ௧௪
[illegible]
[illegible] ௧௫
[illegible]
[illegible] ௧௬
[illegible]
[illegible]
[illegible] ௧௭

மஹாப்ரபாவமுள்ள காச்யபர், அந்தத் திதி கூறிய மொழியைக்கேட்டு, மிக்கதுக்கத்தோடு இருக்கும் திதியைப்பார்த்து பதிலுரைத்த விதமாவது:— ௪

"தவப்பொருளுடையவளே! நல்லது, அப்படியே ஆகட்டும்; நீ நல்ல ஆசாரமுடையவளாகி இரு; போரில் இந்த்ரனைக்கொல்லும்படியான குழந்தையைப் பெறுவாய்; ௫

நீ ஆயிரவர்ஷம் வரையில் நல்ல ஆசாரத்தோடு கூடி இருந்தாயாயின், மூவுலகங்களையும் பரிக்கும்படியான குழந்தையை என் அநுக்ரஹத்தால் பெறுவாய்" ௬

பிறகு, மஹாப்ரபாவமுடைய காச்யபர் அந்தத்திதிக்கு இவ்வாறுசொல்லி அவளைத் தமதுகையினால்தொட்டு தேறுதற்சொல்லி, நல்லதுபோய்வாவென்று சொல்லிவிட்டு, அவர் தவஞ்செய்யப்போய்விட்டார். ௭

புருஷோத்தம! (ராம!) அவ்வாறு காச்யபர்போனபிறகு, திதியானவள் மிக்க மகிழ்ச்சியடைந்தவளாகி "குசப்லவகம்"என்னும் ஆச்ரமத்திற்குப்போய்க் கடுந்தவம்புரிந்தாள். ௮

நரோத்தம! அவள் அவ்வாறு தவஞ்செய்கையில் இந்த்ரனானவன் அவளுக்குத் தக்கபடி பணிசெய்யலானான். ௯

இந்த்ரனானவன் அப்போது அவளுக்கு வேண்டிய அக்நி, தர்ப்பம், ஸமித், தீர்த்தம், பழம், கிழங்கு முதலியவையெல்லாம் கொண்டுவந்துகொடுத்தான். ௧௰

இந்த்ரனானவன், (அந்தத்திதிக்கு,) ச்ரமத்தைப்போக்கும்படியான உடம்பு பிடித்தல் முதலிய பணிவிடையாவும் எல்லாக்காலத்திலுஞ் செய்துகொண்டிருந்தான். ௧௧

ரகுநந்தந! திதி தன்தவத்தைமுடிக்கப் பத்துவர்ஷமிருக்கும்போது மிக்க ஸந்தோஷமடைந்தவளாய் இந்த்ரனைப்பார்த்துச் சொன்னாள்:— ௧௨

"இந்த்ர! மஹாத்மாவான உனது தந்தையினிடத்து (காச்யபரிடத்து) எனக்குப்பிள்ளையுண்டாகும்படி யாசித்துக்கொண்டேன்; ஆயிர வர்ஷத்திற்குள் பிள்ளையுண்டாகுமென்று எனக்கு அவர் வரங்கொடுத்திருக்கிறார்; ௧௩

மிக்கவலியவ! நான் தவத்தைச்செய்துமுடிக்க இன்னும் பத்துவர்ஷங்களே இருக்கின்றன; அதன்பின், நீ உனக்கொரு தம்பியுண்டாகக்காண்பாய்; உனக்கு நன்மையுண்டாகும்; ௧௪

குழந்தாய்! அந்தக் குழந்தை உன்னை வெல்லுவதிலேயேவிருப்பங்கொண்டிருந்தாலும், உன்னோடு நேசித்திருக்கும்படி அந்தக்குழந்தைக்கு நான் சொல்லுகிறேன்; மூவுலகங்களையும் வெல்லும் அந்தக்குழந்தையையும் வைத்துக்கொண்டு நீ மனக்கவலையெல்லாமொழித்து ஸுகமாக அரசுபுரிவாய்." ௧௫

திதிதேவியானவள் இவ்வாறு இந்த்ரனுக்குச் சொல்லிவிட்டு மத்யாஹ்ந வேளையில் தலைமாட்டில் காலைவைத்துக்கொண்டு தூங்கிவிட்டாள். ௧௬

அந்தத்திதிதேவி கால்மாட்டில்தலையும் தலைமாட்டில்காலுமாய்ப் படுத்துத் தூங்கினதனால் அபரிசுத்தையாயிருப்பதை இந்த்ரன்கண்டு, (இவள் கர்ப்பத்திலிருக்கிற குழந்தையை நாசஞ்செய்யத்தக்க தருணங்கிடைத்ததென்றெண்ணி) களித்துப் புன்னகைசெய்தான். ௧௭

[illegible]
[illegible] ௧௭
[illegible]
[illegible] ௧௮
[illegible]
[illegible] ௨௦
[illegible]
[illegible] ௨௧
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨௩

இதி ஸ்ரீமத்ராமாயணே பாலகாண்டே ஷட்பஞ்சாஸஸ் ஸர்க:.

அத ஸப்தபஞ்சாஸஸ் ஸர்க:.

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible] ௨
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible] ௫

ராம! இந்த்ரனானவன் மிக்கதைர்யமுடையனாய் அந்த்ரிதிதியின் சரீர த்வாரத்திற்புகுந்து, அவள்கர்ப்பத்திலிருந்த குழந்தையை ஏழு துண்டமாய் அறுக்கத்தொடங்கினான். ௧௮

பிறகு, நூறுகணுக்களையுடைய (இந்த்ரனது) வஜ்ராயுதத்தால் அறுக்கப் பட்ட கர்ப்பத்திலிருந்த குழந்தையானது இனிய ஸ்வரத்தோடுகூடி அழத் தொடங்கிற்று; அதனால் திதிதேவியானவள் விழித்துக்கொண்டாள். ௧௯

இந்த்ரனானவன், கர்ப்பத்திருந்த அந்தக்குழந்தையை அழவேண்டாம் அழவேண்டாம் என்று சொன்னான்; அந்தக்குழந்தை அழுவதற்கும் மனமிரங் காமல், மிக்கவலிப்படைந்து அதைத்துண்டித்தே விட்டான் ௨௦

(குழந்தையை) கொல்லவேண்டாம் கொல்லவேண்டாம் என்று இந்த்ரனை நோக்கி திதி சொன்னாள்; பிறகு, இந்த்ரனானவன், தாய் (திதிதேவி) சொன்ன சொல்லில் மேன்மைபாராட்டி வெளியில் வந்துவிட்டான். ௨௧

இந்த்ரனானவன் வஜ்ராயுதமும் கையுமாய் வெளியில்வந்து அஞ்சலிஹஸ்த னாய் நின்றுகொண்டு திதிதேவியைப்பார்த்து "அம்ம! நீர் அபரிசுத்தை யாய்க் கால்மாட்டில் தலையை வைத்துத் தூங்கிக்கொண்டிருந்தீர்; உமது கர்ப் பத்திலிருந்த குழந்தை வெளியானால் என்னைக்கொன்றுவிடுமென்று நான் பயந்து, நீர் அவ்வாறு அசுசியாயிருந்த ஸமயமறிந்து அந்தக்குழந்தையை ஏழாய்த்துண்டித்துவிட்டேன்; அம்ம! அந்தவிஷயத்தைப்பற்றி என்னி டத்தில் நீர் பொறுமைகொள்ளவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று சொன்னான். ௨௨

நாற்பத்தாறவது ஸர்க்கம் முற்றிற்று.

நாற்பத்தேழாவது ஸர்க்கம்.

கர்ப்பமானது ஏழுதுண்டுகளாய் வெட்டப்படவே திதியானவள் மிக்கது க்கமடைந்தவளாகி, வல்லவனான இந்த்ரனுக்குத் தேறுதலைச்சொல்லி, மேல் மொழிந்த மொழியாவது:— ௧

"இந்த்ர! வலஸூதன! எனது குற்றத்தால்தான் கர்ப்பமானது இவ்வாறு ஏழுதுண்டுகளாகச் செய்யப்பட்டு பயனற்றதாய் விட்டது; இது விஷயத்தில் உனது குற்றமொன்றுமில்லை. ௨

நீ ஏழுதுண்டுகளாகச் செய்துவிட்ட எனது கர்ப்பத்திற்கு ஒரு நன்மை யுண்டாகக் கோருகிறேன்; உன்னால் வெட்டப்பட்ட இவ்வேழுதுண்டுகளும் ஏழுகுழந்தைகளாய் வளர்ந்து ஸப்தமருத்துக்களின் உலகத்தைப் பாதுகாக்க வேண்டும்; ௩

குழந்தாய் (இந்த்ர!) என்னிடமுண்டான இவ்வேழு குழந்தைகளும் வாதா பிமானி தேவதைகளாகி, தேவரூபந்தரித்து, "மாருதர்கள்" என்று பெயர் பெற்று வானுலகில் இருக்கவேண்டும்; ௪

(அவைகளில்) ஒன்று ப்ரஹ்மலோகத்திலும், மற்றொன்று இந்த்ரலோகத் திலும், இன்னொன்று பெருமைபுகழ்பெற்று வாயுவென்று பெயருடையதாய் விஷ்ணுலோகத்திலும் ஸஞ்சரிக்கவேண்டும்; ௫

சத்வாரஸ்து ஸுரச்ரேஷ்ட! திசோ வை தவ சாஸநாத்|
ஸஞ்சரிஷ்யந்து பத்ரம் தே தேவபூதா மமாத்மஜா:|
த்வத்க்ருதேநைவ நாம்நா ச மாருதா இதி விச்ருதா:| ௬
தஸ்யாஸ்தத்வசநம் ச்ருத்வா ஸஹஸ்ராக்ஷ: புரந்தர:||
உவாச ப்ராஞ்ஜலிர்வாக்யம் திதிம் பலநிஷூதந:|
ஸர்வமேதத்யதோக்தம் தே பவிஷ்யதி ந ஸம்சய:|
விசரிஷ்யந்தி பத்ரம் தே தேவரூபாஸ்தவாத்மஜா:| ௮
ஏவம் தௌ நிச்சயம் க்ருத்வா மாதாபுத்ரௌ தபோவநே|
ஜக்மதுஸ்த்ரிதிவம் ராம! க்ருதார்தாவிதி ந: ச்ருதம்| ௯
ஏஷ தேச: ஸ காகுத்ஸ்த! மஹேந்த்ராத்யுஷித: புரா|
திதிம் யத்ர தப:ஸித்தாமேவம் பரிசசார ஸ:| ௧௦
இக்ஷ்வாகோஸ்து நரவ்யாக்ர! புத்ர: பரமதார்மிக:|
அலம்புஷாயாமுத்பந்நோ விசால இதி விச்ருத:| ௧௧
தேந சாஸீதிஹ ஸ்தாநே விசாலேதி புரீ க்ருதா| ௧௨
விசாலஸ்ய ஸுதோ ராம! ஹேமசந்த்ரோ மஹாபல:|
ஸுசந்த்ர இதி விக்யாதோ ஹேமசந்த்ராதநந்தர:| ௧௩
ஸுசந்த்ரதநயோ ராம! தூம்ராச்வ இதி விச்ருத:|
தூம்ராச்வதநயச்சாபி ஸ்ருஞ்ஜய: ஸமபத்யத| ௧௪
ஸ்ருஞ்ஜயஸ்ய ஸுத: ஸ்ரீமாந் ஸஹதேவ: ப்ரதாபவாந்|
குசாச்வ: ஸஹதேவஸ்ய புத்ர: பரமதார்மிக:| ௧௫
குசாச்வஸ்ய மஹாதேஜா: ஸோமதத்த: ப்ரதாபவாந்|
ஸோமதத்தஸ்ய புத்ரஸ்து காகுத்ஸ்த இதி விச்ருத:| ௧௬
தஸ்ய புத்ரோ மஹாதேஜா: ஸம்ப்ரத்யேஷ புரீமிமாம்|
ஆவஸத்பரமப்ரக்ய: ஸுமதிர்நாம துர்ஜய:| ௧௭
இக்ஷ்வாகோஸ்து ப்ரஸாதேந ஸர்வே வைசாலிகா ந்ருபா:|
தீர்காயுஷோ மஹாத்மாநோ வீர்யவந்த: ஸுதார்மிகா:| ௧௮
இஹாத்ய ரஜநீம் ராம! ஸுகம் ஸ்வப்ஸ்யாமஹே வயம்|
ச்வ: ப்ரபாதே நரச்ரேஷ்ட! ஜநகம் த்ரஷ்டுமர்ஹஸி| ௧௯
ஸுமதிஸ்து மஹாதேஜா விச்வாமித்ரமுபாகதம்|
ச்ருத்வா நரவரச்ரேஷ்ட: ப்ரத்யுத்கச்சந்மஹாயசா:| ௨௦

இந்த்ர! மற்ற நான்கும் உனதுகட்டளையில் அடங்கி திக்குக்களில் ஸஞ்சரிக்கட்டும்; என்னுடைய குழந்தைகள் இவ்வாறு தேவர்களாகட்டும்; உனக்கு நன்மையுண்டாகும்; நீ செய்தபெயர்கொண்டே "மாருதர்கள்" என்று ப்ரஸித்திபெற்றிருக்கட்டும்." ௬

ஆயிரக்கண்ணனும் வலாஸுரனைக் கொன்றவனுமுள்ள இந்த்ரனானவன் அந்தத் திதிதேவிசொன்னதைக்கேட்டு, அஞ்சலி ஹஸ்தனுய்த் திதிதேவியைப் பார்த்து, "(அம்ம!) நீர் சொன்னவை யெல்லாம் உமது இஷ்டப்படியே நடக்கும்; ஸந்தேஹமில்லை; உமது குழந்தைகள் தேவர்களாகவே ஸஞ்சரிக்கட்டும்; உமக்கு நன்மையுண்டாகுக" என்ற வாக்யத்தைச் சொன்னான். ௮

ராம! தாயும் பிள்ளையுமான அந்தத் திதிதேவியும் இந்த்ரனும், குசப்லவமென்கிற ஆச்ரமத்தில் இவ்வாறு ஏற்பாடுசெய்து இருவர்களும் கோரியதை நிறைவேற்றிக்கொண்டு தேவலோகம்போய்ச்சேர்ந்தார்கள்; இவ்வாறு நான் கதை கேட்டிருக்கிறேன். ௯

காகுத்ஸ்த! முன்காலத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த திதிதேவிக்கு இந்த்ரன் பணிவிடைசெய்துகொண்டிருந்த இடம் இதுதான். ௰

புருஷோத்தம! இக்ஷ்வாகுவுக்கு அலம்புஸையினிடத்தில், மிக்க தர்மிஷ்டராய் "விசாலர்" என்ற ஒரு பிள்ளைபிறந்தார். ௧௧

அவ்விசாலர்தாம் இவ்விடத்தில் "விசாலை" என்கிற இப்பட்டணத்தை ஏற்படுத்தினர். ௧௨

ராம! மிக்கபலமுடையராய் விசாலருக்கு "ஹேமசந்த்ரர்" என்ற ஒரு பிள்ளைபிறந்தார். ஹேமசந்த்ரருக்குப்பிறகு "ஸுசந்த்ரர்" என்ற பிள்ளை பிறந்தார். ௧௩

ராம! ஸுசந்த்ரருக்கு "தூம்ராச்வர்"என்ற பிள்ளைபிறந்தார். தூம்ராச்வருக்கு, "ஸ்ருஞ்ஜயர்" என்றவர் பிறந்தார். ௧௪

ஸ்ருஞ்ஜயருக்கு, மிக்க அழகுடையவராய் மிக்க பராக்ரமமுடையவராய் "ஸஹதேவர்" என்றவர்பிறந்தார். ஸஹதேவருக்கு, மிக்க தர்மிஷ்டராய் "குசாச்வர்" என்ற பிள்ளைபிறந்தார். ௧௫

குசாச்வருக்கு, மிக்க அழகும் பராக்ரமமும் பொருந்திய "ஸோமதத்தர்" என்றவர் பிறந்தார். ஸோமதத்தருக்கு, க்யாதிபெற்ற "காகுத்ஸ்தர்" என்ற பிள்ளைபிறந்தார். ௧௬

அந்தக் காகுத்ஸ்தருடைய பிள்ளையாகிய "ஸுமதி" என்கிறவர், மிக்க விக்ரமமுடையரும்,வெல்லமுடியாதவருமாய்த் தேவர்களையொத்து இவ்விசாலா நகரத்தை இப்போது அரசாண்டுவருகிறார். ௧௭

விசாலாநகரத்திலுள்ள எல்லா மன்னவர்களும் இக்ஷ்வாகுவின் அருள் பெற்று, வாழுள், வல்லமை, தைர்யம், அறம் என்பவைகள் மிகுந்து விளங்குகிறார்கள். ௧௮

ராம! இன்றிரவு இங்கு ஸுகமாயிருந்துவிட்டுக் காலையில் ஜநகமன்னனைப் பார்க்கப் போவோம்." ௧௯

மிக்க வல்லமையுற்று பெரும்புகழ்பெற்ற ஸுமதி மஹாராஜரும், விச்வாமித்ரர்வந்திருப்பதைக்கேட்டு, (அவரைப்பூஜிக்க) எதிர் கொண்டுவந்தார். ௨0

[illegible]

உபாத்யாயர்களோடும் பந்துக்களோடும் கூடி விச்வாமித்ரரிடம் வந்து, அவருக்கு, மேலான பூஜைசெய்து, க்ஷேமஸமாசாரத்தைவிசாரித்து, அஞ்ஜலி ஹஸ்தராகி, "ஸ்வாமி! முனிவரே! தேவரீர் எனது தேசத்திற்கு வந்ததினால் யான் தந்யனாய்விட்டேன்; உமது அநுக்ரஹத்தைப் பெற்றவனாய் விட்டேன்; உமது தர்சநமும் எனக்குக் கிடைத்ததே! எனக்கு இதைவிட பாக்யம் வேறில்லை" என்று சொன்னார். ௨௨

நாற்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

நாற்பத்தெட்டாவது ஸர்க்கம்.

ஸுமதி வேந்தரும் விச்வாமித்ரரும் அவ்விசாலா நகரத்தில் ஸந்தித்து ஒருவர்க்கொருவர் க்ஷேமஸமாசாரத்தை விசாரித்துக் கதைசொல்லிமுடிக்கும் பொழுது ஸுமதியானவர் (விச்வாமித்ர) மஹாமுனிவரைநோக்கி (மேல்வரும்) மொழியைச்சொற்றார்:— ௧

"(விச்வாமித்ர)முனிவரே! உமக்கு மங்களமுண்டாகுக; வானவர்களுக்கொப்பான வல்லமையுடையர்களாய், யானையையும் சிங்கத்தையும் நிகர்த்து நடக்கின்றவர்களாய், வீரர்களாய், புலியையும் காளையையும் நிகர்த்தவர்களாய், தாமரை இதழ்போன்று அகன்ற கண்களையுடையர்களாய், கத்தி அம்புறாத்தூணி வில் என்றவைகளைத்தரித்தவர்களாய், அழகினால் அச்விநீதேவதைகளை நிகர்த்தவர்களாய், யௌவநப்பருவங் கூடியவர்களாய், தற்செயலாகவே வானுலகினின்று மண்ணுலகிலிறங்கிவந்த வானவர்கள்போன்றவர்களாய், ஆகாசத்தைச் சந்த்ரஸூர்யர்கள் அலங்கரிக்கிறதுபோல் இவ்விடத்தை அலங்கரிக்கின்றவர்களாய், ஆகாரத்திலும் காம்பீர்யத்திலும் செய்கையிலும் ஒருவரையொருவர் நிகர்த்தவர்களாய், சிறந்த ஆயுதங்களைத் தரித்தவர்களாய், வல்லவர்களாய், புருஷோத்தமர்களாயுள்ள இவ்விரண்டு குமாரர்களும் எவ்வாறு கால்நடையாய் இவ்விடம்வந்தார்கள்? யாருக்கு என்ன செய்யவேண்டி வந்தார்கள்? நடக்க முடியாதவழியில் எதற்காக நடந்துவந்தார்கள்? (இதன்) உண்மையைக்கேட்க விரும்புகிறேன்." ௬

(விச்வாமித்ரரானவர்) அந்த ஸுமதிமன்னவர் சொன்ன சொல்லைக் கேட்டவராய், ஸித்தாச்ரமத்தில் வாஸஞ்செய்தது, ராக்ஷஸர்களை வதஞ்செய்தது முதலிய வரலாற்றையெல்லாம் நடந்தபடியே தெரிவித்தார். ௭

(ஸுமதி) வேந்தரானவர், விச்வாமித்ரர் சொன்னதைக்கேட்டு மிகவும் மகிழ்ந்தவராகி, பூஜிக்கத்தக்கவர்களாய், மிக்க பலமுடையவர்களாய், சிறந்த அதிதிகளாய்நேர்ந்த அத்தசரதபுத்ரர்களிருவர்களையும் தக்கபடிபூஜித்தார். ௮

பிறகு ராகவர்களிருவர்களும், ஸுமதிவேந்தர்செய்த சிறந்த விருந்தைப் பெற்று அவ்விசாலாநகரத்தில் ஓரிரவு தங்கியிருந்துவிட்டு, மறுநாள் மிதிலா பட்டணத்திற்குப் போனார்கள். ௯

அழகாய்விளங்கும் ஜநகரது மிதிலாபுரியை முனிவர்களனைவர்களுங் கண்டு "இப்பட்டணம் வெகு அழகாயிருக்கிறது" என்று அம்மிதிலாபுரியைப் புகழ்ந்தார்கள். ௰

[illegible]
[illegible]
[illegible]
[illegible] கஉ
[illegible]
[illegible] கங
[illegible]
[illegible] கச
[illegible]
[illegible] கரு
[illegible]
[illegible] கசா
[illegible]
[illegible]
[illegible]
[illegible] கஎ
[illegible]
[illegible] கஅ
[illegible]
[illegible]
[illegible] உக
[illegible]
[illegible] உஉ
[illegible]
[illegible] உங
[illegible]
[illegible]
[illegible]
[illegible] உரு

* [illegible] † [illegible]

அம்மிதிலாநகரத்தருகிலுள்ள ஒரு பூங்காவகத்தில், ஜநங்களின் நடமாட்டமற்றதாயினும் (புஷ்பம் முதலியவற்றால்) அழகாய் விளங்கும் ஒரு பழைய ஆச்ரமத்தை ராகவர்கண்டு (விச்வாமித்ர) மஹாமுனிவரைப்பார்த்து, "ஸ்வாமி! அழகாய் விளங்காநின்ற இவ்விடமானது ஆச்ரமம்போற் காணப்படுகிறதே! இது யாதுகாரணத்தால் முனிவர்களின்வாஸமற்றதாயிருக்கிறது? இந்தப்பழைய ஆச்ரமம் யாருடையது? (இதைக்) கேட்கவிரும்புகிறேன்" என்றுவினவினர். க௪

மிக்கமேன்மைபெற்றவரும் ஸ்வமதியிற்றுறைக்க வல்லவருமாகிய விச்வாமித்ர மஹாமுனிவர், ராகவர்சொன்ன அம்மொழியைக்கேட்டு, (அவருக்கு) விடையில் கூறலுற்றார்:— கரு

"ராகவ! ஸந்தோஷம், சினங்கொண்டு இவ்வாச்ரமத்தை இவ்வாறுசபித்த மஹாத்மாவை உனக்கு உண்மையாய்ச் சொல்லுகிறேன், கேள்: கசா

புருஷோத்தம! இவ்விடமானது அழகாய் விளங்கினதும் தேவர்களாலும் பூஜிக்கப்பெற்றதுமான மஹாத்மாவாகிய கௌதமருடைய ஆச்ரமம். கஎ

வேந்தர் புதல்வ! பெரும்புகழ்பெற்றவ! (ராம!) முன்பொருகாலத்தில் அந்தக்கௌதமர் அஹல்யையோடுகூடி இங்கு பலவாண்டு தவஞ்செய்தார். கஅ

சசியின் கணவனான இந்த்ரனானவன், அந்தக்கௌதமர் ஆச்ரமத்திலில்லாத தருணந்தெரிந்துகொண்டு, கௌதமவேஷம்பூண்டு அஹல்யையினிடம் வந்து, "மிக்க அழகுடையவளே! உன்னோடு நான் ஸங்கமஞ்செய்யக் கருதிக்கொண்டிருக்கிறேன்; அதைக்கோரி வருகிறவர்கள் ருதுகாலத்தை எதிர்பார்க்கமாட்டார்கள் (இப்போதே ஸங்கமஞ்செய்யவேண்டும்)" என்ற மொழியைக் கூறினன். ககூ

ரகுநந்தந! (அஹல்யையானவள்) இந்த்ரனை முனிவேஷந்தரித்து வந்திருக்கிறவனாகஅறிந்து, தேவேந்த்ரன் கிடைத்தானென்று மகிழ்ந்து, அறிவுகெட்டவளாகி (அவனிடத்தில்) விருப்பங்கொண்டாள். உ௦

பிறகு தனது கோரிக்கை நிறைவேறியதாகவெண்ணி, தேவேந்த்ரனைப் பார்த்து, "தேவர்களிற்சிறந்தவ! தேவேந்த்ர! ப்ரபு! எனது கருத்து கைகூடிவிட்டது; ஒருவருந்தெரியாமல் இவ்விடத்தினின்று சீக்ரமாய்ப் போய்விடும்; எல்லாவிதத்தாலும் உம்மையும் காப்பாற்றிக்கொண்டு என்னையுங் காப்பாற்றும்" என்று சொன்னாள். உக

இந்த்ரன் புன்னகையோடுகூடி அஹல்யையைப் பார்த்து, "ஸுந்தரி! நான் களித்தவனாயினேன்; வந்தபடியே போய்வருகிறேன்" என்ற இம்மொழியைக் கூறினன். உஉ

ராம! இவ்வாறு அவ்விந்த்ரன் அவ்வஹல்யையோடு ஸங்கமஞ்செய்து, கௌதமரிடத்துப் பயந்து, பரபரத்து அவ்வாச்ரமத்தினின்று வெளியிற் புறப்பட்டான். உ௩

பிறகு, தவமென்னும் பலத்தோடுகூடியவராய்த் தேவர்களாலும் அஸுரர்களாலும்வெல்லமுடியாதவராய்க் கொழுந்துவிட்டெரியும் அக்நிபோன்றவராய் முனிவர்களிற் சிறந்தவராயுள்ள கௌதமமஹாமுனிவர் சுத்தமானதீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்து, ஸமித்தையும் தர்ப்பையையும் எடுத்துக்கொண்டு அவ்வாச்ரமத்தினுள் வருகையில், அவனைக்கண்டான். உ௪

த்ருஷ்ட்வா ஸுரபதிஸ்த்ரஸ்தோ விஷண்ணவதநோऽபவத்। உ௫
அத த்ருஷ்ட்வா ஸஹஸ்ராக்ஷம் முநிவேஷதரம் முநி:॥
துர்வ்ருத்தம் வ்ருத்தஸம்பந்நோ ரோஷாத்வசநமப்ரவீத்।
மம ரூபம் ஸமாஸ்தாய க்ருதவாநஸி துர்மதே॥
அகர்தவ்யமிதம் தஸ்மாத்விபலஸ்த்வம் பவிஷ்யஸி। உ௭
கௌதமேநைவமுக்தஸ்ய ஸரோஷேண மஹாத்மநா।
பேததுர்வ்ருஷணௌ பூமௌ ஸஹஸ்ராக்ஷஸ்ய தத்க்ஷணாத்।
ததா ஶப்த்வா ச வை ஶக்ரம் பார்யாமபி ச ஶப்தவாந்। உ௮
இஹ வர்ஷஸஹஸ்ராணி பஹூநி நிவஸிஷ்யஸி।
வாயுபக்ஷா நிராஹாரா தப்யந்தீ பஸ்மஶாயிநீ।
அத்ருஶ்யா ஸர்வபூதாநாமாஶ்ரமே *ऽஸ்மிந்நிவத்ஸ்யஸி। ௩௰
யதா ஹ்யேதத்வநம் கோரம் ராமோ தஶரதாத்மஜ:।
ஆகமிஷ்யதி துர்தர்ஷஸ்ததா பூதா பவிஷ்யஸி। ௩௧
தஸ்யாதித்யேந துர்வ்ருத்தே †லோபமோஹவிவர்ஜிதா।
மத்ஸகாஶம் முதா யுக்தா ஸ்வம் வபுர்தாரயிஷ்யஸி। ௩௨
ஏவமுக்த்வா மஹாதேஜா கௌதமோ துஷ்டசாரிணீம்।
இமமாஶ்ரமமுத்ஸ்ருஜ்ய ஸித்தசாரணஸேவிதே।
ஹிமவச்சிகரே ரம்யே தபஸ்தேபே மஹாதபா:। ௩௩

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே அஷ்டசத்வாரிம்ஶஸ் ஸர்க்க:.

அத ஏகோநபஞ்சாஶஸ் ஸர்க்க:.

அபலஸ்து ததோ பூத்வா ஶக்ரஸ்த்வக்நிபுரோகமாந்।
அப்ரவீத்த்ரஸ்தவதநஸ் ஸர்ஷிஸங்காந் ஸசாரணாந்। ௧
குர்வதா தபஸோ விக்நம் கௌதமஸ்ய மஹாத்மந:।
க்ரோதமுத்பாத்ய ஹி மயா ஸுரகார்யமிதம் க்ருதம்। ௨
அபலோऽஸ்மி க்ருதஸ்தேந க்ரோதாத் ஸா ச நிராக்ருதா।
ஶாபமோக்ஷேண மஹதா தபோऽஸ்யாபஹ்ருதம் மயா। ௩

* "இதிவ ஸந்தர்ஶிதே." † "காம."

இந்த்ரன் கண்டு பயந்து வாடிய முகமுடையவனாயினன். உ௬

பின்பு, நற்செய்கையோடு கூடிய (கௌதம) முனிவர், கடுஞ்செய்கைகொண்டு முனிவேஷம்பூண்டு நிற்கும் இந்த்ரனைக் கண்டு சினந்து, "அறிவுகெட்டவனே! என்னைப்போல் ரூபந்தரித்து, செய்யத்தகாத வினைசெயலைச் செய்தாய்; ஆதலால் நீ வ்ருஷணமற்றவனாய்விடுக" என்ற சொல்லைச் சொன்னார். உ௭

மஹாத்மாவாகிய கௌதமர் சினங்கொண்டு இவ்வாறு சொல்லவே இந்த்ரனுடைய வ்ருஷணங்களிரண்டும் அத்தருணமே பூமியில்விழுந்துவிட்டன. உ௮

அந்தக் கௌதமர், அவ்வாறு இந்த்ரனைச் சபித்துவிட்டு அஹல்யையையும் (மேல் வருமாறு) சபித்தார்:— உ௯

"நீ அநேக ஆயிர வர்ஷகாலம் உணவில்லாமல் காற்றைமட்டும் பக்ஷித்து, சாம்பலில் விழுந்துதபித்து, ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் இவ்வாச்ரமத்தில் இருப்பாய்; ௩0

மிக்க வலியவனாய், தசரதது புத்ரனாயுள்ள ராமன் பயங்கரமாயுள்ள இவ்வாச்ரமத்திற்கு வரும்போது நீ பாவமற்றவளாவாய் (சாபமற்றவளாவாய்); ௩௧

கடுஞ்செய்கையுடையவளே! அந்த ராமனை ஆராதித்து, காமமோஹங்களற்று, உனது உருவத்தைத்தரித்து என்னுடன் சேர்ந்து களிப்பாய்." ௩௨

பெருந்தவம்புரிந்து மஹாப்ரபாவம் பெற்ற கௌதமர் இவ்வாறுசொல்லி, இவ்வாச்ரமத்தை விட்டு, ஸித்தர்களாலும் சாரணர்களாலும் அடையப்பெற்றதாய்ப் பாவத்தைப் போக்குவதாயுள்ள ஹிமவத்பர்வதத்தின் சிகரத்தில் தவஞ்செய்துகொண்டிருந்தார். ௩௩

நாற்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

நாற்பத்தொன்பதாவது ஸர்க்கம்.

பிறகு, இந்த்ரன் வ்ருஷணமற்றவனாய்விடவே மிக்க வருந்தினவனாகி, ருஷிகணங்களையும் சாரணர்களையும் அக்நிமுதலான தேவர்களையும் பார்த்துச் சொன்னான்:— ௧

"(உங்களெல்லோரையும் அதிகாரத்தினின்றுதள்ளுவித்தற்காக) மஹாத்மாவாகிய கௌதமர் செய்ததவத்திற்கு நான் இடையூறுசெய்து கோபத்தையுண்டாக்கி இவ்வாறு உங்களுக்கு நன்மையைச் செய்தேன். ௨

அந்தக் கௌதமர் சினந்ததனால் நான் வ்ருஷண மற்றவனாய்விட்டேன். அவ்வஹல்யையும் சாபம்பெற்றவளாய்விட்டாள். எங்களிருவருக்கும் அவரைப் பெரிய சாபங்கொடுக்கும்படி நான் செய்து அவர்தவத்தை அழித்தேன். ௩

[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible] ௬
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௭
[illegible]
[illegible] ௮
[illegible]
[illegible] ௯
[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible] ௧௧
[illegible]
[illegible] ௧௨
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௩
[illegible]
[illegible] ௧௪

[illegible]

ஆதலால் தேவர்கள், ருஷிகள், சாரணர்கள் ஆகிய எல்லோரும், தேவர்களுக்கு உதவிசெய்த என்னை வ்ருஷணமுடையவனாகச் செய்வீர்களாக." ௫

அக்நிமுதலான தேவர்கள், இந்த்ரன்சொன்ன சொல்லைக்கேட்டு, எல்லா மருத்கணங்களோடுங்கூடி பித்ருதேவதைகளிடம் வந்து, (மேல்வருமாறு) சொல்லினர்:— ௬

"இப்போது உங்களுக்கு யாகத்தில் கொடுக்கப்படுகிற மேஷமானது வ்ருஷணத்தோடு கூடியிருக்கிறது; இந்த்ரனோ, வ்ருஷணமில்லாதவனாயிருக்கிறான்; (ஆதலால்) மேஷத்தின் வ்ருஷணங்களைச் சீக்ரமாய்க்கொண்டுவந்து இந்த்ரனுக்குக் கொடுங்கள்; ௬

வ்ருஷணமற்ற மேஷத்தின்மாம்ஸம் மிக்க களிப்பையுண்டாக்கும்; உங்களது த்ருப்திக்காக யாகஞ்செய்யும் மனிதர்களும் வ்ருஷணமற்ற மேஷத்தின் மாம்ஸத்தையே உங்களுக்குக் கொடுப்பார்கள். ௭

பித்ருதேவதைகள் அக்நியின் சொல்லைக்கேட்டு ஒன்றுகூடி மேஷத்தின் வ்ருஷணங்களை எடுத்து இந்த்ரனுக்கு உபயோகப்படுத்தினார்கள். ௮

காகுத்ஸ்த! அவ்வாறு மேஷத்தின் வ்ருஷணத்தை இந்த்ரனுக்கு உபயோகப்படுத்திவிட்டார்கள். அதுமுதற்கொண்டே பித்ருதேவதைகளெல்லாரும் வ்ருஷணமற்ற மேஷத்தின்மாம்ஸத்தைப் புஜிக்கிறார்கள். ௯

ராகவ! மஹாப்ரபாவமுடைய கௌதமரது தவத்தின் ப்ரபாவத்தால் (வ்ருஷணமற்றவனாகச் செய்யப்படவே) அதுமுதற்கொண்டு இந்த்ரன், மேஷத்தின் வ்ருஷணத்தை யுடையனாய்விட்டான். ௧௦

மஹாப்ரபாவமுடையவ! (ராம) ஆதலால், புண்யகர்மங்களைச்செய்யும் கௌதமருடைய ஆச்ரமத்திற்கு நீ வரவேண்டும்; மஹாபாக்யமுடையவளாய், தேவர்களுக்கொப்பான அழகுடையவளாயுள்ள இந்த அஹல்யையைக்கடைத்தேற்றவேண்டும்." ௧௧

பிறகு, ராமர் விச்வாமித்ரரது மொழியைக் கேட்டு, விச்வாமித்ரரை முன்னே அழைத்துக்கொண்டு லக்ஷ்மணரோடுகூடி அந்தக்கௌதமரது ஆச்ரமத்துள் ப்ரவேசித்தார். ௧௨

மஹாபாக்யமுடையவளாய், தவத்தால் மிகுந்த வொளியுடையவளாய், மானவர்கள், தேவர்கள், அருகில்வரும் அஸுரர்கள் முதலியவர்களெல்லோர்க்கும் கண்ணுக்குப் புலப்படாதவளாய், மிக்கமுயற்சிகொண்டு ப்ரஹ்மதேவர் படைத்த தேவமாயை போன்றவளாய், பனியும் மேகமும்மூடிய பர்வகாலத்துச் சந்த்ரனதுகாந்தியையும், கண்ணாற்பார்க்க முடியாதபடி ஜலத்தின்நடுவில் பளபளவென்று ப்ரகாசிக்கும் ஸூர்யனது காந்தியையும் நிகர்த்தவளாயுள்ள அந்த அஹல்யையை அந்த ராமர் கண்டார். ௧௩-௧௬

அவ்வஹல்யையானவள் கௌதமரது சாபத்தால், ராமதர்சநம்வரையில் மூவுலகங்கட்குங் கண்ணுக்குப் புலப்படாமலிருந்தாள்; ராமதர்சநம் நேரவே சாபந்தொலைந்து எல்லோர்க்குங் கண்ணுக்குப் புலப்பட்டாள். ௧௭

பிறகு, ராமலக்ஷ்மணர்கள், அவ்வஹல்யையின் பாதங்களைப் பிடித்துக்கொண்டார்கள். (தெண்டனிட்டார்கள்) அவளும், கௌதமர்சொன்ன சொல்லை நினைத்து அந்த ராம லக்ஷ்மணர்களைத் தெண்டனிட்டாள். ௧௮

பாத்யமர்க்யம் ததாதித்யம் சகார ஸுஸமாஹிதா।
ப்ரதிஜக்ராஹ காகுத்ஸ்தோ விதித்ருஷ்டேந கர்மணா। ௧௮
புஷ்பவ்ருஷ்டிர்மஹத்யாஸீத்தேவதுந்துபிநிஸ்வநை:।
கந்தர்வாப்ஸரஸாம் சைவ மஹாநாஸீத்ஸமாகம:। ௧௯
ஸாது ஸாத்விதி தேவாஸ்தாமஹல்யாம் ஸமபூஜயந்।
தபோபலவிஶுத்தாங்கீம் கௌதமஸ்ய வஶாநுகாம்। ௨0
கௌதமோபி மஹாதேஜா அஹல்யாஸஹித: ஸுகீ।
ராமம் ஸம்பூஜ்ய விதிவத்தபஸ்தேபே மஹாதபா:। ௨௧
ராமோபி பரமாம் பூஜாம் கௌதமஸ்ய மஹாமுநே:।
ஸகாஶாத்விதிவத்ப்ராப்ய ஜகாம மிதிலாம் தத:॥ ௨௨

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே ஏகோநபஞ்சாஶ: ஸர்க:.

அத பஞ்சாஶ: ஸர்க:.

தத: ப்ராகுத்தராம் கத்வா ராம: ஸௌமித்ரிணா ஸஹ।
விஶ்வாமித்ரம் புரஸ்க்ருத்ய யஜ்ஞவாடமுபாகமத்॥ ௧
ராமஸ்து முநிஶார்தூலமுவாச ஸஹலக்ஷ்மண:।
ஸாத்வீ யஜ்ஞஸம்ருத்திர்ஹி ஜநகஸ்ய மஹாத்மந:।
பஹூநீஹ ஸஹஸ்ராணி நாநாதேஶநிவாஸிநாம்।
ப்ராஹ்மணாநாம் மஹாபாக வேதாத்யயநஶாலிநாம்।
ருஷிவாடாஶ்ச த்ருஶ்யந்தே ஶகடீஶதஸங்குலா:।
தேஶோ விதீயதாம் ப்ரஹ்மந் யத்ர வத்ஸ்யாமஹே வயம்॥ ௪
ராமஸ்ய வசநம் ஶ்ருத்வா விஶ்வாமித்ரோ மஹாமுநி:।
நிவேஶமகரோத்தேஶே விவிக்தே ஸலிலாயுதே। ௫
விஶ்வாமித்ரமநுப்ராப்தம் ஶ்ருத்வா ஸ ந்ருபதிஸ்ததா।
ஶதாநந்தம் புரஸ்க்ருத்ய புரோஹிதமநிந்தித:।
ப்ரத்யுஜ்ஜகாம ஸஹஸா விநயேந ஸமந்வித:। ௬
ருத்விஜோபி மஹாத்மாநஸ்த்வர்க்யமாதாய ஸத்வரம்।
விஶ்வாமித்ராய தர்மேண ததுர்மந்த்ரபுரஸ்க்ருதம்। ௭

அர்க்யம் பாத்யம் முதலிய அதிதிபூஜையெல்லாவற்றையும் மிக்கசிரத்தையோடு கூடினவளாய் சாஸ்த்ரப்படி செய்தாள்; காகுத்ஸ்தர் (பூஜைகளை) பெற்றுக்கொண்டார். ௧௮

(அப்போது) தேவர்களின் மிருதங்கதுந்துபிவாத்யகோஷங்களும் புஷ்பவர்ஷமும் உண்டாயின; கந்தர்வர்களும் அப்ஸரஸ்ஸ்த்ரீகளும் அழகாய்ப்பாடியாடினர். ௧௯

தவத்தின்பலத்தால் சுத்தமான அவயவங்களையுடையவளாய்க் கௌதமரது வசத்தில்வந்துவிட்ட அந்த அஹல்யையை "மிக்க பாக்யம் பெற்றாய்" என்று தேவர்கள் புகழ்ந்தார்கள். ௨௦

மஹாப்ரபாவமுடையவராய்ப் பெருந்தவமுடையவராயுள்ள கௌதமரும் அஹல்யையோடுகூடி ராமரை சாஸ்த்ரப்படி பூஜித்து ஸுகமாய்த் தவஞ் செய்துகொண்டிருந்தார். ௨௧

பிறகு, ராமரும், கௌதமமஹாமுநிவரிடத்துச் சிறந்த பூஜையைவிதிப்படிபெற்றுக்கொண்டு, மிதிலாநகரத்திற்குப்போய்ச்சேர்ந்தார். ௨௨

நாற்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஐம்பதாவது ஸர்க்கம்.

ராமர் லக்ஷ்மணரோடுகூடி அந்தக்கௌதமரது ஆச்ரமத்தினின்று வடகிழக்குப்பக்கமாய்ச்சென்று, விச்வாமித்ரரை முன்னிட்டுக்கொண்டு (ஜநகரது) யாகசாலையின்அருகிற் போய்ச்சேர்ந்தார். ௧

ராமர் லக்ஷ்மணரோடுகூடியவராய் (விச்வாமித்ர)மஹாமுநிவரைப்பார்த்து, "ஸ்வாமீ! மஹாபாக்யமுடையவரே! மஹாத்மாவாகிய ஜநகருடையயாகத்தில் ஸாமக்ரிகளைச் சேர்த்திருக்கிறவிதம் வெகு அழகாய் விளங்குகிறதே! வேதமோதி விளங்காநின்றவர்களாய்ப் பலதேசங்களினின்று இந்தயாகத்திற்குவந்திருக்கிற அந்தணர்கள் ஆயிரக்கணக்காய்க் காணப்படுகிறார்களே! ருஷிகள்வந்திறங்கியிருக்கிறவிடங்கள், (அவர்கள் சாமான்களையேற்றிவந்த) அநேகவண்டிகளால் நிரம்பியவைகளாய்க்காணப்படுகின்றனவே! நாம் எவ்விடத்தில் இறங்கலாம்?" என்றுசொன்னார். ௫

விச்வாமித்ரமஹாமுநிவர், ராமருடையசொல்லைக்கேட்டு,நீர்த்தஸௌக்யம்பொருந்தி சுத்தமாயுள்ள ஓரிடத்தில் இறங்கினார். ௬

அப்பொழுது ஜநகராஜரானவர், விச்வாமித்ரர்வந்திருக்கிற ஸங்கதியைக் கேட்டு, பாவமற்றவராகிய தமது புரோஹிதரான சதாநந்தரை முன்னே அழைத்துக்கொண்டு, மிக்கவணக்கத்தோடுகூடியவராய் சீக்ரமாய் எதிர்கொண்டு வந்தார். ௭

மஹாத்மாக்களாகிய ருத்விக்குகளும், வெகுவேகமாய் அர்க்யம்முதலியவற்றை எடுத்துவந்து, சாஸ்த்ரப்படி மந்த்ரத்தைச்சொல்லி அவைகளை விச்வாமித்ரருக்குக்கொடுத்தார்கள். ௮

[illegible]

மஹாத்மாவாகிய ஜநகர்செய்த அவ்வபூஜையை (விச்வாமித்ரர்) பெற்றுக்கொண்டு, (ஜநக) மன்னவனையும், (அவரது) யாகத்தையும்பற்றிய க்ஷேமஸமாசாரத்தை விசாரித்தார். ௮

பிறகு, அவ்விச்வாமித்ரரானவர், அவ்வாறு அபிபூஜைசெய்தவர்கள் ருத்விக்குகள், புரோஹிதர்கள் ஆகிய எல்லோரையும் க்ஷேமஸமாசாரத்தை விசாரித்து மிக்கமகிழ்வுற்று, தக்கபடி எல்லாரிடமும்வந்துபேசினர். ௯

பிறகு (ஜநக)மன்னர் அஞ்சலிஹஸ்தராய (விச்வாமித்ர)மஹாமுனிவரைப் பார்த்து, "ஸ்வாமி! இம்மஹாமுனிவர்களோடுகூடி ஆஸனத்தில் தேவரீர் வீற்றிருக்கவேண்டும்" என்றுசொன்னார். ௧௦

ஜநகர்சொன்னதைக்கேட்டு முன்னே (விச்வாமித்ர)மஹாமுனிவர்வீற்றிருந்தார்; (பிறகு ஜநகரது) புரோஹிதர், ருத்விக்குகள், (ஜநக)மன்னர், மந்த்ரிகள் ஆகிய எல்லோரும் உட்கார்ந்தனர். ௧௧

அந்தயாகசாலையில் அவர்களுக்குத்தக்கபடி எல்லோரும் ஆஸனங்களில் உட்கார்ந்தபிறகு, அந்தஜநகவேந்தர் விச்வாமித்ரரைப்பார்த்துசொன்னார்:- ௧௨

மேன்மைபெற்ற உமதுதர்சநம் எனக்குக்கிடைத்தமையால் எனது யாகம் நிறைவேறிவிட்டது; அதற்காகத்தேவர்கள் பயனையளித்துவிட்டார்கள்; அதை யான் அடைந்துவிட்டேன் என்றேசொல்லவேண்டும். ௧௩

ஸ்வாமி! மஹாமுனிவரே! தேவரீர் முனிவர்களோடுகூடி எனதுயாகத்திற்கு வந்ததனால், யான் தேவரீரது அநுக்ரஹம்பெற்று எல்லாப்பொருளையும் அடைந்தவனாக ஆய்விட்டேன். ௧௪

ப்ரஹ்மர்ஷியே! எனதுயாகம் முடிதற்கு இன்னும் பன்னிரண்டுநாளிருக்கிறதாய் ருத்விக்குகள்சொல்லுகிறார்கள்; பிறகு, அவரவர்கள் பாகங்களை வாங்கிக்கொள்ளவரும் தேவர்களைத் தேவரீர் பார்க்கலாம்." ௧௫

(ஜநக)ராஜர், (விச்வாமித்ர)மஹாமுனிவரை இவ்வாறுசொல்லி மிக்கமகிழ்ச்சியடைந்து, அஞ்சலிஹஸ்தராய் மிகவும்வணங்கி மீளவும் அவ்விச்வாமித்ரரைப்பார்த்துசொன்னார்:— ௧௬

"மஹாமுனிவரே! உமக்கு க்ஷேமமுண்டாகுக; தேவர்களுக்கொப்பான பராக்ரமமுடையவர்களும், கஜம் ஸிம்ஹம் என்றவைகளின் நடைபோன்ற நடையுடையவர்களும், அப்ரமேயமானஐச்வர்யமுடையவர்களும், வ்யாக்ரத்திற்கும் வ்ருஷபத்திற்கும் ஸமானமானவர்களும், கமலதளம்போன்று விசாலமாயுள்ள நேத்ரங்களையுடையவர்களும், கட்கம் அம்புறாத்தூணி தநுஸ் என்றவைகளைத் தரித்தவர்களும், ஸௌந்தர்யத்தில் அச்விநீதேவதைகளைப்போன்றவர்களும், திவ்யயௌவநம்பெற்றவர்களும், யதேச்சையாகவே திவ்யலோகத்திலிருந்து பூலோகத்திற்குவந்த தேவர்கள்போன்றவர்களும், திவ்ய ஆயுதங்களைத் தரித்தவர்களும், வீரர்களும், திருமேனி திருவுள்ளம் நடை என்றவைகளில் ஒருவர்க்கொருவர் ஸமானமானவர்களும், காகபக்ஷம் (பக்கக்)குடுமிதரித்தவீரர்களுமாகி, சந்த்ரஸூர்யர்கள் ஆகாசத்தைஅலங்கரிக்கிறதுபோல் இவ்விடத்தை அலங்கரிக்கின்ற இவ்விரண்டுகுமாரர்களும் எப்படி கால்நடையாய் நடந்து இங்குவந்தார்கள்? யாருக்கு என்னசெய்யவேண்டிவந்தார்கள்? உண்மையைக் கேட்கவிரும்புகின்றேன்." ௨௧

[illegible]
[illegible] உ௪
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] உ௫

இதி ஸ்ரீமத்ராமாயணே பாலகாண்டே [illegible] ஸர்க்க:

[illegible] ஸர்க்க:

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible] ௨
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible] ௬
[illegible]
[illegible] ௭
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௮

[illegible]

மஹாத்மாவாகிய ஜநகர்சொன்னவம்மொழியை (விச்வாமித்ரர்) கேட்டு, "இவ்விரண்டுகுமாரர்களும் தசரதபுத்ரர்கள்" என்று (ஜநகருக்குத்) தெரிவித்தார். ௨௨.

பிறகு மஹாப்ரபாவமுடைய விச்வாமித்ர மஹாமுநிவரானவர், (ராமர்) ஸித்தாச்ரமத்தில் வாஸஞ்செய்தது, ராக்ஷஸர்களை வதஞ்செய்தது, அந்தத் தாடகையின்வநத்தில் நிர்ப்பயமாய் நடந்துவந்தது, விசாலாநகரத்தைக்கண்டது, அஹல்யைக்குத் தர்சநங்கொடுத்தது, கௌதமரோடுசேர்ந்தது, (ஜநகரிடமிருக்கிற) வில்லின்வலிவையறியக்கருதி (மிதிலைக்கு)வந்தது ஆகியவைகளையெல்லாம் மஹாத்மாவான ஜநகருக்குச்சொல்லிமுடித்தார். ௨௩.

ஐம்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஐம்பத்தோராவது ஸர்க்கம்.

பெருந்தவம்புரிந்து தவத்தால் மேன்மைபெற்று மஹாப்ரபாவமுடைய ராகி விளங்காநின்ற கௌதமரது மூத்தகுமாரராகிய சதாநந்தரானவர், பேரறிவு பெற்ற அவ்விச்வாமித்ரருடைய அம்மொழியைக்கேட்டு மயிர்க்கூச்சடைந்து (களித்து), ராமரது தர்சநங்கிடைத்ததனாலேயே மிக்கவியப்படைந்தார். ௧.

பிறகு அந்தச்சதாநந்தரானவர், ராஜபுத்ரர்களாகிய அந்தராமலக்ஷ்மணரிருவரும் ஸுகமாய் ஆஸநத்தில் உட்கார்ந்திருக்கக்கண்டு, விச்வாமித்ரமஹாமுநிவரைநோக்கி (மேல்வருமாறு) கூறலுற்றார்:— ௨.

"மஹாமுநிவரே! நெடுகாள் தவம்புரிந்து பெரும்புகழ்பெற்றவளாகிய எனது தாயை (அஹல்யையை) ராஜபுத்ரனான ராமனுக்கு நீர் காட்டினீரா? ௩.

மஹாப்ரபாவம்பெற்று மிக்ககீர்த்தியுடையவளாகிய எனது அன்னையானவள் எல்லாப்ராணிகளும் பூஜிக்கத்தக்கவனான ராமனுக்கு, வநத்திலுண்டான காய் கிழங்குமுதலியவைகளைக்கொண்டு பூஜைசெய்தனளா? ௪.

மஹாப்ரபாவமுடையவரே! தைவத்தின்கொடுமையினால், முன்னே என் தாய் (அஹல்யை) செய்த கடுஞ்செய்கையைப்பற்றிய வரலாற்றை நடந்தபடி ராமனுக்குத் தெரிவித்தீரா? ௫.

விச்வாமித்ர மஹாமுநிவரே! உமக்கு க்ஷேமமா? இந்தராமனது தர்சநத்தால் எனதுதந்தையோடு (கௌதமரோடு) எனதுதாய் (அஹல்யை) சேர்ந்தனளா? ௬

விச்வாமித்ரரே! எனதுதந்தை, ராமனைப்பூஜித்தாரா? இங்கு வந்தினருகிலிருக்கிற ஆச்ரமத்திற்குவந்த மஹாப்ரபாவமுடைய எனதுதந்தை மஹாத்மாவான ராமனிடத்திற்பூஜைபெற்றாரா? ௭.

குசிகபுத்ரரே! சாந்தமானமனதோடுகூடிய எனதுதந்தையை இந்த ராமன் ஊக்கமுடையவராகி ஸேவித்தானா?" ௮.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௧

[illegible]
[illegible] ௧௨

[illegible]
[illegible] ௧௩

[illegible]
[illegible] ௧௪
[illegible]
[illegible] ௧௫

[illegible]
[illegible] ௧௬
[illegible]
[illegible] ௧௭
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௮
[illegible]
[illegible] ௨௰
[illegible]
[illegible] ௨௧
[illegible]
[illegible]
[illegible] ௨௨

* [illegible]

அறிஞராகிய விச்வாமித்ரமஹாமுநிவர், அந்தச்சதாநந்தர் கூறியதைக் கேட்டு, அறிஞராகிய (அந்த) சதாநந்தரைப்பார்த்து, "ஸமயத்தில் நான் செய்விக்கவேண்டியதைத்தவறுமல் செய்வித்தேன்; ஜமதக்நியோடு ரேணுகைசேர்ந்ததுபோல, (கௌதம) முநிவரோடு (அவரது) பத்நி (அஹல்யை) சேர்ந்துவிட்டாள்" என்று பதிற்கூறினர். ௧௧

மஹாப்ரபாவமுடையசதாநந்தர், அவ்விச்வாமித்ரரது அவ்வாக்யத்தைக் கேட்டு, ராமனைப்பார்த்து (மேல்வரும்)மொழியைப்புகலலுற்றார்:— ௧௨

"புருஷோத்தம! ராகவ! உனக்கு மங்களமுண்டாகுக. மஹாப்ரபாவம் பெற்ற விச்வாமித்ரமஹர்ஷியை முன்னிட்டுக்கொண்டு, (எனது)பாக்யத்தால் நீ (இங்கு)வந்தாய். ௧௩

(இந்த)விச்வாமித்ரரானவர் அளவிடமுடியாத தவத்தைச்செய்து, ப்ரஹ்மர்ஷியாகி, மிக்க ஒளிபெற்ற மஹாப்ரபாவமுடையரானார்; இவர்,(எல்லார்க்கும்) பரகதி (ரக்ஷகர்)என்கிறவிஷயத்தை நீ தெரிந்துகொண்டிருக்கிறாயா? ௧௪

ராம! பெருந்தவம்புரிந்த (இந்த)விச்வாமித்ரர் (வித்யைகளைக்கற்பித்து) உன்னைரக்ஷிக்கிறவராக ஏற்பட்டபடியால் உலகத்தில் உன்னைத்தவிர மஹாபாக்யம்பெற்றவன் வேறொருவனுமில்லை. ௧௫

மஹாத்மாவாகிய விச்வாமித்ரருடைய சரித்ரத்தையும் (தபோ)பலத்தையும் பற்றிய வரலாற்றை நான் சொல்லுகிறேன்; நீ கேள்: ௧௬

தர்மத்தையே சரீரமாகப்பெற்றிருக்கின்ற இவ்விச்வாமித்ரரானவர்; வித்யைகளைக் கற்றுணர்ந்து தர்மங்களையறிந்து பகைவர்களைவென்று ஜநங்களுக்கு நன்மையைச்செ[illegible]லேயே விருப்பங்கொண்டவராக வெகுகாலம் அரசுபுரிந்துவந்தார், ௧௭

ப்ரஹ்மாவினுடைய புத்ரர் குசனென்ற மன்னவரொருவரிருந்தார்; குசருடையபுத்ரர் மிக்கபலமுடையவரும் மிக்கதர்மிஷ்டருமாகிய குசநாபனென்றவர்; குசநாபருடையபுத்ரர், காதியென்றொருவரிருந்தார்;காதியின்புத்ரர் மிக்கவலிவுடையராகிய (இந்த)விச்வாமித்ரமஹாமுநிவர். ௧௮

விச்வாமித்ரர் அரசுபுரிகையில் மஹாபராக்ரமமுடையராய் அநேகஆயிரவர்ஷம் பூமியைப்பரிபாலித்துவந்தார். ௨0

ஒருகால், மஹாபராக்ரமமுடைய (இந்த)விச்வாமித்ரர், அக்ஷௌஹிணி என்ற படைகளாற் சூழப்பெற்று, (மற்றுமுள்ள)ஸைந்யங்களைக் கூட்டிக்கொண்டு, பூமியைப் ப்ரதக்ஷிணஞ்செய்தார். ௨௧

ராம! நாடுகள், நகரங்கள், நதிகள், மலைகள், ஆச்ரமங்கள் ஆகிய ஒவ்வோரிடத்திலும் ஸஞ்சரித்துவிட்டு, நாநாவிதவ்ருக்ஷங்களாலும் நிரம்பி விளங்குகின்ற வஸிஷ்டரது ஆச்ரமத்திற்குவந்துசேர்ந்தார். ௨௨

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] *[illegible]
[illegible]
[illegible] ॥ ௨௮

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇 𑌬𑌾𑌲𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌏𑌕𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌃 𑌸𑌰𑍍𑌗𑌃 ।

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌿𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌃 𑌸𑌰𑍍𑌗𑌃 ।

†𑌸 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑍀𑌤𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋 𑌮𑌹𑌾𑌬𑌲𑌃 ।
𑌪𑍍𑌰𑌣𑌤𑍋 𑌵𑌿𑌨𑌯𑌾𑌦𑍍𑌵𑍀𑌰𑍋 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌂 𑌜𑌪𑌤𑌾𑌂 𑌵𑌰𑌮𑍍 ॥ ௧
𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌂 𑌤𑌵 𑌚𑍇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍇𑌨 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌆𑌸𑌨𑌂 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋 𑌵𑍍𑌯𑌾𑌦𑌿𑌦𑍇𑌶 𑌹 ॥ ௨
𑌉𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌯 𑌚 𑌤𑌦𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌯 𑌧𑍀𑌮𑌤𑍇 ।
𑌯𑌥𑌾𑌨𑍍𑌯𑌾𑌯𑌂 𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑌃 𑌫𑌲𑌮𑍂𑌲𑌮𑍁𑌪𑌾𑌹𑌰𑌤𑍍 ॥ ௩
𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌤𑍁 𑌤𑌾𑌂 𑌪𑍂𑌜𑌾𑌂 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌾𑌦𑍍𑌰𑌾𑌜𑌸𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌤𑌪𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌶𑌿𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌕𑍁𑌶𑌲𑌂 𑌪𑌰𑍍𑌯𑌪𑍃𑌚𑍍𑌛𑌤 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑌿𑌗𑌣𑍇 𑌤𑌥𑌾 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌕𑍁𑌶𑌲𑌂 𑌚𑌾𑌹 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋 𑌰𑌾𑌜𑌸𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥ ௫
𑌸𑍁𑌖𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌂 𑌰𑌾𑌜𑌾𑌨𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌂 𑌮𑌹𑌾𑌤𑌪𑌾𑌃 ।
𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 𑌜𑌪𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑍁𑌤𑌃 । ௬

* "[illegible]" † "𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾."

நாநாவிதமான ம்ருகங்களின் கூட்டங்களால் நிரம்பியதாய், ஸித்தர்களாலும் சாரணர்களாலும் அடையப்பட்டதாய், தேவர்கள் தாநவர்கள் கந்தர்வர்கள் கிந்நரர்கள் என்றவர்களால் அழகியதாய், நிர்ப்பயமாய் ஸஞ்சரிக்கும் மான்களால் நிறைந்ததாய், பறவைக்கூட்டங்களால் அடையப்பெற்றதாய், ப்ரஹ்மர்ஷிகளின் ஸமூஹங்களால் நிரம்பியதாய், தேவர்ஷிகளின் கூட்டங்களால் அடையப்பட்டதாய், தவஞ்செய்து பேறுபெற்று அக்நியைநிகர்த்து விளங்கும் மஹாத்மாக்களாலும், நீர்த்தம் காற்று தானாகவே பூமியில் உதிர்ந்த சருகு பழம் கிழங்கு என்றவைகளைப் பக்ஷித்துப் பொறுமைகொண்டு கோபத்தையடக்கி ஐம்புலன்களையும் வென்று ஜபம் ஹோமம் என்றவைகளில் பற்றுள்ளவர்களாயிருக்கும் வாலகில்யர்களென்ற ருஷிகளாலும், வைகாநஸர்களென்ற ருஷிகளாலும், மற்றுமுள்ளவர்களாலும் எங்கும்நிரம்பியதாய் இரண்டாவது ப்ரஹ்மலோகம்போல் அழகாய்விளங்காநின்ற அவ்வஸிஷ்டரது ஆச்ரமத்தை, மிக்க வலிவுகொண்டு வெற்றி யுற்றவர்களிற் சிறப்பு பெற்றவராகிய விச்வாமித்ரர் கண்டார். உ௮

ஐம்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஐம்பத்திரண்டாவது ஸர்க்கம்.

மிக்கபலமுடையரும் வீருமாகிய விச்வாமித்ரர், வஸிஷ்டருடைய அவ்வாச்ரமத்தைக்கண்டு மிகவும் மகிழ்ந்து, வஸிஷ்டமஹர்ஷியை வணங்கி தெண்டனிட்டார். க

மஹாத்மாவாகிய வஸிஷ்டர், "நல்லது, வாரும்" என்று (விச்வாமித்ரரை) சொன்னார். வஸிஸ்ட பகவான் இவ்விச்வாமித்ரருக்கு ஆஸநத்தையுங்கொடுத்தார். உ

அறிஞராகிய விச்வாமித்ரர் உட்கார்ந்தபின்பு, (வஸிஷ்ட) மஹாமுநிவர் அவ்விச்வாமித்ரருக்குப் பழம் கிழங்கு முதலியவைகளைக் கொண்டுவந்து கொடுத்துப் பூஜைசெய்தார். ௩

மஹா பராக்ரமமுடைய மஹாராஜராகிய விச்வாமித்ரரும், வஸிஷ்டரிடத்தினின்று அர்க்யபூஜையைப்பெற்று, (வஸிஷ்டருடைய) தவம், அக்நிஹோத்ரம், சிஷ்யர்கள், ஆச்ரமத்திலிருக்கும் வ்ருக்ஷங்கள் ஆகிய இவைகளைப்பற்றிய க்ஷேமஸமாசாரத்தை விசாரித்தார்; "எல்லாம் க்ஷேமம்" என்று விச்வாமித்ரருக்கு வஸிஷ்டர் பதிற்கூறினார். ௪

ப்ரஹ்மாவின் புத்ரராய்ப் பெருந்தவம்புரிந்தவராயுள்ள வஸிஷ்டமஹர்ஷியானவர் ஸுகமாய் வீற்றிருக்கும் விச்வாமித்ரரை (மேல்வருமாறு) கேட்கலானார்:— ௫

𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌕𑍁𑌶𑌲𑌂 𑌰𑌾𑌜𑌨𑍍𑌕𑌚𑍍𑌚𑌿𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌰𑌞𑍍𑌜𑌯𑌨𑍍।
𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌪𑌾𑌲𑌯𑌸𑍇 𑌵𑍀𑌰! 𑌰𑌾𑌜𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌨 𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕!॥
𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌸𑍁𑌭𑍃𑌤𑌾 𑌭𑍃𑌤𑍍𑌯𑌾𑌃 𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌶𑌾𑌸𑌨𑍇।
𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌵𑌿𑌜𑌿𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌰𑌿𑌪𑌵𑍋 𑌰𑌿𑌪𑍁𑌸𑍂𑌦𑌨!॥
𑌕𑌚𑍍𑌚𑌿𑌦𑍍𑌬𑌲𑍇 𑌚 𑌕𑍋𑌶𑍇 𑌚 𑌮𑌿𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌚 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪!॥
𑌕𑍁𑌶𑌲𑌂 𑌤𑍇 𑌨𑌰𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰! 𑌪𑍁𑌤𑍍𑌰𑌪𑍌𑌤𑍍𑌰𑍇 𑌤𑌵𑌾𑌨𑌘!॥ ௯
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌕𑍁𑌶𑌲𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑌰𑌤𑍍।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌂 𑌵𑌿𑌨𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃। ௧௦
𑌕𑍃𑌤𑍍𑌵𑍋𑌭𑍌 𑌸𑍁𑌚𑌿𑌰𑌂 𑌕𑌾𑌲𑌂 𑌧𑌰𑍍𑌮𑌿𑌷𑍍𑌠𑍌 𑌤𑌾𑌃 𑌕𑌥𑌾𑌃 𑌶𑍁𑌭𑌾𑌃।
𑌮𑍁𑌦𑌾 𑌪𑌰𑌮𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍌 𑌪𑍍𑌰𑍀𑌯𑍇𑌤𑌾𑌂 𑌤𑍌 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌮𑍍। ௧௧
𑌤𑌤𑍋 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌕𑌥𑌾𑌨𑍍𑌤𑍇 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨!॥
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍁𑌵𑌾𑌚 𑌪𑍍𑌰𑌹𑌸𑌨𑍍𑌨𑌿𑌵। ௧௨
𑌆𑌤𑌿𑌥𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌬𑌲𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌬𑌲!॥
𑌤𑌵 𑌚𑍈𑌵𑌾𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾𑌰𑍍𑌹𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍍𑌛 𑌮𑍇। ௧௩
𑌸𑌤𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌭𑌵𑌾𑌨𑍇𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍍𑌛𑌤𑍁 𑌮𑌯𑍋𑌦𑍍𑌯𑌤𑌾𑌮𑍍।
𑌰𑌾𑌜𑌨𑍍𑌤𑍍𑌵𑌮𑌤𑌿𑌥𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌪𑍂𑌜𑌨𑍀𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌃। ௧௪
𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍇𑌨 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋 𑌮𑌹𑌾𑌮𑌤𑌿𑌃।
𑌕𑍃𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑌬𑍍𑌰𑌵𑍀𑌦𑍍𑌰𑌾𑌜𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨 𑌮𑍇 𑌤𑍍𑌵𑌯𑌾।
𑌫𑌲𑌮𑍂𑌲𑍇𑌨 𑌭𑌗𑌵𑌨𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌯𑌤𑍍𑌤𑌵𑌾𑌶𑍍𑌰𑌮𑍇
𑌪𑌾𑌦𑍍𑌯𑍇𑌨𑌾𑌚𑌮𑌨𑍀𑌯𑍇𑌨 𑌭𑌗𑌵𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌨 𑌚।
𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 𑌚 𑌮𑌹𑌾𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞! 𑌪𑍂𑌜𑌾𑌰𑍍𑌹𑍇𑌣 𑌸𑍁𑌪𑍂𑌜𑌿𑌤𑌃।
𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌸𑍍𑌤𑍁 𑌮𑍈𑌤𑍍𑌰𑍇𑌣𑍇𑌕𑍍𑌷𑌸𑍍𑌵 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾। ௧௭
𑌏𑌵𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑌂 𑌰𑌾𑌜𑌾𑌨𑌂 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌃 𑌪𑍁𑌨𑌰𑍇𑌵 𑌹𑌿।
𑌨𑍍𑌯𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌯𑌤 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌰𑍁𑌦𑌾𑌰𑌧𑍀𑌃।
𑌬𑌾𑌢𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵 𑌗𑌾𑌧𑍇𑌯𑍋 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌵𑌾𑌚 𑌹।
𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌗𑌵𑌤𑌸𑍍𑌤𑌥𑌾𑌸𑍍𑌤𑍁 𑌮𑍁𑌨𑌿𑌪𑍁𑌙𑍍𑌗𑌵!॥ ௧௯
𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋 𑌜𑌪𑌤𑌾𑌂 𑌵𑌰𑌃।
𑌆𑌜𑍁𑌹𑌾𑌵 𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌃 𑌕𑌲𑍍𑌮𑌾𑌷𑍀𑌂 𑌧𑍂𑌤𑌕𑌲𑍍𑌮𑌷𑌃। ௨௦

"ஐம்புலன்களையும் வென்று ஆனேறாய்ப் பாவமற்று அறஞ்செய்து வலியுகொண்டு வைரிகளைவென்று விளங்குகின்ற (விச்வாமித்ர)வேந்தே! நீர் க்ஷேமமாயிருக்கிறீரா? ஜநங்களை ராஜதர்மங்கொண்டு களிப்பித்து நன்றாய் ரக்ஷித்து வருகிறீரா? வேலைக்காரர்களை நன்றாய் வைத்துக்கொண்டிருக்கிறீரா? அவர்கள் உமது கட்டளைப்படி நடக்கிறார்களா? உமது சத்ருக்களை யெல்லாம் வென்று விட்டீரா? உமது படைகள் க்ஷேமமாயிருக்கின்றனவா? உமது கருவூலங்கள் குறைவில்லாமலிருக்கின்றனவா? உமது மித்திரர்கள், புத்திரர்கள், பௌத்திரர்கள் ஆகிய எல்லோரும் க்ஷேமமாயிருக்கிறார்களா" ௯

மஹா பராக்ரமமுடையராகிய விச்வாமித்ரரானவர் மஹா பாக்யமுடைய வஸிஷ்டரை வணங்கி, "எல்லாம் க்ஷேமம்" என்று பதில்சொன்னார். ௧0

தர்மிஷ்டர்களாயுள்ள அவ்வஸிஷ்ட விச்வாமித்ரர்களிருவர்களும் பரம ஸந்தோஷமடைந்து வெகு காலம் வரையில் அழகாய் ஒருவர்க்கொருவர் க்ஷேமஸமாசாரத்தை விசாரித்து ஒருவரை யொருவர்கண்டு மகிழ்ந்தனர். ௧௧

ரகுநந்தந! இவ்வாறு ஒருவர்க்கொருவர் பேசியானபின்பு, வஸிஷ்டபகவான் புன்னகையோடுகூடி விச்வாமித்ரரைநோக்கி இம்மொழியைக்கூறினார். ௧௨

"மஹாபலமுடையவ! மஹாப்ரபாவமுடைய உமக்கும், உமது இந்த ஸைந்யத்திற்கும், என்னால் கூடியவரையில் கொஞ்சம் விருந்துசெய்ய நினைத்திருக்கிறேன்; அதை என்னிடத்திலின்று நீர் பெற்றுக்கொள்ளவேண்டும்; ௧௩

நான் செய்யப்போகிற இந்த விருந்தை தயைசெய்து பெற்றுக்கொள்ள வேண்டும்; நீர் ராஜாவும் சிறந்த அதிதியுமாயிருக்கிறபடியால் நான் உம்மை அவச்யம் பூஜிக்கவேண்டும்." ௧௪

மிக்க புத்திமானாகிய விச்வாமித்ரவேந்தர், இவ்வாறு வஸிஷ்டரால் கூறப்பட்டு (வஸிஷ்டரைநோக்கி), "ஸ்வாமி! நீர் மிக்க ப்ரீதியோடு கூடி என்னுடன் பேசியது, உமது ஆச்ரமத்திலுள்ள பழம் கிழங்கு அர்க்யம் பாத்யம் முதலியவைகளை எனக்குக் கொடுத்தது, உமது திவ்யதர்சநத்தை நீர் எனக்கு அளித்தது முதலியவைகளாலேயே உம்மிடத்து நான் விருந்துபெற்றவனாய்விட்டேன்; எல்லாவிதத்தாலும் நான் உமக்குப் பூஜை செய்யவேண்டியிருக்க நீர் எனக்கு நன்றாய்ப் பூஜைசெய்தீர்; (இதுசரியன்று.) நான்போய்வருகிறேன்; உமக்குத் தெண்டனிடுகிறேன்; நீர் (என்னிடம், அன்புவைத்து (என்னையும்) ஒரு கண்ணால் பார்த்துக்கொள்ளும்" என்று சொன்னார். ௧௭

தர்மிஷ்டரும் உதாரபுத்தியுடையருமாகிய வஸிஷ்டரானவர் இவ்வாறு சொல்லும் (விச்வாமித்ர) வேந்தரை, ("நீர் அப்படிசொல்லலாகாது; இன்றைக்கு, இங்கு அவச்யம் இருந்து விருந்துபெற்றுக்கொண்டே போகவேண்டும்" என்று) வெகுதரம் வேண்டிக்கொண்டார்; விச்வாமித்ரரும் வஸிஷ்டரைப் பார்த்து, "ஸ்வாமி! மஹாமுநிவரே! சரி, (நான் உமது தாஸனாய் விட்டேன்) உமது இஷ்டப்படியே ஆகட்டும்" என்று சொன்னார். ௧௯

இவ்வாறு விச்வாமித்ரர்சொன்ன பின்பு வஸிஷ்ட மஹர்ஷியானவர் ஸந்தோஷமடைந்து தமது சபலையென்கிற காமதேநுவை அழைப்பித்தார். உ0

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨௩

[illegible] ஸர்க்க:.

௫௭ ஸ்ரீ[illegible] ஸர்க்க:.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible] ௬
[illegible]
[illegible] ௭
[illegible]
[illegible] ௮
[illegible]
[illegible]
[illegible] ௯
[illegible]
[illegible] ௰

[illegible]

“ கோரினவை யெல்லாங் கொடுக்கின்றதுமான, ஓ! புண்ணிய சபலையே! வாமா சீக்ரம் நான் சொல்லுகிறதைக்கேள்: ராஜர்ஷியாகிய இவ்விச்வாமித்ரருக்கும் இவரது ஸைன்யங்களுக்கும் மேலான போஜனங்களிட்டு நான் விருந்து செய்ய நினைத்திருக்கிறேன்; நீ அதற்குத் தக்க ஏற்பாடுசெய்யவேண்டும்; ஷட்ரஸங்களில் யாராருக்கு எதெது வேண்டியதோ அதையெல்லாம் அவர்களுக்கு வேண்டிய வரையில் சீக்ரமாய் கொடுக்கவேண்டும்; சபளே! ரஸம், பக்ஷ்யம், பானகம், தேன் தயிர் முதலியவைகள், பலவித அன்னம் ஆகிய எல்லாவற்றையும் (இவர்களுக்கு) நீ சீக்ரமாய்க் கொடுக்கவேண்டும்” (என்று கட்டளை யிட்டார்) உ௰௩

ஐம்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஐம்பத்து மூன்றாவது ஸர்க்கம்.

பகைஞரைப்பருக்கின்றவ! (ராம!) இவ்வாறு வஸிஷ்டரால் கட்டளை யிடப்பட்ட சபளை என்கிற காமதேனுவானது, கரும்புகள், தேன்கள், பொரிகள், மைரேயமென்கிறபானங்கள், திவ்யமானபானகங்கள், பலவகைப்பணியாரங்கள் ஆகிய இவைகளுள் (அவ்விச்வாமித்ர பரிவாரத்தில்) யாராருக்கு எதெது இஷ்டமோ அதையெல்லாம் விஸ்தஞ் செய்துகொடுத்தது. உ

அவ்வாறு இவ்விச்வாமித்ரருக்கு வஸிஷ்டர் விருந்து செய்யும் பொழுது, சுடுகையுள்ள அன்னங்களும், பருப்புகளும் மலைபோல் குவிக்கப்பட்டிருந்தன. பாயஸங்களும் தயிர்களும் வாய்க்கால்போல் ஓடிக்கொண்டிருந்தன. ங

பலவித இனிய ரஸங்கள் பொருந்திய பணியாரங்களாலும், வெல்லம் சர்க்கரை முதலியவைகளாலேயே செய்யப்பட்ட பணியாரங்களாலும் நிரம்பிய பாத்ரங்கள் ஆயிரக்கணக்காய்ச் சேகரிக்கப்பட்டிருந்தன. ச

ராம! விச்வாமித்ரருடைய ஸைன்யம் யாவும், வஸிஷ்டரிட்ட விருந்தை வேண்டியவரையில் உண்டு மிகவும் களித்துத் தேஹம் பூரித்து வலிவு பெற்று பேரானந்தத்தை அடைந்தது. ரு

ராஜர்ஷியாயிருந்த விச்வாமித்ரவேந்தரும் தமது அரண்மனைப்பெண்டுகளோடும், ப்ராஹ்மணர்களோடும், புரோஹிதர்களோடும் கூடி அவ்வாறே விருந்துண்டு மகிழ்ந்து தேஹம் பூரிக்கப் பெற்றார். சு

அப்பொழுது எல்லா மந்த்ரிகளுடனும் ப்ருத்யர்களுடனும் பூஜைபெற்று, பேரானந்தமடைந்து வஸிஷ்டரை நோக்கி இம்மொழியைக்கூறினார்:— எ

“ ஸ்வாமி! பூஜைபெறவேண்டிய நீர் வெகு நன்றாய் விருந்து செய்து என்னைப் பூஜித்தீர்; மொழிசுவை யறிந்தவரே! நான் ஒருமொழி சொல்லுகிறேன், தயைசெய்து கேட்கவேண்டும்; அ

ஸ்வாமி! அந்தணரே! லக்ஷம் பசுவிலே வாங்கிக்கொண்டு (உமது) சபளை என்கிற காமதேநுவை நீர் எனக்குக்கொடுக்கவேண்டும்; இந்தக் காமதேநு (பசுக்களில்) ரத்நம் என்பது ப்ரஸித்தம்; தர்மசாஸ்த்ரப்படிக்கு ரத்நத்திற்கு அதிகாரி ராஜா; ஆதலால் இந்தக் காமதேநு என்னுடையதுதான்; ஆதலால் இதை எனக்குக் கொடுத்துவிடும்” கூ

முனிவர்களிற் சிறந்த தர்ம புத்தியுடையராகிய வஸிஷ்டபகவானனவர், இவ்வாறு விச்வாமித்ரர் கூறியதைக் கேட்டு, (விச்வாமித்ர)வேந்தரை நோக்கி விடைகூறலுற்றார்:— ௰

[illegible]
[illegible] ௧௧
[illegible]
[illegible] ௧௨
[illegible]
[illegible] ௧௩
[illegible]
[illegible] ௧௪
[illegible]
[illegible] ௧௫
[illegible]
[illegible] ௧௬
[illegible]
[illegible] ௧௭
[illegible]
[illegible] ௧௮
[illegible]
[illegible] ௧௯
[illegible]
[illegible] ௨௦
[illegible]
[illegible] ௨௧
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨௫

இதி ஸ்ரீ [illegible] பாலகாண்டே [illegible] ஸர்க:

* "ச." † "[illegible] இதி [illegible]" ‡ "[illegible]"

"மன்னவ! (எனது) சபளையொன்றுக்காக, நீர் கோடிபசுவின்விலைகொடுத்தாலும் அதைநான் கொடுக்கமாட்டேன்; நூறுகோடி பசுவின் விலைகொடுத்தாலும் கொடுக்கமாட்டேன்; ராசி ராசியாய் வெள்ளியைக் கொடுத்தாலுங் கொடுக்கமாட்டேன்; கக

பகைவரை அடக்கின்றவ! இந்தச்சபளை என்னை விட்டுப் பிரியத்தகாது; மாயியாயிருக்கிறவனுக்குக் கீர்த்தி சாச்வதமாயிருக்கிறதுபோல், எனக்கு இந்தச்சபளை சாச்வதமாயிருந்து கொண்டிருக்கிறது; கஉ

ஹவ்யம், கவ்யம், ஜீவித்திருத்தல், அக்நிஹோத்ரம், பலி, ஹோமம் என்கிறவைகளும் இந்தச் சபளையினாலேயே எனக்கு நடக்கவேண்டியதாயிருக்கிறது; கஈ

ராஜர்ஷி! ஸ்வாஹாகாரம், வஷட்காரம், நாநாவித வித்யைகள் ஆகிய இவையெல்லாம் இதனாலேயே ஆகவேண்டியிருக்கிறது; இவை உண்மை; கச

அரசே! ஸத்யமாய்ச் சொல்லுகிறேன்; எனக்கு எல்லாப் பொருளும் இந்தக் காமதேனுவே தான்; இது எனக்கு எப்பொழுதும் ஸந்தோஷத்தை விளைத்துக்கொண்டிருக்கிறது;(இதைக்கொடாமலிருக்க)இன்னும் அநேககாரணங்களிருக்கிறபடியால் இந்தச் சபளையை உமக்கு நான் கொடுக்கமுடியாது." கரு

பேசுவதில் ஸமர்த்தராகிய விச்வாமித்ரரானவர், இவ்வாறு வஸிஷ்டர் சொல்லவே மிகுந்த பிடிவாத முடையராய், (வஸிஷ்டரை நோக்கி மேல்வரும்) வாக்யத்தைச் சொல்லினார்:— கசு

"கழுத்துக்குப் பொன் சங்கிலிகள் பூட்டி பொன் மாவெட்டிகள் மாட்டி அழகாய்விளங்கும் பதினாலாயிரம்யானைகளை நான் உமக்குக்கொடுக்கிறேன்; கஎ

மணிகள் கட்டி அழகாய் விளங்கும் நான்கு வெள்ளைக்குதிரைகள் (ஒவ்வொன்றிலும்) பூட்டப்பெற்ற எண்ணூறு பொன் தேர்களையும் உமக்குக் கொடுக்கிறேன்; கஅ

நல்ல தேசத்தில் நல்ல குலத்தில் பிறந்து அழகாய் விளங்கும் பதினோராயிரங் குதிரைகளையும் உமக்குக் கொடுக்கிறேன்; நீர் ரொம்பவும் நல்லவர்; ககூ

ஒவ்வொன்றும் ஒவ்வொரு வர்ணமுடையவைகளாயுள்ள ஒரு கோடி இளம்பசுக்களையும் கொடுக்கிறேன்; சபளையைக் கொடுத்துவிடும்; உ௦

அந்தணரே! உமக்கு ரத்நம் வேறுமென்றாலும் ஸ்வர்ணம் வேண்டுமென்றாலும் வேண்டிய வரையில் கொடுக்கிறேன்; உமக்கு எது வேண்டியதோ அதையெல்லாங் கொடுக்கிறேன்; சபளையை எனக்குக்கொடுத்துவிடும்." உக

புத்திமானாகிய விச்வாமித்ரரால் இவ்வாறு சொல்லப்பட்ட வஸிஷ்டபகவானனவர் (விச்வாமித்ரரைப்பார்த்து, "வேந்தே! நீர் என்னசெய்தாலும் சபளையை நான் கொடுக்கப் போகிறதில்லை; இதுதான் எனது ரத்நம், இதுதான் எனது பொருள்; இதுதான் எல்லாப்பொருளும்; இதனால் தான் நான் பிழைத்திருக்கிறேன்; அமாவாஸ்யைக்கும் பௌர்ணமாவாஸ்யைக்குஞ் செய்யவேண்டியசெய்கைகள், யக்ஞங்கள், அப்தர்களுக்குக்கொடுக்கிற தக்ஷிணைகள் என்றவைகளும்இதுதான்; ராஜன்! எனக்கு எல்லாக்கார்யங்களும் இது மூலமாகத்தாம் நடக்கவேண்டும்; இதுதான் யாவும் ஸத்யம்; அதிகமாய்ப் பேசுவதில் என்ன பயன்? காமதேனுவை நான் கொடுக்கவேமாட்டேன் (இதுதான் கடைசியான பேச்சு)" என்று சொல்லிவிட்டார். உஉ

ஐம்பத்துமூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

[illegible] ஸர்க்க:

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௩
[[illegible]]
[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௭
[illegible]
[illegible] ௮
[illegible]
[illegible] ௯
[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible] ௧௧
[illegible]
[illegible] ௧௨
[illegible]
[illegible] ௧௩

* “ [illegible].”

ஐம்பத்து நான்காவது ஸர்க்கம்.

சபளையென்றும் காமதேநுவை வஸிஷ்ட முனிவர் கொடுக்காமற்போனவுடனே தத்க்ஷணமே விச்வாமித்ரர், அதை (பலாத்கரித்து) இழுத்துக்கொண்டு போகத்தொடங்கினர். ௧

ராம! மஹாவைர்யமுடைய (விச்வாமித்ர)வேந்தரால் அவ்வாறு இழுத்துக்கொண்டு போகப்பட்ட சபளையானது துக்கித்து அழுது சோகத்தால் இளைத்ததாகி, "மஹாத்மாவாயுள்ள வஸிஷ்டர் என்னை யாதுகாரணத்தால் கைவிட்டார்! மிகவும் வருந்தி நிலையாய் நிற்கின்ற என்னை (விச்வாமித்ர)மன்னவரது படையாளர்கள் யாது காரணத்தால் இழுத்துக்கொண்டு போகிறார்கள்! மஹாத்மாவாகிய அவ்வஸிஷ்டருக்கு நான் என்ன அபகாரஞ்செய்தேன்! தர்மிஷ்டராயுள்ள அவ்வஸிஷ்டர் தம்மிடத்து பக்தியும் இஷ்டமும் கூடிய என்னை ஒரு குற்றமுஞ் செய்யாதிருக்கும்பொழுது ஏன் இவ்வாறு கைவிடுகிறார்!" என்று தானே மனதில் எண்ணிக்கொண்டது. ௩

பகைவர்களைக் கொல்லுகின்றவ! (ராம!) அப்பொழுது, அவ்விச்வாமித்ரரது படையாளர்களைப் பலவிதமாய்த் துன்பப்படுத்தி உதறிக்கொண்டு வாயுவேகமாய் வந்து மஹாத்மாவாகிய வஸிஷ்டருடைய பாதத்தின் அருகில நின்றது. ௫

அந்தச் சபளையானது மேக துந்துபி வாத்யங்களை நிகர்த்த அழுகைக்குரலுடன் வஸிஷ்டருக்கு எதிரில் நின்றுகொண்டு, "ஸ்வாமீ! ப்ரஹ்ம புத்ரரே! (வஸிஷ்டரே!) என்னை என்னகாரணத்தால் கைவிட்டீர்? என்னகாரணத்தால் என்னை உம்மிடத்தினின்று ராஜபடர்கள் கொண்டுபோகிறார்கள்" என்ற இம்மொழியைச் சொல்லிற்று. ௭

ப்ரஹ்மர்ஷியாயுள்ள வஸிஷ்டரானவர் இவ்வாறு (காமதேநுவினால்) சொல்லப்பட்டதாகி, சோகத்தால் மனங்குலைந்துநிற்கும் அந்தக் காமதேநுவைத் தமது தங்கைபோல் நினைத்து, இம்மொழியை யுரைத்தார்:— ௮

"சபளே! உன்னை நான் கைவிடவில்லை; நீ எனக்கோர் அபகாரமுஞ் செய்யவில்லை; இவ்விச்வாமித்ரராஜர் தமக்கு மிகுந்த வலிவிருக்கிறதாகவெண்ணி பலாத்காரமாக உன்னை என்னிடத்தினின்றுகொண்டு போகிறார்; ௯

(அவருக்கு) ஸமானமான (தேஹ)வலிவு எனக்குக் கிடையாது; மேலும், ராஜாவாயும் இனறைத்தினம் (நம்மிடம்) அதிதிபூஜை பெற்றவராயுமிருக்கிறார் (ஆதலால் சபிக்கலாகாது); அல்லாமலும், ஸேநாபலம் பொருந்தியவரும், க்ஷத்ரியகுலத்திற் பிறந்த ராஜாவும், பூமிக்கு (எல்லாம்) அதிகாரியுமாயிருக்கிறார்; ௰

இதோ குதிரைகளும் தேர்களும் யானைகளும் கொடிமரங்களுங்கூடிய அக்ஷௌஹிணீ என்கிற ஸைந்யமும் (அவருக்கு)பூரணமாயிருக்கிறது; ஆதலால், இவ்விச்வாமித்ரர் அதிக பலமுடையவர்." ௧௧

பேசவல்லதாகிய அந்தச்சபளையானது இவ்வாறு வஸிஷ்டர் சொன்னதைக்கேட்டு, மஹாப்ரபாவமுடைய ப்ரஹ்மர்ஷியாயுள்ள அவ்வஸிஷ்டரைநோக்கி வணங்கி, (மேல்வரும்) சொல்லைச் சொல்லிற்று:— ௧௨

"ப்ராஹ்மணரே! (வஸிஷ்டரே!) க்ஷத்ரியருக்கு (அதிக)பலமில்லை என்றும், பிராமணர்களுக்குத்தாம் அதிக பலம் என்றும் (பெரியோர்கள்) சொல்லுகிறார்கள்; ஆதலால க்ஷத்ரியபலத்தைவிட ப்ராஹ்மண பலந்தான் மேலானது;

[illegible]
[illegible] ௧௪
[illegible]
[illegible] ௧௫
[illegible]
[illegible] ௧௬
[illegible] ௧[illegible]
[illegible]
[illegible] ௧௭
[illegible]
[illegible]
[illegible] ௧௮
[illegible]
[illegible] ௨௦
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨௨
[illegible]
[illegible] ௨௩

[illegible] ஸர்க்க:

[illegible] ஸர்க்க:

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible] ௨

* "[illegible]" † "[illegible]"

உம்முடைய பலம் அளவிடமுடியாது; விச்வாமித்ரர் மஹாவீர்யமுடைய வராயிருந்தாலும் உம்மைவிட அதிக பலமுடையவரல்லர்; உமது பராக்ரமத் தை வெல்ல முடியாது; கச

மஹாப்ரபாவமுடையவரே! எனக்கு நீர் கட்டளையிடும்; உமது மந்த்ர பலம் என்னைக்காப்பாற்றும்; கொடிய வெண்ணங்கொண்ட அவ்விச்வாமித்ரரு டைய செருக்கையும் ஸைந்யத்தையும் நான் நாசஞ்செய்துவிடுகிறேன்." கரு

ராம! பெரும்புகழ்பெற்றவராயுள்ள வஸிஷ்டர் இவ்வாறு அந்தக்காமதேநு சொல்லவே, "(காமதேநுவே!) நீ, சத்ருபலத்தை அழிக்கும்படியான ஸைந்யத் தை உண்டுபண்ணு" என்றுரைத்தார். கசு

அவ்விச்வாமித்ரர் சொன்னதைக்கேட்டு அந்தக்காமதேநுவும் அப்படியே உண்டுபண்ணிற்று. கஎ

அரசே! (ராம!) அந்தக்காமதேநு ஒரு முக்கலிட்டது; அதினின்று 'பப்ல வர்கள்' என்ற ஜாதியர்கள் அநேகம்பேர்களுண்டாய், அவ்விச்வாமித்ரர் பார்த் துக்கொண்டிருக்கும்பொழுதே அவர் ஸைந்யத்தையெல்லாம் நாசஞ்செய்து விட்டார்கள். கஅ

பிறகு, அவ்விச்வாமித்ரவேந்தர் தமது ஸைந்யம் நாசமடைந்துவிடவே கோபத்தால் கண்களை விழித்து, நாநாவித அஸ்த்ரங்களைப் ப்ரயோகித்து பப்ல வர்களை நாசஞ்செய்தார், க௯

பப்லவர்களையெல்லாம் விச்வாமித்ரர் வதஞ்செய்ததை(காமதேநு)கண்டு பின்னும் யவநர்களோடுகூடிய சகர்களையும் உண்டாக்கியது. உ0

பொன் ஒளியை நிகர்த்த மிகுந்த ஒளியுடையவர்களாகி பொன்மயமான ஆடைகளை உடுத்தியவர்களாகி, மஹாவீர்யம் பொருந்தியவர்களாய்க் கத்தி களைக் கைகளில் தரித்தவர்களாகி உதித்த யவநர்களோடுகூடிய அந்தச் சகர் களால் பூமிநிறைந்துவிட்டது; அவர்கள், அக்நி எரிப்பதுபோல் அவ்விச்வாமித்ர ரது ஸைந்யத்தை எரித்துவிட்டார்கள். உஉ

பிறகு, விச்வாமித்ரர் தம் பராக்ரமத்தை வெளியிட்டு அஸ்த்ரங்களை எடுத் துப் ப்ரயோகித்தார்; யவந-காம்போஜர்கள், பப்லவர்கள் என்னும் எல்லோரும் அந்த அஸ்த்ரங்களால் அடிக்கப்பட்டு குழப்பமடைந்துவிட்டார்கள். உங

ஐம்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஐம்பத்தைந்தாவது ஸர்க்கம்.

பிறகு, அந்த யவநர்கள் முதலியவர்கள் விச்வாமித்ர அஸ்த்ரத்தால் குழப்ப மடைந்ததை வஸிஷ்டர் கண்டு, "காமதேநு! (மறுபடியும்) யோகமஹிமையி னால் (படைகளை) ஸ்ருஷ்டி" என்று கட்டளையிட்டார். க

பிறகு அந்தக் காமதேநு முக்கலிடவே, ஸூர்யனை நிகர்த்து மையுங் கத் தியுமாய் அதன் மடியிலிருந்து பப்லவர்கள் என்றவர்களும் காம்போஜர்கள் என்றவர்களும் உண்டானார்கள்; உ

[illegible]
[illegible] ங
[illegible]
[illegible] ச
[illegible]
[illegible]
[illegible] ரு
[illegible] ௬
[illegible]
[illegible] எ
[illegible]
[illegible] அ
[illegible]
[illegible] கூ
[illegible]
[illegible] க0
[illegible]
[illegible] கக
[illegible]
[illegible] கஉ
[illegible]
[illegible] கங
[illegible]
[illegible] கச
[illegible]
[illegible] கரு

* [illegible] † [illegible]
[illegible]

யோனியிலிருந்து யவநர்களும், குதத்திலிருந்து சகர்களும், மயிர்க்கால்களிலிருந்து 'ம்லேச்சர்கள், ஹாரீதர்கள், கிராதகர்கள் என்றவர்களும் உண்டானார்கள்; ௩

ரகுநந்தந! அவர்களெல்லோரும் விச்வாமித்ரருடைய ஸைந்யத்தையெல்லாம் காலாள்களோடும் யானைகளோடும் குதிரைகளோடும் தேர்களோடும் நாசஞ்செய்துவிட்டார்கள். ௪

மஹாத்மாவாயுள்ள வஸிஷ்டர், (தமது காமதேநுவைக்கொண்டு விச்வாமித்ர)ஸைந்யத்தைநாசஞ்செய்துவிட்டதை விச்வாமித்ரரது புத்ரர்கள் நூறு பேரும் கண்டு மிக்க சினங்கொண்டு நாநாவித ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வஸிஷ்ட மஹர்ஷியை நோக்கி (போர்புரிய)எதிர்த்தோடினார்கள். ௫

வஸிஷ்ட மஹர்ஷியும் தமது 'ஹூம்'என்ற சப்தத்தாலேயே அவர்களைத் தஹித்தார்; ௬

மஹாத்மாவாயுள்ள வஸிஷ்டர், அவ்விச்வாமித்ரரது புத்ரர்களைக் குதிரைகளுடனும் தேர்களுடனும் போர்வீரர்களுடனும் ஒருமுஹூர்த்தகாலத்திற்குள் நீறாக்கிவிட்டார். ௭

பெரும்புகழ் பெற்றவராயுள்ள விச்வாமித்ரர், தமதுஎல்லாப்பிள்ளைகளும் படைகளும் மாண்டுவிட்டதைக்கண்டு வெட்கங்கொண்டு,அப்பொழுதே சிந்தாக்ராந்தராய்விட்டார். ௮

அலைகின்ற கடல்போலும், பல்லுப்பிடுங்கிய பாம்புபோலும், ராஹுவினால் க்ரஹிக்கப்பட்ட ஸூர்யன்போலும் உடனே ஒளிகுன்றினவராய்விட்டார். ௯

தம்பிள்ளைகளும் படைகளும் மாண்டுவிடவே, சொந்து இறகொடிந்தபக்ஷி போலாகி, மிக்கும் உத்ஸாஹமுங் குலைந்து மிக்க துக்கமடைந்தார். ௧௦

(எல்லாம்மாண்டு கடைசியாய் நின்ற) தம்புத்ரரொருவரை அழைத்து, "(அப்ப!) நீ க்ஷத்ரிய தர்மப்படி பூமியைப் பாதுகாத்துவா" என்று சொல்லி ராஜ்யத்தை ஒப்பித்துவிட்டு வநத்திற்கே போய்விட்டார்; ௧௧

பெரும்புகழாளராகிய அவ்விச்வாமித்ரர், கிந்நரர்களாலும் உரகர்களாலும் அடையப்பட்டதாயுள்ள ஹிமவத் பர்வதத்தின் தாழ்வரையை யடைந்து, சிவபிரானது அநுக்ரஹம் பெறுதற்காகத் தவம்புரிந்தார். ௧௨

பிறகு சிலநாள்கழிந்தபின்பு,சிவபெருமான்வ்ருஷபவாஹநாரூடராய்வந்து, மஹாபலமுடைய விச்வாமித்ரருக்குத் தர்சநங்கொடுத்தார். ௧௩

"மன்னவ! (விச்வாமித்ர!)நீஎதற்காகத்தவஞ்செய்கிறாய்? நீசொல்லவேண்டியதைச் சொல்லு; நான் வரங்கொடுக்கிறேன்; உனக்கு என்ன வரம் வேண்டும் சொல்லு"என்றார். ௧௪

பெருந்தவம்புரிந்த விச்வாமித்ரர், இவ்வாறு சிவபெருமான் சொல்லக்கேட்டு, அந்த மஹாதேவரைத்தெண்டனிட்டு இம்மொழியைக் கூறினார்:— ௧௫

[illegible]
[illegible] கசு
[illegible]
[illegible] கஎ
[illegible] கஎ௨
[illegible] கஅ
[illegible]
[illegible] க௯
[illegible]
[illegible] உ0
[illegible]
[illegible] உக
[illegible]
[illegible] உஉ
[illegible]
[illegible] உ௩
[illegible]
[illegible] உச
[illegible]
[illegible] உரு
[illegible]
[illegible]
[illegible]
[illegible] உஎ
[illegible]
[illegible] உஅ

[illegible]

[illegible]

"ப்ரபோ! மஹாதேவா! என்னிடத்தில் தேவரீர்க்குப் ப்ரீதியிருக்கும் பக்ஷத்தில், தனுர்வேதத்தை ஸாங்கோபாங்கமாகவும் உபநிஷத் ரஹஸ்யங்களோடும் தேவரீர் எனக்கு அருளிக்கவேண்டும்; ௧௫

தேவர்கள், தானவர்கள், மஹர்ஷிகள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள் முதலிய எல்லாருடைய அஸ்த்ரங்களும் எனக்குத்தெரியவேண்டும்; ௧௬

தேவதேவா! உமது அநுக்ரஹத்தால் என் மநோரதம் நிறைவேறவேண்டும்." ௧௭

தேவபெருமானும், "அப்படியேயாகட்டும்" என்றுசொல்லி (விச்வாமித்ரருக்கு) சொல்லிவிட்டுப்போய்விட்டார். ௧௮

மிகுந்த செருக்குடன் கூடியிருந்த ராஜர்ஷியாகிய விச்வாமித்ரர், அஸ்த்ரங்களையெல்லாம் பெற்று உடனே மஹாபலமுடையவராகி, மிகுந்த செருக்குடையவராக ஆய்விட்டார். ௧௯

பர்வகாலத்துக் கடல்போல் (இவ்விச்வாமித்ரர்)வீர்யம் பெருகி, வஸிஷ்ட மஹர்ஷியை நாசஞ்செய்துவிட்டதாகவே எண்ணிவிட்டார். ௨0

பிறகு,(விச்வாமித்ர)வேந்தர், அவ்வஸிஷ்டரது ஆச்ரமத்திற்குப்போய் அஸ்த்ரங்களைப் ப்ரயோகித்தார்; அந்த அஸ்த்ரங்கள் தம்தேஜஸினால் அவ்வஸிஷ்டரது தபோவநத்தையெல்லாம் எரித்துவிட்டது. ௨௧

பேரறிவுபெற்ற விச்வாமித்ரர் இவ்வாறு அஸ்த்ரம் ப்ரயோகிப்பதை எல்லா முனிவர்களுங்கண்டு, பத்து திக்குகளிலும் ஓடிவிட்டார்கள்; ௨௨

ஆயிரக்கணக்காயுள்ள வஸிஷ்டரது சிஷ்யர்களும், ம்ருகங்களும் பக்ஷிகளும், பயங்கரமாய்விட்ட அவ்வாச்ரமத்தினின்று பயந்து நாநாதிக்குகளிலும் ஓடலாயிற்று; ௨௩

மஹாத்மாவாகிய வஸிஷ்டருடைய ஆச்ரமமிருக்கிற இடம் ஒரு முஹூர்த்த காலத்திற்குள், சூந்யமாய் (ஜநம் முதலியவைகளொன்றுமில்லாததாய்) ஆய்விட்டது; நிச்சப்தமாயும் உவர்மண்பூமிக்கு ஸமாநமாயும் ஆய்விட்டது. ௨௪

"பனியை ஸூர்யன் நாசஞ்செய்வதுபோல் விச்வாமித்ரனை நான் இப்பொழுதே நாசஞ் செய்துவிடுகிறேன், ஒருவரும் பயப்படவேண்டாம்" என்று அடிக்கடி வஸிஷ்டரும் சொன்னார். ௨௫

மஹாப்ரபாவமுடைய வஸிஷ்ட மஹர்ஷி இவ்வாறு சொல்லி, சினந்து விச்வாமித்ரரைப்பார்த்து, "மூட! நான் வெகுகாலமாய் வளர்த்து அழகாய் வைத்திருந்த ஆச்ரமத்தை நீ கெட்ட நடக்கைகொண்டு பாழ்பண்ணினாய்; ஆதலால் நீ (க்ஷேமமாக) இருக்கமாட்டாய்" என்ற இம்மொழியைக்கூறினார். ௨௭

இவ்வாறு கூறி மிகச்சினந்தவராய், புகையில்லாதிருக்கிற (ப்ரளய)கால அக்நிபோலவும் இரண்டாவது யமதண்டம்போலவும் விளங்கும்(தமது ப்ரஹ்ம) தண்டத்தை எடுத்துக்கொண்டு நின்றார். ௨௮

ஐம்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

அத [illegible] ஸர்க:

[illegible]
[illegible] க
[illegible]
[illegible] உ
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible] ௬
[illegible]
[illegible] ௭
[illegible]
[illegible] ௮
[illegible]
[illegible] ௯
[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible]
[illegible] ௧௧
[illegible] ௧௨
[illegible]
[illegible] ௧௩
[illegible] ௧௪

ஐம்பத்தாருவது ஸர்க்கம்.

மிக்கவலியாகிய விச்வாமித்ரர், இவ்வாறு வஸிஷ்டரால் சொல்லப்பட்டு தமது ஆக்னேயாஸ்த்ரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, "வஸிஷ்ட! இரு இரு (உன்னைசும்மாவிடுகிறதில்லை)" என்று சொன்னார். ௧

வஸிஷ்டபகவானும் சினங்கொண்டவராய், இரண்டாவது யமதண்டம் போன்ற தமது ப்ரஹ்மதண்டத்தை எடுத்துக்கொண்டு(விச்வாமித்ரரைநோக்கி) இம்மொழியைப்புகன்றார்:— ௨

“அதம க்ஷத்ரியா! விச்வாமித்ரா; இதோ நிற்கிறேன்; உனக்குண்டான பலத்தைக்காட்டு (பார்க்கலாம்); நீ சஸ்த்ரம் ஸம்பாதித்து வந்த கர்வத்தை இப்பொழுதே நாசஞ்செய்து விடுகிறேன்; ௩

க்ஷத்ரிய குலத்துப்பெருமையைக் கெடுக்கின்றவனே! உன்னுடைய க்ஷத்ரிய பலம் எங்கே! என்னுடைய ப்ராஹ்மண பலம் எங்கே! திவ்யமாயுள்ள எனது ப்ரஹ்ம(தண்டத்தின்)பலத்தைப் பாரு.” ௪

அவ்விச்வாமித்ரருடைய ஆக்னேயாஸ்த்ரமானது பயங்கரமாய் (வஸிஷ்டர்)மேல்வந்துவிழத்தொடங்கிற்று; நீரினால் அனல் அடங்குவது போல் அந்த அஸ்த்ரம் ப்ரஹ்மதண்ட(பல)த்தால் அடங்கிவிட்டது. ௫

வாருணம், ரௌத்ரம், ஐந்த்ரம், பாசுபதம், ஐஷீகம் என்ற அஸ்த்ரங்களைக் கோபத்துடன் விச்வாமித்ரர், (வஸிஷ்டர்மீது)ப்ரயோகித்தார்; ௬. மானவம், மோஹநம், காந்தர்வம், ஸ்வாபநம், ஜ்ரும்பணம், மாதநம், ஸந்தாபநம், விலாபநம், ௭. சோஷணம், தாரணம், வெல்லமுடியாத வஜ்ராஸ்த்ரம், ப்ரஹ்மபாசம், காலபாசம், வருணபாசம், ௮. இஷ்டமான பைநாகாஸ்த்ரம், சுஷ்காசநி, ஆர்த்ராசநி, தண்டாஸ்த்ரம், பைசாசாஸ்த்ரம், க்ரௌஞ்சாஸ்த்ரம், ௯. தர்மசக்ரம், காலசக்ரம், விஷ்ணுசக்ரம், வாயவ்யம், மதநம் ஹயசிரஸ் என்கிற அஸ்த்ரங்கள், ௧௦. இரண்டு சக்திகள், கங்காலம், முஸலம், மஹத்தான வித்யாதர அஸ்த்ரம், பயங்கரமான காலாஸ்த்ரம், கோரமான த்ரிசூலம், காபாலம், கங்கணம் என்கிற அஸ்த்ரங்களையும் (வஸிஷ்டர்மீது)ப்ரயோகித்தார்; ௧௧. ரகுநந்தந! இந்த அஸ்த்ரங்களெல்லாவற்றையும் ப்ரயோகித்தார். ௧௨

அது வஸிஷ்ட மஹர்ஷியினிடத்தில் ஆச்சர்யகரமாய் (அதாவது சிறிதும் பயன்படாமல்) போய்விட்டது; ௧௩. ப்ரஹ்ம புத்ரராயுள்ள வஸிஷ்டர் அந்த விச்வாமித்ர-அஸ்த்ரங்களையெல்லாம் (தமது) ப்ரஹ்ம தண்டத்தால் தடுத்துவிட்டார். ௧௪

அந்த அஸ்த்ரங்கள் விழுந்துவிடவே விச்வாமித்ரர் (தமது)ப்ரஹ்மாஸ்த்ரத்தைப் ப்ரயோகித்தார். ௧௫

[illegible]
[illegible] ௧௪
[illegible] ௧௫
[illegible]
[illegible] ௧௬
[illegible]
[illegible] ௧௭
[illegible]
[illegible] ௧௮
[illegible]
[illegible] ௧௯
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨௦
[illegible] ௨௧
[illegible] ௨௨
[illegible]
[illegible] ௨௩
[illegible]
[illegible] ௨௪

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே ஷட்பஞ்சாஶ: ஸர்க்க:

அத ஸப்தபஞ்சாஶ: ஸர்க்க:

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨

* [illegible] † [illegible]

அவ்வாறு ப்ரஹ்மாஸ்த்ரத்தை விச்வாமித்ரர் ப்ரயோகிப்பதைத் தேவ ருஷிகளும், கந்தர்வர்களும், பெரிய உரகர்களும், அக்கி முதலிய தேவர்களும் கண்டு பெரிய குழப்பமடைந்தனர். கரு. (விச்வாமித்ரரால்) ப்ரஹ்மாஸ்த்ரம் ப்ரயோகிக்கப்படவே மூவுலகமும் கிடுகிடென்று நடுங்கிவிட்டது. கசு

ராகவ! மிக்க பயங்கரமான அந்தப் ப்ரஹ்மாஸ்த்ரத்தையும் வஸிஷ்டர் தம் ப்ரஹ்மதேஜஸால் ஸம்பாதித்த ப்ரஹ்மதண்டத்தால் அடித்துவிட்டார். கஎ

(அவ்வாறு விச்வாமித்ரரது) ப்ரஹ்மாஸ்த்ரத்தைத் தடுக்கும் வஸிஷ்டருடைய முகமானது, கண்ணால் பார்க்கும்பொழுதே கிடுகிடென்று நடுங்கும்படியான பயத்தையும் மூர்ச்சையையும் மூவுலகங்களுக்கும் விளைவித்தது. கஅ

மஹாத்மாவாயுள்ள வஸிஷ்டருடைய மயிர்க்கால்களெல்லாவற்றினின்றும், புகையுடன் கூடி அக்கி எரிவதுபோல் நெருப்புப்பொறிகள் பறக்கலாயின. ககூ

வஸிஷ்டர் கையில் பிடித்த ப்ரஹ்மதண்டமும் புகையில்லாமல் விளங்கும் (ப்ரளய)காலத்து அக்கிபோலும் இரண்டாவது யமதண்டம்போலும் ஜ்வலித்தது. உ0

பிறகு, முனிவர்களெல்லோரும் "ஸ்வாமீ! வஸிஷ்ட மஹர்ஷியே! உம்முடைய பலம் அளவிடமுடியாது; பெருந்தவம் புரிந்த விச்வாமித்ரரையும் நீர் ஜயித்து விட்டீர்; உமது (ப்ரஹ்மதண்டத்தின்) தேஜஸை உமது ப்ரபாவத்தாலேயே அடக்கச்செய்யும்; (இனியாவது) உலகங்கள் மனக்கவலை தீர்ந்து ஸுகமாயிருக்கவேண்டும்; நீர் மனங்கனியவேண்டும்" என்று சொல்லிப் புகழ்ந்தார்கள். உக

பெருந்தவம் புரிந்தவரும், மஹாப்ரபாவமுடையவருமாயுள்ள வஸிஷ்டரானவர், இவ்வாறு (முனிவர்கள்) சொல்லவே பொறுத்துக்கொண்டார். (கோபத்தை அடக்கினர்.) உஉ

விச்வாமித்ரரும் தோல்வியடைந்து பெருமூச்சுவிட்டு, (தாமே) இவ்வாறு சொல்லிக் கொண்டார்:— உங

"சீ! க்ஷத்ரிய பலத்தையும் ஒரு பலமாகச் சொல்லலாமா! ப்ராஹ்மணர்களின் ப்ரபாவபலந்தான் பலம்; நமது எல்லா அஸ்த்ரங்களையும் ஒரு ப்ரஹ்மதண்டம் நாசமாக்கிவிட்டதே! உச. ஆதலால், இதை நாம் நன்றாய் ஆராய்ந்து அஹங்காரத்தை ஒழித்துவிட்டு, ப்ராஹ்மணத் தன்மையைப் பெறவேண்டி மஹத்தான தவத்தைச் செய்ய வேண்டும்." உரு

ஐம்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஐம்பத்தேழாவது ஸர்க்கம்.

ராகவ! பிறகு, அவ்விச்வாமித்ரர், மஹாத்மாவான வஸிஷ்டரோடு தமக்கு நேர்ந்த வீணான வைரத்தையும் பரிபவத்தையும் நினைத்து பரிதபித்து பெருமூச்செறிந்து, தம் பத்னியையும் அழைத்துக்கொண்டு தென்திசைக்குப் போய், பயங்கரமாய்ப் பெருந்தவம் புரிந்தார். உ

பிறகு விச்வாமித்ரருக்கு, தர்மத்தில்பற்றுள்ள ஹவிஷ்யந்தர், மதுஷ்யந்தர், த்ருடநேத்ரர், மஹாரதர் என்ற பெயருடைய பிள்ளைகள் உண்டானார்கள். ௫

(அவ்வாறு தவஞ்செய்யத் தொடங்கி) ஆயிரவர்ஷமான பின்பு, உலகங்களுக்குப் பாட்டனாராகிய ப்ரஹ்மதேவர்வந்து விச்வாமித்ரமுனிவரை நோக்கி, "குசிகருலத்துப் பிள்ளாய்! நீ செய்ததவத்தால் (இனி) எல்லா ராஜர்ஷிகளையும் ஜயித்துவிடுவாய்; நீ இவ்வாறு தவஞ் செய்ததனால் உனக்கு 'ராஜர்ஷி' என்கிற பட்டம் கொடுக்கிறேன்" என்ற இன்மொழியைக் கூறினர். ௬

மஹா ப்ரபாவம்பெற்று உலகங்களுக்குப் பெரிய அதிகாரியாகிய ப்ரஹ்மதேவர், (விச்வாமித்ரருக்கு) இவ்வண்ணம் சொல்லிவிட்டு, தேவர்களுடன் தேவலோகத்திற்குப்போய் (அங்கிருந்து) ப்ரஹ்மலோகத்திற்குப் போய்ச் சேர்ந்து விட்டார். ௭

அந்தப் ப்ரஹ்மதேவர்கூறியதை விச்வாமித்ரரும் கேட்டு வெட்கத்தால் கொஞ்சம் தலைகுனிந்து, மிக்கதுக்கமடைந்து கோபத்துடன் கூடினவராகி "நாம், மஹத்தானதவத்தைச் செய்தோம்! எல்லாத்தேவர்களும் ருஷிகளும் நம்மை ராஜர்ஷி என்று சொல்லுகிறார்கள்! (ப்ரஹ்மர்ஷியென்று சொல்லவில்லை!) இப்போது நாம்செய்ததவத்திற்குப் பயனில்லையே! (ஆதலால் மறுபடியும் தவஞ்செய்யவேண்டும்)" என்ற சொல்லை (தாமே)சொல்லிக்கொண்டார் ௮

காகுத்ஸ்த! பெருந்தவம் புரிந்தவராயுள்ள விச்வாமித்ரர் இவ்வாறு மனதில் நிச்சயித்து மிக்க தைர்யங்கொண்டு, மறுபடியும் பெருந்தவம் புரிந்தார். ௯

இவர் இவ்வண்ணந் தவஞ்செய்துகொண்டிருக்கையில், இக்ஷ்வாகுவம்சத்தில் உதித்த 'த்ரிசங்கு' என்ற மன்னவரொருவர், ஐம்பொறிகளையும் வென்று ஸத்யத்தையே பேசி ப்ரஸித்திபெற்றவராகி இருந்தார். ௧௦

ராகவ! அந்தத் த்ரிசங்கு வேந்தர் (மாநுஷ) சரீரத்தோடேயே (ஸ்வர்க்கலோகத்திற்குப் போய்) தேவர்களின் மேலான கதியை அடையக்கருதி ஒரு யாகம் பண்ணவெண்ணினர். ௧௧

அந்தத் த்ரிசங்குராஜர் வஸிஷ்டரை அழைத்துத் தமது அபிப்ராயத்தை அவரிடம் தெரிவித்தார்; மஹாத்மாவாயுள்ள வஸிஷ்டரும், 'அந்த ஸங்கதி முடியாது' என்று சொல்லிவிட்டார். ௧௨

முடியாதென்று வஸிஷ்டர் சொல்லிவிடவே அந்தத் த்ரிசங்கு மன்னர் தம் கார்யம் நிறைவேறக்கருதி தென்திக்கை நோக்கிச் சென்றார்; அங்கு வஸிஷ்டருடைய புத்ரர்களிடம் போய்ச் சேர்ந்தார். ௧௩

மஹா பராக்ரமமுடைய த்ரிசங்குவானவர், வெகுகாலம் தவஞ்செய்து பெரும்புகழ்பெற்று விளங்கிய வஸிஷ்டபுத்ரர்கள் தவஞ் செய்துகொண்டிருந்த இடத்திற்குப்போய் அவ்வஸிஷ்ட புத்ரர்களைக் கண்டார் ௧௪

அந்தத் த்ரிசங்கு, மஹாத்மாக்களாகிய தம்குரு(வஸிஷ்ட)புத்ரர்களையடைந்து அவர்களெல்லோரையும் க்ரமமாய்த் தெண்டனிட்டு, வெட்கத்தால் கொஞ்சம் தலைவணங்கி, அஞ்சலிஹஸ்தராகி, அம்மஹாத்மாக்களெல்லோரையும் நோக்கி (மேல்வருமாறு) கூறலுற்றார்:— ௧௫

[illegible] ௧௭

[illegible] ௧௯

[illegible] ௨௦

[illegible] ௨௨.

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே ஸப்தபஞ்சாசஸ்ஸர்க்க:

"காப்பாற்ற வல்லவர்களாயுள்ள உங்களை நான் சரணமடைகிறேன்; சரணமடைந்த என்னை மஹாத்மாவாகிய (உங்கள் தந்தை) வஸிஷ்டரானவர் '[illegible] முடியாது' என்றுசொல்லி கைவிட்டார். ௧௭

நான் ஒரு பெரிய யாகஞ்செய்ய நினைத்திருக்கிறேன்; அவ்வாறு நான் [illegible] பெற்றுக்கொள்ளவேண்டும்; குருபுத்ரர்களாயுள்ள உங்களெல்லோரையும் நான் [illegible] கேட்டுக்கொள்ளுகிறேன். ௧௮

நீங்கள் தவஞ்செய்துகொண்டிருக்கிற ப்ராஹ்மணர்களாயிருக்கிற படியால் உங்களைத் தலைவணங்கி நான் கேட்டுக்கொள்ளுகிறேன்; [illegible] நீங்களெல்லோரும் ஒன்றுகூடி, தயைசெய்து யாகத்தை நடத்திவிக்கவேண்டும்; அவ்வண்ணம் செய்விக்கும் பக்ஷத்தில் நான் (இந்த மனுஷ்ய)சரீரத்துடனே தேவலோகத்தை அடைவேன். ௧௯

ருஷிகளே! (குருவாகிய)வஸிஷ்டரால் நிரஸ்கரிக்கப்பட்ட என்னை குருபுத்ரர்களாயுள்ள நீங்கள் தவிர ஒருவரும் [illegible] மாட்டார்கள் ௨௦

இக்ஷ்வாகுகுலத்தில் பிறந்த அரசர்களெல்லோர்க்கும் குருதாம் [illegible]; [illegible] எப்பொழுதும் அரசர்களைக் கடைத்தேற்ற [illegible]. அந்தக் குருவாகிய வஸிஷ்டருக்குப் பிறகு நீங்களெல்லோரும் எனக்குத் தைவம் ([illegible] நான் சரீரத்துடன் ஸ்வர்க்கம் போகும் படி நீங்கள் செய்ய வேண்டும்)." ௨௨.

ஐம்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

[illegible]

ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம்.

𑌅𑌥 𑌅𑌷𑍍𑌟𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌃 𑌸𑌰𑍍𑌗𑌃.

𑌤𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌶𑌙𑍍𑌕𑍋𑌰𑍍𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌕𑍍𑌰𑍋𑌧𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍।
𑌋𑌷𑌿𑌪𑍁𑌤𑍍𑌰𑌶𑌤𑌂 𑌰𑌾𑌮! 𑌰𑌾𑌜𑌾𑌨𑌮𑌿𑌦𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥ ௧
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑍋𑌽𑌸𑌿 𑌦𑍁𑌰𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍇! 𑌗𑍁𑌰𑍁𑌣𑌾 𑌸𑌤𑍍𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑌾।
𑌤𑌂 𑌕𑌥𑌂 𑌸𑌮𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌶𑌾𑌖𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍁𑌪𑍇𑌯𑌿𑌵𑌾𑌨𑍍॥ ௨
𑌇𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑍂𑌣𑌾𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌪𑍁𑌰𑍋𑌧𑌾𑌃 𑌪𑌰𑌮𑌾 𑌗𑌤𑌿𑌃।
𑌨 𑌚𑌾𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌿𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌵𑌚𑌨𑌂 𑌸𑌤𑍍𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑌃॥ ௩
𑌅𑌶𑌕𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌚𑍋𑌵𑌾𑌚 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍃𑌷𑌿𑌃।
𑌤𑌂 𑌵𑌯𑌂 𑌵𑍈 𑌸𑌮𑌾𑌹𑌰𑍍𑌤𑍁𑌂 𑌕𑍍𑌰𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌥𑌂 𑌤𑌵॥ ௪
𑌬𑌾𑌲𑌿𑌶𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠! 𑌗𑌮𑍍𑌯𑌤𑌾𑌂 𑌸𑍍𑌵𑌪𑍁𑌰𑌂 𑌪𑍁𑌨𑌃।
𑌯𑌾𑌜𑌨𑍇 𑌭𑌗𑌵𑌾𑌞𑍍𑌛𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵!॥
𑌅𑌵𑌮𑌾𑌨𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌶𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌹𑍇 𑌕𑌥𑌮𑍍। ௫௨
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑌦𑍍𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌕𑍍𑌰𑍋𑌧𑌪𑌰𑍍𑌯𑌾𑌕𑍁𑌲𑌾𑌕𑍍𑌷𑌰𑌮𑍍॥
𑌸 𑌰𑌾𑌜𑌾 𑌪𑍁𑌨𑌰𑍇𑌵𑍈𑌤𑌾𑌨𑌿𑌦𑌂 𑌵𑌚𑌨𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌗𑍁𑌰𑍁𑌣𑌾 𑌗𑍁𑌰𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑍈𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚॥

ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம்.

ராம! பிறகு (வஸிஷ்ட) ருஷியினுடைய நூறு புத்ரர்களும் த்ரிசங்குவினது மொழிகேட்டுச் சினங்கொண்டிம்மொழியையுரைத்தனர்:— ௧

"அறிவுகெட்ட த்ரிசங்குவே! ஸத்யத்தையே கூறுகின்ற குருவினால்(வஸிஷ்டரால்) கைவிடப்பட்டாயல்லயவா? அந்தக்குருவைவிட்டு எவ்வாறு நீ வேறொருவனையடுக்கின்றாய்? ௨

இக்ஷ்வாகுவம்சத்திற் பிறந்தவரெல்லோர்க்கும் புரோஹிதரேயன்றோ சிறந்த குரு; உண்மையையுரைக்கும் அதைக் குருவின் சொல் தள்ளத்தகாது. ௩

வஸிஷ்ட மஹர்ஷியே முடியாதென்றுசொல்லிவிட்ட யாகத்தை யாங்கள் எவ்வாறு உனக்குச் செய்துவைக்கமுடியும்? ௪

மன்னவ! நீ மூடன்; (ஆனதால் இவ்வாறு சொல்லுகிறாய்,) நீ வந்தபடி உன் பட்டணம் போய்ச்சேர்; வேந்தே! மேன்மைபெற்றவராகிய வஸிஷ்டர், மூவுலகங்கட்கும் யாகஞ்செய்துவைக்கவல்லவர்; அவருக்குண்டாகும் அவ்வவமானத்தை யாங்கள் எவ்வாறு பொறுப்போம்!" ௫௨

மிக்க சினங்கொண்டுரைத்த அவ்வஸிஷ்டபுத்ரர்களின் அந்தச்சொற்கேட்டு அந்தத்த்ரிசங்குமன்னவர் மீளவுமிவ்வஸிஷ்ட புத்ரர்களைநோக்கி"(குருபுத்ரர்களே!) குருவும் குருபுத்ரர்களும் என்னைக் கைவிட்டபடியால் நான்

[illegible] ௭
[illegible]
[illegible] ௮
[illegible] ௯
[illegible]
[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible] ௧௧
[illegible]
[illegible] ௧௨
[illegible]
[illegible] ௧௩
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௪
[illegible]
[illegible] ௧௫
[illegible]
[illegible] ௧௬
[illegible]
[illegible] ௧௭
[illegible]
[illegible] ௧௮
[illegible]
[illegible] ௧௯
[illegible]
[illegible] ௨௦

* [illegible]

வேறொருவனைக் குருவாகத் தேடிக்கொள்ளுகிறேன்; நீங்கள் தயவுடனே பொருளாக வைத்துக்கொண்டு ஸுகமாக வாழுங்கள்" என்ற சொல்லைச் சொன்னார். ௭

கொடியவையென்றெண்ணங்கொண்டு அந்தத் த்ரிசங்குமன்னர் கூறிய மொழியை வஸிஷ்ட குருவின் புதல்வர் கேட்டு மிகச்சினந்தவர்களாய், "நீ சண்டாளனாய்ப்போய்விடுக" என்று சபித்துவிட்டனர். ௮

மஹாத்மாக்களாகிய அவ்வஸிஷ்டபுத்ரர்கள் இவ்வாறு சொல்லிவிட்டுத் தமது ஆச்ரமஞ்சென்றார்கள். ௯

பிறகு இரவு சென்றவுடனே (த்ரிசங்கு) மன்னவர், சண்டாளத்தன்மையையடைந்து கறுத்தும் கடினவுருவமுடையராகித் தலைமயிர்குறைந்து கறுத்த வஸ்த்ரம் மயானத்து எழும்பு மாலைச் சாம்பல் இரும்புநகை என்றுமிவைகளைத் தரித்தவராக ஆய்விட்டார். ௧௦

ராம! சண்டாளரூபியாயிருக்கும் அந்தத் த்ரிசங்குவை அவரது மந்த்ரிகள் பட்டணத்திலுள்ளோர், தொடர்ந்துசெல்வோர் ஆகிய எல்லோருங்கண்டு குழுமியோடிவிட்டார்கள். ௧௧

காகுத்ஸ்த! அந்தத் த்ரிசங்குவேந்தர் (அந்தத் துக்கத்தாலேயே) பகலுமிரவும் தஹிக்கப்பெற்றும் மிக்கதைர்யங்கொண்டு விச்வாமித்ரமுனிவரிடம் போய்ச் சேர்ந்தார். ௧௨

ராம! வீணாத்தகார்யங் கைகூடாததுமன்றி சண்டாளரூபமும் பெற்ற அந்தத் த்ரிசங்குராஜனை விசவாமித்ரமுனிவர் கண்டு கருணைகொண்டார். ௧௩

மிக்கவலியராய் மிக்கதர்மிஷ்டராயுள்ள அவ்விச்வாமித்ரர் மனமிரங்கி, கோரரூபமுடைய (த்ரிசங்கு) ராஜனை நோக்கி, "மன்னவர்புதல்வராகிய த்ரிசங்கு! மிக்கவலியுடையவ! அயோத்யாநகரத்தரச! வீர! பயப்படவேண்டாம்; நீர் இங்குவந்த கார்யம் யாது? யாதுகாரணத்தால் சாபம்பெற்றுச் சண்டாளத்தன்மையடைந்தீர்." என்றவிம்மொழியைச்செப்பினார். ௧௪

பிறகு, சண்டாளரூபமடைந்தவத் த்ரிசங்குராஜர் பேசுவதிற் சமர்த்தராதலால், அவ்விச்வாமித்ரர் சொன்னசொல்லைக்கேட்டு அஞ்சலி ஹஸ்தராகி, பேசுவதிற்சமர்த்தராகிய அவ்விச்வாமித்ரரைப்பார்த்து சொன்னவாக்யமாவது:- ௧௫

"(ஸ்வாமி!) எனது குருக்களும் குருபுத்ரர்களும் நான் கேட்டுக்கொண்டதை ஏற்றுக்கொள்ளாது கைவிட்டார்கள் அந்தக்கோரிக்கையை நான்பெறாமற்போனதுமன்றி அதற்கு விபரீதமான பலனையும் அடைந்துவிட்டேன்; ௧௬

ஸ்வாமி! சரீரத்துடன் ஸ்வர்க்கம்போகவேண்டுமென்று எனக்கு எண்ணமுண்டாயிருக்கிறது; நானே அநேகயாகங்களைச்செய்தேன்; அந்தப் பலன் மட்டும் உண்டாகவில்லை; ௧௭

ஸ்வாமி! எப்படிப்பட்ட ஆபத்காலத்திலும் நான் இதுவரையில் ஒருபொய்பம் சொல்லவில்லை; இனிமேலும் ஒருபொழுதுஞ் சொல்லமாட்டேன்; க்ஷத்ரியதர்மம் ஸாக்ஷியாக உமதுமுன்னிலையில் ஆணையிடுகிறேன்; ௧௮

நான் அநேகவித யாகங்களைச் செய்திருக்கிறேன்; ஜனங்களைத் தர்மத்தவறாது பாலித்திருக்கிறேன்; மஹாப்ரபாவமுள்ள குருக்களையும் எனது நற்குணங்கொண்டு ஸந்தோஷஞ்செய்திருக்கிறேன் ௧௯

[illegible]

[illegible]

———

[illegible]

[illegible] ௧

[illegible] ௨

[illegible] ௩

[illegible] ௪

[illegible] ௫

[illegible] ௬

[illegible]

(விச்வாமித்ர) மஹாமுனிவரே! (இவ்வாறு) ஈர்மத்தியிலேயே இலேன்ற நான் எனக்கொரு யாகஞ்செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு கையில் என்னிடத்திற் குருக்கள் ஸந்தோஷமடைந்தாரிலர் (அதாவது முடியாதென்றார்கள்.) ௨௧ ௐ

தைவமே மேன்மையைபற்றது; புருஷனுடைமுயற்சி பயனற்றதே; தைவமே யெல்லாவற்றையும் தன்வசமாக்கிக்கொண்டிருக்கிறது; (ஆதலால்) தைவந்தான் எல்லார்க்கும் மேலான கதி என்றெண்ணுகிறேன்; ௨௨ ௐ

தைவச்செயற்கெட்டு மிகவுந்துயரப்பட்டு உமது அநுக்ரஹத்தைக்கோரும் என்னிடத்து நீர் மனமிரங்கவேண்டும்; உமக்கு நன்மையுண்டாகுக, ௨௩ ௐ

வேறொருவரை நான் சரணமடையமாட்டேன்; வேறொருவரும் எனக்கு ரக்ஷகராகமாட்டார்; (எனக்குநேர்ந்திருக்கிற கொடிய) தைவச்செயலை உமது ப்ரயத்னங்கொண்டு நீக்குவிக்கவேண்டும்.'' ௨௪ ௐ

ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம்·

சண்டாளனைப்போலவே ரூபமுடையவராகி இவ்வாறு சொல்லிக்கொண்டு நிற்கும் (த்ரிசங்கு) மன்னவனைப்பார்த்து கருணைபுரிந்து விச்வாமித்ரர் ஒரின்மொழியைக்கூறினார்:— ௧

''இக்ஷ்வாகுவம்சத்திற்பிறந்த மஹாராஜ! குழந்தாய்! (த்ரிசங்கு!) நல்லது, நீர் மிக்கதர்மிஷ்டரென்பது எனக்குத்தெரியும்; உம்மை நான் காப்பாற்றுகிறேன்; பயப்படவேண்டாம்; ௨

வேந்தே! நற்செய்கையுடையர்களாகியாகத்திற்கு உதவிசெய்யும் மஹர்ஷிகளெல்லோரையும் நான் வரவழைக்கிறேன்; அதனால் நீர் ஸுகமாக யாகஞ்செய்யலாம்; ௩

குருசாபத்தால் வந்த சண்டாள ரூபமுடைய இந்தச் சரீரத்தோடேயே நீர் ஸ்வர்க்கலோகம்போகலாம்; ௪

சரணமடைகிறவர்களைக்கைவிடாத என்னை நீர் சரணமாகக்கொண்டதனால் உமக்கு ஸ்வர்க்கம் கையிலேயே வந்துவிட்டதென்று நான் எண்ணுகிறேன். ௫

மஹாப்ரபாவமுள்ள விச்வாமித்ரர் இவ்வாறு (த்ரிசங்குவுக்குச்)சொல்லிவிட்டு, மிக்கதர்மிஷ்டர்களாய் விசேஷங்களையறிந்தவர்களுள் சிறந்த தமது புத்ரர்களை அழைத்து, யாகத்திற்கு வேண்டிய சரக்குகளையெல்லாஞ் சேர்க்கும்படி கட்டளையிட்டார். ௬

பிறகு சிஷ்யர்களெல்லோரையும் அழைத்து, ''குழந்தைகளே! (சிஷ்யர்களே!) நண்பர்கள், ருத்விக்குகள், அநேகவிஷயங்களைக்கேட்டுணர்ந்த பெரியோர்கள் என்பவர்களோடுகூட எல்லா ருஷிகளையும் நான் சொன்னேனென்று சொல்லி அழைத்துவாருங்கள்; அழைத்துவரும்படி நான் குறிப்பிடுகிறவருள்ளும் வேறே எவனாயினும் ஏதேனும் அலக்ஷ்யமாகச் சொன்னால் அதையெல்லாம் என்னிடம் வந்து நீங்கள் சொல்லவேண்டும்'' என்னும் மொழியையுரைத்தார். ௭ ௐ

[illegible]
[illegible] ௯
[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible] ௧௧
[illegible]
[illegible] ௧௨
[illegible]
[illegible] ௧௩
[illegible]
[illegible] ௧௪
[illegible]
[illegible] ௧௫
[illegible]
[illegible] ௧௬
[illegible]
[illegible] ௧௭
[illegible]
[illegible] ௧௮
[illegible]
[illegible] ௧௯
[illegible]
[illegible] ௨௦
[illegible]
[illegible] ௨௧
[illegible]
[illegible] ௨௨

[illegible]

பிறகு அவ்விச்வாமித்ரருடைய சிஷ்யர்கள், அவரது வாக்யத்தைக்கேட்டு எல்லாதிக்குகளுக்கும் புறப்பட்டுப்போய் எல்லார்க்குஞ்சொல்லிவிட்டு, அவரது கட்டளைப்படி எல்லாத்திக்குகளினின்றும் வந்து சேர்ந்துவிட்டார்கள். ௯

அந்த சிஷ்யர்களெல்லோரும், கொழுந்துவிட்டெரியும் அனல்போல விளங்கும் விச்வாமித்ர முனிவரிடம் வந்து, ருஷிகள் சொன்னசொல்லையெல்லாந் தெரிவித்த விதமாவது:— ௰

“ஸ்வாமி! மஹோதயர் என்றவர் தவிர மற்றவர்களெல்லோரும் நீர்சொன்னவாக்கைத் தெரிவிக்கக்கேட்டு எல்லாதேசங்களினின்றும்வந்து கொண்டிருக்கின்றார்கள்; சிலர் வந்துசேர்ந்தும்விட்டார்கள்; ௧௧

மஹாமுனிவரே! வஸிஷ்டருடைய அந்தப்பிள்ளைகள் நூறுபேரும் மிக்க சினங்கொண்டு சொன்னசொல்லையெல்லாந் தெரிவிக்கிறோம், கேளும்; ௧௨

“சண்டாளனுங் க்ஷத்ரியன் செய்துவைக்கும் யாகத்தின் ஹவிஸ்ஸை எப்படி தேவர்களும் ருஷிகளும் புசிப்பார்கள்? ௧௩

அந்தணர்கள்தாம், சண்டாளனிடம் போஜனத்தைப்புசித்து, விச்வாமித்ரரால் ரக்ஷிக்கப்பட்டு, பாவமற்று எப்படி ஸ்வர்க்கமடைவார்கள்?” ௧௪

மஹாமுனிவரே! அவ்வஸிஷ்டபுத்ரரெல்லாரும் மஹோதயரென்பவரோடுகூடி, இத்தகைய கொடிய மொழியைக் கூறினர். ௧௫

விச்வாமித்ர மஹாமுனிவரானவர், வஸிஷ்டபுத்ரர்கள்கூறிய கடுஞ்சொல்லைத் தமது சிஷ்யர்களெல்லாரிடத்தினின்றுங் கேட்டு கண்சிவந்து கோபத்துடன் கூடி இம்மொழியைச் சொன்னார்:— ௧௬

“உக்ரமாய்த் தவத்தைச் செய்து தோஷமற்றிருக்கின்ற என்னைத் தூஷிக்கிற துராத்மாக்கள், சாம்பலாய் விடவேண்டும்; ஸந்தேஹமில்லை; ௧௭

என்னைத் தூஷிக்கிறவர்களெல்லாரும் இப்போதே காலபாசத்தால் கட்டுண்டு காலன்மனைபுகுந்து எழுநூறு ஜன்மம் பிணத்தைப்பிடுங்கித்தின்றுகொண்டிருக்கவேண்டும்; ௧௮

கருணையற்று, என்றும் நாயிறைச்சியுண்டு முஷ்டிகரென்கிற இழிகுலத்தோர்களாய், விகாரமானபேச்சும் செய்கையும் ரூபமுமுடையவர்களாய் இவ்வுலகங்களிலெங்குந்திரியவேண்டும்: ௧௯

மஹோதயனென்பவன், தூஷிக்கத்தகாத என்னைத் தூஷித்தான்; அவன், எல்லாவுலகங்களாலும் தூஷிக்கப்பட்டு வேடனாய் விடவேண்டும்; ௨௰

எனக்குக் கோபத்தை விளைத்ததனால் தயையற்று எப்போதும் ஜந்துக்களைக்கொல்லுவதிலேயே விருப்பங்கொண்டு வெகுகாலம் நரகத்தில் விழுந்து கிடக்கவேண்டும். ௨௧

பெருந்தவம்புரிந்து மஹாப்ரபாவம்பெற்ற விச்வாமித்ர மஹாமுனிவர், ருஷிகளின் நடுவில் இவ்வளவுமட்டும் சொல்லி நிறுத்திவிட்டார். ௨௨

ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

அத ஷஷ்டிதம: ஸர்க:

தபோபலஹதாந் க்ருத்வா வாஸிஷ்டாந் ஸமஹோதயாந் ।
ருஷிமத்யே மஹாதேஜா விஶ்வாமித்ரோ(அ)ப்யபாஷத ॥ ௧
அயமிக்ஷ்வாகுதாயாதஸ்த்ரிஶங்குரிதி விஶ்ருத: ।
தர்மிஷ்டஶ்ச வதாந்யஶ்ச மாம் சைவ ஶரணம் கத: ।
தேநாநேந ஶரீரேண தேவலோகஜிகீஷயா । ௨
யதாயம் ஸ்வஶரீரேண ஸ்வர்கலோகம் கமிஷ்யதி ॥
ததா ப்ரவர்த்யதாம் யஜ்ஞோ பவத்பிஶ்ச மயா ஸஹ । ௩
விஶ்வாமித்ரவச: ஶ்ருத்வா ஸர்வ ஏவ மஹர்ஷய: ॥
ஊசு: ஸமேத்ய ஸஹஸா தர்மஜ்ஞா தர்மஸம்ஹிதம் । ௪
அயம் குஶிகதாயாதோ முநி: பரமகோபந: ॥
யதாஹ வசநம் ஸம்யகேதத்கார்யம் ந ஸம்ஶய: । ௫
அக்நிகல்போ ஹி பகவாந் ஶாபம் தாஸ்யதி ரோஷித: ॥
தஸ்மாத்ப்ரவர்த்யதாம் யஜ்ஞ: ஸஶரீரோ யதா திவம் ।
கச்சேதிக்ஷ்வாகுதாயாதோ விஶ்வாமித்ரஸ்ய தேஜஸா ॥
ததா ப்ரவர்த்யதாம் யஜ்ஞ: ஸர்வே ஸமதிதிஷ்டத । ௭
ஏவமுக்த்வா மஹர்ஷயஸ்தே சக்ருஸ்தாஸ்தா: க்ரியாஸ்ததா ॥
யாஜகஶ்ச மஹாதேஜா விஶ்வாமித்ரோ(அ)பவத்க்ரதௌ । ௮
ருத்விஜஶ்சாநுபூர்வ்யேண மந்த்ரவந்மந்த்ரகோவிதா: ॥
சக்ரு: ஸர்வாணி கர்மாணி யதாகல்பம் யதாவிதி । ௯
தத: காலேந மஹதா விஶ்வாமித்ரோ மஹாதபா: ॥
சகாராவாஹநம் தத்ர பாகார்தம் ஸர்வதேவதா: ।
நாப்யாகமம்ஸ்ததாஹூதா பாகார்தம் ஸர்வதேவதா: ॥ ௧௧
தத: கோபஸமாவிஷ்டோ விஶ்வாமித்ரோ மஹாமுநி: ।
ஸ்ருவமுத்யம்ய ஸக்ரோதஸ்த்ரிஶங்குமிதமப்ரவீத் ॥ ௧௨
பஶ்ய மே தபஸோ வீர்யம் ஸ்வார்ஜிதஸ்ய நரேஶ்வர ।
ஏஷ த்வாம் ஸ்வஶரீரேண நயாமி ஸ்வர்கமோஜஸா ॥
துஷ்ப்ராபம் ஸ்வஶரீரேண திவம் கச்ச நராதிப । ௧௩

அறுபதாவது ஸர்க்கம்.

மஹாப்ரபாவமுடைய விச்வாமித்ரர், மஹோதயரென்பவரோடு கூட வஸிஷ்டபுத்ரர்களைத் தபோபலமற்றவர்களாகச் செய்துவிட்டு, ருஷிகளின் நடுவில் இருந்துகொண்டு நாற்புறந்தும்பார்த்து விளக்கமாய்ச் சொன்னார்:— க

"இக்ஷ்வாகு வம்சத்துதித்தும் த்ரிசங்குவென்று ப்ரஸித்திபெற்ற இம்மன்னவர், எப்பொழுதுந் தர்மத்தையே செய்கின்றவரும் மிகவுங்கொடையாளியுமாயிருக்கிறார்; ஆதலால் இந்த (மாநுஷ) சரீரத்தோடேயே ஸ்வர்க்கலோகம் வேண்டுமென்று கருதி என்னையே சரணமாகஅடைந்துவிட்டார்; உ

இவர்தமது சரீரத்தோடுகூடி ஸ்வர்க்கலோகம்போய்சேருவதைப்பற்றி நீங்கள் என்றோடுகூடி யாகத்தைத் தொடங்கவேண்டும்." ௩

தர்மங்களையுணர்ந்த மஹர்ஷிகள் யாவரும் விச்வாமித்ரர்சொல்லைக்கேட்டு எல்லாரும்கூட்டங்கூடிதமக்குள் ஒருவர்க்கொருவர்பேசிக்கொண்டனர்:— ௪

"குசிகவம்சத்திற்பிறந்த இவ்விச்வாமித்ரமுனிவர் மிக்ககோபிஷ்டர்; இவர் கூறும் சொல்லை ஸந்தேஹமின்றி யாம் நன்றாய்ச்செய்யவேண்டும்; ௫

மேன்மைபெற்று அக்நியைநிகர்த்துவிளங்கும் விச்வாமித்ரர் சினங்கொண்டாற் சாபங்கொடுத்துவிடுவார்; ஆதலால், இக்ஷ்வாகுவம்சத்துப்பிள்ளையாகிய த்ரிசங்குவேந்தர் சரீரத்துடன்கூடித் தேவலோகம் போய்ச்சேரும்படிக்கு எல்லோரும் யாகத்தை நடத்திவைக்கவேண்டும், ஆரம்பியுங்கள்." ௭

அப்பொழுது மஹர்ஷிகள் இவ்வாறு சொல்லிக்கொண்டுஅந்தந்தக் கார்யங்களைச் செய்யத்தொடங்கினார்கள்; மஹாப்ரபாவமுடைய விச்வாமித்ரர், யாகத்தில் அத்த்வர்யுவாக இருந்தார். ௮

மந்த்ரங்களை நன்றாயுணர்ந்த ருத்விக்குகளும் எல்லாகார்யங்களையும் கல்பஸூத்ரத்திற்சொல்லியபடி சாஸ்த்ரந்தவறாமல் முறைப்படியே மந்த்ரத்தோடு கூடியிருக்கும்படி செய்தார்கள். ௯

பிறகு வெகுகாலங்கழித்து, விச்வாமித்ரமஹாமுநிவர் அந்தயாகத்தில் (ஹவிர்)பாகத்தைக்கொடுத்தற்காக எல்லாத்தேவர்களையும் ஆவாஹநஞ்செய்தார்; (ஹவிர்)பாகத்தைக்கொடுத்தற்காக அழைக்கப்பட்ட தேவர்களெல்லோரும் வராமலிருந்து விட்டார்கள். ௧௧

(முன்னமே) கோபத்துடன்கூடியிருந்த விச்வாமித்ரமஹாமுநிவர் அதைக் கண்டதனால் மிக்க சினங்கொண்டு, ஹோமஞ்செய்கிற அகப்பையை உயரவெடுத்துக்கொண்டு த்ரிசங்குவைப்பார்த்து இம்மொழியைக்கூறினர்:— ௧௨

"(த்ரிசங்கு)மன்னவ! நான் சேர்த்த எனது தவத்தின் ப்ரபாவத்தைப்பாரும்; இதோ நான் எனது ப்ரபாவத்தாலேயே உம்மைச்சரீரத்தோடு ஸ்வர்க்கமடைவிக்கின்றேன்; (வேறொருவன்)என்னபாடுபட்டும் சரீரத்தோடு அடையமுடியாத ஸ்வர்க்கத்திற்கு நீர்போய்ச்சேரும். ௧௩

[illegible]
[illegible] ௧௪
[illegible]
[illegible] ௧௫
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௭
[illegible]
[illegible] ௧௮
[illegible]
[illegible] ௧௯
[illegible]
[illegible] ௨௦
[illegible]
[illegible] ௨௧
[illegible]
[illegible]
[illegible] ௨௨
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨௫
[illegible]
[illegible] ௨௬
[illegible]
[illegible] ௨௭

அரசே! நான் கஷ்டப்பட்டுச்சேர்த்த தவத்தின் பலம் கொஞ்சம் இருக்கிறது; அதன் ப்ரபாவத்தினாலேயே நீர் சரீரத்தோடு ஸ்வர்க்கத்தையடையும்." கரு

காகுத்ஸ்த! அவ்விச்வாமித்ரமுனிவர் இவ்வாறுகூற, முனிவர்கள் (எல்லோரும்)பார்த்துக்கொண்டிருக்க, அப்பொழுதே (த்ரிசங்கு)மன்னர், ஸ்வர்க்கலோகம் போய்ச்சேர்ந்தார். கசு

ஸ்வர்க்கலோகம் வரும் த்ரிசங்குவை எல்லாத்தேவர்களோடுங் கூடி இந்த்ரன் கண்டு, "மூட! த்ரிசங்கு! நீ குருசாபம்பெற்று கெட்டுவிட்டாய்; ஆதலால் நீ ஸ்வர்க்கலோகத்திற் குடியிருக்கவொண்ணாது; திரும்பி உன்னிடத்திற்கே போய்ச்சேர்; தலைகீழாகப் பூமியில்விழு" என்ற விம்மொழியைக் கூறினன். கஎ

இந்த்ரன் இவ்வாறு கூறவே த்ரிசங்குமன்னவர் விச்வாமித்ரமுனிவரைப் பார்த்து "(ஸ்வாமி) என்னைக்காப்பாற்றவேண்டும்" என்று கதறிக்கொண்டு மீளவும் பூமியில் விழுந்தார். கஅ

அவ்வாறு கதறிக்கொண்டு விழும் த்ரிசங்குவின் அம்மொழியைக்கேட்டு விச்வாமித்ரர் மிக்ககோபங்கொண்டு"(த்ரிசங்கு!) அவ்விடத்திலேயே நில்லும்! நில்லும்!" என்று மொழிந்தார். ககூ

மஹாப்ரபாவமுள்ள அவ்விச்வாமித்ரர் ருஷிகளின்நடுவில் (இருந்துகொண்டே) இரண்டாவது ப்ரஹ்மாவென வேறு ஸப்த ருஷிகளைத் தென்திக்கிற் படைத்துவிட்டார். உ0

பெரும்புகழ்பெற்ற விச்வாமித்ரமுனிவர் மிக்க சினங்கொண்டவராகி, முனிவர்கள்நடுவிலிருந்துகொண்டே வேறுநக்ஷத்ரவரிசையைத் தென்றிசையில் ஸ்ருஷ்டித்துவிட்டார், உக

மிக்ககோபங்கொண்ட அவ்விச்வாமித்ரர் நக்ஷத்ரமண்டலத்தையும் ஸ்ருஷ்டித்துவிட்டு, "(நான் ஸ்ருஷ்டித்த லோகத்திற்கு) வேறு இந்த்ரனையாவது ஏற்படுத்திவிடுகிறேன்!; (நான்ஸ்ருஷ்டித்த) லோகம் இந்த்ரனற்றதாகவாவது இருக்கட்டும்" என்று நிச்சயித்துக் கோபத்துடன் தேவதைகளை ஸ்ருஷ்டிக்கத்தொடங்கினர். உஉ

பிறகு தேவர்களும் அஸுரர்களும் ருஷிகணங்களோடுகூடி மிகவும்பயந்து,மஹாத்மாவான விச்வாமித்ரரிடம்வந்து வணங்கி மஹாபாக்யமுடைய (விச்வாமித்ர)மஹர்ஷியே! இந்தத்த்ரிசங்குராஜர் குருசாபம்பெற்று கெட்டதனால் சரீரத்தோடுகூடி ஸ்வர்க்கத்திற்கு வரத்தகாது" என்று நன்மொழியைக்கூறினர். உங

விச்வாமித்ரமஹாமுனிவர் அத்தேவர்களின் அம்மொழியைக்கேட்டு, தேவர்களெல்லாரையும்பார்த்து, ஒருபெருமொழியைப் பேசினர்:— உச

"(தேவர்களே!) நல்லது, நீங்கள் சொல்லுவது சரிதான்; சரீரத்தோடு ஸ்வர்க்கமடைவிக்கிறேனென்று இந்தத்த்ரிசங்கு ராஜருக்கு நான் ப்ரதிஜ்ஞை பண்ணிவிட்டேன்; நான் பொய்யனாகப்பொறுக்கமாட்டேன்; உரு

*ஸ்வர்கோ(அ)ஸ்து ஸஸரீரஸ்ய த்ரிஸங்கோரஸ்ய ஸாஸ்வத:।
நக்ஷத்ராணி ச ஸர்வாணி மாமகாநி த்ருவாண்யத॥ ௨௮
யாவல்லோகா தரிஷ்யந்தி திஷ்டந்த்வேதாநி ஸர்வஸ:।
மத்க்ருதாநி ஸுரா: ஸர்வே ததநுஜ்ஞாதுமர்ஹத॥ ௨௯
ஏவமுக்தா: ஸுரா: ஸர்வே ப்ரத்யூசுர்முநிபுங்கவம்। ௨௯,
ஏவம் பவது பத்ரம் தே திஷ்டந்த்வேதாநி ஸர்வஸ:॥
ககநே தாந்யநேகாநி வைஸ்வாநரபதாத்பஹி:।
நக்ஷத்ராணி முநிஸ்ரேஷ்ட தேஷு ஜ்யோதி:ஷு ஜாஜ்வலந்॥
அவாக்சிராஸ்த்ரிஸங்குஸ்ச திஷ்டத்வமரஸந்நிப:। ௩௧,
அநுயாஸ்யந்தி சைவைநம் ஜ்யோதீம்ஷி ந்ருபஸத்தமம்॥
க்ருதார்த்தம் கீர்த்திமந்தம் ச ஸ்வர்கலோககதம் யதா॥ ௩௨,
விஸ்வாமித்ரஸ்து தர்மாத்மா ஸர்வதேவைரபிஷ்டுத:॥
ருஷிமத்யே †மஹாதேஜா பாடமித்யாஹ தேவதா:। ௩௩,
ததோ தேவா மஹாத்மாநோ ருஷயஸ்ச தபோதநா:॥
ஜக்முர்யதாகதம் ஸர்வே யஜ்ஞஸ்யாந்தே நரோத்தம। ௩௪,

இதி ஸ்ரீமத்ராமாயணே பாலகாண்டே ஷஷ்டிதம: ஸர்க:.

அத ஏகஷஷ்டிதம: ஸர்க:.

விஸ்வாமித்ரோ ‡மஹாத்மாத ப்ரஸ்திதாந்ப்ரேக்ஷ்ய தாந்ருஷீந்।
அப்ரவீந்நரஸார்தூல ஸர்வாம்ஸ்தாந்வநவாஸிந:। ௧
மஹாவிக்ந: ப்ரவ்ருத்தோ(அ)யம் தக்ஷிணாமாஸ்திதோ திஸம்।
திஸமந்யாம் ப்ரபத்ஸ்யாமஸ்தத்ர தப்ஸ்யாமஹே தப:॥ ௨
பஸ்சிமாயாம் விஸாலாயாம் புஷ்கரேஷு மஹாத்மந:।
ஸுகம் தபஸ்சரிஷ்யாம: பரம் ததி தபோவநம்॥ ௩
ஏவமுக்த்வா மஹாதேஜா: புஷ்கரேஷு மஹாமுநி:।
தப உக்ரம் துராதர்ஷம் தேபே மூலபலாஸந:॥ ௪
ஏதஸ்மிந்நேவ காலே து அயோத்யாதிபதிர்ந்ருப:।
அம்பரீஷ இதி க்யாதோ யஷ்டும் ஸமுபசக்ரமே॥ ௫

---

* "ஸ்வர்கோ(அ)ஸ்துயத்." † "மஹாதேஜா:." ‡ "ஸர்வாந்தேவாந் விநயாந்விதாந்."

இந்தத்த்ரிசங்கு சரீரத்தோடு என்றும் ஸ்வர்க்கத்திலிருக்கவேண்டும்,நான் ஸ்ருஷ்டித்த நக்ஷத்ரங்கள் யாவும் எந்நாளும் இருக்கவேண்டும்; உஅ

நான் செய்த கார்யங்கள் யாவும் உலகமிருக்குமளவும் ப்ரஸித்தமாயிருக்க வேண்டும்; தேவர்களெல்லாரும் இந்தப்படி ஒப்புக்கொள்ளவேண்டும்." உகூ

இவ்வாறு விச்வாமித்ரர் சொல்லவே தேவர்கள்யாவரும்அவருக்குப்பதில் சொல்லினர்:— உகூ௦

"மஹாமுநிவரே! நல்லது அப்படியே ஆகட்டும்; நீர் செய்த இச்செய்கைகள் யாவும் நிலைபெற்றிருக்கட்டும்; நீர் ஸ்ருஷ்டித்த அந்த நக்ஷத்ரங்களெல்லாம் ஆகாசத்தில் (இதுவரையிலுள்ள) ஜ்யோதிர்மண்டலத்திற்கு வெளியில் என்றும் விளங்கட்டும்; நீர் ஸ்ருஷ்டித்த அந்த ஜ்யோதிர்மண்டலத்தில் த்ரிசங்குவும் தலைகீழாகவே இருந்து தேவர்களைப்போலவே விளங்கட்டும்; கூக௦

ஸ்வர்க்கநக்ஷத்ரங்கள் த்ருவனைத் தொடர்ந்து செல்வதுபோல் இந்த நக்ஷத்ரங்களும் இந்தத் த்ரிசங்குவைத்தொடர்ந்து போகட்டும்; இந்தத்த்ரிசங்கு கோரியபடியே கார்யத்தைமுடித்துக்கொண்டு, மிக்கபுகழ்பெற்று, ஸ்வர்க்க லோகத்திலிருப்பவர்போலவே விளங்கட்டும்." கூஉ௦

தர்மசிந்தையுடையராகி மஹாப்ரபாவம் பெற்ற விச்வாமித்ரரும் எல்லாத் தேவர்களாலும் துதிக்கப்பெற்று, "அப்படியே ஆகட்டும்" என்று தேவதைகளுக்குச்சொல்லிவிட்டார். கூங௦

புருஷோத்தம! (ராம!) பிறகு யாகம்முடிகையில், தவத்தையே பொருளாகப்பெற்ற மஹாத்மாக்களான எல்லாமுநிவர்களும் தேவர்களும் வந்தபடியே திரும்பிப்போய் விட்டார்கள். கூச௦

அறுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

அறுபத்தோராவது ஸர்க்கம்.

பிறகு, மிக்கதைர்யம்பெற்று ஆண்சிங்கமெனவிளங்கும் விச்வமித்ரர், வனத்தில் வஸிக்கும் அந்த ருஷிகளெல்லோரும் புறப்படும்போது அவர்களைப் பார்த்துரைத்தார்:— க

"தென்திக்கில் இவ்வாறு நமதுதவத்திற்குப் பெரியஇடையூறு உண்டாய் விட்டது; நாம் வேறொரு திக்குக்குப்போய் ஆங்குத்தவஞ்செய்வோம்; உ

மிக்கதைர்யமுள்ள ருஷிகளே! விசாலமான வனங்களையுடைய மேற்கு திக்கில் புஷ்கரதீர்த்தத்தின்கரையில் ஸுகமாகத்தவஞ்செய்வோம்; தவஞ்செய்தற்கு அவனஞ்சிறந்ததல்லவா!" ங

மஹாப்ரபாவமுள்ள (விச்வாமித்ர) மஹாமுநிவர் இவ்வாறு சொல்லி விட்டு, புஷ்கரக்ஷேத்ரஞ்சென்று, கிழங்குகளையும் பழங்களையும் புஜித்தும் கொண்டு, ஒருவராலும் இடையூறு செய்யமுடியாதபடி உக்ரமாய்த்தவத்தைச் செய்துகொண்டிருந்தார். ச

இதற்குள்ளவே, அயோத்யாதிபதியாய்க் க்யாதிபெற்றவராயுள்ள அம்பரீஷரென்னும்மன்னவர், யாகஞ்செய்யத்தொடங்கினர். ரு

[illegible]
[illegible] சா
[illegible]
[illegible] எ
[illegible]
[illegible] அ
[illegible]
[illegible] கூ
[illegible]
[illegible]
[illegible]
[illegible] கக
[illegible]
[illegible]
[illegible] கஉ,ங
[illegible]
[illegible] கங,ச
[illegible]
[illegible] கசா
[illegible]
[illegible] கரு
[illegible]
[illegible] கசா
[illegible]
[illegible]
[illegible] கஅ

[illegible]

அவர் யாகஞ்செய்யும்போது (அந்த யாக)பசுவை இந்த்ரன் திருடிக்கொண்டுபோய்விட்டான். (யாக)பசு போய்விடவே புரோஹிதர் (அம்பரீஷ) ராஜாவைப்பார்த்து இம்மொழியையுரைத்தார்:— ௬

"வேந்தே! நீர் அஜாக்கிரதையாக இருந்ததனால் (யாகத்திற்குவேண்டிய) பசுவை யாரோ கொண்டுபோய்விட்டார்கள், அது காணப்படவில்லை; அப்படிக்காணாததனால், அந்தப்பசுவைக் காப்பாற்றாவிடின் அநேகதோஷங்களுண்டாய் அவைகள் ராஜாவை (தம்மை) கெடுத்துவிடும்; ௭

ஆண்சிங்கமே! இந்தப்பசுவுக்குப்பதிலாக ஒருமனிதனைப்பசுவாகக் கொள்ளலாம்; இதுதான் அதற்குப் ப்ராயச்சித்தம்; அல்லது யாகத்தைத்தொடங்குவதற்குள், (அந்த) பசுவையாவது விரைவிற்கொண்டுவாரும்." ௮

பேரறிவுபெற்று புருஷர்களிற் சிறந்த அவ்வம்பரீஷமன்னர், உபாத்யாயர்களின் சொற்கேட்டு, "(காணாமற்போன என்னுயாக)பசுவைக்கொடுக்கிறவர்களுக்கு அநேக ஆயிரம் பசுமாடுகளைக்கொடுக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு தேடத்தொடங்கினர். ௯

அப்ப! ரகுநந்தந! அவ்வம்பரீஷராஜர், நாடுகள், நகரங்கள், காடுகள், ருஷிகளிருக்கும் புண்ய-ஆச்ரமங்கள் ஆகிய ஒவ்வோரிடத்திலுந் தேடிக்கொண்டு போகையில், பிள்ளைகளோடும் பார்யையோடுங்கூடிப் ப்ருகுதுங்கமென்னும் பர்வதத்தில் வாஸஞ்செய்துக்கொண்டிருக்கும் ருசீகரென்பவரைக்கண்டார். ௧௧

மிக்கபராக்ரமமுடையவராய் மிக்கஅழகுடையவராயுள்ள ராஜர்ஷியாகிய அம்பரீஷர், தவசினால் ஒளிபெற்ற ப்ரஹ்மர்ஷியாகிய அந்த ருசீகரைத் தெண்டனிட்டு எதிரில் நின்றுகொண்டு க்ஷேமஸமாசாரத்தையெல்லாம் விசாரித்துவிட்டு அவரைநோக்கி இவ்வாக்யத்தைச் சொற்றார்:— ௧௨

"மஹாபாக்யம்பெற்று ப்ருகுவம்சத்திலுதித்த ருசீகமஹர்ஷியே! நான் ஒருயாகஞ்செய்யத்தொடங்கினேன்; அந்த யாகபசுவை யாரோ கொண்டுபோய்விட்டார்கள்; அதற்குப் பதிலாக நரபசு ஒன்று வேண்டியிருக்கிறது; உமக்கு அநேக ஆயிரம் பசுக்களைக் கொடுக்கிறேன்; அந்தயாகத்திற்குப்பசுவாக உமது பிள்ளையைக் கொடுத்தீராயின் நான் கார்யங்கைகூடப் பெறுவேன்; ௧௩

நான் எல்லாத்தேசங்களுக்கும்போய்த் திரிந்துபார்த்தேன்; யாகத்திற்கு வேண்டிய பசு கிடைக்கவில்லை; (ஆதலால்) உமது இந்தப் பிள்ளைகளில் ஒரு பிள்ளையை எனக்கு விலைக்குக் கொடுக்கவேண்டும்." ௧௪

ருசீகர் (அம்பரீஷரால்) இவ்வாறு சொல்லப்பட்டு "நரச்ரேஷ்ட! (அம்பரீஷ!) நீர் என்ன செய்தாலும் மூத்தபிள்ளையைக் கொடுக்கமாட்டேன்" என்று தைர்யமாகச் சொல்லிவிட்டார். ௧௫

அந்தப் பிள்ளைகளின்தாயாகிய ருசீகரது பார்யையானவள் ருசீகர் சொன்னதைக்கேட்டு, ஆண்சிங்கமான அம்பரீஷரைப்பார்த்து சொன்னதாவது:—

"அரசே! பூஜ்யராகிய ப்ருகுவம்சத்துப்பிள்ளை (ருசீகர்), மூத்தபிள்ளையை விற்கமாட்டேனென்று சொல்லிவிட்டார்; எனக்கோ கடைசிபிள்ளை இஷ்டமானவன்; வேந்தே! ஆதலால் கடைசிபிள்ளையை உமக்குக்கொடுக்கமாட்டேன்;

പ്രായേണ ഹി നരശ്രേഷ്ഠ! ജ്യേഷ്ഠാഃ പിതൃഷു വല്ലഭാഃ।
മാതൄണാം ച കനീയാംസസ്തസ്മാദ്രക്ഷേ കനീയസം॥ ௧௯
ഉക്തവാക്യേ മുനൗ തസ്മിന്മുനിപത്ന്യാം തഥൈവ ച।
ശുനഃശേപഃ സ്വയം രാമ! മധ്യമോ വാക്യമബ്രവീത്॥
പിതാ ജ്യേഷ്ഠമവിക്രേയം മാതാ ചാഹ കനീയസം।
വിക്രേയം മധ്യമം മന്യേ രാജൻ പുത്രം നയസ്വ മാം॥ ௨௧
ഗവാം ശതസഹസ്രേണ ശുനഃശേപം നരേശ്വരഃ।
ഗൃഹീത്വാ പരമപ്രീതോ ജഗാമ രഘുനന്ദന!॥ ௨௨
അംബരീഷസ്തു രാജർഷീ രഥമാരോപ്യ സത്വരഃ।
ശുനഃശേപം മഹാതേജാ ജഗാമാശു മഹായശാഃ॥ ௨௩

ഇതി ശ്രീരാമായണേ ബാലകാണ്ഡേ ഏകഷഷ്ടിതമഃ സർഗഃ.

അഥ ദ്വിഷഷ്ടിതമഃ സർഗഃ.

ശുനഃശേപം നരശ്രേഷ്ഠ! ഗൃഹീത്വാ തു മഹായശാഃ।
വ്യശ്രാമ്യത്പുഷ്കരേ രാജാ മധ്യാഹ്നേ രഘുനന്ദന!॥ ௧
തസ്യ വിശ്രമമാണസ്യ ശുനഃശേപോ മഹായശാഃ।
പുഷ്കരക്ഷേത്രമാഗമ്യ വിശ്വാമിത്രം ദദർശ ഹ॥
തപ്യന്തമൃഷിഭിഃ സാർധം മാതുലം പരമാതുരഃ। ௨½
വിഷണ്ണവദനോ ദീനസ്തൃഷ്ണയാ ച ശ്രമേണ ച।
പപാതാങ്കേ മുനേ രാമ! വാക്യം ചേദമുവാച ഹ। ௩½
ന മേ ഽസ്തി മാതാ ന പിതാ ജ്ഞാതയോ ബാന്ധവാഃ കുതഃ॥
ത്രാതുമർഹസി മാം സൗമ്യ! ധർമേണ മുനിപുംഗവ!। ௪½
ത്രാതാ ത്വം ഹി നരശ്രേഷ്ഠ! സർവേഷാം ത്വം ഹി ഭാവനഃ॥
രാജാ ച കൃതകാര്യഃ സ്യാദഹം ദീർഘായുരവ്യയഃ।
സ്വർഗലോകമുപാശ്നീയാം തപസ്തപ്ത്വാ ഹ്യനുത്തമം॥ ௬
സ ത്വം മേ നാഥോ നാഥസ്യ ഭവ ഭവ്യേന ചേതസാ।
പിതേവ പുത്രം ധർമാത്മംസ്ത്രാതുമർഹസി കിൽബിഷാത്॥ ௭

மஹாராஜ! (உலகத்தில்) பெரும்பாலும் தந்தைகளுக்கு மூத்தபிள்ளைகளிடத்திற் ப்ரீதி அதிகம்; தாய்மார்களுக்குக் கடைசி பிள்ளைகளிடத்திற் ப்ரீதி அதிகம்; ஆதலால் கடைசிபிள்ளையை நான் காப்பாற்றுகிறேன். (விற்கமாட்டேன்.)" ௨௰

ராம! அந்த ருசிகமுனிவரும் அவரது பத்னியும் அவ்வாறு சொல்லிவிடவே, நடுப்பிள்ளையாகிய சுநச்சேபனென்பவன், (அம்பரீஷரிடம்வந்து,) "வேந்தே! (எனது) தந்தையோ மூத்தபிள்ளையை விற்கமாட்டேனென்று சொல்லிவிட்டார்; தாயோ கடைசிபிள்ளையை விற்கமாட்டேனென்று சொல்லிவிட்டாள்; நடுப்பிள்ளையாகிய நான்தான் விற்கப்பட்டேனென்று நினைக்கிறேன்; என்னை இட்டுக்கொண்டுபோம்" என்று தானே சொன்னான். ௨௧

ரகுநந்தந! (அம்பரீஷ)வேந்தர், அநேகஆயிரம் பசுக்களைக் கொடுத்து, சுநச்சேபனை (விலைக்கு) வாங்கிக்கொண்டு, பெருமகிழ்ச்சியடைந்து புறப்பட்டார். ௨௨

மிக்கவலிவுற்று பெரும்புகழ்பெற்ற ராஜர்ஷியாகிய அம்பரீஷரும், சுநச்சேபனை ரதத்தின்மீதேற்றிக்கொண்டு விரைவிற்சென்றார். ௨௩

அறுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

அறுபத்திரண்டாவது ஸர்க்கம்.

புருஷோத்தம! ரகுநந்தந! மிக்கபுகழ்பெற்ற அம்பரீஷராஜர், சுநச்சேபனை அழைத்துக்கொண்டு மத்யாஹ்நம் புஷ்கரக்ஷேத்ரத்தில் இளைப்பாறத்தங்கினர். ௧

அவ்வம்பரீஷர் இளைப்பாறத்தங்குகையில், பெரும்புகழ்பெற்ற சுநச்சேபனவன் புஷ்கரக்ஷேத்ரஞ்சென்று ருஷிகளோடுகூடித் தவஞ்செய்துகொண்டிருக்கும் தன் மாமாவான விச்வாமித்ரரை மிகவும் மநோவ்யாகுலப்பட்டவனாய்க்கண்டான். ௨

பேதையாய்விட்ட அந்தச்சுநச்சேபன், நீர்வேட்கையினாலும், (வழியில் வந்த) ச்ரமத்தாலும் முகம்வாடி, (விச்வாமித்ர)முனிவரது மடியில் வெகு வேகமாய் வந்துவிழுந்து இவ்வாக்யத்தைச் சொல்லினன்:— ௪

"மஹாமுனிவரே!(மாமா!) எனக்குத்தாயுமில்லை; தகப்பனுமில்லை; ஜ்ஞாதிகளும் பந்துக்களும் ஏது? என்னைத் தர்மத்திற்காக காப்பாற்றவேண்டும்; ௫

மஹாமுனிவரே! நீர், எல்லாரையுங் காப்பாற்றுகிறவரன்றோ! எல்லார்க்கும் நன்மையைச் செய்கிறவரன்றோ! அம்பரீஷராஜாவுங் கார்யம் முடியப்பெறவேண்டும்; நானுங்கெடாமல் தீர்க்காயுஸ்ஸாயிருந்து மேலானதவத்தைச் செய்து ஸ்வர்க்கலோகமடையவேண்டும்; ௬

தர்மஜ்ஞமுள்ளவரே! நாதனற்ற எனக்கு நீரே மனமிரங்கி நாதராகவேண்டும்; மகனைத் தந்தை காப்பாற்றுவதுபோல் என்னைக்கஷ்டத்தினின்று விடுவித்து நீர் காப்பாற்றவேண்டும்." ௭

[illegible]
[illegible] அ
[illegible]
[illegible] க௯
[illegible]
[illegible] க0
[illegible]
[illegible] கக
[illegible]
[illegible] கஉ
[illegible]
[illegible]
[illegible]
[illegible] கச
[illegible]
[illegible] கரு
[illegible]
[illegible] கசா
[illegible]
[illegible] கஎ
[illegible]
[illegible] கஅ
[illegible]
[illegible] க௯
[illegible]
[illegible] உ0

[illegible]

பெருந்தவம்புரிந்த விச்வாமித்ரர், அந்தச்சுநச்சேபனது அம்மொழியைக் கேட்டு, (அவனுக்கு)பலவாறுந் தேறுதல்சொல்லிவிட்டு,தமது புதல்வரைப் பார்த்து இம்மொழியைக் கூறினர்:— அ

"நன்மையைக்கோருந் தந்தைகள்,பிள்ளைகளிடத்துத் தாமுபகாரமடைய வேண்டுமென்றே பிள்ளைகளைப் பெறுகிறார்கள்; அந்த உபகாரத்தை (எனக்கு நீங்கள்) செய்வதற்கு இதுதான் ஸமயம்; இதனால் (உங்களுக்கும் எனக்கும்) பரலோகத்து நன்மையுண்டாகும்; கூ

பிள்ளைகளே (ருசிக)முனிவரது புத்ரனுகிய இந்தப்பாலன்(சுநச்சேபன்) தன்னைக்காப்பாற்றும்படி என்னை வேண்டிக்கொள்ளுகிறான்; இவனுக்குப் ப்ராணனைமட்டுங் கொடுத்து நீங்கள் நன்மையைச்செய்யவேண்டும்; க0

(நீங்கள்) எல்லோரும் புண்யகார்யங்களையே செய்கிறீர்கள்; எல்லோரும் தர்மத்திலேயே பற்றுள்ளவர்களாயிருக்கிறீர்கள்; உங்களிலொருவன் (அம்பரீஷ) மன்னவருடைய யாகத்திற்குப் பசுவாயிருந்து அக்நிக்குத் த்ருப்தியை யுண்டுபண்ணவேண்டும்; கக

(நீங்கள் அப்படி செய்யும்பக்ஷத்தில்) சுநச்சேபனும் நாதனையுடையனாக ஆய்விடுவான்; யாகமும் இடையூறென்றுமில்லாது முடிந்துவிடும்; தேவதைகளும் த்ருப்தியடைந்துவிடுவார்கள்; எனதுசொல்லும் உண்மையாகுதும்."

(விச்வாமித்ர)முனிவரது மதுஷ்யந்தன் முதலான பிள்ளைகள் அவர் சொல்லைக்கேட்டு அஹங்காரங்கொண்டு (அலக்ஷ்யமாகநினைத்து)"வல்லவராகிய தந்தையே! நீர் எவ்வாறு தம்பிள்ளைகளைவிட்டு அயலான்பிள்ளையைக்காப்பாற்றலாம்! நாயின் மாம்ஸத்தைத் தின்பதுபோல் இது செய்யத்தகாத செய்கை என்றெண்ணுகிறோம்" என்ற விம்மொழியைச் சொல்லினர். கச

(விச்வாமித்ர)மஹாமுனிவர் அவரது பிள்ளைகளின் அந்தச் சொல்லைக் கேட்டு சினங்கொண்டு கண்கள் சிவந்து (அவர்களைப்பார்த்து) சொல்லத் தொடங்கினர்:— கரு

"கொஞ்சமேனும் அச்சமில்லாமல் என்வார்த்தைஅலக்ஷ்யஞ்செய்து நீங்கள் சொன்னகொடிய சொல்லானது தர்மமார்க்கத்திற்கு விருத்தமாயிருப்பதால், (கேட்டவுடனே) மயிர்க்கூச்சையுண்டாக்குகிறது; கசு

(ஆதலால்) நீங்களெல்லோரும் ஜாதியில் வஸிஷ்ட புத்ரர்களைப்போலவேப் பூர்ணமாக ஆயிரவர்ஷம் நாயின்றைச்சியைத் தின்றுகொண்டு பூமியில் திரிய வேண்டும்." கஎ

முனிவர்களிற்சிறந்த விச்வாமித்ரர் பிள்ளைகளைச்சபித்துவிட்டு, நிராதரவாய் நிற்கும் சுநச்சேபனைத் தைர்யப்படுத்தி அவனைப்பார்த்துச் சொன்னார்:—கஅ

"சுத்தமான கயிறுகளால் கட்டப்பட்டு சிவந்தமாலையையும் சந்தனத்தையும் தரித்துக்கொண்டு, யூபஸ்தம்பத்தினருகிற்சென்று அக்நிக்கு எதிரில் நின்றுகொண்டு, நான் உபதேசிக்கிற இவ்விரண்டுமந்த்ரங்களைச்சொல்லு; ககூ

குழந்தாய்! சுநச்சேப! திவ்யங்களாயுள்ள இவ்விரண்டு மந்த்ரங்களையும் இந்த அம்பரீஷரது யாகத்தில்பாடு; அதனால் உன் எண்ணம் நிறைவேறப் பெறுவாய்." உ0

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨௨
[illegible]
[illegible] ௨௩
[illegible]
[illegible] ௨௪
[illegible]
[illegible] ௨௫
[illegible]
[illegible] ௨௬
[illegible]
[illegible] ௨௭
[illegible]
[illegible] ௨௮

[illegible]

[illegible]

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible] ௨
[illegible] ௨௩
[illegible] ௩
[illegible]
[illegible] ௪

சுநச்சேபன் விக்நமுக்கக்கூடிய அவ்விரண்டு மந்த்ரங்களையும் பெற்றுக்கொண்டு, ஆண்மிக்கவரான அவ்வம்பரீஷனிடம் க்ஷிப்ரமாகவந்து, "மஹாவீர்யமுடையவரே! மிக்க வலிமையுடையவ! யாகசாலைக்குச் சீக்ரமாய்ப்போவோம் (வாரும்); மஹாராஜ! விரைவில் ஸங்கல்பஞ் செய்துகொண்டு யாகத்தை நடத்துவீர்" என்று சொன்னான். ௨௨

சுநச்சேபன் சொன்னவம்மொழியை (அம்பரீஷ) ராஜர் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்து மிக்க ஊக்கமுடையவராகி விரைவில் தமது யாகசாலைக்குப் போய்ச்சேர்ந்தார். ௨௩

(அம்பரீஷ)மன்னர், ஸபையிலுள்ளவர்களின் சொற்படி (யாகபசு இவனென்று தெரிவதற்காக) தர்ப்பைக்கட்டுதல் முதலிய அடையாளங்களை ஏற்படுத்தி, செப்புவஸ்த்ரம் தரிப்பித்து யூபஸ்தம்பத்தில் கட்டுவித்தார். ௨௪

(ருசிக)முனிவரின் புத்ரனான அந்தச்சுநச்சேபன், (யூபஸ்தம்பத்தில்) கட்டப்பட்டவனாகி, இந்த்ரன் உபேந்த்ரனென்னும் இரண்டு தேவதைகளையும் விச்வாமித்ரர்சொன்ன மந்த்ரங்களால் சாஸ்த்ரப்படி ஸ்தோத்ரஞ்செய்தான்.

ராகவ! பிறகு, அச்சுநச்சேபன் ரஹஸ்யமாய்ச் செய்த ஸ்துதியினால் இந்த்ரன் (எல்லாத்தேவர்களோடுங்கூட) த்ருப்தியடைந்து மகிழ்ந்து அப்பொழுது சுநச்சேபனுக்குத் தீர்க்காயுஸ்ஸைக்கொடுத்தான். ௨௬

புருஷோத்தம! ராம! இந்த்ரனது அருள்பெற்று அவ்வம்பரீஷராஜரும் யாகத்தின் பலனை அநேகமடங்கு அதிகமாகப் பெற்றார். ௨௭

நரச்ரேஷ்ட! ராம! தர்மிஷ்டையுடைய விச்வாமித்ர மஹாமுனிவரும் மறுபடியும் புஷ்கரக்ஷேத்ரத்தில் ஆயிரவர்ஷந் தவஞ்செய்தார். ௨௮

அறுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

அறுபத்துமூன்றாவது ஸர்க்கம்.

ஆயிரவர்ஷஞ்சென்றபின்னர் தவத்தைச்செய்துமுடித்த விச்வாமித்ரருக்குத் தவத்தின் பயனையளிக்கத்தேவரனைவரும் வந்தனர். ௧

மஹாப்ரபாவமுள்ள ப்ரஹ்மதேவர், அவ்விச்வாமித்ரரைப் பார்த்து "(விச்வாமித்ர!) நீ செய்த நற்செய்கைகொண்டு ருஷியாகவே ஆய்விட்டாய்; உனக்கு மங்களமுண்டாகுக" என்றவின்மொழியைச் சொன்னார். ௨

வானவர்வேந்தராகிய ப்ரஹ்மதேவர், அவ்விச்வாமித்ரருக்கு இவ்வாறு சொல்லிவிட்டு மீளவும் தேவலோகம் போய்ச்சேர்ந்தார். ௩

விச்வாமித்ரர் மிக்கதைர்யங்கொண்டவராகி மீண்டும், மஹத்தான தவத்தைச் செய்யத்தொடங்கினார். ௪

புருஷோத்தம! பிறகு வெகுகாலஞ்சென்றபின், மிக்க அழகுடையாளாகிய மேனகையென்னும் அப்ஸரமடந்தை, புஷ்கரக்ஷேத்ரம் வந்து நீராடத்தொடங்கினள். ௫

𑌤𑌾𑌂 𑌦𑌦𑌰𑍍𑌶 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌮𑍇𑌨𑌕𑌾𑌂 𑌕𑍁𑌶𑌿𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌃।
𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑌂 𑌜𑌲𑌦𑍇 𑌯𑌥𑌾॥ ௫
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌕𑌨𑍍𑌦𑌰𑍍𑌪𑌵𑌶𑌗𑍋 𑌮𑍁𑌨𑌿𑌸𑍍𑌤𑌾𑌮𑌿𑌦𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍।
𑌅𑌪𑍍𑌸𑌰𑌃! 𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌂 𑌤𑍇 𑌤𑍁 𑌵𑌸 𑌚𑍇𑌹 𑌮𑌮𑌾𑌶𑍍𑌰𑌮𑍇।
𑌅𑌨𑍁𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌷𑍍𑌵 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌤𑍇 𑌮𑌦𑌨𑍇𑌨 𑌸𑍁𑌮𑍋𑌹𑌿𑌤𑌮𑍍। ௬
𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌸𑌾 𑌵𑌰𑌾𑌰𑍋𑌹𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌾𑌸𑌮𑌥𑌾𑌕𑌰𑍋𑌤𑍍॥ ௭
𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌵𑌸𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌵𑌰𑍍𑌷𑌾𑌣𑌿 𑌪𑌞𑍍𑌚 𑌪𑌞𑍍𑌚 𑌚 𑌰𑌾𑌘𑌵!॥
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌰𑌮𑍇 𑌰𑌾𑌮! 𑌸𑍁𑌖𑍇𑌨 𑌵𑍍𑌯𑌤𑌿𑌚𑌕𑍍𑌰𑌮𑍁𑌃। ௮
𑌅𑌥 𑌕𑌾𑌲𑍇 𑌗𑌤𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌃॥
𑌸𑌵𑍍𑌰𑍀𑌡 𑌇𑌵 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌶𑍋𑌕𑌪𑌰𑌾𑌯𑌣𑌃। ௯
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌮𑍁𑌨𑍇𑌃 𑌸𑌮𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌾 𑌸𑌾𑌮𑌰𑍍𑌷𑌾 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨!॥
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑍈𑌤𑌤𑍍 𑌤𑌪𑍋𑌪𑌹𑌰𑌣𑌂 𑌮𑌹𑌤𑍍।
𑌅𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌪𑌦𑍇𑌶𑍇𑌨 𑌗𑌤𑌾𑌃 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌾 𑌦𑌶॥
𑌕𑌾𑌮𑌮𑍋𑌹𑌾𑌭𑌿𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌘𑍍𑌨𑍋𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌃। ௧௧
𑌵𑌿𑌨𑌿𑌃𑌶𑍍𑌵𑌸𑌨𑍍 𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑌃 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌤𑌾𑌪𑍇𑌨 𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌃॥
𑌭𑍀𑌤𑌾𑌮𑌪𑍍𑌸𑌰𑌸𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌵𑍇𑌪𑌨𑍍𑌤𑍀𑌂 𑌪𑍍𑌰𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌮𑍍।
𑌮𑍇𑌨𑌕𑌾𑌂 𑌮𑌧𑍁𑌰𑍈𑌰𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯 𑌕𑍁𑌶𑌿𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌃॥
𑌉𑌤𑍍𑌤𑌰𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑌂 𑌰𑌾𑌮! 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋 𑌜𑌗𑌾𑌮 𑌹। ௧௩
𑌸 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑍀𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌜𑍇𑌤𑍁𑌕𑌾𑌮𑍋 𑌮𑌹𑌾𑌯𑌶𑌾𑌃॥
𑌕𑍌𑌶𑌿𑌕𑍀𑌤𑍀𑌰𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌤𑌪𑌸𑍍𑌤𑍇𑌪𑍇 𑌸𑍁𑌦𑌾𑌰𑍁𑌣𑌮𑍍। ௧௪
𑌤𑌸𑍍𑌯 𑌵𑌰𑍍𑌷𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌘𑍋𑌰𑌂 𑌤𑌪 𑌉𑌪𑌾𑌸𑌤𑌃॥
𑌉𑌤𑍍𑌤𑌰𑍇 𑌪𑌰𑍍𑌵𑌤𑍇 𑌰𑌾𑌮! 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌮𑌭𑍂𑌦𑍍𑌭𑌯𑌮𑍍। ௧௫
𑌆𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌯𑌨𑍍 𑌸𑌮𑌾𑌗𑌮𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌰𑍍𑌷𑌿𑌗𑌣𑌾𑌃 𑌸𑍁𑌰𑌾𑌃॥
𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌶𑌬𑍍𑌦𑌂 𑌲𑌭𑌤𑌾𑌂 𑌸𑌾𑌧𑍍𑌵𑌯𑌂 𑌕𑍁𑌶𑌿𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌃। ௧௬
𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌚𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃॥
𑌅𑌬𑍍𑌰𑌵𑍀𑌨𑍍𑌮𑌧𑍁𑌰𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌂 𑌤𑌪𑍋𑌧𑌨𑌮𑍍।
𑌮𑌹𑌰𑍍𑌷𑍇! 𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌂 𑌵𑌤𑍍𑌸! 𑌤𑌪𑌸𑍋𑌗𑍍𑌰𑍇𑌣 𑌤𑍋𑌷𑌿𑌤𑌃॥
𑌮𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍃𑌷𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌤𑌵 𑌕𑍌𑌶𑌿𑌕!। ௧௮

‡ “[illegible].”

ஒப்பற்றஅழகுடைய அம்மேநகை,மேகத்நடுவிலிருக்கும் மின்னல்போல் புஷ்கரமென்னும் அந்தக் குளத்திலிருந்துகொண்டு ஸ்நாநஞ்செய்கையில் மிகுந்த ஸௌந்தர்யமுடைய விச்வாமித்ரர் அவளைக்கண்டார். ௫

விச்வாமித்ரமுனிவரானவர், அம்மேநகையைக்கண்டு காமமுற்றவராய், "அப்ஸரப்பெண்ணே! க்ஷேமமா? நீ எனது இவ்வாச்ரமத்திலேயே இருந்துவிடு; மந்மதனது செய்கையால் உன்மீது மிகுந்த ஆவல்கொண்ட என்னிடத்து மனமிரங்கு; உனக்கு நன்மையுண்டாகும்" என்ற இம்மொழியையுரைத்தார். ௬

(விச்வாமித்ரர்) இவ்வாறு சொல்லவே, மிக்க அழகுடைய அம்மேநகை அவ்விச்வாமித்ரரது ஆச்ரமத்திலேயே இருந்துவிட்டாள். ௭

ரகுகுலத்துப்பிள்ளாய்! ராம! விச்வாமித்ராச்ரமத்தில் அம்மேநகை இருக்கையில் ஸுகமாய்ப் பத்துவர்ஷஞ் சென்றுவிட்டன. ௮

அவ்வாறு பத்துவர்ஷம் போய்விடவே விச்வாமித்ரமஹாமுனிவர், தாம் செய்த கார்யத்தைத் தாமே நினைத்து மிக்கதுக்கங்கொண்டு வெட்கமுடையவராய்விட்டார். ௯

ரகுநந்தந! "(நமது) தவங்கெடுதற்காக நேர்ந்த இந்தப்பெரிய கார்யமெல்லாம் தேவர்களால் செய்யப்பட்டது; ஓரிராப்பகல்போற் பத்தாண்டுகள் சென்றுவிட்டனவே! நாம் மந்மதவிகாரங்கொண்டறிவுகெட்டதனாலன்றோ (நமது தவத்திற்கு) இவ்விடையூறுநேர்ந்தது!" என்று, கோபத்தோடு தம் மனதில் தாமே எண்ணிக்கொண்டார். ௰

ராம! குசிகவம்சத்துப் பிள்ளையாகிய விச்வாமித்ரமஹாமுனிவர் தாம் செய்த தவற்றைத் தாமே நினைத்து நினைத்துப் பெருமூச்சுவிட்டுத் துக்கப்பட்டவராய், பயத்தால் நடுங்கிக்கொண்டு கைகூப்பிநிற்கும் அப்ஸரப்பெண்ணாகிய அம்மேநகையைக்கண்டு (சபியாமல்) இனியசொற்களையே சொல்லி அனுப்பிவிட்டு ஹிமவத்பர்வதம்போய்ச் சேர்ந்தார். ௧௧

பெரும்புகழ்பெற்றவராய், (ஐம்புலன்களையும்) வெல்லவிரும்பியவராயுள்ள அவ்விச்வாமித்ரர், "நாம் தவத்தைக்கடைசிவரையிற் செய்தேமுடிக்கவேண்டும்" என்றெண்ணிக்கொண்டு, கௌசிகிநதியின் கரையையடைந்து வெகு பயங்கரமாய்த் தவஞ்செய்யத்துவங்கினர். ௧௨

ராம! ஹிமவத்பர்வதத்தினருகிலிருக்கும் கௌசிகீநதியின் கரையில் அவ்விச்வாமித்ரர் கோரமாய்த் தவஞ்செய்கையில் ஆயிரவர்ஷஞ் சென்றுவிட்டன. (அதனால்) தேவர்களுக்குப்பயமுண்டாய்விட்டது. ௧௩

எல்லாத்தேவர்களும் ஒன்றுகூடி (ப்ரஹ்மாவினிடம்வந்து) "(ஸ்வாமி!) நல்லது, இவ்விச்வாமித்ரர் "மஹர்ஷி" என்கிற பட்டத்தைப் பெறலாம்" என்று சொல்லி அழைத்தார்கள். ௧௪

ப்ரஹ்மாவானவர் தேவர்களின் சொல்லைக்கேட்டு விச்வாமித்ர முனிவரிடம்வந்து, "குழந்தாய்! மஹர்ஷி! விச்வாமித்ர! க்ஷேமமா? (நீசெய்த) உக்ரமான தவத்தால் நான் களித்தேன், உனக்கு 'மஹர்ஷி' என்கிற பட்டத்தைக் கொடுக்கிறேன்" என்ற இன்மொழியைக்கூறினர். ௧௫

[illegible]
[illegible] ௨௰
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨௧
[illegible]
[illegible] ௨௨
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨௩
[illegible]
[illegible] ௨௪
[illegible]
[illegible] ௨௫

[illegible] ஸர்க்க:

[illegible] ஸர்க்க:

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨
[illegible]
[illegible] ௩

நடைப்பதில், எல்லாவுலகங்கட்குக் கர்த்தராகிய ப்ரஹ்மா சொல்லுவதை அவ்விச்வாமித்ர முனிவர் கேட்டு வருந்தவுமில்லை, களிக்கவுமில்லை. ௨௰

பிறகு விச்வாமித்ர மஹாமுனிவர் அஞ்சலிஹஸ்தராய் மிகவும் வணங்கி ப்ரஹ்மாவைப்பார்த்து, "ஸ்வாமி! நான் செய்த நற்செய்கைகளுக்காக, ஒப்பற்ற 'மஹர்ஷி' என்கிற பட்டத்தை நீர் எனக்குக் கொடுக்கும்பக்ஷத்தில் அதற்கு முன்னேயே நான் ஜிதேந்த்ரியனாய் இருக்கவேண்டும்" என்றுசொன்னார். ௨௧

பிறகு ப்ரஹ்மதேவனவர் அவ்விச்வாமித்ரரைப் பார்த்து, "மஹர்ஷி! நீ ஜிதேந்த்ரியனல்லன். ஜிதேந்த்ரியனாவதற்கு முயலு" என்று சொல்லிவிட்டு ஸ்வர்க்கம் போய்ச்சேர்ந்துவிட்டார். ௨௨

தேவர்களும் தம்மிடத்திற்குப் புறப்பட்டுப்போனபின், விச்வாமித்ர மஹாமுனிவரானவர் இரவும்பகலும் தவத்தையே பொருளாகக்கொண்டு கைகளை மேலுயரவெடுத்து, ஆதாரமில்லாமல் நின்று, வாயுவைப்பக்ஷித்து, வெய்யிற்காலத்தில் நாற்புறமும் அக்நியை வளர்த்து நடுவிலிருந்து ஸூர்யனைப்பார்த்து, மழைகாலங்களில் மழையில் நனைந்து, குளிர்காலத்தில் ஜலத்தில் நின்றுகொண்டு தவஞ்செய்தார்; இவ்வாறு ஆயிரவர்ஷம் கோரமான தவஞ்செய்தார். ௨௩

அவ்விச்வாமித்ரமஹாமுனிவர் இவ்வாறு கடுந்தவஞ்செய்யவே தேவர்கட்கும் இந்த்ரனுக்கும் பெரியபயம் உண்டாய்விட்டது. ௨௪

இந்த்ரனானவன் எல்லாத்தேவர்களோடுங்கூடி ரம்பையினிடம் சென்று தனக்கு நன்மையை விளைப்பதும் விச்வாமித்ரருக்குத் தீமையைவிளைப்பதுமான (மேல்வரும்)வாக்யத்தைச் சொன்னான்:— ௨௫

அறுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

அறுபத்து நான்காவது ஸர்க்கம்.

"ரம்பே! விச்வாமித்ரர் மந்மத விகாரத்தால் அறிவுகெட்டு உன்னிடத்தில் ஆவல்கொள்ளும்படி நீ செய்யவேண்டும்; தேவர்களுக்கு இந்தப்பெரிய கார்யத்தை நீ செய்யவேண்டும்." ௧

புத்திமானான இந்த்ரன் அவ்வாறுசொல்லவே அந்த ரம்பை, கொஞ்சம் அஞ்சி, அஞ்சலிஹஸ்தையாய்த் தேவேந்த்ரனைப்பார்த்து "ஸ்வாமி! வானவர் வேந்தே! பயத்தைவிளைவிக்கும் இவ்விச்வாமித்ர மஹாமுனிவர் என்னிடத்தில் கடுங்கோபங்கொள்வார்; ஸந்தேஹமில்லை; (சபிப்பார்.) ஆதலால் எனக்குப் பயமாயிருக்கிறது: என்னிடத்தில் மனமிரங்கவேண்டும்" என்ற வாக்யத்தைக் கூறினள். ௨

ராம! இவ்வாறு பயந்து அந்த ரம்பை சொன்னசொல்லைத் தேவேந்த்ரன் கேட்டு, கைகளைக்கூப்பிக்கொண்டு நடுங்கிநிற்கும் அவளைப்பார்த்துச் சொன்னான்:— ௩

[illegible] ௫
[illegible]
[illegible] ௬
[illegible]
[illegible] ௭
[illegible]
[illegible] ௮
[illegible]
[illegible] ௯
[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible] ௧௧
[illegible]
[illegible] ௧௨
[illegible]
[illegible] ௧௩
[illegible]
[illegible] ௧௪
[illegible]
[illegible] ௧௫
[illegible]
[illegible] ௧௬
[illegible] ௧௭
[illegible]
[illegible] ௧௮
[illegible]
[illegible] ௧௯

"ரம்பே! நல்லது, பயப்படவேண்டாம்; நான்சொல்லுகிறபடிகேள்: இ
வஸந்தருதுவருகையில், நெஞ்சத்தைக் கவரச்செய்யும்படி குயிலுருவத்தரி
த்து, மன்மதனையும் அழைத்துக்கொண்டு, அழகாய ஒருமரத்தில்வந்து உன்
பக்கத்திலிருக்கிறேன்; (அதாவது உனக்கு ஸஹாயமாக இருக்கிறேன்.) ௬

ரம்பே! உனது அழகைப்பன்மடங்கு அதிகமாய்ப்ப்ரகாசிக்கும்படி நீ செய்து
கொண்டு, தவஞ்செய்துகொண்டிருக்கிற அவ்விச்வாமித்ரனை நெஞ்சங்கவரு
மாறு செய்துவிடவேண்டும்." ௭

மிக்க அழகுடைய அந்த ரம்பையானவள் அவ்விந்த்ரன் சொற்கேட்டு
மிகவும் அழகாய் அலங்காரஞ்செய்துகொண்டு விச்வாமித்ரரிடம்வந்து அழகாய்
சிரித்து அவர்புத்தி சபலிக்கும்படி செய்யத்தொடங்கினள். ௮

பிறகு, அழகாய்க்கூவும் குயிலின் ஸ்வரத்தைக்கேட்டு மிகவும் மனங்களி
த்து இந்த ரம்பையைப்பார்த்தார். ௯

பிறகு, அக்குயில் கூவியதனாலும், அந்த ரம்பை பாடியதனாலும், அந்த
ரம்பையைக்கண்டதனாலும் (விச்வாமித்ர)முனிவர் ஸந்தேஹங்கொண்டார். ௧௦

விச்வாமித்ரமஹர்ஷியானவர் "இது இந்த்ரன் செய்த கார்யம்" என்று
நன்றாய்த் தெரிந்துகொண்டு மிகுந்த கோபமுடையவராய் ரம்பையைச் சபித்த
விதமாவது:— ௧௧

"ரம்பே! காமக்ரோதங்களை வெல்லக்கருதி தவஞ்செய்கின்ற வென்
மனதை நீ, நியமுயற்சிகொண்டு கலக்கியதனால் பதினாயிரவர்ஷம் கல்லாய்க்
கிடக்கவேண்டும்; ௧௨

ரம்பே! எனக்குக் கோபத்தைவிளைத்ததனால் கல்லாய் நிற்கும் உன்னை
மஹாப்ரபாவமுள்ள ஓரந்தணர் தபோபலத்தால் சாபத்தினின்று விடுவிப்பார்."

மஹாப்ரபாவமுள்ள விச்வாமித்ர மஹாமுனிவர் கோபத்தைவெல்லமுடியா
மல் இவ்வாறுசபித்துவிட்டு, பின்பு (ஐயோ! கோபத்திற்காளாய் விட்டோமே!
என்று) வருத்தப்பட்டார். ௧௪

அப்போது அவர்சாபத்தால் ரம்பை கல்லாய்விட்டாள்: (ரம்பையைப்பார்த்
து விச்வாமித்ர) மஹர்ஷி சொன்னதை அவ்விந்த்ரனும் மன்மதனும் கேட்டு
(பயந்து)புறப்பட்டுப்போய்விட்டார்கள். ௧௫

ராம! மஹாப்ரபாவமுள்ள அவ்விச்வாமித்ரர் தமதுகோபத்தால் தவத்தைப்
பாழாக்கிக்கொண்டு, புலன்களைவெல்லாததனால் மனதிற்பொறுமைகொள்ளா
மலே போய்விட்டார். ௧௬

(கோபத்தால்) இவ்விச்வாமித்ரர் தவம்பாழாய்விட்டுவ (இவ்வாறு)மனதில்
நிச்சயஞ்செய்துகொண்டார்:— ௧௭

"(இனி) நாம் கோபங்கொள்ளாதிருக்கவேண்டும்; யாரெதைச்செய்தாலும்
பேசாதிருக்கவேண்டும்; நூறுவர்ஷமானாலும் மூச்சுகூட விடாமலிருக்கவேண்
டும்; ௧௭

நமக்குப் ப்ரஹ்மர்ஷி என்கிற பட்டம் வருகிறவரையில் நம்புலன்களையும்
வென்று, தவத்தால் நமது சரீரத்தை வாட்டிவிடவேண்டும்; ௧௮

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஈத்தினை வர்ஷங்களாயும் மூச்சுவிடாமலும் ஆஹாரமில்லாமலும் இருக்க வேண்டும்: நாம் தவஞ்செய்யும்போது நமது அவயவங்கள் நசிக்கமாட்டாவல்லவா! ௧௯

ரகுநந்தந! அவ்விச்வாமித்ரமஹாமுனிவரானவர், ஆயிரவர்ஷம்வரையில் மூச்சுவிடாமலும் ஆஹாரமில்லாமலும் தவஞ்செய்யவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டார். ௨௰

அறுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

அறுபத்தைந்தாவது ஸர்க்கம்.

ராம! பின்பு மஹாமுனிவராகிய விச்வாமித்ரரானவர் வடதிசையைவிட்டு கிழக்குத்திசைசென்று வெகுபயங்கரமாகத் தவஞ்செய்தார். ௧

ராம! ஆயிரவர்ஷம்வரையில் மௌநமென்னுஞ் சிறந்த வ்ரதத்தில் நின்று எவருஞ் செய்தற்கரிய ஒப்பற்ற தவத்தைச் செய்தார். ௨

பூர்ணமாய் ஆயிரவர்ஷங் கட்டைபோல்நின்று அவ்விச்வாமித்ரர் செய்த தவத்திற்குப் பலவிக்நங்களுண்டாகியும், அவர்மனதிற் கோபமுண்டாகவில்லை ராம! அவ்விச்வாமித்ரரானவர், (காம் கோபமேற்கொள்ளக்கூடாதென்று) நிச்சயஞ்செய்துகொண்டு, பாதநாசமுமும் வராதிருக்குமாறு தவத்தை வெகு நன்றாய்ச்செய்தார். ௩

ரகுகுலத்திற் சிறந்தவ! உறுதியான நெஞ்சமுடைய அவ்விச்வாமித்ரர், அவ்வாறு பூர்ணமாய் ஆயிரவர்ஷ காலம் வ்ரதத்தைச் செய்து, அதைமுடித்துவிட்டு, அந்நத்தை உண்ணத்தொடங்கினார்: அப்போது, இந்த்ரனானவன் அந்தண உருவம்பூண்டு அவ்விச்வாமித்ரரிடம்வந்து, (அவருண்ணும்) ஸித்தமாயிருக்கும் அந்நத்தை (தனக்குக்கொடுக்கும்படி) யாசித்தான். ௪

மேன்மை பெற்றவராய்ப் பெருந்தவம்புரிந்தவராயுள்ள விச்வாமித்ரர், ஸித்தமாயிருந்த அந்நத்தையெல்லாம், அந்தணவேஷந்தரித்துவந்திருக்கும் அவ்விந்த்ரனுக்கு உடனே கொடுத்து, அந்நம்மிகுராமற்போய்விடவே உண்ணாமலே இருந்து மௌநமென்னும் நோன்பைக்கொண்டவராகி, அவனை ஒன்றுஞ்சொல்லாமல் (சபியாமல்) இருந்துவிட்டார். ௫-௬

பிறகு, முனிபுங்கவராகிய விச்வாமித்ரர், ஆயிரவர்ஷகாலம் மூச்சுவிடாமல் தவஞ் செய்தார்; அவ்வாறு மூச்சுவிடாமல் தவஞ்செய்யவே, அவரது சிரஸினின்று, அக்நி உண்டாய்விட்டது; அதனால் மூவுலகமும் நடுநடுங்கி, தபிக்கப்பெற்றதுபோலும். ௭

பிறகு, தேவர்கள், கந்தர்வர்கள், உரகர்கள், அஸுரர்கள், ராக்ஷஸர்கள் ஆகியஎல்லோரும், அவ்விச்வாமித்ரரது தவமென்னும் அக்நியினால் மயங்கி, ஒளிகுன்றித்து, மிக்கதுக்கத்தோடுகூடி ப்ரஹ்மாவிடம் வந்து சொல்லினர்:— ௮

"ஸ்வாமி! பல உபாயங்களைக்கொண்டு விச்வாமித்ரமஹாமுனிவருக்கு ஆசையும் கோபத்தையும் உண்டாக்கினோம்: அவர் அவைகளை லக்ஷ்யஞ்செய்யாமலிருந்ததுமில்லாமல், மேன்மேலும் தவத்தால் வ்ருத்தியடைகிறார். அவரிடத்திற் சிறிதும் பாபமேதும் காணப்படவில்லை; ௯

[illegible]

இவ்விச்வாமித்ரர் மனதிற்கோரிய இஷ்டத்தை நீர்கொடாவிடின், ஸ்தாவரஜங்கமங்களோடிய மூவுலகங்களையும் அவர் தவங்கொண்டு நாசஞ்செய்து விடுவார்; ௧௪

ஸ்வாமி! திசைகள்யாவும் இருள்மூடி, ஒளியற்றவைகளாய்விட்டன; கடல்கள்யாவும் கலங்கிவிட்டன; பர்வதங்கள்யாவும் வெடிக்கின்றன. பூமி இடிகிடென்று நடுங்குகின்றது; காற்றானது மிக்கவ்யாகுலப்பட்டுவீசுகின்றது; எல்லாஜநங்களும் மதிமயங்கிநிற்கின்றன; இதுவிஷயத்தில் செய்யவேண்டிய தின்னதென்பது எங்களுக்குப்புலப்படவில்லை; ௧௫

ஸ்வாமி! விச்வாமித்ர மஹர்ஷியின்தவமென்னும் அக்நியினால் மூவுலகத்துஜநங்களும் தொழிலடங்கி மதிமயங்கினவைகளாயின; ஸூர்யனும் ஒளியற்றவனாயினன்; மேன்மைபெற்ற பெருந்தவங்கொண்டு (மூவுலகங்களையும்) அக்நிபோல்தஹிக்கின்ற (அவ்விச்வாமித்ர) மஹாமுநிவர், (எல்லாவற்றையும்) நாசஞ்செய்வதற்குள்ளேவே அவருக்கு நல்லவார்த்தைசொல்லவேண்டும்; ௧௬

ப்ரளயகாலத்தில் காலாக்நி தஹிப்பது போல் அவர், மூவுலகங்களையும் தஹித்துவிடுகிறார்; அவருக்குத்தேவராஜ்யம் வேண்டுமென்றாலுங் கொடுத்துவிடும் அவருக்குஎதுவேண்டுமென்றாலுங்கொடுத்துவிடும்." ௧௭

பிறகு எல்லாத்தேவர்களும் ப்ரஹ்மாவை முன்னே அழைத்துக்கொண்டு மஹாத்மாவாகிய விச்வாமித்ரரிடம் வந்து, "ப்ரஹ்மர்ஷியே! உமக்குக்ஷேமமுண்டாகுக; (நீர்செய்த) கடுந்தவத்தால் நாங்கள் மிக்கமகிழ்ச்சியடைந்தவர்களாயினோம்" என்றவின்மொழியைக்கூறினர். ௧௮-௯

"குழந்தாய்! ப்ராஹ்மண! விச்வாமித்ர! நீசெய்தகடுந்தவத்தால் ப்ராஹ்மணத்தன்மையை அடைந்துவிட்டாய்; உனக்கு நீர்க்காயுளையும் கொடுக்கிறேன்; அதற்படிக்கு எல்லாத்தேவர்களும் ஸம்மதிக்கிறார்கள்; உனதுஇஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்; உனக்கு நன்மையுண்டாகுக; இனி நீ தவத்தை நிறுத்திவிட்டு ஸுகமாய்ப்போகலாம்" என்று ப்ரஹ்மா சொன்னார். ௨௰

எல்லாத்தேவர்களும் ப்ரஹ்மாவும் சொன்னசொல்லை மாஹாமுநிவரான விச்வாமித்ரர் கேட்டுகளித்துத் தெண்டனிட்டுரைத்ததாவது:— ௨௧

"நீண்டவாழுளையும் அந்தணத்தன்மையையும் நீர்எனக்குக் கொடுத்தது உண்மையானால், வேதங்களை ஒருவருக்கு ஓதிவைத்தல் வைதிகக்ரியைகளைச் செய்துவைத்தல்முதலிய வேதாதிகாரங்கள்யாவும் எனக்குவரவேண்டும்; ௨௨

வானவர்காள்! க்ஷத்ரியவேதங்களையும் ப்ராஹ்மணவேதங்களையுமுணர்ந்தவர்களுள் மேன்மைபெற்றவராகிய ப்ரஹ்மபுத்ரரான வஸிஷ்டரும், என்னை நீங்கள்ஒப்புக்கொண்டபடியே ஒப்புக்கொள்ளவேண்டும்; தேவச்ரேஷ்டர்காள்! எனக்குஇந்தப்பெரியகோரிக்கை நிறைவேற்றிவித்தீர்களாயின் நீங்கள்புறப்பட்டுப்போகலாம்." ௨௩-௪

பிறகு, எல்லாருஷிகளுள்ளும் மேன்மைபெற்று ப்ரஹ்மர்ஷியாகிய வஸிஷ்டர், வானவர்களின் வேண்டுகோளினால் (விச்வாமித்ரரோடு) ஸ்நேஹஞ்செய்துகொண்டார்; "உம்மைத்தேவர்கள் ஒப்புக்கொண்டபடி நானும் ஒப்புக்கொண்டேன்" என்றுஞ்சொல்லிவிட்டார். ௨௫

"நீர் ப்ரஹ்மர்ஷிஎன்பதில் ஸந்தேஹமேஇல்லை; நீர் கோரினவையாவும் உமக்குண்டாகும்" என்று ப்ரஹ்மா, தேவர்கள், வஸிஷ்டமஹர்ஷி ஆகிய எல்லோருஞ் சொல்லிவிட்டு, வந்தபடியே திரும்பிப்போய்விட்டார்கள். ௨௬-௭

[விஶ்வாமித்ரோ யயாவக்ரே ஶுபா ப்ராஹ்மணைர்வ்ருத:|
பௌரஜானபதை: ஸார்த்தம் வஸிஷ்டம் ஜயகாங்க்ஷவரந்॥
ஹ்ருஷ்டகாயைர் தேவீம் ஸாரம் வாமா கபிலஸ்திகா:|]
ஸர்வம் கேவலம் ப்ராஹ்மணம் ப்ராஹ்மம் பாபி மஹாத்மநா॥
ஏஷ பாபி ஶ்ருதிஶ்ரேஷ்ட ஏஷ விஶ்வாமித்ரவத:|
ஏஷ புத்ரவரோ தீர்க்கம் ஸர்வதேவேஷு பராயணம் ॥௨௭
ஏவமுக்த்வா மஹாதேஜா விஶ்வாமித்ரோ மஹாத்ரதி:| ௨௮
ஸகாஶத்வம் ப்ரத்யுவாச ராமலக்ஷ்மணமஞ்ஜஸா॥
ஜநக: ப்ராஞ்ஜலிர்பூத்வா கௌஶிகாத்மஜம்| ௨௯
யதிக்ருத்ய ப்ரத்யுவாச உக்தி வசநம் ஸ்வயம்பூர்வம்॥
யதோக்தம் காகபக்ஷதர: ப்ரதிஜ்ஞா தன்வீ யாசிக:| ௩௦
பௌரயிதா ஊர்வம் ஸ்வயம் வ்ருத்தாந்தம் மஹாத்மநா॥
(விஶ்வாமித்ர மஹாமுநே ப்ரஸாதம் நாமவேதாத்)|
ஶ்ருத்வா வசநம் ப்ரத்யவ்யய ஸங்க்ருத்ய நாத்யப॥ ௩௧,௨
விஶ்வேஷு ச தே ப்ரஸாதம் க்ருதம் மஹாத்மவ:|
ஶ்ருத்வா தயா மஹாதேஜா: ராமேண ச மஹாத்மநா॥
ஸர்வதேவாஶ்ச ப்ராப்ய ஸர்வ ஶ்ருத்வாதேவ ஸமேத்ய ஜநா|:
ப்ரதேயம் ஸர்வஸம்ப்ரீத்யா ப்ரதேயம் ச தே ஸர்வ॥
ப்ரதேயா ஜநா தேஶ்ரேய க்ருத்யம் தே கௌஶிகாத்மஜ| ௩௩
(வி காம்ஸ்ய ஏ யதா யதா தேவ ஸ்தோத்ராவதே:॥
க்ருஷிராஶ்ரம ப்ரஸந்நாம் கதாநாம் நாஸ்தி தே விதோ॥
அத்ரானேர ஶ்ரீஶ்ரேஷ்ட! ஸ்வஸ்தி தே ரவிர்ணஶ்ச॥ ௩௪
ஶ்ரத்தயா தேவதேவேஶ! த்ருஷ்ட்வா ஸ்வஸ்தி தாம் வந:|
ஸாதகம் ஸ்வகார்த்தி ப்ரஷ! ராமாஞ்ஜலிம் க்ருதஞ்ஜலி॥ ௩௫
அதவீர்யேண ராஜீவ: ப்ரஶஸ்ய வாரிஷத்வம்|
விஸர்ஜயாமாஸ ததா ப்ரீத: ப்ரீதமநஸா॥ ௩௬
ஸாயம்ஸந்த்யாம் ஶ்ரேஷ்டம் ஸௌபாக்யவான் மஹாயஶா:|
ப்ரதக்ஷிணம் க்ருத்வா ராமம் வேதபாராயண: ஸஹாத்மவ:॥ ௩௭
விஶ்வாமித்ர உவாச யஸ்யார்த்தே ஸம்ஸாரம் ஸலக்ஷ்மண:|
ஸமாரப்ய ப்ரஶ்ரய வசநாத் பரமாம் ஸத்க்ருதிம்॥ ௩௮

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே ஏகவிம்ஶதிதம: ஸர்க:.

ராம! மஹாத்மாவாகிய இவ்விச்வாமித்ரர் இவ்விதமாய்ப் ப்ராஹ்மணத் தன்மையை அடைந்தார். ராம! இவர், முனிவர்களுள் சிறந்தவர்; இவர், சரீரந் தரித்த தவம்; இவர், எப்பொழுதும் தர்மத்திலேயே பற்றுள்ளவர்; இவர், வீர்யத்திற்கெல்லாம் இருப்பிடமாயிருப்பவர்." ௨௬

மஹாப்ரபாவங்கொண்டு அந்தணருள் மேன்மைபெற்றவராகிய சதாநந்தரானவர், இவ்வாறு (விச்வாமித்ரரது கதையையெல்லாம் ராமருக்கு) சொல்லி முடித்தார். ௨௭

ஜநகரானவர், ராமலக்ஷ்மணருக்கு சதாநந்தர் சொன்ன கதையைக்கேட்டு அஞ்சலிஹஸ்தராகி விச்வாமித்ரரைப் பார்த்து, (மேல்வரும்) வாக்யத்தைச் சொன்னார்:— ௨௮

"மஹாமுனிவரே! தர்மிஷ்டரே! நீர், ராமலக்ஷ்மணர்களோடுகூடி எனது யாகத்திற்கு வந்ததால் நான் க்ருதார்த்தனாய்விட்டேன்; உமது அநுக்ரஹம் பெற்றவனாய்விட்டேன்; ௨௯

ஸ்வாமீ! மஹாமுனிவரே! உம்மால் நான் பாவமற்றவனாய்விட்டேன்; உமது தர்சநத்தால் நான் பலவித குணங்களையடைந்தவனாய்விட்டேன்; ௩௰

ஸ்வாமீ! மஹாப்ரபாவமுடையவரே! நீர்செய்த தவத்தைப் பற்றிய கதையின் வரலாற்றையெல்லாம் நான் விஸ்தாரமாய்க்கேட்டேன்; மஹாத்மாவாகிய ராமருங்கேட்டார்; (இந்த) ஸபைக்குவந்திருக்கிறவர்களும் உமது திவ்யகுணங்களைக் கேட்டார்கள்; ௩௰௧

விச்வாமித்ரரே! உமது தவத்தின் மஹிமை என்றும் அளவிடமுடியாது; உமதுபலமும் அளவிடமுடியாது; உமது குணங்களும் அளவிடமுடியா; ௩௰௨

ஸ்வாமீ! மஹாமுனிவரே! ஆச்சர்யகரமாயுள்ள உமதுகதைகளைக்கேட்கக் கேட்க போதுமென்றெனக்குப் புத்தியுண்டாகவேயில்லை; ஸூர்யாஸ்தமநமாகிறது. (மாலை) கடனைச்செய்யவேண்டிய தருணம் நெருங்கிவிட்டது: ௩௰௩

மஹாப்ரபாவமுடைய மஹர்ஷியே! நல்லது, தயைசெய்து மறுபடியும் நாளை திங்காலையில் என்னை நீர் பார்க்கவேண்டும்; (போய்வருதற்கு) எனக்கு விடைகொடுக்கவேண்டும்." ௩௰௪

இவ்வாறு ஜநகர்சொல்லக்கேட்டு விச்வாமித்ரமஹாமுனிவர் மனம்மகிழ்ந்து ஜநகமஹாராஜரைப்புகழ்ந்து. (போய்வாரும் என்றுசொல்லி) அனுப்பிவிட்டார்.

விதேஹதேசத்தரசராகிய ஜநகராஜர், விச்வாமித்ரரை இவ்வாறுசொல்லி உபாத்யாயர்களையும் பந்துக்களோடும் அழைத்துக்கொண்டு ப்ரதக்ஷிணஞ் செய்தார். (தெண்டனிட்டார்.) ௩௰௭

தர்மாத்மாவாகிய விச்வாமித்ரரும், மஹர்ஷிகளிடத்தில் பூஜைபெற்று, ராமரையும் லக்ஷ்மணரையும் அழைத்துக்கொண்டு. தாம்வந்திறங்கியிருக்குமிடத்திற்குப்போய்ச்சேர்ந்தார். ௩௰௮

அறுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

[illegible]

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௨
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible] ௬
[illegible] ௬,௭
[illegible]
[illegible]
[illegible] ௮
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible] ௧௧
[illegible]
* [illegible]
[illegible] ௧௨

* [illegible] ※ [illegible]

அறுபத்தாறுவது ஸர்க்கம்.

பிறகு விடியற்காலத்திலெழுந்து காலைக்கடமைகளைச் செய்துமுடித்து (ஜநக)ராஜர், மஹாத்மாவாகிய விச்வாமித்ரரை ராமலக்ஷ்மணர்களோடுகூட அழைப்பித்தார். க

அப்போது, தர்மாத்மாவாகிய ஜநகராஜர், மஹாத்மாக்களாகிய ராமலக்ஷ்மணர்களுக்கும் அவ்விச்வாமித்ரருக்கும் சாஸ்த்ரப்படி பூஜைசெய்து, "ஸ்வாமீ! பாபமற்றவராகிய விச்வாமித்ரரே! க்ஷேமமா? நான்உமக்கு என்னசெய்ய வேண்டும்? நீர் கட்டளையிடவேண்டும்; நான் உமது கட்டளையைப்பெறவேண்டியவன்" என்ற வாக்யத்தைச்சொன்னார். ங

பேசுவதிற்சமர்த்தரும் தர்மாத்மாவுமான அவ்விச்வாமித்ரர், மஹாத்மாவாகிய ஜநகரால் இவ்வாறு கூறப்பட்டவராகி, வல்லவராயுள்ள ஜநகரைப் பார்த்து, (மேல்வரும்)மொழியை உத்தரமாகச்சொன்னார்:— ச

"(மஹாராஜ!) தசரதராஜருடைய புத்ரர்களாய் உலகத்தில் ப்ரஸித்தி பெற்ற க்ஷத்ரியர்களாயுள்ள இவ்விரண்டு குமாரர்களும், உம்மிடத்திருக்கிற சிறந்த வில்லைப் பார்க்க விரும்புகிறார்கள்; ரு

இவ்வில்லைக்காண்பியும்; உமக்கு நன்மையுண்டாகும்; ராஜபுத்ரரிருவரும், இவ்வில்லைப்பார்த்துவிட்டு, கோரிவந்த கார்யத்தைப் பூர்த்திசெய்துகொண்டு இஷ்டப்படி திரும்பிப்போய்விடுவார்கள்." சு

விச்வாமித்ரர் இங்ஙனங்கூற அவருக்கு ஜநகர்சொன்ன உத்தரமாவது:—

"இவ்விடத்தில் இந்த வில் இருப்பதற்குக் காரணமின்னதென்பதை (சொல்லுகிறேன்) கேளும்: (எங்கள்குலத்தில்) நிமியென்பவருக்கு ஆறாவது புருஷர் "தேவராதர்" என்ற ஒரு மன்னவரிருந்தார்; இவ்வில்லை வைத்து வைக்கும்படி அந்தத் தேவராதர் கையில் மஹாத்மா (சிவபிரான்) கொடுப்பித்தார்; அ

முற்காலத்தில், சிவபெருமானானவர் தக்ஷயாகத்தில் தேவர்களை அடிக்கும்பொழுது, (இவ்வலிய)வில்லைத்தமது மிகுந்த வலிவினால் விளையாட்டாக நாணேற்றிக்கொண்டு, சினந்துத் தேவர்களைப்பார்த்து, "யாகத்தில் பாகம் வாங்கவந்தத் தேவர்களே! எனது பாகங்களை நீங்கள் கொடாததனால் உங்கள் தலைகளை (இந்த)வில்லினால் அறுத்துத்தள்ளிவிடுகிறேன்" என்ற இம்மொழியைப்புகன்றார்; கo

மஹாமுநிவரே! பிறகு எல்லாத்தேவர்களும் சிவபெருமானைச் சரணமடைந்துவிட்டனர்; ஆகலாற்றும் சிவபிரான் அவர்களிடத்தில் அன்பு கொண்டார்; கக

மஹாத்மாக்களாகிய அத்தேவர்களிடத்து அவ்வாறு அன்புவைத்து அச்சிவபெருமான் அவர்களுக்கு (இவ்வில்லை)க்கொடுத்தார்; ஸ்வாமி! எங்கள் (குலத்தின்)பெரியவராகிய தேவராதரிடத்தில் வைத்துவைக்கும்படி (அத்தேவர்களால் அவ்வில்) கொடுக்கப்பட்டது; மஹாத்மாவாயுள்ள சிவபெருமானுடைய அந்தவில், இதுதான்; கஉ

[illegible]
[illegible] ௧௩

[illegible]
[illegible] ௧௪

[illegible]
[illegible] ௧௫

[illegible]
[illegible] ௧௬

[illegible]
[illegible] ௧௭

[illegible]
[illegible] ௧௮

[illegible]
[illegible] ௧௯

[illegible]
[illegible] ௨௦

[illegible]
[illegible] ௨௧

[illegible]
[illegible] ௨௨

[illegible]
[illegible] ௨௩

[illegible]
[illegible] ௨௪

[illegible]

பிறகு, நான் (யாகஞ்செய்வதற்காக) பூமியைச் சோதிக்கவேண்டி கலப்பையினால் உழும்போது, அந்தக்கலப்பையினடியினின்று ஒரு பெண்குழந்தை எனக்கு அகப்பட்டது; அவ்வாறு கலப்பையினால் உழுத பூமியினின்றுண்டானதால் அக்குழந்தைக்கு "ஸீதை" என்று பெயரிட்டேன்; ௧௩

பூமியிலிருந்துண்டானவளாய், (நான் வளர்த்துவருகிறபடியால்) எனக்குப் பெண்ணானவள் அந்த ஸீதை நாடோறும் வளர்ந்துவருகிறாள்; அயோநிஜையாய் எனக்குக் குழந்தையாகிய இந்த ஸீதையை, "நம்மிடமிருக்கிற சிவதநுஸ்ஸை நாணேற்றும் வல்லவருக்கே கொடுக்கவேண்டும்" என்று நான் நிச்சயித்து, விவாஹஞ்செய்துகொடுக்காமல் நிறுத்திவைத்திருக்கிறேன்; ௧௪

மஹாமுநிவரே! பூமியிலிருந்துண்டாய் நாடோறும் வளர்ந்துவருகின்ற என்குழந்தையாகிய அந்தஸீதையை விவாஹஞ்செய்துகொடுக்கும்படி என்னை அநேக ராஜாக்கள் வந்து கேட்டார்கள்; ௧௫

ஸ்வாமி! அவ்வாறு வந்து கேட்ட அரசர்களெல்லோர்க்கும், "என்னிடமிருக்கிறசிவதநுஸ்ஸை வளைக்கிறவருக்கே கந்யகையைக்கொடுப்பேன்" என்று சொல்லி, என்குழந்தையை(விவாஹஞ்செய்து)க்கொடாமலிருக்கிறேன்; ௧௬

முநிபுங்கவரே! அதனால் எல்லாவரசரும் ஒன்றுகூடி மிதிலாநகரம்வந்து, (இவ்வில்லின்) வலிமையையறிய விரும்பினர்; ௧௭

அவர்கள் அறியவிரும்பவே, அவர்களின் வலிமையையறிதற்காக நான் வில்லைக்கொண்டுபோய்க்கொடுத்தேன்; அவர்கள், அந்த வில்லைக் கையில் வாங்கிக்கொள்ளவாவது, தூக்கிப்பார்க்கவாவது முடியாமற்போய்விட்டது; ௧௮

(விச்வாமித்ர)மஹாமுநிவரே! தவத்தையே பொருளாகப்பெற்றவரே! தங்களுக்குள் வல்லமைசாலிகளாக எண்ணிவந்த அம்மன்னவர்களுக்கு வல்லமை இல்லை என்பதை, அந்த வில்லை வளைக்கமுடியாததனாலேயே நான் தெரிந்துகொண்டு, ஸீதையைக்கொடுக்கமாட்டேனென்று சொல்லிவிட்டேன்; ௧௯

முநிபுங்கவரே! பிறகு எல்லா வேந்தர்களும், வில் வளைக்கமுடியாதென்று தாங்களே தெரிந்துகொண்டு, (என்னுடன் போர்செய்தற்காக) மிதிலாநகரத்தைச் சூழ்ந்துகொண்டார்கள்; ௨௰

(ஸீதையைக்கொடாததனாலேயே) நான் அவர்களை அவமானப்படுத்துகிறதாக அவ்வேந்தர்கள் எண்ணி, மிக்க சினங்கொண்டவர்களாய் மிதிலாபுரியைப் பிடித்தார்கள்; ௨௧

முநிச்ரேஷ்டரே! அவர்கள் ஒருவர்ஷம்வரையில் ஓயாமல் யுத்தஞ்செய்தார்கள்; பிறகு எனது படைகள் யாவும் நாசமடைந்துவிட்டன; அதனால் யான், மிக்க துக்கமடைந்தேன்; ௨௨

பிறகு, நான் தவங்கொண்டு, தேவகணங்களையெல்லாம் பூஜித்தேன்; தேவர்களும் மிகவும் மகிழ்ந்தவர்களாகி, (எனக்கு) சதுரங்க ஸேனைகளைக் கொடுத்தார்கள்; ௨௩

அல்பபலமுடையவர்களாய்க் கொடியசெய்கையுடையவர்களாயுள்ள அவ்வரசர்கள் என்னால் அடிக்கப்பட்டு, தேஹபலமற்றவர்களும் படைகளற்றவர்களுமாய் மந்திரிகளோடுகூடி திக்குகளில் ஓடிவிட்டார்கள்; ௨௪

[illegible]
[illegible] ௨௫
[illegible]
[illegible] ௨௬

[illegible]

[illegible]

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible] ௨
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௫
[illegible]
[illegible] ௭
[illegible]
[illegible] ௮
[illegible]
[illegible] ௯
[illegible]
[illegible] ௧௦

முனிவரேறே! பெருந்தன்மையுடையவரே! மிக்க ஒளியுடையதாய் விளங்கும் அப்படிப்பட்ட இந்தத் தநுஸ்ஸை ராமலக்ஷ்மணர்களுக்குங் காட்டுகிறேன்; ௨௫

(விச்வாமித்ர)முனிவரே! தசரதபுத்ரரான ராமர் இவ்வில்லை எடுத்து நாணேற்றிவிட்டாராயின், அயோநிஜையாய் எனக்குப்பெண்ணாயுள்ள ஸீதையை அவருக்குக் கொடுத்துவிடுகிறேன்.'' ௨௬

அறுபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

அறுபத்தேழாவது ஸர்க்கம்.

விச்வாமித்ர மஹாமுனிவரானவர் ஜநகர்சொன்னதைக்கேட்டு "(உம்மிடமிருக்கிற) தநுஸ்ஸை ராமனுக்குக் காண்பியும்" என்று (ஜநக)மன்னரைப் பார்த்துச் சொன்னார். ௧

பிறகு ஜநகவேந்தர் மந்த்ரிகளைப் பார்த்து, "நல்ல வாஸனை மாலை முதலியவைகளால் அலங்கரித்து (நமது) தநுஸ்ஸைச் சீக்ரமாய்க் கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டார். ௨

ஜநகர் கட்டளையிடலும், மந்த்ரிகள் (மிதிலா) புரிக்குச் சென்றனர். மன்னவர் கட்டளைப்படி அவ்வில்லை முன்னே எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள். ௩

எட்டு சக்ரங்களையுடையதாயுள்ள அந்தவில்லைவைத்திருக்கிறபெட்டியை மஹாபலமுடையர்களாய் நீண்ட சரீரமுடையர்களாயுள்ள ஐயாயிரம் புருஷர் வெகு ப்ரயத்நப்பட்டு இழுத்தார்கள். ௪

(ஜநக)மன்னவரது மந்த்ரிகளானவர்கள், அவ்வில்லை வைத்திருக்கும் அந்த இரும்புப் பெட்டியைக் கொண்டுவந்து, வானவர்க் கோப்பாயுள்ள ஜநகரைப் பார்த்து, "வேந்தே! மிதிலாநகரத்தை ஆள்கின்றவ! மன்னவரேறே! எல்லாவரசர்களாலும் பூஜிக்கப்பெற்றதாயுள்ள நீர் பார்க்கக் கொண்டுவரச் சொன்ன சிறந்த தநுஸ்ஸை இதோ யாங்கள் கொண்டுவந்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். ௫

(ஜநக)வேந்தர் அம்மந்த்ரிகள் சொன்னதைக் கேட்டு, அஞ்சலிஹஸ்தராகி, மஹாத்மாவான விச்வாமித்ரரையும், ராம லக்ஷ்மணர்களிருவர்களையும் பார்த்து (மேல் வருமாறு) கூறலானார்:— ௬

"ஸ்வாமீ! இந்தச் சிறந்த வில்லானது ஜநகவம்சத்து ராஜாக்களால் பூஜிக்கப்பெற்றது; முன்பு மிக்கவலிவுடைய மன்னவர்களும் இவ்வில்லை நாணேற்றமுடியாமற் போய்விட்டார்கள். ௭

தேவர்கள், அஸுரர்கள், ராக்ஷஸர்கள், கந்தர்வர்கள், சிறப்புபெற்ற யக்ஷர்கள், கிந்நரர்கள், உரகர்கள் ஆகிய எல்லோரும் இவ்வில்லை நாணேற்ற முடியாமற் போய்விட்டார்கள். ௮

அப்படியிருக்க மனிதர்கள் இவ்வில்லை எடுத்து நாணேற்றவாவது, காதுவரையில் இழுத்துப்பார்க்கவாவது, பாணத்தைத்தொடுக்கவாவது, அசைக்கவாவது, தூக்கிப்பார்க்கவாவது எவ்வாறு முடியும்! ௯

[illegible]

மஹாமுநிவரே! மஹாபாக்யமுடையவரே! அவ்வுத்தமதநுஸ்ஸை இதோ கொண்டுவந்திருக்கிறேன்; ராஜபுத்ரர்களாகிய இந்த ராமலக்ஷ்மணர்களுக்கும் இதைக்காண்பியும்." ௧௧

தர்மாத்மாவாகிய விச்வாமித்ரரும், ஜநகர்சொன்னதைக்கேட்டு, "குழந்தாய்! ராம! தநுஸ்ஸைப்பாரு" என்று ராகவனைப் பார்த்துச்சொன்னார். ௧௨

ராமரானவர், ப்ரஹ்மர்ஷியாகிய விச்வாமித்ரர் சொன்னதைக் கேட்டு அவ்வில்லிருந்த இடத்திற்குப்போய், அவ்விற்பெட்டியைத்திறந்து அவ்வில்லைப்பார்த்து, (விச்வாமித்ரரைநோக்கி) "ஸ்வாமீ! இந்தச்சிறந்தவில்லை (எனது)கையினால் தொட்டுப்பார்க்கிறேன்; இதைத்தூக்கிநிறுத்தி நாணேற்றுதற்கு யத்நஞ்செய்கிறேன்" என்று சொன்னார். ௧௩

"அப்படியே செய்யும்" என்று (ஜநக)மன்னவரும் (விச்வாமித்ர)முநிவரும் அந்த ராமருக்குச்சொல்லினர். ௧௪

ரகுகுலத்துப்பிள்ளையாகிய அந்த ராமர் (விச்வாமித்ர)முநிவரதுமொழி கேட்டு, அநேகஆயிரம்புருஷர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், விளையாடுவதுபோல் அவ்வில்லை நடுவில்பிடித்து எடுத்து நிறுத்திவிட்டார். ௧௫

தர்மத்தையே சரீரமாகவுடையவராய்ப் பெரும்புகழ்பெற்றவராய் புருஷோத்தமராயுள்ள ராமரும், அவ்வில்லைவளைத்து நாணேற்றி இழுத்தார்; அவ்வில்லும், (மளமளவென்று) மத்யத்தில் முறிந்துவிட்டது. ௧௬

அந்தப்பெரிய சப்தமானது இடியின் கோஷத்திற்கு ஸமானமாயிருந்தது. (அதனால்) பூமியானது, பர்வதம் பிளக்கும்பொழுது நடுங்குவதுபோல் கிடுகிடென்று நடுங்கிவிட்டது. ௧௭

(விச்வாமித்ர)மஹாமுநிவர், (ஜநக)மன்னவர், அந்த ராமலக்ஷ்மணர் ஆகியஇவர்கள்தவிர மற்ற ஜநங்களெல்லாவும் அந்தச் சப்தத்தைக் கேட்டதனால் மூர்ச்சையடைந்து (பூமியில்)விழுந்துவிட்டனர். ௧௮

அந்த ஜநங்கள் தேறியெழுந்தபின்னர் (ஜநக)மன்னர் தைர்யங்கொண்டவராய், கைகளைக்கூப்பிக்கொண்டு (விச்வாமித்ர)மஹாமுநிவரைப் பார்த்து (மேல்வருமாறு) சொல்லலானார்:— ௧௯

"தசரதபுத்ரரான ராமருடைய பராக்ரமத்தை நான்கண்டுகொண்டேன்; இவர், இவ்வாறுவில்லைமுறிப்பரென்று நான் ஊஹிக்கவில்லை; இது, அசிந்த்யமாயும் அதி-ஆச்சர்யகரமாயுமிருக்கிறது. ௨௦

எனது பெண்ணாகிய ஸீதை தசரதபுத்ரரான ராமரைப் பர்த்தாவாக அடைந்து, ஜநகவம்சத்தவர்களின் குலத்திற்கு, உடனே ஒரு கீர்த்தியை உண்டாக்கப்போகிறாள். ௨௧

விச்வாமித்ரரே! (வில்லைநாணேற்றும்படியான) வலிவுடையவருக்கே நம்அருமைக்குழந்தையாகிய ஸீதையைக் கொடுக்கவேண்டும் என்று நான்செய்த ப்ரதிஜ்ஞையும் உண்மையாயிற்று. எனக்குப் ப்ராணனிலும் மேலான இஷ்டமான என்குழந்தையாகிய ஸீதையை ராமருக்கு நான் அவச்யம் கொடுக்கவேண்டும். ௨௨

பவதோऽநுமதே ப்ரஹ்மந் ஶீக்ரம் கச்சந்து மந்த்ரிண:।
மம கௌஶிக! பத்ரம் தே அயோத்யாம் த்வரிதா ரதை:॥ ௨௩
ராஜாநம் ப்ரஶ்ரிதைர்வாக்யைராநயந்து புரம் மம।
ப்ரதாநம் வீர்யஶுல்காயா: கதயந்து ச ஸர்வஶ:॥ ௨௪
முநிகுப்தௌ ச காகுத்ஸ்தௌ கதயந்து ந்ருபாய வை।
ப்ரீயமாணம் து ராஜாநமாநயந்து ஸுஶீக்ரகா:॥ ௨௫
கௌஶிகஶ்ச ததேத்யாஹ ராஜா சாபாஷ்ய மந்த்ரிண:।
அயோத்யாம் ப்ரேஷயாமாஸ தர்மாத்மா க்ருதஶாஸநாந்।
யதாவ்ருத்தம் ஸமாக்யாதுமாநேதும் ச ந்ருபம் ததா॥ ௨௭

இதி ஸ்ரீராமாயணே பாலகாண்டே ஸப்தஷஷ்டிதம: ஸர்க:.

அத அஷ்டஷஷ்டிதம: ஸர்க:.

ஜநகேந ஸமாதிஷ்டா தூதாஸ்தே க்லாந்தவாஹநா:।
த்ரிராத்ரமுஷிதா மார்கே தேऽயோத்யாம் ப்ராவிஶந்புரீம்॥ ௧
[ராஜ்ஞோ பவநமாஸாத்ய த்வாரஸ்தாநிதமப்ருவந்।
ஶீக்ரம் நிவேத்யதாம் ராஜ்ஞே தூதாந்நோ ஜநகஸ்ய ச॥
இத்யுக்தா த்வாரபாலாஸ்தே ராகவாய ந்யவேதயந்।]
தே ராஜவசநாத்தூதா ராஜவேஶ்ம ப்ரவேஶிதா:॥
தத்ருஶுர்தேவஸங்காஶம் வ்ருத்தம் தஶரதம் ந்ருபம்। ௨
பத்தாஞ்ஜலிபுடா: ஸர்வே தூதா விகதஸாத்வஸா:॥
ராஜாநம் ப்ரயதா வாக்யமப்ருவந்மதுராக்ஷரம்। ௩
மைதிலோ ஜநகோ ராஜா ஸாக்நிஹோத்ரபுரஸ்க்ருத:।
குஶலம் சாவ்யயம் சைவ ஸோபாத்யாயபுரோஹிதம்।
முஹுர்முஹுர்மதுரயா ஸ்நேஹஸம்யுக்தயா கிரா॥
* ஜநகஸ்த்வாம் மஹாராஜ! ப்ருச்சதே ஸபுரஸ்ஸரம்। ௫
ப்ருஷ்ட்வா குஶலமவ்யக்ரம் வைதேஹோ மிதிலாதிப:॥
கௌஶிகாநுமதே வாக்யம் பவந்தமிதமப்ரவீத்। ௬
பூர்வம் ப்ரதிஜ்ஞா விதிதா வீர்யஶுல்கா மமாத்மஜா॥
ராஜாநஶ்ச க்ருதாமர்ஷா நிர்வீர்யா விமுகீக்ருதா:। ௭

* ஸ்வஸ்தஸ்தம் ச மஹாராஜ!

ஸ்வாமீ! விச்வாமித்ரரே! உமக்கு க்ஷேமமுண்டாகுக; சீக்ரமாய் எனது மந்த்ரிகள், உமது அநுமதிபெற்று ரதத்தில் மீதேறிக்கொண்டு விரைவில் அயோத்யைக்குப்போகவேண்டும். உகூ

வில்லைமுறித்ததனால் ராமருக்கு ஸீதையைக் கொடுக்கப்போகிறது முதலான வரலாற்றையெல்லாம் வணக்கமாய் (தசரத)ராஜருக்குச்சொல்லி, அவரை எனது பட்டணத்திற்கு அழைத்துவரவேண்டும். உச

ராமலக்ஷ்மணர்களை நீர் நன்றாய்க்காப்பாற்றிவைத்துக்கொண்டிருக்கிற ஸங்கதியையும் (எனது மந்த்ரிகள்) சீக்ரமாய்ப்போய்த் தசரதருக்குச்சொல்ல வேண்டும்; (அதனால்) சீக்ரம் (தசரத)வேந்தரை அழைத்துவரவேண்டும். உரு

தர்மாத்மாவாகிய விச்வாமித்ரரும், "அப்படியே செய்யும்" என்று (ஜநக ராஜருக்கு) சொல்லினார்; ஜநகரும், எல்லா ஸமாசாரத்தையும் சொல்லி (தசரத)வேந்தரை அழைத்துவரும்படி கட்டளையிட்டு மந்த்ரிகளை அயோத்யைக்கு அனுப்பினார். உ௬

அறுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

அறுபத்தெட்டாவது ஸர்க்கம்.

ஜநகரால் கட்டளையிடப்பட்ட அந்தத் தூதர்கள், வாஹநங்கள்மீதேறி வெகுவேகமாய்ப்போய், வழியில்மூன்றிரவுதங்கி, அவர்கள் அயோத்யாபுரிக்குப்போய்ச் சேர்ந்தார்கள். க

அந்தத்தூதர்கள், (ஜநக)ராஜர் சொற்படி (தசரத)ராஜரது க்ருஹத்திற்குப்போய், தேவர்கட்கொப்பாக வராயிருக்கும் வ்ருத்தரான தசரதவேந்தரைக் கண்டனர். உ

மிக்க தைர்யமுடையர்களாகிய தூதர்களெல்லோரும் கைகளைக்கூப்பி வணங்கி (தசரத) ராஜரைப் பார்த்து (மேல்வரும்) இனிய வாக்யத்தைக் கூறினர்:— ௩

"மஹாராஜ! மிதிலாதிபதியாய், உம்மிடம்மிகுந்த ஸ்நேஹமுடையவராயுள்ள ஜநகவேந்தரானவர் உமது அக்நிஹோத்ரம், உபாத்யாயர்கள், புரோஹிதர்கள், ப்ருத்யர்கள் முதலிய எல்லாருடைய யோகக்ஷேமத்தையும் உம்மை விசாரிக்கும்படி எங்களுடன் சொன்னார். ௪

மிதிலாதிபதியாகிய ஜநகரானவர் (உமது)யோகக்ஷேமத்தை விசாரித்து, (மேல்வரும்) இவ்வாக்யத்தை விச்வாமித்ரர் கட்டளைப்படி உம்முடன் சொல்லச்சொன்னார்:— ரு

"வேதநூலை வளைக்கும் வல்லவருக்கே எனது பெண்ணைக்கொடுக்க வேண்டுமென்று பூர்வத்தில் நான் ப்ரதிஜ்ஞை செய்திருக்கிற ஸங்கதியும், ராஜாக்களும் வந்து பார்த்து அந்த வில்லை வளைக்க முடியாமல் என்மீது கோபங்கொண்டதும், அவர்களை நான் அடித்துத் துரத்தியதும் உமக்குத் தெரியுமன்றோ? ௬

[illegible]

வல்லவர்களான உமது பிள்ளைகளானவர்கள், விச்வாமித்ரர்மூலமாய்த் தற்செயலாகவே (மிதிலைக்கு)வந்து, எனது பெண்ணான அப்படிப்பட்ட இந்த ஸீதையை விவாஹஞ்செய்துகொள்ளத்தக்கவர்களாக ஆய்விட்டார்கள். ௮

மஹாராஜ! மஹாத்மாவாகிய ராமரானவர், அநேகஜநங்கள் கூடியிருக்கும் பெரிய ஸபையில் அந்தச்சிவபிரானது திவ்யதநுஸையும் மத்யத்தில் முறித்துவிட்டார். ௯

மஹாத்மாவாகிய இந்தராமருக்கு நான் ஸீதையைக்கொடுக்க ப்ரதிஜ்ஞை செய்யநினைத்திருக்கிறேன்; அந்தப்படி நான் செய்தற்கு நீர் கட்டளையிட வேண்டும். ௧௦

மஹாராஜ! உமக்கு க்ஷேமமுண்டாகுக; நீர் உமது உபாத்யாயர்கள், புரோஹிதர்கள் முதலானவர்களோடுகூடி சீக்ரமாய் (மிதிலாபுரிக்கு) வர வேண்டும். ராமலக்ஷ்மணர்களைப் பார்க்கவேண்டும். ௧௧

மஹாராஜ! எனக்கு ஸந்தோஷத்தை விளைத்து, தேவரீரும் இரண்டு பிள்ளைகளையும் கண்டு களிப்படைவீர்.' ௧௨

ஜநகரானவர், விச்வாமித்ரரிடத்தும் சதாநந்தரிடத்தும் அநுமதிபெற்ற வராகி, இந்தச்சுபவாக்யத்தை (உம்முடன் சொல்லும்படி எங்களோடு) சொன்னார்." ௧௩

தூதர்கள் அவ்வாறு சொல்லவே, அந்தசரதவேந்தர் மிகவும் மகிழ்ந்து, வஸிஷ்டர், வாமதேவர், மற்றுமுள்ள மந்த்ரிகள் ஆகிய இவர்களைப்பார்த்து (மேல்வருமாறு) கூறினர்:— ௧௪

"கௌஸல்யையைக் களிப்படைய விளைக்கும் இந்த ராமன் விச்வாமித்ரரால் காப்பாற்றப்பட்டு லக்ஷ்மணனோடுகூடி மிதிலாநகரத்திலிருக்கிறான். ௧௫

மஹாத்மாவாகிய ஜநகர், ராமனுடைய வல்லமையைத்தெரிந்துகொண்டு, அவனுக்கு ஸீதையைக்கொடுக்கவெண்ணியிருக்கிறார். ௧௬

மஹாத்மாவாகிய ஜநகருடைய நடவடிக்கை உங்களுக்குத் திருப்திகரமாயிருக்குமாகில், சீக்ரமாய் (மிதிலா)புரிக்குப்போவோம்; காலவிளம்பஞ் செய்யவேண்டாம்." ௧௭

"அப்படியே செய்யும்" என்று மந்த்ரிகளும் எல்லா மஹர்ஷிகளும் ஒப்புக் கொண்டார்கள்; அந்தத் தசரதவேந்தரும் மிகவும் மகிழ்ந்தவராகி, "(மிதிலாபுரிக்கு எல்லாரும்) நாளைக்குப்புறப்படவேண்டும்" என்று மந்த்ரிகளுக்குச் சொல்லிவிட்டார். ௧௮

எல்லா குணங்களுங் கூடியவர்களாயுள்ள (ஜநக)வேந்தரது அம்மந்த்ரிகளெல்லோரும் அன்றிரவு (தசரதரிடத்து) மேலானவிருந்துபெற்று களித்தவர்களாய் (அயோத்யையில்)வாஸஞ்செய்தார்கள். ௧௯

அறுபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

அறுபத்தொன்பதாவது ஸர்க்கம்.

பிறகு, இரவுசென்றவுடனே தசரதராஜர் களித்துத் தம் புரோஹிதர்களோடும் பந்துக்களோடுங்கூடி, ஸுமந்த்ரனை நோக்கி இம்மொழியைக் கூறினர்:— ௧

𑌅𑌦𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌧𑌨𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌾 𑌧𑌨𑌮𑌾𑌦𑌾𑌯 𑌪𑍁𑌷𑍍𑌕𑌲𑌮𑍍 ।
𑌵𑍍𑌰𑌜𑌨𑍍𑌤𑍍𑌵𑌗𑍍𑌰𑍇 𑌸𑍁𑌵𑌿𑌹𑌿𑌤𑌾 𑌨𑌾𑌨𑌾𑌰𑌤𑍍𑌨𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ॥ ௨
𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑌬𑌲𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌨𑌿𑌰𑍍𑌯𑌾𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ।
𑌮𑌮𑌾𑌜𑍍𑌞𑌾𑌸𑌮𑌕𑌾𑌲𑌂 𑌚 𑌯𑌾𑌨𑌯𑍁𑌗𑍍𑌯𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥ ௩
𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌶𑍍𑌚 𑌜𑌾𑌬𑌾𑌲𑌿𑌰𑌥 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌃 ।
𑌮𑌾𑌰𑍍𑌕𑌣𑍍𑌡𑍇𑌯𑌃 𑌸𑍁𑌦𑍀𑌰𑍍𑌘𑌾𑌯𑍁𑌰𑍃𑌷𑌿𑌃 𑌕𑌾𑌤𑍍𑌯𑌾𑌯𑌨𑌸𑍍𑌤𑌥𑌾 ॥
𑌏𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌗𑍍𑌰𑍇 𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌨𑌂 𑌯𑍋𑌜𑌯𑌸𑍍𑌵 𑌮𑍇 ।
𑌯𑌥𑌾 𑌕𑌾𑌲𑌾𑌤𑍍𑌯𑌯𑍋 𑌨 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍂𑌤𑌾 𑌹𑌿 𑌤𑍍𑌵𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌮𑍍 ॥ ௫
𑌵𑌚𑌨𑌾𑌤𑍍𑌤𑍁 𑌨𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌾 𑌸𑍇𑌨𑌾 𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑌿𑌣𑍀 ।
𑌰𑌾𑌜𑌾𑌨𑌮𑍃𑌷𑌿𑌭𑌿𑌃 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌵𑍍𑌰𑌜𑌨𑍍𑌤𑌂 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑍋𑌽𑌨𑍍𑌵𑌗𑌾𑌤𑍍 ॥ ௬
𑌗𑌤𑍍𑌵𑌾 𑌚𑌤𑍁𑌰𑌹𑌂 𑌮𑌾𑌰𑍍𑌗𑌂 𑌵𑌿𑌦𑍇𑌹𑌾𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑍇𑌯𑌿𑌵𑌾𑌨𑍍 ।
𑌰𑌾𑌜𑌾 𑌤𑍁 𑌜𑌨𑌕𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌪𑍂𑌜𑌾𑌮𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍍 ॥ ௭
𑌤𑌤𑍋 𑌰𑌾𑌜𑌾𑌨𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌂 𑌦𑌶𑌰𑌥𑌂 𑌨𑍃𑌪𑌮𑍍 ।
𑌜𑌨𑌕𑍋 𑌮𑍁𑌦𑌿𑌤𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌹𑌰𑍍𑌷𑌂 𑌚 𑌪𑌰𑌮𑌂 𑌯𑌯𑍌 ॥ ௮
𑌉𑌵𑌾𑌚 𑌚 𑌨𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋 𑌨𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌮𑍁𑌦𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 । ௯
𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌂 𑌤𑍇 𑌮𑌹𑌾𑌰𑌾𑌜 𑌦𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋𑌽𑌸𑌿 𑌰𑌾𑌘𑌵 ॥
𑌪𑍁𑌤𑍍𑌰𑌯𑍋𑌰𑍁𑌭𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌂 𑌲𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑍇 𑌵𑍀𑌰𑍍𑌯𑌨𑌿𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌮𑍍 । ௧௦
𑌦𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍃𑌷𑌿𑌃 ॥
𑌸𑌹 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍈𑌰𑍍𑌦𑍇𑌵𑍈𑌰𑌿𑌵 𑌶𑌤𑌕𑍍𑌰𑌤𑍁𑌃 । ௧௧
𑌦𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌮𑍇 𑌨𑌿𑌰𑍍𑌜𑌿𑌤𑌾 𑌵𑌿𑌘𑍍𑌨𑌾 𑌦𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌮𑍇 𑌪𑍂𑌜𑌿𑌤𑌂 𑌕𑍁𑌲𑌮𑍍 ॥
𑌰𑌾𑌘𑌵𑍈𑌃 𑌸𑌹 𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌾𑌦𑍍𑌵𑍀𑌰𑍍𑌯𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍈𑌰𑍍𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 । ௧௨
𑌶𑍍𑌵𑌃 𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑍇 𑌨𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑌯𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥
𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍇 𑌨𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌵𑌿𑌵𑌾𑌹𑌮𑍃𑌷𑌿𑌸𑌮𑍍𑌮𑌤𑌮𑍍 । ௧௩
𑌤𑌸𑍍𑌯 𑌤𑌦𑍍𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌋𑌷𑌿𑌮𑌧𑍍𑌯𑍇 𑌨𑌰𑌾𑌧𑌿𑌪𑌃 ॥
𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌵𑌿𑌦𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌵𑌾𑌚 𑌮𑌹𑍀𑌪𑌤𑌿𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑍋 𑌦𑌾𑌤𑍃𑌵𑌶𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍇𑌤𑌨𑍍𑌮𑌯𑌾 𑌪𑍁𑌰𑌾 ॥
𑌯𑌥𑌾 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞 𑌤𑌤𑍍𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌹𑍇 𑌵𑌯𑌮𑍍 । ௧௪

"இன்று நமது கருவூலங்காக்கின்றவர்களெல்லோரும் நல்ல ஏற்பாடு செய்து, நாநாவித ரத்நங்களையும் தநத்தையும் வேண்டியவளவாயில் எடுத்துக் கொண்டு முன்னே புறப்படவேண்டும். ௩

சதுரங்க ஸைந்யம், நல்ல பல்லக்கு, ரதம் முதலியவைகளும் நான் கட்டளையிடும்போது ஸித்தமாயிருந்து நாற்புறத்துஞ் சூழ்ந்து சீக்கிரமாய்ப் புறப்பட வேண்டும். ௪

வஸிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர், நல்ல தீர்க்காயுளையுடைய மார்க்கண்டேயர், காத்யாயநருஷி ஆகிய இவ்வந்தணர்களும் முன்னே புறப்பட வேண்டும். காலவிளம்பம் பண்ணாமல் ரதத்தை ஸித்தப்படுத்துங்கள்; (ஜநகராஜ) தூதர்கள் என்னை அவசரப்படுத்துகிறார்கள்." ௫

(இவ்வாறு சொல்லி) ருஷிகளோடுகூடி புறப்படும் (தசரத)ராஜனை அவரது சதுரங்கஸேனை அவர் சொற்படி பின்புறத்திற் றொடர்ந்துசென்றது. ௬

நாலுநாள் வழிநடந்து (ஐந்தாநாள்) மிதிலாபுரிக்குப் போய்ச்சேர்ந்தார். ஜநகராஜரும், (தசரதர் வந்த ஸங்கதியை)கேட்டு மிக்க ஸந்தோஷமடைந்துப் பூஜைசெய்தார். ௭

பிறகு, ஜநகவேந்தரும், பெரியவராயுள்ள தசரதவேந்தரிடம் மகிழ்ந்து வந்து, அம்மகிழ்வு பெருகப்பெற்றார்; ௮

புருஷச்ரேஷ்டராயுள்ள ஜநகராஜர், புருஷச்ரேஷ்டராயுள்ள தசரத ராஜனைப்பார்த்து ஸந்தோஷத்துடன் கூடி, (மேல்வருமாறு) சொன்னார்:— ௯

"ரகுகுலத்திற்பிறந்த மஹாராஜ! க்ஷேமமா? நீர், (எனது)பாக்யத்தால் (இங்கு) வந்தீர். (உமது) புத்ரர்களிருவர்களுடையவும் வல்லமையைக்கண்டு பெருமகிழ்ச்சியடையும். ௰

மஹாப்ரபாவம்பெற்ற ருஷியாகிய வஸிஷ்டபகவான், இந்த்ரன் தேவர்களோடு கூடிவருவதுபோல், (எனது) பாக்யத்தால் (இங்கு) வந்தார். ௧௧

வல்லமைகொண்டு சிறப்புபெற்ற மஹாத்மாக்களான ரகுவம்சத்தாரோடு, (உம்மோடு)ஸம்பந்தத்தைப் பெறுவிக்கின்ற பாக்யம் எனக்குக் கிடைத்தபடியால் இனி எனக்கு ஒரிடையூறும் நேராது. எனது குலமும் மேன்மையை அடைந்துவிட்டது. ௧௨

மன்னவரே! மாநவீரரே! இன்னும் நாலைந்துதினங்களுக்குள் எனது யாகம்முடிந்துவிடும். உடனே ருஷிகள்சொல்லுகிறபடி நீர் விவாஹத்தை நிறைவேற்றிவைக்கவேண்டும்." ௧௩

பேசுவதிற் சமர்த்தராகிய (தசரத)வேந்தரானவர், ருஷிகளின்நடுவில் அந்த ஜநகர்சொன்ன அவ்வாக்யத்தைக் கேட்டு, (ஜநக)ராஜனைப் பார்த்து "தர்மங்களையுணர்ந்தவரே! (ஜநகரே!)தாநங்கொடுத்தல் தாதாவினாலேயேயன்றோ ஆகவேண்டியிருக்கிறது! (கொடுக்கிறவர்கள் கொடுத்தால் வாங்கிக் கொள்ளுகிறவர்கள் வேண்டாமென்கிறார்களோ! கந்யகையைநீர்கொடுக்கவேண்டியவர்; நான்வாங்கிக்கொள்ளவேண்டியவன்.) இதை (நீர் கந்யகையைக் கொடுக்கிறீர் என்கிறஸங்கதியை) நான்முன்னமே கேட்டாயிற்று; நீர் சொல்லுகிறபடிநடக்க நாங்கள், காத்துக்கொண்டிருக்கிறோம்" என்றசொல்லை உத்தரமாய்ச்சொன்னார். ௧௪

[illegible]

ஸத்யவாதியாயுள்ளதசரதர் கூறியமொழி சமத்காரமாயும் உண்மையாயு மிருந்ததால், அதைக்கேட்டு ஜநகர் மிக்கவியப்படைந்தார். ௧௯

பிறகு, எல்லாமுநிவர்களும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டதனால் அன்றிரவுமுழுதும் மிக்கமகிழ்ச்சியோடு கூடினவர்களாய் ஸுகமாக வாஸஞ் செய்தார்கள். ௧௩

(தசரத)ரேயவரும் தம்புத்ரரான ராமலக்ஷ்மணரிருவரையும் கண்டு பேரானந்தங்கொண்டு, ஜநகரிடத்தில் பூஜைபெற்று மனம் பூரித்திருந்தார். ௧௪

தத்வங்களையுணர்ந்து மஹாப்ரபாவம்பெற்றவராகிய ஜநகரும், யாககார் யத்தைச் சாஸ்த்ரப்படி செய்துமுடித்து, (விவாஹத்திற்குமுன்,கல்யாணப்) பெண்களிருவருக்குச்செய்யவேண்டிய காரியத்தையுஞ் செய்து அன்றிரவுமுழுதும் ஸுகமாகவிருந்தார். ௧௫

அறுபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

எழுபதாவது ஸர்க்கம்.

பிறகு, அறிஞராகிய ஜநகரானவர் பொழுதுவிடிந்தவுடனே மஹர்ஷி களோடுகூடி நித்யகர்மங்களைச் செய்துமுடித்து, தம்புரோஹிதரான சதா நந்தரைநோக்கி (மேல்வரும்)மொழியைக்கூறினார்:— ௧

"மிக்கபராக்ரமமும் தர்மமுங்கூடியவனாகிய என்தம்பி 'குசத்வஜன்' என்கிறவன், அருகில் நிற்கெல்லிமரங்கள்சூழப்பெற்று, ஸ்வர்க்கலோகத்தையும் புஷ்பகவிமானத்தையும் நிகர்த்து, 'இக்ஷுமதி' என்கிற நதியின்கரையில் அழ காய் விளங்குகின்ற ஸாங்காச்யையென்கிறபட்டணத்தில் இருக்கிறானன்றோ! ௨

அவன், எனது யாகத்திற்கு உதவிசெய்கிறபடியால் அவனைநான்பார்க்க விரும்புகிறேன்; (விவாஹமென்னும்)இந்தக்காட்சியை என்னைப்போல் அவனுங்கண்டுகளிப்பான் (அவனை அழைத்துவாருங்கள்)." ௩

இந்த்ரனது கட்டளைகேட்டு உபேந்த்ரனை அழைத்துவரச்செல்லுகிற வர்கள்போல், (ஜநக)ராஜரது கட்டளைகேட்டு அவரது வல்லவர்களான தூதர்கள், (குசத்வஜனை)அழைத்துவருதற்காக வேகமாய்ச்செல்லுங் குதிரை களின்மீதேறிக்கொண்டு புறப்பட்டார்கள். ௪

பிறகு, (ஜநக)மன்னரதுகட்டளைப்படி குசத்வஜர், மிதிலைக்குவந்து சேர்ந் தார்: அந்தக்குசத்வஜர், மஹாத்மாவும் தர்மிஷ்டருமான ஜநகரைக்கண்டார். ௫

அந்தக்குசத்வஜர், தர்மிஷ்டரான சதாநந்தரையும், (ஜநக)வேந்தரையும் தெண்டனிட்டு (அவர்களிடவுத்திரவுபெற்று,) ராஜாக்களுக்காகவேசெய்யப் பட்டதாய்ச் சிறந்ததாயுள்ள திவ்யஆஸனத்தின் மீதேறினார். ௬

[illegible]

[illegible]

மிக்க அழகுடையர்களும் வீரர்களுமாகிய ப்ராதாக்களான அந்த ஜநகர் குசத்வஜர் என்னுமிருவர்களும் ப்ரதாநமந்த்ரியான ஸுதாமனைப்பார்த்து, "மந்த்ரிசிரோமணீ! மிக்க அழகும் வல்லமையும் பொருந்திய இக்ஷ்வாகுகுல த்துப்பிள்ளையாகிய தசரதரை அவரது மந்த்ரிகளோடும் பிள்ளைகளோடுங் கூட்டிஅழைத்துவாரும் சீக்ரம்போம்" என்றுசொல்லி அனுப்பினர். ௧௦

அந்த ஸுதாமர், ரகுகுலத்தார்க்கு மேன்மையைவிளைக்கின்ற தசரதராஜ ரிருக்கிற ஜாகைக்கு அரண்மனைக்குப்போய் இந்தத்தசரதரை ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, "(ஸ்வாமீ!) வல்லவராகிய அயோத்யாதிபதியே! மிதிலாதிபதியாகிய ஜநகர், உம்மை உமது உபாத்யாயர்களோடும் புரோஹி தர்களோடும் பார்க்க விரும்புகிறார்" என்ற இம்மொழியைக்கூறினர். ௧௧

(தசரத)வேந்தர், (ஜநகரது)மந்த்ரிசிரோமணி கூறியதைக்கேட்டு, ருஷி களைக்களையும் பந்துக்களையும் அழைத்துக்கொண்டு, அந்த ஜநகரிருக்கிறவிடத் திற்குப் போய்ச்சேர்ந்தார். ௧௨

பேசவல்லவராகிய அந்தத் தசரதவேந்தர் தம் மந்த்ரிகளோடும் புரோ ஹிதர்களோடும் பந்துக்களோடுங்கூடி, ஜநகராஜனைப்பார்த்து இம்மொழியைக் கூறலானார்:— ௧௩

"மஹாராஜ! இக்ஷ்வாகுகுலத்திற்குப் பரமகுருவும், எல்லாக்கார்ய விஷ யங்களிலும் பேசவேண்டியவரும் வஸிஷ்டர்தாம் என்கிறவிஷயம் உமக்குத் தெரியுமன்றோ? ௧௪

தர்மாத்மாவாகிய இவ்வஸிஷ்டர், விச்வாமித்ரரிடத்தும் எல்லாமஹர்ஷி களிடத்தும் விடைபெற்று, எனது குலத்தின் க்ரமத்தைச் சொல்லுவார்." ௧௫

இவ்வாறு தசரதர் பேசிமுடித்தபின், பேசுவதில் ஸமர்த்தரும், ருஷியுமா கிய வஸிஷ்டபகவான், ஜநகரையும், அவரது புரோஹிதரையும் பார்த்து, (மேல் வரும்) வாக்யத்தைச்சொன்னார்:— ௧௬

"எவ்விதத்தாலும் காணுதற்கரிய வஸ்துவையே உத்பத்தி காரணமாக வுடையவரும், சாச்வதரும், நித்யரும், அழிவில்லாதவருமாயிருக்கிற ப்ரஹ் மாவினிடத்தினின்று மரீசி உண்டானார்; மரீசியினுடைய பிள்ளை, காச்யபர்; ௧௭. காச்யபரிடமிருந்து விவஸ்வான் (ஸூர்யபகவான்) உண்டானார்; விவஸ்வா னுடைய புத்ரர், மநு(ப்ரஜாபதி); மநுவினுடைய புத்ரர், இக்ஷ்வாகு; ௧௮. அந்த இக்ஷ்வாகு தாம், அயோத்யைக்கு முதல்ராஜாவாகவிருந்தார்; இக்ஷ்வாகு வின் புத்ரர், மிகுந்த செல்வமுடைய 'குக்ஷி' என்றவர்; ௧௯. குக்ஷிக்கு, மிக்க அழகுடைய 'விகுக்ஷி' என்ற பிள்ளை பிறந்தார்; விகுக்ஷியின் புத்ரர், மிக்க அழகும் பராக்ரமமும் பொருந்திய 'பாணர்' என்றவர்; ௨௦. பாணருடைய புத் ரர், மஹாதேஜஸ்ஸையுடையவரும் மஹாபராக்ரமமுடையவருமான அநரண் யர்; அநரண்யரிடமிருந்து ப்ருது உண்டானார்; ப்ருதுவின் புத்ரர் த்ரி சங்கு; ௨௧. த்ரிசங்குவுக்கு, பெரும்புகழ்பெற்ற 'துந்துமாரர்' என்ற பிள்ளை

[illegible]

யுண்டானார்; இத்துமாரருடைய புத்ரர், 'மாந்தாதா' என்ற மன்னவர்; ௨௧. மாந்தாதாவுக்கு, ஸ்ரீமானாகிய 'ஸுஸந்தி' என்ற பிள்ளை பிறந்தார்; ஸுஸந்திக்கு, 'த்ருவஸந்தி, ப்ரஸேனஜித்' என்ற இரண்டுபுத்ரர்கள் (பிறந்தார்கள்); ௨௨. த்ருவஸந்திக்கு, மிக்க புகழ்பெற்ற 'பரதர்' என்ற பெயருடையவர் (பிறந்தார்). பரதரிடத்தினின்று, மஹாபராக்ரமமுடைய 'அஸிதர்' என்றவர் பிறந்தார்; ௨௩. அவ்வஸிதர் விஷயத்தில், 'ஹைஹயர்கள், தாலஜங்கர்கள், சூரர்களாகிய சசிபிந்துக்கள்' என்றும் இவ்வரசர்கள் சத்ருக்களாக ஏற்பட்டார்கள்; ௨௪. அவ்வஸிதர், அந்தப்பகைவேந்தருடன் யுத்தத்தில் எதிர்த்துச் சண்டையிட்டு ராஜ்யப்ரஷ்டராய்விட்டார்; ௨௫. அஸிதராஜர், வலிவுகுறைந்து மந்த்ரிகளோடுகூடி, ஹிமவத்பர்வதத்தின் அருகிலிருக்கின்ற 'ப்ருகுப்ரஸ்ரவணம்' என்கிற குன்றில் வந்து வாஸஞ்செய்துகொண்டிருந்தார்; ௨௬. இந்தஅஸிதருடைய பார்யைகளிருவர்களும், கர்ப்பவதிகளானார்கள்; (அவ்விருவர்களில்) ஒருவள், சக்களத்தியாகிய மற்றொருவளுக்குக் கர்ப்பம் நாசமாகக்கருதி, கரத்துடன் (விஷத்துடன்) கூடிய பதார்த்தத்தைக் கொடுத்தாள்; ௨௭. பிறகு, ப்ருகுவின் புத்ரராகிய ச்யவநர் களித்தவராகி, அழகாய் விளங்குகின்ற ஹிமவத்பர்வதத்திற்கு வந்துசேர்ந்தார்; ௨௮. அப்பொழுது, மஹாபாக்யமுடையவளாய், தாமரை இதழ்போன்ற கண்ணுடையவளாய், சக்களத்தியால் விஷங்கொடுக்கப்பெற்ற அஸிதபார்யையொருவள், தனக்குப் பிள்ளையுண்டாகக்கோரி, தேவர்களுக்கொப்பான அழகுடைய (அந்த)ச்யவநரைத் தெண்டனிட்டாள்; ௨௯. அவள்பெயர், காளிந்தி; அந்தக்காளிந்தி, அந்தச் ச்யவநருஷியைப்பார்த்து, ("ஸ்வாமி! எனது கர்ப்பம் நாசமாகாமல் எனக்கொரு வீரக்குழந்தை யுண்டாகவேண்டும்" என்று)சொன்னாள்; ௩௰. அந்தப் ப்ராஹ்மணரும், பிள்ளையுண்டாகக்கருதிய அந்தக் காளிந்தியைப்பார்த்து "மஹாபாக்யமுடையவளே! கமலம்போன்ற கண்ணுடையவளே! நீதுக்கப்படவேண்டாம்; மஹத்தான பலமும் வீர்யமும் அழகும் செல்வமுங்கூடிய ஒரு ஸத்புத்ரன் கரத்தோடு (விஷத்தோடு) கூடியே பிறப்பான்" என்று கூறினார்; ௩௧. கணவனுக்குநேர்ந்த கஷ்டத்தாற் குன்றியிருந்த பதிவ்ரதையாகிய அந்தக் காளிந்தியானவள், ச்யவநரை நமஸ்கரித்து அவரது அநுக்ரஹத்தால் ஒருகுழந்தையைப்பெற்றாள்; ௩௨. கர்ப்பம் நாசமாகவெண்ணி அந்தக் காளிந்திக்குச் சக்களத்தி கரத்தை (விஷத்தை)க்கொடுத்தாள்; அந்தக் கரத்தோடுகூடியே குழந்தை பிறந்துவிட்டது; அந்தப்பிள்ளைக்குத்தாம் 'ஸகரர்' என்று பெயர்; ௩௩. ஸகரரிடமிருந்து அஸமஞ்சன் (உண்டானான்); அஸமஞ்சனிடம் அம்சுமான் (பிறந்தார்); அம்சுமானுடைய புத்ரர் திலீபர்; திலீபருடைய புத்ரர் பகீரதர்; ௩௪. பகீரதரிடம் ககுத்ஸ்தர் (பிறந்தார்); ககுத்ஸ்தருடைய புத்ரர்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ரகுமஹாராஜர்); ௩௬. ரகுவின் பிள்ளை, மிக்க அழகுடையவனை 'ப்ரவ்ருத்தன்' என்றவன்; அவன் (ஒருவர் சாபம்பெற்று) ராக்ஷஸனாய்விட்டான்; அவனை கல்மாஷபாதனென்றுஞ் சொல்வார்கள்; அவனிடமிருந்து 'சங்கணன்' என்றவர் பிறந்தார்; ௩௭. சங்கணருடைய பிள்ளை ஸுதர்சநர்; ஸுதர்சநரிடமிருந்து அக்நிவர்ணர் (பிறந்தார்); அக்நிவர்ணருடைய பிள்ளை, 'சீக்ரகர்' என்றவர்; சீக்ரகருடையபிள்ளை 'மரு' என்றவர்; மருவினிடமிருந்து ப்ரசுச்ருகர் உண்டானார்; ப்ரசுச்ருகரிடமிருந்து அம்பரீஷர் (உண்டானார்); ௩௮. அம்பரீஷருடைய பிள்ளை 'நஹுஷன்' என்ற வேந்தன்; நஹுஷனுடைய பிள்ளை யயாதி; யயாதியின் புத்ரர், நாபாகர்; ௩௯. நாபாகருக்கு 'அஜர்' என்றவர் பிறந்தார்; அஜரிடமிருந்து தசரதர் உண்டானார்; இந்தத் தசரதரிடத்தினின்று, 'ராமலக்ஷ்மணர்கள்' என்கிற இவ்விரண்டு புத்ரர்களும் உண்டானார்கள். ௪௰

(ஜநக)மஹாராஜரே! ஆதியாயுள்ள வம்சத்தில் ஜனித்து பரிசுத்தர்களாய், பரமதார்மிஷ்டர்களாய், வீரர்களாய், ஸத்யவாதிகளாயிருந்த இக்ஷ்வாகு குலத்துதித்தவர்களின் ஸம்பந்தம்பெற்ற ராமலக்ஷ்மணரிருவர்க்கும் உமது பெண்களிருவர்க்கும் பொருத்தமிருக்கிறபடியால் உமது பெண்களை ராமலக்ஷ்மணர்களுக்கு நீர் விவாஹஞ்செய்துகொடுக்கவேண்டும்." ௪௨

எழுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

எழுபத்தோராவது ஸர்க்கம்.

ஜநகராஜனவர், இவ்வாறு சொல்லிய வஸிஷ்டரை நோக்கி. அஞ்ஜலிஹஸ்தராய், (மேல்வருமாறு) கூறினார்:— ௧

"முநிச்ரேஷ்டரே! எங்கள் குலத்தைச்சொல்லுகிறேன், கேட்கவேண்டும்; குலத்திற்பிறந்தவன், கந்யகாதாநஞ்செய்யும்பொழுது, குலக்ரமத்தையெல்லாம் எடுத்துக்கூறவேண்டுமன்றோ! ஆதலால், கேளும் சொல்லுகிறேன்: ௨

எல்லா பலசாலிகளுள்ளும் சிறந்த மிக்க தார்மிஷ்டராகி மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற, 'நிமி' என்ற ராஜரொருவரிருந்தார்; ௩. அவருடைய புத்ரர், 'மிதி' என்றொருவரிருந்தார்; அந்த மிதிதாம் மிதிலாநகரத்தை ஏற்படுத்தினார்; அந்த மிதி முதற்கொண்டுதாம் எங்களுக்கு 'ஜநகர்கள்' என்று பெயர்; ஜநகருக்கு 'உதாவஸு' என்றவர் (பிறந்தார்); ௪. உதாவஸுவுக்கு, தார்மிஷ்டராகிய 'நந்திவர்த்தநர்' பிறந்தார்; நந்திவர்த்தநருடைய புத்ரர் 'ஸுகேது' என்றவர்; ௫. ஸுகேதுவுக்குப் புத்ரர், மஹாபலமுடைய தேவராதர்; ராஜர்ஷியாகியதேவராதருடைய புத்ரர், 'ப்ருஹத்ரதர்' என்றவர்; ௬

[illegible]
[illegible] ௭
[illegible] *
[illegible] ௮
[illegible]
[illegible] ௯
[illegible]
[illegible] ௧௦
[illegible]
[illegible] ௧௧
[illegible]
[illegible] ௧௨
[illegible]
[illegible] ௧௩
[illegible]
[illegible] ௧௪
[illegible]
[illegible] ௧௫
[illegible]
[illegible] ௧௬
[illegible]
[illegible] ௧௭
[illegible]
[illegible] ௧௮
[illegible]
[illegible] ௧௯
[illegible]
[illegible] ௨௦

---

* [illegible]

ப்ருஹத்ரதருடைய பிள்ளை, மஹாப்ரதாபமுடையவரும் சூரருமாகிய 'மஹா வீரர்' என்றவர்; மஹாவீரருடைய மைந்தர், மிக்க தைர்யமுடையவரும்ஸத்ய மான பராக்ரமமுடையவருமாகிய 'ஸுத்ருதி' என்றவர்; ௭. ஸுத்ருதியின் புத்ரர், தர்மாத்மாவாகிய த்ருஷ்டகேது; ராஜர்ஷியாகிய த்ருஷ்டகேதுவின் புத்ரர், 'ஹர்யச்வர்' என்றவர்; ௮. ஹர்யச்வருடைய புத்ரர், 'மரு' என்றவர்; மருவின் புத்ரர், ப்ரதீந்தகர்; ப்ரதீந்தகருடைய புத்ரர், தர்மாத்மாவாகிய 'கீர்த்திரதர்' என்ற வேந்தர்; ௯. கீர்த்திரதருடைய புத்ரர், 'தேவமீடர்' என்றவர்; தேவமீடருடைய மகனார், விபுதர்; விபுதருடைய புதல்வர், மஹீத்ரகர்; ௧௦. மஹீத்ரகருடைய புத்ரர், மிக்க வலியவராகிய 'கீர்த்தி ராதர்' என்ற ராஜர்; ராஜர்ஷியாகிய கீர்த்திராதருக்கு 'மஹாரோமர்' என்ற பிள்ளைபிறந்தார்; ௧௧. மஹாரோமருக்கு, தர்மிஷ்டரான ஸ்வர்ணரோமர் பிறந்தார்; ராஜர்ஷியாகிய ஸ்வர்ணரோமருக்கு ஹ்ரஸ்வரோமர் பிறந்தார்; ௧௨. தர்மங்களை யுணர்ந்தவரும் மஹாத்மாவுமான அந்த ஹ்ரஸ்வரோமருக்கு, இரண்டுபிள்ளைகள் பிறந்தார்கள்; அவர்களில் நான் ஜ்யேஷ்டன்; வீரனாகிய குசத்வஜன், கனிஷ்டன்; ௧௩

எனது தந்தை (ஹ்ரஸ்வரோம)வேந்தர், ராஜ்யத்தைப்பரிக்கும்படி எனக்கு முடிசூட்டி, குசத்வஜனை என்னிடம் ஒப்பித்துவிட்டு, (தவஞ்செய்தற்காக) வனத்திற்குப்போய்விட்டார். ௧௪

எனது தந்தை வ்ருத்தராய்க் காலஞ்சென்றபிறகு, என் தம்பியாகிய தேவஸமானனான குசத்வஜனிடத்து மிக்க ப்ரீதிவைத்து, தர்மமாய் நான் அரசுபுரிந்துவந்தேன். ௧௫

பிறகு, ஒருக்கால், வீர்யவானான 'ஸுதந்வா' என்ற ராஜன், மிதிலாநகரத்தை முற்றுகையிடுதற்கு ஸாங்காச்யாநகரத்திலிருந்து வந்தான். ௧௬

அவன், "உத்தமமாயுள்ள சிவதநுஸையும், தாமரைக்கண்ணியாகிய ஸீதை என்கிற உம்பெண்ணையும் நீர் எனக்குக் கட்டாயமாகக் கொடுக்கவேண்டும் (கொடாவிடில் உம்மை சும்மாவிடுவதில்லை)" என்று சொல்லி தூதர்களை என்னிடம் அனுப்பினான். ௧௭

ப்ரஹ்மர்ஷியே! (வஸிஷ்டரே!) அதை நான் ஒப்பாததனால், என்னுடன் அவன் யுத்தஞ்செய்தான்; எதிர்த்துவந்த அந்த ஸுதந்வராஜனை யுத்தத்தில் நான் வதஞ்செய்தேன். ௧௮

மஹாமுனிவரே! அந்த ஸுதந்வராஜனை வதஞ்செய்து, (அவனது ராஜ்யத்தை ஆளுதற்காக) என் தம்பியான குசத்வஜனை ஸாங்காச்யநகரத்தில் முடிசூட்டிவைத்தேன். ௧௯

மஹாமுனிவரே! இக்குசத்வஜன் எனக்கு இளையவன்; நான் மூத்தவன்; முனிபுங்கவரே! எங்கள் பெண்களை உமக்கு (=உங்கள் பிள்ளைகளுக்கு.) விவாஹஞ்செய்துகொடுக்கிறேன். ௨௦

[illegible] ௨௪

[illegible] ௨௫

[illegible]

[illegible]

[illegible] ௧

[illegible] ௨

[illegible] ௩

[illegible] ௪

[illegible] ௫

[illegible] ௬

[illegible] ௭

[illegible] ௮

[illegible] ௯

உமக்கு மங்களமுண்டாகுக; வல்லமையையே விலையாகப்பெற்றவரும், தேவகன்யகைபோன்றவளுமான வீர்யசுல்கையான ஸீதையை ராமருக்கும், இரண்டாம்பெண்ணான ஊர்மிளையை லக்ஷ்மணருக்கும் தங்களுக்கு ஸம்மதமாகக் கொடுக்கிறேன்; இதில் ஸந்தேஹமில்லை. ௨௨
(தசரத) வேந்தே! ராமலக்ஷ்மணர்களுக்கு விவாஹத்தில் செய்ய வேண்டிய ஸமாவர்த்தனம் கோதானம் முதலிய விவாஹாங்கமான கார்யங்களைச் செய்யும்; உமக்கு நன்மையுண்டாகுக. ௨௩
மஹாபுருஷருடைய வேந்தே! இன்று "மகம்" நக்ஷத்ரம்; மூன்றாநாள் உத்தர பல்குநீ நக்ஷத்ரம்; அன்றைதினம், ராமலக்ஷ்மணர்களின் ஸௌக்யார்த்தமாக விவாஹத்தில் செய்யவேண்டிய தானம்முதலிய கார்யங்களை நடத்தவேண்டும்." ௨௪

எழுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

எழுபத்திரண்டாவது ஸர்க்கம்

அவ்வாறு கூறிய வீரரான ஜநகவேந்தரை நோக்கி, விச்வாமித்ரரானவர் வஸிஷ்டரையுங் கூடிக்கொண்டு, (மேல்வரும்) மொழியையுரைக்கலானார்:—௧
"நரேந்த்ர! 'இக்ஷ்வாகு, விதேஹ' என்ற இருவர்களுடைய குலங்களும் அளவிடமுடியாத மஹிமையுடையவைகளும் ஐச்வர்யத்தை விஞ்சுகின்றவைகளுமாயிருக்கின்றன. இவர்களுக்கொப்பானவன் ஒருவனுமில்லை. ௨
அநகே! ஸௌந்தர்யம் முதலியவைகளால் தகுந்திருக்கிற ராமலக்ஷ்மணர்களிருவர்களுக்கும், ஸீதை ஊர்மிளை என்கிற இருவர்களையும் விவாஹஞ்செய்துகொடுத்து (தசரதரோடு நீர் பண்ணுகிற ஸம்பந்தமானது உங்களிருவர்க்கும்) அமைந்திருக்கிறது. ௩
வேந்தே! மாந்தர்களேறே! சொல்லவேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. தயைசெய்து என் சொல்லைக்கேட்கவேண்டும்: தர்மங்களையுணர்ந்த உமது தம்பியான குசத்வஜர் இதோஇருக்கிறாரன்றோ? இந்தத்தர்மாத்மாவுக்கு, உலகத்தில் அழகில் நிகரில்லாத இரண்டு பெண்களிருக்கிறார்களன்றோ? அவர்களையும் விவாஹஞ்செய்துகொடுக்கும்படி (உம்மை)கேட்டுக்கொள்ளுகிறோம்; ௪
மஹாத்மாக்களும் புத்திமான்களுமாயுள்ள பரதன் சத்ருக்னன் என்கிற இரண்டு குமாரர்களுக்கும் (குசத்வஜருடைய) இரண்டு பெண்களையும் கல்யாணஞ்செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். ௬
ஸௌந்தர்யமும் யௌவனமுங்கூடிய இந்தத்தசரத புத்ரர்கள் எல்லோரும் (நால்வரும்) தேவர்களுக்கொப்பான பராக்ரமமுடையவர்களாகி திக்பாலகர்களை நிகர்த்து விளங்குகிறார்கள். ௭
மஹாராஜ! புண்யமான செய்கையுடைய இக்ஷ்வாகுவின் குலமும் உமது குலமும் புகழத்தக்கவைகளாயிருக்கின்றன; (ஆதலால்) நீங்களிருவர்களும் ஸம்பந்தஞ்செய்து கொள்ளுங்கள்." ௮
வஸிஷ்டரிடம் அநுமதி பெற்று இவ்வாறு விச்வாமித்ரர் கூறிய மொழியை ஜநகர்கேட்டு அஞ்ஜலிஹஸ்தராகி, மஹாமுனிவர்களாகிய வஸிஷ்டர் விச்வாமித்ரர் என்னும் இருவர்களையும் நோக்கி, (பின்வரும்) மொழியைச்சொன்னார்:—

[illegible]
[illegible] ௧௦

[illegible]
[illegible] ௧௧

[illegible]
[illegible] ௧௨

[illegible]
[illegible] ௧௩

[illegible]
[illegible] ௧௪

[illegible]
[illegible]

[illegible]
[illegible] ௧௫

[illegible]
[illegible] ௧௬

[illegible]
[illegible] ௧௭

[illegible]
[illegible] ௧௮

[illegible]
[illegible] ௨௦

* [illegible] † [illegible]

"ஸமாநமான குலத்தில் ஸம்பந்தம்பண்ணும்படி மஹாமுனிவர்களாகிய நீங்களிருவரும் தாமே எங்களுக்குக் கட்டளையிடுகிறபடியே, எங்கள் குலத்திற்குப் பாக்யம் என்றெண்ணுகிறேன். ௧௦

உங்கள் இஷ்டப்படியே ஆகட்டும். உங்களுக்கு மங்களமுண்டாகுக. எப்பொழுதும் ஒருவரையொருவர் விட்டுப்பிரியாத இந்தப் பரத சத்ருக்நர்களிருவர்களும், குசத்வஜனுடையபெண்களான இவ்விரண்டு பெண்களையும் விவாஹஞ் செய்துகொள்ளட்டும். ௧௧

மஹாமுனிவரே! ராஜாக்களாகிய எங்களுடைய பெண்கள்நால்வரையும், மஹாபலமுடைய ராஜாக்களான உங்களுடையபிள்ளைகள்நால்வரும் ஒரேதினத்தில் விவாஹஞ்செய்து கொள்ளட்டும். ௧௨

விவாஹபலனைக் கொடுக்குந் தேவதையே உத்தரபல்குநி நக்ஷத்ரத்திற்கு அதிஷ்டான தேவதையாயிருக்கிறபடியால் அந்த உத்தரபல்குநி நக்ஷத்ரத்தில் விவாஹஞ்செய்தல் மிகவும் உத்தமம் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்." ௧௩

ஜநகராஜர் இவ்வாறு சுபவாக்யங் கூறி ஆஸநத்தினின்று எழுந்திருந்து அஞ்சலிஹஸ்தராகி, மஹாமுனிவர்களான வஸிஷ்டர் விச்வாமித்ரர் என்னும் இருவர்களையும் நோக்கி, (மேல்வரும்)மொழியைச்சொல்லலானார்:— ௧௪

"மஹாமுனிவர்களே! (எனது கந்யகைகளைத் தானங்கொடுத்தலாகிற)சிறந்த தர்மம் எனக்குஉண்டாகும்படி செய்தீர்கள்; எப்பொழுதும் உங்களிருவர்க்கும் நான் சிஷ்யனாயிருக்கிறேன்; இந்த ஸிம்ஹாஸநங்களில் நீங்களிருவர்களும் வீற்றிருக்கவேண்டும்: இம்மிதிலாபுரியானது எப்படி தசரதருக்கு ஸ்வாதீநமோ அப்படியே அயோத்யாபுரி எனக்கு ஸ்வாதீநம்; எல்லாஞ்சேர்ந்து உங்களுடைய ஸ்வாதீநம்; இவ்விஷயத்தில் ஸந்தேஹமேயில்லை; (ஆதலால்இப்பொழுது செய்யவேண்டியவைகளை யெல்லாம்)தக்கபடி (நீங்களே)செய்துவையுங்கள்." ௧௬

விதேஹதேசத்தரசராகிய ஜநகர் அவ்வாறு சொல்லும்பொழுது, ரகுகுலத்துப்பிள்ளையாகிய தசரதராஜர், அந்த ஜநகரைப் பார்த்து, "(ஜநகரே!)நன்றாய்ச் சொன்னீர்" என்று விளக்கமாய்ச் சொன்னார். ௧௭

(ஜநகரே!) மிதிலாதிபதிகளான நீர், குசத்வஜர் ஆகிய இருவர்களும், கணக்கிடமுடியாத குணங்களையுடையவர்கள், நீங்களிருவர்களும், ருஷிகளையும் எல்லாராஜாக்களையும் நன்றாய்ப்பூஜித்தீர்கள்; உமக்கு மங்களமுண்டாகுக; நல்லது, நீர் போய்வாரும்; நான் இறங்கியிருக்கிற இடத்திற்குப்போகவேண்டும்; இனி நாந்தி முதலியகார்யத்தைச் செய்யவேண்டும்" என்றுஞ் சொல்லலானார். ௧௯

பெரும்புகழ் பெற்ற தசரதராஜர், அந்த ஜநகராஜரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, விச்வாமித்ரர் வஸிஷ்டர் என்னும் இரண்டு மஹாமுனிவர்களையும் முன்னே அழைத்துக்கொண்டு, (தாம் இறங்கியிருக்கிறவிடத்திற்கு)சீக்ரமாய்ப் போய்ச்சேர்ந்தார். ௨௰

[illegible] ௨௧

[illegible] ௨௨

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அந்தத் தசரதராஜர் இருக்கிற இடத்திலிருப்போர், ஸாந்திக்ரமத் தம்முடைய கடமைகளைச் செய்து, ப்ராதக்காலத்தில் எழுந்திருந்து, (கல்யாணத்திற்குமுன் செய்யவேண்டிய) ஸமாவர்த்தனம் என்கிற காரியத்தை (தம்புத்ரர்களுக்கு) செய்வித்தார். உக

பெரும்புகழ்பெற்ற (தசரத)வேந்தர் தம்புத்ரர்கள் ஒவ்வொருவரையும் உத்தேசித்து சாஸ்த்ரப்படி ப்ராம்மணர்களுக்கு லக்ஷம்பசுக்களைத் தானங் கொடுத்தார். உஉ

ரகுகுலத்திற் பிறந்த புருஷர்களிற் சிறந்த புத்ரர்களிடத்து வாத்ஸல்யம் வைத்த தசரதவேந்தரானவர், கொம்புகளில் பொன்குழைகள் பூட்டப்பெற்றவைகளும், பால் நிரம்பிய மடிகளையுடையவைகளும், கன்றுகளோடு கூடினவைகளுமான நான்குலக்ஷம்பசுக்களையும் பால்கறப்பதற்காக அத்தனை வெண்கலப்பாத்ரங்களையும் தம்புத்ரர்களின் கோதானத்தை உத்தேசித்து ப்ராம்மணர்களுக்குக் கொடுத்தார்; அத்துடன், சிறந்த இன்னும் பலப்பொருளையும் கொடுத்தார். உங

அந்தத் தசரத வேந்தர் தம்புத்ரர்களின் விவாஹார்த்தமாக இவ்வாறு கோதானஞ்செய்து அந்தப்பிள்ளைகளால் சூழப்பட்டு கவலையற்றவராகி, திக்பாலகர்களால் சூழப்பட்ட ப்ரம்மதேவர் போல் விளங்கினார். உ௪

எழுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

எழுபத்துமூன்றாவது ஸர்க்கம்.

(பரதருக்கு மாமாவாயுள்ள)குமரரான 'யுதாஜித்'என்கிறவர், (தசரத)ராஜர் என்றைத்தினத்தில் கோதானத்தை (=ஸமாவர்த்தனத்தை) வெகு சிறப்பாய்ச் செய்துமுடித்தாரோ அன்றைத்தினமே (மிதிலைக்கு)வந்துசேர்ந்தார். க

கேகயராஜருடைய புத்ரரும்,பரதருக்கு ஸாக்ஷாத்மாமாவுமாயுள்ள யுதாஜித்தானவர் (தசரத)ராஜரைக்கண்டு, க்ஷேமஸமாசாரத்தை விசாரித்துவிட்டு இவ்வாக்யத்தைக் கூறலானார்:— உ

“கேகயதேசத்து வேந்தர் (=என்தந்தை), உம்மிடத்து ஸ்நேஹத்தால் உம்மைக்ஷேமஸமாசாரம் விசாரிக்கும்படி சொன்னார்; உமக்கு வேண்டியவர்களெல்லாரும் க்ஷேமமாயிருக்கிறார்கள்; ங

ரகுகுலத்துதித்த மஹாராஜ'(என்)தங்கையின்பிள்ளையாகிய பரதனை(என் தந்தை கேகய)வேந்தர் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டார்; அதற்காக நான் அயோத்யைக்கு வந்தேன்; ௪

அரசே! உமது குழந்தைகளின் விவாஹார்த்தமாக உமது குழந்தைகளும் நீரும் மிதிலாபுரிக்குவந்திருக்கிற ஸங்கதியை அயோத்யையில் நான் கேள்விப்பட்டு, தங்கையின் குழந்தையாகிய பரதனைப் பார்ப்பதற்காக சீக்ரமாய் இவ்விடம் வந்துசேர்ந்தேன்.” ௫

பிறகு, தசரதராஜர் தமக்கு இஷ்டராயும் அதிதியாயும் பூஜைபெறத்தக்கவராயும் நேர்ந்த யுதாஜித்தை வெகு நன்றாய்ப்பூஜித்தார். ௬

[illegible]

[illegible]

தர்மசாஸ்த்ரங்களை புணர்ந்தவராயுள்ள தசரதவேந்தர், மஹாத்மாக்களாயுள்ள புத்ரர்களுடன் அன்றிரவு முழுவதும் ஸுகமாயிருந்து மறுநாள் காலையில் எழுந்திருந்து அநுஷ்டானங்களைச்செய்துமுடித்து, அப்பொழுது ருஷிகளை முன்னே அழைத்துக்கொண்டு கல்யாணமண்டபத்திற்கு வந்துசேர்ந்தார். அ

ஜயத்தைக்கொடுப்பதாயுள்ள தகுந்த முஹூர்த்தத்தில் ராமர் தம் தம்பிகளுடன் ஸர்வாபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, கல்யாணகங்கணங்கட்டிக்கொண்டு, வஸிஷ்டரையும் மற்றுமுள்ள மஹர்ஷிகளையும் முன்னே அழைத்துக்கொண்டு விவாஹசாலைக்கு வந்துசேர்ந்தார். ௧௦

வஸிஷ்டபகவானானவர் ஜநகரிடம் வந்து, "அரசே! மாநவரேறே! தசரதவேந்தர் புத்ரர்களுக்குக் கல்யாணகங்கணம்கட்டுவித்து, கந்யகையைக் கொடுக்கவேண்டியவராயுள்ள உம்முடையவரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்; எல்லாக்கார்யங்களும், கொடுக்கிறவர்கள் வாங்கிக்கொள்ளுகிறவர்கள் என்கிற இருவர்களாலுமன்றோ பூர்த்தியடையவேண்டும்; (ஆதலால்)விவாஹத்தைச் சிறப்பாய்ச்செய்து பூர்த்தியடைவித்து, (ராமனுக்கு ஸீதையைக்கொடுக்கிறேனென்ற) நீர் செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றிக்கொள்ளும்" என்ற இவ்வாக்யத்தைச்சொன்னார். ௧௨

பரம-உதாரரும், பரமதர்மிஷ்டரும், மஹாப்ரபாவமுடையவருமாயுள்ள ஜநகரானவர், மஹாத்மாவாயுள்ள வஸிஷ்டரால் இவ்வாறு சொல்லப்பட்டவராகி, (மேல்வரும்)வாக்யத்தை உத்தரமாகக் கூறினார்:— ௧௩

"என்னால் என்ன தடை இருக்கிறது! தங்களுடைய க்ருஹத்தில் யாருடைய உத்தரவை எதிர்பார்க்கவேண்டும்! விசாரிக்கவேண்டியதென்ன இருக்கிறது! இந்தராஜ்யத்தை உம்முடையராஜ்யத்தைப்போலவே எண்ணிக்கொள்ளும்; ௧௪

மஹாமுநிவரே! அக்நியின் ஒளிக்கு ஸமானமான ஒளியுடையர்களாயுள்ள எனது குழந்தைகள் விவாஹத்திற்குமுன் செய்யவேண்டிய எல்லா மங்களகார்யங்களையும் செய்துமுடித்துக்கொண்டு கல்யாணவேதியின் ஸமீபத்திலேயே வந்து காத்துக்கொண்டிருக்கிறார்கள்; ௧௫

நான் செய்யவேண்டிய ஏற்பாடெல்லாஞ்செய்துகொண்டு, உமது வரவை எதிர்பார்த்து (வெகுநாழிகையாய்) இந்தத் திண்ணையிலேயே இருந்துகொண்டிருக்கிறேன்; (தசரத)மன்னவர், நிராடங்கமாய்க் கார்யத்தை நடத்தட்டும்; எதற்காகக் காலவிளம்பஞ்செய்கிறார்?" ௧௬

ஜநகர் சொன்ன அவ்வாக்யத்தை (வஸிஷ்டர் அனுப்பியவர்கள்மூலமாய்) தசரதர்கேட்டு, தம் புத்ரர்களையும் எல்லா ருஷிகளையும் (கல்யாணப்பந்தலில்) ப்ரவேசிப்பித்தார். ௧௭

பிறகு, ஜநகர் வஸிஷ்டரைப்பார்த்து, "மஹர்ஷியே! தர்மிஷ்டரே! உலகங்களை (எல்லாம்)களிக்கச்செய்கின்ற ராமருடைய விவாஹத்தைப்பற்றிய கார்யத்தை, தேவரீர் எல்லாருஷிகளையும் வைத்துக்கொண்டு நடப்பிக்கவேண்டும்" என்ற இவ்வாக்யத்தைச்சொன்னார். ௧௮

பெருந்தவம்புரிந்த ருஷியாயுள்ள வஸிஷ்டபகவானும் 'அப்படியே ஆகட்டும்' என்று ஜநகருக்குச்சொல்லிவிட்டு, கல்யாணப்பந்தலின் நடுவில் சாஸ்த்ரப்படி வேதிகையை(=கோலப்படியை)க்கட்டி, அதைச்சந்தனங்களாலும், புஷ்பங்

[illegible]

களாலும், பொற்பாலிகைகளாலும், முளைகளோடுகூடிய கரகங்களாலும், தூபங்களோடுகூடியதூபபாத்ரங்களாலும், சங்குபாத்ரங்களாலும், நெய்வைத்துக்கொள்ள உபயுக்தமான ஸ்ருவம் ஸ்ருக் என்கிற பாத்ரங்களாலும், தீர்த்தம் நிரம்பிய அர்க்யபாத்ரங்களாலும், பொரிகளும் அக்ஷதைகளும் நிரம்பிய பாத்ரங்களாலும் அலங்கரித்தார். ௨௨

மஹாப்ரபாவம்பெற்ற ருஷியாகிய வஸிஷ்டபகவான், சாஸ்த்ரப்படி மந்த்ரங்களைச் சொல்லிக்கொண்டு அந்த மேடையில் தர்ப்பைகளைப்பரப்பி, சாஸ்த்ரம் தவறாமல் மந்த்ரங்களைச்சொல்லி, (குண்டத்தில்) அக்னியைச்சேர்த்து அக்னியில் ஹோமஞ்செய்யத்தொடங்கினார். ௨௪

பிறகு, ஜநகராஜரானவர், ஸீதையை ஸகல ஆபரணங்களாலும் அலங்கரித்து அக்னிக்கு முன்பாகக்கொண்டுவந்து, ராகவருக்கு எதிரில் நிறுத்திக்கொண்டு, கௌஸல்யையின் ஆநந்தத்தைப் பெருகச்செய்கின்ற ஸ்ரீராமனைப் பார்த்து (மேல்வருமாறு)சொன்னார்:— ௨௫

ஸீதா விவாஹகட்டம்.

"என்னுடைய பெண்ணான இந்த ஸீதையானவள், நீர்செய்கிற தர்மங்களையெல்லாம் உம்மைப்போலவே செய்வாள்; பதிவ்ரதையாகக்கொள்வாள்; மஹாபாக்யமுடையவள்; உம்முடைய நிழல்போல் உம்மைத்தொடர்ந்துசெல்வாள்; இவளைத் தேவரீர் திருவுள்ளம்பற்றிக்கொள்ளவேண்டும்; உமது கையினால் இவள்கையைப் பிடித்துக்கொள்ளும்; உமக்கு மங்களமுண்டாகுக." ௨௭

(ஜநகமஹா)ராஜர், இவ்வாறு சொல்லி, அப்பொழுது, மந்த்ரத்தால் பரிசுத்தமான தீர்த்தத்தை (ஸ்ரீராமர் திருக்கைகளில்)சேர்த்தார். ௨௮

அப்பொழுது, தேவர்களும் ருஷிகளும், "நல்லது நல்லது (ராம! பரம ஸந்தோஷம் திவ்யமான சுபகார்யம் நடந்தது)" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் தேவர்களின் மிகுந்த துந்துபிவாத்ய கோஷமும் புஷ்பவர்ஷமும் உண்டாயின. ௨௯

ஜநகராஜர் இவ்வாறு தீர்த்தத்தைச்சேர்த்து, மந்த்ரபூர்வகமாக ஸீதையை (கந்யா)தாநஞ்செய்து பரமஸந்தோஷமடைந்து, (மேல்வருமாறு)சொல்லலானார்:— ௩௰

"லக்ஷ்மணரே! வாரும்; உமக்கு மங்களமுண்டாகுக; என்னுடையபெண்ணான இந்த ஊர்மிளையைநீர்,கொள்ளவேண்டும்;(உமது) கையினால் (இவள்)கையைப் பிடித்துக்கொள்ளும்; காலவிளம்பஞ்செய்யவேண்டாம்." ௩௧

ஜநகர்,அந்த லக்ஷ்மணரை இவ்வாறு சொல்லி, பரதரைப்பார்த்து, "ரகுகுலத்துப்புத்ரரே! (பரதரே! உமது)கையினால் மாண்டவியின் கையைப் பிடித்துக்கொள்ளும்" என்று சொன்னார். ௩௨

[illegible]

தர்மாத்மாவாயுள்ள ஜநகராஜர், சத்ருக்நனையும்பார்த்து, "மஹா பாஹுவே! பெருந்தோளுடைய சத்ருக்நனே! உமது ஹஸ்தத்தால் ச்ருதகீர்த்தியின் ஹஸ்தத்தைப் பிடித்துக்கொள்ளும்" என்று சொன்னார். ௩௰

"ரகுகுலத்துப்புத்ரர்களே! நீங்களெல்லோரும், நல்லஸ்வபாவமுடையவர்களும், நல்ல நடவடிக்கையுடையவர்களுமாய் (உங்கள்) பத்நிகளுடன்கூடி (ஸுகமாய்)இருங்கள்." (என்று நால்வர்களையும் பார்த்துச்சொன்னார்.) ௩௧

அந்நான்கு புத்ரர்களும், ஜநகர் சொன்னதைக்கேட்டு, வஸிஷ்டரது அநுமதிபெற்று, நான்குபெண்களின் கைகளையும் பிடித்துக் கொண்டார்கள். ௩௨

மஹாத்மாக்களாகி ரகுக்களிற்சிறப்புபெற்ற அந்நான்கு புத்ரர்களும், தங்கள் பார்யைகளோடுகூடி, அக்நியையும், (விவாஹ)வேதிகையையும், ருஷிகளையும் ப்ரதக்ஷிணஞ்செய்து, சாஸ்த்ரப்படி விவாஹத்தைச்செய்துகொண்டார்கள். ௩௩

ஆகாசத்தினின்று வெகு அழகாய்ப் புஷ்பமாரி பொழிந்தது; தேவர்களும் துந்துபிவாத்யங்களைக்கணகணவெனக்கொட்டினார்கள்; அப்ஸரமடந்தையர்களும் வாத்யங்கள் வாசித்து வாயிநிறப்பாடியாடினார்கள்; கந்தர்வர்களும் மதுரமாய்ப்பாடினார்கள்; அது, ராகவரேறர்களின் விவாஹ-உத்ஸவத்தில் வியப்புறுத்தியதாய் விளங்கிற்று. ௩௪

இவ்வாறு தூர்யவாத்யம் முதலியவைகளின் கோஷம்முழங்கிக் கொண்டிருக்க, மஹாஸௌந்தர்யமுள்ள அந்த ராம-லக்ஷ்மண-பரத-சத்ருக்நர்கள் நால்வரும் அக்நியை மூன்று ப்ரதக்ஷிணஞ்செய்து தங்கள் பார்யைகளை வஹித்தார்கள் (=விவாஹத்தைப் பூர்த்திசெய்து கொண்டார்கள்). ௩௫

பிறகு அந்த ரகுகுலத்துப்பிள்ளைகள்நால்வரும் தத்தம்பார்யைகளை அழைத்துக்கொண்டு விடுதிக்ருஹத்திற்குப்போனார்கள்; தசரதவேந்தரும் பந்துக்களோடும் ருஷிகளோடுங்கூடி, (அந்நான்கு புத்ரர்களையும்)கண்டு களித்துப் பின்னேபார்த்துக்கொண்டுபோனார். ௩௬

எழுபத்துமூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

எழுபத்துநான்காவது ஸர்க்கம்.

பிறகு, இரவுசென்றவுடனே விச்வாமித்ரமஹாமுனிவரானவர், அந்தத் தசரதர் ஜநகர் எனும் மன்னவரிருவரிடத்தும் விடைபெற்று ஹிமவத் பர்வதத்திற்குப் போய்ச்சேர்ந்துவிட்டார். ௧

விச்வாமித்ரர்போனபிறகு தசரதவேந்தர், மிதிலாதிபதியாகிய ஜநக மன்னவரிடம் விடைபெற்றுத் தமது பட்டணத்திற்குப்புறப்பட்டார். ௨

அந்தத் தசரதவேந்தர் புறப்படும்பொழுது ஜநகமன்னவர் (வழிவிடுதற்காகக் கொஞ்சதூரம்வரையில்) தொடர்ந்துசென்றார்; (சீதனமாக)தம்பெண்களுக்குப் பலபொருள்களைக்கொடுத்தார். ௩

[illegible]

(ஸீதை முதலிய) பெண்களுக்குத் தந்தையாகிய மிதிலாதிபதியான ஜநக ராஜர், பலவாயிரக்கணக்குடைய லக்ஷம் பசுக்களையும், விலையுயர்ந்த கம்பளிகளையும், கோடி பட்டுவஸ்த்ரங்களையும், இயமான நூலாடைகளையும் யானைகளையும், குதிரைகளையும், ரதங்களையும், சேவகர்களையும், நல்ல வேலைக்காரர்களையும், வேலைக்காரிகளையும் அந்தப் பெண்களுக்குக் கொடுத்தார். ௫

பெருமகிழ்ச்சியடைந்தவராகி, பொன், வெள்ளி, பவளம், மற்றும் உத்தமமாயுள்ள பொருள் ஆகிய இவையெல்லாம் சீதனமாகக் கொடுத்தார். ௬

மிதிலாதிபதியாகிய ஜநகவேந்தர், (தம் பெண்களுக்கு) மிகு தனங்களைக் கொடுத்து, (தசரத) ராஜரை விடைகொடுத்து அனுப்பிவிட்டு, தமக்கிருப்பிடமான மிதிலாபுரிக்கு வந்துசேர்ந்துவிட்டார். ௭

அயோத்யாதிபதியாகிய தசரதராஜரும், முன்னும் பின்னும் எல்லா ருஷிகளும் படைகளும் சூழ, மஹாத்மாக்களான தம்புத்ரர்களுடன் அயோத்யையைச் சேரப் போய்க்கொண்டிருந்தார். ௮

ருஷிகளுடனும், மற்றுமுள்ள கூட்டங்களுடனும், பிள்ளைகளுடனும் அந்தத் தசரதர் போய்க்கொண்டிருக்கையில், (ஆகாசத்தில்) ஆங்காங்குப் பயங்கரமாய்ப் பறவைகள் கூச்சலிட்டன; பூமியிலுள்ள ம்ருகங்கள் மட்டும் அவருக்குப் ப்ரதக்ஷிணமாய்ச் சென்றன. ௧௦

(தசரத) மஹாராஜர், அந்தப் பக்ஷிகளையும் ம்ருகங்களையும் கண்டதும் வசிஷ்டரைப் பார்த்து, '(ஸ்வாமி!) பக்ஷிகள் யாவும் பயங்கரமாயும் விகாரமாயும் கூவுகின்றன; ம்ருகங்கள் மட்டும் ப்ரதக்ஷிணமாய்ச் செல்லுகின்றன; இதென்ன, என் மனது தைர்யத்தை விட்டு நடுக்கத்தைக் கொள்ளுகிறதே!" என்று கேட்கலானார். ௧௧

மஹாத்மாவாயுள்ள வசிஷ்டர், தசரதமன்னவர் சொன்னதைக்கேட்டு, "(தசரத(ப்ரபோ!) இதற்குப்பலன் இன்னதென்பதைச்சொல்லுகிறேன் கேளும்: ஆகாசத்திற் பயங்கரமாய்ப் பக்ஷிகள் கூவுகிறபடியால், ஸமீபத்தில் நமக்கொரு பயம் உண்டாகுமென்று ஏற்படுகிறது; பூமியில் ம்ருகங்கள் நம்மை வலம் வந்து செல்லுகிறபடியால், அந்தப் பயம் நீங்கிவிடுமென்று ஏற்படுகிறது' என்ற இன்மொழியைக் கூறலானார். ௧௨

அவர்கள் இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையில் அங்கு, பூமிமுழுவதும் கிடுகிடென்று நடுங்க, அழகிய மரங்கள் யாவும் பேர்ந்துவிழப் பெருங்காற்று உண்டாயிற்று. ௧௩

ஸூர்யனை இருள் மூடிவிட்டது; திக்குகள் யாவும் வெளிச்சமற்றவைகளாய்விட்டன; அந்தத் தசரதருடைய படைகள் யாவும் புழுதிமூடி ஒன்றுமே தெரியாமல் நின்றுவிட்டது. ௧௪

வசிஷ்டர், இன்னுமுடனிருந்த ருஷிகள், (தசரத) ராஜர், அவரது புத்ரர்கள் ஆகிய இவர்கள் தவிர மற்றவர்கள் யாவரும் ப்ரஜ்ஞையற்றவர்களாய் விட்டார்கள். ௧௫

புழுதியினால் அப்படிமூடப்பட்டது போலாய்விட்ட அந்தத் தசரத ஸைன்யமானது, பயங்கரமான ரூபமுடையவரும், மண்டலாகாரமாய் ஜடைகளைத் தரித்தவரும், மஹாராஜாக்களின் மண்டைகளைப் பிளந்தவரும்,

கைலாஸமிவ துர்தர்ஷம் காலாக்நிமிவ து:ஸஹம்।
ஜ்வலந்தமிவ தேஜோபிர்துர்நிரீக்ஷ்யம் ப்ருதக்ஜநை:॥
ஸ்கந்தே சாஸஜ்ய பரஶும் தநுர்வித்யுத்கணோபமம்।
ப்ரக்ருஹ்ய ஶரமுக்ரம் ச த்ரிபுரக்நம் யதா ஶிவம்॥ ௧௮
தம் த்ருஷ்ட்வா பீமஸங்காஶம் ஜ்வலந்தமிவ பாவகம்।
வஸிஷ்டப்ரமுகா விப்ரா ஜபஹோமபராயணா:॥
ஸங்கதா முநய: ஸர்வே ஸஞ்ஜஜல்புரதோ மித:। ௨௧
கச்சித் பித்ருவதாமர்ஷீ க்ஷத்ரம் நோத்ஸாதயிஷ்யதி॥
பூர்வம் க்ஷத்ரவதம் க்ருத்வா கதமந்யுர்கதஜ்வர:।
க்ஷத்ரஸ்யோத்ஸாதநம் பூயோ ந கல்வஸ்ய சிகீர்ஷிதம்॥ ௨௨
ஏவமுக்த்வார்க்யமாதாய பார்கவம் பீமதர்ஶநம்।
ருஷயோ ராம ராமேதி மதுரம் வாக்யமப்ருவந்॥ ௨௩
ப்ரதிக்ருஹ்ய து தாம் பூஜாம் ருஷிதத்தாம் ப்ரதாபவாந்।
ராமம் தாஶரதிம் ராமோ ஜாமதக்ந்யோ(அ)ப்யபாஷத॥ ௨௪

இதி ஶ்ரீமத்ராமாயணே பாலகாண்டே சதுஸ்ஸப்ததிதம: ஸர்க:.

அத பஞ்சஸப்ததிதம: ஸர்க:.

ராம! தாஶரதே! வீர! வீர்யம் தே ஶ்ரூயதே(அ)த்புதம்।
தநுஷோ பேதநம் சைவ நிகிலேந மயா ஶ்ருதம்। ௧
ததத்புதமசிந்த்யம் ச பேதநம் தநுஷஸ்ததா।
தச்ச்ருத்வாஹமநுப்ராப்தோ தநுர்க்ருஹ்யாபரம் ஶுபம்॥ ௨
ததிதம் கோரஸங்காஶம் ஜாமதக்ந்யம் மஹத்தநு:।
பூரயஸ்வ ஶரேணைவ ஸ்வபலம் தர்ஶயஸ்வ ச॥ ௩
ததஹம் தே பலம் த்ருஷ்ட்வா தநுஷோ(அ)ஸ்ய ப்ரபூரணே।
த்வந்த்வயுத்தம் ப்ரதாஸ்யாமி வீர்யஶ்லாக்யஸ்ய ராகவ!॥ ௪
தஸ்ய தத்வசநம் ஶ்ருத்வா ராஜா தஶரதஸ்ததா।
விஷண்ணவதநோ தீந: ப்ராஞ்ஜலிர்வாக்யமப்ரவீத்॥ ௫
க்ஷத்ரரோஷாத்ப்ரஶாந்தஸ்த்வம் ப்ராஹ்மணஶ்ச மஹாயஶா:।
பாலாநாம் மம புத்ராணாமபயம் தாதுமர்ஹஸி॥ ௬

கைலாஸபர்வதம்போல் அசைக்கக்கூடாதவரும், பொறுக்கமுடியாத(ப்ரளய) கால-அக்நிபோன்றவரும், அக்நிஜ்வாலைபோல் விளங்குகிறபடியால், ஸாதாரண ஜநங்களால் கண்ணுற்பார்க்க முடியாதவருமாய், தோளின்மீது கோடாலியைவைத்து, மின்னல்கூட்டங்கள்போல்விளங்கும் வில்லையும் சிறந்த ஒரு பாணத்தையும் கையில் பிடித்து, முப்புரமெரிக்கும் செவிரான்போல் விளங்கும்ஜமதக்நி புத்ரரான அந்தப் பரசுராமனை அவ்விருள் நடுவிலிருந்து வருகையிற் காணலாயிற்று. ௧௯

பிறகு, ஜபம் ஹோமம் என்றவைகளில் பற்றுள்ளவர்களாயுள்ள வஸிஷ்டர்முதலிய முனிவர்களெல்லாரும், பயங்கரமான ரூபம்பெற்று, கொழுந்துவிட்டெரியும் அக்நிபோல் விளங்குவராகின்ற அந்தப் பரசுராமனைக்கண்டு, கூட்டங்கூடி, (மேல்வருமாறு)தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்:— ௨௰

"(ஒரு க்ஷத்ரியனால் செய்யப்பட்ட)தம்பிதாவதத்தால் மிக்க சினங்கொண்டஇந்தப் பரசுராமர், க்ஷத்ரியரை வதஞ்செய்யாமலிருப்பாரா என்ன? (மற்றொரு ருஷி சொல்லுகிறார்)முன்னமே க்ஷத்ரியர்களை வதஞ்செய்து தம் கோபத்தையும் மனக்குறையையும் ஒழித்துவிட்டபடியால், மறுபடியும் க்ஷத்ரியவதஞ்செய்யவேண்டுமென்கிற கருத்து இவருக்கு இராது.' ௨௰௧

ருஷிகள் இவ்வாறு சொல்லி, பயங்கரமான ரூபமுடைய அந்தப் பரசுராமனைநோக்கி "ராம! ராம! (வாரும், பூஜைபெற்றுக்கொள்ளும்)"என்ற இன்சொல்லைச் சொற்றனர். ௨௰௨

மஹாபராக்ரமமுடையராயுள்ள ஜமதக்நிபுத்ரரான (பரசு)ராமரானவர், ருஷிகள் செய்த அந்தப்பூஜையைப்பெற்று, தசரதபுத்ரரான (ஸ்ரீ)ராமனை நோக்கி, (மேல்வருமாறு)கூறலானார்:— ௨௰௩

எழுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

எழுபத்தைந்தாவது ஸர்க்கம்.

"ராம ராம! தசரதபுத்ர! உனது பராக்ரமம் ஆச்சர்யரேம்என்று கேள்விப்பட்டேன்; நீ சிவதநுஸை முறித்தது முதலான கதைகளையெல்லாம் நான் கேட்டேன்; ௧

நீ சிவதநுஸை முறித்தது அசிந்த்யமாயும் ஆச்சர்யகரமாயுமிருக்கிறது; அதை நான் கேள்விப்பட்டு,சுபமான இந்தச் சிறந்தவில்லை எடுத்துக்கொண்டு உன்னிடம் வந்தேன்; ௨

பயங்கரமாயும், ஜமதக்நியினிடத்தினின்று வந்ததாயுமுள்ள இந்த மஹாதநுஸை (வளைத்து)பாணத்தை ஸந்தாநஞ்செய்; உனது வலிமைக் காண்பி;௩

ராகவ! இவ்வில்லை வளைத்து நாணேற்றிவிட்டாயாயின் அப்பொழுது உன் பலத்தைப்பார்த்துஉனதுபராக்ரமத்தைப்புகழ்ந்துகைச்சண்டையிடுகிறேன்"

அப்பொழுது தசரதராஜர், அந்தப் பரசுராமருடைய அந்தச்சொல்லைக் கேட்டு, வாடிய முகமுடையவரும் தீநருமாய், அஞ்ஜலிஹஸ்தராகி, (மேல்வரும்)வாக்யத்தைக்கூறினர்:— ௪

"நீர், க்ஷத்ரியர்களிடத்துவைத்த கோபத்தை விட்டுவிட்டு, ப்ராஹ்மணராய்ப் பெரும்புகழ்பெற்றிருக்கிறீர்; (ஆதலால்)பாலர்களாயுள்ள என் பிள்ளைகளை நீர் காப்பாற்றல்வேண்டும்; ௫

[illegible]
[illegible] எ
[illegible]
[illegible] அ
[illegible]
[illegible] கூ
[illegible]
[illegible] க0
[illegible]
[illegible] கக
[illegible]
[illegible] கஉ
[illegible]
[illegible]
[illegible] கங
[illegible]
[illegible] கச
[illegible]
[illegible] கரு
[illegible]
[illegible] கசு
[illegible]
[illegible] கஎ
[illegible]
[illegible] கஅ

வேதமோதி ஜோஸ்புகளைத் தவறுதுசெய்யும் ப்ருகுவம்சத்தவர்களின் குலத்தில் அவதரித்தநீர், (இனிநான் ஆயுதத்தைக் கையிலெடுக்கிறதில்லையென்று) இந்த்ரனிடத்தில் ப்ரதிஜ்ஞைசெய்து ஆயுதத்தைப் போட்டுவிட்டீர்; ௭

பிறகு நீர், தர்மத்திலேயே பற்றுள்ளவராகி, பூமியை (எல்லாம்) காச்யபருக்குத் தானஞ்செய்துவிட்டு மஹேந்த்ரபர்வதத்தில் வாஸஞ்செய்துகொண்டிருக்கிறீர்; ௮

மஹாமுனிவரே! என்னுடைய சொத்தெல்லாம் பாழாகக்காலம்நேர்ந்ததனால் (மறுபடியும்) நீர் வந்துசேர்ந்தீர்; ராமன் ஒருவன் போய்விட்டால் நாங்களெல்லோரும் பிழைத்திருக்கவேமாட்டோம்." ௯

மஹாபராக்ரமமுடைய பரசுராமரானவர், இவ்வாறு தசரதர் சொல்லிக்கொண்டிருக்கையில் அந்தத் தசரதர் மொழியை மேற்கொள்ளாமலே, ஸ்ரீராமனை நோக்கியே (மேல்வருமாறு) சொல்லலானார்:— ௧௦

"தேவலோகத்திலுண்டானவைகளும், உலகங்களிலெல்லாம் ப்ரஸித்தி பெற்றவைகளும், உறுதியானவைகளும், மிகுந்த வலிவுடையவைகளுமாயுள்ள சிறப்புபெற்ற இரண்டு விற்கள், வெகு முயற்சிகொண்டு விச்வகர்மாவினால் முதன்முதலில் உண்டாக்கப்பட்டன; ௧௧

புருஷோத்தமா! ககுத்ஸ்தகுலத்திலுதித்தவ! (அவைகளில்) ஒரு வில்லானது, முப்புரங்களையழிக்கவேண்டிப் போர்செய்யக்கருதிய சிவபிரானுக்குத் தேவர்களால் கொடுக்கப்பட்டது; அந்தச் சிவபிரான் வில்தான், (மிதிலாபுரியில்) உன்னால் முறிக்கப்பட்டது; ௧௨

ககுத்ஸ்தகுலத்திற்பிறந்த ராம! (அவ்விரண்டு விற்களில்) மஹாப்ரபாவம் பெற்ற மற்றொரு வில் இதுதான்; இது விஷ்ணுவினுடையது; இது, (அந்த) சிவதநுஸை நிகர்த்த பலமுடையது; ௧௩

த்ரிபுரஸம்ஹாரஞ்செய்தபிறகு, எல்லாத்தேவர்களும், சிவ - விஷ்ணுக்களின் பலாபலத்தைக் கண்டறியக்கருதி, (இந்தச் சிவ - விஷ்ணுக்களுள் யாருக்குப் பலமதிகம் என்று) ப்ரஹ்மாவைக்கேட்டார்கள்; ௧௪

உண்மையுணர்கின்றவர்களிற்சிறந்த அந்தப் ப்ரஹ்மதேவர், வானவர்களின் கருத்தறிந்து, அந்தச் சிவ-விஷ்ணுக்களிருவர்க்கும் விரோதத்தை உண்டாக்கிவிட்டார்; ௧௫

விரோதமுண்டாய்விடவே ஒருவரையொருவர் வெல்லக்கருதிய சிவன் விஷ்ணு என்கிற இருவர்களுக்கும், (உலகம் யாவும்) மயிர்க்கூச்சடையும்படி பெரிய சண்டை யுண்டாய்விட்டது; ௧௬

அப்பொழுது பயங்கரமான பராக்ரமத்தையுடைய சிவதநுஸ் முறிந்துவிட்டது; முக்கண்ணராயுள்ள மஹாதேவர், (விஷ்ணுவின்) ஹுங்காரத்தால் அடங்கிநின்றுவிட்டார்; ௧௭

அப்பொழுது தேவர்கள் ருஷிஸமூஹங்களுடனும், சாரணர்களுடனும், தேவர்களுள் சிறந்தவர்களாயுள்ள அந்தச் சிவவிஷ்ணுக்களிடம் வந்து, (சண்டையை நிறுத்துங்கள் என்று) கேட்டுக்கொண்டார்கள்; அவ்விருவர்களும்அத்தருணமே (கோப)சாந்தியையடைந்தார்கள் (சண்டையை நிறுத்தினார்கள்

[illegible]
[illegible] ௧௯
[illegible]
[illegible] ௨௦
[illegible]
[illegible] ௨௧
[illegible]
[illegible] ௨௨
[illegible]
[illegible] ௨௩
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[[illegible]
[illegible]]
[illegible] ௨௬
[illegible]
[illegible] ௨௭
[illegible]
[illegible] ௨௮

[illegible]

[illegible]

[illegible]
[illegible] ௧

[illegible]
[illegible] ௨

விஷ்ணுவின் பராக்ரமத்தால் அந்தச் சிவவில் முறிந்ததைத் தேவர்களும் எல்லாருஷிகளுங்கண்டு, அப்பொழுது விஷ்ணுவை அதிகமாகவெண்ணினார்கள் (அதாவது எல்லாவிஷயங்களிலும்விஷ்ணுவைத்தவிர சிறந்ததைவம் வேறில்லை யென்றெண்ணினார்கள்); ௧௯

பெரும்புகழுடைய ருத்ரரானவர், (தம்வில்முறிந்துவிட்டதனால்) மிக்க கோபமுடையவராகி, ராஜர்ஷியாயுள்ள விதேஹதேசத்து ராஜாவான தேவராதனுடைய கையில் அவ்வில்லைப் பாணத்துடன் கொடுத்தார்; ௨௰

ராம! சத்ருக்களின் பட்டணங்களை வெல்லுகின்றதும், விஷ்ணுவினுடைய தமாய இந்த (என்கையிலிருக்கிற) உத்தமதநுஸை வைத்துவைக்கும்படி விஷ்ணு ருசிகரிடத்தில் கொடுத்தார்; ௨௧

மஹாப்ரபாவமுடைய ருசிகர், (தமது)புத்ரரும், மஹாபராக்ரமமுடையவரும், எனது தந்தையுமான மஹாத்மாவாயுள்ள ஜமதக்நிக்குக்கொடுத்தார்;

எனது தந்தையாகிய ஜமதக்நி ஆயுதத்தை விட்டுவிட்டு, தவஞ்செய்து கொண்டிருக்கையில் துர்ப்புத்தியுடைய (கார்த்தவீர்ய)அர்ஜுநன் (அவருக்கு) மரணத்தையுண்டாக்கினான்; ௨௨

ராம! மிக்கதுக்கத்தை விளைப்பதும் பயங்கரமுமாயுள்ள என் தந்தையின் மரணத்தை நான்கேட்டு, கோபமுடையவனாகி, அநேகதரம், உலகத்திற்பிறக்கிற க்ஷத்ரியர்களையெல்லாம் உடனுக்குடனே வதஞ்செய்து, எல்லாப்பூமியையும் கைப்பற்றி, மஹாத்மாவும் புண்யமான செய்கையுடையவருமானகாச்யபருக்கு (அந்தப்பூமியையெல்லாம்)யாகத்தின் முடிவில் தக்ஷிணையாகக்கொடுத்துவிட்டு, மஹேந்த்ரபர்வதஞ்சென்று தவஞ்செய்துகொண்டிருந்தேன்; (நீ) சிவதநுஸை முறித்த ஸங்கதியைக் கேள்விப்பட்டேன்; அதனால் நான் வெகு வேகமாய் (உன்னிடம்)வந்தேன்; ௨௩

ராம! ஆகையால், என் தகப்பனும் பாட்டனும் வைத்துக்கொண்டிருந்த உத்தமமான (அதாவது முறிந்த சிவதநுஸைப்போலன்றி த்ருடமாயிருக்கிற)விஷ்ணுவினுடைய இம்மஹா தநுஸை, க்ஷத்ரியதர்மத்தை முன்னிட்டுக் கையில் வாங்கிக்கொள்; ௨௪

காகுத்ஸ்த! சத்ருக்களின் பட்டணங்களை வெற்றிக்கொடுக்கும் (இந்த) பாணத்தை (இந்த)மஹாதநுஸில்தொடு;உன்சக்தியை யறிந்துகொண்டு,பிறகு உன்னுடன் கைச்சண்டையிடுகிறேன்." ௨௫

எழுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

எழுபத்தாறாவது ஸர்க்கம்.

பிறகு, தசரதபுத்ரரான ராமரானவர், ஜமதக்நிபுத்ரரான அந்தப் பரசராமர் கூறிய மொழியைக்கேட்டு, தமது தந்தைபக்கத்திலிருந்ததனால் (பரசு) ராமரை அதிகமாக ஒன்றும்பேசாமல், (மேல்வருமாறு)சொல்லலானார்:— ௧

"பார்க்கவ! (பரசுராம!)உமது தந்தையை ஒரு க்ஷத்ரியன் கொன்றதற்காக க்ஷத்ரியப்பூண்டையெல்லாம் நிர்நாசஞ்செய்த வரலாற்றை முற்றும்நான் கேட்டிருக்கிறேன்: நீர் அப்படிசெய்தது ந்யாயந்தான்; தந்தைக்குக் கெடுதல் செய்தவரை வேரோடு பிள்ளைகள் நாசஞ்செய்தல் அவச்யஞ்செய்யவேண்டியதுதான்; ௨

𑌵𑍀𑌰𑍍𑌯𑌹𑍀𑌨𑌮𑌿𑌵𑌾𑌶𑌕𑍍𑌤𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵!।
𑌅𑌵𑌜𑌾𑌨𑌾𑌸𑌿 𑌮𑍇 𑌤𑍇𑌜𑌃 𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇𑌽𑌦𑍍𑌯 𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍॥ ௩

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌘𑌵𑌃 𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑍋 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑌸𑍍𑌯 𑌶𑌰𑌾𑌸𑌨𑌮𑍍।
𑌶𑌰𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌗𑍍𑌰𑌾𑌹 𑌹𑌸𑍍𑌤𑌾𑌲𑍍𑌲𑌘𑍁𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃॥ ௪

𑌆𑌰𑍋𑌪𑍍𑌯 𑌸 𑌧𑌨𑍂 𑌰𑌾𑌮𑌃 𑌶𑌰𑌂 𑌸𑌜𑍍𑌯𑌂 𑌚𑌕𑌾𑌰 𑌹।
𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑌂 𑌤𑌤𑍋 𑌰𑌾𑌮𑌂 𑌰𑌾𑌮𑌃 𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌦𑍍𑌵𑌚𑌃॥ ௫

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑍀𑌤𑌿 𑌪𑍂𑌜𑍍𑌯𑍋 𑌮𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌨 𑌚।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌕𑍍𑌤𑍋 𑌨 𑌤𑍇 𑌰𑌾𑌮! 𑌮𑍋𑌕𑍍𑌤𑍁𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌹𑌰𑌂 𑌶𑌰𑌮𑍍॥ ௬

𑌇𑌮𑌾𑌂 𑌵𑌾 𑌤𑍍𑌵𑌦𑍍𑌗𑌤𑌿𑌂 𑌰𑌾𑌮! 𑌤𑌪𑍋𑌬𑌲𑌸𑌮𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌨𑍍।
𑌲𑍋𑌕𑌾𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌨𑍍𑌵𑌾 𑌤𑍇 𑌹𑌨𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 * 𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌸𑌿॥ ௭

𑌨 𑌹𑍍𑌯𑌯𑌂 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍋 𑌦𑌿𑌵𑍍𑌯𑌃 𑌶𑌰𑌃 𑌪𑌰𑌪𑍁𑌰𑌞𑍍𑌜𑌯𑌃।
𑌮𑍋𑌘𑌃 𑌪𑌤𑌤𑌿 𑌵𑍀𑌰𑍍𑌯𑍇𑌣 𑌬𑌲𑌦𑌰𑍍𑌪𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌃॥ ௮

𑌵𑌰𑌾𑌯𑍁𑌧𑌧𑌰𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌸𑌰𑍍𑌷𑌿𑌗𑌣𑌾𑌃 𑌸𑍁𑌰𑌾𑌃।
𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌸𑌮𑍇𑌤𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌸𑌂𑌘𑌶𑌃॥
𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾𑌪𑍍𑌸𑌰𑌸𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌿𑌦𑍍𑌧𑌚𑌾𑌰𑌣𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌾𑌃।
𑌯𑌕𑍍𑌷𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌨𑌾𑌗𑌾𑌶𑍍𑌚 𑌤𑌦𑍍𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌮𑌹𑌦𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍॥ ௧௦

† 𑌜𑌡𑍀𑌕𑍃𑌤𑍇 𑌤𑌦𑌾 𑌲𑍋𑌕𑍇 𑌰𑌾𑌮𑍇 𑌵𑌰𑌧𑌨𑍁𑌰𑍍𑌧𑌰𑍇।
𑌨𑌿𑌰𑍍𑌵𑍀𑌰𑍍𑌯𑍋 𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑍌 𑌰𑌾𑌮𑍋 𑌰𑌾𑌮𑌮𑍁𑌦𑍈𑌕𑍍𑌷𑌤॥
𑌤𑍇𑌜𑍋𑌭𑌿𑌹𑌤𑌵𑍀𑌰𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌜𑍍𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑍋 𑌜𑌡𑍀𑌕𑍃𑌤𑌃।
𑌰𑌾𑌮𑌂 𑌕𑌮𑌲𑌪𑌤𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌂 𑌮𑌨𑍍𑌦𑌂 𑌮𑌨𑍍𑌦𑌮𑍁𑌵𑌾𑌚 𑌹॥ ௧௨

𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌾𑌯 𑌮𑌯𑌾 𑌦𑌤𑍍𑌤𑌾 𑌯𑌦𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌵𑌸𑍁𑌨𑍍𑌧𑌰𑌾।
𑌵𑌿𑌷𑌯𑍇 𑌮𑍇 𑌨 𑌵𑌸𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌮𑌾𑌂 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥
𑌸𑍋𑌽𑌹𑌂 𑌗𑍁𑌰𑍁𑌵𑌚𑌃 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌨 𑌵𑌸𑍇 𑌨𑌿𑌶𑌾𑌮𑍍।
𑌕𑍃𑌤𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥! 𑌕𑍃𑌤𑌾 𑌭𑍂𑌃 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌸𑍍𑌯 𑌹𑌿॥ ௧௪

* "𑌯𑌦𑍀𑌚𑍍𑌛𑌸𑌿." † "𑌜𑌡𑍀𑌕𑍃𑌤𑍋 𑌤𑌦𑌾 𑌲𑍋𑌕𑍋."

பரசுராம! என்னை வீர்யமில்லாதவனாகவும், க்ஷத்ரியதர்மப்படி ஆயுதத்தைக் கையிலேந்தி யுத்தஞ்செய்ய சக்தியில்லாதவனாகவும் நீர் நினைத்தீர்; (அலக்ஷ்யமாய்ப்பேசினீர்; அதுமாத்ரம் ந்யாயமே அன்று;) மேன்மைபெற்ற எனது பராக்ரமத்தை இதோ (காண்பிக்கிறேன்)பாரும்." ௩

ராகவர் இவ்வாறு சொல்லி கோபித்து, பரசுராமருடைய வில்லையும் பாணத்தையும் அலக்ஷ்யமாய்த் தமது (இடது)கையினால் வாங்கிக்கொண்டார். ௪

பிறகு, அந்தஸ்ரீராமர் பரசுராமருடைய வில்லை நாணேற்றிப்பாணத்தைத் தொடுத்தார்; ஸ்ரீராமர் (அந்தப்பரசு)ராமனைப்பார்த்து, கோபத்துடன் (மேல்வரும்)வாக்யத்தைச்சொன்னார்:— ௫

"நீர் ப்ராஹ்மணராயிருக்கிறபடியாலும், விச்வாமித்ரருக்கு வேண்டியவராயிருக்கிறபடியாலும் உம்மிடத்தில் நான்மேன்மைவைக்கவேண்டியிருக்கிறது; ஆதலால், இந்தப்பாணம் உமது ப்ராணனைப் பிடுங்கவல்லதாயிருந்தாலும் அதை உம்மீது ப்ரயோகிக்கக் கொஞ்சம் அஞ்சுகிறேன்; ௬

(பரசு)ராம! நீர் நடப்பதற்கு உபயோகமான உமது கதியிலுள்ள சக்தியையாவது, நீர் தபோபலத்தால் ஸம்பாதித்த உமது புண்யகர்மத்தையாவது (இந்தப்பாணத்தால்)நான் அடிக்கப்போகிறேன்; உமக்கு எது ஸம்மதம்; ௭

தனது வீர்யத்தால் பிறர்களின் பலத்தையும்செருக்கையும் அழித்து அவர்களின் பட்டணங்களை ஜயித்துக்கொடுக்கும்படியான விஷ்ணுஸம்பந்தமான இந்த (இப்போது நான் தொடுத்திருக்கிற) பாணமானது வீணாய்ப்போகாது (எதாவதொன்றை அடித்தேதீரும்)." ௮

மஹா(விஷ்ணுவின்)தநுஸைத்தரித்துநிற்கும் ஸ்ரீராமரையும், அவர்செய்யும் அத்புதமான செய்கையையும் பார்ப்பதற்காக எல்லாத்தேவர்களும்,ருஷிகளும், கந்தர்வர்களும், அப்ஸரர்களும், ஸித்த - சாரண-கிந்நரர்களும், யக்ஷ-ராக்ஷஸ - உரகர்களும் கூட்டங்கூடி ப்ரஹ்மாவை முன்னே அழைத்துக்கொண்டு, அங்கு வந்துசேர்ந்தார்கள். ௧௦

ஸ்ரீராமர்(விஷ்ணுவின்)மஹாதநுஸைத்தரித்துப்பாணத்தைத்தொடுக்கவே உலகத்திலுள்ள ஜனங்கள் யாவும் திகைத்தன; ஜமதக்நியின் புத்ரரான இந்தப் பரசுராமர் (விஷ்ணுஸம்பந்தமான)வீர்யமற்றவராய், ஸ்ரீராமனைப்பார்த்து ஆச்சர்யப்பட்டார். ௧௧

பரசுராமர், (ஸ்ரீராமருடைய)பராக்ரமத்தால் அடக்கப்பட்ட பலமுடையராக ஆய்விட்டதனால் திகைத்துநின்று, தாமரை இதழ்போன்ற திருக்கண்களையுடைய ஸ்ரீராமனைப்பார்த்து ம்ருதுவாய், (மேல்வருமாறு)கூறினார்:— ௧௨

"காகுத்ஸ்த! முன்பொருக்கால் பூமியை (எல்லாம்)நான் காச்யபருக்குத் தானம்பண்ணி ஸ்வாதீநமாகச்செய்துவிட்டேனன்றோ? அந்தக்காச்யபர் என்னை அழைத்து "(பரசுராம! இனி)எனக்கு ஸ்வாதீநமாய்விட்ட பூமியில் நீ இருக்க வேண்டாம்" என்றார்; நானும் "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி ப்ரதிஜ்ஞை செய்துவிட்டேன்; ஆதலால், நான் இரவில் பூமியிலிருக்கிறதில்லை (மலைக்குப்போயிருப்பேன்); ௧௪

𑌤𑌦𑌿𑌮𑌾𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌗𑌤𑌿𑌂 𑌵𑍀𑌰! 𑌹𑌨𑍍𑌤𑍁𑌂 𑌨𑌾𑌰𑍍𑌹𑌸𑌿 𑌰𑌾𑌘𑌵!|
𑌮𑌨𑍋𑌜𑌵𑌂 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍|| ௧௫
𑌲𑍋𑌕𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾 𑌰𑌾𑌮! 𑌨𑌿𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑌪𑌸𑌾 𑌮𑌯𑌾|
𑌜𑌹𑌿 𑌤𑌾𑌞𑍍𑌶𑌰𑌮𑍁𑌖𑍍𑌯𑍇𑌨 𑌮𑌾 𑌭𑍂𑌤𑍍𑌕𑌾𑌲𑌸𑍍𑌯 𑌪𑌰𑍍𑌯𑌯𑌃|| ௧௬
𑌅𑌕𑍍𑌷𑌯𑍍𑌯𑌂 𑌮𑌧𑍁𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌂 𑌜𑌾𑌨𑌾𑌮𑌿 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑍁𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍|
𑌧𑌨𑍁𑌷𑍋𑌽𑌸𑍍𑌯 𑌪𑌰𑌾𑌮𑌰𑍍𑌶𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪!|| ௧௭
𑌏𑌤𑍇 𑌸𑍁𑌰𑌗𑌣𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍇 𑌸𑌮𑌾𑌗𑌤𑌾𑌃|
𑌤𑍍𑌵𑌾𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑌾𑌹𑌵𑍇|| ௧௮
𑌨 𑌚𑍇𑌯𑌂 𑌮𑌮 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥! 𑌵𑍍𑌰𑍀𑌡𑌾 𑌭𑌵𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿|
𑌤𑍍𑌵𑌯𑌾 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌨𑌾𑌥𑍇𑌨 𑌯𑌦𑌹𑌂 𑌵𑌿𑌮𑍁𑌖𑍀𑌕𑍃𑌤𑌃|| ௧௯
𑌶𑌰𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌂 𑌰𑌾𑌮! 𑌮𑍋𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 𑌸𑍁𑌵𑍍𑌰𑌤!|
𑌶𑌰𑌮𑍋𑌕𑍍𑌷𑍇 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍|| ௨௦
𑌤𑌥𑌾 𑌬𑍍𑌰𑍁𑌵𑌤𑌿 𑌰𑌾𑌮𑍇 𑌤𑍁 𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌤𑌾𑌪𑌵𑌾𑌨𑍍|
𑌰𑌾𑌮𑍋 𑌦𑌾𑌶𑌰𑌥𑌿𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌂𑌶𑍍𑌚𑌿𑌚𑍍𑌛𑍇𑌦 𑌶𑌰𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍|| ௨௧
𑌸 𑌹𑌤𑌾𑌨𑍍𑌦𑍃𑌶𑍍𑌯 𑌰𑌾𑌮𑍇𑌣 𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌲𑍋𑌕𑌾𑌂𑌸𑍍𑌤𑌪𑌸𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌨𑍍|
𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑍋 𑌜𑌗𑌾𑌮𑌾𑌶𑍁 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍|| ௨௨
𑌤𑌤𑍋 𑌵𑌿𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌦𑌿𑌶𑌶𑍍𑌚𑍋𑌪𑌦𑌿𑌶𑌸𑍍𑌤𑌥𑌾|
𑌸𑍁𑌰𑌾𑌃 𑌸𑌰𑍍𑌷𑌿𑌗𑌣𑌾 𑌰𑌾𑌮𑌂 𑌪𑍍𑌰𑌶𑌶𑌂𑌸𑍁𑌰𑍁𑌦𑌾𑌯𑍁𑌧𑌮𑍍|| ௨௩
𑌰𑌾𑌮𑌂 𑌦𑌾𑌶𑌰𑌥𑌿𑌂 𑌰𑌾𑌮𑍋 𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯 𑌚|
𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌜𑌗𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌗𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃|| ௨௪

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇 𑌬𑌾𑌲𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌷𑌟𑍍𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌤𑌮𑌃 𑌸𑌰𑍍𑌗𑌃.

𑌅𑌥 𑌸𑌪𑍍𑌤𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌤𑌮𑌃 𑌸𑌰𑍍𑌗𑌃.

𑌗𑌤𑍇 𑌰𑌾𑌮𑍇 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌰𑌾𑌮𑍋 𑌦𑌾𑌶𑌰𑌥𑌿𑌰𑍍𑌧𑌨𑍁𑌃|
𑌵𑌰𑍁𑌣𑌾𑌯𑌾𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌾𑌯 𑌦𑌦𑍌 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌮𑌹𑌾𑌯𑌶𑌾𑌃|| ௧
𑌅𑌭𑌿𑌵𑌾𑌦𑍍𑌯 𑌤𑌤𑍋 𑌰𑌾𑌮𑍋 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑌾𑌨𑍍𑌋𑌷𑍀𑌨𑍍|
𑌪𑌿𑌤𑌰𑌂 𑌵𑌿𑌕𑌲𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌃||
𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑍋 𑌗𑌤𑍋 𑌰𑌾𑌮𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑌿𑌣𑍀|
𑌅𑌯𑍋𑌧𑍍𑌯𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍀 𑌸𑍇𑌨𑌾 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌨𑌾𑌥𑍇𑌨 𑌪𑌾𑌲𑌿𑌤𑌾|| ௩

வீர! ராகவ! ஆகலால் நீ தயைசெய்து, என் காலிலுள்ள சக்தியை நாசஞ்செய்யாதிருக்கவேண்டும்; நான் மனோவேகமாய்ப்புறப்பட்டு மஹேந்த்ரபர்வதத்திற்குப்போய்விடுகிறேன்; கரு

நான் தவஞ்செய்து ஸம்பாதித்த புண்யகர்மங்களின்மீது, நீ தொடுத்த இந்தப்பாணத்தைப் ப்ரயோகித்துவிடு; காலவிளம்பஞ்செய்யவேண்டாம்; கசு

சத்ருக்களைத் தபிக்கச்செய்கின்றவ! இவ்வில்லை நீ வளைத்துக்கொண்டதனால், உன்னைத் தேவர்களுக்கெல்லாம் நாதனாயும் அழிவில்லாதவனாயுமிருக்கிற மதுஸூதனனாக (ஸ்ரீமந்நாராயணனாக) அறிகிறேன்; கஎ

யுத்தத்தில் ஒருவராலும் எதிர்க்கமுடியாதவனும் மஹாபராக்ரமமுடையவனுமான பரமபுருஷனான உன்னுடைய தர்சநத்தைக்கோரித் தேவர்களெல்லாரும் இதோ கும்புகூடி வந்திருக்கிறார்கள்; கஅ

மூவுலகங்களுக்கும் நாதனான உன்னிடத்தில் நான் தோல்வியடைந்தது எனக்கு அவமானகரமாகமாட்டாது; ககூ

ராம! ஸத்யஸங்கல்ப! மஹாப்ரபாவமுடைய இந்தப் பாணத்தை(எனது புண்யகர்மத்தின்மீது)ப்ரயோகஞ்செய்; அதை நான் பார்த்துவிட்டு மஹேந்த்ரபர்வதத்திற்குப்போய்விடுகிறேன்." உ0

ஜமதக்நி புத்ரராகிய ராமர் அவ்வாறு சொல்லவே, மஹாபராக்ரமமுடையவரும், தசரதபுத்ரரும், ஸ்ரீமானும், (அதாவது ஸ்ரீயஃபதியும்) ஆகியுள்ள ஸ்ரீராமர், அந்தச் சிறந்த பாணத்தை (பரசுராமருடைய புண்யகர்மங்களின்மீது)ப்ரயோகித்தார். உக

தாம் தவஞ்செய்து ஸம்பாதித்த புண்யகர்மங்களை ஸ்ரீராமர் ஹதஞ்செய்ததைப் பரசுராமர் பார்த்துவிட்டு, வேகமாய்ப்புறப்பட்டு மஹேந்த்ரபர்வதத்திற்குப் போய்ச்சேர்ந்துவிட்டார். உஉ

பிறகு, திக்குவிதிக்குகள் யாவும் இருள்நீங்கினவைகளாயின, திவ்ய ஆயுதத்தைத்தரித்துநிற்கும் ஸ்ரீராமனை எல்லா ருஷிகளும் தேவர்களும் புகழ்ந்தார்கள். உங

தசரதபுத்ரரான ராமரை ஜமதக்நி புத்ரரான வல்லவராகிய (பரசு)ராமரும் புகழ்ந்து, பிறகு ப்ரதக்ஷிணஞ்செய்து, தம்மிடத்திற்குப் போய்ச்சேர்ந்துவிட்டார். உச

எழுபத்தாறவது ஸர்க்கம் முற்றிற்று.

எழுபத்தேழாவது ஸர்க்கம்.

(பரசு)ராமர் போனபிறகு, தசரதபுத்ரரான ஸ்ரீராமர் கோபந்தெளிந்து (தம்மிட மிருந்தசிவ) தநுஸை மஹா ப்ரபாவமுடைய வருணனுக்குப் பாணத்தோடு கொடுத்துவிட்டார். க

பிறகு, ரகுகுலத்துப்பிள்ளையாகியுள்ள ராமரானவர், வஸிஷ்டர் முதலான ருஷிகளைவணங்கி, திகைத்துநிற்கும் தம்தந்தையைப்பார்த்து, "(தந்தையே!) பரசுராமர் போய்விட்டார்; ப்ரபுவாயுள்ள உம்மால் பாதுகாக்கப்பட்ட (இந்த) சதுரங்கஸைந்யமானது அயோத்யையை நோக்கிப் புறப்படட்டும்" என்று சொன்னார். உ

[illegible]

தசரதராஜர் தம்புத்ரரான ராமர் சொன்னதைக்கேட்டு அவரை இரண்டு கைகளாலுங்கட்டி யணைத்து உச்சிமோந்து, '(பரசு)ராமர் போய்விட்டார்' என்றதைக்கேட்டதனால் பேரானந்தங்கொண்டு மயிர்க்கூச்சடைந்து, அப்பொழுது தாமும் தம்புத்ரரும்பிழைத்ததாக புநர்ஜந்மமென்றெண்ணினார். ௪

பிறகு, (அயோத்யைக்கு)சீக்ரமாய்ப்போகும்படி அந்த ஸைந்யத்திற்குக் கட்டளையிட்டுத்தாமும் புறப்பட்டார். ரு௨

ராஜா வருகிறார் என்கிற ஸந்தோஷத்தால் மங்களமொழிகூறும் பட்டணத்து ஜநங்களாலும் வெளியினின்று வந்த மற்றுமுள்ள ஜநங்களின் கூட்டங்களாலும் நிரம்பியதாய், பெரிதுஞ்சிறிதுமாய்நாட்டப்பட்ட கொடிமரங்களாலும் கணகணவென ஒலிக்கும் வாத்யங்களின் கோஷங்களாலும் அழகியதாய், அரசர்கள் நடக்கும்வழிகளிலெங்கும் ஜலந்தெளித்து புஷ்பங்களிறைத்து நன்றாய் அலங்கரித்து அழகாய் விளங்கும் தமது அயோத்யாபுரியில் தசரதர் ப்ரவேசித்தார். ௭?

பெரும்புகழ் பெற்ற தசரதராஜர் தாம் வெகுதூரத்தில் வந்துகொண்டிருக்கும் பொழுதே (தமக்குமேன்மை செய்யக்கருதி) எதிர்கொண்டுவந்த பட்டணத்திலுள்ள அந்தணர்களாலும், மற்றுமுள்ள ஸாதாரண ஜநங்களாலும், மிகுந்த ஸௌந்தர்யமுடைய தம்புத்ரர்களாலும் பின்தொடரப்பட்டவராகி, ஹிமவத்பர்வதத்தை நிகர்த்து விளங்கும் தமது அரண்மனைக்குள் மிக்க ஸந்தோஷத்துடன் ப்ரவேசித்தார். ௯

(தசரத)மன்னவர் (தமது பந்து)ஜநங்களுடன் (தமது)க்ருஹத்தில் வேண்டியவரையில் ஸுகங்களை அநுபவித்து ஸந்தோஷமடைந்தார். ௯?

கௌஸல்யை, ஸுமித்ரை, மிக்க அழகுபொருந்திய கைகேயி, மற்றுமுள்ள ராஜஸ்த்ரீகள் ஆகிய எல்லா ஸ்த்ரீகளும், மருமகள்கள் நால்வருக்கும் உபசாரஞ்செய்தார்கள். ௧0?

பிறகு, மிக்கபுகழும் செல்வமுமுடையவளாயுள்ள ஸீதை, ஊர்மிளை, குசத்வஜருடைய புத்ரிகளாயுள்ள மாண்டவீ ச்ருதகீர்த்தியென்கிற நால்வரையும் (தசரத)மன்னவர் மனைவிகள் தங்கள் அந்தப்புரத்திற்கு அழைத்துக்கொண்டு போனார்கள். ௧௧?

ஸீதைமுதலிய அந்நான்குபெண்களும், மங்களார்த்தமாய்ச் சந்தனம்முதலியவைகளைப் பூசிக்கொள்ளல் பட்டுவஸ்த்ரங்களைத்தரித்தல் முதலிய அலங்காரங்களைச்செய்துகொண்டு கோயில்களுக்குப்போய்ப் பூஜைசெய்தார்கள். ௧௨?

ராஜபுத்ரிகள் நால்வரும் வணங்கவேண்டியவர்களை வணங்கி, ஏகாந்தத்தில் தங்கள் பர்த்தாக்களோடுகூடிகளித்து ஸுகமாகவாழ்ந்திருந்தார்கள்.

மஹாத்மாக்களாகி அஸ்த்ரவித்யைகளைக்கற்றுணர்ந்து உலகத்தில் ஒப்பில்லாதபராக்ரமம்பெற்று புருஷோத்தமர்களாகி விளங்காநின்ற ராமர் முதலிய நான்குகுமாரர்களும் இவ்வாறு விவாஹஞ்செய்துகொண்டு, தம்தந்தைக்குப்பணிவிடைசெய்து, செல்வத்துடனும் நண்பர்களுடனுங்கூடி ஸுகமாக வாழ்ந்திருந்தார்கள். ௧௫

[𑌕𑌾𑌲𑍇 𑌕𑌾𑌲𑍇 𑌤𑍁 𑌨𑍀𑌤𑌿𑌜𑍍𑌞𑍋 [illegible]]
𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌥 𑌕𑌾𑌲𑌸𑍍𑌯 𑌰𑌾𑌜𑌾 𑌦𑌶𑌰𑌥𑌃 𑌸𑍁𑌤𑌮𑍍॥
𑌭𑌰𑌤𑌂 𑌕𑍈𑌕𑍇𑌯𑍀𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌦𑍍𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌃।
𑌅𑌯𑌂 𑌕𑍇𑌕𑌯𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑍋 𑌵𑌸𑌤𑌿 𑌪𑍁𑌤𑍍𑌰𑌕!॥
𑌤𑍍𑌵𑌾𑌂 𑌨𑍇𑌤𑍁𑌮𑌾𑌗𑌤𑍋 𑌵𑍀𑌰! 𑌯𑍁𑌧𑌾𑌜𑌿𑌨𑍍𑌮𑌾𑌤𑍁𑌲𑌸𑍍𑌤𑌵। ௧௭
[𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌕𑌸𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍁𑌤𑍍𑌰! 𑌶𑍀𑌘𑍍𑌰𑌮𑌾𑌯𑌾𑌤𑍋𑌽𑌹𑌂 𑌤𑌥𑌾॥
[illegible] 𑌤𑍁 𑌤𑌸𑍍𑌯 𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌹𑌾𑌰𑍍𑌹𑌸𑌿]
𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌦𑌶𑌰𑌥𑌸𑍍𑌯𑍈𑌤𑌦𑍍𑌭𑌰𑌤𑌃 𑌕𑍈𑌕𑌯𑍀𑌸𑍁𑌤𑌃॥
[𑌅𑌭𑌿𑌵𑌾𑌦𑍍𑌯 𑌗𑍁𑌰𑍁𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌜𑍍𑌯 𑌚 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌮𑍍।]
𑌗𑌮𑌨𑌾𑌯𑌾𑌭𑌿𑌚𑌕𑍍𑌰𑌾𑌮 𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑌸𑌹𑌿𑌤𑌸𑍍𑌤𑌦𑌾॥ ௧௮
𑌆𑌪𑍃𑌚𑍍𑌛𑍍𑌯 𑌪𑌿𑌤𑌰𑌂 𑌶𑍂𑌰𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌚𑌾𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌕𑌾𑌰𑌿𑌣𑌮𑍍।
𑌮𑌾𑌤𑍄𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌨𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑌸𑌹𑌿𑌤𑍋 𑌯𑌯𑍌॥ ௧௯
𑌗𑌤𑍇 𑌚 𑌭𑌰𑌤𑍇 𑌰𑌾𑌮𑍋 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌶𑍍𑌚 𑌮𑌹𑌾𑌬𑌲𑌃।
𑌪𑌿𑌤𑌰𑌂 𑌦𑍇𑌵𑌸𑌂𑌕𑌾𑌶𑌂 𑌪𑍂𑌜𑌯𑌾𑌮𑌾𑌸𑌤𑍁𑌸𑍍𑌤𑌦𑌾॥ ௨௦
𑌪𑌿𑌤𑍁𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌪𑍌𑌰𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃।
𑌚𑌕𑌾𑌰 𑌰𑌾𑌮𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌚 𑌹𑌿𑌤𑌾𑌨𑌿 𑌚॥ ௨௧
𑌮𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑍋 𑌮𑌾𑌤𑍃𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑌮𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑌃।
𑌗𑍁𑌰𑍂𑌣𑌾𑌂 𑌗𑍁𑌰𑍁𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌕𑌾𑌲𑍇 𑌕𑌾𑌲𑍇𑌽𑌨𑍍𑌵𑌵𑍈𑌕𑍍𑌷𑌤॥
𑌏𑌵𑌂 𑌦𑌶𑌰𑌥𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌨𑍈𑌗𑌮𑌾𑌸𑍍𑌤𑌥𑌾।
𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌶𑍀𑌲𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑌿𑌷𑌯𑌵𑌾𑌸𑌿𑌨𑌃॥ ௨௩
𑌤𑍇𑌷𑌾𑌮𑌤𑌿𑌯𑌶𑌾 𑌲𑍋𑌕𑍇 𑌰𑌾𑌮𑌃 𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃।
𑌸𑍍𑌵𑌯𑌮𑍍𑌭𑍂𑌰𑌿𑌵 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌬𑌭𑍂𑌵 𑌗𑍁𑌣𑌵𑌤𑍍𑌤𑌰𑌃॥ ௨௪
𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑍁 𑌸𑍀𑌤𑌯𑌾 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌵𑌿𑌜𑌹𑌾𑌰 𑌬𑌹𑍂𑌨𑍃𑌤𑍂𑌨𑍍।
𑌮𑌨𑌸𑍍𑌵𑍀 𑌤𑌦𑍍𑌗𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌃॥ ௨௫
𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌤𑍁 𑌸𑍀𑌤𑌾 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌦𑌾𑌰𑌾𑌃 𑌪𑌿𑌤𑍃𑌕𑍃𑌤𑌾 𑌇𑌤𑌿।
𑌗𑍁𑌣𑌾𑌦𑍍𑌰𑍂𑌪𑌗𑍁𑌣𑌾𑌚𑍍𑌚𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑍍𑌭𑍂𑌯𑍋𑌽𑌭𑍍𑌯𑌵𑌰𑍍𑌧𑌤॥ ௨௬

* "𑌭𑌿𑌵𑌰𑍍𑌧𑌤."

பிறகு கிலகர் சென்றபின்னர், ரகுகுலத்துப்பிள்ளையாகிய தசரதவேந்தரா ிவர், கைகேயியின் அருமைக்குழந்தையாகிய தம்புத்ரரான பரதரைஅழைத்து 'குழந்தாய்! வீர பரத! கேகயராஜரது புத்ரரும் உனக்கு மாமாவுமான யுதா ஜித்தானவர் உன்னை அழைத்துக்கொண்டுபோகிறதற்காக இங்கு வந்திருக்கி றார்" என்று சொன்னார். கஎ

கைகேயியின் அருமைப்பிள்ளையாயுள்ள பரதரானவர், தசரதர் சொன்ன றதக்கேட்டு, சத்ருக்நரையும் அழைத்துக்கொண்டு அப்பொழுது (கேகய தேசத்திற்கு) புறப்படத்தொடங்கினார். கஅ

வீரரும் புருஷோத்தமருமாயுள்ள பரதரானவர், தம்தந்தையினிடத்தும், எல்லார்க்கும் நன்மையையே செய்கின்றராமரிடத்தும், அன்னையர்களிடத்தும், சுற்றுமுள்ள எல்லாப் பெரியோர்களிடத்தும் விடைபெற்று, சத்ருக்நரை யும் அழைத்துக்கொண்டு (கேகயநாட்டுக்கு) புறப்பட்டுப்போய்விட்டார். கக

அவ்வாறு பரதர்புறப்பட்டுப்போனபின்பு, மஹாபலமுடையராயுள்ள ராம ரும் லக்ஷ்மணரும், வானவரை நிகர்த்துவிளக்கும் தம்தந்தைக்கு சுச்ருஷை செய்துவந்தனர். உ0

தர்மத்தையே மூர்த்தியாகப்பெற்ற ராமரானவர், பட்டணத்து ஜனங்களு க்கு நன்மையைவிளைவித்தல், தீமையைப்போக்குதல் முதலிய எல்லாக்கார் யங்களையும் தம்தந்தையின் அநுமதிபெற்றே செய்துவந்தார். உக

தம்தாயார்களுக்கும் பெரியோர்களுக்குஞ் செய்யவேண்டிய கார்யங்களை எல்லாம் சிறிதும் தர்மவழிவழுவாது செய்து, எப்பொழுதும் அநுவர்த்தித்து வெகு நன்றாய்ப் பணிவிடை செய்துவந்தார். உஉ

இவ்விதமாயுள்ள ராமரது நல்லொழுக்கத்தையும் நன்னடக்கையையும், சரதர், ப்ராஹ்மணர்கள், வைச்யர்கள் முதலிய அவர்தேசத்திலுள்ளவர்களெ ல்லோருங்கண்டு (அவரிடத்து)ப்ரீதியுடைவகூடியிருந்தார்கள். உரு

திவ்யகுணங்களும் ஸத்யமான பராக்ரமமுமுடையவராகி பெரும்புகழ் பெற்ற ஸ்ரீராமரும் ப்ரஹ்மதேவர் எல்லாப் ப்ராணிகளிடத்தும் ப்ரீதிவைத் திருக்கிறதுபோல் அவர்களெல்லோரிடத்தும் பரம ப்ரீதி வைத்தவராய் விளங்கினார். உச

ராமரும் அந்த ஸீதையை அடைந்து அவளிடத்தில் பரமப்ரீதி வைத்து அவளுடன் கூடி வெகுகாலம் ஸுகித்துவந்தார்; ஸீதையும் (அவர்செ[illegible] திவ்யக்ரீடைகளை நினைத்து நினைத்து ஸுகபரவசையாய்)அவரை எப் பொழுதும் தன்னுள்ளத்திலேயே வைத்து நின்றாள். உரு

தம்தந்தையேபார்த்துசெய்வித்த விவாஹத்தின் மூலமாய்க் கிடைத்த வளென்கிற காரணத்தைக் கொண்டே ராமர் ஸீதையினிடத்திற் ப்ரீதி வைத்தார்; அவளது ஸத்குணங்களாலும் ஸௌந்தர்யத்தாலும் அவருக்கு அந் தப்ரீதி மேன்மேலும் பெருகிற்று. உசு

𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 |
𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌤𑌮𑌪𑌿 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌿 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌹𑍃𑌦𑌾 || ௨௭
𑌤𑌸𑍍𑌯 𑌭𑍂𑌯𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌮𑍈𑌥𑌿𑌲𑍀 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 |
𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌿𑌃 𑌸𑌮𑌾 𑌰𑍂𑌪𑍇 𑌸𑍀𑌤𑌾 𑌶𑍍𑌰𑍀𑌰𑌿𑌵 𑌰𑍂𑌪𑌿𑌣𑍀 || ௨௮

𑌤𑌯𑌾 𑌸 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌿𑌸𑍁𑌤𑍋𑌭𑌿𑌰𑌾𑌮𑌯𑌾
𑌸𑌮𑍇𑌯𑌿𑌵𑌾𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌰𑌾𑌜𑌕𑌨𑍍𑌯𑌯𑌾 |
𑌅𑌤𑍀𑌵 𑌰𑌾𑌮𑌃 𑌶𑍁𑌶𑍁𑌭𑍇 𑌮𑍁𑌦𑌿𑌤𑌯𑌾
𑌵𑌿𑌭𑍁𑌃 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌿𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 || ௨௯

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇 𑌆𑌦𑌿𑌕𑌾𑌵𑍍𑌯𑍇 𑌵𑌾𑌲𑍍𑌮𑍀𑌕𑍀𑌯𑍇
𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌿𑌕𑌾𑌯𑌾𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂,
𑌬𑌾𑌲𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌸𑌪𑍍𑌤𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌤𑌮𑌃 𑌸𑌰𑍍𑌗𑌃.

அந்த ஸீதையும், அவர் தன்னிடம் வைத்த ப்ரீதியைவிட இருமடங்கு அதிகமாய் ப்ரீதிவைத்தாள்; ராமரும், அவளது திருவுள்ளத்திலுள்ளிருக்கும் கருத்தையும் தம்திருவுள்ளத்தால் ஸ்பஷ்டமாய் அறிவார். ௨௭

எல்லாரும் கண்ணால் பார்க்கும்படியான வுருவந்தரித்த மஹாலக்ஷ்மி போன்றவளாய், தேவதாஸ்த்ரீகளை நிகர்த்தவளாய், மிதிலாநகரத்தில் ஜநகருக்குப் பெண்ணாய் அவதரித்தவளாயுள்ள அந்த ஸீதையும், தன்கருத்தை ராமர் அறிந்ததைவிட அநேகமடங்கு ஸ்பஷ்டமாய் அறிவாள். ௨௮

ராஜர்ஷியின் புத்ரராயுள்ள அந்தராமர், தம்மிடம் பரமப்ரீதியுடையவளும், உத்தமராஜாவின் புத்ரியுமான அந்த ஸீதையோடு கூடி பரமாநந்தமடைந்து, தேவர்களுக்கெல்லாம் ஸ்வாமியாயுள்ள ப்ரபுவான விஷ்ணு ஸ்ரீமஹாலக்ஷ்மியோடு கூடிவிளங்குகிறதுபோல் வெகு அழகாய் விளங்கினார். ௨௯

எழுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

பாலகாண்டம் முற்றிற்று.

KOVILUR ...
A. No. 26960